உ

சிவமயம்

# அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட

# நூற்றாண்டு விழா மலர்

1919 - 2019

ஸ்தாபிதம்
1919

"எமது உணர்வுடன் கலந்திட்ட வரலாற்றுப் பெருவிழா"

உ

சிவமயம்

# அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட

# நூற்றாண்டு விழா மலர்

1919 - 2019

ஸ்தாபிதம்
1919

**சமர்ப்பணம்**

எமது மூதாதையருக்கு இந்நூல் சமர்ப்பணம்

**பதிப்பாசிரியர்**

அ.உபயசேகரம்

**மலர்க்குழு உறுப்பினர்கள்**

ஜெ.ஜசிந்தன்

சு.ஆறுமுகதாசன்

த.பிரதீபன்

**வெளியீடு**

அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட
நூற்றாண்டு விழா நிர்வாகசபை

**பதிப்பு**

மெகா பதிப்பகம்
இல.41, றக்கா வீதி, யாழ்ப்பாணம்.

*எமது உணர்வுடன் கலந்திட்ட வரலாற்றுப் பெருவிழா*

# அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட நூற்றாண்டு விழா நிர்வாக சபை 2019

| | |
|---|---|
| விழாத் தலைவர் | : திரு.செ.பத்மநாதன் |
| கௌரவ செயலாளர் | : திரு.வி.சுதாகர் |
| பொருளாளர் | : திரு.சு.சண்முகரட்ணம் |
| நிதி நிர்வாகத் தலைவர் | : கலாநிதி சு.மோகனதாஸ் |
| கலைத் தலைவர் | : திரு.ப. ஸ்ரீஸ்கந்தன் |
| விளையாட்டுத் தலைவர் | : திரு.ந.சுதேஸ்குமார் |
| கலைச் செயலாளர் | : திரு.கு.பிரதீபன் |
| விளையாட்டு இணைச் செயலாளர் | : திரு.நி.கவிந்தன் |
| | : திரு.செ.மதியழகன் |
| கலைப் பொருளாளர் | : திரு.வை.கிருபாகரன் |
| விளையாட்டுப் பொருளாளர் | : திரு.நி.கவிந்தன் |
| மலர்க்குழுப் பொறுப்பாளர் | : திரு.அ.உபயசேகரம் |
| நாடகப் பொறுப்பாளர் | : திரு.த.ஹரிஷாந்ந் |
| ஊடகப் பொறுப்பாளர் | : திரு.ஜெ.ஜசிந்தன் |

**நிர்வாகசபை உறுப்பினர்கள்**

வைத்திய கலாநிதி மு.தெய்வேந்திரா (நிதி)
திரு. ந.நேதாஜி (நிதி)
திரு. க. கனகசபாபதி (நிர்வாகம்)
திருமதி ஸ்ரீ ஆனந்தகுமாரசாமி (கலை)
சித்த வைத்தியர் ச. அருண்பாபு (கலை)
திரு. நி. துஷ்யந்தன் (கலை)
திரு. எஸ் சி. செல்வராஜா (விளையாட்டு)
திரு. வீ.கே. சண்முகலிங்கம் (விளையாட்டு)
திரு. க. நாகேந்திரம் (விளையாட்டு)
திரு. ந. குகதாஸ் (விளையாட்டு)
திரு. உ. தர்மேந்திரன் (விளையாட்டு)
செல்வி ப. மயூரி (விளையாட்டு )
திரு. த. பிரதீபன் (மலர்)

# சுதேசிய கீதம்

பெருக இன்பம் பெருகும் - நம்
அரியா லையம்பதிப் பெருநாள்
வருக நல் வளமுடன் - வையகத்தின்
பாரிய சுதேசியத் திருநாள்

சித்திரைத் தீந்தமிழ் நாள் - தமிழர்கள்
சிந்தை குளிர்ந்திடும் நாள்
நித்திய மேன இன்ப நினைவினிலே
நீந்திடும் சார்ந்த திருநாள்

ஆண்டு புதிதொன்று - பிறந்ததென
ஆனந்தம் பொங்கிடும் பொன்னாள்
யாண்டும் எதன்மிசையும் - கருணையின்
ஈரம் பயின்றிடும் நாள்

இன்பப் புதுத் திருநாள் - இனிமை
ஏறும் பொது திருநாள்
அன்புக் கனி பிழிந்தே - அழகினில்
ஆடிக் களித்திடும் நாள்

கலையினில் ஊறிடும் நாள் உடல்
கலையினில் தேறிடும் நாள்
சிலையென இருந்த தீந்தமிழ் - அன்னை
வென்று சிரித்திடும் நாள்.

**அரியாலையூர் கவிஞர்**
**வே. ஐயாத்துரை**

# நூற்றாண்டுக் கீதம்

**பல்லவி**

சுதேசியத் திருநாள் கொண்டாட்டம் - தமிழ்த்
தொல்புகழ் தனைச் சொல்லும் களியாட்டம்

**அனுபல்லவி**

இரண்டாயிரத்துப் பத்தொன்பதினில் - நூற்
றாண்டு கொண்டாடுகிறோம் பூரிப்பினில்

இயல் இசை நாடகக் கலைகளின் களஞ்சியம்
எழுச்சி கொள் விளையாட்டுப் பலதின் நற் சங்கமம்
சுதேசியம் பண்பாட்டின் சுவை அறி அவைக்களம்
சுதேசிய தினம் யாழின் அதிசயம் சரித்திரம்

அந்நியர் ஆட்சியில் முடங்கியது தமிழர் நிலை
ஆங்கிலர் பறங்கியர் அடக்கினர் சைவத்தை
அரியாலை மக்களும் அறுத்தனர் தடைவலை
கதிர்வேலர் தலைமையில் சுதேசிய விழாவிலே

எங்களின் இருப்பினை அழியாது பார்க்கவும்
எம்மின விழுமியத் தனித்தவம் மீட்கவும்
எம்மொழி மதம் பொருண்மியங்களைக் காக்கவும்
எழுந்தது சுதேசிய விழா என்னும் பெரு வரம்

மருத்துவம் விஞ்ஞானம் பொறியியல் சட்டம்
கணக்கியல் கற்றுயர் பதவிகள் கொண்டோர்
பெருங்கலைக் கவிஞர் சிற்பாசிரியர்கள்
பெருகி ஊர்ப் புகழினை பெருக்குவர் தொடர்ந்து

தமிழ் சைவம் காத்து தகை சேர்த்த வேர்தான்
தலைமுறை தாண்டியே தளைக்குதூர்ச் சீர்காண்
சுதேசியத் திருநாள் தொடரும் நூறாண்டு
துளிர்த்து அரியாலைப் பேர் வாழும் பல்லாண்டு

**கவிஞர் இ.த.ஜெயசீலன்**
ஆணையாளர், யாழ் மாநகர சபை



# ஆசிச் செய்தி


ஊருக்குப் பெருமை சேர்ப்பன ஆலயங்கள், கல்வி நிலையங்கள், அறப்பணி நிலையங்கள், இயற்கை வளங்கள் என்பன.

அரியாலைக்குப் பெருமை சேர்ப்பது அறிவு, திறன், நல்ல மனப்பாங்கு, உளவிருத்தி என்பவற்றினூடாக ஆளுமை விருத்தியை ஏற்படுத்தும் சுதேசிய திருநாட் கொண்டாட்டவிழா. நூற்றாண்டு விழாவாகக் கொண்டாடப்படும் இவ்வேளையில் மலரினை வெளியிடுகின்றமை கண்டு அகமகிழ்வுடன் வாழ்த்தி வரவேற்கின்றேன்.

இம்மலர் ஒற்றுமையின் பெறுமானத்தை எடுத்துக் காட்டுவதுடன் பல தசாப்தங்கள் நிலைத்திருந்த நம் முன்னோர்களுடைய சேவைகளைப் பரம்பரை பரம்பரையாக எடுத்துரைப்பதுடன் எதிர்காலச் சந்ததியினரையும் நற்பிரஜைகளாக உருவாக்கும் என்பதில் ஐயமில்லை. மனித வாழ்வின் மலர்ச்சிக்கும் நிலையான முன்னேற்றத்திற்கும் ஆன்ம ஈடேற்றத்திற்குமான வாழ்வியல் நடைமுறைகளைப் பேணிப் பாதுகாத்துக் கையளிக்கின்ற அளப்பெரிய கைங்கரியங்களை அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா மேற்கொண்டு வருகின்றது. இச்சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவானது நூற்றாண்டு காலமாக தான் சார்ந்த சமூகத்தின் மேம்பாட்டுக்கு நம்பிக்கை நட்சத்திரமாகச் சுடர்விட்டுப் பிரகாசித்து வருகிறது.

இப்பொன்னான தருணத்தில் நூற்றாண்டு விழா மகிழ்வுடன் நடைபெறவும், இன் நூல் வெளியீடு சிறப்புறவும் எல்லாம் வல்ல அரியாலை நீர் நொச்சித்தாழ்வு ஸ்ரீ சித்தி விநாயகரின் பாதம் பணிந்து எனது ஆசிகளை வழங்கி மகிழ்கின்றேன்.

**பிரம்மஸ்ரீ சு.முரளீதரக் குருக்கள்**
பிரதம குரு,
அரியாலை, நீர்நொச்சித்தாழ்வு,
ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தானம்.



# விழாத் தலைவரின் வாழ்த்துச் செய்தி

**செ. பத்மநாதன்** B.A.(Econ) Dip.Re.Dcw (Israe) S.L.A.S.
**ஓய்வுபெற்ற அரசாங்க அதிபர்,**
**யாழ்ப்பாண மாவட்டம், வவுனியா மாவட்டம்.**

2019 ஆம் ஆண்டு சித்திரை மாதம் விகாரி புதுவருடப்பிறப்பன்று, அரியாலை மக்கள் தமது சுதேசிய திருநாட் கொண்டாட்ட நிகழ்வை நூற்றாண்டு விழாவாகக் கொண்டாடும் நன்நாளாகப் பரிணமிக்கும் நாளாகும்.

இற்றைக்கு நூறு ஆண்டுகளுக்கு முன்னிருந்த, அரசியல் பொருளாதார, சமூக, கலாசார கல்வி நிலையையிட்டுப் பொதுவாக இலங்கை என்ற தேசத்தையும் தமிழ் சைவ மக்கள் அதிகமாக வாழும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைக் குறிப்பாகவும், யாழ்ப்பாண மாவட்டத்தைச் சிறப்பான நிலைமையை பின்னோக்கி பார்ப்போமேயானால், அப்போதைய நிலைமையை எமது மனக்கண்முன் கொண்டு வரக்கூடியதாக இருக்கும்.

முழு இலங்கையின் சுதந்திரம் 1815ல் கண்டி இராச்சியத்தின் வீழ்ச்சியுடன், பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் கைக்குள் சிக்கியிருந்தது. பிரித்தானிய மகாராணியே இலங்கை மக்களின் மகாராணியாக இருந்தார். போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் காலத்தில் யாழ்ப்பாண இராச்சியம் தனது சுதந்திரத்தினை இழந்திருந்தது. மத சுதந்திரம் மறுக்கப்பட்டிருந்தது. இந்து மதத்தினர் உத்தியோகங்களை பெறுவதற்கும் சுதேச மக்கள் மதம் மாற வேண்டி நிர்ப்பந்திக்கப்பட்டனர். மக்கள் பாரம்பரியமாக அனுட்டித்து வந்த சம்பிரதாயங்கள், பழக்கவழக்கங்கள். வாழ்க்கை முறைகள் என்பவற்றில் மாற்றங்களேற்பட்டன. உற்பத்தி முறைகள் மாற்றமடைந்தன. வருடாந்த உற்சவங்கள் விழாக்களுக்குப் பதிலாக கிறிஸ்தவ உற்சவங்களான, நத்தார், தை புதுவருடம் என்பன அரச ஆதரவுக் கொண்டாட்டங்களாயின. பிரஜைகளும் கொண்டாட்டங்களில் பங்குபற்ற, அனுட்டிக்க தூண்டப்பட்டனர். இவை மானிட அடக்கு முறையின் ஒரு வடிவமாகின. இந் நிகழ்வு இலங்கையில் மாத்திரமல்ல, ஏகாதிபத்தியத்தால் அடக்கு முறைக்கு உட்பட்ட ஆசிய, ஆபிரிக்க, லத்தீன், அமெரிக்க நாடுகளில் எல்லாம் காணப்பட்ட ஒரு பொதுப்பண்பாகும்.

இந்நிலையில் ஆங்கிலக் கல்வி கற்று ஆட்சியாளர்களோடு சேர்ந்து நிர்வாகத்தில் பங்குபற்றிய பல சுதேசிகளிடம், தமது மொழி, கலாசாரம், மதம், பண்பாடு என்பவற்றை அழிவிலிருந்து காப்பாற்ற வேண்டும், தாம் அவற்றை மறுமலர்ச்சி செய்யவேண்டும், அவற்றை தொடர்ச்சியாகப் பேணிப்பாதுகாக்க வேண்டும், சுதேச மக்களின் அரசியல் பொருளாதார அபிலாசைகள் நிறைவேற்றப்பட வேண்டும் என்ற பொது எண்ணக்கருவோடு ஒத்த கருத்துடைய


பலர் ஒன்று சேர்ந்து உருவாக்கிய சுதேச உணர்வே ஆசிய நாடுகளது சுதந்திரத்திற்கு வித்திட்ட காரணியாக உள்ளது. இச்செயற்பாடு ஏகாதிபத்திய அடக்கு முறைக்கு உட்பட்ட எல்லா நாடுகளிலும் காணப்பட்ட ஓர் சமூக பொதுப்பண்பாகும். இதற்கு இலங்கையோ அதன் பகுதியான யாழ் மாவட்டமோ விதிவிலக்கானது அல்ல. ஆனால் அரியாலைக் கிராமத்தில் காணப்படும் விசேட அம்சம் என்னவெனில் சுதேச இந்து மக்களால் புதுவருடப்பிறப்பு நாளான்று கொண்டாடப்பட்டு வந்த சித்திரை மாதம் முதலாம் நாளை முன்னிலைப்படுத்தி கடந்த 100 வருடங்களாக தொடர்ச்சியாக மக்களால் எழுச்சியுடன் கொண்டாட்டத்தை வழிநடத்தி வருவதாகும். இவ் வழிநடத்தல் இந்து மத வழிபாடு, பாரம்பரிய கலை வடிவங்களான நாடகம் கூத்து, சங்கீதம் போன்ற இயல், இசை நாடகங்களை பேணி வருதல் அதன் மூலம் அதனை வளர்த்தல், பாரம்பரிய விளையாட்டுக்களை நடத்துதல், பங்குபற்றுதல், அவற்றை ஊக்குவித்தல், இந்நிகழ்வுகளை தாமே தமக்கென ஓர் அமைப்பை உருவாக்கி செயற்படுத்தல், அவ் அமைப்பினைத் தொடர்ச்சியாக பேணுதல், பின்பற்றுதல் இச்சமூக எழுச்சிச் செயற்பாட்டுக்கான வளத்தை தமக்குள்ளே சேகரித்தல். அதற்குப் பொறுப்புக் கூறும் நடைமுறையைப் பேணி வருதல், இவற்றை ஆவணப்படுத்தி ஓர் கிராம வரலாற்றை வளமாக்கி எதிர்கால சந்ததியினருக்கு சமர்ப்பித்தல் போன்ற பல நல்லுதாரணங்களுடன் அச்செயற்பாடு தொடர்கின்றது.

சமூக அரசியல் போராட்டங்கள், இடப்பெயர்வு, புலம் பெயர்தல் போன்ற நிகழ்வுகள் ஏற்பட்ட பொழுதும், இச் சமூகச் செயற்பாடு தேவைக்கேற்ற தன்மையை தனது ஒருங்கிணைப்பு, ஒழுங்குபடுத்தல், வெளிப்படுத்தல் போன்ற செயலாக்கத்தில் தனது சுதேசிய பண்புகளைப் பாதுகாத்தல், பேணி வளர்த்தல் அவற்றை ஆவணப்படுத்தி எதிர்காலத்திற்கு கையளித்தல் என்ற குறிக்கோளுடன் வீறுநடை போட்டு வருவதற்கு எமது மக்களது ஒற்றுமையும் அரியாலை மகன் என்ற பொதுப் பண்புமே காரணமாகியுள்ளது.

இவ்வைபவத்தின் பின்னணியில் 2019 ஆம் வருடம் இச் செயற்பாடு நூற்றாண்டை அடைந்து நூற்றாண்டுப் பெருவிழாவாகப் பரிணமித்துள்ளது. இவ்விழாவின் வருடாவருடம் நடைபெறும் விழா நிகழ்ச்சிகள் புதுமெருகூட்டப்பட்டு சுதேசிய, தேசிய, சர்வதேச ரீதியாக எமது கலை கலாசார விளையாட்டு நிகழ்வுகள் ஒருங்கிணைக்கப்பட்டு திறமைமிகு எமது இளம் சந்ததியினராலும் புலம் பெயர் மக்களாலும், ஒருங்கிணைக்கப்பட்டு ஒழுங்கமைக்கப்பட்டு 2019 பங்குனி மாதத்திலிருந்து சித்திரை வருடப்பிறப்பு நாளில் முடிவடையவுள்ளது.

இந் நன் நிகழ்ச்சியின் அடையாளமாக, வரலாற்று சின்னமாக சுதேசிய வல்லுனர்களது பரந்துபட்ட பார்வையில் ஆக்கங்களைக் கொண்டுள்ள மற்றும் ஆக்கங்களை உள்ளடக்கி வெளியாகும் இம்மலருக்கு, இவ் பாரிய விழாவின் விழாத் தலைவர் என்ற அடிப்படையில் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் இவ் விழா மலர் எமது எதிர்காலச் சந்ததியினருக்கு சமர்ப்பணமாகட்டும்.

அன்புடன்
**செ.பத்மநாதன்**
**விழாத் தலைவர்**



# நிதி, நிர்வாகத் தலைவரின் வாழ்த்துச் செய்தி

ஒரு நூற்றாண்டு காலமாக எமது அரியாலை மக்களால் சித்திரை தமிழ் வருடப்பிறப்பன்று கொண்டாடப்பட்டு வரும் சுதேசிய திருநாட்கொண்டாட்ட விழாவின் நூற்றாண்டில் வெளிவரும் இம்மலருக்கும் வெகுவிமரிசையாக கொண்டாடப்படும் விழாவிற்கும் எனது நல்லாசியையும் வாழ்த்துக்களையும் தெரிவிப்பதில் பெருமகிழ்வு அடைகின்றேன்.

சுதேசிய திருநாட்கொண்டாட்ட விழாக்களில் பலதடவைகள் கலை மற்றும் விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்றும், பல தசாப்தமாக நிர்வாகத்தில் பங்கேற்றும் சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாத் தலைவராக பணிபுரிந்தும் அரியாலையின் பெருமையை வளர்ப்பதற்கு எனது முற்றுமுழுதான பங்கினை ஆற்றி வருபவன் என்ற வகையிலும் இந் நூற்றாண்டு விழாவிற்கு எனது வாழ்த்துச் செய்தியை பெறுவதற்கு விழாவின் மலர்க்குழு எடுத்த நடவடிக்கையை நன்றியுணர்வுடன் ஏற்றுக்கொள்கிறேன். ஒரு நூற்றாண்டிற்கு முன்பு வாழ்ந்த எமது இளைஞர்களும், தலைவர்களும் மிகவும் தீர்க்கதரிசனமாய் தமிழ் சுதேசிய கலை, பண்பாட்டு பாரம்பரியங்களைப் பேணிப் பாதுகாத்து நூற்றாண்டை நோக்கி நகர்ந்தபோது மேலும் புதுப்பொலிவுடன் வளர்ந்து நூற்றாண்டு விழாவாக சிறப்பாக வீறுநடை போடுவதைக் கண்டு பூரிப்படைகிறேன். இவ்விழாவில் எம்மூர் மக்கள் சகலரும் ஒன்றாக ஒற்றுமையாக உள்ளூர், வெளியூர், வெளிநாடு என எங்கு வாழ்ந்தாலும் சரி இயன்றவரை முற்றுமுழுதாகப் பங்குபற்றி இவ்விழா மிகவும் சிறப்படைந்து மக்களும் பூரண திருப்தியுடன் சந்தோசமாக வாழ்ந்து ஒரு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நூற்றாண்டுவிழா வெற்றிபெற பாடுபடுவோமாக.

**கலாநிதி சு. மோகனதாஸ்**



# கௌரவ செயலாளரின் வாழ்த்துச் செய்தி

என் அன்புக்கும் பெருமைக்குமுரிய நூற்றாண்டு காணும் அரியாலையூர் மக்களுக்கு என் புத்தண்டு நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், பிறக்கும் புத்தாண்டானது சகலருக்கும் சுபீட்சத்தையும், சௌபாக்கியத்தையும் அள்ளித்தரும் ஆண்டாக அமையவேண்டும் என இறைவனைப் பிரார்த்தித்துக் கொள்கின்றேன்.

அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவினை 1919 இல் ஆரம்பித்த எமது மூத்த தலைவர்களுக்கும், அவர்களைத் தொடர்ந்து நூறு ஆண்டுகள் இவ்விழாவினை சிறப்புடனும், கலை, கலாசார, பண்பாட்டு அம்சங்களுடனும் வளர்த்து வந்த 99 தலைவர்களுக்கும் எனது சிரம் தாழ்த்தி வணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றேன்.

அரசாங்க நிறுவனங்களில் உயர்பதவிகளை வகிக்கும் அரியாலையூரைச் சேர்ந்த அதிகாரிகள் நிர்வாகத்திறமை கொண்டிருப்பதற்கு இவ் சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவில் கற்றுக்கொள்ளும் திட்டமிடல் பண்புகளே காரணமாகும். சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவானது சுதேசிய ஒற்றுமையை வளர்ப்பது மட்டுமன்றி தலைமைத்துவ பண்புகளையும் வளர்த்தெடுக்கிறது.

சமூக ஒற்றுமை, விட்டுக்கொடுப்பு, தலைமைக்கு கட்டுப்படுதல் போன்ற பாரிய விழுமிய பண்புகளை கற்றுக்கொள்ளும் ஓர் கலாசாலையாக திகழ்கிறது. நீண்ட வரலாற்றைக் கொண்ட அரியாலை மக்களின் சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவானது இவ்வருடம் நூற்றாண்டு பெருவிழாவாகக் கொண்டாடப்படுவதையிட்டு பெருமகிழ்ச்சியடைவது மட்டுமன்றி இப்பெருவிழாவிற்கு செயலாளராக இருப்பதையிட்டு பெருமையடைகின்றேன்.

அந்நியரின் ஆட்சியின்போது மிலேச்சத்தனமாக கட்டவிழ்க்கப்பட்ட கலாசார சீரழிவுகள், கட்டாய மதமாற்றம், அந்நிய கலாசாரம் புகுத்தப்படல் போன்ற நடவடிக்கைகளில் இருந்து எம்மக்களை இவ்விழாவானது மீட்டெடுத்தது. தற்போதைய உலகில் இளைஞர்களிடம் புரையேறியுள்ள போதைப்பொருள் பாவனை, பெரியோரை மதியாமை, நவீன தொடர்பாடல் சாதனங்களில் நாட்டம். விளையாட்டுக்களிலும் கலைகளிலும் ஆர்வக்குறைவு போன்ற சமூக விரோத நடவடிக்கைகளில் இருந்தும் எம் இளைஞர்களை இவ்விழாக்கள் நல்வழிப்படுத்தும் என்பது மிகையல்ல, என்பதை பெற்றோர் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இவ்விழாவில் இளைஞர்களை ஈடுபட வைத்தல் எமது பெற்றோர்களின் தலையாய கடமையாகும். புலம்பெயர் எமது உறவுகளின் சுதேசிய எழுச்சியை எண்ணி பெருமிதமடைகின்றேன். நூற்றாண்டு விழா சிறப்புறுவதற்கு உழைத்த நூற்றாண்டு நிர்வாக சபை

உறுப்பினர்களுக்கும், உள்ளூர் பெருமக்களுக்கும் புலம்பெயர் எமது உறவுகளுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். நூற்றாண்டு கீதத்தை இயற்றிய மாநகர ஆணையாளர் கவிஞர் இ.த.ஜெயசீலன் அவர்களுக்கும், நூற்றாண்டுக் கீதத்திற்கு இறுவடிவம் கொடுத்த சங்கீத பூசனம் ரொபேட் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இவ் நூற்றாண்டு மலரைச் சிறப்புற வடிவமைத்த இதழாசிரியர் திரு அ. உபயசேகரம் ஐயா அவர்களுக்கும் மலர் குழுவினருக்கும் எனது நன்றிகளும் வாழ்த்துக்களும்.

மறைமுகமாக எனது செயலாளர் செயற்பாடுகளில் உதவிபுரிந்த வீதி அபிவிருத்தி அதிகாரசபை சகல உத்தியோகத்தர்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு, நூற்றாண்டுவிழா சிறப்பாக நடைபெறுவதற்கு எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்பதோடு இவ்விழாவினை இன்றைய இளைஞர்கள் ஒற்றுமையோடும் விட்டுக்கொடுப்புடனும் அர்ப்பணிப்புடனும் தொடர்ந்தும் பல நூற்றாண்டுகள் கொண்டாடி அரியாலையூருக்குப் பெருமை சேர்ப்பதோடு அடுத்த சந்ததியினருக்கு வளம்மிக்க அரியாலையூரைக் கையளிப்போம் எனக் கூறி அமைகிறேன்.

**திரு.வி.சுதாகர்**<br>
கௌரவ செயலாளர்<br>
சுதேசிய திருநாட் கொண்டாட்ட<br>
நூற்றாண்டு விழா



# பொருளாளரின் வாழ்த்துச் செய்தி

எமது அரியாலையயானது கல்வி, விளையாட்டு, கலை, பண்பாடு எனப் பல்வேறு துறைகளிலும் மேம்பட்டு விளங்கும் கிராமமாகும். அத்தகைய திறன்களைக் கொண்ட அரியாலை ஊர்மக்கள் தம் திறமைகளை மேலும் வளர்க்கவும், அவற்றினை அழியாது பாதுகாப்பதற்காகவும், சுதேசியத்தை நிலைநாட்டவும், நம்முன்னோர்கள் 1919 ஆம் ஆண்டு புதுவருட தினத்தன்று "அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா" என நாமம் சூட்டப்பட்டு இவ்விழா ஆரம்பமானது. இவ்விழாவானது சுதேசியம் வழுவாது தொடர்ந்து கொண்டாடப்பட்டுவந்து இவ்வருடம் நூற்றாண்டை நிறைவுசெய்யும் பெருவிழாவான சாதனையைச் செய்துள்ளது என்றால் மிகையாகாது.


இத்தகைய பெருமுயற்சிக்கு எம் ஊரிலுள்ள மக்கள் வெளிநாடுகளில் வாழும் எம் ஊர் மக்கள் மற்றும் நலன் விரும்பிகள் ஆகியோரின் அயராத உழைப்பும், ஊக்கமும், விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையும், குழு முறையிலான செயற்பாடும் (Team work) பற்றுறுதியும், இளைஞர்களின் பங்களிப்பும், ஒற்றுமையும் முக்கிய காரணிகளாக அமைந்துள்ளது. இத்தகைய குணாதிசயங்கள் தொடர்ந்திருக்க வேண்டுமென இறைவனை வேண்டிக் கொள்கின்றேன்.

மேலும் இவ் நூற்றாண்டு விழா சிறப்புற அமைவதற்கு ரூபா 30,000,000/= செலவு மதிப்பீடு செய்யப்பட்டு அந்நிதிகளைச் சேர்ப்பதற்கு உள்நாடு, வெளிநாடுகள் எனப் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்து செயல்பட்டபோது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவிற்கான தங்களால் ஆன பங்களிப்புக்களை யாவரும் மனமுவந்து நல்கிய வண்ணம் இருந்தமையால் நிதிகளை நிறைவு செய்யக் கூடியதாக இருந்தது.

அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட நூற்றாண்டு விழா சிறப்புற நடைபெறுவதற்கு மனமுவந்து நிதி வழங்கிய உள்ளூர் மக்களுக்கும், குறிப்பாக வெளிநாட்டில் வாழும் எம்மூர் மக்களுக்கும் மற்றும் நலன் விரும்பிகளுக்கும் நிதி சேகரிப்பில் என்னுடன் ஒத்துழைத்த நிர்வாக சபை உறுப்பினர்களுக்கும், நிதி உபகுழுவில் அங்கம் வகிக்கும் திரு. மு. குணம், திரு.தி.செல்வரட்ணம் த. பிரணவராவ், மற்றும் க. விஜயலட்சுமி ஆகியோருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு அரியாலை மக்கள் யாவருக்கும் எனது விகாரி புதுவருட இனிய புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் இவ்விழா சிறப்பாக நடந்தேற எல்லாம் வல்ல இறைவனின் திருவருளையும் வேண்டிநிற்கின்றேன்.

"நீடூழி வாழ்க சுதேசியம்"

**திரு. கு. சண்முகரட்ணம்**
பொருளாளர்
சுதேசிய திருநாட் கொண்டாட்ட
நூற்றாண்டு விழா



# கலைத் தலைவரின் செய்தி

மகிழ்ச்சியாக இருக்கிறது !

சுதேசிய விழா என்றாலே ஒவ்வொரு அரியாலைக் குடிமகனுக்கும் உவகை பொங்கும். உணர்வுகள் கொப்பளிக்கும். அரியாலையூரான் என்ற பெருமிதம் கிளர்ந்தெழும். அத்தகைய சுதேசிய விழாவின் நூற்றாண்டு விழா மலருக்கு வாழ்த்துச் செய்தி எழுத வாய்த்த சந்தர்ப்பம் பெரு மகிழ்ச்சியைத் தருகிறது.

இந்தியாவில் ஆரம்பிக்கப்பட்ட சுதேசிய இயக்கம் இலங்கை எங்கும் கிளைவிட்ட போதிலும் சுதந்திரத்துக்குப் பின்னர் அவை படிப்படியாக நின்றுபோக சுதேசியத்தைத் தொடர்ச்சியாக உணர்வுடனும் உத்வேகத்துடனும் இன்றுவரை கொண்டாடி வருகின்ற ஒரேயொரு ஊர் அரியாலை என்பதில் நாமெல்லாம் பெருமிதம் கொள்ளலாம். சுதேசிய விழாவின் நூற்றாண்டுத் தருணத்தில் நாமும் பங்காளிகளாக இருப்பது நாம் செய்த பாக்கியமே.

சுதேசிய விழாவின் நூற்றாண்டை நினைவுறுத்தும் கருங்கல்லிலான தூபி இன்று மாம்பழம் சந்திக்கு அருகே எழுந்து நிற்கிறது. இது எங்கள் சுதேசிய வரலாற்றை, அர்ப்பணிப்பை காலாகாலத்துக்கும் சொல்லும். எமது ஊரின் பெருமைகளையும் சிறப்புகளையும் விபரணப்படுத்தும் கலையம்சம் மிக்க ஊர்திகள் யாழ் நகர வீதிகள் ஊடாகப் பவனித்திருக்கின்றன.

நூற்றாண்டைச் சிறப்பிக்கும் முகமாக வடமாகாண ரீதியிலான நாடகம், கூத்து மற்றும் சுப்பர் சிங்கர் ஆகிய போட்டிகளும் சர்வதேச ரீதியிலான சிறுகதை, கவிதை, குறுந்திரைப்படம், புகைப்படம் ஆகிய போட்டிகளும் நடைபெற்றுள்ளன. பெருமளவிலானவர்கள் இப்போட்டிகளில் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது. கலைப்பிரிவில் என்னோடு கைகோர்த்த கலைச் செயலாளர் கு.பிரதீபன், நாடகப் பொறுப்பாளர் த.ஹரிஷான்ந் மற்றும் கலைக்குழு உறுப்பினர்கள், நடுவர்கள், சுதேசிய நண்பர்கள் அனைவருக்கும் எனது நன்றி.

அரியாலை எங்கள் புண்ணிய பூமி. அதில் எங்கள் மூதாதையினரதும் எங்களதும் காலடிகள் ஆழமாகப் பதிந்துள்ளன. அந்தச் சுவடுகள் புனிதமானவை. அதனை நாம் உயிராகப் பாதுகாப்போம்.

"வாழ்க சுதேசியம்"

**ப.ஸ்ரீஸ்கந்தன்**
கலைத் தலைவர்,
சுதேசிய திருநாட்கொண்டாட்ட
நூற்றாண்டு விழா



# விளையாட்டுத் தலைவரின் செய்தி

அரியாலை மக்களினால் தமிழ் வருடப்பிறப்பு தினத்தில் மிகவும் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டு வரும் சுதேசிய திருநாட் கொண்டாட்ட நூற்றாண்டு விழாவிற்கு செய்தி வழங்குவதில் பெருமையடைகின்றேன். ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் சுதேசிய சின்னங்கள், எமது கலாசாரம், பண்பாடுகள் சமய ரீதியிலான நம்பிக்கைகள் அழிக்கபட்டுக்கொண்டிருந்த 1919ஆம் ஆண்டு காலத்தில் எமது மூதாதையர் தீர்க்க தரிசனத்தினால் அரியாலைப் பிரதேசத்தின் சிறப்பினையும் தனித்துவத்தினையும் பாதுகாத்துக் கொள்வதற்காகவும் சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவினை உருவாக்கினார்கள். நான் இந்த விழாவின் 97ஆவது விழாத் தலைவராகவும் 95ஆவது 96ஆவது மற்றும் 98ஆவது விழாக்களின் விளையாட்டுத் தலைவராகவும் பணியாற்றி இவ் நூற்றாண்டு விளையாட்டுத் தலைவர் ஆகவும் இருப்பதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

இன்றைய உலகில் பாரம்பரிய, நவீன விளையாட்டுக்களை நடத்தி அதனை அழியவிடாது பாதுகாக்க அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா அடிநாதமாக உள்ளது. நூற்றாண்டு விழாவில் ஏறத்தாள 60 இற்கு மேற்பட்ட விளையாட்டுக்களை 6 மில்லியன் செலவில் எவ்வாறு நடத்தியுள்ளார்கள் என அனைவரும் வியந்தனர். அதற்கு எமது ஒற்றுமையும் விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கும் முக்கியமானது என்பதனை என் அனுபவத்தில் கண்டேன்.

சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவின் பல விளையாட்டுக்களுக்குப் பெறுமதியான பரிசில்களை வழங்குவதற்கு எமது வெளிநாட்டு உறவுளும் உள்ளூர் உறவுகளும் சகல போட்டிகளுக்கும் அனுசரணைகளை வழங்கியுள்ளனர். இதில் இங்கிலாந்துவாழ் நாதன் அண்ணா, நோர்வேவாழ் செழியன் அண்ணா ஆகியோர் தனிப்பட்ட நன்றிக்குரியவர்கள். விளையாட்டுக்களை நடத்த துணையாக நின்ற நிர்வாக சபை உறுப்பினர்கள், விளையாட்டுக்குழு உறுப்பினர்கள், விளையாட்டுச் செயலாளர் ந.கவிந்தன், செ. மதியழகன், ந.குகதாஸ் மற்றும் ஜெ. யசிந்தன் ஆகியோருக்கும் நன்றிகள். எனக்கு தேவையான ஆலோசனைகளையும் அறிவுரைகளையும் காலத்திற்கு காலம், வழங்கிய விழாத் தலைவர் செ.பத்மநாதன், பேராசிரியர் சு.மோகனதாஸ், ஓய்வுபெற்ற பிரதம கணக்காளர் சண்முகரட்ணம், முன்னாள் துடுப்பாட்ட பயிற்றுனர், வி.கே.சண்முகலிங்கம் போன்றோருக்கும் போட்டிகளை நடத்த உதவிய சனசமூக நிலையங்கள், யாழ் மாவட்ட விளையாட்டுச் சங்கங்கள், போட்டி மத்தியஸ்தர்கள், போட்டி ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் போட்டியாளர்கள் சுதேசிய திருநாட்கொண்டாட்ட விழாவானது சிறப்பாக நடைபெற உதவியமைக்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

"ஒற்றுமையின் விழா அது சுதேசிய விழா"

சுதேசியம் என் பெயர், என் மூச்சு வாழ்க சுதேசியம் வளர்க அரியாலை

**ந. சுதேஸ்குமார்**

விளையாட்டுத் தலைவர்

சுதேசிய திருநாட் கொண்டாட்ட நூற்றாண்டு விழா



# கலைச் செயலாளரின் உள்ளத்திலிருந்து

என்னைத் தாங்கும், என்னை வளம்பெறச் செய்யும் என் மண்ணாம் அரியாலை அன்னையைச் சிரம் தாழ்த்தி வணங்கி, வரலாற்றுச் சதானை கொண்ட விழாவாம் அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாக் கலைச் செயலாளர் என்ற மகிழ்வுடன் ஒரு சில நிமிடங்கள் உங்களுடன்.

நூற்றாண்டுச் சாதனைப் பெருவிழாவில் பல உள்ளூர் மற்றும் சர்வதேச ரீதியிலான கலைப் போட்டிகள் மிகவும் சிறப்பாக நடந்தேறின. இதற்குத் தேவையான வினாத்தாள்களைத் தயாரித்துத் தந்த ஆசிரியர்கள், மதிப்பீட்டுப் பணியில் ஈடுபட்ட ஆசிரியர்கள், நடுவர்கள், கலைக்குழுவினர் மற்றும் எமது அனைத்து உறவுகளுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள். சகல கலைப்போட்டிகளிலும் முன்னின்று உழைத்த கலைத்தலைவர் திரு.ப.ஸ்ரீஸ்கந்தன் அவர்களுக்கும், திரு.த.ஹரிசான்ந், ஆசிரியரகளான திரு.பூ.குகதாசன், திரு.மதனகோபன், திரு.வி.பாலரூபன், திரு.க.கபிலன், அதிபர்திரு.த.நவீந்திரன், ஆசிரியை பிறேமினி, திரு.ஜெ.யசிந்தன், திரு.த.பிரணவராவ், வைத்தியர்(திருமதி) அ.சர்மிளா, செல்வி ப.மயூரி, திருமதி சறோ திருஞானம், ஆகியோருக்கும் தனிப்பட்ட ரீதியில் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். எமது போட்டிகளுக்குத் தேவையான செய்திகளை அதிகளவு வெளியிட்ட வலம்புரி பத்திரிகை, மற்றும் செய்திகளை வெளியீடு செய்த தினக்குரல், உதயன் பத்திரிகைகளுக்கும், எமது போட்டிகள் நடைபெற மண்டபங்கள் மற்றும் மேடைகளைத் தந்துதவிய எமது அனைத்து சனசமூக நிலையங்களுக்கும், அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலைச் சமூகத்திற்கும் எனது நன்றிகள்.

"நெடுங்கடலும் தன்நீர்மை குன்றும் தடிந்தெழிலி
தான்நல்கா தாகி விடின்"

என்ற வள்ளுவனின் வாக்கில் கடல் நீர் மேகமாகி மீண்டும் கடலின் மேல் மழையாய் பெய்யாவிட்டால் கடல்நீரின் வளமும் குறைந்து போகும். எனவே நாமும் தொடர்ந்து எமது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவை இன்னமும் சிறப்பாகத் தொடர்ந்தும் செய்ய வேண்டியவர்களாக உள்ளோம். எமது எதிர்காலச் சந்ததியினரின் கலை, கலாசார, பண்பாட்டு, விழுமியங்களைப் பேணி, விளையாட்டு வீரர்களாகவும், நுட்பமிகு தொழில்வல்லுநர்களாகவும், பல முக்கிய பதவிகளை வகிப்பவர்களாகவும் வரமுடியும். அவற்றிற்குத் தேவையான சகல விடயங்களுக்கும் அரியாலைச் சுதேசியம் அத்திபாரமானது என்பதில் எவ்வித ஐயமுமில்லை. எமது உணர்வுடன் கலந்த இவ்விழா இன்னும் பல நூற்றாண்டுகள் கடந்து வாழவேண்டும் என வாழ்த்தி நிறைவு செய்கின்றேன்.

**திரு. குணரத்தினம் பிரதீபன்**
கலைச் செயலாளர்,
அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட
நூற்றாண்டு விழா



# விளையாட்டுச் செயலாளரின் செய்தி

எமது சுதேசிய திருநாட் கொண்டாட்ட நூற்றாண்டு விழாவையொட்டி வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகிறேன். சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவானது எமது வாழ்க்கையின் ஓர் அம்சமாக கலந்துவிட்டது. எம் நண்பர்களுடன் இணைந்து கடந்த காலங்களிலும் இவ்விழாவை சிறப்பாக நடத்தி முடித்த இனிய தருணங்கள் என் மனதில் இனிக்கின்றது. இந் நூற்றாண்டு விழாவின் விளையாட்டுப் பகுதி செயலாளர் என்ற வகையில் முன்னோடிப் போட்டிகளைச் சிறப்பான முறையில் திட்டமிட்டு அதற்கேற்றவாறு செயற்படுத்தி வெற்றிகரமாக நிறைவு செய்தமை எனக்கு மன நிறைவைத் தருகின்றது. பாரம்பரிய மற்றும் நவீன விளையாட்டுக்கள் அரியாலையில் மட்டுமன்றி வடமாகாணம் முழுவதும் வளர்ச்சி அடைவதற்கு நாமும் உழைத்துள்ளோம் என்பதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். 60 இற்கு மேற்பட்ட போட்டிகளை வெற்றிகரமாக முடித்துள்ளோம். இவற்றுக்கு நிதியுதவியளித்த எமது உள்ளூர், வெளிநாட்டு கொடையாளிகளின் ஆர்வத்தைக் கண்டு மிகவும் மகிழ்ச்சியடைகிறோம்.

சுதேசிய விழா அரியாலை மக்கள் அனைவருக்கும் உரிய விழா எமது உணர்வை வெளிப்படுத்தும் விழா. எமது புகழை நிலைநாட்டும் விழா இவ்விழா பல்லாண்டு பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றோம்.

**ந.கவிந்தன்**
விளையாட்டு இணைச் செயலாளர்,
அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட
நூற்றாண்டு விழா.



# விளையாட்டுச் செயலாளரின் செய்தி

அனைவருக்கும் இனிய புதுவருட வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டு இந்த விகாரி வருட பிறப்பில் எமது அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்டமானது நூறாவது ஆண்டினை பூர்த்தி செய்வதினையிட்டு எனது வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கின்றேன். அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்டமானது தமிழர்களின் பண்பாடு பாரம்பரிய கலை மற்றும் விளையாட்டு போன்றவற்றினை எமது அடுத்த தலைமுறையும் அறியும் வண்ணம் மிகவும் தூரநோக்கோடு அமையப்பெற்றது குறிப்பிடத்தக்கது. அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்டா விழாவின் நூறாவது விழாவானது அரியாலை மண்ணிற்கு புகழ்சேர்த்த பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கிய எமது முன்னோர்களை நினைவுகூறத்தக்க வகையில் அமையப்பெற்றமை சிறப்பானது. அத்துடன் இவ்விழாவினை நூறாவது ஆண்டுகாலம்வரை வழிநடத்திவந்த முன்னைய நிர்வாகத்தினர் அனைவரையும் நினைவு கூர்ந்த வண்ணம் நூற்றாண்டு விழாக் காணும் அரியாலை சுதேசிய திருநாட்கொண்டாட்டவிழாவிற்கு எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**செ.மதியழகன்**
விளையாட்டு இணைச் செயலாளர்,
அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட
நூற்றாண்டு விழா



# நன்றி நவிலல்

அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட நூற்றாண்டு விழாவின் செயலாளர் என்ற வகையில் நிர்வாகத்தின் சார்பாக நன்றிகூறக் கடமைப் பட்டுள்ளேன்.

எமது மூதாதையரால் நூறு ஆண்டுகளாக ஒற்றுமையோடும், காருண்யத்தோடும், கட்டி வளர்க்கப்பட்ட சுதேசிய திருநாட் கொண்டாட்டத்தின் நூற்றாண்டு விழாவிலே என்னோடு கைகோர்த்துச் செயலாற்றிய அனைத்து உள்ளங்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

முதலில் நூற்றாண்டு நிர்வாகசபை உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது நன்றிகள். இவ்விழா சிறப்பதற்கு வெளிநாடுகளிலிருந்தும் உள்நாட்டிலும் நிதி உதவி வழங்கிய அனைத்து உள்ளங்களுக்கும் எனது நன்றிகள். விளையாட்டுப் போட்டிகளிலும், கலைப்போட்டிகளிலும் முன்னின்று உழைத்த அனைத்து உபகுழு உறுப்பினர்களுக்கும் எனது நன்றிகள்.

அழகான இம்மலரை தொகுத்து சிறந்த, என்றும் மணங்கமழும் மலராக ஆக்கித்தந்த திரு அ.உபயசேகரம் அவர்களுக்கும், மலர்க்குழு, மலர் உபகுழு உறுப்பினர்கள் அனைவருக்கும் என் இதயம் கனிந்த நன்றிகள்.

இவ்விழாவை பலவழிகளிலும் சிறப்புற வைத்து, மெருகூட்டிய அனைத்து அன்புள்ளங்களுக்கும் எமது நூற்றாண்டு விழா நிர்வாகத்தின் சார்பில் மெய்கூர்ந்த நன்றிகள்.

“எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம், உய்வில்லை செய்நன்றி கொன்ற மகர்க்கு”

என்னும் வள்ளுவப் பெருந்தகை கூறிய பொய்யாமொழிக்கு தலை வணங்கி இத்தால் நன்றியறிதலை பகிர்கின்றேன்.

**வி.சுதாகர்**
செயலாளர்
சுதேசிய திருநாட் கொண்டாட்ட
நூற்றாண்டு விழா



# பதிப்புரை

பல்வேறு சிறப்புகளைத் தன்னகத்தே கொண்டு விளங்கும் எமதூர் மக்கள் ஒன்றுதிரண்டு கொண்டாடும் பெருவிழாவாகிய சுதேசிய திருநாட் கொண்டாட்ட நூற்றாண்டு விழாவின் மலரை சமர்ப்பிப்பதில் மலர்க்குழுவாகிய நாம் மகிழ்ச்சியடைகின்றோம். இம்மலர் சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவின் ஆரம்ப கர்த்தாக்கள் சைவத் தமிழ் பாரம்பரியத்தை பாதுகாக்க ஆற்றிய தொண்டினை எடுத்தியம்புகிறது. எம் முன்னோர் தமது நோக்கங்களை கலை, கலாசாரம், விளையாட்டு என்பவற்றின் மூலம் மக்களை ஒன்றிணைத்து மக்கள் மத்தியில் விழிப்புணர்வை உருவாக்க சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாக்களைப் பயன்படுத்தினர். அந்த வகையில் இயல், இசை நாடகம் ஆகிய துறைகளில் எமது வளர்ச்சியையும் அதற்காக உழைத்த பெருமக்களையும் ஓரளவுக்கு இம்மலர் மூலம் அறிந்துகொள்ள முடியும். விளையாட்டுத்துறையில் காலத்துக்குக் காலம் ஏற்பட்ட பன்முக வளர்ச்சிகளையும், நிலைநாட்டிய சாதனைகளையும் இம்மலர் ஓரளவுக்கு புலப்படுத்துகிறது. இவ்விழாவை தொடர்ச்சியாக கொண்டாடுவதற்கு உழைத்து அமரத்துவம் எய்திய பெருமைக்குரிய 79 பெருந்தகையர்கள் பற்றிய தகவல்களையும் அவர்களின் மாண்புகளையும் திரட்டி இம்மலரில் வெளியிடுவதையிட்டு மலர்க்குழுவினர் மிகுந்த ஆத்ம திருப்தியடைகின்றனர். அந்நியர்கள் தமது சமயத்தை சைவத்தமிழ் சுதேசிகள் மத்தியில் பரப்ப கல்வியைக் கருவியாக எடுத்தமையை கருத்திற்கொண்டு எம்மக்கள் வழிபிறழாது தடுக்க நம் மூதாதையர் நிறுவியதும், உதவியதுமான பாடசாலைகள், பிரசுரித்த சஞ்சிகைகள், உருவாக்கிய சமயத்தொண்டு நிறுவனங்கள் பற்றிய தகவல்களையும் அதற்காக அவர்கள் அயராது உழைத்த தொண்டினையும் எதிர்கொண்ட சவால்களையும் இம்மலர் மூலம் விளங்கிக்கொள்ள முடியும். இம்மலரை உருவாக்குவதற்கு மலர்குழுவின் மற்றைய நண்பர்களான யாழ்ப்பாண பல்கலைக்கழக உத்தியோகத்தர் வடிவமைப்பாளர் திரு.ஜெ.யசிந்தன், சிறந்த ஆசிரியரும் முதுநிலைப் பட்டதாரியுமான திரு.சு.ஆறுமுகதாசன் மற்றும் யாழ்ப்பாண பல்கலைக்கழக வவுனியா வளாக சிரேஷ்ட விரிவுரையாளர் முதுமாணி திரு.த.பிரதீபன் ஆகியோர் ஆற்றிய பங்களிப்பு மகத்தானது.

எமது சுதேசிய திருநாட் கொண்டாட்ட நூற்றாண்டு விழாவின் பெருந்தலைவராக தெரிவு செய்யப்பட்டபின் சிவபதமடைந்த சத்திரசிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி மயிலு கணேசரத்தினம் அவர்களுக்கு எமது அஞ்சலிகளை சமர்ப்பிக்கின்றோம்.

சுபம்

அன்புடன்

**அ. உபயசேகரம்**

பதிப்பாசிரியர்

அரியாலை

06.04.2019

# பொருளடக்கம்


| தலைப்பு | பக்கம் |
|---|---|
| முதலாவது சம்பாஷணை 1919 ஆம் ஆண்டு | 1 |
| அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவின் வரலாற்றுப் பாதை பற்றிய ஓர் ஆய்வு | 2 |
| நந்திச் சின்னம் சுதேசிய அடையாளம் | 5 |
| திருமிகு நூற்றாண்டைத் தொடும் சுதேசிய விழாவைப் பெருமையோடு வாழ்த்துகின்றேன் | 6 |
| நூற்றாண்டு விழாவில் கௌரவம் பெறுவோர்... | |
| கல்வித்துறை | 7 |
| சமூக சேவை | 9 |
| விளையாட்டுத்துறை | 11 |
| கலைத்துறை | 14 |
| நூற்றாண்டு விழாவில் நிபுணத்துவ சாதனையாளருக்கான விருது பெறுவோர்... | |
| பொறியியல் துறை | 16 |
| கணக்கியல் நிதி முகாமைத்துவம் | 18 |
| சுவட்டு ஓட்டம் | 20 |
| நாடக நடிகர் | 22 |
| வைத்தியத்துறை | 24 |
| கல்வித்துறை | 25 |
| அகவை நூறில் அரியாலை சுதேசியம் | 26 |
| அழகான ஊர் | 27 |
| பெரிய பிரித்தானியா வாழ் அரியாலை மக்களின் சார்பாக வாழ்த்துமடல் | 28 |
| சுதேசிய நூற்றாண்டு மகிமை கேளீர் | 31 |
| அரியாலையம் பதியில் அருள்பாலிக்கும் திருக்கோயில்கள் பற்றிய வரலாறு | 33 |
| எம் ஊர் முன்னோரின் சிறப்பும், அவர்களின் நோக்கமும் பற்றிய ஆய்வு | 42 |
| தலைமைத்துவ சேவையை நல்கிச் சிவபதமடைந்த பெரியோரின் பெருமைகள் | 52 |
| அரியாலை சமகால விளையாட்டு வீர, வீராங்கனைகள் பற்றிய தகவல்கள் | 97 |
| அரியாலையூர் நாடக வரலாறு | 108 |
| தூய அரியாலையைக் கட்டியெழுப்புவோம் | 125 |
| மருவிவரும் விளையாட்டு நிகழ்ச்சிகளின் இறுதி நிகழ்வு | 127 |
| எமது கலை, கலாசார, சைவசமய வளர்ச்சியில் நாவலரின் தொண்டுகள் | 129 |
| இலங்கைத் தமிழர் வரலாற்றில் அரியாலையின் பண்பாட்டு அடையாளங்கள் | 137 |
| நோய்கள் சம்பந்தமான அறிவுரைகள் | 149 |
| தமிழர் சுதேசியமாம் சித்த மருத்துவம் | 153 |
| புதியன கழிதலும் பழையன புகுத்தலும் | 155 |
| மாம்பழம் சந்தியில் மணியத்தார் | 159 |
| பாடப்புத்தகங்கள் எழுதி அரியாலை மண்ணுக்குப் பெருமை சேர்த்த பேராசான்கள் | 162 |
| எமது உணர்வுகள் | 165 |
| சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவின் எழுச்சி சுதேசியத்தின் எழுச்சி | 166 |
| பிரித்தானியாவில் அரியாலை மக்கள் | 167 |

| தலைப்பு | பக்கம் |
|---|---|
| அரியாலையூர் நாடக ஆளுமைகள் | 172 |
| கல்விச் செல்வமே சிறந்த செல்வம் | 175 |
| நூற்றாண்டு காணும் அரியாலை சுதேசியமும் அதன் தேவைப்பாடும் | 178 |
| "பணி என் அணி" | 183 |
| சிறந்த நூல்களை வாசிப்பதால் உன்னத வாழ்வை அடையலாம் | 185 |
| சமுதாய மாற்றத்தில் பாடசாலைகளின் பங்களிப்பு | 190 |
| சங்கீதமும் நாமும் | 193 |
| எனது செஞ்சக்கருத்துக்கள் | 199 |
| சமூக நிறுவனங்களில் எமது இளைஞர்களின் தலைமைத்துவம் | 201 |
| எனது அனுபவம் | 205 |
| அரியாலை சமூக அபிவிருத்தி சங்கம் (ஐ.இ) | 206 |
| அரியாலை தந்த அனுபவங்கள் | 207 |
| Ariyalai in Many Manifestations | 211 |
| Precious memories from my Ariyalai Village Childhood to Teenager | 214 |
| அரியாலையூரின் அருங்கல்வி | 216 |
| அரியாலையில் நடனக்கலை | 222 |
| அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா பற்றிய நோக்கு | 224 |
| எனது அனுபவங்கள் | 234 |
| உங்களில் ஒருவன் லோகேஸ் | 235 |
| அரியாலை தரும் முன்பிள்ளைப் பருவக் கல்வி | 237 |
| விளையாட்டும் நாமும் | 242 |
| திருமகள் நாடக மன்றக் கலை பற்றிய கருத்துக்கள் | 250 |
| ஆண்டு நூறு காணும் அரியாலை சுதேசியம் | 253 |
| அரியாலை சுதேசியம் வாழியவே! | 255 |
| தேசவழமைச் சட்டம் | 256 |
| கரபந்தாட்டமும் அரியாலையூரும் | 263 |
| கந்தையா கடை பற்றிய நினைவுகள் | 266 |
| Leaders Born & Bred in Ariyalai | 267 |
| சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவில் காலத்துக்கு காலம் பங்கு பற்றயவர்கள் | 274 |

# அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட நூற்றாண்டு விழா
## நிர்வாகசபை உறுப்பினர்கள்




**இருப்போர் (இடமிருந்து வலம்)**

திரு. க. கனகசபாபதி, திரு. ப. ஸ்ரீஸ்கந்தன் (கலைத் தலைவர்), கலாநிதி சு. மோகனதாஸ் (நிதி, நிர்வாகத் தலைவர்), திரு. வி. சுதாகர் (செயலாளர்), திரு. செ. பத்மநாதன் (விழாத் தலைவர்), திரு. சு. சண்முகரட்ணம் (பொருளாளர்), திரு. V. K. சண்முகலிங்கம், திரு. ந. சுதேஸ்குமார் (விளையாட்டுத் தலைவர்),

**நிற்போர் (இடமிருந்து வலம்)**

திருமதி ஸ்ரீரஞ்சினி ஆனந்தகுமாரசாமி, திரு. S. C. செல்வராஜா, திரு. கு. பிரதீபன் (கலைச்செயலாளர்), திரு. ஜெ. ஜசிந்தன் (ஊடகப் பொறுப்பாளர்), திரு. த. ஹரிஷான்ந் (நாடகப் பொறுப்பாளர்), திரு. க. நாகேந்திரம், செல்வி.ப.மயூரி, சித்த வைத்தியர் (திருமதி) ச. அருண்பாபு

**புகைப்படத்திற்கு சமுகமளிக்காதோர்**

திரு. அ. உபயசேகரம், திரு. நி. கவிந்தன், திரு. செ. மதியழகன், திரு. வை. கிருபாகரன், Dr. மு. தெய்வேந்திரா, திரு. ந. நேதாஜி, திரு.நி.துஷ்யந்தன், திரு. ந. குகதாஸ், திரு. உ. தர்மேந்திரன், திரு. த. பிரதீபன்



அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட நூற்றாண்டு விழாத் தூபி மாதிரிப் படம்




அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட நூற்றாண்டு விழாத் தூபி

# அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட நூற்றாண்டு விழா
## நூற்றாண்டு கீதம் இயற்றிய குழு



**இருப்போர் (இடமிருந்து வலம்) :** திரு. S. T. பத்மநாதன், திரு. செ. பத்மநாதன் (விழாத் தலைவர்), திரு. வி. சுதாகர் (செயலாளர்), திரு. சு. சண்முகரட்ணம் (பொருளாளர்)

**நிற்போர் (இடமிருந்து வலம்) :** Dr. (செல்வி) கு. திருமகள், செல்வி ம. கிருஷ்ணவேணி, திருமதி பிரவீனா மாதவன்

# அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட நூற்றாண்டு விழா
# நிதி நிர்வாகக்குழு உறுப்பினர்கள்




**இருப்போர் (இடமிருந்து வலம்)**

திரு. க. கனகசபாபதி, திரு. வி. சுதாகர் (செயலாளர்), திரு. செ. பத்மநாதன் (விழாத் தலைவர்), கலாநிதி. சு. மோகனதாஸ் (நிதி நிர்வாகத் தலைவர்), திரு. சு. சண்முகரட்ணம் (பொருளாளர்)

**நிற்போர் (இடமிருந்து வலம்)**

திரு. மு. குணம், திரு. த. பிரணவராவ்

**புகைப்படத்திற்கு சமூகமளிக்காதோர்**

திருமதி க. விஜயலட்சுமி, திரு. தி. செல்வரட்ணம், Dr. மு. தெய்வேந்திரா, திரு. ந. நேதாஜி, திரு. வை. கிருபாகரன்

# அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட நூற்றாண்டு விழா
## கலைக்குழு உறுப்பினர்கள்



**இருப்போர் (இடமிருந்து வலம்)**

திருமதி ஸ்ரீரஞ்சினி ஆனந்தகுமாரசாமி, திரு. கு. பிரதீபன் (கலைச் செயலாளர்), திரு. வி. சுதாகர் (செயலாளர்), திரு. செ.பத்மநாதன் (விழாத்தலைவர்), திரு. ப. ஸ்ரீஸ்கந்தன் (கலைத் தலைவர்), திரு. சு. சண்முகரட்ணம் (பொருளாளர்), திருமதி சறோ திருஞானம்

**நிற்போர் (இடமிருந்து வலம்)**

திரு. த. ஹரிஷான்ந் (நாடகப் பொறுப்பாளர்), திருமதி சாந்தினி விக்கினேஷ்வரன், திரு. S. செல்வரட்ணம், திரு. வி.பாலரூபன், திரு. ஜெ. ஜசிந்தன் (ஊடகப் பொறுப்பாளர்) திரு. த. பிரணவராவ், சித்த வைத்தியர் (திருமதி) ச. அருண்பாபு, திரு. பூ. குகதாசன்

# அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட நூற்றாண்டு விழா
## நாடகக்குழு உறுப்பினர்கள்



**இடமிருந்து வலம் :**

திரு. ப. ஸ்ரீஸ்கந்தன் (கலைத்தலைவர்), திரு. த. ஹரிஷான்ந் (நாடகப்பொறுப்பாளர்), திரு. செ. பத்மநாதன் (விழாத்தலைவர்), திரு. சு. சண்முகரட்ணம் (பொருளாளர்), திரு. வி. சுதாகர் (செயலாளர்)

# அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட நூற்றாண்டு விழா
## விளையாட்டுக்குழு உறுப்பினர்கள்



**இருப்போர் (இடமிருந்து வலம்)**

செல்வி இராதை அருளம்பலம், திரு. ந. சுதேஸ்குமார் (விளையாட்டுத் தலைவர்), திரு. வி. சுதாகர் (செயலாளர்), திரு. செ. பத்மநாதன் (விழாத் தலைவர்), திரு. சு. சண்முகரட்ணம் (பொருளாளர்), திரு. V. K. சண்முகலிங்கம், செல்வி சுரேந்தினி சிதம்பரநாதன்

**நிற்போர் (இடமிருந்து வலம்)**

திரு. S. C. செல்வராஜா, திரு. க. நாகேந்திரம், செல்வி ப. மயூரி

**புகைப்படத்திற்கு சமுகமளிக்காதோர்**

திரு. நி. கவிந்தன், திரு. செ. மதியழகன், திரு. ந. குகதாஸ்,  திரு. உ. தர்மேந்திரன், திரு. ம. அம்பிகைதனேசியன், திரு. கே. நிசாந்தன், திரு. ம. கபில்ராஜ், திரு. ஐ. கணேஸ்பாலன், தரு. ம.மனோகரன், திருமதி கு.நிருணி

# அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட நூற்றாண்டு விழா
## மலர்க்குழு உறுப்பினர்கள்



இடமிருந்து வலம் :

திரு. த. பிரதீபன், திரு. அ. உபயசேகரம், திரு. சு. ஆறுமுகதாசன், திரு. ஜெ. ஜசிந்தன்

## அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட நூற்றாண்டு விழாவின் பெருந் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டு இடையில் அமரத்துவமடைந்த

### வைத்திய கலாநிதி

# அமரர் மயிலு கணேசரட்ணம் அவர்களுக்கான அஞ்சலி



அரியாலையின் புகழ்பூத்த விசுவர் பரம்பரையில் மயிலு – மீனாட்சி தம்பதிகளுக்கு மகனாகப் பிறந்த இவர் மிகவும் மனிதநேயம் கொண்ட சத்திரசிகிச்சை நிபுணராவார். அரியாலை மக்களுக்கு இலவச வைத்திய ஆலோசனைகளை வழங்குகின்ற வழிகாட்டியாகவும் திகழ்ந்தார். ஊர்ப்பற்றாளரான இவர் தன்னைக் கொழும்பில் சந்திக்கும் நம்மவர்களிடம் ஊர் நடப்புகள் பற்றியும் கோவில்கள் வாசிக சாலைகள் பற்றியும் விழாக்கள் பற்றியும் துருவித்துருவிக் கேட்டறியும் இயல்பினர், கொடைவள்ளலான இவர் தனது சொந்தக் காணிக்குள்ளேயே தனது சொந்தப் பணத்தில் பெரியதொரு மண்டபத்தை அமைத்து அரியாலை மக்களின் பாவனைக்கு வழங்கிய பெருந்தகையாவார்.


அவரின் பெருமைகளையும் துறைசார் நிபுணத்துவத்தையும் கௌரவித்து அகில இலங்கை கம்பன் கழகம் பொற்கிழி வழங்கிப் பெருமைப்படுத்தியது. இலங்கை சத்திரசிகிச்சை நிபுணர்கள் கல்லூரி வட பிராந்திய பிரிவின் வருடாந்த அமர்வின்போது சத்திரசிகிச்சை நிபுணர் S.இராஜேந்திரா அவர்களால் வைத்தியக் கலாநிதி ம.கணேசரட்ணம் நினைவுப்பேருரை 21.03.2019 அன்று யாழ்ப்பாணம், கிறீன் கிராஸ் விடுதியில் நிகழ்த்தப்பட்டது. இலங்கை சத்திரசிகிச்சை நிபுணர்கள் கல்லூரியின் வட பிராந்தியப் பிரிவால் அமரத்துவம் அடைந்த ஒருவருக்காக நிகழ்த்தப்பட்ட முதலாவது நினைவுப் பேருரை இதுவே என்பதும் குறிப்பிடத்தக்கது. அரியாலை மக்களால் பெரிதும் விரும்பப்படும் இவர் அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் பவளவிழாத் தலைவராகப் பணியாற்றி விழாவைப் பெருமைப்படுத்தியவர்.

அரியாலை மக்கள் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட பெருந்தலைவராக விளங்கியவர். இவர் எமது அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட நூற்றாண்டு விழாப் பெருந்தலைவராகத் தெரிவு செய்யப்பட்டு தனது கடமையை நிறைவேற்ற முன்பே அமரத்துவமடைந்தது வேதனைக்குரியது. அன்னாருக்கு எமது இதய பூர்வமான அஞ்சலிகள்.

**நிர்வாகத்தினர்,**
அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட
நூற்றாண்டு விழா.

# முதலாவது சம்பாஷணை 1919 ஆம் ஆண்டு

நன்றி வெள்ளிவிழா மலர்
நினைவு கூறுபவர்:
சி. சோதிநாதர்



## முதலாவது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவில் நிகழ்ந்த ஒரு சம்பாஷணை

*எழுதியவர் : நொத்தாரிசு சுப்பிரமணியம்.*
*பங்குபற்றியவர்கள்: சி. சோதிநாதர், எஸ்.வைத்திலிங்கம்*
*பாத்திரங்கள்: கர்வசமனன், சர்வசமனன்*

***கர்வசமனன் :*** *ஏது இன்றையத் தினம். பச்சோலைத் தோரணங்கள், பசுங்காய்த் தோரணங்கள் பக்கலிலே வீற்றுப்பங்க, நாட்டிய வாழைகள் நான் மருங்கும் நன்றே நலங்க நடுவே "வெல்க்கம்" எனும் வார்த்தையை துலங்க, இச்சபை வெகு விமரிசையாக இருக்கிறதே சர்வசமனா....?*

***சர்வசமனன் :*** *வேறென்ன இது தெரியாமலா.. இன்றைக்குத் தான் எங்களுடைய புத்தாண்டுக் கொண்டாட்ட மாயிற்றே.*

***கர்வசமனன்:*** *கொண்டாட்டம் வேறா நல்லாத்தானிருக்கும். (கேலிச்சிரிப்பு)*


***சர்வசமனன்:*** *(மக்களுக்குக் கூறுகிறார்) ஏறுபோல் வீறுநடை போடும் எம் அருமை இளைஞர்களே எட்டு நாளாகச் செய்த பாம்பை எட்டி நின்று தொட்ட சுத்த வீரராம் வைக்கற்பட்டடை நாய்களின் எதிர்ப்பையும் பொருட் படுத்தாது கொண்டாட்டத்தை நிகழ்ந்த முன்வந்தமைக்கு நன்றி. (திரும்பி கர்வசமனனிடம்) இதற்கென ஒரு சபையை நிறுவிக் காரியதரிசி தலைவர், லிகிதர், மனேஜர், தனாதிகாரி ஆகியவர்களை வகுத்து அவர்களிடம் பொறுப்பைக் கையளித்திருக்கின்றோம்.*

***கர்வசமனன்:*** *(எக்காளச் சிரிப்புடன்) பளார்! பளார்! நன்றாக இருக்கிறது..... மனேஜராம் லிகிதராம் - மற்றும் கொமிற்றி மெம்பராம் ஆகாயத்திலும் கோட்டையா, அரியாலையிலும் சங்கமா, நானும் நரைத்து நரைத்து நரைத்த தலையானேன். தொண்ணூறும் பத்தும் தோன்றாது தொலைந்தது... நற்பேரன், பாட்டன், பூட்டன், கோந்துரு, பேந்துரு முதலாய நம் முன்னோர்கள் நற்பிள்ளை குட்டிகளைப் பெற்று வைத்துவிட்டுப் போனார்களேயொழிய சங்கம் சமுதாயம் ஒன்றையும் செய்தாரில்லை... இப்போது தான் கருநாடகமும், பெரும் புகழும் எம்மவர்கள் Bad, Mad என்ற படித்தத னாலன்றோ பந்தாட்டம் ஒன்றைப் பறையறிவித்தார்கள். நாய்க்கேன் போர்த் தேங்காய், நம்மவருக்கேன் பந்தாட்டம்.*

***சர்வசமனன்:*** *வேறெதற்கு உடல் வளர்ச்சி, ஒற்றுமை, தேசப்பற்று உம்மைப் போன்ற எழுத்தறிவற்ற அஞ்ஞானிகளை நல்வழிப்படுத்தவும் முன்னேற்றவுமே இச்சங்கத்தை தோற்றினோம். இங்கு நீங்கள் காலத்தை வீணாக்காது முன்னேற்று வீர்களென நம்புகின்றோம்.*

***கர்வசமனன் :*** *பிறகென்ன - நல்லாய் விளங்கிச்சு... நானும் கூட்டத்திற்கு வாறன்.*

# அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவின் வரலாற்றுப் பாதை பற்றிய ஓர் ஆய்வு



கந்தையா மயில்வாகனம் B.A
தலைவர்
86 ஆவது சுதேசிய திருநாள் கொண்டாட்ட விழா
(இணைப்பாளர், நிரந்தரக்குழு)

முதலாவது உலக மகா யுத்தத்தின் பின்னர் காலணித்துவ நாடுகளில் வசித்த மக்கள் தமது இன, சமூக, மொழி, கலாசார அடையாளங்களை முதலாளித்துவ ஏகாதிபத்தியவாதிகளிட மிருந்து பாதுகாப் பதற்காக சுதந்திரப் போராட்டங்களை ஆங்காங்கே ஆரம்பித்து வந்தனர். 1917 இல் சோவியத் ரஷ்யாவில் வெற்றி பெற்ற ஒக்டோபர் புரட்சியும் அதன் அடித் தளமாக விளங்கிய மாக்சிய சிந்தனையின் பரவல்களும் இச்செயற்பாட்டை ஊக்க மடைய உதவின. ஆனால் இச்செயற் பாட்டை தென்கிழக்காசிய நாடுகளில் பாட்டாளி மக்கள் முன்னெடுக்காமல் படித்த நிலச்சுவாந்தர்களும் பிரபுக்களுமே முன்னெடுத்து அவற்றுக்கு தலைமை தாங்கி பின்னர் அவை அவ் நாடுகளில் அரசியல் சமூக போராட்டங்களை பரிணமித்து பின்னர் நாடுகளின் சுதந்திரம் மற்றும் மக்களின் இறைமையைப் பாதுகாக்கும் அமைப்புக்களாகவும் பரிணமித்து வந்தமையை இந்நாடுகளின் வரலாறுகளிலிருந்து அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

இந்தக் காலகட்டத்தில் காலத்தின் தேவைகருதி யாழ்ப்பாணத்தில் உருவாக்கப் பட்ட இந்துமத மீள் உருவாக்கம் இந்துமத பாடசாலைகளின் உருவாக்கம் தமிழ் மொழிக்கல்வியின் மறுமலர்ச்சி என்பவற்றைக் குறிப்பிடலாம். இப் பின்புலத்தில் தான் இவ்விழாவின் ஆரம்ப நாயகனாகிய திரு.விஸ்வநாதர்காசிப்பிள்ளை, ஆறுமுகம் கதிரவேலு, ஆறுமுகம் கனகரத்தினம், அருளம்பலம் போன்ற முன்னோடிகளாகும்.

இவர்கள் அனைவரும் அக்காலத் தில் ஆங்கிலக்கல்வி கற்ற சட்டத்தர ணிகளாக, நொத்தரிஸ்மாராகவும் இறுக்கமான இந்து மதப் பாரம்பரியத்தைக் கொண்ட நிலச் சுவாந்தர்களாகவும் விளங்கி வந்தனர். இவர்களது இத் தலைமைத்துவப் பண்பு மற்றும் அரியாலை மக்களை அவர்களது ஆளுமைக்குட்பட்டதாக்கி இவ்விழாவை அக்காலத்தில் சிறப்புறச் செய்தனர். பொது இடங்களை, நீர்நொச்சித்தாழ்வு, ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயம், ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை, யாழ் நகர அபிவிருத்தி சபை (U.D.C) க்கு சொந்தமான மைதானம் (அரியாலை சனசமூக நிலைய முன்னைய சந்தையும், மைதானமும்) என்பவற்றை மையமாகக் கொண்டு பாரம்பரியக் கலைக்கூத்து நாடகம், விளையாட்டுப் போட்டிகளை நடத்து தல், திறமையானவர்களைத் தெரிவு செய்தல், பரிசுகளை வழங்கி ஊக்குவித்தல் என்ற செயற்பாட்டில் முற்று முழுவது மாக பொது மக்களின் அன்பளிப்புக்களை யும், அவர்களது (இளைஞர்களது) உடல் உழைப்பைக்கொண்டு உருவாக்கியதாகவே இருந்தது.

இவ்விழாவிற்கு ஆரம்பம் தொடக்கம் எழுதப்பட்டு கடைப்பிடிப் பதற்காக யாப்பொன்று இருந்து வந்ததாக தெரியவில்லை. ஆனால் கூட்ட அறிக்கைகள் கணக்கு அறிக்கைககள் போன்றன வெளிப்படையான தன்மை கொண்ட முன்னேற்றமான செயற்பாடு களில் இருந்து வந்தமையை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. நாம் அறிந்த காலத்திலிருந்தே விழாவிற்கான ஆரம்ப நிகழ்வுகள் தைப்பொங்கல் தினத்துக்கு முதல் நாள் மாலை அரியாலை சரஸ்வதி நூல் நிலைய முன்றலில் நடைபெறும் கூட்டத்தில் அவ்வருடத்திற்கான நிர்வாக சபை தெரியப்பட்டு மூன்று மாத காலத்துள் விழா நிகழ்வுகள் திட்டமிடப் பட்டு, நிதி வசூலிக்கப்பட்டு போட்டிகள் அட்ட வணைப்படுத்தப்பட்டு செயற் படுத்தப்பட்டன. அவற்றில் இரவு நாடகங்களும், பகல் விளையாட்டுப் போட்டிகளுமே மக்களைக் கவருபவை யும் மக்கள் பங்குபற்றுபவையாகவும் திகழ்ந்தன. காலக் கிரமத்தில் முன்னோடிக் கலைப் போட்டிகள் ஸ்ரீ பார்வதி வித்தியா சாலையிலும், முன்னோடிக் குழு விளையாட்டுப் போட்டிகள் அரியாலை சனசமூக நிலைய மைதானத்திலும் நடைபெற்று வந்தன.

1972 இல் இவ்விழாவின் நிர்வாக அமைப்பு விழா நிகழ்ச்சி நிரல்கள் என்பவற்றை தீர்மானிப்பதற்கான ஓர் விழா யாப்பு தீர்மானிக்கப்பட்டு பொது மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டு அவ் அடிப்படை யாப்பு பல திருத்தங்களுடன் இன்று வரை நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இவ் யாப்பைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்தி கண்காணிப்பதற் காக ஐந்து பேர் கொண்ட நிரந்தரக் குழுவொன்று அமைக்கப்பட்டது. அக் குழுவின் தலைவராக திரு.செ.பத்மநாதன் அவர்களும் மற்றைய அங்கத்தவர்களாக திருவாளர்கள் அமரர் S.T. கணநாதன், சு.பாலசுந்தரம் (அமரர்) ஆ.சண்முகநாதன், க.கனகசபாபதி ஆகியோர் பெரும் செயலாற்றினர். அக்குழுவின் இணைப் பாளராக திரு.க.மயில்வாகனம் அவர்களும், பின்னர் திரு. இ. சடகோபன் அவர்களும் பின்னர் திரு. அ. உபயசேகரம் அவர்களும் கடமையாற்றி வந்தனர்.

இக்காலப்பகுதியில் ஏற்பட்ட உள்நாட்டு யுத்தம், இடப்பெயர்வு, இளைஞர்கள் வெளிநாடுகளில் தஞ்சம் அடைதல், குடும்பங்களாக வெளிநாட்டு நகர்வு, கலப்புத் திருமணங்கள், மாற்று கிராம மக்கள் கூடியளவு இக்கிராமத்தில் குடியேறியமை, சமூக தாபனங்களில் பணியாற்றியமை மேலும் காலம் செல்லச் செல்ல புலம் பெயர்ந்த அமைப்புக்கள் மூலம் பெறப்பட்ட நிதி உதவிகள் மக்கள் கலாசார பண்பாடுகளில் ஏற்பட்ட மாற்றங்களால் பாரம்பரிய கலை வடிவங்களிலிருந்து தொலைக்காட்சி நாடகங்கள், இசை நிகழ்வுகள் போன்ற அம்சங்கள் விழாவை நடாத்துவதற்கான நிர்வாகக் குழுவைத் தெரிவு செய்தல், விழா நிகழ்வுகளை ஒழுங்குபடுத்தல், இரவுக்கலை நிகழ்ச்சிகளது ஒழுங்கமைப்பு என்பவற்றில் சிரமத்தை உருவாக்கி வருகின்றது.

இந்நிலையில் உள்நாட்டில் நிதி சேகரித்து இவ்விழாவை நடாத்துவதிலும் பார்க்க புலம் பெயர் நாடுகளில் வகிக்கும் எம்மவர்களது நிதிப்பங்களிப்பு ஒப்பீட்டு ரீதியில் அதிகரித்துக் காணப்படுவது நிகழ்ச்சிகளை ஒழுங்கமைப்பதிலும் அவற்றை செயற்படுத்துவதிலும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி வருவதாக தெரிகின்றது. விழாவின் பரிணாம வளர்ச்சியில் சமூகத்தில் தற்பொழுது

ஏற்பட்டுள்ள மாற்றம் தலைமைத் துவத்திற்கான ஆர்வம் என்பன தாக்கத்தை ஏற்படுத்துகிறது. கிராமத்தில் அமைந் துள்ள 13 சன சமூகங்களை மையப்படுத்தி அவ்வவ் சன சமூக மக்கள் குழாமை பிரதிநிதித்துவப்படுத்தும் பொதுச் சபையே இவ் விழாவுக்கான முழுப் பொறுப்பையும் கொண்டுள்ளது. ஆனால் நிரந்தரக் குழு பல கலந்துரையாடல்களை நடத்தி சம்மந்தப்பட்ட சன சமூக நிலைய நிர்வாகத்திற்கும் இக்குழு அங்கத்தவர் களுக்குமிடையே நிர்வாக ரீதியான தொடர்பையிட்டு விளக்கமளித்தும் அதில் குறிப்பிடத்தக்க வெற்றியை இந் நிரந்தரக்குழு பெறவில்லை என்றே கருத வேண்டியுள்ளது.

இந்நிலைப்பாடு தற்போதைய சமூக பொருளாதார மக்கள் தொகை அவர்கள் குறிப்பாக இளைஞர்கள் காட்டும் ஈடுபாடு அல்லது அக்கறை என்பவற்றின் அடிப்படையில் புதிய பரிமாணத்தை நோக்கிச் செல்வதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. எனினும் எமது சுதேசிய தாற்பரியத்தை பாதுகாத்தல், செயற்படுத்தல், எதிர் காலத்தை கருத்திற்கொண்டு செல்லுதல் என்ற ஏற்றுக் கொண்ட சுதேச தர்மத்தை கைவிடாது தொடர்ந்தும் முன்னோக்கிச் செல்வதாகவே உள்ளது.

சுதேசிய உணர்வு கொண்ட ஆங்கில கல்வி கற்ற நிலச்சுவாந்தர்களாலும் சட்டத்தரணிகளாலும் ஆரம்பிக்கப்பட்டு பின்னர் உள்ளூர்த் தலைவர்களால் வளர்க்கப்பட்டு தற்போது புலம்பெயர் எம்மூர் மக்களால் உள்ளூர் இளைஞர்கள் சமூக தலைவர்களால் முன்னெடுத்து வரும் இச்சுதேசிய நோக்கு தொடச்சியாக எமது சமூகத்தை ஒன்றிணைக்கும் பாலமாகவும் வழியாகவும் தொடர்ந்து செல்ல வேண்டும் என்பதே யாவரினதும் அவாவாகும்.




**ஆறுமுகம் கதிரவேலு**
தலைவர்
முதலாவது சுதேசிய திருநாட்
கொண்டாட்ட விழா 1919



**பரமு கந்தையா**
செயலாளர்
முதலாவது சுதேசிய திருநாட்
கொண்டாட்ட விழா 1919

# "நந்திச் சின்னம் சுதேசிய அடையாளம்"



கலாபூசனம் சிவநாமம் சிவதாசன் J.P

*முன்னவர் காட்டிய பாதையிலே*
*முகிழ்ந்தது இந்தத் திருநாளாம்*
*இன்றும் அரியாலை மண்ணில்*
*இனிதே நிலைத்திடும் பெருநாளாம்!*

*பாரம்பரியம் பண்பாடு கலாசாரம்*
*பேணிடும் சுதேசியத் திருநாளாம்*
*ஊரவர் மகிழ்ந்து கொண்டாடும்*
*நூறாம் ஆண்டுப் பெருநாளாம்!*

*என்றும் சித்திரைப் புத்தாண்டில்*
*மலரும் ஆனந்தத் திருநாளாம்*
*தொன்மை தொட்டு விளையாட்டின்*
*திறனைக் காட்டும் பெருநாளாம்!*

*பல்துறை சார்ந்த பெரியோர்கள்*
*கௌரவம் பெற்றிடும் திருநாளாம்*
*எல்லா விதமார் கலைகளையும்*
*அரங்கினில் காணும் பெருநாளாம்!*

*மஞ்சள் கொடி நந்திச் சின்னம்*
*மண்ணின் சுதேசிய அடையாளம்*
*விஞ்சும் புகழ்நிறை திருநாளாம்*
*எங்கள் அரியாலைப் பெருநாளே!*

# திருமிகு நூற்றாண்டைத் தொடும் சுதேசிய விழாவைப் பெருமையோடு வாழ்த்துகின்றேன்



ந. கிருஸ்ணசிங்கம்
நோர்வே

*அரியாலை எம்மூரின் சுதேசிய திருநாள்*
*திருவிழாவின் வருடாந்தக் -கொண்டாட்ட*
*பெருவிழாவின் நூற்றாண்டு நல்நிறைவை*
*வரியெடுத்து வெண்பாவில் பாடவந்தேன்*

*கலைக்கும் விளையாட்டிற்கும் மற்றும் நல்*
*கல்விக்கும் தலைசிறந்த பல்துறை - வல்ல*
*நிலை துலங்கும் நிருவாகத் திறன்களுக்கும்*
*தகுதி படைத்தவரைத் தந்தது அரியாலை.*

*அருந்தமிழும் சிங்களமும் வெள்ளையரின்*
*ஆட்சியின் கீழ் அல்லலுற்றும் - அழிந்தும்*
*கலை கலாசாரம் பாரம்பரிய விளையாட்டு*
*தலையாய இனத்துவம் அத்தனையும் ஒழிய,*

*அன்னியரின் பண்பாட்டுப் பழக்கவழக்கத்தை*
*எதிர்த்து எம் கலை விளையாட்டு - தேசியம்*
*என்பவற்றைப் பேணும்பொருட்டு நம்முன்னோர்*
*எடுத்தவிழாவே சுதேசியதிருநாள் கொண்டாட்டம்*

*சிங்களரும் தமிழருமாக சித்திரை மாதத்தின்*
*முதல்நாளான மங்களமிகு வருடப் - பிறப்பை*
*தங்களுடைய சுதேசியத்தை திரும்பவும் தாம்*
*மீட்டெடுக்கும் ஒரு தினமாகக் கொண்டாடினர்.*

*விடுதலைக்காய் போரிட்ட வியத்தகும் கடிய*
*காலத்திலும் வீரர்களின் துணையோடு - இத்*
*தொடர்பெரும் வரலாற்றுப் பெரும் விழாவான*
*தலையாய சுதேசியத் திருநாள் சீரோடுநின்றது.*

*திருமிகவே நூற்றாண்டதை தொடும் இப்பெரும்*
*தரமுயர் இவ்விழாவைத் தாயகநினைவு - மிகு*
*தமிழர் எம்மவர்களோடு இணைந்துநான் இனிதே*
*மருவியநிறை மனமகிழ்வோடு வாழ்த்துகின்றேன்.!*

# கல்வித்துறையில் சிறப்புற வாழ்ந்து கொண்டிருக்கும் கலாநிதி சுப்பிரமணியம் மோகனதாஸ் அவர்கள்



மலர்க்குழு

*அரியாலை நாவலடிக் கிராமத்தை பூர்வீகமாகக் கொண்ட சைவத் தமிழ் பாரம்பரியத்தில் மிகுந்த பற்றுதலுடைய ஆசிரியர் சுந்தரம் சுப்பிரமணியம் அவர்களின் மூத்த மகனாகப் பிறந்த கலாநிதி மோகனதாஸ் அவர்கள் தனது ஆரம்பக்கல்வியை அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலையிலும் இடைநிலைக் கல்வியை யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாசாலையிலும் கற்று மேற் படிப்பை கொழும்பு பல்கலைக் கழகத்தில் கற்று வேதியல் சிறப்பு விஞ்ஞானமாணி பரீட்சையில் இரண்டாம் வகுப்பில் சித்தியடைந்தார். தென்னை ஆராய்ச்சிச் சபையில் ஆராய்ச்சி உத்தியோகத்தராக நியமனம் பெற்ற இவர் புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் அவுஸ்ரேலியா அடிலெயிட் பல்கலைக் கழகத்தில் வேதியியல் ஆராய்ச்சித் துறையில் கலாநிதிப் பட்டம் பெற்று திரும்பிய இவர் நுணுவில தென்னை ஆராய்ச்சி நிலையத்தில் பணிப்பாளர் களில் ஒருவராகக் கடமையாற்றினார். 1984 இல் பனை அபிவிருத்திச் சபையின் முதலாவது பொது முகாமையாளராக பதவி வகித்தார். பின் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானபீட சிரேஸ்ட விரிவுரையாளராக நியமனம் பெற்று பல ஆண்டுகள்கடமையாற்றியவர். யாழ் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர்ப் பட்டம் பெற்ற இவர் கிளிநொச்சியில் விவசாய இரசாயன பேராசிரியராகப் பல ஆண்டுகள் பணியாற்றித் துறைத்தலை வர், பீடாதிபதி பதவிகளை வகித்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வவுனியா வளாகக் கல்லூரியின் பணிப்பாளராகவும் முதலாவது முதல்வராகவும் நியமனம் பெற்று அந்நிலையத்தின் ஸ்திரத்தன்மைக் கும் வளர்ச்சிக்கும் அயராது உழைத்து முன்னேற்றிய பெருமகனாவார். பின்னர் சிக்கலும் சிரமமும் மிக்க காலகட்டத்தில் யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர்ப் பொறுப்பை ஏற்று மாணவர்களின் கல்வி நலன் அவர்களின் பாதுகாப்பு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு பல்கலைக்கழகம் தொடர்ந்தும் செயல்படுவதற்கு ஏற்ற அக, புற சூழல்களை உருவாக்கி நிர்வகித்த பெருமைக்குரியவர்.*

*தனது ஆழமான அறிவையும் நீண்ட அனுபவத்தையும் தலைசிறந்த முகாமைத்துவ ஆற்றலையும் பயன்படுத்தி போராட்ட காலத்திலும் பல்கலைக்கழக நிறுவனங்களை இடையூறின்றி திறம்பட நடத்திய துணைவேந்தர் எனப் பலரா லும் பாராட்டப்பட்ட பெருமைக்குரியவராவார்.*

*சிறந்த கல்விமானாகிய இவரின் சேவையைப் பாராட்டி மூன்று ஜனாதி பதிகள் முறையே வித்தியாஜோதி, C.W.W. கன்னங்கரா இலவசக்கல்வி தந்த உண்மையான வெளிப்பாடு விருது, தலைசிறந்த மரமுந்திரி விவசாயி என்ற பட்டம் வழங்கிக் கௌரவித்தமை எமது அரியாலையூருக்குச் சிறப்பை மேலும்*


தருகின்றது. கலாநிதி மோகனதாஸ் அவர்கள் மேலும் பற்பல நிறுவனங்களான பல்கலைக்கழக மாணிய ஆணைக்குழுவில் அங்கத்தவராகவும், SATTM பல்கலைக்கழக மூதவை உறுப்பினராகவும், இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தின் தற்போதைய பேரவை உறுப்பினராகவும் IBMBB உயர் கல்வி பனை ஆராய்ச்சி நிறுவனத்தின், தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆலோசனை சபையின் அங்கத்தவராகவும் கடமையாற்றுவதோடு 1988 ஆம் ஆண்டு முதல் இன்று வரை G.C.E. (A/L) பரீட்சை விடயங்களில் இரகசியப்பிரிவில் மிகவும் பொறுப்புணர்வுடன் கடமை யாற்றி தாய் நாட்டுக்காக தான் பெற்ற கல்வியையும் அனுபவங்களையும் பகிர்ந்து வருகின்றார்.

அரியாலையின் மேம்பாட்டுக்கும் பெருமைக்காகவும் பற்பல கல்வி, கலை, பண்பாட்டு நிறுவனங்கள் மாத்திரமன்றி விவசாய அமைப்புக்களை புதிதாக உருவாக்கியும் பாடுபட்டு வருகின்றார். குறிப்பாக அரியாலை கற்பகதரு சங்கம், அரியாலை பனை வளர்ப்போர் சங்கம், அரியாலை மரமுந்திரி (கஜூ) சங்கம் அரியாலை J/96 கிராம அபிவிருத்திச் சங்கம் ஆகியவற்றின் ஸ்தாபக தலைவ ராகவும் மற்றும் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம், அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை ஆகியவற்றின் பழைய மாணவ சங்கத் தலைவராகவும் அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானசபை, ஆகியவற்றின் தலைவராக வும் சரஸ்வதி சன சமூக நிலைய போசக ராகவும் அரியாலை ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தானத்தின் உபதலைவராகவும் பொறுப்பேற்று அவ்நிறுவனங்கள் சிறப்பாக வினைத்திறனாக இயங்கு வதற்கும் அதனால் யாழ்ப்பாணத்தில் அரியாலையின் வகிபாகத்தை நிலைநாட்டி யாழ்ப்பாணத்தின் சிறப்புக்காகவும் பல நிறுவனங்களில் அங்கத்தவராக விளங்கித் தனது சேவையையும் அர்ப்பணிப்பையும் கல்வியையும் ஆளுமையையும் பயன் படுத்தி வருகின்றார். உயர்தரப் பரீட்சை யில் இரசாயன பாடத்தில் பிரதம பரீட்சாத்தகரில் ஒருவராகக் கடந்த முப்பது ஆண்டுகளாக தொடர்ந்து செய லாற்றி வரும் கல்வி மானாவர்.

தேசிய ரீதியாக 2012-2013 ஆண்டு காலப்பகுதியில் இலங்கை இரசாயன வியல் சங்கத்தின் மதிப்பிற்குரிய பெரும் தலைவராக செயலாற்றி எமக்கெல்லாம் பெருமையைத் தேடித் தந்தவராவார். மேலும் யாழ்ப்பாண மாவட்ட ரீதியாக யாழ் மாவட்ட அபிவிருத்திக்குழு அங்கத்தவராகவும், யாழ் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவராகவும் யாழ் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத் தலைவராகவும் யாழ் சனசமூக நிலைய சமாச அங்கத்தவராகவும் வடமாகாணத் தெங்கு வளர்ப்போர் சங்கத் தலைவராகவும் செயலாற்றி வரும் செயல் வீரராவார்.

அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட அமுத விழாவின் தலைவராக பணியாற்றிய பெருமைக் குரியவர் நூற்றாண்டு விழாவின் நிதி நிர்வாகத் தலைவராகப் பணியாற்றிக் கொண்டு இருக்கும் இவர் விழா சிறப்பாகவும் அனைவரினதும் ஒத்து ழைப்புடனும், ஒவ்வொரு அரியாலைச் சுதேசியும் தன்னுடைய சொந்த விழாவாகக் கருதிச் செயல்படுவதற்கு ஏற்றவிதமாக அற்பணிப்புடன் செயலாற்றி வரும் பெருமகனாவார்.

எவருடனும் இனிமையாகப் பேசும் தன்மையும், விட்டுக் கொடுக்கும் இயல்பும், முரண்படாத தன்மையும், பொறுமையாக நடந்து கொள்ளும் இயல்புடைய இப் பண்பாளர் அரியாலை மக்களின் ஒற்றுமை ஒன்றே தனது பேரவா என்ற குறிக்கோளுடன் வாழும் பெரிய வராவார்.



# சமூக சேவையில் அர்ப்பணிப்புடன் வாழ்ந்து கொண்டிருக்கும் திரு. செல்லையா பத்மநாதன் அவர்கள்

மலர்க்குழு

அரியாலையில் பிறந்த திரு. செ.பத்மநாதன் அவர்கள் இலங்கை நிர்வாக சேவையைச் சேர்ந்த மூத்த அதிகாரியாவார். வவுனியா யாழ்ப்பாண மாவட்டங்களில் அரச அதிபராகவும் அரசாங்கத்தின் பல பொறுப்பான பதவிகளைக் கடந்த காலங்களிலும் தற்போதும் வகித்து மக்கள் தொண்டாற்றி வரும் திரு.செல்லையா பத்மநாதன் அவர்களது சேவை குறிப்பிடத்தக்கதாகும். மும்மொழிப் புலமை பெற்ற இவர் அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை, யாழ். சென் ஜோண்ஸ் கல்லூரியின் பழைய மாணவராவார். பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொருளியல் சிறப்புப் பட்டதாரியான இவர் தொழில் சார் முதுகலைக் கல்வியை அரசாங்கப் புலமைப்பரிசில் திட்டத்தின்கீழ் இஸ்ரேல் சிபுறு பல்கலைக்கழகத்தில் பிராந்திய திட்டமிடல் கற்கைநெறியில் தேர்ச்சி பெற்றவராவார். இளைஞராக, மாணவராக இருக்குமபோதே பொதுச் சேவையில் ஈடுபட்ட இவர் தொடர்ச்சியாக அரியாலை சரஸ்வதி நூல் நிலைய நிர்வாக நடவடிக்கைகளில் பல வருடங்களாக ஈடுபட்டு அடிமட்டத் தொண்டனாக, தலைவராகப் பலமுறை பதவிவகித்து இந்நூல் நிலையம் சன சமூக நிலையமாக மாறுவதற்கு உழைத்தவர்களில் ஒருவராவார்.

அரியாலை மத்திய விளையாட்டு மைதானத்தை உருவாக்கும் பொழுது அதற்காக உழைத்தவர்களில் ஒருவராவார். அதன் செயல்பாடுகளில் முக்கிய பங்கு வகித்தவர். அரியாலை இளைஞர், விவசாயக்கழகம், மலைநாட்டு மரக்கறி விற்பனை நிலையத்தினை ஆரம்பித்து தனது பொதுப்பணியைச் செய்தார். பல்கலைக்கழக புதுமுக மாணவனாக இருக்கும்போதே 47 ஆவது (1966) விழாவின் பொருளாளராக சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவில் தனது சேவையை ஆரம்பித்தார்.

1966 இல் பல்கலைக்கழகத்துக்கு தெரிவு செய்யப்பட்ட இவர் 1967 இல் அரசசேவையில் சேர்ந்து வெளிவாரி மாணவராக கல்விகற்று 1973இல் பொருளியல் சிறப்பு பட்டம் பெற்ற இவர் இலங்கை கணக்காளர் சேவையில் தெரிவு செய்யப்பட்டு 1974 இலிருந்து 1976 ஆண்டுவரை பட்டயக் கணக்காளர் பரீட்சையில் இடைநிலைப் பரீட்சையில் சித்தி பெற்ற நிலையில் 1976 இல் இலங்கை நிர்வாக சேவை திறந்த போட்டிப் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்டு இலங்கையின் பல மாவட்டங்களில் பொறுப்பான பல பதவி பெற்று செயலாற்றினார். இவரது திறமை காரணமாக அரச புலமைப்பரிசில் பெற்று தனது முதுமாணி கல்வியை இஸ்ரேலிய நாட்டில் பெற்று தலை சிறந்த அபிவிருத்தி திட்டமிடலாளராக நாடு திரும்பி தனது 43 ஆவது வயதில் வவுனியா மாவட்ட

அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்டார். அரியாலை அபிவிருத்திச் சங்கத்தை ஆரம்பித்த முன்னோடிகளில் ஒருவராக விளங்கினார்.

1990 -1995 ஆண்டு காலப பகுதியில் யாழ் மாவட்டத்தின் புணருத் தாபன, நிவாரண தேவைகளுக்கான பதவிபெற்று பெரும் தொண்டாற்றி னார். மக்களுக்காக அவரால் ஆரம்பிக்கப்பட்ட புதிய நிறுவனம்தான் வர்த்தகத் திணைக்களமும் அதன் சேவையுமாகும். 1994இல் சிறப்புடன் நடைபெற்ற சுதேசிய திருநாட் கொண்டாட்ட பவள விழாவின் தலைவராகச் செயலாற்றியவர். யாழ் மாவட்ட இடப்பெயர்வின்போது கொழும்பில் இருந்து உணவுப் பொருட் கள், எரி பொருட்கள் என்பனவற்றைப் பெற்று விநியோகிக்க உதவிய அதிகாரியாவார்.

அரியாலை திருமகள் சனசமூக நிலையம், அருணோதயா சனசமூக நிலையம், கலைவாணி, சனசமூகநிலையம் அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை என்பவற்றை மீளியக்க இவர் செய்த புணருத்தானப் பணிகளாகும். 2002 ஆம் ஆண்டு வரை கொழும்பில் பல அமைச்சுக்களில் மேலதிகச் செயலாளராக உயர்பதவி வகித்த இவர் 2002 இல் மீண்டும் யாழ் மாவட்ட அரசாங்க அதிபராகப் பதவி வகித்தவர்.

அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியா சாலை, கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம், கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம், சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, சென் ஜோண்ஸ் கல்லூரி, சென். பற்றிக்ஸ் கல்லூரி ஆகியவற்றின் மாடிக் கட்டடங்கள், அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய மூன்று மாடிக் கட்டடம், கமநல சேவை நிலையம், யாழ் மாநகர சபை வீதிகள் புணரமைப்பு என்பனவற்றின் அபிவிருத்திக்கு பங்காற்றி யுள்ளார். யாழ் அரச சார்பற்ற ஒன்றியம், யாழ் வெதுப்பக உரிமையாளர் ஒன்றியம், பார ஊர்திச் சங்கம், யாழ் வணிகக் கழகம், துறைமுக தொழிலாளர் சங்கம் என்பன வற்றின் உருவாக்கத்துக்கு உறுதுணை யாக விளங்கியவர்.

உலக வங்கியின் வடகிழக்கு வீடமைப்புத் திட்டத்தின் (NEHRP) பணிப்பாளராக ஆறு வருடங்கள் சேவையாற்றி உலக வங்கியாலும் ஐரோப்பிய ஒன்றியத்தாலும் தென் கிழக்காசியாவின் சிறந்த திட்டப் பணிப்பாளர் என்ற பாராட்டைப் பெற்றவர். வடமாகாண விவசாய அமைச்சின் செயலாளராகவும் கடமை யாற்றியவர்.

பல நாடுகளில் தொழில் நிமித்தமும், கல்வி பயிற்சிக்காகவும் ஆலோசகராகவும் கடமையாற்றி பெற்ற அனுபவம் அரியாலையில் பொது நிகழ்வுகளை ஒழுங்கமைத்து நடாத்திய அனுபவம் என்பன அவரைப் பல்துறை நிபுணராக மாற்றியுள்ளது. தற்பொழுது வடக்கு மாகாணப் பொதுச்சேவை ஆணைக் குழுவின் தலைவராகவும் அரியாலை நீர்நொச்சித்தாழ்வு ஸ்ரீசித்தி விநாயகர் தேவஸ்தான நிர்வாகத்தின் சிரேஷ்ட உப தலைவராகவும் பணியாற்றி வருகின்றார். சகல விதமான விவசாய நடவடிக்கைகளிலும் பாரிய அளவில் செயல்படும் இவர் கடுமையான உழைப்பாளியாவார்.

## நூற்றாண்டு விழாவில் கௌரவம் பெறுவோர்...

# விளையாட்டுத்துறை விற்பன்னர் திரு. வேலுப்பிள்ளை கந்தையா சண்முகலிங்கம் அவர்கள்



மலர்க்குழு

நல்லூர் பெரிய கந்தையா இரத்தினம் தம்பதிகளின் நான்காவது புதல்வனாக அரியாலையில் பிறந்து அரியாலை மண்ணுக்கு புகழ் சேர்த்த சிறந்த விளையாட்டு வீரர் ஆவார்.

இவர் தனது ஆரம்பக் கல்வியை அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலயத்திலும் தொடர்ந்து யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்திலும் (ஸ்ரான்லிக் கல்லூரி) மற்றும் யாழ்ப்பாண மத்திய கல்லூரி ஆகியவற்றில் பயின்றார். ஸ்ரான்லிக் கல்லூரியில் பயிலும்போது ஆசிரியர் திரு. E. கனகலிங்கம் அவர்களால் பலவந்தமாக விளையாட்டுத் துறையில் களமிறக்கப்பட்டார். திரு. T.ஆலாலசுந்தரம் அவர்களால் கிறிக்கெட் பயிற்றுவிக்கப்பட்டு 1964 ஆம் ஆண்டு கிரிக்கெட் விளையாட ஆரம்பித்தார். அதே ஆண்டே பாடசாலை உதைபந்தாட்ட அணிக்காகவும் தெரிவு செய்யப்பட்டு யாழ்ப்பாண மத்திய கல்லூரியில் அனுமதி கிடைக்க இங்கு திரு.ஜெயசிங்கம் அவர்களால் கிரிக்கெட் பயிற்றுவிக்கப்பட்டு சிறந்த வேகப்பந்து வீச்சாளராக யாழ்ப்பாண மத்திய கல்லூரி அணிக்காக விளையாடியதுடன் அங்கு உதைபந்தாட்ட அணியிலும் விளையாடினார். பாடசாலை மெய்வல்லுநர் போட்டிகளிலும் தனது திறமைகளை சிறப்பாக வெளிப்படுத்தினார். பல தடவை சம்பியன் பட்டம் பெற்றார். 1965 ஆம் ஆண்டு யாழ் மத்திய கல்லூரியின் உதைபந்தாட்ட அணி யாழ் மாவட்ட சம்பியன் அணியாக தெரிவு செய்யப்பட்டு அதில் ஒரு வீரனாக தனது திறமைகளை வெளிப்படுத்தி Colours பெற்றார்.

1966 ஆம் ஆண்டு வடக்கின் பெரும் போர் என்று வர்ணிக்கப்படும் பெரும் துடுப்பாட்டப் போட்டியில் சிறந்த பந்து வீச்சாளராகத் தெரிவு செய்யப்பட்டு பரிசில் பெற்றார். 1965 ஆம் ஆண்டு அகில இலங்கை யூனியர் நஷனல் சம்பியன் மெய்வல்லுநர் போட்டியில் இரு இடங்களைப் பெற்று மத்திய கல்லூரிக்குப் பெருமை சேர்த்தவர். 1966 ஆம் ஆண்டு மாவட்டப் பாடசாலைகளுக்கான கிரிக்கெட் அணிக்காகத் தெரிவு செய்யப்பட்டார். அவ் அணி அகில இலங்கை ரீதியில் இரண்டாம் இடத்தைப் பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் 1970 - 1982 வரை இலங்கை புகையிரதத் திணைக்கள கிரிக்கெட் அணிக்காகவும் விளையாடினார்.

இவர் அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா நிர்வாக சபையில் பொறுப்பு மிக்க பல பதவிகளை வகித்தவர். மேலும் அரியாலை மத்திய விளையாட்டுக் கழக அணி, அரியாலை ஐக்கிய கழக அணி, சென்றலைட் அணி ஆகிய அணிகளுக்காக கிறிக்கெட் விளையாடினார். அரியாலை ஐக்கிய கழக அணிக்காக கரப்பந்தாட்ட (ஓவர்

கேம்), உதைபந்தாட்ட அணியில் விளையாடினார். அரியாலை மத்திய விளையாட்டுக் கழகத்திற்கும், அரியாலை ஐக்கிய கழகத்திற்கும் தலைவராக சமூகப் பணியாற்றினார். அது மட்டுமல்லாது திருமகள் சனசமூக நிலையம், அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம், அரியாலை சனசமூக நிலையம், அரியாலை அருணோதயா சனசமூக நிலையங்களின் நிர்வாக சபை உறுப்பினராக இருந்த துடன் அரியாலை திருமகள் சனசமூக நிலையத்தில் தலைவராகவும் பல காலம் போசகராகவும் இருந்தது மட்டுமல்லாது அரியாலை திருமகள் வீதி முத்து வைரவர் ஆலய போசகராகவும் ஆலய நிர்வாக சபையிலும் பல பதவிகளை வகித்து சமூகப் பணியாற்றினார். 85 ஆவது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா தலைவராகப் பணிபுரிந்தார்.

இவரது வளர்ச்சியில் இவ் சனசமூக நிலையங்கள் அனைத்தும் பெரிதும் பங்காற்றின. அது மட்டு மல்லாது மேற்படி சனசமூக நிலையங்க ளாலும் இறையருளாலும் யாழ் மாவட்டத் திற்கு மட்டுமல்லாது இலங்கையின் வடக்கு, கிழக்கு உள்ளிட்ட மாகாணங் களின் கிறிக்கெட் வளர்ச்சிக்குப் பங்காற்றினார்.

குறிப்பாக

***1987 - 1998***
ஸ்ரான்லிக் கல்லூரியின் கிறிக்கெட் பயிற்றுநர்

***1993 - 1995***
யாழ்ப்பாண பல்கலைக்கழக கிறிக்கெட் பயிற்றுநர்

***1998 - 2004***
யாழ்ப்பான மத்திய கல்லூரி கிறிக்கெட் பயிற்றுநர்

***1999 - 2003***
யாழ்ப்பாண பல்கலைக் கழக விளையாட்டு அலகுகள் (Physical Education) பயிற்றுநர், கிறிக்கெட் இடைவரவு விரிவுரையாளர்

***2009 - 2011***
யாழ்ப்பாண பரியோவான் கல்லூரி ஆரம்பப் பாடசாலை மாணவர்களின் கிறிக்கெட் பயிற்றுநர்.

***2001 - 2004 மற்றும் 2009 - 2011***
யாழ் மாவட்ட கிறிக்கெட் பயிற்றுநர்

***2006***
வடக்கு கிழக்கு துடுப்பாட்ட இணைப்பாளர்

- 2006 ஆம் ஆண்டு Minor District இலங்கை அணி சார்பாக மலேசியா சென்றபோது அதன் பயிற்றுவிப் பாளர்களில் ஒருவராக இருந்து பணியாற்றினார்.
- 2010 ஆம் ஆண்டு வடக்கு கிழக்குப் பெண்கள் அணி பெண்களுக்கான துடுப்பாட்ட போட்டியில் சம்பியனா னது அதன் பயிற்றுவிப்பாளர்களில் ஒருவராக இவரும் பணியாற்றினார்.

எமது ஊரின் இலண்டன் வாழ் புலம்பெயர் உறவுகள் இவரது விளை யாட்டுத் திறனுக்கு கௌரவமளித்து இவரையும் இவரது துணைவியார் லலிதா சண்முகலிங்கம் (ஓய்வுபெற்ற உப அதிபர்) ஆகியோரை இலண்டனில் நடைபெற்ற விரென் தமிழ்ச்சங்க விழாவின் 25 ஆம் ஆண்டு விழாவிற்கு விருந்தினர்களாக அழைக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார். இது மட்டுமல்ல உள்ளூரில் நடைபெற்ற பல விளையாட்டு நிகழ்வுகளுக்கும் இவரும் இவரது பாரியாரும் பிரதம விருந்தினர் களாக அழைக்கப்பட்டு கௌரவிக்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது.

1987 - 2013 ஆண்டு வரை கிறிக்கெட் பயிற்றுநராகப் பணியாற்றியது மட்டுமல்லாது யாழ் மாவட்டத்தின் அனைத்து மைதானங்களிலும் கால் பதித்த ஒரு சிறந்த விளையாட்டு வீர

ராவார். வன்னி மாவட்டத்தில் மட்டு மல்லாது யாழ்ப்பாணத்திலும் பல பாடசாலைகளில் வன்பந்து கிறிக்கெட் அணிகளை உருவாக்குவதில் பெரிதும் பாடுபட்டு உழைத்தார். 2010 ஆம் ஆண்டு யாழ் மாவட்ட விளையாட்டுத்துறை வர்ண இரவு நிகழ்ச்சியில் வடக்கு மாகாண ஆளுநரால் கௌரவிக்கப் பட்டார்.

2014 ஆம் ஆண்டு தனது 72 ஆவது வயதிலும்கூட அவுஸ்திரேலியா விலிருந்து யாழ்ப்பாணம் வந்த யாழ் மத்திய கல்லூரியின் பழைய மாணவர் அணியுடன் யாழ்ப்பாணத்திலுள்ள மத்திய கல்லூரி பழைய மாணவர் அணி விளையாடி சம்பியனானபோது அவ் வணியின் (Central Light) தலைவராக இருந்து செயற்பட்டது மட்டுமல்லாது போட்டியின் சிறந்த களத்தடுப்பாளராகத் தெரிவு செய்யப்பட்டார்.

இவர் மட்டுமல்லாது இவரது புத்திரர்களும் இவரின் குடும்ப உறவு களும் யாழ் மாவட்டத்தில் தமது பாட சாலை அணிகளுக்காகக் கிறிக்கெட் விளையாடியது மட்டுமல்லாது சிறந்த மெய்வல்லுநர்களாகவும் திகழ்கின்றமை குறிப்பிடத்தக்கது.

2013 ஆம் ஆண்டு யாழ்ப்பாண மத்திய கல்லூரியின் 13 வயதுக்குட்பட்ட வீரர்களுக்கான பயிற்றுவிப்பாளராக தனது துடுப்பாட்டப் பயிற்றுனர் என்னும் பணியிலிருந்து ஓய்வு பெற்றதுடன் அவ்வணியில் இவர் பயிற்றுவித்த இவரது மாணவர் மதுசன் இன்று இலங்கையின் 19 வயதுக்குட்பட்ட அணியில் தெரிவு செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத் தக்கது.

விளையாட்டின் மூலம் நல்ல தொரு ஆரோக்கியமானதும் பண்புமிக்க துமான ஒரு சமூகத்தைக் கட்டியெழுப்ப வேண்டும் என்பது இவரது பேரவா. அதற்கேற்றாற்போல் சிறந்த வீரர்களையும் சமூகத்துக்கேற்ற வீரர்களையும் உரு வாக்கினார். "அணிக்காக நாம் எப்போ தும் விளையாட வேண்டும்." "ஆடியடங் கும் விளையாட்டுத்துறையில் வீரர்கள் ஆணவம் கொள்ளக் கூடாது அன்புடன் பழக வேண்டும்" ஒவ்வொரு விளையாட்டு வீரனும் விளையாட்டுத் துறையை வளர்க்க வேண்டியது மட்டுமல்லாது சமூகத்தையும் கட்டியெழுப்ப வேண்டி யது அவர்களது கடமையும் பொறுப்பு மாகும். "மைதானமும் ஆலயமும் இரு கண்கள் எனக் கருதிச் செயற்பட்டவர் என்றும் விளையாட்டுக்காக தன்னை அர்ப்பணித்த இவர் இன்னும் பல ஆண்டு எல்லாம் வல்ல இறைவன் அருளுடன் சிறப்பாக வாழ வாழ்த்துகின்றோம்.

# கலைத்துறைக்குச் சிறப்புற பங்காற்றிக் கொண்டிருக்கும் திரு. பரமநாதன் ஸ்ரீஸ்கந்தன் அவர்கள்



மலர்க்குழு

அரியாலையில் தோன்றிய ஸ்ரீஸ்கந்தன் அவர்கள் மிகுந்த ஊர்ப் பற்றும் சுதேசிய உணர்வும் கொண்ட சுதேசியாவார். அரியாலையில் நடைபெறும் விழாக்கள் அனைத்தும் சிறப்பாகவும், பொருள் பொதிந்ததாகவும் விளங்க வேண்டும் என்ற உணர்வுடையவர். அதற்காக அர்ப்பணிப்புடன் உழைக்கும், உதவும் மனப்பாங்குடையவர். அரியாலையின் பல பகுதியினராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட சேவையாளரும், குறிப்பாக இளம் சந்ததியினரின் அன்பையும் ஆதரவையும் பெற்ற தலைவராவார்.

எமது நூற்றாண்டு விழாவின் கலைத்தலைவரான இவர் தனது பொறுப்பை செவ்வையாக நிறைவேற்ற வேண்டும். நூற்றாண்டு விழா சிறப்புப் பெற வேண்டும் என்ற நோக்குடன் கனடாவிலிருந்து 4 மாதங்களுக்கு முன்னதாகவே இங்கு வந்து கலைப் போட்டிகளை சிறப்புடன் நடத்தியமை பலராலும் அவதானிக்கப்பட்டுள்ளது. பெரும் எண்ணிக்கையான போட்டியாளர்கள் போட்டிகளில் பங்குபற்றுவதற்கு ஏற்றவாறு திட்டமிட்டுச் செயல்பட்டமை இவரின் பொறுப்புணர்வைக் காட்டுவதாக அமைந்துள்ளது.

நாடகத்துறையின் விற்பன்னரான இவர் வழமைபோல் இம்முறையும் மேடை ஏறுகின்ற தமிழ் ஈழத்தின் தன்னிகரில்லாத் தலைவனாக வாழ்ந்த வீரத் திருமகன் பண்டாரவன்னியன் வரலாற்று நாடகத்தை நெறியாள்கை செய்துள்ளார். மற்றும் இசைக்கூத்து நாடகத்தையும் நிர்வகித்துள்ளார். மேலும் நூற்றாண்டு விழா நினைவுச் சின்னமாக விளங்கப்போகும் எமது அடையாளத்தை நினைவுபடுத்திக் கொண்டிருக்கும் நந்தித் தூபி நிறுவுவதற்குப் பொறுப்பாளராகச் செயல்பட்டுள்ளார். கலைவிழா நிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத்துவதிலும் அவர் ஆற்றிய பங்கு வரலாற்றில் நினைவு கூறத்தக்கது.

மேலும் 1979 இல் நடைபெற்ற வைரவிழாவின்போது நடைபெற்ற மாட்டு வண்டிச் சவாரிப் போட்டியை சிறப்பான முறையில் நடத்தியமை பலராலும் பாராட்டப்பட்டது.

பரியோவான் கல்லூரி பழைய மாணவரான இவர் இயல்பாகவே கலையார்வமும், எழுத்தாற்றலும் கொண்ட ஓர் வர்ணனையாளருமாவார். அரியாலையின் மூத்த கலைஞர்களின் தகவல்களைத் திரட்டி அரியாலை நாடக வரலாற்றின் போக்கை காட்ட இவர் எடுத்த முயற்சிதான் “அரியாலையூர் நாடக ஆளுமைகள்” என்ற நூலாகும். இதன் மூலம் நாம் அறியக்கூடியது என்னவெனில் அவரின் தேடுதல், ஈடுபாடு, ஆளுமை எல்லாவற்றுக்கும் மூலகாரணமாக அமைந்தது அரியாலை மண்ணின் இயல்பை அனுபவித்ததுதான்.

இதனால் நாடகம் அவர் உணர்வுகளில் ஜீவனாகக் கலந்து நாடக உலகில் அவருக்கொரு அடையாளத்தைக் கொடுத் துள்ளது என்பதேயாகும்.

அரியாலை சனசமூக நிலைய ஆண்டு விழாவின் பிரதான நாடகமாக இவரின் "ஆத்மாவின் இராகம்" மேடை ஏற்றப்பட்டபோது சங்கீதபூஷணம் சபாபதிப்பிள்ளை பாலசிங்கம் அவர்கள் உட்பட பலரும் அவரைப் பாராட்டி ஊக்கப்படுத்தினார்கள். இதுவே அவர் இலங்கையிலும், ஐரோப்பிய நாடுகளிலும் கனடாவிலும் பல நாடகங்களை எழுதவும், நெறிப்படுத்தவும் அவரை வழிப்படுத்தியது என்று கருதுகின்றோம். தியாக தீபம், அநாதையின் கீதம், அபஸ்வர கீதங்கள், ஒரு ஆத்மா அழுகிறது, தூரத்தே ஒரு அக்கினிப் பூக்கள், என்றோ ஒருநாள், வேடதாரிகள், மாடும் மரமும் போன்ற நாடகங்களை எழுதி நெறியாள்கை செய்துள்ளார்.

கனடாவிலுள்ள CIBC வங்கியின் முகாமையாளராகக் கடமையாற்றி இளைப்பாறிய இவர் இவ்வங்கியின் முகாமையாளராகப் பணிபுரிந்த முதல் இலங்கைத் தமிழர் என்ற பெருமைக் குரியவர். கனடாவில் தமிழ்சோலை வானொலிச் சேவையை ஆரம்பித்து நடத்தியமை அரியாலை மக்களை ஒன்றிணைத்துச் செயல்திட்டங்களை வகுத்துக் கலை நிகழ்ச்சிகளை நடத்தியமை, அரியாலை அபிவிருத்திச் சங்கத்தின் கல்வித் திட்டத்தை ஊக்குவித்தமை மேலும் கணனிக் கல்வியை ஆரம்பித்தமை போன்ற நற்பணிகளை அரியாலை மக்களுக்கு நல்கி வரும் இவரின் சேவை பாராட்டத்தக்கதாகும்.




**எவன் ஒருவன் தனக்குத்தானே மனக் கட்டுப்பாடுகளை ஏற்படுத்திக் கொள்கிறானோ, அவனே சுதந்திர மனிதனாவான்..**

மகாத்மா காந்தி

## நூற்றாண்டு விழாவில் நிபுணத்துவ சாதனையாளருக்கான விருது பெறுவோர்...


# பொறியியல் துறைசார் நிபுணர் திரு. வேதநாயகம் இரகுநாதன் அவர்கள்




மலர்க்குழு

| | | |
|---|---|---|
| பெயர் | : | வேதநாயகம் இரகுநாதன் |
| படித்த பாடசாலைகள் | : | அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை<br>சென். ஜோண்ஸ் கல்லூரி யாழ்ப்பாணம் |
| கல்வித் தகைமைகள் | : | B.Sc (Eng) Second Class Upper Division Honours |
| பல்கலைக்கழக படிப்பு | : | **1961 – 1965** இலங்கைப் பல்கலைக்கழகம் |
| தொழில்சார் தகைமைகள் | : | M.I.C.E (Lond) 1969, M.I.E. (Sri Lanka) 1970<br>Fellow of the Institution of Engineers Sri Lanka 1982<br>President Sri Lanka Association for the Advancement Science 2017 |
| வேலை விபரம் | : | **1966.03.01** முதல் நீர்ப்பாசன எந்திரி<br>**1976.03.01** முதல் Chief Engineer<br>**1982.10.01** முதல் Director Deputy<br>**1991.01.01** முதல் Senior Deputy Director<br>**1998.01.01** முதல் Director |
| நிர்வாக பதவிகள் | : | **1989.03.18** முதல் **1990 04.01** வளச் செயலாளர் நீர்ப்பாசன வீடமைப்பு அமைச்சு, வடக்கு கிழக்கு மாகாண சபை<br>**2000.10.25** முதல் **2001.12.05** வரை செயலாளர் வடக்கு புணருத்தாரன மீள்குடியேற்ற, இந்துமத விவகார அமைச்சு கொழும்பு.<br>தலைவர், அரியாலை நீர் நொச்சித்தாழ்வு ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தானம்<br>**2012.02.04** முதல் இன்று வரை<br>Member Salaries & Cadres Commission Colombo March 2016 to date.<br>Member Faculty Board, Faculty of Engineering (Kilinochchi) University of Jaffna 2016 Dec to Date |

| | | |
|---|---|---|
| *பட்டப்பின் படிப்பு* | : | 1981 October 1982 September<br>International Institute of Hydulic Engineering Delft.<br>The Netherlands Post Graduate Diploma in Hydroulic Engineering |
| *வெளிநாட்டு மகாநாடுகள்* | : | 1991 Institute of Irrigation of Annual Japan Annual Conference<br>1995 International Commission on Irrigation and DRA/ NAGE Annual Conference CAIRO EGYPT<br>1997 International Commission on Irrigation and DRA/ NAGE Annual Conference Bali, Indonesoa<br>2000 Institute of Irrigation Japan, Annual Conference<br>*உலகச் சைவ மகாநாடு கோலாலம்பூர் மலேசியா **2003.*** |



## நூற்றாண்டு விழாவில் நிபுணத்துவ சாதனையாளருக்கான விருது பெறுவோர்...



# கணக்கியல் நிதி முகாமைத்துவ நிபுணர் திரு. சுப்பையா சண்முகரட்ணம் அவர்கள்

மலர்க்குழு

### பெயர்
*சு. சண்முகரட்ணம்*

### பிறப்பு
***05.05.1953** இல் அரியாலையில்*

### கல்வி கற்ற பாடசாலை
*அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை*
*யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்*

### கல்வித்தகமைகள்
1. *கலைப்பட்டதாரி* (B.A.) ***1977***
2. *குடிசன அபிவிருத்தி கற்கை நெறியில் முதுமாணிப் பட்டம் பெற்றவர்,* (M.A Merit) ***2008***
3. *உயர்தேசிய வர்த்தக டிப்ளோமா –* ***1976***
4. *உயர்தேசிய கணக்கியல் டிப்ளோமா* ***1983***
5. *ஸ்ரீலங்கா பட்டயக் கணக்கியல் நிறுவனம் (இடைநிலை)* ***1984***
6. *கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திரம் (உயர்தரம்* ***1974****)*

### கணக்காளர் சேவை விபரம்
1. *ஸ்ரீ லங்கா கணக்காளர் சேவை தரம்* I, II *நியமனம்* ***02.01.1982***
2. *ஸ்ரீ லங்கா கணக்காளர் சேவை தரம்* I ***07.02.2000***
3. *ஸ்ரீ லங்கா கணக்காளர் சேவை விசேட தரப்பதவி உயர்வு முதல் தமிழன்* ***12.06.2012***

### சேவையாற்றிய திணைக்களங்கள்
1. *ஏற்றுமதி இறக்குமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் கொழும்பு* ***02.11.1982 - 31.12.1983***
2. *விற்பனை அபிவிருத்தித் திணைக்களம் கொழும்பு* ***01.01.1983 - 1984***
3. *விற்பனை அபிவிருத்தித் திணைக்கள வடபிராந்தியக் கணக்காளர் - யாழ்ப்பாணம்* ***01.01.1985- 31.12.1990***

4. பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் அலுவலகம் - யாழ்ப்பாணம்
   **01.01.1991 - 31.01.2000**
5. யாழ்ப்பாண மாநகர சபை பிரதம கணக்காளர்
   **01.02.2000 - 31.01.2002**
6. யாழ்ப்பாண மாவட்டச் செயலகம் - பிரதம கணக்காளராகப் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர். **01.02.2002 - 05.05.2013**

## சமூக சேவைகள்

1. அரியாலை அபிவிருத்திச் சங்கத் தலைவர்
2. அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட நூற்றாண்டு விழாப் பொருளாளர்
3. கணக்குப் பரிசோதகர் அரியாலை நீர்நொச்சித்தாழ்வு ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தானம்
4. அரியாலை பிரப்பங்குளம் மஹாமாரி அம்மன் ஆலயத்தின் நிர்வாக சபை உறுப்பினராகச் செயற்படுகின்றார்.
5. கடந்த காலங்களில் அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய நிர்வாகத்தில் பங்குகொண்டவர்.
6. கடந்த காலங்களில் அரியாலை இளைஞர் இந்து மா மன்றத்தின் நிர்வாகத்தில் செயலாளராகப் பங்கு கொண்டவர்.
7. கடந்த காலங்களில் அரியாலை நீர்நொச்சித்தாழ்வு ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்தில் பலகாலம் நிர்வாகத்தில் பங்கு கொண்டவர், அரியாலை பிரப்பங்குளம் மஹாமாரி அம்மன் ஆலயத்தில் உபதலைவராக செயற்பட்டவர்.
8. கடந்த காலங்களில் கணக்குப் பரிசோதகராக பலகாலம் அரியாலை சுதேசிய திருநாட்கொண்டாட்ட விழாவிலும், அரியாலை அபிவிருத்திச் சங்கத்திலும் அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்திலும் அரியாலை ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தான நிர்வாகத்திலும் செயற்பட்டவர்.

இத்துறை சாதனையாளருக்கான விருதை வழங்கி கௌரவிக்கின்றோம்.



# நூற்றாண்டு விழாவில் நிபுணத்துவ சாதனையாளருக்கான விருது பெறுவோர்...



## சுவட்டு ஓட்ட அகில இலங்கைச் சாதனையாளர் திரு. பொன்னையா பஞ்சலிங்கம் அவர்கள்

மலர்க்குழு

*அரியாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட அமரர்கள் பொன்னையா தங்கம்மா தம்பதியினரின் புதல்வனான திரு. பஞ்சலிங்கம் அவர்கள் யாழ் பரமேஸ்வராக் கல்லூரியில் கல்வி கற்றவர். அக்கல்லூரியிலும் அரியாலை சனசமூக நிலைய ஆண்டு விழாக்களிலும் 100யார், 200யார் ஓட்டப் போட்டிகளில் முதலாவது இடத்தைப் பெற்று பல தடவைகள் சம்பியன் பட்டம் பெற்றவர். அரச சேவையாக இலங்கை விமானப் படையில் பதவி பெற்று கொழும்பு சென்று அங்கும் பல போட்டிகளில் பங்கு பற்றி அகில இலங்கை சாதனைகள் புரிந்துள்ளார்.*

*அக்காலத்தில் சவாலுக்குட் படுத்த முடியாத லிங்கம் சகோதரர்கள் அஞ்சலோட்ட அணியின் அறுதி ஓட்ட வீரனாக பலதடவைகள் பங்குகொண்டு வெற்றிக்கு உழைத்த வீரனாவார். அரியாலை சனசமூக நிலையத்தின் விளையாட்டு வீரரான இவர் அதன் வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றியவர். அரியாலை ஐக்கிய கழகத்தின் தலைவராக பணிபுரிந்தவர். மத்தியஸ்தர் சபை, கூட்டுறவுச்சங்கக் கிளை ஆகியவற்றில் அங்கம் வகிக்கும் இவர் அகில இலங்கை சமாதான நீதவானுமாவார். அரியாலை மஹாமாரி அம்மன் மீது மிகுந்த பக்தி கொண்டவர்.*

### தேசிய மட்டம் - National Level

**1957 ஆம் ஆண்டு**

*நீர்கொழும்பு மாவட்ட விளை யாட்டு சங்கத்தின் 4ஆவது வருடாந்த விளையாட்டுப் போட்டியில் 100யார் ஓட்டப் போட்டியில்* Royal Ceylon Air Force *அணிக்காக ஓடி அகில இலங்கை புதிய சாதனை நிலைநாட்டியவர் (10 செக்கன்)*

**1957ஆம் ஆண்டு**

*மேற்படி போட்டியில் 220யார் தூரத்தை 23.5 செக்கன்களில் ஓடி முதலாம் இடம் பெற்றவர். இது* New Best Achieve *ஆகும்.*

**1959 ஆம் ஆண்டு**

*அகில இலங்கைப் போட்டியில் 100 மீற்றர் ஓட்டம் முதலாம் இடம்.*

4x200 *மீற்றர் அஞ்சலோட்டம் 32.5 செக்கன்களில் ஓடி முதலாம் இடம். இலங்கை - பெங்களூர் - மதராஸ் முக்கோண மெய்வல்லுனர் போட்டியில் 100மீற்றர், 200மீற்றர் 1ஆம் இடம்.*

4x200 *மீற்றர் அஞ்சலோட்டம்* CT& FC *அணிக்காக ஓடி முதலாம் இடம்.*

*இதைவிட 1960ஆம் ஆண்டு நடைபெற்ற யாழ்ப்பாண A.A.A. மெய்வல்லுனர் போட்டியில்* 4x100 *மீற்றர்*

*அஞ்சலோட்டம் அரியாலை ஐக்கிய கழகத்திற்காக ஓடி முதலாம் இடம் பெற்றவர். A.பெர்ணாண்டோ என்பவரின் 100 யார் ஓட்ட அகில இலங்கை சாதனையை முறியடித்து 1957 இல் புதிய சாதனையை (10 செக்கன்) நிலைநாட்டிய சாதனையாளருக்கு விருது வழங்கி கௌரவிப்பதில் பெருமையடைகின்றோம்.*

## கடவுளியல்

1. உலகத்துக்குக் கருத்தா யாவர் ?
   சிவபெருமான்

2. சிவபெருமான் எப்படிப்பட்டவர் ?
   என்றும் உள்ளவர், எங்கும் நிறைந்தவர், எல்லாம் அறிபவர்

3. சிவபெருமான் ஆன்மாக்களுக்காகச் செய்யும் தொழில்கள் எவை?
   படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் மூன்றுமாம்

4. சிவபெருமான் இந்த மூன்று தொழில்களையும் எதைக் கொண்டு செய்வார்?
   தமது சக்தியைக் கொண்டு செய்வார்

5. சக்தி என்னும் சொல்லுக்குப் பொருள் யாது?
   வல்லமை

6. சிவபெருமானுக்குச் சக்தி யாவர்?
   உமாதேவியார்

7. சிவபெருமானுடைய திருக்குமாரர்கள் யாவர்?
   விநாயகக் கடவுள், வைரவக் கடவுள், வீரபத்திரக் கடவுள், சுப்பிரமணியக் கடவுள் என்னும் நால்வர்.

8. சிவபெருமான் ஆன்மாக்களுக்கு அருள் செய்யும் பொருட்டு உமாதேவியாரோடு எழுந்தருளியிருக்கும் முக்கிய ஸ்நானம் யாது?
   திருக்கைலாச மலை

9. சிவபெருமான் ஆன்மாக்களுக்கு எவ்விடங்களிலே நின்று அருள் செய்வர்?
   சிவலிங்கம் முதலாகிய திருமேனிகளிடத்திலும் சைவாசாரியரிடத்திலும் சிவனடியாரிடத்திலும் நின்று அருள் செய்வர்.

# நூற்றாண்டு விழாவில் நிபுணத்துவ சாதனையாளருக்கான விருது பெறுவோர்...



## நிபுணத்துவ நாடக நடிகர் திரு. சதாசிவம் உருத்திரேஸ்வரன் அவர்கள்

மலர்க்குழு

அரியாலையைச் சேர்ந்த அமரர்கள் தம்பிப்பிள்ளை சதாசிவம் பொன்னம்மா தம்பதியினரின் மகனான திரு.ச.உருத்திரேஸ்வரன் தனது ஆரம்பக் கல்வியை யா/அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாசாலையிலும் இடைநிலைக் கல்வியை யாழ் மத்திய கல்லூரியிலும் கற்று தொழிற்கல்வியை கண்டி குண்டசாலை விவசாயக் கல்லூரியில் கற்று "விவசாயத்தில் டிப்ளோமா" பட்டமும் பின் யாழ் பல்கலைக் கழகத்தில் கற்று "கலைமாணி" பட்டமும் பெற்றார். மனிதவள முகாமைத்துவத்தில் (H.R.M) டிப்ளோமா பட்டமும் பெற்றார். அகில இலங்கை சைவப்புலவர் சங்கம் நடத்தும் பரீட்சையில் சித்தியெய்தி "சைவப்புலவர்" பட்டமும் பெற்றார். இவர் அகில இலங்கை சமாதான நீதவானாகவும் சத்திய மொழி பெயர்ப்பாளராகவும் சேவை புரிகின்றார். இவர் கமநல சேவைகள் திணைக்கள தலைமைப்பீட பெரும்பாக உத்தியோகத்தராகவும் பதில் உதவி ஆணையாளராகவும் கடமைபுரிந்து ஓய்வு பெற்றவராவார். ஈழத்து தமிழ் நாடக உலகில் முதன்மையான நாடக பயிற்சியாளர்களான Dr.குழந்தை ம.சண்முகலிங்கம், அ.தாசீசியஸ், S.T.அரசர், பேராசிரியர் சி.மௌனகுரு, A.T.பொன்னுத்துரை, V.M.குகராஜா, ஜெனம் பிரான்சிஸ் ஆகியோரிடம் பயிற்சி பெற்றதோடு அரியாலையூர் P.சண்முகலிங்கம், P.விஜயரத்தினம், த.பஞ்சலிங்கம் ஆகியோருடன் நடித்ததையும் ஆசிரியர் சதாசிவம், S.T.கணநாதன் ஆகியோரின் நெறியாள்கையில் நடித்ததையும் பெருமையாகக் கருதினார். 2010 ஆம் ஆண்டு கனடா - ஸ்காபுறோ நகரில் நாடக கலைஞர்களுக்கு பயிற்சிப் பட்டறையும் நடத்தியுள்ளார். ப.ஸ்ரீஸ்கந்தன் ஏற்பாட்டில் பொ.இலங்கேஸ்வரன் தலைமையில் நாடக கலைக்கு ஆற்றிய சேவைக்காக கனடா வாழ் மக்களால் பாராட்டப் பட்டுள்ளார்.

### நாடக துறையில்

சிறுவயதில் எமது ஊராகிய அரியாலையில் நடைபெறும் சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா நாடகங்களை பார்த்தும், வானொலியிலும் ஒலி பெருக்கியிலும் கேட்ட திரைப்பட வசனங்களாலும் கவரப்பட்டு தானும் ஒரு மேடை நாடக நடிகராக வரவேண்டும் என ஆர்வம் கொண்டார்.

இவர் பள்ளியில் கற்கும் காலத்தில் தனது 15 ஆவது வயதில் அமரர் S.Tகணநாதன் நெறியாள்கை செய்து நடித்து 37 ஆவது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா நாடக போட்டியில் முதற்பரிசு பெற்ற "யார் கதாநாயகி" என்னும் நாடகத்தில் "மரிக்கொழுந்து" என்ற தாய் வேடம் ஏற்று நடித்தார்.

இந்நாடகம் விழாவன்று மேடையேற்றம் செய்யப்பட்டது. இதே ஆண்டு அரியாலை சனசமூக நிலைய இல்ல நாடக போட்டியில் முதற்பரிசு பெற்ற "மலிவான மாப்பிளை" என்ற நாடகத்தில் "முத்தாச்சி" என்ற தாய் வேடத்தில் நடித்தார். பின்பு 1972ஆம் ஆண்டு அரச சேவையில் இணைந்த பின் எமது விழா நாடகங்களில் நடிக்க வாய்ப்புக்கிடைக்க அதை நன்றாக பயன்படுத்தி தனது ஆற்றுகைத் திறனை வெளிப்படுத்தி முதல்தர நடிகரானார். இவர் சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா நாடகங்கள், விழாவின் போட்டி நாடகங்கள், அரியாலை சனசமூக நிலைய நாடகங்கள், அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய நாடகங்கள் மற்றும் பிற மன்ற நாடகங்கள் ஆகியவற்றில் நடித்துள்ளார்.

பின்பு திருநெல்வேலியில் கலாநிதி குழந்தை ம.சண்முகலிங்கம் அவர்களால் நிறுவப்பட்டு பல கலைத்துறை உயர் வளவாளர்கள் பயிற்சி வழங்கிய "நாடக அரங்கக் கல்லூரி" யில் இணைந்து பயிற்சி பெற்று பல வகையான நாடகங்களில் நடித்து கற்றோர் மட்டத்திலும் பிரபல்ய மானார்.

அமரர் V.M.குகராஜா தயாரித்து இலங்கை வானொலி புகழ் அமரர் K.M.வாசகர் நெறிப்படுத்திய "கதை இதுதான்" என்னும் வீடியோ திரைப் படத்திலும் நடித்துள்ளார்.

இவரது நாடகத்துறைக்கு ஆற்றிய சேவையை கௌரவிக்கும் முகமாக 2008ஆம் ஆண்டு யாழ் அரச அதிபரால் "கலைப்பிரதி" விருதும், 2013ஆம் ஆண்டு இலங்கை கலாசார அமைப்பினால் அதிஉயர் விருதான "கலாபூஷணம்" விருதும், 2015ஆம் ஆண்டு வடமராட்சி கல்வி வலயத்தால் "கலை வாரிதி" விருதும், 2017ஆம் ஆண்டு "கலைக்கலசம்" விருதும் பெற்றுள்ளார். 2017ஆம் ஆண்டு நடை பெற்ற விழாவில் "கலைத்துறைக்கு ஆற்றிய சேவைக்காக கௌரவிக்கப் பட்டார். 50க்கு மேற்பட்ட நாடகங்களில் நடித்து அரியாலைக்கு பெருமை சேர்த்த இக்கலைஞருக்கு நடிப்பு நிபுணத்துவத் துக்கான சாதனை விருதை வழங்கிக் கௌரவிப்பதில் பெருமையடைகின்றோம்.



# நூற்றாண்டு விழாவில் நிபுணத்துவ சாதனையாளருக்கான விருது பெறுவோர்...

## சத்திரசிகிச்சை நிபுணர்
## வைத்திய கலாநிதி
## துரைச்சாமி ரவிச்சந்திரன் அவர்கள்



மலர்க்குழு

*அரியாலையில் துரைச்சாமி - பாணுமதி தம்பதிகளின் புதல்வரான இவர் சிறந்த நற்பண்புகளைக் கொண்ட எம்மூர் பற்றாளர் ஆவார். யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தின் புகழ்பூத்த பழைய மாணவர் ஆவார். அக்கல்லூரியின் சிரேஷ்ட மாணவத் தலைவராக விளங்கியவர். மாணவர்களை நெறிப்படுத்துவதிலும் வழிப்படுத்துவதிலும் ஆர்வமுள்ளவராகக் காணப்பட்டார். கல்லூரியின் போட்டிகளில் முதன்மை பெறுபவராக விளங்கினார். அதிபராலும் ஆசிரியர்களாலும் பெரிதும் விரும்பப்பட்ட மாணவராவார். எம்மால் பெரிதும் மதிக்கப்படும், விரும்பப்படும் ஆங்கில ஆசிரியை பாணுமதி தைலக்காவின் புத்திரன் என்பதில் பெருமைப் படுகின்றோம்.*

**Name:** Dr. Duraisamy Ravichandran MBBS, FRCS, PhD

**Birth place :** Ariyalai

**Education and Qualifications**

1972-1979: Secondary Education: Stanley College (Canagaratnam M.M.V.), Ariyalai
1981-1986: MBBS: Faculty of Medicine, University of Colombo, Sri Lanka
1991: FRCS, Royal College of Surgeons of England, UK.
1999: PhD, University of Southampton, UK

**Career History**

2001- present: Consultant General Surgeon, Luton and Dunstable University Hospital, Luton, UK
MBBS Examiner for the Cambridge University and University College London
FRCS Examiner for the Royal College of Surgeons, UK

*எமது சுதேசிய திருநாட்கொண்டாட்ட நூற்றாண்டு விழாவில் வைத்தியத்துறை சாதனையாளர் விருதை வழங்கிக் கௌரவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றோம்.*

# நூற்றாண்டு விழாவில் நிபுணத்துவ சாதனையாளருக்கான விருது பெறுவோர்...

## கல்வித்துறை சாதனையாளர்
## கலாநிதி சரவணமுத்து அகிலன் அவர்கள்



மலர்க்குழு

*அரியாலை திரு.திருமதி சரவணமுத்து தம்பதிகளின் புதல்வராவார். அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை, யாழ் இந்துக்கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவராவார். தனது இளமைக்காலத்தில் அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா போட்டிகளில் பங்குபற்றி பரிசில்கள் பெற்றுள்ளார். 100 மீற்றர், 200 மீற்றர், நீளம் பாய்தல் ஆகிய சுவட்டு, மைதான மெய்வல்லுநர் போட்டிகளில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் முதலிடம் வகித்த விளையாட்டு வீரனும் ஆவார்.*

**Name : DR. AHILAN SARAVANAMUTHU Ph.D. (Londan)**

**Birth Place : Ariyalai**

**EDUCATION & QUALIFICATIONS**

| | |
|---|---|
| 1988-91 | Oslo University College, Norway, Section for Biotechnology<br>ENGINEER IN CHEMICAL ENGINEERING |
| 1993-95 | University of Oslo, Norway, Department of Biochemistry<br>MSc BIOCHEMISTRY |
| 2000-05 | University of Dundee, School of Life Science<br>DOCTOR OF PHILOSOPHY, BIOCHEMISTY |
| 2004 | University of Dundee<br>**Principles of Management and Managing Resources in Organisations**<br>**Certificate in Management Studies** |

**CAREER HISTORY**

| | |
|---|---|
| 1995-09 | Being as scientific researcher in academic and industrial organisations including Glaxo Smith Kline and Imperial College and published research articles in various scientific journals. |
| 2010 | Present Teacher in various private and state schools in United Kingdom. |

*இவருக்கு எமது சுதேசிய திருநாட்கொண்டாட்ட நூற்றாண்டு விழாவின் கல்வித்துறை சார்ந்த சாதனையாளர் விருதை வழங்குவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம்.*

# அகவை நூறில் அரியாலை சுதேசியம்



திருமதி தாரணி மகாலிங்கம்
அரியாலை மக்கள் மன்றம் சார்பாக
நோர்வே

*வெள்ளி பூத்த வானத்து விரிப்பும்*
*அள்ளிச் சொரியும் இதழ் மலர்களின் சிரிப்பும்*
*புள்ளுகள் பாடும் தோப்பெனும் தரிப்பும் - என நாம்*
*துள்ளித் திரிந்து சுகம் கண்ட நிலமே - நீ*

*அமைப்பென விரிந்த அழகு திரு ஊராய்*
*அரியாலையின் எங்கள் அடையாளத் தேராய்*

*அறிவொடு கல்வி கலைகளைச் சாற்றி*
*நெறியும் நீதியும் நெஞ்சகம் போற்றி*
*குறிதரு உடல் விளையாட்டொடு மாற்றி*
*குவலயம் எங்குமாய் கொடி சுடர் ஏற்றி*

*அழகென விரிந்த அமைப்பெனும் ஊராய்*
*அரியாலை எங்கள் அடையாளத் தேராய்*
*அகவையில் சுதேசியம் நூறாய் ஆன எம் வேராய்*
*தகமையில் தாயாய் சாதித்த மண்ணே*

*யாழ் இசையால் தந்த எங்கள் தலைவாசல் நீ அம்மா*
*சூழ் உலக சுற்றமென துதிபாடி வாழ்த்துகின்றோம்*
*சுதேசியத்து நூற்றாண்டு தொன்மை பெற்று வாழட்டும்*
*வாழ்க பல்லாண்டு அரியாலை வாழிய வாழியேவ!*

# அழகான ஊர்



பொன்னையா இலங்கேஸ்வரன்
கனடா

*அழகான ஊர் ஒன்று கண்டேன் - அது*
*அரியாலை எனக் கண்டு பெருமிதம் கொண்டேன்*
*பண்பான மனிதர்கள் கண்டேன் - அங்கே*
*படித்தோரும் பாமரரும் பழகிடக் கண்டேன் - அழகான*

*பச்சை நிறவயல் கண்டேன் - அதன்*
*பக்கத்தில் தென்னந்தோப்புக்கள் கண்டேன்*
*பால் தரும் பசுக்களைக் கண்டேன் - அங்கே*
*பால் வெள்ளை மணற் குவியல்கள் கண்டேன் - அழகான*

*பாரிய கோபுரம் கண்டேன் - அங்கே*
*சித்தி விநாயகர் அருள் பெற்றுக் கொண்டேன்*
*பிரப்பங்குளத்திற்குச் சென்றேன் - அங்கே*
*நாச்சிமார் அம்மனைத் தரிசித்துக் கொண்டேன் - அழகான*

*அரியாலை மேற்கிற்குச் சென்றேன் - அங்கே*
*கற்பகப் பிள்ளையார் கருணையைக் கண்டேன்*
*எங்களைக் காத்திடும் தெய்வம் ஞான*
*வைரவர் ஆலயம் வடக்கினில் கண்டேன் - அழகான*


*பள்ளிச் சிறுவர்கள் கண்டேன் மூன்று*
*பாடசாலைகள் படிப்பகங்கள் கண்டேன்*
*பண்டகசாலைகள் கண்டேன் அங்கே*
*பனம் பொருள் உற்பத்தி நிலையங்கள் கண்டேன். - அழகான*

*அரியாலை என்று ஒரு கொடி அது*
*மஞ்சள் நிறத்திலே நந்தியின் கொடி*
*அரியாலை மக்கள் எல்லோரும்*
*நந்தியின் கீழே ஒன்று படுவோம் - அழகான*

*வாழ்க வாழ்க வாழ்க*
*வாழ்க வாழ்க வாழ்க*
*எங்கள் அரியாலை என்றும் புகழோடு வாழ்க*
*வாழ்க வாழ்க வாழ்க*
*எங்கள் தாய்மண் என்றும் நலமோடு வாழ்க*
*வாழ்க வாழ்க வாழ்க*

*வாழ்க வாழ்க வாழ்க வாழ்க வாழ்க வாழ்க*
*வாழ்க வாழ்க வாழ்க வாழ்க வாழ்க வாழ்க*

# பெரிய பிரித்தானியா வாழ் அரியாலை மக்களின் சார்பாக வாழ்த்துமடல்



திருமதி. கமலாசினி கெங்காதரன் B.A
ஐக்கிய இராச்சியம் (U.K)

*அரியாலையூர் மண்ணின் மைந்தர்கள் புலம்பெயர் தொப்புள் கொடி உறவுகள், ஐக்கிய இராச்சியத்தின் பல்வேறு பகுதிகளிலும் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். அவர்கள் எல்லோரதும் உளங்கனிந்த இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்களையும், சிரம் தாழ்த்தி, கரம்கூப்பி அன்பு கனிந்த வணக்கங்களையும் அரியாலை வாழ் மக்களிற்குப் பெருமகிழ்வுடன் முதற்கண் தெரிவித்துக் கொள்கின்றோம்.*

*இந்து மகா சமுத்திரத்தில் ஈழத் திருநாட்டின் மணிமகுடமாய் யாழ்ப்பாணம் விளங்குகின்றது. யாழ் நகரின் நுழை வாயிலிலே தோரணங்கள் அமைந்தாற் போல பசுமை நிறைந்த தென்னை, பனை, வயல் வெளிகளும் நிறைந்துள்ளது எமது ஊரின் சிறப்பாகும்.*

*குன்றா நலமும், குறையாத வளமும், மங்காப்புகழும், மாசிலாச் செல்வமும், அன்புடை சுற்றமும், அறமறிந்த நட்பும், கலை, கல்வி, தொழில்சார் துறைகளில் தமக்கு ஈடு இணையற்ற திறமையும், நாடகத் துறையிலும், நடிப்புத் திறனிலும் தமக்கு நிகர் யாருமில்லை எனப் பார்போற்றும் வண்ணமும், விளையாட்டுக்களில் அதீத விருப்பும், ஆளுமைத் திறனும் உள்ள மக்களைத் தன்னகத்தே கொண்டு ஆதிகாலந் தொட்டு சைவப் பாரம்பரியத்துடன் விளங்கிய அரியாலை நாம் போற்றும் எமது சொந்த மண் ஆகும்.*

*ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் அடிமைப்பட்டுக் கிடந்த காலத்திலே யாழ்ப்பாணத்தில் ஆங்கிலேயக் கலாசாரமும், கிறிஸ்தவ மதமும் திணிக்கப் பட்டுக் கொண்டிருந்த போதிலும் சைவத்தமிழ்ப் பாரம்பரியத்தைத் தமது உயிரினும் மேலாக மதித்து சைவ மரபுகளுடன் எமது முன்னோர்கள் வாழ்ந்து வந்தனர்.*

*நிகழ்கால, எதிர்கால எம் சந்ததியினர் சீரழிந்து விடாமலும், எமது பாரம்பரியங்கள், பண்பாடுகள் அழியாமற் பாதுகாக்கப்படல் வேண்டும் எனும் சீரிய சிந்தனையுடனும், புத்திசாதுரியமாகத் தடுக்கும் நோக்குடனும், மிகத் துல்லியமாகக் கணித்துத் தொலைநோக்குப் பார்வையுடன் துணிச்சலான திட நம்பிக்கையுடன் பாரிய அளவிலான முயற்சிகளை மேற்கொண்டனர் எமது முன்னோர்கள்.*

*அக்காலத்திலே அரியாலை மண்ணில் வாழ்ந்த பெரியோர்கள், ஆன்றோர்கள், சான்றோர்கள், பொது மக்கள் எல்லோராலும் ஏற்றுக் கொள்ளக் கூடியதாகத் தமிழர் புதுவருடப் பிறப்பு நாளன்று சுதேசிய திருநாள் விழா எனும் பெரிய கொண்டாட்டத்தை ஆரம்பித்து சுதேசியச் செடியினை நாட்டினார். அதாவது (100) ஆண்டுகளிற்கு முன்னர் 1919 ஆம் ஆண்டில் ஆகும்.*

*எம்மூர் மக்களின் மொழித்திறன், கலை, கலாசாரம், நாடகம், விளையாட்டுக்கள் எனப் பல்வேறு கிளை*

களுடன் வருடாவருடம் பாரிய இடையூறுகள் ஏதுமின்றி நடைபெற்று வந்து இன்று நூற்றாண்டு விழாக் காண்கின்றது.

நாமெல்லாம் அரியாலை மண்ணில் வாழ்ந்திருந்த காலங்களில் போட்டிகளிளெல்லாம் பங்குபற்றியும், அனைத்து நிகழ்வுகளிலும் பங்குபற்றியும் பார்த்து மகிழ்ந்த நாட்கள் என்றும் மறக்க முடியாதவை. விடிய விடிய விழித்திருந்து கலைநிகழ்வுகள், நாடகங்கள் என மேடை நிகழ்வுகளைப் பார்த்துப் பேருவகை அடைந்த நாட்கள் இன்றும் கூட பசுமையாக எம் மனக் கண்முன்னே வந்து செல்கின்றன.

சுதேசிய திருநாட் கொண்டாட்டப் பெருவிழாவானது நூறாவது அகவையில் தடம்பதித்து ஒரு பெரிய விருட்சமாகிப் பல்வேறு கிளைகளுடன் பூத்துக் குலுங்கி எம் ஊர் மக்களை அணைத்து நிழல் கொடுத்து நிற்கின்றதுடன், இளந்தலை முறையினரின் துணிச்சலான முயற்சிகளினால் இன்றோ பாரம்பரியப் போட்டிகளுடன் நவீன போட்டிகளும் சேர்க்கப்பட்டு பல்வேறுபட்ட நிகழ்வுகளுடன் இரண்டு (2) மாத காலங்களிற்கு மேலாக எமது புதுவருடப் பிறப்பு விழாவானது பிரமாண்டமான அளவில் பிரசித்தி பெற்றுள்ளமை எமக்கெல்லாம் மிகவும் பெருமை சேர்க்கின்றது. இந்த நூற்றாண்டு விழாவானது யாழ்ப்பாண வரலாற்றில் தனக்கென ஓர் இடம் பிடித்து நிற்பதுவும் எமக்கெல்லாம் பேருவகை தருகின்றது.

திறமைகளும் அறிவாற்றல்களும் சேர்ந்தே வளர்ந்து எமது சுதேசியம் பாதுகாக்கப்பட்டு வருகின்றது. மேன்மேலும் எதிர்காலத்திலும் வளர்ச்சியடைந்து மேலோங்கவும் ஐக்கிய இராச்சியம் வாழ் அரியாலை மக்கள் உவகை பெருக்கி, உதவிக்கரம் நீட்டுவார்கள். எமது மக்கள் சமுதாய வளர்ச்சியைக் கட்டியெழுப்பும் பணியில் முன்னோடியாகத் திகழ்கின்றமை யாவரும் அறிந்ததொரு விடயமாகும்.

தாயக மண்ணில் நாமெல்லாம் எவ்வாறு வாழ்ந்தோமோ அதேபோல் இங்கும் சுதேசியத்தையும், ஒற்றுமையையும் வளர்க்கப் பாடுபட்டுக் கொண்டிருக்கும் எம் மண்ணின் மைந்தர்கள் யாவரையும் இச்சந்தர்ப்பத்தில் வாழ்த்த நாம் கடமைப்பட்டுள்ளோம்.

அரியாலை மண்ணை விட்டு புலம்பெயர்ந்து இயந்திர கதியில் இயந்திரங்கள் போல வாழ்ந்து கொண்டிருந்தாலும், எமக்கெல்லாம் வாழ்வியலையும், தமிழர் பாரம்பரியங்களையும், கலை பண்பாட்டு விழுமியங்களையும் கற்றுக்கொடுத்த பெருமை நாமெல்லாம் தவழ்ந்து ஓடியாடித் திரிந்த எம்மண்ணையே சாரும்.

லண்டன் மாநகரில் நாமும், நமது எதிர்கால சந்ததியினரும் சிறுவர்கள் முதல் இளையோர், பெரியவர்கள், முதியவர்கள் வரை கூடிக்குலாவி மகிழ்வதற்கென தமிழ்ப்பாடசாலை, ஆலயம், நாடக மன்றங்கள், கழகங்கள் போன்ற பல சமுதாய வளர்ச்சித் தளங்களை அமைத்து ஆவன செய்து வருகின்றோம். எமது ஊர் மக்களினால் இங்கும் கூட வருடா வருடம் புதுவருடப் பிறப்பையொட்டிய தினங்களில் தமிழ்ப் பாடசாலை மூலமாக கட்டுரைப்போட்டி, பேச்சுப்போட்டி, திருக்குறள் போட்டி என இன்னோரன்ன பல போட்டிகளும் நடாத்தப்பட்டு வருவதோடு மட்டுமல்லாமல் பலவிதமான பாரம்பரிய நவீன விளையாட்டுப் போட்டிகளும் கலை, கலாசார, மேடை நிகழ்வுகளும் நடாத்தப்பட்டு வருகின்றது. இந்த ஆண்டில் 40 ஆவது அகவையில்

வெற்றிநடை போட்டு பெருவிழாவாகக் கொண்டாடப் படுகின்றது என்பதைப் பெருமகிழ்வுடன் அறியத் தருகின்றோம்.

நீர்நொச்சித்தாழ்வு ஸ்ரீ சித்தி விநாயகரின் அருளாசியுடன் மிக மிகச் சிறப்புடன் அரியாலை (100) நூற்றாண்டு விழாக் கொண்டாட்ட நிகழ்வுகள் இடம்பெற எல்லாம் வல்ல முழுமுதற் கடவுளை வேண்டிக் கொள்வதுடன் எமது அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்டமானது சுதேசிய உணர்வுடன் எதிர்காலச் சந்தியினராலும் பேணிப் பாதுகாக்கப்பட்டு பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டுகள் கொண்டாடப்பட வாழ்த்துகின்றோம்.

அரியாலை மண்ணையும் மக்களையும் ஊர்ப்பற்றையும் எவராலும் என்றென்றும் மறக்க முடியாதவாறு எம் மண்ணில் நாம் வாழ்ந்த வாழ்க்கைக்கு அத்திபாரமிட்டுச் சென்றவர்களையும் மனதில் நிலை நிறுத்திப் பாராட்டிக் கொண்டு இந்த விழாவானது பார் போற்றும் அளவிற்கு எதுவித இடையூறு களும் இன்றி வெகு விமரிசையாகவும் கோலாகலமாகவும் மிக மிகச் சிறப்புடன் இடம்பெற எல்லாம் வல்ல ஹறோ ஸ்ரீசித்தி விநாயகர் பாதம் பணிந்து வணங்கி அன்புடன் வாழ்த்துகின்றோம்.

அவனியில் ஓர் தீவாம் ஈழமணித்திருநாடு
அதன் மணிமகுடமாம் யாழ்ப்பாண நன்நகரம்
அந்நகரின் நுழைவாயிலில் இயற்கைச் செழிப்பு பலமிக்க
அரியாலை யம்பதியாம் எமது ஊர்
அங்கோ ஆண்டாண்டு தோறும் புதுவருடம் முன்னிட்டு
அரியாலை ஊருக்கோர் பெருவிழா 1919 இல் ஆரம்பித்த
அரியாலை சுதேசிய திருநாள் கொண்டாட்ட விழா
அகவையோ நூறில் (100) காலடித் தடம் பதிக்கின்றது இவ்வாண்டில்
அன்றைய முன்னோர்கள் இன்றைய அமரர்கள், பெரியோர்கள்
அன்பிற்கும் வித்திட்டுச் சுதேசியத்தைப் பலப்படுத்தி
அழகழகாய் அணிவகுத்து அலங்கரிக்கப் போட்டிகள் பலப்பல நடத்தி
அவனியெலாம் புகழ் பரப்பிப் பொலிவுடன் கொண்டாடி மகிழும்
அவ்விழாவின் சிறப்புக்களைப் பெருமைகளைக் கூறிடவோ வார்த்தைகள் இல்லை.
அரியாலை மண் பெற்றெடுத்த ஐக்கிய இராச்சியம் (UK) வாழ் எம்மவர்கள்
அகமிக மகிழ்ந்து எமது மனங்கனிந்த வாழ்த்துக்களை
அன்புடனும் பாசத்துடனும் நேசக் கரம் நீட்டி
அள்ளி அள்ளி வழங்குகிறோம் வாழ்க எம் சுதேசியம் வளர்க நம் ஒற்றுமை.

# சுதேசிய நூற்றாண்டு மகிமை கேளீர்



திருமதி. விமலராணி சிவம்
ஓய்வுநிலை நிர்வாக உத்தியோகத்தர்

*சங்கத் தமிழ் முழங்கும் ஈழமணித் திருநாடாம் - அதில்
சர்வ வெற்றியளித்திடும் நீர் நொச்சித் தாழ்வு உயர சித்தி விநாயகனை
பற்றியே உற்ற துணையென உளத்தால் நினைத்து
வாழ்த்துவோம் நூற்றாண்டுத் தாயை வாழி வாழி*

*சுதேசிய உணர்வும் சுதந்திர தாகமும் உருவாகி ஆயிரத்து
தொளாயிரத்து பத்தொன்பதில் கலா விருத்திச் சங்கமாக உருவாகி
ஸ்ரீமான் கதிரவேற்பிள்ளை தலைமை தாங்கியே
நீ வளர்ந்தாய் வாழி வாழி*

*அன்னையவள் அழகாக அமர்ந்த இடம் அரியாலை
கண்கவர் கோபுரமாய் கலைக்கூடம் தனை வளர்த்து நிற்க
மின்னொளி போல் மிரு கலைகள் கண்ணெதிரில் தெரியுதம்மா
பண்புடனே உன் பணியை வாழ்த்தி நின்றோம் வாழி வாழி*

*ஸ்ரீமான் விஸ்வநாதர் காசிப்பிள்ளை உடனே ஸ்ரீமான் கதிரவேற்பிள்ளை
தாங்கியே நீ வளர்ந்தாய் வாழி வாழி
எம்மூர் பெருமக்கள் தீர்க்க தரிசனத்துடன்
உன் புகழ் ஓங்க உயிர் கொடுத்த உத்தமர்கள் வாழி வாழி*

*கணினியோ அன்றில்லை, கருவிகளும் உனக்கில்லை
பெருமையாய் பேசும் வளமும் தந்தாரில்லை - ஆனாலும்
உன் உள்ள வலிமைக்கு ஆளணியால்
தொட்டு விட்டாய் நூற்றாண்டை வாழி வாழி*

*உதைபந்தாட்டமென்ன, உடற்பயிற்சிதானென்ன
வலைப்பந்தாட்டமென்ன, கரப்பந்தாட்டமென்ன, மென்பந்து
எறிபந்து ஆட்டமுடன் இன்னும் பல விளையாட்டுக்கள் நீ வாகை சூடியதை
வதைபட்ட காலத்திலும் சலியாது முன்னின்றாய் வாழி வாழி*

*புகழோடு வைத்தியராய், பொறியியலாளராய்
மிக நல்ல அரச அதிபராய் துணை வேந்தராய்*

கல்விமான்கள், சமூக சேவையாளர், கலைஞர்கள், விளையாட்டு வீரர்கள்
தொழிலதிபர்கள், சமயத் தொண்டர்கள் உருவாக்கிய தாயே வாழி வாழி

கல்வி, கலை, பண்பாடு, கலாசாரம் விளையாட்டு என
பல துறை சமூக மேம்பாட்டுப் பணிகளாலும் அர்ப்பணிப்பு
உணர்வோடு செயற்படும் இளைஞர்களுடன் மூத்தோரின்
அறிவுரைகளுடன் அரும்பணியாற்றிய அறிவுடைமைக்கு
இன்று அகவை நூறு வாழி வாழி

பசுவுக்காய் மனுநீதிச் சோழன் தன் மகனைக் கொடுத்தான்
பாசமுடன் பாரி வள்ளல் முல்லைக்குத் தேர் கொடுத்தான்
கர்ணனோ தன் கவச குண்டலங்களை காணிக்கையாக்கினான்
கருணை கொண்டு கடினஉழைப்பையே காணிக்கையாக்கியவர்கள்
கனவுகள் பலவும் நனவாகிட வேண்டும் நீ என்றும் வாழி வாழி

பெற்றோர் மாணவர் ஆசிரியர் குழாம் ஒன்றிணைந்தே
அருமையுடன் பாடுபடும் அபிவிருத்திச் சங்கமுடன்
ஆற்றலுள்ள பழைய மாணவர் சங்க அமைப்புக்களும்
மற்றும் பல அமைப்புக்களும் கூடி ஒற்றுமையாய்
பாடுபட்டால் குவலயத்தில் ஏது குறை?
உவப்போடு உன் புகழ் ஓங்க வாழ்த்துகின்றோம்.
வாழ்க பல்கோடி ஆண்டு வாழிய வாழியவே

குறுகிய மனப்பாண்மை குறைந்து, பரந்த நோக்கமும் பண்பாடும்
வளர உன்திருநாமம் தூண்டுதல் அளித்து
மக்கள் அனைவரும் ஒற்றுமையாகவும் சமத்துவத்துடனும்
ஒரே கொடியின் கீழ் நின்று உன் நூற்றாண்டு விழாவை ஏற்றமாய்
கொண்டாட வாழ்த்துகின்றேன் வாழிய வாழியவே



# அரியாலையம் பதியில் அருள்பாலிக்கும் திருக்கோயில்கள் பற்றிய வரலாறு



ஜெயபாலன் யசிந்தன்
ஊடகப்பொறுப்பாளரும்
சமூக வலைத்தள பதிவேற்றாளரும்
சுதேசிய திருநாட்கொண்டாட்ட நூற்றாண்டு விழா

"கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பது ஆன்றோர் வாக்காகும். அதற்கமைய சைவத்தையும் தமிழையும் இரு கண்கள் போல் போற்றும் நம்மவர்கள் சைவநெறி தழைத்தோங்கவும் மக்களிடையே அமைதியையும் நிம்மதியையும் கலாசார விழுமியங்களையும் வளர்க்கும் நோக்குடன் திருக்கோவில்கள் பலவற்றை குறிச்சி ரீதியாக தொன்றுதொட்டு உருவாக்கிப் பராமரித்து வருகின்றார்கள். அவை யெல்லாம் பெருவளர்ச்சி அடைந்து நாம் நல்ல பண்புள்ள மனிதர்களாக வாழ்ந்து இகபர நலன்களைப் பெற்று சுகம்பெற என்ற அருள்பாலித்த வண்ணம் விளங்கு கின்றன.

அந்த வகையில்

## அரியாலை நீர் நொச்சித்தாழ்வு ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தானம்

சித்தி விநாயகர் விக்கிரகம் இந்தியாவிலுள்ள தொண்டை நாட்டி லிருந்து யாழ்ப்பாடியின் காலத்தில் அவரின் முதலமைச்சர் சேதிராயரின் வேண்டுகோளின் படி கச்சிக் கணேசையர் என்னும் பிராமனோத்தமர் கொண்டு வரப்பட்டது என்றும் அதுவே இப்போது அரியாலையிலுள்ள ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தில் பிரதிஷ்டை செய்யப்பட் டிருப்பது போலும், என்று யாழ்ப்பாணச் சரித்திர நூலாசிரியருள் ஒருவரான ஸ்ரீமான் ஆ.முத்துத்தம்பிப்பிள்ளை அவர்கள் கூறிப் போந்தார். யாழ்ப்பாணச் சரித்திரம் பக்கம் 30 இல் விபரத்தைக் காணலாம். யாழ்ப்பாடியின் காலம் தொடர்பில் சரித்திர நூலாசிரியர் களிடையே மாறுபட்ட கருத்து நிலவு கிறது. சிலர் கி.மு. முதலாம் நூற்றாண்டு என்பார். சிலர் கி.பி 10 ஆம் நூற்றாண்டு என்பார். எது எவ்வாறு இருப்பினும் இக்கோவில் பறங்கியர் இலங்கைக்கு வருவதற்கு முன்பே மிகவும் பழமை வாய்ந்தது என்பது தெளிவு. பறங்கியரால் இத்திருக்கோயில் அழிக்கப்பட்டது.

ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் சிறுகத் தொடங்கிய கோவில் அமைப்பு பஞ்சாயத்தர்களால் நிர்வகிக்கப்பட்டது. பின் பெரிய காசிப்பிள்ளை என்று மதிப்பாக அழைக்கப்படும் ஸ்ரீமான் விஸ்வநாதர் - காசிப்பிள்ளை அவர்களால் மூலஸ்தானம் தொடக்கம் கொடி ஈறாக பாரிய வெண்கற்களால் பன்னூறாண்டுக்கு அழியாதிருக்கத்தக்கதாய் சிறந்த சிற்ப வேலைப்பாடுகள் பொருந்திய திருக் கோயிலையும் அதனோடிணைந்த வசந்த மண்டபம், வைரவர் கோயில், சண்டேஸ்வரர் கோயில் மடைப்பள்ளி முதலியவற்றையும் கட்டுவித்து 1915 ஆம் ஆண்டில் கும்பாபிஷேகமும் செய்து பல திருப்பணித் தொண்டுகளைச் செய்தார்.

பல தத்ரூபமான வாகனங்கள், சித்திரத்தேர்கள், மண்டபங்கள், கோபுரங்

கள் என பல்வேறு அம்சங்களுடன் தற்போது உயர்ந்து வாழ்கின்றது.

## சிவன்கோயில்

*1960* ஆம் ஆண்டுகளில் அரியாலை ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய பஞ்சாயத்தர்களில் ஒருவராக இருந்த தாமோதரர் சின்னத்தம்பி அவர்கள் தனது பாரியார் உமைவல்லியுடன் இந்தியாவில் தல யாத்திரை மேற்கொண்டபோது காசியில் இருந்து கங்கா நதியில் கண்டெடுக்கப்பட்ட சிவலிங்கத்தை தம்மோடு எடுத்துவந்து தியாகராஜப் பெருமானுக்கும் இராஜேஸ்வரி அம்பாளுக்கும் விநாயகர் ஆலயத்திற்கு வடக்குப் புறத்தே கோயில் கட்ட ஆரம்பிக்கப்பட்ட போதும் அது கை கூடவில்லை. இதனால் விநாயகர் ஆலயத்துக்குள்ளேயே சிவலிங்கம் ஸ்தாபிக்கப்பட்டது.

*1955* ஆம் ஆண்டில் சித்தி விநாயகர் கோயிலுக்கு அருகாமையில் தியாகராஜப்பெருமானுக்கும்இராஜேஸ்வரி அம்பாளுக்கும் கோயில் கட்டப்பட்டு மகா கும்பாபிஷேகமும் நடைபெற்றது. *1961* ஆம் ஆண்டில் இருந்து *11* நாட்கள் அலங்கார உற்சவமும் சிறப்பாக இடம் பெற்று வருகின்றது.

ஸ்ரீமான் பெரிய காசிப்பிள்ளை அவர்களாலும் அவர்களின் சந்ததியினராலும் நிர்வகிக்கப்பட்டு வந்த கோயில் அவரின் பரம்பரை உரித்தாளரும் சமதர்மக் கொள்கையைக் கொண்டவருமான ஸ்ரீமான் அ. விசுவநாதன் அவர்களால் எமது ஊரின் சைவ பாரம்பரியத்தில் வந்த அங்கத்தவர்களால் தெரிவு செய்யப்படும் பரிபாலன குழுவினரால் பரிபாலிக்க வகை செய்யப்பட்டது. இதனடிப்படையில் *21* பேர் கொண்ட அரியாலையின் பல பகுதியினரையும் உள்ளடக்கிய குழு தெரிவு செய்யப்பட்டது. அதன் தலைவராக அமரர் சி. பொன்னம்பலம் அவர்களும், செயலாளராக த. நடராசா அவர்களும், பொருளாளராக வைத்திய கலாநிதி அருளம்பலம் அவர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

## அரியாலை பிரப்பங்குளம் மகாமாரி அம்மன் ஆலய வரலாறு

வழிபடுவோரின் வேண்டுதலுக்கிணங்க பரிபாலகராக இருந்த திரு.சி.அருணாசலம் அவர்கள் *30.07.1965* இல் அமைப்பு ரீதியான பரிபாலன சபையொன்றை உருவாக்கி அதன் முகாமையாளராக செயல்பட்டார். தொடர்ந்து வந்த பரிபாலன சபையினரால் பரிவார மூர்த்திகள் பிரதிஷ்டைகள், வைரவர் கோயில் அமைத்தல், திருக்கோபுரம், மணிக் கோபுரம் அமைத்தல் போன்ற திருப்பணிகளை நிறைவேற்றப்பட்டன. *15* நாட்கள் மஹோற்சவம் *1984* இல் ஆரம்பிக்கப் பட்டு பக்திபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. சித்திரத்தேர், வாகனங்கள் உட்பட அனைத்து அம்சங்களும் கொண்டு விளங்கும் இத்திருக்கோவில் அரியாலை பிரப்பங்குளம் மஹாமாரி அம்மன் ஆலயம் என இன்று சிறப்புடன் அழைக்கப் படுகின்றது.

இன்று மூர்த்தி, தீர்த்தம், தலவிருட்சம் பஞ்சதள இராஜகோபுரம் அம்மன், விநாயகர், சுப்பிரமணியர், தூபிகள், வசந்தமண்டபத் தூபி, இரண்டு மணிக் கோபுரங்கள், ருத்திராகலை சிற்பத்தேர், சப்பைரதம் என்பவற்றுடன் கூடிய புதுப்பொலிவுடன் இக்கோயில் சிறப்படைந்துள்ளது.

## வரலாற்றுப்பாதையில் அரியாலை ஸ்ரீ ஞான வைரவர் கோயில்

பல தசாப்தங்களிற்கு முன்னர் எமது மூதாதைகளால் அரியாலை

கொட்டையடி என்னும் பகுதியில் ஒரு நாவல் மரத்தின் கீழ் வைரவர் சூலம் ஒன்றை வைத்து வழிபாடுசெய்து வந்தனர். இவ்வாறு சூலத்தைத் ஸ்தாபித்தவர் யார் என்பது எம் முன்னாள் பரம்பரையினருக்கும் தெரியாமல் இருந்துள்ளது.

இவ்விடத்தில் "கொட்டையடி" என்பதன் அர்த்தத்தை வெளிப்படுத்துவது சாலவும் சிறப்பு என கருதுவதால் அதனை முன் வைக்கின்றேன். எமது மூதாதையர்கள் பாரம்பரிய விளையாட்டுக்களான இலுப்பைக் கொட்டை அடித்தல். போர்த்தேங்காய் அடித்தல் போன்றவற்றில் விற்பன்னர்களாக இருந்துள்ளனர். இதனால் இப்பகுதிக்கு அரியாலையின் ஏனைய இடங்களிலிருந்து இவ் விளையாட்டுக்களை விளையாட இளைஞர்கள் வந்திருந்தார்கள். அவர்கள் தாம் செல்லும் இடத்தை அடையாளப் படுத்த பேச்சு வழக்கமாக சொல்லிய இடப்பெயராக கொட்டையடி என்ற பிரதேசம் உருவாகியதாக கருதப்படுகிறது.

வைரவப்பெருமானின் அருளாட்சியினால் இப்பகுதி மக்கள் யாவரும் சீரும் சிறப்பாக வாழ்ந்து வந்தனர். பெருமானின் மீது கொண்ட பக்தியால் பெருமானிற்கு பொங்கல், சிறப்புத் தினங்களில் விசேட தீபங்கள் ஏற்றுதல் போன்ற மரபுமுறை வழிபாடுகளைச் செய்து வந்தனர். பெருமானின் அருட்கடாட்சத்தை பெற்று சிறப்பாக வாழ்ந்து வந்த இம்மக்கள் பெருமானிற்கு ஆகம முறைப்படியான ஓர் ஆலயத்தை அமைத்து வழிபட விரும்பினர். பெருமான் சூல வடிவில் கோயில் கொண்டிருந்த வளவின் உரிமையாளரிடம் தங்கள் விருப்பத்தை வெளிப்படுத்தினர். அடியார்களின் விருப்பத்தை புரிந்துகொண்ட காணியின் உரிமையாளரான திரு.ஆறுமுகம் சுப்பிரமணியம் அவர்கள் தனது காணியில் ஆலயத்தை அமைக்க தனது விருப்பத்தை தெரியப்படுத்தி தானே முன்னின்று ஆலயத்தைக் கட்டுவித்தனர்.

மக்கள் கனவான் சுப்பிரமணியத்தின் உதவியுடன் வைரவப் பெருமான் கோயில் கொண்டிருந்த நாவல் மரத்தின்கீழ் சிறிய கோயில் ஒன்றை **1917**ஆம் ஆண்டு கனவான் ஆறுமுகம் சுப்பிரமணியம் அவர்கள் தனது காணியில் அமைத்தார். சூல வடிவில் இருந்த வைரவப்பெருமானை ஞான வைரவப் பெருமானாக மூலாலயத்தில் பிரதிஷ்டை செய்தனர். கோயிலை ஒழுங்கு முறைப்படி செயற்படுத்தும் பொறுப்பையும் திரு.சுப்பிரமணியத்திடமே மக்கள் ஒப்படைத்தனர். அவர் ஆலயத்திற்கென ஒரு சிவாச்சாரியரை நியமித்து தினமும் காலையும் மாலையும் பூசைகள் நடைபெறச் செய்தார். மக்களும் வைரவப் பெருமானின் மீது அதிக பக்தி கொண்டவர்களாகவும் பெருமானுக்கு அபிஷேகங்கள், பொங்கல்கள் செய்து திருவருளைப் பெற்று வாழ்ந்தனர். திரு.சுப்பிரமணியம் அவர்களும் பெருமான் மீது கொண்ட பெரும் பக்தியினால் ஆலயம் அமைந்த காணியின் முழுப் பரப்பளவையும் ஆலயத்திற்கென உபயம் செய்து **1940** ஆம் ஆண்டு உறுதி எழுதி வழங்கினர். பக்தர்களும் தங்கள் நேர்த்திக் கடன்களையெல்லாம் நிறைவேற்றி நல்லருள் பெற்று வந்தனர். பெருமானின் அருள்பிரவாகத்தை பெற்ற பக்தர்கள் ஆலயத்தையும் சிறிது சிறிதாக அபிவிருத்தி செய்து வந்தனர். இவ் ஆலயத்திற்கு முதல்முறையாக **1934** ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் நடைபெற்று ஆலயம் ஆகம விதிப்படியான ஆலயமாக மாற்றியமைக்கப்பட்டது. பின்னர் சில அபிவிருத்தி வேலைகளும் திருத்தங்களும் செய்யப்பட்டு **1954** ஆம் ஆண்டு மகா கும்பாபிஷேகம் செய்யப்பட்டது.

திரு.ஆ.சுப்பிரமணியம் இயற்கை எய்தியதைத் தொடர்ந்து பொதுமக்களால் தர்ம கர்த்தா சபை உருவாக்கப்பட்டது. 1940 ஆம் ஆண்டு இது பாரிபாலன சபையாக யாப்பு நீதியாக உருவாக்கப் பட்டு இயங்கி வருகின்றது.

இப்பரிபாலன சபையின் முயற்சி யால் உள்வீதிப் புனரமைத்தல் உள் வீதி உருவாக்கம் முன் மண்டப உருவாக்கம் மணிக்கூட்டுக்கோபுரம் புனரமைத்தல் பிள்ளையார் முருகன், பரிவார மூர்த்தி களுக்கு சிறுகோவில் அமைத்தல் போன்ற அபிவிருத்திப் பணிகளால் ஆலயம் பெரிய ஆலயமாக மாற்றம் அடைந்தது. சிறப்பான உற்சவ மூர்த்தி, பிரதிரட்ஷணம் செய்யப்பட்டதை அடுத்து 1972 ஆம் ஆண்டு தொடக்கம் 10 நாட்கள் அலங்காரத் திருவிழா இடம்பெற்று வருகிறது. வேண்டிய வாகனங்கள் சிறப்பாக திருமஞ்சம், சப்பை ரதம் போன்றன அடியார்களால் அன்பளிப்பு செய்து அலங்காரத் திருவிழா சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

ஆலயத்தின் நித்திய நைவேத்திய பூசைகளை செய்வதற்கு நடுவில் ஐயா என்று அழைக்கப்பட்ட சிவஸ்ரீ ஐயா அவர்கள் பொறுப்பேற்றார். சிறப்பாக பூசை அபிஷேகங்களை நடத்தி அடியார்களிற்கு வைரவப் பெருமானின் திருவருள் கிடைக்க வழிகாட்டி வந்தார். அவரிற்குப் பின்னர் அவரது புத்திரரான சிவஸ்ரீ பாலசுப்பிரமணியக்குருக்கள் ஆலயத்தைப் பொறுப்பேற்று தந்தை வழியில் ஆலயத்தை சிறப்பாக நடத் தினர். அவரிற்குப் பின்னர் அவரது புத்திரர்கள் ஆலய பூசைகளையும் உற்சவங்களையும் சிறப்பாக நடத்தினர். எனினும் 1995 ஆம் ஏற்பட்ட இடப்பெயர்வு ஆலயக் குருக்களையும் வெளி யிடங்களிற்கு செல்ல வழிசமைத்தது. இதனால் இடப் பெயர்வின் பின் ஆலய பூசைகள் உற்சவங்களை நடத்த குருக்கள் தேடவேண்டிய நிலமை பரிபாலன சபைக்கு ஏற்பட்டது. தற்காலிக ஏற்பாடு களில் அர்ச்சகர்கள் ஆலயத்தை நடத்தி னாலும் நிரந்தர குருக்கள் தேவை இருந்தது. சிவஸ்ரீ தி.சங்கரராஜக் குருக்களும் அவரது புத்திரர்களும் ஆலயத்தைப் பொறுப்பெடுத்து கடந்த இருபது வருடங்களாக சிறப்பாக பூசைகளையும் உற்சவங்களையும் நடத்தி வருகிறார்கள். அவரது வழிகாட்டல் பரிபாலனசபைக்கு ஆலயத்தை சிறப்பாகப் பராமரிக்க உதவியாக இருக்கின்றது.

## யாழ் தெற்கு நல்லூர் ஸ்ரீ கற்பக விநாயகப் பெருமாள் கோயில்

தென்கைலாயம் எனப் போற்றப் படும் ஈழவள நாட்டில் வடபால் செளிப்பாக விளங்கும் யாழ்ப்பாணத்தில் கச்சேரி நல்லூர் வீதி, நல்லூர் தெற்குப் பகுதியில் கோயில் கொண்டு எழுந்தருளி இப்பகுதி மக்கள் குல தெய்வமாகவும், தோன்றாத் துணையாகவும் விளங்குகின்றார்.

நூறு ஆண்டுகளுக்கு மேலாக பழமை வாய்ந்த இத்திருக்கோயில் புளியடி வளவு எனும் காணியில் மேட்டுப் பகுதியில் அரச மரங்கள், ஆலமரங்கள், வில்வமரங்கள் சூழ்ந்த இப்பகுதியில் துருத்தி கந்தன் என்பவர் தனது கொல்லன் பட்டடையில் பிள்ளையார் லிங்க வடிவிலான கல்லை வைத்து வணங்கி வந்தார். அவ்விடத்தையே மக்களும் வழிபாடு செய்யும் வகையில் ஏறத்தாழ 1900 ஆம் ஆண்டுகளில் அதனைக் கோயிலாக அமைத்து வழிபட்டு வந்தனர். துருத்தி கந்தனின் பரிபூரண ஒத்துழைப் புடன் ஒரு கொட்டில் போட்டு கிடுகால் வேயப்பட்டு அதன் கீழ் பிள்ளையார் லிங்கம் வைத்து பூசித்து வந்தனர். இதற்கு 'துருத்தி கந்த பிள்ளையார்' என்று பெயர் வைத்தனர். இன்று எம்பெருமான்

கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள மூலஸ்தானமே அன்று அந்த கம்மாலை இருந்த இடமாகும். கோயிலைச் சூழவுள்ள விளையாட்டு மைதானம், நெசவு நிலையம், சனசமூக நிலையம், பழைய வாகனசாலை, ஆலயக் குருக்களின் வாழ்விடம் போன்றன அயலவர்களின் தர்ம சாதனமாகும்.

துருத்தி கந்தனின் சந்ததியில் வந்த சின்னக்குட்டி சங்கரப்பிள்ளை என்பவர் துருத்திக் கந்தனினன் மறைவுக்குப் பின் கோயிலைப் பொறுப்பேற்று நடத்தி வந்தார். இவருடைய காலத்திலேயே அயலவர்களின் ஒத்துழைப்புடன் செங்கல்லாலான கோயில் அமைக்கப்பட்டு அலங்காரத்திருவிழா ஆரம்பிக்கப்பட்டது. சங்கரப்பிள்ளையின் காலத்திற்குப் பின் சிற்ப சாஸ்திரியான சிற்றம்பலம் சரவணமுத்துவின் பொறுப்புக்கு வந்தது. அவரது காலத்திலேயே கோயில் சுண்ணாம்புக்கல், காட்டுக்கல் என்பவற்றால் ஓரளவு பெரியளவில் கோயில் புணருத்தாரனம் செய்யப்பட்டது.

சரவணமுத்துவின் மறைவுக்குப் பின் ஊர் மக்கள் கோயில் முன்றலில் கூடி முன்னாள் யாழ்ப்பாண மாநகர மேயரும் பிரபல சட்டத்தரணியுமான ஸ்ரீமான் கதிரவேலு - பொன்னம்பலம் அவர்களை மனேஜராகக் கொண்ட 10 பேர் அடங்கிய பரிபாலன சபையை தெரிந்தனர். அப்பரிபாலன சபையினரால் நிர்வகிக்கப்பட்டு வந்த அம்முறையே தொடர்ந்தும் வழக்கில் இருக்கின்றது.

**16.02.1983** இல் ஆலய நிர்வாகத்துக்கென அமைப்பு விதி உருவாக்கப்பட்டு அதன் அடிப்படையில் பரிபாலான சபை இயங்கி பல அபிவிருத்திப் பணிகளை செய்து வருகின்றது கோயில் உள்வீதி புனரமைப்பு, இராஜகோபுரம், பரிவார மூர்த்திகள் பிரதிஷ்டை மணிக்கூட்டுக் கோபுரம் முன் மண்டம் போன்ற கட்டடக்கலை அபிவிருத்திகளுடன் சித்திரத்தேர் வாகனங்கள், சப்பை ரதம் போன்ற அமைப்புக்களுடன் கூடிய மஹோற்சவம் 10 நாட்கள் கொடியேற்றத்துடன் சிறப்பாக இடம் பெற்று வருகின்றது.

தற்போது மூர்த்தி, தலம், தீர்த்தம், விருட்சம் என்பன ஒருங்கே அமையப்பெற்ற இந்த ஆலயத்தில் நூதன திரிதள இராஜகோபுரமும் மூலஸ்தானத் தூபி, பரிவார தூபிகள் மணிக்கூட்டுக் கோபுரம், வசந்த மண்டபத் தூபி என்பன புதுப்பொலிவுடன் இக் கோயிலில் விளங்குகின்றன.

## அரியாலை கிழக்கு ஸ்ரீ முத்து விநாயகர் கோயில் வரலாறு

இலங்கைத் திருநாட்டின் வட பகுதியில் யாழ்ப்பாணநகர் நல்லூர் அரசதானியில் அரியாலை என்னும் ஊரில் நெய்தலும், மருதமும் ஒருங்கே அமைந்த அரியாலை கிழக்குப் பகுதியில் வடகடலேரிப் பக்கமாக வயல் வெளிகளும், பனை மரங்களும் நிறைந்த சிறிய பரட்டைக் காட்டுப் பகுதியில் மாடுகள் மேய்த்துக் கொண்டிருந்த இடையர்களால் சம்புப் புல்லுக்குள் கண்டெடுக்கப்பட்ட விநாயகர் சிலையை அரச மரத்தடியில் வைத்து வழிபாடு ஆரம்பிக்கப்பட்டதாக கூறப்படுகின்றது. இந்தக் கோயில் கட்டப்பட்டு பல நூறு ஆண்டுகள் கழிந்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

இங்கு வாழ்ந்த முன்னோர்கள் வயல் நிலங்களில் நெற்செய்கையையும், மேட்டு நிலத்தில் தென்னந்தோட்டம் பனைமரங்கள் என்பவற்றைப் பராமரித்து சிறப்பாக வாழ்ந்து வந்ததாக அறியப்பட்டது. காலப்போக்கில் கல்விக்காகவும், வேலைவாய்ப்பிற்காகவும் யாழ்ப்பாண

நகரை அண்டிய பகுதிகளுக்குச் சென்று குடியேறியதால் கோயிலைப் பராமரிக்க ஆட்கள் நியமிக்கப்பட்டார்கள். இக் கோயில் திரு.முத்தையா நவரத்தினம்மா தம்பதிகளின் பரம்பரையினரது எனக் கூறப்பட்டு வருகின்றது. திரு. சின்னத்தம்பி அருணாசலம் உபாத்தியாயர் அவர்கள் அதிக காலம் பராமரித்து வந்தார். அவரின் மறைவுக்குப் பின் சின்னத்தம்பி இராமநாதன் சிறிது காலம் பராமரித்து வந்தார்.

இக்கோயிலானது சுண்ணாம்புக் கற்களாலும், வெண்கற்களாலும் கட்டப் பட்ட பழமை வாய்ந்ததோடு மூலஸ்தானம், மகா மண்டபம், அர்த்த மண்டபம், பலிபீடம், மொட்டைக் கோபுரம், வசந்த மண்டபம் வரை பன்னிரண்டு உருண் டைத் தூண்களைக் கொண்ட பெரிய மண்டபம் காணப்பட மூலஸ்தானத்திற்கு வடக்கே சிவலிங்கப் பெருமானும், முன்னே நந்தி பலிபீடமும், தெற்கு நோக்கிய சிவகாமி அம்மனும், தீர்த்தக் கிணறும், வடமேற்கில் வள்ளி தெய் வானை சமேத முருகனும், அதன் தெற்கே கிருஷ்ணரும் வாயிலின் வடக்கே வைரவருடன் நாக தம்பிரானும் அடுத்து மணிக்கோபுரமும் சுண்ணாம்புக் கற்களால் வளைவாகக் கட்டப்பட்ட வசந்த மண்டபமும் அதனுள் எழுந்தருளி விநாயகர், நடராசர், உமையம்மன், வள்ளி தெய்வானை சமேத கந்த சுவாமியாரும் வீற்றிருக்கின்றனர். சுண்ணாம்புக் கற்களால் கட்டப்பட்ட உள்வீதிச் சுற்று மதில் வெளி வீதியின் தென் மேற்கில் தீர்த்தக் கேணியும் கேணிக்குக் கிழக்காக அந்தணர் விடுதியும் சேர்ந்த மடமும் அமையப் பெற்றிருந்தது. இக் கோயிலுக்குச் சொந்தமாக தென்னந் தோட்டங்களும், வயல் நிலங்களும் காணப்பட்டு வருமானம் பெறப்பட்டது. நித்திய பூசை, விசேட திருவிழா, பிள்ளையார் கதை, திருவெம்பாவை, மகா சிவராத்திரி என்பனவும் நடைபெற்று வந்தது.

***1962*** ஆம் ஆண்டு திரு. முத்தையா குமாரசாமி தலைமையில் பரிபாலன சபை ஸ்தாபிக்கப்பட்டு நவரத்தினம்மா அவர்களினால் கோயிலையும், கோயில் காணியையும் நிர்வகிக்கும் பொறுப்பு திரு. க. வல்லிபுரம் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்ட காலப்பகுதியில் கோயில் மிகவும் பழமை நிலையில் காணப்பட்டது.

***1979*** ஆம் ஆண்டு பூசகர் பிரம்மஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி ஐயா, பரிபாலனசபை க.வல்லிபுரம் ஆகியோர் கலந்துரையாடி கோயிலைப் புனரமைப்புச் செய்யத் தீர்மானித்து உபயகாரர்கள், ஊர்மக்கள் எல்லோருக்கும் தெரியப்படுத்தப் பட்டது. பாலஸ்தான கும்பாபிஷேகம் நடத்தப்பட்டு திருப்பணி வேலைகள் திரு.க.வல்லிபுரம் பொறுப்பில் ஆரம்பிக்கப் பட்டது. திருப்பணிக்குரிய நிதி திரட்டும் பணியில் திருமதி. நவரத்தினம்மா மகன் குமாரசாமி, திருமதி தேவகி தனராசா ஆகியோர் ஈடுபட்டனர். மூலஸ்தானம் இடிக்கும் வேலையின் போது படிக்குக் கீழ் காணப்பட்ட சில்லறை நாணயங் களில் காணப்பட்ட குறியீடுகள் ஆண்டுகளை வைத்து இக்கோயில் முந்நூறு ஆண்டுகள் பழமை வாய்ந்ததாக இருக்கலாம் எனக் கூறப்பட்டது.

கட்டுமாண வேலை முடிந்த போது பார்வையிட்ட குருக்கள் விநாயகருக்கு வலது பக்கத்தில் கஜலக்ஷ்மி அம்பிகை அமைந்தால் ஆலயம் சிறப்படையும் எனக் கூறியதால் கஜலக்ஷ்மி கோயில் தென்மேற்கு மூலையில் ஸ்தாபிக்கப்பட்டது. நிதிப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய கோயில் தோட்ட வருமானங்கள்

விற்பனை செய்யப்பட்டது. வெளி மண்டபமும், உள்வீதிச் சுற்று மதிலும் இடிக்கப்பட்டு புதிதாகக் கட்டப்பட்டது. வசந்த மண்டபம் கோபுர வாசல் திருத்தம் செய்யப்பட்டு 1980 ஆம் ஆண்டு ஆனி மாதம் புனர்பூச நட்சத்திரத்தில் பிரம்மஸ்ரீ மகாதேவா சிவாச்சாரியார் தலைமையில் மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது. அன்றிரவு முழுவதும் மேளக்கச்சேரி, கலை நிகழ்வுகள் நிகழ்ந்து அதிகாலை வசந்த மண்டபப் பூசை நடைபெற்று உள்வீதி வலம் வந்து முத்துச் சப்பரத்தில் வெளிவீதி வலம்வந்து மின்னொளி அலங்காரத்தில் அருள்பாலித்தார்.

இக்கோயிலில் மடை அபிஷேகம் சிறப்பு பெறும். விவசாயத்தில் ஈடுபடும் மக்களுக்காக மழை வேண்டி திரு.மு.குமார சாமி, திரு. க. வல்லிபுரம், திரு. இ. தியாக ராசா ஆகியோரில் ஒருவரால் வெள்ளி அல்லது ஞாயிற்றுக் கிழமையன்று இளநீர் உடைக்கப்பட்டட அடுத்த வாரத்தில் அதே கிழமை நாளில் அவ்வூர் விவசாயிகள் தங்களால் விளைவிக்கப் பட்ட இளநீர்களை வண்டில்களில் கொண்டு வந்து விநாயகருக்கு சிறப்பான அபிஷேகம் நடைபெற்று பொங்கல் அன்னம் கடலில் கொட்டப்படும். அந்த வாரத்தில் மழை பொழிந்து விவசாயம் சிறக்கும். விவசாய விளைபொருளின் சிறு பங்கு கோயிலுக்கும் வழங்கப்படும் மரபு தவறுவதில்லை.

1990 ஆம் ஆண்டு ஸ்ரீமுத்து விநாயகர் கோயிலுக்குப் புதிய பரிபாலன சபை தெரிவு செய்யப்பட்டு தலைவராக திரு. நா. அருளம்பலம் உப தலைவராக திரு. சு. கனகரத்தினம், செயலாளராக, திரு. கு. வயிரவநாதன் , பொருளாளராக திரு. சு. அருணாசலம் என நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டு திரு. க. வல்லிபுரம் அவர்களிடம் இருந்து கோயில் பொறுப்புக்கள் பரிபாலன சபையிடம் ஒப்படைக்கப்பட்டது.

இலங்கையில் நடைபெற்ற உள்நாட்டுப் போர் காரணமாக சிதை வடைந்த கோயிலை திரு.வி.சச்சிதானந்தன் தலைமையிலான பரிபாலன சபை 2011 ஆம் ஆண்டு பொறுப்பேற்கப்பட்டது. புணருத்தானம் செய்யப்பட்டு 2012 ஆம் ஆண்டு தை மாதம் பிரம்ம ஸ்ரீ கணேச சர்மா அவர்களால் கும்பாபிஷேகம் செய்யப்பட்டு நித்திய நைமித்திய பூசைகள் ஒழுங்காக நடைபெற்று வருகின்றன. திருவிழா ஆனிமாதம் ஒன்பது நாட்கள் நபன அபிஷேகமும் பத்தாம் நாள் ஆனிப் புனர்பூசத்தன்று 1008 சங்காபிஷேகமும் இரவுத் திருவிழாவின் போது முத்துச் சப்பை ரதத்தில் விநாயகர், வெளிவீதி உலா வந்து அருள்பாலிப்பார்.

## அரியாலை கிழக்கு துரவடிப் பிள்ளையார் வரலாற்றுச் சுருக்கம்

A9 வீதியிலிருந்து அரியாலை கிழக்கிற்குச் செல்லும் பிரதான கிளை வீதியில் கோப்பர் குளம் என அழைக்கப்படும் அழகிய தாமரைக் குளத்தருகே இவ்வாலயம் அமைந்துள்ளது. பிள்ளையாரின் விக்கிரகம் ஒரு துரவின் அருகாமையில் கண்டெடுக்கப்பட்டுப் பூசித்ததனால் துரவடிப் பிள்ளையார் என நாமமிடப்பட்டது. பின்னர் குளமாக்கப் பட்டபோது குளமாக்கியவரின் பெயரினால் கோப்பர் குளம் என வழங்கலாயிற்று. பிள்ளையாரையும் கோப்பர் குளப் பிள்ளையார் என அழைக்கலாயினர்.

இவ்வாலயத்தின் வரலாறு நூற்றாண்டைக் கடந்துள்ளது. துரவடியில் கண்டெடுக்கப்பட்ட விக்கிரகம் முதலில் ஓர் அரச மர நிழலில் சிறு கொட்டில் வைத்து பூசிக்கப்பட்டது. சில காலத்தின் பின்னர், 1912 ஆம் ஆண்டு சின்னத்தம்பி

சரவணமுத்து என்பவரால் சிறு ஆலய மாகக் கல்லினால் கட்டப்பட்டது. அவருக்குப் பின் பொறுப்பேற்ற சின்னத்தம்பி சுப்பிரமணியம் என்பவர் ஆலயத்தை மூலஸ்தானம், இரண்டாம், மூன்றாம் மண்டபங்கள் என விரிவு படுத்தினார். 1936 ஆம் ஆண்டு முதல் 1955 வரை நீர்நொச்சித்தாழ்வு ஸ்ரீசித்தி விநாயகர் ஆலயத்தைச் சேர்ந்த அருளம்பலம் அவர்களும், வண்ணார் பண்ணையைச் சேர்ந்த S.R கந்தையா அவர்களும் இணைந்தும் தனியாகவும் பராமரித்து வந்தனர். அவர்களின் காலத்தில் பலிபீடம், நான்காம் மண்டபம், மடப்பள்ளி என்பன அமைக்கப்பட்டது. இவர்களின் காலத்தில் இவ்வாலயத்திற்கு வெளிமாவட்டங்களிலிருந்தும் பெருந் தொகையானோர் வருகை தந்தனர். காரணம் என்னவெனில் யாழ்ப்பாணத்து முதன்மைச் சித்தராகிய யோகர் சுவாமிகள் இவ்வாலயத்தில் குடிலமைத்து சில ஆண்டுகள் தியானம் செய்தமையே. அக்காலத்தில் இலுப்பை, வேம்பு போன்ற மரங்கள் கோயில் வளாகத்துடன் நாட்டப்பெற்று இன்னும் குளிர்ச்சியைத் தருகின்றது.

1955 இல் S.R கந்தையாவுக்குப் பின் பொறுப்பேற்ற மூத்ததம்பி தாமோதரம்பிள்ளை அவர்கள் தனது சுகயீனம் காரணமாக கார்த்திகேசு தம்பிமுத்துவிடம் பொறுப்புக்களைக் கையளித்தார்.

கா. தம்பிமுத்து அவர்கள் தமது புதல்வர்களின் உதவியோடு 1982 ஆம் ஆண்டு வரை சிறப்பாகப் பராமரித்தார். இவரின் காலப்பகுதியில் ஆலயம் புனரமைக்கப்பட்டு கும்பாபிஷேகமும் நடைபெற்றது. புதிதாக வைரவருக்கு மண்டபமும், மணிக்கோபுரம் புணருத் தாரனமும் செய்யப்பட்டது. அன்று முதல் வருடந் தோறும் அலங்காரத் திருவிழா, சங்காபிஷேகம், சிவராத்திரி, நவராத்திரி பூசைகள், பிள்ளையார் கதைப் பூசைகள், திருவெம்பாவைப் பூசைகள் போன்ற பூசைகள் அடியார்களினால் சிறப்பாக செய்யப்படுகின்றது.

1982 ஆம் ஆண்டு தம்பிமுத்து அவர்கள் காலமாவதற்கு முன்னரே தனது புதல்வர்களிடம் முழுப்பொறுப்பையும் ஆதனங்களின் உறுதிகளையும் எழுத்து மூலம் கையளித்தார் என்பது குறிப்பிடத் தக்கது.

1982 முதல் 1995 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் எழுந்தருளி, எழுந்தருளிக்கென சிறு மண்டபம், ஐந்தாவது பெரிய மண்டபமும் அமைக்கப்பட்டு கும்பாபிஷேகமும் நடைபெற்றது.

அக்டோபர் 1995 முதல் ஏப்ரல் 2011 வரை இப்பிரதேசம் இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் இருந்த தென்பது யாவரும் அறிந்த விடயமே. இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் இருந் தாலும் இராணுவ அனுமதியுடன் இரண்டு தடவைகள் ஆலயத்தைத் தரிசிக்கக் கூடியதாய் இருந்தது.

2000 ஆம் ஆண்டு ஊர் மக்கள் அழைத்து ஒரு பொதுக்கூட்டம் கூடி நிர்வக சபை ஒன்று தெரிவு செய்யப் பட்டது.

2011 ஆம் ஆண்டு சித்திரை வருடப்பிறப்புடன் ஆலய பொங்கல் நடைபெற்று பல திருப்பணிகள் நிறைவேறியுள்ளன. ஆலயப் பதிவும் இடம் பெற்றுள்ளது. இராணுவக் கொட்டில்களின் இடிபாடகற்றல், சேதமடைந்த ஆலயப் பகுதிகள், மடப் பள்ளி சீர்செய்தல், களஞ்சிய அறை

அமைத்தல், வாகனக் கொம்பு செய் வித்தமை, வசந்த மண்டபம், முருகப் பெருமானின் வேல் பிரதிஷ்டை, அற நெறிக் கட்டடம், நவக்கிரக மண்டபம், சிவன், பார்வதி மண்டபங்கள், சண்டேஸ் வரர் மண்டபம், உள்வீதி ஒரு பாதை, ஊர்தி, சகடை, கிழக்குப் பக்கம் முழுவதும் மதில் அமைத்தமை போன்ற திருப் பணிகள் நடந்தேறின. ஆலயத்திற்கு 15 இற்கு மேலான ஆதனங்கள் சொந்தமாக உள்ளன. தென்னந் தோட்ட வருமானத்தில் 1995 ஆம் ஆண்டிற்கு முன்னர் ஆலயப் பராமரிப்பு நடைபெற்றது. 2011 ஆம் ஆண்டிற்குப் பின்னர் காடுகள் பற்றைகள் அழித்தல், அழிக்கப்பட்ட தென்னம் பிள்ளைகள் வைத்தல், பராமரித்தல் போன்ற திருப்பணிகளும் நடைபெறுகின்றன.

பாலஸ்தானம், கும்பாபிஷேகம், சங்காபிஷேகம் ஆகியவையும் ஆலயத்தில் இருநேரம் பூசைகளும் மற்றும் நைமித்திய பூசைகளும் சிறப்பாக நடைபெறுகின்றது.

## புண்ணிய பாவவியல்

1 சிவபெருமான் ஆன்மாக்களுக்காக அருளிச் செய்த முதனூல்கள் எவை?
வேதம், சிவகாமம், என்னும் இரண்டுமாம்

2. வேத சிவாகமங்களில் விதிக்கப்பட்டவைகள் எவை?
புண்ணியங்கள்

3. புண்ணியங்களாவன யாவை?
கடவுளை வழிபடுதல், தாய், தகப்பன், உபாத்தியாயர், குரு முதலிய பெரியோர்களை வணங்குதல், உயிர்களுக்கு இரங்குதல், உண்மை பேசுதல், செய்நன்றியறிதல் முதலானவைகள்.

4. புண்ணியங்களைச் செய்தவர் எதனை அனுபவிப்பர்?
மேலுலகங்களாகிய புண்ணிய லோகங்களிலே போய், இன்பத்தை அனுபவிப்பர்.

14. வேத சிவாகமங்களிலே விலக்கப்பட்டவைகள் எவைகள்?
பாவங்கள்

15. பாவங்களாவன யாவை?
கொலை, களவு, கள்ளுக்குடித்தல், மாமிசம் புசித்தல், பொய் பேசுதல், விபச்சாரம், சூதாடுதல் முதலானவைகள்

16. பாவங்களைச் செய்தவர் எதனை அனுபவிப்பர்?
நரகத்திலே விழுந்து துன்பத்தை அனுபவிப்பர்.

# எம் ஊர் முன்னோரின் சிறப்பும், அவர்களின் நோக்கமும் பற்றிய ஆய்வு



உபயசேகரம் செந்தூரன் B.Sc Eng.(Hons)

*ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தானத்தை புனரமைத்தும் அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாசாலை, கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் போன்றவற்றை ஸ்தாபித்தும் அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம், அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா போன்ற வற்றை உருவாக்கியும் எம் ஊரின் கட்டமைப்பிற்கும் அடையாளத்திற்கும் பெரும் பங்காற்றிய ஸ்ரீமான் காசிப்பிள்ளை மற்றும் அவர் சார்ந்தோரின் வாழ்க்கையையும் நோக்கத்தையும் வரலாற்றுக் கண் கொண்டு பார்க்க இக்கட்டுரை விளைகின்றது.*

## அமரர் ஸ்ரீமான் வி. காசிப்பிள்ளை அவர்கள்



*கூறியான்கள் என்ற அரசவை உத்தியோகத்தர்கள் யாழ்ப்பாண இராச்சியத்தின் அரசவையில் அதன் நாளாந்த நடவடிக்கைகளை ஒழுங்கமைத்தும் நெறிப்படுத்தியும் வந்தனர். யாழ்ப்பாண இராச்சியம் 17 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் போர்த்துக்கேயரின் ஆக்கிரமிப்பால் வீழ்ச்சி கண்டது. அதனால் கூறியான்களின் செல்வாக்கு சரியத் தொடங்கியது. இருப்பினும் தொடர்ந்து வந்த ஒல்லாந்தரின் (டச்சுக்காரர்) ஆட்சிக்காலத்திலும் கனகசேகர கோதண்ட கூறியான், வன்னியசிங்க கோதண்ட கூறியான் என்பவர்கள் மிகவும் பிரபல்யம் பெற்று விளங்கினார்கள். காலப்போக்கில் இவர்களுடைய சந்ததியரிடத்தே "கூறியான்" என்ற பெயர் வழக்கொழிந்து போயிற்று. கனகசேகர கோதண்ட கூறியானின் வம்சத்தில் பெரிய நிலச் சுவாந்தரும் "குத்தகைக்காரர்" என அறியப்பட்ட வருமான விஸ்வநாதருக்கும் ஐயாத்தைப் பிள்ளைக்கும் மகனாக 1849 ஆம் ஆண்டு பெப்ரவரி 12 ஆம் திகதி ஸ்ரீமான் காசிப்பிள்ளை அவர்கள் பிறந்தார்கள் என்று* S. *ஆறுமுகம் அவர்கள் தான் எழுதிய* "Dictionary of biography of Ceylon Tamils" *என்ற புத்தகத்தின் 29 ஆம் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.*

*ஸ்ரீமான் காசிப்பிள்ளை அவர்கள் தற்காலத்தில் சென் ஜோண்ஸ் கல்லூரி என அழைக்கப்படும் சுண்டுக்குளி மிஷனரி பாடசாலையில் கல்வி பயின்றார். பின்னர் 1867 ஆம் ஆண்டு நடைபெற்ற மெற்றாஸ் மெற்றிக்குலேஷன் பரீட்சையில் சித்தி அடைந்து மேற்படிப்புக்காக மெட்றாஸ் (சென்னை) சென்றார். இந்தப் பரீட்சையில் அவ்வாண்டு யாழ்ப்பாணத்திலிருந்து தோற்றியவர்களில் இரண்டு பேரே சித்தியடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. நாடு திரும்பிய இவர் மிக இளவயதிலேயே வழக்கறிஞர்*

சங்கத்தின் தலைவராக இருந்த C.பிறிட்டோ என்பவரின் கீழ் சட்டப்பயிற்சி பெற்றார். தொடர்ந்து 1876 ஆம் ஆண்டு மன்னார் மாவட்ட நீதிமன்றில் சட்டத்தரணியாக கடமை யேற்ற இவர் 1879 இல் உச்ச நீதிமன்றத்திலும் (Supreme Court) கடமையாற்றினார். 1882 இல் யாழ்ப் பாணத்திற்கு கடமையாற்ற திரும்பிய இவர் அதே ஆண்டில் பார்வதிப் பிள்ளையை திருமணம் செய்தார். தொடர்ந்து தனது மூத்த சகோதரனான ஆறுமுகம் அவர்களின் புதல்வரான சட்டத்தரணி கதிரவேலு அவர்களுடன் இணைந்து ஒரு சட்ட ஆலோசனைக் கம்பனியைத் ஸ்தாபித்தார். 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் யாழ்ப் பாணத்தில் புகழ்பெற்ற சட்டத்தரணியாக விளங்கினார். அவர் முடிக்குரிய சட்டத் தரணியாகவும் மஜிஸ்ரேட் ஆகவும் பதவி வகித்த பின்னர் 1912 ஆம் ஆண்டு ஏப்ரல் 22 ஆம் திகதி யாழ் மாவட்ட நீதிபதியாக பதவியேற்றார்.

காசிப்பிள்ளை அவர்கள் வாழ்ந்த காலப்பகுதியில் யாழ்ப்பாண மக்கள் மிஷனரிப் பாடசாலைகளில் ஆங்கிலத்தில் கல்வி கற்று கிறிஸ்தவ சமயமும் மேலைத்தேய கலாசாரமும் பண்பாடும் இந்து சமயத்தையும், கீழைத்தேய கலாசாரத்தையும் விட மேலானது என எண்ணத் தலைபட்டுக் கொண்டிருந்தனர். அதனால் போர்த்துக்கேயரின் 40 வருட கொடுங்கோலாட்சியிலும் அதன் பின்னர் வந்த ஒல்லாந்தரின் ஓரளவு கெடுபிடியான 140 வருட ஆட்சியிலும் இரகசியமாகவும் வைராக்கியத்தோடும் காக்கப்பட்ட எமது சைவ சமயமும் வாழ்க்கை முறையும் ஆங்கிலேயர் காலத்தில் மிஷனரிகளால் மிகவும் சூட்சுமமாக அழிக்கப்பட லாயிற்று. அதனைத் தடுக்க ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் உட்பட பலர் அக் காலப் பகுதியில் முயன்று கொண்டிருந்தனர். யாழ்ப்பாண அரசவையைச் சேர்ந்த கூறியான்களின் வம்சத்தில் பிறந்து பரம்பரை பரம்பரையாக எமது வாழ்க்கை முறையைக் கடைப்பிடித்து வந்ததால் ஸ்ரீமான் காசிப்பிள்ளை அவர்களது மனதிலும் எமது சமயத்தை யும் வாழ்க்கை முறையையும் காக்க வேண்டும் என்ற எண்ணம் தலைப் பட்டிருக்கக் கூடும். தனது மூதாதையரின் சொத்தாலும் தனது சட்டத் தொழிலால் அடைந்த வருமானத்தாலும் பெரும் செல்வந்தராக விளங்கிய காசிப்பிள்ளை அவர்கள் அந்த செல்வத்தை எமது சமயத்தையும் வாழ்க்கை முறையையும் காத்தல் என்ற அறத்துக்கே அதிகளவில் செலவிட்டார்.

இந்த அறப்பணிகளில் முதலாவ தாக யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியை ஸ்தாபிப்பதில் அவர் ஆற்றிய பங்கை குறிப்பிட வேண்டும். இது தொடர்பாக யாழ். இந்துக்கல்லூரியில் பிரபல ஆசிரியராக விளங்கிய மு. அருணாசலம் அவர்கள் "One hundred years of Jaffna Hindu college" என்ற அவரது கட்டுரை யில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். "Nagalingam Town High School என்ற பெயரில் இயங்கிய சிறிய பாடசாலை திரு. நாகலிங்கம் அவர்களால் 6 பேரைக் கொண்ட சைவ பரிபாலன சபையின் உப குழுவிடம் 15.11.1890 இல் கையளிக்கப் பட்டது. காசிப்பிள்ளை அவர்கள் அக்குழுவின் பொருளாளாராக செயற்பட்டார். நாகலிங்கத்தை தொடர்ந்து 04.08.1897 இல் காசிப்பிள்ளை யாழ். இந்துக் கல்லூரியின் மனேஜர் ஆனார்." அந்த உன்னத செயலை நினைவு கூறும் முகமாகவே யாழ் இந்துக் கல்லூரியின் மெய்வல்லுநர் இல்லங்களில் ஒன்றாக "காசிப்பிள்ளை இல்லம்" விளங்குகின்றது. இதனைத் தவிர இவர் மானிப்பாய் இந்துக்கல்லூரியை ஸ்தாபிப்பதற்கும் நிதியுதவி வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து அரியாலை சிறார்கள் கற்க பாடசாலை இல்லையே என எண்ணி 1893 இல் காலமான தனது மனைவியாகிய பார்வதிப்பிள்ளை அவர்களின் ஞாபகார்த்தமாக அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலையை அறிவு, ஆன்மீகத்தோடு சேர்தலே ஆக்கத்தைத் தரும் என குறிப்புணர்த்தும் படி நீர் நொச்சித்தாழ்வு ஸ்ரீ சித்தி விநாயகர் கோயிலுக்கருகாமையில் 1910 ஆம் ஆண்டு ஸ்தாபித்தார். இப்பாடசாலை 1960 ஆம் ஆண்டு அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்டும்வரை அவராலும் அவரது வழித் தோன்றல்களாலுமே சிறப்பாகப் பராமரிக்கப்பட்டு வந்தது. மேலும் பல காலமாக வெள்ளிக்கிழமை தோறும் காலைப்பிரார்த்தனை ஆலய வழிபாட்டு டன் ஆரம்பமாகி ஸ்ரீ சித்தி விநாயகர் கோயிலின் முன் மண்டபத்தில் நடை பெற்று வந்தது. இந்நடைமுறை களெல்லாம் காலப்போக்கில் நிர்வாக மாற்றங்களாலும் எம்மவரின் அக்கறை யின்மையாலும் வழக்கொழிந்து போயிற்று. பாடசாலை மண்டபத்தில் காணப்பட்ட காசிப்பிள்ளை அவர்களது 6 அடி உயரமான நிழற்படம் கூட பின்னர் அகற்றப்பட்டது வேதனைக்குரியது.

அந்நியர் ஆட்சிக்காலத்தில் சிதைவடைந்து பின்னர் சிறியளவில் புனரமைக்கப்பட்டிருந்த அரியாலை நீர்நொச்சித்தாழ்வு ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தானத்தை பெரியளவில் புனர் நிர்மாணம் செய்து 1914 ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் செய்ய காசிப்பிள்ளை அவர்களுக்கு விநாயகப் பெருமானின் திருவருள் கிடைக்கப்பெற்றது. அக் காலப்பகுதியில் யாழ் குடாநாட்டில் ஒரு சில கோயில்களே நேர்த்தியான கற்றூண் மண்டபங்களுடன் அமைக்கப் பட்டி ருந்தன என்பது காசிப்பிள்ளை அவர்கள் எடுத்த முயற்சியின் முக்கியத்துவத்தை குறிப்புணர்த்துகின்றது. கோவிலை நிர்மாணித்ததுடன் நின்றுவிடாது அவரும் அவரின் வழித்தோன்றல்களும் ஏராளமான வயல்களையும் தென்னந் தோட்டங்களையும் காணிகளையும் கோயிலுக்கு நன்கொடையாக வழங்கி அக்கோயிலின் நித்திய, நைமித்திய பூசைகள் சிறப்புடன் எதிர்காலத்திலும் இடம்பெற வழி சமைத்தனர்.

கோவில்கள், பாடசாலைகள் போன்றவற்றை அமைப்பதுடன் மட்டும் நின்றுவிடாது சைவநெறியை ஒரு நிறுவன மயப்படுத்தப்பட்ட அமைப்பு ஒன்றி னூடாக யாழ்ப்பாணத்தில் மீள் எழுச்சி கொள்ள வைக்க வேண்டும் என்ற நோக்குடன் கற்றோர் பலரால் சேர்ந்து உருவாக்கப்பட்ட சைவ பரிபாலன சபையை உருவாக்குவதில் முன்னின்று செயற்பட்ட காசிப்பிள்ளை அவர்கள் அதன் மனேஜராக பல காலம் கடமையாற்றினார். இச்சபை தற் காலத்தில் வருடந்தோறும் சைவ மாணவர்களிடையே சமய அறிவுப் போட்டியை சிறந்த முறையில் ஒழுங்கமைத்து வருவது யாவரும் அறிந்தவொன்றாகும். மேலும் இவர் இந்து சமயப் பாடசாலைகளின் நிர்வாக அமைப்பை ஒழுங்குபடுத்துவதற்காக ஆரம்பிக்கப்பட்ட சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் (Hindu Board of Education) முகாமையாளராக 1895 - 1915 ஆம் ஆண்டு வரை செயற்பட்டார். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களின் சீடர் ஒருவரால் பராமரிக்கப்பட்டு வந்ததும் கந்தபுராணம் போன்ற நூல்களை குறைந்த விலையில் அச்சிட்டு வெளியிட ஆரம்பிக்கப்பட்டதுமான சைவப்பிரகாச யந்திரசாலை அன்னாரின் மறைவையடுத்து மூடப்படவிருந்தது. அன்னாரின் நண்பரான காசிப்பிள்ளை

அவர்கள் 13 நிபந்தனைகளின் அடிப்படையில் அந்த அச்சகத்தை 1888 ஆம் ஆண்டளவில் சைவபரிபாலன சபையிடம் கையளிக்க உதவினார். இதன் மூலம் ஓலைச் சுவடிகளில் காணப்பட்ட சைவ சமய நூல்களை அச்சேற்றி யாவரும் கற்றறிந்து கொள்ளச் செய்ததில் முன்னோடியாக திகழ்ந்த நாவலரின் பணி தடங்கலின்றி செயற்பட வழிசமைத்தார்.

காசிப்பிள்ளை அவர்களின் செயற்பாடுகள் சமய சமூகப் பணிகளுடன் மட்டும் நின்று விடாது பொருளாதார அபிவிருத்தியிலும் வியாபித்திருந்தது. தனிநபர் தொழில் முனைவும் (Entre preneurship) அதற்குத் தேவையான பணப்பரிவர்த்தனைக் கட்டமைப்பும் மேற்கு நாடுகளில் பெரும் முன்னேற்றம் கண்டுவந்த அந்தக் காலப்பகுதியில் தனியாள் தொழில் மற்றும் வர்த்தகத் துறை விருத்திக்கான சூழலை யாழ்ப்பாணத்திலும் உருவாக்கும் நோக்குடன் 1896 ஆம் ஆண்டு ஏப்ரல் 17 ஆம் திகதி ரூபா 1 லட்சத்துடன் ஆரம்பிக்கப்பட்ட "Jaffna commercial Co - operation" என்ற ஸ்தாபனத்தின் முதலாவது நிர்வாகிகள் குழாத்தில் (Director's Board) திரு. காசிப்பிள்ளை அவர்களும் இடம் பெற்றிருந்தமை பொருளாதார துறையில் அவருக்கிருந்த தொலைநோக்கு பார்வையை எடுத்துக் காட்டுகின்றது.

இவ்வாறு சைவ சமயத்தையும் எமது பாரம்பரியத்தையும் காக்கவும் சமூக முன்னேற்றத்தை ஏற்படுத்தவும் இடைய றாது பாடுபட்ட ஸ்ரீமான் காசிப்பிள்ளை அவர்கள் 1936 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் இறைவனடி சேர்ந்தார். சிறந்த மேற்கத்தைய எழுத்தாளரான Leonard woolf என்பவர் தனது சுயசரிதையில் காசிப்பிள்ளை அவர்களை "One of the leading lawyer, a respectable & respected man of Jaffna" என்று குறிப்பிடுகின்றார். 1907 ஆம் ஆண்டு பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் கீழ்வரும் ஒவ்வொரு நாடுகள் தொடர்பான சரியான தரவுகளை திரட்டும் நோக்குடன் பிரித்தானிய அரசரின் ஆணைக்கு இணங்கவும் இலங்கைத் தேசாதிபதி சேர் ஹென்றி ஆர்தர் பிளேக் அவர்களின் நெறிப் படுத்தலுக்கு இணங்கவும் பதிப்பிக்கப் பட்ட "Twentieth Century Impressions of Ceylon" என்ற ஆவணத்தில் திருவாளர் காசிப்பிள்ளை பற்றிய விரிவான குறிப்பு ஒன்று பக்க இலக்கம் 787 இல் காணப்படுகின்றது. இது அன்றைய காலகட்டத்தில் அவர் பெற்றிருந்த பெருமைக்கும் சிறப்புக்கும் எடுத்துக் காட்டாகும்.

அடுத்ததாக இவரது சகோதரனான ஆறுமுகம் அவர்களின் புதல்வர்களான கதிரவேலு, கனகரத்தினம் மற்றும் பொன்னம்பலம் பற்றி குறிப்பிட வேண்டும். கதிரவேலு, கனகரத்தினம் ஆகியோர் எமது ஊருக்கு செய்த சேவைகள் அளப்பரியன. பொன்னம்பலம் அவர்கள் சிறந்த வைத்திய நிபுணராகத் தொழிற்பட்டார்.

## அமரர் ஆறுமுகம் கதிரவேலு அவர்கள்



ஆறுமுகத்திற்கும் இலட்சுமிப் பிள்ளைக்கும் மகனாக 1861 ஆம் ஆண்டு பிறந்த கதிரவேலு அவர்களும் காசிப்பிள்ளை அவர்களைப் போல பிரபலமான சட்டத் தரணியாக விளங்கினார். 1917 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முடிக்குரிய சட்டத்தரணியாக பதவி யேற்றார். பின்னர்

யாழ்ப்பாண வழக்கறிஞர் சங்கத்தின் தலைவராகவும் தெரிவு செய்யப்பட்டார். தொடர்ந்து மஜிஸ்ரேட் ஆகவும் மாவட்ட நீதிபதியாகவும் கடமை யாற்றினார். பின்னர் உயர் நீதிமன்ற நீதிபதியாகவும் சேவை புரிந்தார்.

**இவரே எமது அரியாலை சுதேசிய திருநாள் கொண்டாட்ட விழாவின் முதலாவது தலைவராவார்.** இவ் விழாவிற்கு "சுதேசிய திருநாள்" என்று பெயர் சூட்டியதன் மூலம் எமது பாரம்பரியத்தை கட்டிக்காக்க வேண்டி யதன் முக்கியத்துவத்தை அவர் குறிப் புணர்த்தியிருக்கிறார். கதிரவேலு அவர்கள் தனது சகோதரரான கனகரத்தினம் தலைவராக பொறுப் பேற்கும் வரை தொடர்ந்து 9 ஆண்டுகள் தலைவராக செயற்பட்டார். மேலும் இவரே 1919 ஆம் ஆண்டு அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தை ஸ்தாபித்தார். இந்த இரண்டு முயற்சிகளின் மூலம் எமது ஊரில் கலை மற்றும் விளையாட்டுத்துறைகள் பிற் காலத்தில் எழுச்சியுடன் வளர வித்திட்டார். அரியாலையில் ஒற்றுமையான உற்சாக மான சமூக கட்டமைப்பு ஒன்று தோன்று வதற்கு இவரது முயற்சிகளும் காரணமாக அமைந்தன என எண்ண முடியும்.

கதிரவேலு அவர்கள் தனது சிறிய தந்தையைப் போலவே சைவநெறியை வளர்ப்பதில் பெரும் ஆர்வமுடையவராக இருந்தார். 1889 செம்ரெம்பர் 11 ஆம் திகதி முதல் சைவ பரிபாலன சபையால் ஆங்கிலத்திலும், தமிழிலும் வாராந்தம் வெளியிடப்பட்டு வந்த இந்து சாதனம் (Hindu Organ) சஞ்சிகையை ஆரம்பிப் பதில் பெரும் பங்காற்றிய இவர் 1890 களில் அதன் பத்திராதிபராக (Editor) தொழிற்பட்டதோடு மக்களுக்கு பயன் படும் பல ஆழமான கருத்துக்கள் நிறைந்த கட்டுரைகளை எழுதி அந்த சஞ்சிகை வெற்றிகரமாக இயங்க வழி வகுத்தார் என இந்து சாதனத்தின் வெள்ளி விழா மலரில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்து சாதனத் தில் (இந்து வாழ்க்கை முறை) இவர் காட்டிய ஈடுபாட்டின் மூலம் இந்து சமய வாழ்க்கை முறைப்படி எம் மக்களை வாழ வைக்க வேண்டும் என்ற அவரது அவா புலப்படுகிறது.

எமது ஊரின் சமூக கட்டமைப்பை நிறுவுவதில் முன்னோடியாகத் திகழ்ந்த தைப் போல அரசியலிலும் எமது ஊரை முதன் முதலில் திரு. கதிரவேலு அவர்களே பிரதிநிதித்துவப்படுத்தினார் என்றால் மிகையாகாது. இன்று யாழ்ப்பாண மாநகரசபை என அறியப்படும் யாழ்ப்பாண உள்ளூராட்சி சபை 1907 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 14 ஆம் திகதி முதன் முதலாக அமைக்கப்பட்டபோது அதன் பிரதிநிதியாக தெரிவு செய்யப் பட்டார். தொடர்ந்து இரண்டு ஆண்டு களுக்கு ஒருமுறை நடத்தப்பட்ட தேர்தலில் 1915 ஆம் ஆண்டு வரை தெரிவு செய்யப்பட்டு 1917 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் காசிப்பிள்ளை அவர்களின் மகனான அருளம்பலம் அவர்கள் தெரிவு செய்யப்படும் வரை கடமையாற்றினார்.

பின்தங்கிய மக்களின் முன்னேற் றத்தில் அக்கறை கொண்டவரான திரு.கதிரவேலு அவர்கள் யாழ்ப்பாண மக்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்று வதற்காக "நண்பர்கள் சங்கம்" என்ற அமைப்பு ஏற்படுத்தப்பட்ட போது அதன் தோற்றுனர்களுள் ஒருவராக செயற் பட்டார். அரசாங்க உதவித் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டிராத அக்காலப் பகுதியில் ஏழைகளின் வாழ் வாதாரத்தை ஸ்திரப்படுத்த இச்சங்கம் பெரிதும் துணை செய்தது.

இவ்வாறு எம்மூர் மக்களின் சமூக முன்னேற்றத்திற்கும் எமது இந்து வாழ்க்கை முறையின் மீள் எழுச்சிக்கும் எம்மூர் மக்களின் அரசியல் பிரதிநிதித் துவத்தை தொடர்ந்து பேணுவதிலும் அயராது உழைத்த திரு. ஆறுமுகம் கதிரவேலு அவர்கள் தனது மக்கள் பணியை தனக்கு பின்னும் தொடந்து முன்னெடுக்கக் கூடிய வகையில் இரண்டு மகன்களையும் இரண்டு மகள்களையும் இவ்வுலகுக்கு தனது சந்ததியாக கொடுத்து **1928**ம் ஆண்டு இறைவனடி சேர்ந்தார். இவருக்கு அடுத்ததாக இவரது இளைய சகோதரரான திரு. ஆறுமுகம் கனகரத் தினம் அவர்களைப் பற்றி குறிப்பிட்டாக வேண்டும்.

## அமரர் ஆறுமுகம் கனகரத்தினம் அவர்கள்



காசிப்பிள்ளை அவர்களின் மூத்த சகோதரரான ஆறுமுகம் அவர்களுக்கும் இலட் சுமிப்பிள்ளை அவர்க ளுக்கும் மகனாக **1871** ஆம் ஆண்டு திரு. கனக ரத்தினம் பிறந்தார். இவர் யாழ் மத்திய கல்லூரி, கொழும்பு வெஸ்லி கல்லூரி என்பவற்றில் கல்வி கற்று தனது சட்ட மேற்படிப்பை இந்தியாவின் கல்கத்தா நகரில் மேற்கொண்டார். **1899** ஆம் ஆண்டு தனது கல்வியை முடித்த பின்னர் நாடு திரும்பிய இவர் தனது வாதத் திறமையால் பெரும் வழக்கறிஞரானார்.

மக்களை வழி நடத்துவதிலும், விழிப்பூட்டுவதிலும் பத்திரிகைகள் ஆற்றக்கூடிய பங்கை, பத்திரிகைகள் அதிகம் வெளிவராத அந்தக் காலப் பகுதியிலேயே நன்கு உணர்ந்திருந்த கனகரத்தினம் அவர்கள் **1909** ஆம் ஆண்டு “தேசாபிமானி” (Ceylon Patriot) என்ற பத்திரிகையை கொள்வனவு செய்து அதில் கல்விமான்கள் பலரது கட்டுரைகளை உள்ளடக்கி தானே அதன் பத்திராதிபராக தொழிற்பட்டு யாழ் மக்களின் தகவல் புரட்சிக்கு வித்திட்டார். தலை சிறந்த சமூக சீர்திருத்தவாதியான இவர் யாழ். இந்துக் கல்லூரி உட்பட பல இடங்களில் இந்து இளைஞர் சங்கம் போன்ற சங்கங்கள் சார்பாக உரையாற்றி வந்தமை பற்றிய செய்திகள் அக்காலப்பத்திரிகைகளில் இடம் பெற்றிருந்தன.

யாழ்ப்பாணம் உள்ளூராட்சி சபை, நகர சபையாக (UDC) **1923** ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தரமுயர்த்தப் பட்ட போது அதன் முதலாவது தவிசாளராக (Chairman) திரு.கனகரத்தி னம் அவர்களே தெரிவு செய்யப்பட்டார். தொடர்ந்து இன்றைய பாராளுமன்றத் திற்கு இணையாக அன்றிருந்த சட்ட நிருபண சபைக்கு **1924** ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் “வடமாகாணம் தெற்கு” தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். அந்தத் தேர்தலில் நாடு முழுவதிலிருந்தும் **34** பேரே மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஆனால் இன்றைய பாராளுமன்றத்தில் **196** பேர் நேரடியாக மக்களாலும் **29** பேர் நியமன அடிப்படையிலும் தெரிவு செய்யப்படுகின்றார்கள் என்பது குறிப் பிடத்தக்கது.

**1924** ஆம் ஆண்டு தொடக்கம் **1929** ஆம் ஆண்டு தான் இறக்கும் வரை சட்ட நிருபண சபை பிரதிநிதியாக இருந்த காலத்தில் முற்போக்கான பல முன் மொழிவுகளை மேற் கொண்டிருந்தார். அக்காலப்பகுதியில் ஆங்கில மொழிப் பாடசாலை, சுயமொழிப் பாடசாலை என இருவகையான பாடசாலைகள் இயங்கின. ஆனால் ஆங்கிலத்துடன் தமிழ் மற்றும் சிங்களம் போதிக்கப்படும் இரு மொழிப்

பாடசாலைகள் அமைக்கப்பட வேண்டும் என்ற கருத்தை 1926 ஆம் ஆண்டு பெப்பரவரி 19 ஆம் திகதி தான் முன்மொழிந்த கல்விக்கொள்கை தொடர் பான ஆணைக்குழு அமைக்க வேண்டும் என்ற தீர்மானத்தில் குறிப் பிட்டிருந்தார். அக்கருத்தை ஆராய்வ தற்காக அமைக்கப்பட்ட அரச கல்விக் குழு அன்னாரின் முன்மொழிவை ஏற்றுக் கொண்டது. அதன் விளைவாகவே பின்னாளில் இரு மொழிப் பாடசாலைகள் உருப்பெற்றன. தனது கருத்தை பேச்சளவில் நிறுத்தாத அன்னார் 1928.09.05 அன்று ஸ்ரான்லிக் கல்லூரி (கனகரத்தினம் மத்திய மகா வித்தி யாலயம்) என்ற இரு மொழிப் பாடசாலையை தனது சொந்த செலவில் ஸ்தாபித்தார்.

இலங்கையிலும் பல்கலைக் கழகங்கள் அமைக்கப்பட வேண்டும் என்று போராடிய இவர் முதன் முதலாக அமைக்கப்படும் இலங்கைப் பல்கலைக் கழகமானது யாழ்ப்பாணம் உட்பட நாட்டின் வெவ்வேறு பிரதேசங்களில் வளாகங்களைக் கொண்ட சமஷ்டிப் பல்கலைக்கழகமாக அமைய வேண்டும் என 1928 றிடல் ஆணைக்குழு விவாதத்திலும் சட்ட நிரூபண சபையில் ஆணித்தரமாக எடுத்தியம்பினார்.

மகாத்மா காந்தியின் கொள்கை களில் மிகுந்த பற்றுடையவரான கனகரத்தினம் அவர்கள் காந்தியடிகள் 1928 ஆம் ஆண்டு இலங்கைக்கு விஜயம் செய்தபோது அவருக்கு அரியாலை சித்தி விநாயகர் கோயில் வீதியில் பெரும் வரவேற்பளித்து பொதுக்கூட்டம் ஒன்றை யும் சிறப்பாக நடத்தினார். அதன் மூலம் இலங்கையில் மட்டுமன்றி இந்தியத் தலைவர்களிடத்திலும் அவருக்கு இருந்த செல்வாக்கு புலனாகின்றது. எமது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவின் தலைவராக கதிரவேலுவைத் தொடர்ந்து 1928, 1929 ஆம் ஆண்டு களில் செயற்பட்டார். இவ்வாறு எம்மக்களின் உயர்ச்சிக்காக பாடுபட்ட கனகரத்தினம் அவர்கள் 1929 ஆம் ஆண்டு இறைவனடி சேர்ந்தார்.

## அமரர் காசிப்பிள்ளை அருளம்பலம் அவர்கள்



காசிப்பிள்ளைக்கும் பார்வதிப்பிள்ளைக் கும் மகனாகப் பிறந்த திரு. அருளம்பலம் அவர்கள் தமது பாட சாலைக் கல்வியை யாழ் இந்துக் கல்லூரி யிலும் கொழும்பு றோயல் கல்லூரியிலும் மேற்கொண்டார். தொடர்ந்து சட்டக் கல்வியைப் பயின்று Advocate ஆனார். அதனால் 'அப்புக்காத்தர் அருளம்பலம்' என்றே ஊர் மக்களால் அறியப்பட்டார்.

திரு. கதிரவேலுவைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் உள்ளூராட்சி சபைக்கு 1917 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதி நடைபெற்ற தேர்தலில் வெற்றி பெற்றதன் மூலம் அரசியலுக்குள் பிரவேசித்தார். யாழ் மத்தி, யாழ் மேற்கு, யாழ் கிழக்கு என்ற 3 பிரிவுகள் (Ward) மட்டுமே கொண்டிருந்த அன்றைய யாழ்ப்பாண உள்ளூராட்சி சபையில் ஏனைய 2 பிரிவுகளிலும் கடும் போட்டி நிலவிய நிலையிலும் யாழ் கிழக்குப் பிரிவில் அருளம்பலம் அவர்கள் போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டார் எனில் அன்னா ரது புகழ் புலனாகிறது. இந்த யாழ் கிழக்கு பிரிவில் திருநெல்வேலி மேற்கு, நல்லூர், அரியாலை, கொழும்புத்துறை போன்ற பிரதேசங்கள் உள்ளடக்கப் பட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. தொடர்ந்து பல காலம் யாழ்ப்பாணம் உள்ளூராட்சி சபையிலும் 1923 ஆம்

ஆண்டு யாழ் மாநகர சபையாக தரமுயர்த் தப்பட்ட பின்னர் அச்சபையிலும் எமது ஊரைப் பிரதிநிதித்துவம் செய்தார்.

அக்காலப்பகுதியில் உலகளவில் பிரபல்யம் பெற்ற கூட்டுறவுத்துறையை யாழ்ப்பாணத்திலும் வளர்ப்பதில் ஆர்வம் கொண்ட இவர் யாழ்ப்பாண கூட்டுறவு இயக்கத்தின் செயலாளராகவும், கூட்டுறவு வங்கியின் செயலாளராகவும் செயற்பட்டார். சைவ ஆகம முறைகளை நன்கு கற்றறிந்த அருளம்பலம் அவர்கள் கோவில் விசாரணைக் கமிஷனிலும் அங்கம் வகித்தார். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் முகாமைத்துவச் சபையின் செயலாளராகவும் பதவி வகித்தார். தனது தந்தையாரைத் தொடர்ந்து ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தானத்தையும் ஸ்ரீ பார்வதி வித்தியாசாலையையும் திறம்பட நிர்வாகம் செய்தார். இளைஞர்களிடையே இந்து நெறிமுறைகளை வளர்க்க வேண் டும் என்ற பேரார்வம் கொண்ட இவர் பலகாலமாக சிறப்பாக வெளிவராதிருந்த "Young Hindu" என்ற சஞ்சிகையை C.N.தேவராஜன் என்பவருடன் இணைந்து 1919 இல் மெருகூட்டியதுடன் அதன் பத்திராதிபராகவும் சேவை புரிந்தார். இவ்வாறு இந்து மதத்திற்கும் எம் ஊரிற்கும் சேவையாற்றிய திரு. அருளம் பலம் அவர்கள் எமது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவின் தலைவராக 1930, 1931, 1933, 1935, 1936, 1937, 1938 ஆண்டுகளில் செயற்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

## அமரர் கதிரவேலு சிற்றம்பலம் அவர்கள்



திரு. திருமதி கதிர வேலு தம்பதி யருக்கு மகனாக திரு.சிற்றம் பலம் அவர்கள் 13 செப்டெம்பர் 1898 இல் பிறந்தார். இவர் தனது பாடசாலைக் கல்வியை கொழும்பு றோயல் கல்லூரியில் பயின்றார். இவர் 15 வயதிலேயே கேம்பிரிட்ஜ் சீனியர் பரீட்சையில் கணித பாடத்தில் அதிவிசேட சித்தியுடன் முதலாம் வகுப்பில் (First Class) சித்தியடைந்தார். பின்னர் மேற்படிப்புக் காக இங்கிலாந்து சென்ற இவர் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் கணிதத்துறையில் பட்டம் பெற்றார். அத்துடன் இங்கிலாந்தில் பிரபலமான வழக்கறிஞர் அமைப்பான "middle temple" இல் பரிஸ்ரர் (Parrister) ஆக உறுப்புரிமை பெற்றார்.

நாடு திரும்பிய இவர் 1923 ஆம் ஆண்டு சிலோன் சிவில் சேவை பரீட்சையில் சித்தியடைந்தார். இலங்கை அரசாங்கத்தில் பல பதவிகளை வகித்த இவர் மாத்தறை, அம்பாந்தோட்டை ஆகிய பிரதேசங்களில் மாவட்ட நீதிபதியாகவும் அரசாங்க அதிபராகவும் கடமையாற்றினார். சுதந்திர இலங்கையின் முதலாவது பாராளுமன்றத் தேர்தலில் மன்னார் தொகுதியில் சுயேட்சையாக போட்டியிட்டு வெற்றிபெற்று இலங்கையின் முதலாவது அமைச்சர வையில் தபால் தொலைத்தொடர்பு அமைச்சரானார். பின்னர் தொழில், தொழில் ஆராய்ச்சி, மீன்பிடி அமைச்சராகவும் கடமை யாற்றினார். தொடர்ந்து 1952 ஆம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலிலும் மன்னார் தொகுதியில் சுயேட்சையாக போட்டியிட்டு வெற்றி பெற்றார். சிற்றம்பலம் அமைச்சராக இருந்த காலப்பகுதியில் நாட்டு மக்களுக்காக பல அரிய திட்டங்களை செயற்படுத்தினார். இவர் கிராமந்தோறும் வானொலிப் பெட்டிகளை வழங்கியதைப் பற்றியும் கிராமப்புறங்களில் பல உப தபால் அலுவலகங்களை அமைத்து மக்கள் தொடர்பாடலை விஸ்தரித்ததைப்

பற்றியும் அன்றைய பாராளுமன்றத்தில் உணவு கூட்டுறவு மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சரான திரு. இரத்திநாயக்க அவர்கள் சிற்றம்பலம் அவர்களின் இரங்கலுரையில் குறிப்பிட்டிருந்தார்.

அன்னார் 1948 ஆம் ஆண்டு நடைபெற்ற 29 ஆவது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவின் தலைவராக செயற்பட்டார் என்பதையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும். இவ்வாறு தனது நிகரற்ற கல்விப்புலமையாலும் நிர்வாக மற்றும் அரசியல் திறமையாலும் எம் ஊருக்குப் பெருமை சேர்த்த திரு.சிற்றம்பலம் அவர்கள் 1964 பெப்ரவரி 3 ஆம் திகதி தனது 65 ஆவது வயதில் காலமானார். அன்னார் நாட்டுக்கு ஆற்றிய சேவையைப் பாராட்டி 2004 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் இலங்கை அரசாங்கம் அன்னாரின் ஞாபகார்த்தமாக தபால் தலை வெளியிட்டு அவருக்கு புகழ் சேர்த்தது.

## அமரர் கதிரவேலு பொன்னம்பலம் அவர்கள்

திரு. கதிரவேலுவின் இளைய மகனான பொன்னம்பலம் அவர்கள் தனது பாடசாலைக் கல்வியை கொழும்பு றோயல் கல்லூரியில் மேற்கொண்டார். பின்னர் சட்டக்கல்வி பயின்று தலைசிறந்த Advocate ஆனார். இளவயதிலிருந்தே அரசியலில் நாட்டமுடையவரான இவர் இலங்கை தேசிய காங்கிரஸின் வாலிபர் இயக்கத்தில் ஆரம்பத்திலிருந்தே செயற்பட்டார். திரு.கா.அருளம்பலத்தை தொடர்ந்து யாழ்ப்பாண நகர சபையில் எமது ஊரைப் பிரதிநிதித்துவப்படுத்திய பொன்னம்பலம் அவர்கள் யாழ்ப்பாண மாநகர சபையில் இரண்டாவது மேயராக தெரிவு செய்யப்பட்டார். இவர் மேயராக செயற்பட்ட காலப்பகுதியில் பொருளாதார ரீதியில் பின்தங்கிய மக்களின் முன்னேற்றத் துக்கு பெரும் பங்காற்றினார். யாழ்ப்பாண மாநகரத்துக்குட்பட்ட பிராந்தியத்தில் வடிகால் அமைப்புக்களை சிறந்த முறையில் சீரமைத்து தாழ்நில பகுதிகளில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்த பெரும் பாடுபட்டார். சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவை வழிநடத்து தலில் ஆர்வத்துடன் பங்குகொண்ட இவர் 1939 - 1943 ஆண்டு வரையும் பின்னர் 1950 ஆம் ஆண்டிலும் சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவின் தலைவராகச் செயற்பட்டார்.

திரு.கதிரவேலுவின் மருமகனான சின்னக்காசிப்பிள்ளை என்று அறியப்பட்ட காசிப்பிள்ளை அவர்கள் யாழ்ப்பாண மாநகர சபையின் 6 ஆவது மேயராகக் கடமையாற்றினார். இவர் எமது ஊருக்கு ஆற்றிய சேவைகளைப் பாராட்டும் முகமாகவே அரியாலை சனசமூக நிலையத்தில் அமைக்கப்பட்ட அரங்கிற்கு "காசிப்பிள்ளை அரங்கு" என பெயர் சூட்டப்பட்டது.

கதிரவேலு அவர்களின் இன்னொரு மருமகனான கந்தையா அவர்கள் அரியாலை சனசமூக நிலையத்தை ஸ்தாபிப்பதில் பெரும் பங்காற்றியதுடன் அதன் ஸ்தாபக தலைவராகவும் செயற்பட்டார். தலைசிறந்த வைத்திய நிபுணரான இவர் வடமாகாண சுகாதார அத்தியேட்சகராகவும் பணிபுரிந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

திரு. அருளம்பலம் அவர்களின் மகனான விஸ்வநாதன் அவர்களும் தமது மூதாதையரைப் போலவே சிறந்த சட்டத்தரணியாக விளங்கினார். தனது தந்தையாரைத் தொடர்ந்து ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தானத்தையும், ஸ்ரீ பார்வதி வித்தியாசாலையையும் திறம்பட

நிர்வகித்தார். அன்னார் எம் ஊருக்குச் செய்த சேவைகளை நினைவு கூறும் முகமாகவே அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தில் அமைந்துள்ள அரங்கிற்கு "விஸ்வநாதன் அரங்கு" எனப் பெயர் சூட்டப்பட்டது.

இவ்வாறு ஸ்ரீமான் காசிப்பிள்ளை அவர்களும் அவரைச் சார்ந்தோரும் எமது ஊரின் கட்டமைப்புக்கும் வளர்ச்சிக்கும் ஆற்றிய சேவைகள் அளப்பரியன. அவர்கள் எமக்காக உருவாக்கித்தந்த பாடசாலைகள், சனசமூக நிலையங்கள் என்பவற்றை பயன்படுத்தும் போதும் அவர்கள் உருவாக்கிவிட்ட விழாக்களை கொண்டாடும் போதும் அவர்களின் நோக்கங்கள் எம் அடி மனதில் நிலை பெற்றிருக்க வேண்டும். நாம் எமது பாரம்பரியத்தையும் கலாசாரத்தையும் கட்டிக் காக்கவேண்டும் என்ற எண்ணமும் நாம் இந்து தர்மத்தின்படி வாழ வேண்டும் என்ற அவாவும் அந்த நிறுவுனர்களின் உள்ளத்தில் இருந்தன என்பது அவர்களின் வரலாற்றைக் கற்கும்போது எமக்குப் புலனாகிறது. ஸ்தாபகர்களின் எதிர்பார்ப்பைப் பூர்த்தி செய்யும் படியாக செயற்படுவதே நாம் அவர்களுக்குச் செய்யும் நன்றிக் கடனாகும்.

**உசாத்துணை நூல்கள்**


1. "Martyn's notes on Jaffna" by "John H. Martyn" published in 1923 by American Ceylon mission press Tellippalai. Page 50,52,57,60,69,73,85,89,92,93,96,97, 101, 105,106,109,111,112, 118,124,131,239,247,257,293,310,327,332

2. "Dictionary of biography of the Tamils of Ceylon" by S.Arumugam page 12, 17, 28, 29,31

3. "Twentieth Century impressions of Ceylon" edited by Arnold wright published by Lloyd's Greater Britain publishing company Ltd in 1907, page 787

4. அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்டம் பவளவிழா மலர் (1994) பக்கம் 21, 22, 23, 35 - 40, 45, 46, 69, 70

5. யாழ் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய வைர விழா மலர் (1988) பக்கம் 6 – 10

6. யா/ அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை நூற்றாண்டு விழா மலர் பக்கம் xvii, 56-65, 73,74,75

# அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவில் தலைமைத்துவ சேவையை நல்கிச் சிவபதமடைந்த பெரியோரின் பெருமைகள்

தொகுப்பு :
அ. உபயசேகரம் B.A., Dip. in Edu.

## முகவுரை

*1919 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப் பட்ட இவ்விழாவின் முதல் தலைவர் சட்டத்தரணி ஆறுமுகம் கதிரவேலு தொடக்கம் விஸ்வநாதர் காசிப்பிள்ளை, ஆறுமுகம் கனகரத்தினம், பரமு கந்தையா, காசிப்பிள்ளை அருளம்பலம், கதிரவேலு சிற்றம்பலம், கதிரவேலு பொன்னம்பலம், ஆகியோரைத் தொடர்ந்து விழா சிறப்புற பல வழிகளிலும் தொண்டாற்றிய நம்மவர்களை இவ் நூற்றாண்டு வேளையிலே நினைவு கூர்வது எமது கடமை என்ற அடிப்படையிலே மலர்குழுவினர் தீவிரமாக இவ் முயற்சியில் ஈடுபட்டு தங்களால் இயன்றவரை இப்பணியைச் செய்துள்ளார்கள். நீத்தார் பெருமை என்ற தலையங்கத்துடன் வெளியிடப்பட்ட துண்டு பிரசுரத்தின் மூலமும் முகநூல் வாயிலாகவும் 15.05.2018 இற்கு முன்பாக இதுவரை காலமும் இவ்விழாவிற்காக பல்வேறு வழிகளிலும் அரும்பணியாற்றி மறைந்த எமது சேவையாளர்களின் விபரங்களை கோரியிருந்தோம். பலர் அதற்கு மதிப்பளித்து விபரங்களை தந்துதவி யுள்ளார்கள். அவர்களுக்கு எமது நன்றி கள். அந்த அடிப்படையில் இந்த செயல் பாடுகளை முன்னெடுத்துள்ளோம். இது பற்றி உங்கள் அபிப்பிராயங்களையும், ஆலோசனைகளையும் எழுத்து மூலம் எதிர்பார்க்கின்றோம். தேவையேற்படும் பட்சத்தில் அவற்றை ஆராய்ந்து சீர்செய்து புதிய இணைப்பை எதிர்வரும் காலங்களில் வெளியிட சிபார்சு செய்து ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப் படும் என்பதை தெரிவித்து நிறைவு செய்கின்றோம்.*

*மலர்குழுவினர்*

## அமரர் சு. செ. மகாதேவா அவர்கள் (வெள்ளிவிழாத் தலைவர்)



*மிகவும் நேர்மை மிக்க யாழ். மாநகர சபை மேயர் என அறியப்பட்ட இவர் எமது அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா வின் வெள்ளி விழா தலைவராக விளங்கியவர். சுதேசிய சுதந்திர உணர்வு கொண்ட சுதேசிய வாதியாக கருதப் பட்டவர். தமிழர்களின் அடையாளம் பாதுகாக்கப்பட வேண்டும். அவர்களின் பூர்வீக பிரதேசங்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற நோக்கம் கொண்டவர். இதனால் இலங்கை தமிழ் அரசுக் கட்சியுடன் இணைந்து பல அறவழிப் போராட்டங் களில் ஈடுபட்டு தடுப்புக் காவல் தண்டனையை அனுபவித்தவர். சிறந்த சட்டத்தரணியான இவர் தனது தொழிலில் மிகவும் பிரபல்யம் வாய்ந்த வராக விளங்கினார். திரிகரண சுத்தியோடு வாழ்ந்த இப்பெரியார் தனக்கு சரி*

எனப்பட்டதைச் சொல்லவும் செய்யவும் ஒருபோதும் தயங்காதவர். பக்கச்சார்பற்ற நடுநிலையாளர். இதனால் அரியாலை பேரூரின் எல்லாப் பகுதியினராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட தலைவராக விளங்கினார். சுய கௌரவம், தன்மானம், தனித்துவம் மிக்க கொள்கைவாதியாக வாழ்ந்தார். யா/ பரியோவான் கல்லூரி, இலங்கை சட்டக் கல்லூரியின் பழைய மாணவன்.

அரியாலை பிரப்பங்குளம் மஹா மாரி அம்மன் கோயில் பரிபாலன சபைத் தலைவராக நீண்டகாலம் பணிபுரிந்து கோவில்களின் பல்வேறு திருப்பணிகள் சிறப்புற பெரிதும் உழைத்தவர். இவருடைய காலத்திலேயே மகோற்சவம் ஆரம்பிக்கத் திருவருள் பாலித்தது. அரியாலை சனசமூக நிலையத்திலும் தலைவராக விளங்கி அரும்பெரும் தொண்டாற்றியுள்ளார். சுதேசிய திருநாட் கொண்டாட்டங்கள் விமரிசையாக நடைபெறுவதற்கு ஊக்கத்துடன் உழைத்த சுதேச வாதியாவார்.

யாழ்ப்பாண மாநகரில் இயங்கிய பல தொண்டு நிறுவனங்களிலும் வரியிறுப்பாளர் சங்கம், நுகர்வோர் பாதுகாப்புக் குழு, பலநோக்குக் கூட்டு றவுச் சங்கம் போன்றவற்றில் நீண்டகால உறுப்பினராக, தலைவராக இருந்து செயல்பட்டவர். யாழ்ப்பாணம் நல்லூர் பகுதிகளில் அரசியல் தலைமைத் துவத்தை தீர்மானிக்கும் சக்திகளில் மிகவும் காத்திரமான பங்களிப்பை செய்த தலைவராவார். அரியாலையில் 20.11.1912 இல் பிறந்த இவர் 14.06.1987 இல் சிவபதமடைந்து விட்டார்.

## அமரர் பொ. காசிப்பிள்ளை அவர்கள் (26 ஆவது விழாத்தலைவர்)

அரியாலையில்பிறந்த காசிப்பிள்ளை அவர்கள் சிறந்த சட்டத்தரணியாக விளங்கியவர். காணி புலங்கள் உள்ள நிலச் சுவாந்தரான இவர் செல்வச் செழிப்பில் வாழ்ந்ததால் சட்டத்தரணித் தொழில் வருமானத்தை எதிர்பார்த்து வாழ்ந்தவர் அல்ல. அவர்களுடைய உறவினர்களைப் போலவே சைவசமயத்தில் மிகவும் இறுக்கமான அனுட்டானங்களை கடைப் பிடிப்பவராக விளங்கினார். யாழ்ப்பாண மாநகர சபைக்கு அருகாமையிலேயே வாழ்ந்து வந்தவர். யாழ்ப்பாண நகரப் பகுதியில் மிகுந்த செல்வாக்குடன் விளங்கியவர். யாழ்ப்பாண நகரை அண்டிய பகுதியில் இயங்கிய பல சங்கங்களின் தலைவராகச் செயற்பட்ட வர். இச்சங்கங்களின் நிர்வாக சபை கூட்டங்கள் அநேகமாக இவருடைய வீட்டிலேயே நடைபெறுவது வழக்கமாகும். அவர்களை அன்புடன் ஆதரிப்பது இவரின் இயல்பாகும். மேலும் யாழ்ப் பாணத்திற்கு வருகைதரும் தென் இலங்கைத் தலைவர்களும் சரி, வெளிநாட்டு பிரதிநிதிகளும் சரி அவர்களை உபசரிப்பதிலும் கலந்துரையாடல்களை மேற்கொள்ள ஒழுங்கு செய்வதிலும் ஆர்வத்துடன் ஈடுபடுபவர். யாழ்ப்பாண மாநகர சபைக்கு மேயராக கடமை யாற்றிய இவர் யாழ்ப்பாண நகர் அபிவிருத்தித் திட்டங்களை சிறப்பாக மேற்கொண்ட நேர்மையான மேயர் எனப் பலராலும் பாராட்டப்பட்டவர். அரியாலை ஐக்கிய கழக விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி வாகை சூடும் போதெல்லாம் வீரர்களைக் கௌரவித்து விருந்துபசாரங்களை நடாத்தி உற்சாகப் படுத்துபவர். அரியாலை சனசமூக நிலையத்திலுள்ள திறந்தவெளி அரங்கிற்கு காசிப்பிள்ளை அரங்கு என பெயர் சூட்டிக் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத் தக்கது. இப்பெரியார் சிறப்புடன் வாழ்ந்து சிவபதம் அடைந்து விட்டார்.

## அமரர் செல்வி கனகம்மா சரவணமுத்து (சற்குணம் அம்மா) அவர்கள் (32 ஆவது விழாத்தலைவர்)



எமது 32 ஆவது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா வின் தலைவியாக விளங்கிய இவர் 1913 ஆம் ஆண்டில் அரியா லையில் பிறந்தவர். தனது ஆரம்பக் கல்வியை அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலையிலும், இடைநிலைக் கல்வியை சுண்டிக்குளி மகளிர் கல்லூரியிலும், உயர்கல்வியை தமிழ்நாடு சென்னைப் பல்கலைக்கழகத்திலும் கற்று விஞ்ஞானப்பட்டதாரியாக விளங்கினார். ஆசிரியராக தனது தொழிலை ஆரம்பித்த இவர் பின் விரிவுரையாளராக, அதிபராக, பாடசாலை பரிசோதகராக பணி புரிந்தவர். குறிப்பாக வட இந்து மகளிர் கல்லூரியில் இவர் அதிபராகக் கடமையாற்றிய காலத்தில் பெரு வளர்ச்சியடைந்தமையை அவ்வூர் மக்கள் இன்றும் நினைவு கூருகின்றனர்.

மாணவியாக இருந்த காலத்தி லேயே கலை, விளையாட்டுத் துறைகளில் ஆர்வம் காட்டி பல பரிசில்களைப் பெற்றுக் கொண்டவர். நெஞ்சுரம் கொண்ட இவர் தான் எடுத்துக் கொண்ட காரியத்தை மற்றவர்கள் போற்றத்தக்க விதமாக செய்து முடிக்கும் வல்லமை கொண்டவராக விளங்கினார்.

அரியாலை ஸ்ரீசித்தி விநாயகர் மேல் தீராத பக்தி கொண்ட இவர் அவர்களின் பரம்பரையினரைப் போலவே சைவத்தையும், தமிழையும் வளர்ப்பதில் அக்கறையுடையவராக விளங்கினார். கோவில் சொத்து சிவச் சொத்து அபகரிக்கக் கூடாது அதைப் பேணி தமது சொத்துப்போல் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் தீவிரமாக உழைத்த பெண்மணியாகும். அரியாலை இளைஞர் இந்து மா மன்றத்தின் தலைவராக நீண்ட காலம் பணியாற்றியவர். இவருடைய காலத்தில் அரியாலை நீர்நொச்சித்தாழ்வு ஸ்ரீசித்தி விநாயகர் ஆலயத்தில் திருஞானசம்பந்த நாயனார், திருநாவுக்கரசு நாயனார், சுந்தமூர்த்தி நாயனார், மாணிக்கவாசக சுவாமிகள் ஆகியோர்களின் குருபூசை தினங்களில் இரவு நிகழ்வுகளை ஒழுங்கு படுத்தி கலை நிகழ்வுகளையும் தலை சிறந்த சைவ சித்தாத்தங்களில் தேர்ச்சி பெற்ற அறிஞர்களை அழைத்து சொற் பொழிவுகளை நடத்தியும், இளைஞர் களிடையே சைவ சமயப் போட்டிகளை நடத்தியும், அவர்களுக்கு விலையுயர்ந்த பரிசில்களை வழங்கியும் சைவத்தையும், தமிழையும் எமதூரில் வளர்க்க அயராது உழைத்த சேவையாளராவார். அரியாலை மாதர் சங்கத்தை உருவாக்குவதில் முன்னின்று உழைத்த தலைவி 21.01.1992 இல் இறைபதம் எய்தினார்.

## அமரர் கந்தையா தில்லையம்பலம் அவர்கள் (34 ஆவது விழாத்தலைவர்)



02.11.1911 இல் அரியாலையில் பிறந்த அமரர் கொழும்பு சென் தோமஸ், சென் பீற்றேஸ் கல்லூரிக ளின் பழைய மாணவ ராவார். ஆங்கில மொழியிலும் லற்றீன் மொழியிலும் தேர்ச்சி பெற்ற அறிஞராவார். கேம்பிறிச் மற்றிக்குலேசன் சித்தியடைந்த இவர் சட்டக்கல்வி பயின்று சட்டத்தரணியானார். கல்லூரியில் படித்த காலத்தில் உதை பந்தாட்ட அணியில் அங்கம் வகித்து


அணியின் வெற்றிக்காக உழைத்தவ ராவார். அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியா சாலையின் மனேசராகவும் பணிபுரிந்து அதன் அபிவிருத்திப் பணிகளில் பங்கு கொண்டு உழைத்தவர். பாடசாலையின் வளர்ச்சிக்கு ஆதரவும் அனுசரணையும் வழங்கிய உத்தமனாவார். கலை ஆர்வம் மிக்க இவர் சிவதாண்டவம் ஆடும் வல்லமை படைத்தவராவார். சதுரங்கம் ஆடுவதில் வல்லமை படைத்தவர். சைவ சமய சித்தாந்த நூல்களைக் கற்று தெளிவு பெற்றவர். திருக்கோவில்களில் திருவெம் பாவையை பாடித் தொண்டாற்றியவர். அரியாலையில் பல சங்கங்களில் முக்கிய பதவிகளை வகித்த மிகுந்த புத்திசாலியான இவர் சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா தலைவராக தெரிவு செய்யப்பட்டு விழாவைச் சிறப்பாக நடத்தி பலரதும் பாராட்டுக்களைப் பெற்றவர். இவர் புரக்டராகவும் நொத்தாரிஸ் ஆகவும், கூட்டுறவுப் பரிசோதகராகவும் பணி புரிந்தவர். மேலும் அரியாலை சனசமூக நிலையம் ஆரம்பிக்கப்பட்டபோது கட்டடப் பொருட்களை இலவசமாக வழங்கிய பெருந்தகையாவார். 03.10.1966 இல் இவ்வுலக வாழ்வை நீத்து சிவனடி சேர்ந்தார்.

## அமரர் இராசா புறூடி அவர்கள் (37 ஆவது விழா தலைவர்)



பெருஞ்செல்வந் தனும் பெருந் தோட்ட உரிமையாளராகவும் திகழ்ந்த இவர் மிகவும் அடக்க சுபாவம் கொண்டவராக விளங் கினார். பதவிகளைப் பெரிதும் விரும்பாது தனது தொழிலைச் சிறப்பாகச் செய்வதி லேயே கண்ணும் கருத்துமாக விளங்கிய வர். தனது பரம்பரையினரின் காணிகளில் ஒரு பகுதியை பொதுநல சேவைக்காக வழங்குவதில் ஆர்வத்துடன் உழைத்தவர். அரியாலை முதலியார் வீதியில் இறுதிக் காலத்தில் வாழ்ந்த இவருடன் அளவளாவு வதற்காகவும், ஆலோசனைகளைப் பெறு வதற்காகவும் பலர் அவரின் இல்லத்திற்குச் செல்வது வழக்கமாகும். வருபவர்களை இன் முகத்துடன் அழைத்து வரவேற்கும் பண்பு கொண்டவர். உள்ளூர் முரண் பாடுகள் குடும்பத் தகராறுகளை மிகவும் கண்ணியத்துடன் புத்தி சாதுரியமாகத் தீர்த்து வைப்பதில் வல்லமையுடைய வராக விளங்கிய இவர் 37 ஆவது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவின் தலைவராக தெரிவு செய்யப்பட்டுக் கௌரவிக்கப்பட்டவர். இவர் 1911 ஆம் ஆண்டின் சென். ஜோண்ஸ் கல்லூரியின் எறிபந்தாட்ட அணியின் தலைவராக செயல்பட்டார். அரியாலையில் பிறந்து வாழ்ந்த இவர் இறைபதம் அடைந்து விட்டார்.

## அமரர் சி. பொன்னம்பலம் அவர்கள் (40 ஆவது விழா தலைவர்)



சிறந்த சமூக சீர் திருத்தவாதியாகிய அமரர், 01.11.1908 இல் அரியாலையில் பிறந்து 02.04.1998 இல் சிவபதமடைந்து விட்டார். இவர் ஆசிரியராக, அதிபராக பணி புரிந்து ஓய்வு பெற்றவர். தனது இளம் வயதில் மிகவும் துடிப்புமிக்க சமூக சேவையாளராக விளங்கியவர். யாழ்ப் பாணம் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தின் புகழ்பூத்த மீயுயர் ஸ்ரீமான் ஆறுமுகம் சோமசுந்தரம் (A.சோமர்) அதிபருடன் இணைந்து அவரது வலதுகரம் போல் திகழ்ந்து அக்கல்லூரியின் வளர்ச்சியுடன் ஒன்று

கலந்து பணி புரிந்தவர். கற்பித்தலில் ஜாம்பவானாகத் திகழ்ந்த இவர் பல வகுப்புக்களுக்குப் பூமி சாஸ்திர புத்தகங்களை வெளியிட்டவர். இதனால் மாணவர்கள் அத்துறையில் சிறப்பான அறிவைப் பெற வழிவகுத்தவர். விடுதி ஆசிரியராக இருந்து பல்வேறு பிரதேசங்களில் இருந்து வந்த சிறு பிராய பிள்ளைகளை தாயைப்போல் அர வணைத்து அன்பு காட்டியவர். அரியாலை நீர்நொச்சித்தாழ்வு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தின் முகாமையாளராகப் பணி புரிந்தவர். அமரர் தோழர் அ.விஸ்வநாதன் அவர்களால் உருவாக்கப்பட்ட பரிபாலன சபையின் முதல் தலைவராக விளங்கி கோவில் வளர்ச்சிக்கு அரும்பெரும் தொண்டுகள் புரிந்தவர். அரியாலை ஸ்ரீ சத்திய சாய் பாபா அமைப்பை உருவாக்கி பலரை நல்நெறியில் செல்ல வழிவகுத்தவர். ஆத்மீக ஞானியான இவர் அரியாலை இளைஞர் இந்து மாமன்றத்தை சம்பிரதாய பூர்வமாக 1973 ஆம் ஆண்டு விஜயதசமி அன்று தொடக்கி வைத்த பெருமைக்குரியவர். 40 ஆவது சுதேசிய திருநாள் கொண்டாட்ட விழாவின் தலைவராக தெரிவு செய்யப்பட்ட பெருமைக்குரியவராவார்.

## அமரர் இளையதம்பி முத்தையா அவர்கள் (41வது விழாத் தலைவர்)



இவர் சின்னத் தம்பி இளையதம்பி ஆச்சிக்குட்டி தம்பதி களுக்கு மகனாக 1909 இல் சித்திரை வருடப் பிறப்பன்று பிறந்தவர். அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியா சாலை, யாழ் பரி.யோவான் கல்லூரி, யாழ் சம்பத்தரிசியார் கல்லூரி ஆகிய வற்றில் கல்வி பயின்று தனது 17ஆவது வயதில் இலங்கை தொலைத்தொடர்பு திணைக்களத்தில் இணைந்து கொண்டார். பின்னர் இலண்டன் சென்று றேடியோ இலத்திரனியல் துறையில் பட்டம் பெற்றுத் திரும்பினார். இவ்வாறு பட்டம் பெற்ற முதலாவது இலங்கையர் இவரே. பின்னர், வடமாகாண பிரதம தொலைத் தொடர்பு பொறியியலாளராகப் பதவி வகித்து 1969 அம் ஆண்டில் ஓய்வு பெற்றார்.


தனது நண்பன் மயிலு அவர்க ளுடன் இணைந்து அரியாலையில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தை இவர் வளர்த்தார். இவர்களின் முயற்சியால் தபால்கட்டைச் சந்தையில் ஒரு கைத்தறி நிலையம் நிறுவப்பட்டது. இச்சங்கத்தின் தலைவராக முத்தையா அவர்கள் பல வருடங்கள் பணியாற்றினார். குளங்களை ஆழமாக்கும் பணிகளில் இளைஞர்களை வேலைக்கு அமர்த்தி அவர்களுக்கு நீர்ப்பாசனத் திணைக்களத்திலிருந்து ஊதியம் பெற்றுக் கொடுத்தார். அரியாலை சரஸ்வதி நூல் நிலையத்தின் தலைவராக இருந்து அதன் மின்னி ணைப்பைத் தன் செலவில் செய்து முடித்தார். தொடர்ந்து அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தின் தலை வராகப் பணிபுரிந்து எமது வீரர்களுக்கு ஊக்கம் கொடுத்தார். 1960 ஆம் ஆண்டு இடம்பெற்ற 41 வது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவின் தலைவராக அரும்பணியாற்றினார். மேலும் ஊர் மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க யாழ் மாநகரசபையின் உறுப்பினர் பதவிக்குப் போட்டியிட்டு இரு தடவை கள் தெரிவானார். 10.12.2002 இல் லண்ட னில் சிவபதமடைந்து விட்டார்.

## அமரர் மதுரநாயகம் புறுடி அவர்கள் (A.M புறுடி) (42வது விழாத் தலைவர்)




அரியாலையில் பிறந்த மதுரநாயகம் புறுடி அவர்கள் சிறந்த கல்விமானாவார். வட்டுக்கோட்டையில் விரிவுரையாளராக நீண்டகாலம் பணி புரிந்த முதுமாணிப் பட்டதாரியாவார். ஆங்கிலக் கல்வியில் சிறந்த புலமை பெற்ற இவர் புறுடி வீதியில் அமைந்துள்ள தனது வீட்டில் சூழவுள்ள பிள்ளைகட்கு இலவசமாக ஆங்கிலக்கல்வியைப் போதித்து பலருக்கு அரசாங்கத்தில் தொழில் புரியும் வாய்ப்பை ஏற்படுத்தியவர். மிகவும் கம்பீரமான அகன்ற மார்புடைய தோற்றத்தையுடைய இவர் வேட்டி நஷனல் அணிவதில் பெரும் விருப்புடைய வர். அரியாலையில் பொது ஸ்தாபனங் களைத் ஸ்தாபிப்பதிலும், தலைமை வகிப்பதிலும் பெரும் பங்காற்றியவர். உள்ளூராட்சி மன்ற அரசியலில் முக்கிய பங்கு வகித்தவர். கொழும்பு அரசியல் தலைவர்களுடனும், கல்விமான்களுட னும் நிர்வாக உயர் அதிகாரிகள் பலருடன் தொடர்புடையவர் அவர்க ளால் நன்கு அறியப்பட்டவர். 42 ஆவது அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவின் தலைவராக தெரிவு செய்யப்பட்டு பணிபுரிந்த இவர் அமரராகி விட்டார்.

## அமரர் E.K குமரையா அவர்கள் (43 ஆவது விழாத் தலைவர்)



அரியாலை ஐக்கிய கழகத்தின் நீண்ட காலம் செயலாள ராகப் பணிபுரிந்த இவர் 1926 யூன் மாதம் 21 ஆம் திகதி பிறந்தவர். யாழ்ப் பாண செயலகத்தில் கட்டட மேற் பார்வையாளராகச் சேவையாற்றி இளைப் பாறியவர். பல அரசாங்க அதிபர்களாலும் பாராட்டப்பட்ட உத்தியோகத்தராவார். யாழ் மாவட்ட உதைபந்தாட்ட லீக்கில் பல பதவிகளை வகித்த இவர் யாழ் மாவட்டத்தின் உதைபந்தாட்ட வளர்ச்சிக்குத் தன்னை முழுமையாக அர்ப்பணித்த செயல்வீரராவார். சிறந்த கவர்ச்சிகரமான மத்தியஸ்தராக விளங்கியவர். எல்லோரிடமும் அன்பாக வும், பண்பாகவும் பழகும் இயல்பு கொண்டவர். நிமிர்ந்த கம்பீரமான தோற்றமுடைய இவர் பல நாடகங்களில் சிறப்பான பாத்திரங்களை ஏற்றுத் தத்துரூபமாக நடித்துப் புகழ் பெற்றவர். குறிப்பாக திருவிளையாடல் நாடகத்தில் இவர் சிவனாகத் தோன்றி ஆடிய சிவதாண்டவம் நினைவு கூரத்தக்கது. 43 ஆவது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாத் தலைவராக தெரிவுசெய்யப் பட்டவர். தொடர்ச்சியாக இவ்விழாக்கள் சிறப்பாக நடைபெற ஒத்துழைப்பு வழங்கியவர். அரியாலையில் உதை பந்தாட்டத்துறை வளர்ச்சி அடைய பல வழிகளிலும் சேவை புரிந்த பெருமக னாவார். இவர் இறைவனடி சேர்ந்து விட்டார்.

## அமரர் K.S. நடராசா அவர்கள் (45 ஆவது விழா தலைவர்)



யாழ் மாநகர சபையின் அரியாலை வட்டாரத்தின்கௌரவ அங்கத்தவராக விளங் கிய இவர் அரியாலை யில் பிறந்த பெருமக னாவார். மிகவும் எளிமையான இனிமை யான வாழ்க்கை நெறியை மேற் கொண்டவர். அரியாலை ஸ்ரீ சித்தி

விநாயகர் மேல் தளராத நம்பிக்கை யுடையவராக விளங்கினார். தினமும் அதிகாலைப் பூசைக்கு வந்து விட்டுத் தான் தனது கடமைகளை ஆரம்பிக்கும் பாங்குடையவராக விளங்கினார். எந்நேரமும் எவ்விடத்திலும் எவரும் சந்தித்துப் பேசவும், உதவிகளைப் பெறவும் வாய்ப்பான பெருமையுடைய மக்கள் தொண்டனாக விளங்கினார். தினமும் யாழ் மாநகர சபை உத்தியோகத்தர்கள் போவது போல் இவரும் செல்லும் வழக்கமுடையவராகவும் மாநகர சபையின் பல குழுக்களின் தலைவராகவும் பணிபுரிந்து யாழ்ப்பாண மாநகரத்தின் செழிப்புக்கும், அபிவிருத்திக்கும் அயராது உழைத்த உத்தமராவார். அரியாலை வட்டாரத்தின் மின்சார தேவையைப் பூர்த்தி செய்வதில் அக்கறையுடையவராக விளங்கியவர். ஒழுங்கைகள் பிரிப்பதிலும், செப்பனிடுவதிலும் ஆர்வத்துடன் பணியாற்றிய இவர் 45 ஆவது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவின் தலைவராக தெரிவுசெய்து கௌரவிக்கப் பட்ட இவ் பெருமைக்குரியவர் அரியா லையில் பிறந்து வாழ்ந்து சிவபதமடைந்து விட்டார்.

## அமரர் கலாநிதி தாமோதரம் சோமசேகரம் அவர்கள்



1934 இல் அரியா லையில் பிறந்த இவர் அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை, யாழ்ப்பாண இந்துக் கல்லூரியின் பழைய மாணவராவார். இவர் பேராதனைப் பல் கலைக்கழகத்தின் கணிதத்தில் விஞ்ஞானச் சிறப்புப் பட்டத்தைப் பெற்றவர். நில அளவையாளராக சேவையில் சேர்ந்தார். பின் இலண்டன் கேம்பிரிஜ் பல் கலைக்கழகத்தின் முது நிலைப்பட்டம் பெற்றவராவர். 1967 இல் நில அளவை அத்தியாட்சராக பதவி உயர்வு பெற்றார். 1973 இல் பிரதி நில அளவை நாயகமாக பதவி வகித்தவர். அமெரிக்க ஒரியோ பல்கலைக்கழகத்தில் முதுமாணிப் பட்டத்தைப் பூர்த்தி செய்தவர். இலங்கை வரைபடத்தைத் தயாரிக்கும் குழுவின் மேற்பார்வையாளராகக் கடமையாற்றிய வர். இவரின் இப்பணிக்காக "லங்கா சிரோன்மணி" என்ற கௌரவ பட்டம் இவருக்கு வழங்கப்பட்டது. 1991 இல் யாழ்ப்பாண பல்கலைக்கழகம் இவருக்கு கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கி கௌரவித்தது. நில அளவை நாயகமாக பதவி வகித்த இவர் 2010 இல் அமர ரானார். இவர் இலங்கை தொழில்சார் சம்மேளத்தின் தலைவராகவும், அரச பொதுச்சேவை ஆணைக்குழு உறுப்பின ராகவும் கனேடிய நாட்டின் தொழில்சார் விற்பனையாளர் சங்க உறுப்பினராகவும் பணியாற்றிய பெருந்தகையாவார்.

தனது மாணவப் பருவத்தில் அரியாலை சுதேசிய திருநாட் கொண் டாட்ட வைர விழாவின் தலைவ ராகவும் செயலாற்றியவர். அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் தலைவ ராகக் கடமையாற்றியவர். அரியாலை மத்திய விளையாட்டுக் கழகத்தின் ஸ்தாபகரில் ஒருவரான இவர் மிகவும் சுதேசிய உணர்வும், தீர்க்க சிந்தனையுமுடைய வராகவும் விளங்கினார். விளையாட்டு மைதானத்தை நல்லூர் பிரதேச சபை யிடம் ஒப்படைத்தால் அரச நிதியிலிருந்து அபிவிருத்தி செய்யலாம் என சிலர் கூட்டத்தில் அபிப்பிராயம் தெரிவிக்கப் பட்டபோது அதை ஆவேசமாக எதிர்த்து அப்படி செய்யக் கூடாது. அம் மைதானம் என்றென்றும் எமது கையிலேயே இருக்க வேண்டும். எமது சுதேசிய திருநாட்

கொண்டாட்ட விழாவுக்காக உருவாக்கப் பட்ட மைதானம் எமது சொத்து என்று கூறியவர்.

## அமரர் தம்பிப்பிள்ளை சோமசேகரம் அவர்கள் (49வது விழாத் தலைவர்)

அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாக்களில் நாடகங்கள் நடித்த அருச்சுனன் தம்பிப்பிள்ளை என அன்பாக அழைக்கப்படும் தம்பிப்பிள்ளை அவர்களின் மகனாக அரியாலையில் பிறந்த இவர் மிகவும் இனிமையான மனிதர். மிக இளம் வயதிலேயே எழுதுவினைஞராக அரச சேவையில் சேர்ந்த இவர் படிப்படியாக உயர்ந்து உதவி வருமானவரி பணிப்பாளராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றவர். அரியாலை சனசமூக நிலையத்தின் நீண்டகால செயலாளராகப் பணியாற்றி அந்நிலையத்தின் வளர்ச்சிக்குப் பெரிதும் பாடுபட்டு உழைத்தவர். அவர் யாழ்ப்பாணத்தில் பணியாற்றிய காலத்தில் காலையும், மாலையும் அரியாலை சனசமூக நிலையத்துக்கு வந்துவிட்டு போகும் கடமையுணர்ச்சியுள்ளவர். மிகவும் நகைச்சுவையாகப் பேசும் இவர் இளைஞர் முதல் முதியவர் வரை எல்லோரையும் கவர்ந்திழுக்கும் வல்லமை படைத்தவர். அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தில் ஆண்டு தோறும் தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் தினத்திற்கு முதல் நாள் நடைபெறும் ஆலோசனைக் கூட்டத்திற்கு நீண்ட காலமாக தற்காலிகத் தலைவராகப் பணிபுரிந்து எல்லோரையும் கட்டுப் படுத்தி நடப்பாண்டுக்கான நிர்வாகத்தைத் தெரிவுசெய்து சிறப்பாக விழாக்கள் தொடர்ச்சியாக நடைபெற உழைத்தவர். 49 ஆவது சுதேசிய திருநாள் கொண்டாட்ட விழாவின் தலைவராக தெரிவு செய்யப் பட்ட பெருமகனாவார். அரியாலையில் பிறந்து வாழ்ந்த இவர் சிவபதமடைந்து விட்டார்.


## வைத்திய கலாநிதி விசுவநாதர் ஆறுமுகம் சிற்றம்பலம் அவர்கள்



அரியாலையில் பிறந்த வைத்திய கலாநிதி, பரியோவான் கல்லூரியில் கல்வி கற்று கொழும்பு பல் கலைக்கழகத்தில் மருத்துவப் படிப்பை மேற்கொண்டு வைத்திய கலாநிதிப் பட்டம் பெற்றவராவார். பெரிய பிரித்தானியாவில் மேற்படிப்பை மேற்கொண்டு மனநலத்துறையில் வைத்திய நிபுணராக இலங்கை திரும்பி கொழும்பில் அங்கொடை வைத்திய சாலையில் வைத்திய நிபுணராக கடமை யாற்றியவர். தனது துறையில் புலமைசார் அறிவு பெற்றவர். இதனால் தனது தொழிலில் வெற்றிக்கொடி நாட்டிய பெருமைக்குரியவராக அடையாளம் காணப்பட்டார். மனம் நலிவுற்ற பலருக்கு வாழ்வழித்த பரோபகார சிந்தை படைத்த நல்ல மனிதராக விளங்கினார். மிகவும் இரக்க சிந்தையுடைய இவர் எவருடனும், அன்பாகவும், பண்பாகவும், பொறுமை யாகவும் பழகும் தன்மையுடையவராக காணப்பட்டார். கொழும்பில் இவரது வீடு வந்தோரை வரவேற்று வாழ வைக்கும் இலட்சுமி கடாட்சம் நிறைந்த இல்லமாக விளங்கியது. விருந்தோம்பல் பண்புடைய கலாநிதி சகலரையும் இன் முகத்துடன் வரவேற்று கௌரவிக்கும் மாட்சி பொருந்தியவர். அரியாலை நூல் நிலையங்கள், கோவில்கள், சமூக அமைப் புக்களுக்கு தாராள சிந்தையுடன் நன் கொடைகள் வழங்கி ஊக்குவிக்கும் கர்மவீரராக விளங்கியவர். அரியாலை மக்கள் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப் பட்ட மக்கள் தலைவராக விளங்கியவர். இவரின் கல்வியறிவையும் சேவை மனப் பான்மையும் பாராட்டிய எமது மக்கள்

சுதேசிய திருநாட் கொண்டாட்ட பொன்விழாவுக்கு ஏகமனதாக தலைவராக தெரிவு செய்து கௌரவித்தமை இங்கு குறிப்பிடத்தக்க தாகும். இவர் கொழும்பில் வாழ்ந்தாலும் தமதூரைப் பற்றியும் கோவில்களின் செயல்பாடுகள்பற்றியும் நூல் நிலையங்களின் வளர்ச்சி பற்றி எல்லாம் விபரங்களையும் அறிந்தவராக காணப் பட்டார். நாடக, கலை, விளையாட்டு நிகழ்வுகளை காண்பதற்காக சுதேசிய திருநாட் கொண்டாட்டங்களில் கலந்து சிறப்பிக்கும் ஊர் பற்றுள்ள சுதேசியாக விளங்கினார். இவர் 30.11.1922 இல் அரியாலையில் பிறந்து 04.08.2001 இல் லண்டனில் சிவபதமடைந்து விட்டார்.

## அமரர் காசிப்பிள்ளை கணேசன் அவர்கள்



அரியாலையில் 27.05.1941 இல் பிறந்த இவர் செல்வச் செழிப்பில் வாழ்ந் தவர். யாழ்ப்பாண மத்திய கல்லூரியில் கல்வி கற்ற இவர் யாழ்ப்பாணம் சப்பல் வீதியில் வசித்தவராவார். தனது தகப்ப னாரின் ஞாபகர்த்தமாக அரியாலை சனசமூக நிலையத்தில் நிறுவப்பட்ட காசிப்பிள்ளை திறந்தவெளி கட்டடத் திற்கு உதவிய பெருமகனாவார். அரியாலை கிராமத்தின் வளர்ச்சிக்கு நிதி உதவிகளை வழங்கி உற்சாகப்படுத்தும் கொடையாளியாக வாழ்ந்தவர். 59 ஆவது அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாத் தலைவர் உட்பட பல பதவிகளை வகித்து அவ்விழா சிறப்புடன் வளர்ச்சியடைய பல வழிகளில் உதவிய பெருந்தகையாவார். தமிழ் சமூகத்தின் முன்னேற்றத்திற்குப் பெரிதும் உழைத்தவர். அகில இலங்கை சமாதான நீதவானாக விளங்கி ஏழை மக்களின் முன்னேற்றத்திற்கு தன்னால் ஆன பல உதவிகளைப் புரிந்த இவர் லண்டனில் காலமாகிவிட்டார். இவரின் பரம்பரை யினரின் காணியிலேயே நூற்றாண்டு விழா நந்தி சிலை நிறுவப்படுகிறது. அவ் நிலத்தை வழங்கிய இவரின் குடும்பத்தினர் பாராட்டுக்குரியவர்கள்.

## அமரர் க.சுப்பிரமணியம் அவர்கள்



அறிவு எனும் கொடை இரு வகை யாக உணரப்படுகின் றது. பிறப்பிலேயே உள்ள அறிவு, மற்றது கேள்வி ஞானத்தால் பெறப்படும் அறிவு. எங்கள் மதிப்பிற்கும் கௌரவத்திற்கும் உரிய அமரர் இரு வழிகளிலும் அறிவு பெற்றவராகினும் கணிதத்திலே பிறவிக் கொடையாக அந்நுண் அறிவைப் பெற்றார். தனது வீட்டில் சாய்மனைக் கதிரையில் அமர்ந்தவாறே கணக்கை வாசித்து முடிக்க விடையைக் கூறி விடுவார். இது யாவரும் அறிந்த உண்மை. அன்பும் அறிவும் படைத்த ஆசிரியப் பெருந்தகை. மிகவும் கண்டிப்பு மிக்க நல்லாசிரியராக விளங்கி எமது பரந்துபட்ட ஊரில் பெருந்தொகையான மாணவர்களின் அறிவுப் பசிக்கு விருந்தளித்த கொடை வள்ளலாவார்.

அரியாலை ஸ்ரீ ஞானவைரவர் கோயில் இளைஞர் சங்கத்திற்கும், ஆலயத்திற்கும் அளப்பரிய சேவைகளை ஆற்றியுள்ளார். ஊருக்கு ஒரு மத்தியஸ்த ராகவும் செயல்பட்டார். குறிப்பாக இளைஞர்கள் மத்தியில் ஏற்படும் முரண்பாடுகளையெல்லாம் முன்னின்று தீர்த்து வைப்பதிலும் அவர்களின் எதிர்கால நல்வாழ்வுக்கு வேண்டிய புத்திமதிகளைக் கூறும் கலங்கரை

விளக்கமாக திகழ்ந்தார். ஸ்ரீ ஞானவைரவர் ஆலயத்தை வழி நடத்துவதிலும் புராண படலம் பாராயணம் செய்வதிலும் ஆர்வத்துடன் செயற்பட்டார்.

மேலும் அரியாலை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் செயலாளராகப் பணிபுரிந்து கூட்டுறவின் நன்மைகளை நம்மவர் பெற உழைத்தவர்.

அறிவைத் தேடுவதில் ஆர்வ முடைய இப்பெரியார் தினமும் அரியாலை சரஸ்வதி வாசிகசாலைக்கு பிற்பகலில் பத்திரிகை வாசிப்பதற்கு செல்வதைக் காண்பார்கள். அவ்வாசிக சாலையின் வளர்ச்சியில் பெரும் பங்கு கொண்டவர். அதன் தலைவராகவும் தெரிவு செய்யப்பட்டவர். அவ்வாசிக சாலையின் பின்னால் இருந்த நிலப் பகுதியில் கரபந்தாட்டத் திடலை உருவாக்கி உடற்பயிற்சிக்காக ஆர்வமுள்ள வர்களுக்கு பயிற்சி அளித்தவர். மேலும் இரவுநேர இலவச வகுப்புக்களுக்கு கணித பாடத்தை இலவசமாக போதித்து பலரின் கணிதபாட சித்திக்கு வழி வகுத்தவர். இதன் மூலம் அரச சேவையில் பலர் இணைந்து கொள்ள வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தவர் என பலராலும் புகழப்பட்டவர்.

சுதேசிய விளையாட்டில் ஆர்வ முள்ள ஆசிரியர், கிளித்தட்டு, போர்த் தேங்காய்உடைத்தல், வாரோடுதல், கெந்திப் பிடித்தல் போன்ற விளையாட்டுக் களில் பங்குபற்றியதோடு மற்றவர்களுக்கும் பழக்கிக் கொடுக்கும் ஆசானாக விளங்கினார். கிளித்தட்டில் கிளியாக அபாரமாக ஆடத்தக்கவர். மேலும் கரபந்தாட்டத்திலும் ஆர்வமுள்ளவராக விளங்கினார். கரபந்தாட்ட குழுவில் இணைந்து அணியின் வெற்றிக்கு உறுதுணையாக விளங்கியவர். இவ் விளையாட்டுக்களைப் பற்றிய சட்ட ஒழுங்கு விதிகளை நன்றாகக் கற்றறிந்தவர் என்ற காரணத்தாலும் பக்கச் சார்பற்றவர் என எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப் பட்ட தன்மையினாலும் புகழ்பெற்ற மத்தியஸ்தராகச் செயல்பட்டு சுமுகமாக விளையாட்டுப் போட்டிகளை நடத்தி முடிப்பதில் பெரும் பங்காற்றியுள்ளார்.

இசையில் விருப்பமுடைய பெரியார், கலைப்போட்டிகளை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாக்களின் போது நடாத்துவதிலும் மத்தியஸ்தம் வகிப்பதிலும் பங்காற்றியுள்ளார். கலை விளையாட்டுக்களில் சிறப்பான சேவை யைச் செய்த தலைவர். 1970 ஆம் ஆண்டில் அரியாலை சுதேசிய திருநாட் கொண் டாட்ட விழா தலைவராக தெரிவு செய்து மூன்று நாட்கள் விழாவை சிறப்பாக நடாத்தி பெரும் மதிப்பைத் தனதாக்கிக் கொண்டார்.

அரியாலையில் கதிரவேலுவுக்கும் தங்கம் அம்மையாருக்கும் அருந்தவப் புதல்வனாக 23.07.1909 இல் தோன்றினார். இளம் வயதிலேயே ஆசிரியப் பயிற்சிக் கலாசாலையில் கல்வி கற்று முதல் பிரிவில் சித்தி பெற்று ஆசிரியராகப் பணி புரிந்தவர். குறிப்பாக அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை யில் நீண்டகாலம் கணித ஆசிரியராகப் பணிபுரிந்து ஊருக்கு உழைத்த உத்தமனாவார்.


பால பண்டிதராய் விசேட சித்தி எய்திய பண்டிதர், வீட்டையே, பாட சாலையாக மாற்றியமைத்து எல்லோருக் கும் எந்நேரமும் கல்வி கற்பிக்கும் கலைமகள் வாசம் செய்கின்ற தெய்வீக மனையில் வாழ்ந்து கொண்டிருக்கும் போது திடீர் என வந்த அழைப்பினால் உத்தராயன புண்ணிய காலத்தில் 13.01.1973 இல் சிவபத மடைந்தார்.

## அமரர் விசுவநாதர் ஆறுமுகம் கனகசிங்கம் அவர்கள்



*20.04.1920 இல் அரியாலையில் பிறந்த அமரர் அவர்கள் சென் பற்றிக்ஸ் கல்லூரியின் பழைய மாணவ ராவார். மருத்துவத் துறை பயிற்சியை பெற்ற இவர் வைத்திய சேவையை மேற்கொண்டவர் பூவரசம் குளம் அரசாங்க வைத்திய சாலையில் வைத்தியராக கடமையாற்றி வைத்திய அதிகாரியாக ஓய்வு பெற்றவராவார். இயற்கையாகவே நல்ல பண்புகளைக் கொண்ட இவர் மற்றவர்களுடன் பழகுவதற்கு இனியவராக விளங்கினார். அறிவுசார் நூல்களை வாசிப்பதில் ஆர்வம் கொண்டவர் நல்ல உலகளாவிய விடயங்களை அறிந்த கல்விமானாக விளங்கினார். கலை ரசனையும் விளை யாட்டுக்களை இரசிக்கும் ஆர்வலராக விளங்கினார். எறிபந்தாட்ட துறையில் அதிக நாட்டம் கொண்டவர். சமூக சேவையில் நாட்டம் கொண்ட இவர் அரியாலை சனசமூக நிலையத்தின் தலைவர் பதவி உட்பட பல முக்கிய பதவிகளை வகித்த பெருந்தகையாவார். சமூக நோக்கும் சேவை மனப்பான்மை யும் கொண்ட இவர் சமூக நலன் சார்ந்த திட்டங்களுக்கு தாராளமாக உதவும் மனப்பாங்கு கொண்டவராக விளங்கி னார். 1971 இல் சுதேசிய திருநாள் கொண்டாட்ட விழாவின் தலைவராக பணிபுரிந்து பலரதும் பாராட்டுக்களைப் பெற்றவராகும். இவ் நல்ல மனிதர் 3.11.1977 இல் இவ்வுலக வாழ்வை நீத்து சிவபதமடைந்து விட்டார்.*

## அமரர் சின்னத்துரை சதானந்தன் அவர்கள்



*அரியாலையில் பிறந்த அமரர் அரி யாலை சனசமூக நிலையத்தை உருவாக் கிய அப்போதைய இளைஞர் அணியில் ஒருவராக செயற் பட்டவர். அரியாலை சனசமூக நிலையத்தில் பல பொறுப்பான பதவிகளை வகித்தவர். தொடர்ச்சியாக பல்வேறு காலகட்டங்களில் சனசமூக நிலையத்தின் அபிவிருத்தியில் கலை நிகழ்வுகளில் கரிசனையோடு பங்குகொண்டு பணியாற்றியவர். தபால் திணைக்களத்தில் உயர்பதவி வகித்து ஓய்வுபெற்ற இவர் அரியாலை மகாமாரி அம்மன் ஆலயத்துடன் மிகவும் பக்தி பூர்வமான ஈடுபாடுடையவராக விளங்கினார். அதன் பரிபாலன சபையில் பொறுப்பு வாய்ந்த பதவிகளை வகித்து அக்கோவிலின் வளர்ச்சியில் பெரும் பங்கு வகித்த பெரியாராவார். அரியாலை மக்களின் செழிப்பிலும் ஐக்கியத்திலும் ஆர்வம் கொண்ட இவர் சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவில் 1974 ஆம் ஆண்டில் தெரிவு செய்யப்பட்ட தலைவராவார். இவர் 01.12.1927 இல் பிறந்து 23.12.1993 இல் சிவபதமடைந்து விட்டார்.*

## அமரர் வித்துவான் வீரசிங்கம் கதிரவேலு அவர்கள்



*வீரசிங்கம் பார்வதி தம்திகளின் ஏக புத்தி ரனாக 1916.06.16 இல் அரியாலையில் பிறந்தார். சிறந்த ஆசி ரியராக கடமையாற்றி ஆசிரிய மணி என்ற விருதைப் பெற்று ஓய்வுபெற்ற ஆசானா வார். இப் பூவுலகை நீங்கும் வரை அவர் ஓர் இளைஞனாகவே*

சமய சமூகப் பணிகளை இறுதி மூச்சு வரை செய்த கர்மவாதியாவார். அப்பழுக்கற்ற தூய இதயம் கொண்டவ ராக செயல்படுபவர். அவர் எமதூரின் பல சமூக சமய நிறுவனங்களில் தலைவராக பணிகள் பல புரிந்தவர். தான் வகித்த பதவிக்கும் நிறுவனத்துக்கும் என்றும் விசுவாசமாகவே செயல்படுபவர் என்பது யாவரும் அறிந்த உண்மையாகும். இதனால் இவரின் தலைமைத்துவத்தால் அந்த நிறுவனங்கள் வினைத்திறன்மிக்க வளர்ச்சிகளை அடைந்தது. அதைக் கண்டு பெருமையும் மகிழ்ச்சியும் அடையும் இயல்புடையவராக விளங்கினார்.

யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாசாலையில் ஆசிரியராக, பெற்றோர் - ஆசிரியர் சங்க செயலாளராக, பழைய மாணவர் சங்க பொருளாளராக கடமையாற்றி தன்னை முழுமையாக மாணவர்களின் வளர்ச்சிக்கு ஒப்புக்கொடுத்த பெருந்தகையாவார். அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத் தின் செயற்பாடுகள் அனைத்திலும் முன்னின்று உழைத்தவர். அதன் தலைவ ராக விளங்கியபோதுதான் நூல் நிலைய காணி விஸ்தரிப்பு, திறந்த வெளி அரங்க நிர்மாணிப்பு ஆகிய பணிகள் முன்னெடுக் கப்பட்டது. 1972 ஆம் ஆண்டில் சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா தலைவ ராக சிறந்த சேவைகளை வழங்கியுள்ளார். பொது வாகவே அரியாலையில் நடை பெறும் கலைப் போட்டிகள் சிறப்பாக நடைபெறுவதற்கு ஆலோசனைகளை வழங்கும் விற்பன்னராக விளங்கினார். போட்டிகளுக்கு மத்தியஸ்தம் வகித்தல், விடைத்தாள் திருத்தல் போன்ற பணிகளை பாராபட்சம் இன்றி நிறைவேற்றும் ஆசிரியராக கடமையாற்றியுள்ளார்.

அரியாலை நீர் நொச்சித்தாழ்வு ஸ்ரீ சித்தி விநாயகரிடம் அளவு கடந்த பக்தியும் விசுவாசமும் கொண்ட பரம பக்தனாவார். சிறந்த சமய பிரசங்கியாக விளங்கிய இவர் நாயன்மார்களின் குருபூசை தினங்கள், மஹோற்சவ காலங்கள், சிவராத்திரி தினம் போன்ற புண்ணிய தினங்களில் கோவில்களில் சமய சொற்பொழிவுகளை நடாத்தி சைவத்தை யும், தமிழையும் வளர்ப்பதில் கண்ணும் கருத்துமாக விளங்கினார். அரியாலை இளைஞர் இந்து மாமன்றத்தை ஆரம்பிப்பதில் முக்கிய பங்கு வகித்தவர் அதன் கல்விப்பகுதி அதிபராகக் கடமையாற்றி மாலை நேர இலவச வகுப்புக்கள் சீராக நடைபெறுவதற்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்த கல்வி யாளராக விளங்கினார். இவர் 04.08.1986 இல் சிவபதம் எய்தினார்.

## அமரர் சி.க.சுப்பிரமணியம் அவர்கள்



சைவத்தையும் தமிழையும் வளர்ப்ப தில் அக்கறைகொண்டு உழைத்த பெருந்தகை யாவார். சைவசமய நெறி முறைகளை ஆர்வத்துடன் கடைப் பிடிக்கும் இவர் சைவ சித்தாந்தத்தில் மிகுந்த ஈடுபாடும் அறிவும் பெற்றவராவார். அரியாலை பிரப்பங் குளம் மகாமாரி அம்மன் கோவில் பரிபாலன சபையில் அங்கம் வகித்து அதன் வளர்ச்சிக்கு பெரிதும் உழைத்த பெருமகனாவார். ஆசிரியராக தொழில் புரிந்து பல நல்மாணாக்கர்களை உருவாக் கிய பெருமைக்குரியவர். அரியாலையில் நடைபெறும் கலைப் போட்டியில் நடுவராக பணிபுரிந்து சேவையாற்றியவர். சமூகத்தலைவரான இவர் குடும்பங்களில் நடைபெறும் நிகழ்வுகளுக்கு தலைமை தாங்கி சீராக உரிய காலத்தில் நடைபெற உதவும் சீரிய பண்பு படைத்தவர். அரியாலை சனசமூக நிலையத்தில்

தலைவர் பதவி உட்பட பல பொறுப்பான பதவிகளை வகித்து நிலையத்தின் வளர்ச்சிக்கும், அபிவிருத்திக்கும் அயராது உழைத்த பெருமகனாவார். மாணவர் களுக்கு இலவச கல்வி வழங்கும் செயல்திட்டத்தை முன்னின்று செயல் படுத்தியவர். சமய அறிவுப்போட்டிகளின் ஒழுங்கமைப்பாளராக சைவ சமய நிறுவனங்களில் பங்காற்றியவர். **1973**ல் சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவின் தலைவராக தெரிவு செய்யப்பட்டு சிறப்பாக பணியாற்றியவர். **02.08.1920**ல் பிறந்து **14.12.2002** சிவபதமடைந்து விட்டார்.

## அமரர் சின்னத்துரை குலத்துங்கம் அவர்கள்

பாடசாலை அதிபராக கடமை யாற்றி இளைப்பாறிய அமரர் அவர்கள் அன்பும் பண்பும் கொண்ட நல்ல மனிதராகும். எவருடனும் இணக்கப் பாட்டுடன் ஒத்துப்போகும் தன்மை கொண்ட இவர் இயல்பாகவே நல்ல அறிவு படைத்தவர். எந்தக் காரியத்தையும் களநிலவரத்தை சரியாக கணித்து சாமர்த்தியமாகச் செயல்படும் தன்மை கொண்டவர். சரியான முறையில் பிரச்சனைகளை அணுகி தீர்வு காணக் கூடிய வல்லமை படைத்தவர். மிகவும் சாந்த குணம் படைத்தவர். தமிழ் இலக்கியம் இதிகாச புராணங்களில் நல்ல பாண்டித்தியம் பெற்றவர். எமது கலை கலாசார விழுமியங்களை பாதுகாக்க வேண்டும் என்ற உணர்வுடையவர். சுதேசிய விளையாட்டுக்களான கிளித் தட்டு மறித்தல், கிட்டிப்புள்ளு, தள்ளுதல், வாரோட்டம் போன்றவற்றில் நாட்ட முடைய விளையாட்டு வீரராகத் திகழ்ந்த வர். நாடகத்துறையிலும் ஆர்வமுடைய இவர் சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா நாடகங்களிலும் நடித்துள்ளார். **54** ஆவது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா தலைவராக தெரிவு செய்யப்பட்டு நல்ல முறையில் விழாவை நடத்திய பெருமைக்குரியவர். இவர் **31.07.1922** இல் பிறந்து **17.11.1986** இல் சிவபத மடைந்து விட்டார்.

## அமரர் மயில்வாகனம் இராமநாதன் அவர்கள்



அரியாலையில் பிறந்த இவர் யாழ்ப் பாண செயலகத்தில் பணிபுரிந்த ஓய்வு பெற்ற கலைஞராவார். நாடகக் கலை, சிற்பக் கலை, சித்திரக்கலை ஆகிய துறைகளில் வல்லவராக திகழ்ந்தவர். மிகவும் பணிவும் அடக்கமும் ஒருங்கே அமையப்பெற்ற இவர் பெண் வேடங் களில் நடித்துள்ளார். குறிப்பாக ஔவையார், கூனி போன்ற பாத்திரங்களைத் தத்ரூபமாக நடித்து அநேகரது பாராட்டுக்களைப் பெற்றவ ராவார். சாந்தமும் அமைதியும் கொண்ட இவர் வெளிப்படையாகப் பேசும் குழந்தை உள்ளம் கொண்டவர். மிகவும் நகைச்சுவையாகப் பேசும் வழக்கம் கொண்டவர். எப்போதும் வெள்ளை வேட்டியும் சேட்டும் அணிந்து தூய்மையாகவே காணப்படுவார். **1935** ஆம் ஆண்டு அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலையில் நடைபெற்ற குந்தளப்பிரியா நாடகத்தின் மூலம் நாடக உலகில் பிரவேசித்த இவர் பல நாடகங்களில் நடித்துப் புகழ் பெற்றவர். குறிப்பாக அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாக்களில் பங்கேற்று நடித்த பாத்திரங்கள் என்றும் மறக்க முடியாதவை. **1974** ஆம் ஆண்டில் எமது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா தலைவராக தெரிவு செய்யப்பட்டு

சிறப்பாக சேவையாற்றியவராவார். மேலும் சிறந்த நாடகக் கலைஞராக தெரிவு செய்யப்பட்டு கௌரவிக்கப்பட்ட பழம் பெரும் கலைஞராவார்.

அரியாலை நீர்நொச்சித்தாழ்வு ஸ்ரீ சித்தி விநாயகர் மேல் மாறாத பக்தி பூண்டவர். வேட்டைத் திருவிழாவுக்கு ஆடுவதற்குக் குதிரைகள் அமைத்துக் கொடுத்தல், கோபுரத்துக்கு வாகனங்களுக்கு வர்ணம் தீட்டுதல் போன்ற பணிகளை பக்தி பூர்வமாகச் செய்யும் பாங்குடையவர்.

## அமரர் வைத்தியர் ஸ்ரீ விக்கினேஸ்வரா அவர்கள்



சுதேசிய வைத்திய துறையில் அரியாலையில் சிறப்பிடம் வகித்த அமரர் அரியாலையில் நடை பெறும் விழாக்களுக்கு தாராளமாக அன்பளிப்புச் செய்யும் மனப்பாங்கு கொண்டவர். எவருடனும் அன்புடனும் பண்புடனும் விருந்தோம்பலுடன் வரவேற்கும் பாங்குடைய பெருந்தகையாவார். எந்த நேரமும் சந்தித்து எந்த இடத்திலும் வைத்திய ஆலோசனையைப் பெறுவதற்கான வாய்பை வழங்கும், வைத்தியராக விளங்கினார். மிகவும் எளிமையான இரக்க சிந்தை உடைய இவர் அரியாலை சனசமூக நிலையத்தின் தலைவர் உட்பட பல பொறுப்பான பதவிகளை வகித்து அந்நிலையத்தின் வளர்ச்சிக்கு உதவியவராவார். ஊர் மக்களால் மிகவும் நேசிக்கப்பட்ட இவர் இறப்பு பிறப்பு பதிவாளராகவும் கடமைபுரிந்து சேவையாற்றியவராவார். வைத்தியத்துறை கற்கும் மாணவர்களுக்கு கள நிலை பயிற்சிகளை வழங்கும் ஆசானாகவும் விளங்கியவர் 1975 ஆம் ஆண்டில் சுதேசிய திருநாள் கொண்டாட்ட விழாவின் தலைவராக செயற்பட்டு பலரதும் பாராட்டை பெற்றவராவார். இவ்வாறாக சேவையாற்றிய இவர் 19.11.2015 சிவபதமடைந்து விட்டார்.

## அமரர் தம்பு மயில்வாகனம் (பாலசுந்தரம்) அவர்கள்



அரியாலையில் 04.11.1927 இல் பிறந்த அமரர் அவர்கள் தனது ஆரம்ப கல்வியை கொழும்புத் துறை இந்து மகா வித்தியாலத்தில் கற்று மேற்படிப்பை யாழ் பரமேஸ்வராக் கல்லூரியில் மேற்கொண்டு மின்னியல் அத்தியட்சகராக மின்சார சபையில் பணி புரிந்தவராவார். பழகுவதற்கு மிகவும் இனியவரான இவர் மற்றவர்களுக்கு உதவி செய்வதில் முன்னின்று உழைப்பவர். தனக்கு சரி எனப்பட்டதை உரத்துக் கூறவும் அதற்காக வாதாடவும் தயங்காதவர். பொதுக் கருமங்களில் விட்டுக் கொடுத்து ஒத்துப்போகும் இயல்புடையவர். எடுத்த காரியத்தை சிறப்பாக நிறைவேற்றும் வல்லமையுடையவர். அதற்காக அர்ப்பணிப்புணர்வுடன் சேவையாற்றுபவராக திகழ்ந்தார். அரியாலை சனசமூக நிலையத்தை ஆரம்பித்த இளைஞர் அணியில் முக்கியபங்கு வகித்த இவர் அவ் நிலையத்தில் தலைவர் பதவி உட்பட பல்வேறு பொறுப்புள்ள பதவிகளை வகித்து அதன் வளர்ச்சிக்கு பெரிதும் உழைத்த பெருமகனாவார். அரியாலை பிரப்பங்குளம் மகாமாரி அம்மன் கோவில் பரிபாலன சபையில் அங்கத்தவராக இருந்து அக்கோவிலின் வளர்ச்சிக்கு முக்கிய பங்காற்றியவராவார். உதைபந்தாட்ட அணியில் அங்கம் வகித்த இவர் அவ்விளையாட்டில் பெரு விருப்பங்

கொண்டவராகவும் சிறந்த ரசிகராகவும் காணப்பட்டார். கரபந்தாட்டம் விளையாடுவதிலும் ஆர்வமுடைய இவர் பல போட்டிகளில் பங்கு கொண்டு வெற்றிக்காக உழைத்த விளையாட்டு வீரராவார். 1976 இல் சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவின் தலைவராக இருந்து சிறப்பாக பணியாற்றிய இவர் 12.05.1996 இல் சிவபதமடைந்து விட்டார்.

## அமரர் வேலுப்பிள்ளை தர்மலிங்கம் அவர்கள்



பிரபல கட்டட ஒப்பந்தகாரரரான தர்மர் என அன்பாக அழைக்கப்பட்ட தர்மலிங்கம் அவர்கள் அரியாலையில் 24.12.1925 இல் பிறந்தார். அரியாலை நீர் நொச்சித்தாழ்வு ஸ்ரீ சித்தி விநாயகர் மேல் அளப்பரிய விசுவாசமும் நம்பிக்கையும் கொண்டவராக விளங்கினார். இவ்வாலயத்தின் சகல கட்டடப் பணிகளையும் அவரே பொறுப்பேற்று தனக்குரிய வருமானத்தை விட்டுக் கொடுத்து கோவில் நலன் சார்ந்த நலனையே கருதி சிறப்பாக செய்து கொடுக்கின்ற பெருந்தகையாவார். அரியாலை சரஸ்வதி நூல்நிலையத்திற்கு நிரந்தரக் கட்டடம் அமைக்கும் பணியை சிரமதான அடிப்படையில் மேற்கொண்டபோது அதற்குதவிய சேவையாளருமாவார். இந்நூல் நிலையத்தின் தலைவராக, நிர்வாகசபை உறுப்பினராக பல வருடங்கள் பதவிவகித்து நூல்நிலைய வளர்ச்சிக்கு வேண்டிய ஆலோசனைகளையும், உதவிகளையும் வழங்கு வது அவரின் வழக்கமாகும்.

சமதர்மக் கொள்கையில் நம்பிக்கை யுடைய இவர் லங்கா சமசமாஜக் கட்சியின் அரியாலைக் கிளையின் தலைவராகச் செயற்பட்டுப் பல சீர் திருத்தங்களை மேற்கொண்டவர். கூட்டுறவு இயக்கத்தில் விருப்பும் நம்பிக்கையும் கொண்ட இவர் அரியாலை மத்திய கிளையின் தலைவராக அரும்பணி யாற்றிய கூட்டுறவாளராகும். அரியாலை மத்திய விளையாட்டு மைதானம் அமைப்பதில் ஆர்வத்துடன் செயல்பட்ட ஆர்வலராகும். பல தொழிலாளர்களுக்கு வாழ்வளித்து சிறப்பாக வாழ வழி வகுத்தவர்.


அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியா சாலை, கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் போன்ற கல்விக் கூடங்களின் கட்டடப் பணிகளை மேற் கொண்டபோது கட்டட ஒப்பந்தக்காரர் என்ற நிலையிலும் ஊரவன் என்ற சுதேசிய உணர்வுடனும் செயல்பட்டவர்.

57 ஆவது அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவின் தலைவராக தெரிவு செய்யப்பட்ட இவர் பலராலும் மதிக்கப்பட்ட பெரும் கனவானாகும்.

எமது மூதாதையர்களைப் போல் சைவத்தை வளர்ப்பதில் மிகவும் அக்கறையுடையவர். சைவ வித்தியா விருத்திச் சங்கத்தினால் பராமரிக்கப்பட்ட பாடசாலைகளின் கட்டட வேலைகளை இச்சங்கம் இவரிடம் கொடுப்பதிலேயே ஆர்வமாய் இருந்தது. இது அவரின் தர்ம சிந்தனையின் வெளிப்பாடாகும். அப் பாடசாலைகளை அரசாங்கம் பொறுப் பேற்றபோது தனிப்பட்ட ரீதியில் அவருக்கு இழப்புக்களும் ஏற்பட்டது. ஆனாலும் அவர் சோர்ந்து விடவில்லை. அவரின் தர்ம சிந்தனையே அவரைக் காத்தருளியது. அரியாலை நீர்நொச்சித் தாழ்வு ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய மஹோற்சவ காலத்தில் தேர், தீர்த்த

உற்சவங்களின் போது அடியவர்களுக்கு தாக சாந்தி வழங்கி தொண்டாற்றிய பக்தன் 24.11.1982 இல் சிவபதம் அடைந்து விட்டார்.

## அமரர் சுப்பிரமணியம் பாலசுந்தரம் அவர்கள்



அரியாலை மண் ஈன்றெடுத்த உத்தம புருஷர்களில் ஒருவரான அமரர் அவர்கள் தபால் அதிபராகப் பணி புரிந்தவர். அரியாலைப் பேரூரில் வாழ்கின்ற மக்கள் அனைவரும் ஒற்றுமையாக வாழ வேண்டும் என்ற பெருநோக்குக் கொண்டவர். காரியங்களைப் புத்தி சாதுரியமாகக் கையாள்வதில் வல்லமை யுடையவராக விளங்கிய வர். தனது கருத்துக்களை ஆணித்தரமாக எடுத்துக் கூறி வாதாடும் வல்லமை படைத்தவர். விட்டுக் கொடுத்து சமரசமாக செயல் படும் பண்பு மிக்கவர். அரியாலையூரின் பெருவிழாவாக பாரம்பரியம் கொண்ட பழமை மிக்க விழாவாக ஒற்றுமையை எடுத்துக் காட்டும் விழாவாக மிளிரும் சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவின் செழுமைக்கு தன்னை முழு மையாக அர்ப்பணித்த சுதேசியாவார். 1976 ஆவது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவின் தலைவராக தெரிவு செய்யப்பட்டு விழாவை சிறப்பாக ஒழுங்கமைத்து பலரினதும் பாராட்டுக் களைப்பெற்ற தலைவராவார். அரியாலை யில் இயங்கும் பல வகையான சங்கங் களிலும் தலைவர் பதவி உட்பட பல பொறுப்பான பதவிகளை வகித்து சேவை செய்த நல்மனமும் நேர்மையும் கொண்ட சேவையாளராக இனங் காணப்பட்டவர். அரியாலை பிரப்பங்குளம் மகாமாரி அம்மன் கோயில் வளர்ச்சியில் பெரும் பங்கு வகித்தவர். குறிப்பாக அரியாலை சனசமூக நிலைய ஸ்தாபகர்களில் ஒருவராக செயல்பட்ட இவர் அதன் பல்வேறு படி நிலையிலான வளர்ச்சியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தியவர். அதன் தலைவராகவும் பணி புரிந்தவர். சிறந்த இசை நாடகக் கலைஞரான இவர் எமது அரியாலை மண்ணின் புகழ் பூத்த மூத்த அண்ணாவியார் சபாபதிப்பிள்ளை அவர்களிடம் நாடகங்களைப் பழகும் வாய்ப்பு பெற்றவர். 1950 ஆம் ஆண்டு அரியாலை சனசமூக நிலைய இரண் டாவது ஆண்டு விழாவில் அண்ணாவி யார் சபாபதிப்பிள்ளை அவர்களின் நெறியாளுகையுடன் அரங்கேற்றப்பட்ட நளன் தமயந்தி நாடகத்தில் நளமகா ராசாவாக நடித்து பெரும் புகழ் ஈட்டிய பெருந்தகை 21.04.1929 இல் அரியாலை யில் பிறந்து 10.02.2008 இல் இவ்வுலக வாழ்வை நீர்த்து சிவபதமடைந்தார்.

## அமரர் முத்துக்குமாரு சீவரத்தினம் அவர்கள்



முத்துக்குமாரு செல்லம்மா தம்பதி யிரின் செல்வப்புதல்வ னாக 25.09.1931 இல் அமரர் பிறந்தார். ஜீவா என அன்பாக அழைக்கப்படும் பெருந்தகையான இவர் மிகவும் கம்பீரமாகவும், எந்நேரமும் உற்சாகத்துடனும் செயல்படுபவர். மிகவும் ஊர்ப்பற்றுள்ள விளையாட்டு வீரராவார். அரியாலை ஸ்ரீ ஞான வைரவர் மேல் மிகுந்த பக்திகொண்ட இவர் அத்திடலிலேயே தனது விளையாட்டு சாகசங்களை காட்டியவர். ஸ்ரீ ஞான வைரவர் கோயில் பரிபாலான சபை தலைவராக இருந்து அதன் வளர்ச்சிக்கு அருந்தொண்டாற்றியவர். ஊர்மக்களால்

மிகவும் மதிக்கப்பட்ட நம்பிக்கைக்குரிய உத்தமனாக விளங்கினார்.

யாழ் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் உயர்தர கல்வியைக் கற்ற பின் இந்தியாவில் மெட்ராஸ் பல்கலைக் கழகத்தில் உடற்பயிற்சி போதனாசிரியர் பட்டம் பெற்றவர். இதனால் விளையாட்டு துறைசார்ந்த நுட்பங்களைக் கற்றறிந்த வீரனாகத் திகழ்ந்தார். சிறப்பாக கரபந்தாட்டக் கலையில் விற்பன்னராக விளங்கினார். குறிப்பாக சரிப்படுத்தல் (செற்றப்), பாய்ந்தடித்தல், மறித்தடித்தல் ஆகியவற்றில் சிறந்த வல்லுனராக வலம் வந்தார். அந்தக் காலத்தில் அகில இலங்கை சம்பியன் அணியாகத் திகழ்ந்த கம்பஹா அணியுடன் மோதிய அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக அணிக்கு தலைமை தாங்கி வெற்றிவாகை சூடுவதற்கு பெரும்பங்காற்றிய மாவீர ராவார். தென்னிலங்கை கரபந்தாட்ட வீரர்களால் அறியப்பட்ட இவர் அகில இலங்கை கரப்பந்தாட்ட அணியிலும் அங்கம் வகித்தமை எமது அரியாலைக் கிராமத்துக்கு கிடைத்த பெருமையாகும்.

இளைஞர் சமுதாயத்தின் வழி காட்டியான இவர் எமது அருணோதயா சனசமூக நிலையத்தின் செயல்பாட்டிலும் ஆர்வத்துடன் ஈடுபட்டு உழைத்த பெருந்தகையாவார். அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவினால் அரங்கேற்றப்படும் நாடகங்களில் அரச பாத்திரம் ஏற்று தனது கம்பீரமான தோற்றத்தால் பலரையும் கவர்ந்த நாடக கலைஞராவார். ஒருமுறை இராமராக வேடம் பூண்டு அனைவரது பாராட்டை யும் பெற்றமை இங்கு குறிப்பிட வேண்டிய சிறப்பம்சமாகும். சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா விளையாட்டுப் போட்டிகளை நடத்து வதற்கு முன்னின்று உழைக்கின்ற பங்காளியாகத் திகழ்ந்தார். **1978** ஆம் ஆண்டில் அரியாலை சதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டு அவ்விழாவை சிறப்பாக நடத்தி பலரின் பாராட்டுக் களையும் பெற்றக்கொண்டவர்.


இவ்வாறாக ஊர்மக்களாலும், விளையாட்டு வீரர்களாலும் மிகவும் அன்பும், பண்பும், இனிமையும் நிறைந்த மனிதராக இனங்காணப்பட்ட தலைவர். விளையாட்டுத்துறை பயிற்றுவிப் பாளராக, ஆசிரியராக, விளையாட்டுத் துறை அதிகாரியாக பணிபுரிந்து கொண்டிருக்கையில் **1984.11.09** இல் இவ்வுலக வாழ்க்கையை மறந்து மறுவுலகிற்குச் சென்று விட்டார்.

## அமரர் பண்டிதர் மு. வேதநாயகம் அவர்கள்

பழுத்த சைவப் பழமாக வாழ்ந்து சிவபதம் எய்திய பண்டிதர் அவர்கள் சுமார் **40** வருடங்களாக அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாசாலையில் ஆசிரிய ராக பணிபுரிந்து பல நல் மாணாக்கர்களை உருவாக்கிய ஆசானாவார். பார்ப்பதற்கு மிகவும் எளிமையான உயர்ந்த தோற்ற முடைய இவர் சைவ சித்தாந்தங்களிலும், தமிழ் இலக்கண இலக்கியங்களிலும் பாண்டித்தியம் பெற்றவர். எல்லோராலும் மதிக்கப்பட்ட இவர் மிகவும் அன்பாக வும், பண்பாகவும் பேசும் இயல்புடைய வர். பலர் இவரிடம் தங்கள் பிரச்சினை களைச் சொல்லி ஆலோசனைகள் கேட்க வரும்போது அவர்களை அரவணைத்து ஆறுதல் வார்த்தைகள் சொல்லி அவர்கள் சரியான பாதையில் செல்ல வழி வகுப்பார். நம்பிக்கைக்குரிய நல்ல மனிதராக விளங்கியவர். பல சிறார்களுக்கு தனது வீட்டிலேயே இலவசமாக கல்வி புகட்டி தொண்டாற்றியவர். இலவச சேவையாக வீடு கட்ட நிலம் எடுத்தல், கிணறு தோண்ட இடம் குறித்தல், நினைத்த காரியம் சொல்லல் போன்ற தொண்டுகளையும் ஆற்றியவர். வீடுகளில்

சில அசம்பாவித சம்பவங்கள் நடந்தால் அடுத்த நாள் அதிகாலை வேளையில் அவரிடம் சென்று நிவாரணம் காணும் மரபு அரியாலை மக்களிடம் பல காலம் நீடித்துக் காணப்பட்டது. கோவில்களில் படிக்கப்படும் புராண பாராயணங்களுக்கு புத்தகம் பார்க்காமலே வரிக்கு வரி பொருள் சொல்லக் கூடிய தகைமையைப் பெற்ற மெய்யடியாராவார். அதி காலையில் எழுந்து சைவ சமய அனுட்டானங்களை முடித்த பின்பே தமது கடமைகளை மேற்கொள்ளும் பாரம்பரியங்களையுடைய இவர் அக்கால இளைஞர்கள் பலரின் வற்புறுத்தலுக்கு இணங்க தனது முதிர்ந்த வயதில் 1983 இல் நடைபெற்ற சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவுக்கு தலைமை ஏற்று இவ்விழாவை பெருமைப்படுத்திய இப்பெரியார் 1896 இல் அரியாலையில் தோன்றி 1986 இல் இப்பூவுலக வாழ்வை நீர்த்து இறைவனடி சேர்ந்தார்.

## அமரர் சைவ சித்தாந்த வித்தகர், பண்டிதர் ப.கணபதிப்பிள்ளை அவர்கள்



யாழ் மாநகரில் வளங்கள் பல நிறைந்த அரியாலையூரில் பரமானந்தர் பார்வதி தம்பதிகளின் ஏக புதல்வராக, முத்தாக மலர்ந்தவர் தான் நாட்டுப் பற்றாளர் பண்டிதர் ப.கணபதிப்பிள்ளை. அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலையிலும், யாழ் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்திலும் கல்வி பயின்றவர். ஆசிரியராகவும், அதிபராகவும் கடமையாற்றி மாணவர்களை நல் வழிப்படுத்தி நற்பிரஜைகளாக உரு வாக்கியவர். ஏன், எப்படி, எதற்கு என்ற வினாக்களைக் கிளர்த்தி நிறைவான பதில் கிடைத்தால் மட்டுமே அவற்றைச் சிக்கெனப் பற்றி விடும் அறிவாளராய் அவர் விளங்கினார்.

பிரதேசத்திலுள்ள பல ஆலயங்களில் கூட்டுப்பிரார்த்தனை, பஞ்சபுராணம் ஓதுதல், புராணபடனம், திருவாசகம் முற்றோதல், சொற்பொழிவு ஆகிய சிவப்பணிகளில் அயராது ஈடுபட்டு அரும்பணியாற்றியவர். கோவில்கள், சனசமூக நிலையங்கள், திருமுறை மன்றங்கள், இந்துமா மன்றங்கள் ஆகியவற்றில் பல பணிகளை பொறுப்பெடுத்து அதற்கூடாக பல சமூகப் பணிகளை மேற்கொண்டு அவ்வூர் மக்களை நல்வழிப்படுத்தினார். 1987 ஆம் ஆண்டில் எமது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா தலைவராக பணிபுரிந்தவர். வாழ்வில் மேற்கொண்ட அனுபவங்களையும் போராட்டத்தின் தேவைகளையும் தனிமனித ஆளுமையால் தான் செயற்படுத்திய அனைத்து தளங்களிலும் அதாவது கோவில்களிலும், பாடசாலைகளிலும், மன்றங்களிலும் கொண்டு சென்றதோடு மட்டுமல்லாது எதிர்கால கல்வியின் முக்கியத்துவத்தை கருத்திற்கொண்டு பாடசாலை நிறைவடைந்தவுடன் அவ்வவ் வகுப்புக்களுக்கான இலவசக் கல்வியையும் வழங்கி வந்தார். தனது உடல்நிலை இயலாத நிலையிலும் இறுதி வரை மக்களுக்காக பணிபுரிந்த மறத்தமிழராவார். நெற்றியில் எந்நேரமும் திருநீற்றுப் பூச்சு இருக்கும். மீசை வைத்துக் கொள்வார். எல்லோருடனும் அன்புடனும், மரியாதையுடனும் இனிமையாகப் பேசுவார். அரியாலை இளைஞர் இந்து மா மன்றத்தின் வளர்ச்சிக்கு அயராது பாடுபட்ட பெருமைக்குரியவர் இவ்வுலக வாழ்வை 22.02.2002 இல் முடித்துக் கொண்டார்.

## அமரர் திருமதி பாலராணி வேல்முருகு அவர்கள்



*24.6.1944 இல் அரியாலையில் பிறந்த திருமதி பாலராணி வேல்முருகு தனது பாடசாலைக் கல்வியை ஸ்ரீபார்வதி வித்தியா சாலையில் ஆரம்பித்து பின்னர் உயர்கல்வியை சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் தொடர்ந்தார். சிறந்த பெறுபேறுகளின் அடிப்படையில் பேராதனைப் பல்கலைக் கழகத்திற்குத் தெரிவான இவர் 1961 முதல் 1964 வரை அங்கு கல்வி கற்றார்.*

*பேராதனைப் பல்கலைக் கழகத் தில் கல்வியை நிறைவு செய்த இவர் இலங்கை மத்திய வங்கியில் 1964 - 1972 வரை தொழில் புரிந்தார். 1972 இல் குடும்பத்துடன் சம்பியா நாட்டில் கல்வி போதிக்கும் நோக்குடன் இலங்கையை விட்டு வெளியேறிய இவர் 1978 இல் மீண்டும் குடும்பத்துடன் இலங்கை வந்தடைந்து யாழ்ப்பாணத்தில் நிரந்தர மாகக் குடியேறினார்.*

*இதன்போது இவருக்கு சமூக சேவையிலும், ஊர் நலனிலும் மிகுந்த ஈடுபாடு ஏற்பட்டது. இத்தகைய சேவைகளுள் ஒன்று தான் சரஸ்வதி சனசமூக நிலையத்திற்கு அவர் செய்த பங்களிப்பாகும்.*

*71 ஆவது அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா தலைவராகப் பணிபுரிந்து, அரியாலை மாதர் தலைவராக விளங்கி பலரதும் பாராட்டைப் பெற்று 06.08.2017 இல் இவ்வுலக வாழ்க்கையை நீத்தார்.*

## அமரர் S.T. கணநாதன் அவர்கள்



*யாழ் மாவட்டத் திலேயே நன்கு அறியப் பட்ட சமூக சேவை யாளராக விளங்கிய அமரர் அரியாலை மக்களின் சிறப்பான வாழ்வுக்கும் அவர்க ளின் ஒற்றுமைப் பாட்டுச் சிந்தனைக்கும் அயராது உழைத்த உத்தமனாவார். பிரபல இசை நாடக நடிகரான அருச்சுனன் தம்பிப்பிள்ளை என அவரின் நடிப்புச் சிறப்பைப் போற்றும் விதமாக அழைக்கப்பட்ட தம்பிப்பிள்ளை தம்பதிகளுக்கு மகனாக பிறந்தவர். யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரியின் பழைய மாணவரான இவர் மின் அத்தியட்சகராக இலங்கை மின்சார சபையில் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர்.*

*அரியாலை சனசமூக நிலையத்தில் பல பதவிகளை வகித்து அதன் வளர்ச்சிக்கு பெரிதும் உழைத்தவர். நிலையத்தின் பொன்விழாவுக்கு தலைமை தாங்கி சிறப்பாக அவ்விழாவை நடத்திய பெருமைக்குரியவர். அரியாலை சுதேசிய திருநாள் கொண்டாட்டங்கள் சிறப்பாக நடாத்துவதற்கு பல தசாப்தங்களாக முன்னின்று உழைத்தவர். 1990 இல் அதன் தலைவராகவும் தெரிவு செய்யப்பட்டவர். சிறந்த நாடக நெறியாளர். அரியாலை நாடகங்கள் சிறப்பாக மேடையேற்றப் படுவதற்காக இரவு பகல் என்று பாராது நாடகங்களை முன்னின்று பழக்கிய பயிற்றுவிப்பாளராகும். யாழ் மாவட்ட ரீதியில் பல நாடகங்கள் போட்டிகளில் வெற்றி பெறுவதற்கு இவரின் பங்களிப்பு முக்கியம் வாய்ந்ததாக இருந்தது.*

*யாழ்ப்பாண மாநகர பலநோக்கு கூட்டுறவுச் சங்க தலைவராக கடமை யாற்றிய இவர் நெருக்கடியான கால*

கட்டத்தில் அத்தியாவசியமான பொருட்கள் மக்களைச் சென்றடைவதற்கு ஆக்கபூர்வமான பல நடவடிக்கைகளை மேற்கொண்ட நிர்வாகியாவார். அரியாலை ஐக்கிய கழகத்தில் தலைமை உட்பட பல பதவிகளை வகித்த இவர் அரியாலை உதைபந்தாட்ட லீக்குடன் இணைந்து யாழ் மாவட்ட உதைபந்தாட்ட வளர்ச்சிக்கு உறுதுணையாக விளங்கியவர்.

மிகவும் நேர்மையான அதிகாரி என அறியப்பட்டவர். தனது தொழிலும் சரி, அரியாலை மக்களின் சேவையிலும் சரி எல்லோராலும் புகழப்பட்ட நல்ல பண்புகள் கொண்ட வெளிப்படையான செயல்பாடுகளையுடைய நல்ல மனிதர் இவர். 21.03.1945 இல் அரியாலையில் பிறந்து 01.02.2007இல் இவ்வுலக வாழ்வை நீத்துவிட்டார்.

## அமரர் க. இராசரத்தினம் அவர்கள்



S.K. இராசரட்ணம் என அறியப்பட்ட அமரர் கந்தையா தம்பதிகளின் மகனாக அரியாலையில் பிறந்து யாழ் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய பழைய மாணவராவார். இக்கல்லூரி வாழ்வில் மிகவும் பிரகாசமாக விளங்கியதற்கு அடிப்படைக் காரணம் விளையாட்டுத் துறையில் அவர் நிலைநாட்டிய சாதனைகளேயாகும். கீழ், மத்திய, மேல் பிரிவு என்ற சகல பிரிவுகளிலும் மெய்வல்லுநர் போட்டிகளில் சம்பியனாகவே வருவார். 100 யார் ஓட்டத்தை மின்னல் வேகத்தில் கடக்கும் ஆற்றல் உடையவர் பாடசாலைகளுக் கிடையிலான போட்டிகளில் யா/ கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் தொடர்ச்சியாக பல வருடங்கள் வெற்றி வாகை சூடுவதற்கு இவரின் பங்களிப்பு அளப்பரியதாக இருந்தது. மேலும் தடி மாற்றியோடும் போட்டியில் இறுதிப் போட்டியாளராக விளங்கி வெற்றியை பல சந்தர்ப்பங்களில் தட்டிக் கொண்டமையை பலரும் அறிவர். மெய்வல்லுநர் போட்டிகளில் எப்படி செயல்பட்டால் வெற்றியைப் பெறலாம் என்ற நுட்பத்தை அறிந்தவராக விளங்கினார். ஓட்டப் போட்டி ஆயத்த நிலையைச் சரியாகப் பயன்படுத்துவதில் சாமர்த்தியமானவராக விளங்கினார். நீளம் பாய்தல், உயரம் பாய்தல் போன்ற மைதானப் போட்டிகளிலும் சிறப்பான இடத்தைப் பெற்றுக் கொண்டவர்.

பெருவிளையாட்டுக்களில் கரபந்தாட்டம் இயல்பாகவே அவருக்குக் கை வந்த கலையாகும். எதிர்தரப்பினரின் பலவீனத்தைக் கணித்து விளையாடக் கூடிய வல்லமை படைத்தவர். ஓவர்கேம், செற்றப்கேம் ஆகிய இரு பகுதிகளிலுமே வல்லவராக விளங்கினார். புகழ்பெற்ற கம்பஹா அணியை வெற்றி கொள்வதில் இவரின் பங்களிப்பு காத்திரமாக அமைந்திருந்தது. அவரின் கைவிசை மின்னலைப் போன்ற தன்மையுடையதாக விளங்கியது. செற்றப்கேம் தனக்கு மிகவும் பிரியமானது எனக் கூறிக்கொள்வார். இதனால் அத்துறையை அரியாலையில் வளர்த்த பெருமைகளில் அவருக்கு முக்கிய பங்குண்டு.

திருமகள் சனசமூக நிலையத்தில் செற்றப்கேம் பயிற்சியினை ஆரம்பித்து இளைஞர்களை ஊக்கப்படுத்திய பெருமை இவருக்குண்டு. இவ்வாறு இவரால் ஆரம்பிக்கப்பட்ட பயிற்சிப் பட்டறை அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம், அரியாலை அருணோதயா சனசமூக நிலையம் வரை விஸ்தரிப்புக்கு இவரின் விடாமுயற்சியும் ஆர்வமும் தான் காரணமாக அமைந்தது. குறிப்பாக

அரியாலை அருணோதயா சனசமூக நிலையத்திடலில் இவரின் முயற்சியால் செற்றப்கேமுக்கு ஏற்றவிதமான மைதான மாக அமைக்கப்பட்டது. இதனால் பயிற்சிகள் மிகவும் வினைத் திறன் உடையதாக விளங்கியது. 1994 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் யாழ் மாவட்டத்தில் சவாலுக்கு உட்படுத்த முடியாத வலுவான அணியாக உரு வெடுப்பதற்கு இவரின் முயற்சியும் முக்கிய காரணியாக அமைந்தது. 74 ஆவது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா தலைவராக பணியாற்றியவர். இவர் இறைபதம் அடைந்து விட்டார்.

## அமரர் முத்துக்குமாரு மயில்வாகனம் அவர்கள்

திரு.மயில்வாகனம் அவர்கள் அரியாலையில் 23.03.1940 ஆம் ஆண்டு பிறந்து, 17.03.2003 ஆம் ஆண்டு இயற்கை எய்தினார். அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை, செங்குந்தா இந்துக் கல்லூரியிலும் கல்வி கற்றவர். இவர், சுயதொழில் முயற்சிகளில் ஈடுபட்டு, 1973 ஆம் ஆண்டு கிராம சேவை யாளராக இணைந்து 1999 ஆம் ஆண்டு வரை நல்லூர் அரியாலை ஆகிய பிரதேசங்களில் 26 வருடங்களாக சேவையாற்றிய பின் ஓய்வு பெற்றார். இருப்பினும், இவரது சிறப்பான சேவையின் காரணமாக 2003 ஆம் ஆண்டுவரை அரியாலையில் கிராம சேவையாளராக நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்து.

இளமைக்காலத்தில் இவருக்கிருந்த சிறந்த குரல் வளத்தின் காரணமாக யாழ்ப்பாணத்தில் உள்ள பல்வேறு திரையரங்குகளில் அறிவிப்பாளராகவும் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவரது சமூக மற்றும் சமயப் பணிகளாக நாம் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

### சமூகப் பணிகள்

1. 1964 ஆம் ஆண்டு அரியாலையில் வாழுகின்ற மக்களின் பயன் பாட்டிற்கென கலைவாணி சனசமூக நிலையத்தினை உருவாக்குவதில் முன்னின்றவர்களில் ஒருவர்.
2. அரியாலை மத்திய விளையாட்டுக் கழகத்தின் தலைவராக 1997ஆம் ஆண்டில் பொறுப்பேற்று சிறப்புடன் சேவையாற்றினார்.
3. 1997ஆம் ஆண்டு அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவின் தலைவராகவும் கடமையாற்றினார்.

### சமயப் பணிகள்

1. அரியாலை கொட்டுக்கிணற்றுப் பிள்ளையார் ஆலயத்துக்கு சேவை யாற்றியுள்ளார்.
2. யுத்தத்தில் அழிவுற்ற கொட்டுக் கிணற்றுப் பிள்ளையார் ஆலயத்தினை புனர்நிர்மானம் செய்வதற்கு உழைத் தவர்களில் ஒருவர்.
3. அரியாலை நீர்நொச்சித் தாழ்வு ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தான உபதலைவராகவும் நிர்வாகசபை உறுப்பினராகவும், பொதுச்சபை உறுப்பினராகவும் செயற்பட்ட வராவார்.
4. அரியாலையில் உள்ள பேச்சியம்மன், வைரவர், மகாமாரி ஆலயங்களில் பல பொதுப்பணிகளிலும் ஈடுபட்டவர்.

## அமரர் கந்தையா மகாதேவா அவர்கள்



அரியாலையைப் பிறப்பிடமாக கொண்ட அமரர்கள் கந்தையா பொன்னம்மா தம்பதியினரின் புதல்வனான அமரர் மகாதேவா யாழ் பரியோவான் கல்லூரியில் கல்வி கற்ற காலத்தில் பல மெய்வல்லுனர் போட்டிகளில் பங்குபற்றி பரிசு பெற்றவர். குறிப்பாக 800 மீற்றர் ஓட்டத்தில் பல தடவைகள் முதலாம் இடம் பெற்றவர். இவர் பொலிஸ் திணைக்களத்தில் அரச பதவி பெற்று கொழும்பு சென்று அங்கு நடைபெற்ற அகில இலங்கை A.A.A. மெய்வல்லுனர் போட்டியில் 800 மீற்றர் ஓட்டப் போட்டியில் முதலாம் இடம் பெற்று ஊரிற்கு பெருமை சேர்த்தவர். அரியாலை ஐக்கிய கழக உருவாக்கத்தில் முன் நின்றவர்களில் முக்கியமானவர்.


### தேசிய மட்டம்

*1946* ஆம் ஆண்டு அகில இலங்கை A.A.A. மெய்வல்லுனர் போட்டியில் 800 யார் ஓட்டப் போட்டியில் முதலாம் இடம் பெற்றவர். ஒலிம்பிக் போட்டியில் இலங்கை சார்பாக பங்குபற்றி மூன்றாம் இடம் Bronze Medal பெற்ற வீரன் Dunkan white இன் சமகாலத்தவர்.

## அமரர் சோமசுந்தரம் பாலசுந்தரம் அவர்கள்

*1945, 1946*களில் அமரர் பாலசுந்தரம் யாழ். இந்துக் கல்லூரியில் கல்வி பயின்ற காலத்தில் கல்லூரி உதைபந்தாட்ட தலைவராக விளங்கினார். இவரது அணியில் அமரர்கள் I.S.சண்முகநாதன், பொ.தர்மலிங்கம், ஆகியோர் விளையாடினர். பாலா Centre Forward நிலையிலும் தருமர் - Right Extreme நிலையிலும் I.S. சண் Center Half நிலையிலும் விளையாடினர். பாலா அவர்களின் காலில் பந்து கிடைத்தால் நிச்சயம் அது Goal ஆகும். தருமரின் காலில் பந்து சிக்கினால் அது நிச்சயமாக பாலாவிடம் செல்லும். I.S. சண் இடம் பந்து கிடைத்தால் எதிர்த்தரப்பு Goal முகப்பில் பாலாவிடம் கையளிக்க்பபடும். எனவே இவர்கள் மூவரையும் தடுக்க எதிரணியினர் ஆளுக்கு இருவரை தடுப்பதற்காக நியமிப்பார்களாம். இப்படி ஒரு போட்டியில் பாலா அவர்கள் தனியாக 16 Goals அடித்தது, அக் காலத்தில் சாதனையாக கருதப்பட்டது.

## அமரர் க. சிவகுரு அவர்கள்



*1941, 1942* களில் அமரர் சிவகுரு அவர்கள் புனித சம்பத் தரிசியார் கல்லூரியில் கற்கும் காலத்தில் விளையாட்டுத் துறையில் பிரகாசித்தவர். குறிப்பாக எறிபந்தாட்ட அணியின் ஆரம்ப வேகப்பந்து வீச்சாளர். ஒரு சமயம் தெல்லிப்பளை யூனியன் கல்லூரிக்கு எதிரான போட்டியில் அதிவேகமாக பந்து வீசியபொழுது எதிர்த்தரப்பு துடுப்பாட்ட வீரன் பயத்துடன் துடுப்பால் தடுக்க பந்து மேல் எழும்பி சிவகுரு அவர்களிடம் பிடியாக சென்றது. சிவகுரு அவர்கள் பிடியைத் தவறவிடுகின்றார். பார்வையாளர்கள் கூ..., கூ.... என்று கிண்டல் அடித்த காரணத்தால் கடும் ஆத்திரம் உற்ற சிவகுரு அவர்கள் அடுத்த பந்தை கடும் வேகத்துடன் வீச அது விக்கற்றை மூன்றாக உடைத்ததாக தகவல். ஒரு போட்டியில் Wicket Keeper காயமடைய சிவகுரு அவர்கள் எந்த வித Gloves Pads அணியாமல் வெறும்

கையுடன் Wicket Keeper ஆக செயற்பட்டு அந்த போட்டியில் அவரது அணி வெற்றி பெற்றது. இதனால் இவர் இரும்பு மனிதன் என அழைக்கப்பட்டார். இன்னுமொரு போட்டியில் இவர் விளையாடினால் நாங்கள் விளையாட மாட்டோம் என்று எதிர் அணியினர் பயத்துடன் கூறிய காரணத்தினால் இவரை தற்காலிகமாக நிறுத்தினார்கள். இவர் உயரம் பாய்தல் சாதனைப் பெண்மணி திருமதி பிரபாவதி கமலநாதனின் தகப்பனாவார்.

## அமரர் I.S. சண்முகநாதன் அவர்கள்



அரியாலையை பிறப்பிடமாக கொண்ட அமரர்கள் சோமசுந்தரம் அன்னபிள்ளை தம்பதியினரின் ஏக புதல்வன், இவர் யாழ் இந்து கல்லூரியில் கல்வி கற்கும் காலத்தில் பல விளையாட்டு போட்டி களில் பங்குபற்றி பரிசில் பெற்றவர். உதைபந்தாட்ட அணியில் அங்கம் வகித்து தனது திறமையால் புகழ் பெற்றவர். இவர் தனது தொழிற்கல்வியை தமிழ்நாடு பல்கலைக் கழகத்தில் (மதராஸ்) விளையாட்டுத்துறை போதனாசிரியர் டிப்ளோமா கல்வி கற்கும் காலத்தில் மதராஸ் உதைபந்தாட்ட அணியில் அங்கம் வகித்து பலரது பாராட்டுக்களை பெற்றவர். மதராஸ் உதைபந்தாட்ட அணியில் அங்கம் வகித்த முதல் இலங்கையரும் இவரே. மதராஸ் பல்கலைக்கழகத்தில் திரைப்பட நடிகர் ஜெமினி கணேசனின் சமகாலத்தவர். அவரது குடும்ப நண்பரும் கூட. அரியாலையில் புகழ்பெற்ற மேடை நாடக நடிகர். “மந்திரி குமாரியில் - பார்த்தீபன்”, ராஜராஜசோழனில் - விமலாதித்தன்” போன்றன இவர் புகழ்பெற்ற பாத்திரங்கள் ஆகும். மேலும் பழகுவதற்கு மிகவும் இனிய பண்புடைய இவர் எந்நேரமும் சிரித்த முகத்துடனேயே காட்சியளிப்பார். பல தசாப்தங்களாக அரியாலை நாடக உலகில் பிரகாசித்த இவர் 47 ஆவது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா தலைவராகவும் விளங்கியவர்.

## அமரர் தம்பிப்பிள்ளை சின்னத்தம்பி (கிளாக்கர்) அவர்கள்

அரியாலையைச் சேர்ந்த அமரர்கள் தம்பிப்பிள்ளை பூரணாம்பிகை அவர்களின் சிரேஷ்ட புதல்வனான இவர் யாழ் பரியோவான் கல்லூரியில் தனது இளமைக்காலத்தில் 100யார் 220 யார் ஓட்டப்போட்டிகளில் முதல் இடம் பெற்றவர். அரசசேவையாக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் (R.D.O) பதவி பெற்று சேவையாற்றிய காலத்தில் கொழும்பில் நடைபெற்ற அகில இலங்கை அரச சேவையாளர் போட்டியில் 220 யார் ஓட்டப்போட்டியில் முதல் இடம் பெற்றவர். கொழும்பு ஆங்கில பத்திரிகை கள் இவரை “Running Machine of Jaffna” என்று புகழ்ந்தமை குறிப்பிடத்தக்கது.

## அமரர் தம்பிப்பிள்ளை துரைச்சாமி அவர்கள்



அரியாலையை பிறப்பிடமாக கொண்ட அமரர்கள் தம்பிப் பிள்ளை பூரணாம் பிகை தம்பதியினரின் இரண்டாவது புதல் வன், யாழ் பரியோ வான் கல்லூரி யில் கல்வி கற்ற காலத்தில் 100 யார் 220 யார் ஓட்டப் போட்டிகளில் முதலாவதாக வந்து சாதனை புரிந்தவர். இவர் தனது அரச சேவையை இலங்கை தபால் திணைக்களத்தில் பெற்று சேவையாற்றியவர் அகில இலங்கை அரச சேவையாளர்

களுக்கான கொழும்பில் நடைபெற்ற போட்டியில் வெறுங்காலுடன் 100 யார் ஓட்டப்போட்டியில்முதலாமிடம்பெற்றவர்.


### கல்லூரி மட்டம்

1945, 1946இல் யாழ் பரியோவான் கல்லூரி 1st Eleven உதைபந்தாட்ட அணி வீரன். இல்ல மெய்வல்லுனர் போட்டியில் 100 யார் ஓட்டத்தில் 1ஆம் இடம் பெற்றதோடு புதிய சாதனையை நிலைநாட்டியவர். Colours பெற்றவர்.

1946 இல் மாவட்ட ரீதியில் நடைபெற்ற கழகங்களிற்கிடையிலான மெய்வல்லுனர் போட்டியில் அரியாலை ஐக்கிய கழகத்திற்காக பங்குபற்றி 10.01 செக்கனில் 100 யார் ஓட்டத்தில் முதலாம் இடம்பெற்று புதிய சாதனை நிலை நாட்டியவர்.

1950 ஆண்டுகளில் அகில இலங்கை தபால் திணைக்களங்களிற் கிடையிலே கொழும்பில் நடைபெற்ற மெய்வல்லுனர் போட்டியில் முதலாம் இடம் பெற்றவர் கொழும்பு ஆங்கில பத்திரிகைகள் யாழ்ப்பாணத்தின் வெள்ளைக்குதிரை (White Horse of Jaffna) என்று புகழ்ந்தன.

## அமரர் சதாசிவம் சத்தியமூர்த்தி அவர்கள்



அரியாலையைப் பிறப்பிடமாக வும் வசிப்பிடமாகவும் கொண்ட அமரர்கள் தம்பிப்பிள்ளை சதாசிவம் பொன்னம்மா தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வனாக 05.05.1933 இல் பிறந்தார். ஆரம்பக் கல்வியையும், இடை நிலைக் கல்வியையும் முறையே யா/ அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை, யா/பரியோவான் கல்லூரி, யா/இந்துக் கல்லூரியில் கற்று, 1952ஆம் ஆண்டு அரச சேவையில் இணைந்து பின் விளையாட்டுத்துறையில் நிகழ்த்திய தேசிய மட்ட சாதனைகள் காரணமாக சிறைச்சாலைகள் திணைக்களத்தில் Jailor ஆக இணைந்து சிறைச்சாலைகள் திணைக்கள பிரதி ஆணையாளராக பதவி வகித்த சமயம் தனது 55 ஆவது வயதில் திடீர் அமரத்துவம் எய்தினார். இவர் யாழ் சிறைச்சாலைகள் திணைக்களத்தில் அத்தியட்சகராக (Superintend of Prisons) கடமைபுரிந்த காலத்தில் யாழ் Rotary club தலைவராகவும் Rotary – interact club தலைவராகவும் திகழ்ந்து சமூகப்பணி ஆற்றினார். யாழ். இந்துக் கல்லூரி மாணவர் தலைவராகவும் (Prefect) ஆகவும் இருந்துள்ளார். இவர் விளையாட்டுத்துறையில் கல்லூரி மட்டத்திலும், தேசிய மட்டத்திலும், நிகழ்த்திய சாதனைகள் பாராட்டுக் குரியவை. இவர் இலங்கையில் தயாரிக்கப் பட்ட முதல் தமிழ் திரைப்படமான “தோட்டக்காரி” மற்றும் “கடமையின் எல்லை” ஆகியவற்றில் நடித்து தனது கலை ஆர்வத்தையும் வெளிப் படுத்தியுள்ளர். மேலும் அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா நாடகங்களிலும் நடித்துள்ளார்.

### கல்லூரி மட்டம்

1950 ஆம் ஆண்டு இந்துக்கல்லூரி பசுபதி இல்ல விளையாட்டு பிரிவு தலைவர் 19 வயதிற்கு உட்பட்ட பிரிவு Senior Champion 400 மீற்றர், 800 மீற்றர் கெந்தி அடி வைத்துப் பாய்தல் முதலாம் இடம் “Best Performance” இற்காக முத்துச்சாமி சிவகுருநாதன் ஞாபகார்த்த கிண்ணம் Challenge cup பெற்றார்.

1951ம் ஆண்டு அதி சிரேஷ்ர பிரிவு Champion

## தேசிய மட்டம்

*1952ம் ஆண்டு அகில இலங்கை அரச சேவையாளர் மெய்வல்லுனர் போட்டி யில் 400 மீற்றர் 52.02.செக்கனில் ஓடி புதிய சாதனை*

*1953ம் ஆண்டு "ஏஸ்"* Ace Athletic Club *இல் இணைந்து* 4x200 *மீற்றர் அஞ்சலோட்டம் 1 நிமிடம் 33 செக்கனில் ஓடி அகில இலங்கை புதிய சாதனை.*

*1954ம் ஆண்டு* 4x400 *யார் அஞ்ச லோட்டம் அகில இலங்கை புதிய சாதனை,*

*1954ம் ஆண்டு 800 மீற்றர் 1500 மீற்றர்,* All Ceylon A.A.A. Meet 1*ம் இடம்*

*1955ம் ஆண்டு* 4x400 *மீற்றர் அஞ்ச லோட்டம் 3 நிமிடம் 27.02 செக்கனில் ஓடி அகில இலங்கை புதிய சாதனை*

**1955ம் ஆண்டு 800 மீற்றர் 1ம் இடம்**


*1956ம் ஆண்டு 800 மீற்றர்* All Ceylon A.A.A.*மெய்வல்லுனர் போட்டியில் இரண்டு(2) நிமிடங்களிற்குள் ஓடிய முதல் இலங்கையர் 1 நிமிடம் 59 செக்கன் அகில இலங்கை புதிய சாதனை.*

*அகில இலங்கை சாதனைக்காக அரியாலை ஐக்கிய கழகம் கொழும்பில் இருந்து அரியாலைக்கு அழைத்து கௌரவிப்பு*

1957*ம் ஆண்டு 800 மீற்றர், 1500 மீற்றர் 1ம் இடம்*

*1952ம் ஆண்டு 33வது அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா செயலாளர் அத்துடன் 63 ஆவது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாத் தலைவர்.*

## அமரர் கந்தையா பரமலிங்கம் அவர்கள்



*அரியாலையை பிறப்பிடமாகக்கொண்ட அமரர்கள் கந்தையா கனகம்மா தம்பதி யினரின் இளைய புதல்வனான அமரர் பரமலிங்கம் யாழ் பரியோவான் கல்லூரி யில் கல்வி கற்கும் காலத்தில் இல்ல மெய்வல்லுனர் போட்டிகளில் 13, 16, 19 வயதிற்குட்பட்ட பிரிவுகளில் பல போட்டிகளில் பங்குபற்றி பல தடவைகள் சம்பியனாக தெரிவு செய்யப்பட்டார். கல்லூரி சார்பாக எறிபந்தாட்டம், உதைபந்தாட்டம், ஹொக்கி அணிகளில் அங்கத்துவம் பெற்றதோடு கல்லூரி எறிபந்தாட்ட அணிக்கு 1959 ஆம் ஆண்டு தலைவராக இருந்துள்ளார். கல்லூரியில்* Colours *உம் பெற்றுள்ளார். 1959ஆம் ஆண்டு யாழ் மத்திய கல்லூரியில் நடைபெற்ற எறிபந்தாட்ட போட்டியில் 45 ஓட்டங்களுக்கு 5 இலக்குகள் எடுத்து பாராட்டு பெற்றவர்.*

*இலங்கை சிறைச்சாலைகள் திணைக்களத்தில் பதவி பெற்று கொழும்பு சென்று சிறைச்சாலைகள் திணைக்கள எறிபந்தாட்ட உதைபந்தாட்ட அணிகளில் இடம்பெற்று தனது திறமைகளை வளர்த்துக் கொண்டார். யாழ் மாவட்ட எறிபந்தாட்ட அணிகும் அவுஸ்திரேலியா விக்ரோறியா எறிபந்தாட்ட அணியினருக் கும் இடையில் 1959ஆம் ஆண்டு இடம் பெற்ற எறிபந்தாட்ட போட்டியின் ஆரம்ப பந்து வீச்சாளர் ஆவார்.*

## தேசிய மட்டம்

*அகில இலங்கை உதைபந்தாட்ட அணியில் இடம்பிடித்த முதல் தமிழர் என்ற பெருமை பெற்றவர். பல வெளிநாடு*

களிற்கிடையிலான போட்டிகளில் பங்குபற்றியவர். இவர் Centre Half நிலையில் விளையாடுவது அற்புதமாக இருக்கும்.

### அமரர் மயில்வாகனம் சண்முகலிங்கம் புறூடி அவர்கள்

அரியாலையைச் சேர்ந்த அமரர் கள் மயில்வாகனம் புறூடி கனகம்மா தம்பதியினரின் மகனான அமரர் சண்முகலிங்கம் புறூடி ரெனிஸ் விளை யாட்டில் இலங்கையில் தலை சிறந்து விளங்கியவர். கொழும்பில் பல உயர்தர பாடசாலைகளில் குறிப்பாக கொழும்பு சென்தோமஸ் கல்லூரியிலும் ரெனிஸ் பயிற்றுனராக பதவிவகித்து ஓய்வு பெற்றவர். அகில இலங்கை ரெனிஸ் சம்பியன் போட்டியில் பங்கு பற்றி பரிசில்கள் பெற்றவர். இவர். ரெனிஸ் விளையாட்டிற்காக தேசிய மட்டத்தில் பாராட்டுப்பெற்றவர்.

### அமரர் சிவஞானபோதம் சோமபாலன் அவர்கள்

வடமாகாணத்தில் எங்குமே தனியார் தோற்பந்து எறிபந்தாட்ட களம் இல்லாத குறையை **1965** ஆம் ஆண்டு அமரர் சோமபாலன் தன் தனிப்பட்ட முயற்சியால் அரியாலை மத்திய விளையாட்டு மைதானத்தில் ஏற்படுத்தி யதன் மூலம் பல கல்லூரி மாணவர்கள் மற்றும் கழக வீரர்கள் பயிற்சி பெற வைத்தார். **1965**ஆம் ஆண்டு அரியாலை மத்திய விளையாட்டு மைதானத்தில் தோற்பந்து எறிபந்தாட்ட அங்குரார்ப் பண வைபவத்தோடு கூடிய எறிபந்தாட்ட போட்டி Ariyalai Vetarans Vs அரியாலை மத்திய விளையாட்டு வீரர்களுடன் நடை பெற்றது. Vetarans அணிக்கு த.ஆலால சுந்தரம் தலைமையில் ஏ.அம்பலவாணர், Dr.T. அருளம்பலம், மு.தெய்வேந்திரா, சதானந்தன் போஸ், கோபாலபிள்ளை மாஸ்ரர் ஆகியோருடன் இன்னும் சிலர் பங்குபற்றியிருந்தனர். யாழ் மாவட்ட கல்லூரிகளில் பலர் தமது பருவகால ஆரம்ப போட்டியை அரியாலை மத்திய விளையாட்டு கழகத்துடனேயே விளை யாடினர் என்பது குறிப்பிடத்தக்கது. இவ் அணிக்கு சோமபாலன் அவர்களே தலைமை தாங்கினார். இவ் அணியில் V.K.சண்முகலிங்கம், ச.உருத்திரேஸ்வரன், ச.யுவராசா, சோ.குமரகுரு, சி.பாலசிங்கம், சிவபாலன், இம்மானுவல், பெனடிக்ற் போன்றோர் விளையாடியுள்ளனர். இவ் அணி யாழ் பரியோவான் கல்லூரி, யாழ்ப்பாண கல்லூரி, புனித சம்பத் திரிசியார் கல்லூரி, இலங்கை போக்கு வரத்து சபை அணி, காரைநகர் கடற்படை அணி, மருதானை தொழில் நுட்ப கல்லூரி அணியுடன் இதே மைதா னத்தில் விளையாடியது குறிப்பிடத்தக்கது.

### அமரர் தோழர் அருளம்பலம் விசுவநாதன் அவர்கள்



எமது பேரூரின் சமூகக்கட்டுமானங் களை உருவாக்கு வதில் முன்னின்று உழைத்த பெருமகன் விசுவநாதர் - காசிப் பிள்ளை அவர்களின் பேரனாகிய அமரர் அவர்கள் தனது தந்தையார் அப்புக்காத்து அருளம்பலம் அவர்களைப் போலவே சைவசமயத்தில் மிகுந்த பற்றுடையவராக விளங்கினார். அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாசாலை, அரியாலை நீர்நொச்சித் தாழ்வு ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயம் ஆகியவற்றின் முகாமைத்துவ தர்ம கர்த்தாவாக விளங்கிய இவர் சட்டத் தரணியும், கலைப்பட்டதாரியுமாவார். பொருளாதாரம், அரசியல் தொடர்பான பல புத்தகங்களை எழுதி வெளியிட்டவர்.

சமதர்மக் கொள்கையால் ஈர்க்கப் பட்ட இவர் ஸ்ரீலங்கா சமசமாஜக் கட்சியில் சேர்ந்து பாட்டாளிவர்க்கத் தினருக்காக உழைத்த பெருமகனாவார்.

அவர் கோவில் முகாமையாள ராகவும், பாடசாலை முகாமையாள ராகவும் இருந்த போதிலும் அதன் நிர்வாகத்தில் தலையிட்டதோ, அதன் மூலம் எந்த விதமான நலன்களையும் பெற்றவரோ அல்ல. அவர்களின் மூதாதையர் போலவே மிகவும் உயர்ந்த கண்ணியமான பண்புகளைக் கொண்டவ ராக விளங்கிய அவரை நினைவு கூரும் வகையில் அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம் அவரின் ஞாபகர்த்தமாக தமது திறந்த வெளி அரங்கிற்கு விசுவநாதன் கலை அரங்கம் என பெயர் சூட்டி கௌரவித்தமை சாலவும் பொருத்த மானதாகும். இவ்வாசிக சாலையின் தலைவராக இருந்து அதன் வளர்ச்சிக்கும், சிறப்புக்கும் பணியாற்றியவர். ஜனநாயக வாதியான இவர் தனது பரிபாலனத்தில் இருந்த அரியாலை நீர்நொச்சித்தாழ்வு ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்தின் நிர்வாகத்தை 1972 ஆம் ஆண்டில் அரியாலையிலுள்ள சைவ மக்களிடம் ஒப்படைக்கும் நோக்கத்துடன் 21 பேர் கொண்ட பரிபாலான சபையை நிறுவி கையளித்து தனது பொறுப்புக்களை ஒப்படைத்து அமரத்துவம் அடைந்து விட்டார்.

## அமரர் பொன்னம்பலம் சோதிநாதர் அவர்கள்

அரியாலை சுதேசிய திருநாள் கொண்டாட்ட முதலாவது விழாவில் சம்பாசனை மூலம் விழாவின் நோக் கத்தை மக்களுக்கு விளக்கிய பெருமைக்குரியவர். தனது ஆரம்பக் கல்வியை அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலையில் மேற் கொண்ட இவர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் தனது இடைநிலைக் கல்வியைக் கற்று பின் இறப்பர் பெருந்தோட்டத்தில் பணிபுரிந்தவர். அவ்வாறு பணிபுரிந்த காலத்தில் ஊர் மக்கள் பலருக்கு வேலைகள் தேடிக் கொடுத்த பெருந்தகையாவார். 1944 இல் தென்னிலங்கையில் ஏற்பட்ட கலவரத்தை யடுத்து யாழ்ப்பாணம் வந்த இவர் யாழ் யூனியன் நிறுவனத்தில் பணியாற்றிய வராவார். ஆன்மீகத்தில் ஈடுபாடுடைய இவர் தினமும் காலை, மாலை நேரங்களில் விநாயகர் கவசம் தோத்திரம் செய்வார். திருவெம்பாவை காலங்களில் திருவாதவூரர் அடிகள் புராணப்படிப்பு மேற்கொள்வார். சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாக்களில் நடை பெறும் சம்சாரிகள் ஓட்டப் போட்டியில் எப்போதும் முதலிடத்தை தக்க வைத்துக் கொண்ட பெருமைக்குரியவர். சிவ தொண்டர் நிலையத்தோடு ஈடுபாடு டைய இவர். சோதிடக் கலையிலும், தேர்ச்சி பெற்றவராவார். (1919 ஆம் ஆண்டில்) ஆரம்ப விழா ஆண்டிலேயே கலை நிகழ்ச்சியில் பங்குபற்றிய இக் கலைஞர் 21.12.1980 இல் அரியாலையில் சிவபதமடைந்து விட்டார்.

## அமரர் தம்பிப்பிள்ளை ஆலாலசுந்தரம் அவர்கள்



ஆலால் என பலராலும் அன்புடன் அழைக்கப்பட்ட அன்னார் பழகுவதற்கு மிகவும் இனியவர். பதவி மோகமில்லாத சேவையாளர். மிகுந்த உயரிய பண்புகளைக் கொண்ட கனவான். நீதியும் நேர்மையும் மிக்க இவர் அரியாலையூரின் சமூக, சமய வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்பு அளப்பரியது. நினைவு கூரத்தக்கது.

சிறப்பாக. எறிபந்தாட்டத் துறையில் எமது இளைஞர்களை முன்னிலைக்கு கொண்டு வருவதற்கு அரியாலை மத்திய விளையாட்டுக் கழகத்தின் களத்தில் நின்று தனது முதிர்ச்சியான அறிவை தொடர்ந்து போதித்ததைக் கூறலாம். பயிற்சியாளர் களை தனது நண்பர்கள் போல் கௌரவமாக நடத்துவதும் ஒரு தந்தையைப் போல் கண்டிப்பதும் இவரின் இயல்பாகும். அவர்களின் தனிப்பட்ட நலனிலும் அக்கறை கொண்டவராக இவர் விளங்கினார். அவர்களின் குடும்ப பொருளதார நிலையை கருத்திற்கொண்டு தனது தனிப்பட்ட பணத்தில் விளையாட்டு உபகரணங்களை வாங்கி வழங்கிய சம்பவங்கள் பல.


எமது சித்தி விநாயகர் ஆலயத்தின் வளர்ச்சியிலும் சிறப்பிலும் இவருக்கு பங்குண்டு. திருவிழாக்கள் ஒழுங்காகவும் நேரம் தவறாமலும் நடைபெறுவதற்காக நேரத்துடன் ஆலயத்தக்கு வருகை தந்து இளைஞர்களின் ஒத்துழைப்புடன் செயற்பட்டமை யாவரும் அறிந்த தொன்று. அரியாலை ஐக்கிய கழகத்தின் தலைவராக இருந்து கழகம் பல வெற்றிகளைப் பெற காரணகர்த்தாவாக இவர் விளங்கினார். அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்திலும் பல பதவிகளை வகித்தவர். அதன் சிறப்புக்கு காத்திரமான பங்களிப்பினை நல்கிய பெருமகன். அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவை நடத்துவதில் துடிப்புடன் செயற்பட்ட செயல்வீரர். பொன்விழாவின் இணைச் செயலாளராக தன்னை அர்ப்பணித்து அவர் ஆற்றிய பணி மெச்சத்தக்கது. அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவைச் சிறப்பாக நடாத்துவதற்கென அரியாலை மத்திய விளையாட்டு கழக மைதானத்தை உருவாக்குவதில் இவர் முன்நின்று உழைத்ததை என்றும் மறக்கமுடியாது. ஆம் மைதானத்தை மீட்டெடுப்பதே அவருக்கு நாம் செய்யும் நன்றிக்கடனாக அமைய வேண்டும்.

காலஞ்சென்றவர்களான தம்பிப் பிள்ளை - கனகாம்பிகை தம்பதியினரின் மூத்த பிள்ளையாகிய இவர் **1931.09.30** ஆம் திகதி அரியாலையில் பிறந்தார். யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரி, கொழும்பு உவெஸ்லி கல்லூரி என்பவற்றின் பழைய மாணவரான இவர் பாடசாலையின் கூடைப்பந்தாட்ட, கால்பந்தாட்ட அணிகளின் உப தலைவராகவும் எறிபந்தாட்டம், கொக்கி, மெய்வல்லுனர் அணிகளின் உறுப்பின ராகவும் விளங்கி அவ் அணிகளின் வெற்றிக்கு பெரும் பங்காற்றினார். சிறந்த குறுந்தூர ஓட்டவீரரான இவர் பாடசாலையில் **100** யார் ஓட்டப் போட்டியில் சாதனையை நிலை நாட்டினார். அமெச்சூர் மெய் வல்லுனர் போட்டியில் வெற்றிபெற்று சிறந்த முன்னணி ஓட்ட வீரராகத் திகழ்ந்தார். பாடசாலை கால்பந்தாட்டம், மெய் வல்லுனர் விளையாட்டுச் சாதனை யாளரான இவருக்கு Colours வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை தொழில்நுட்பக் கல்லூரியின் மின் எந்தரவியல் பாடநெறியைப் பூர்த்தி செய்த இவர் **1957** இல் மின்சார சபையின் மின்முகாரியாக இணைந்து பல பதவியுயர்வுகள் பெற்று இறுதியில் எந்தரவியல் உதவியாளராக கடமையாற்றினார். அக்காலத்தில் பல பின் தங்கிய கிராமங்களுக்கு மின் வசதிகளை ஏற்படுத்தி பலரது பாராட்டுக் களைப் பெற்றார். பல கோவில்களுக்கு மின்சார வசதிகளை வழங்கும் பாக்கிய மும் இவருக்குக் கிடைத்தது.

கொழும்பில் இவர் சேவையாற்றிய காலத்தில் கொழும்பு வை.எம்.சீ.ஏ. கழகத்தின் சார்பில் கொக்கி விளையாட்டில் ஈடுபட்டார். மேலும், இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்திய கூடைப்பந்தாட்ட, அணி தேசிய கொக்கி அணி என்பவற்றில் உறுப்பினராக விளையாடிய பெருமை இவருக்குண்டு. இலங்கை மின்சார சபையின் எறிபந்தாட்ட அணியில் இறுதிவரை விளையாடி அணியின் வெற்றிக்கு உழைத்தார். இலங்கை டேபிள் டெனிஸ் சம்மேளனத்தின் செயலாளராக 10 வருடங்களுக்கு மேலாக செயலாற்றியமை இங்கு குறிப்பிடத்தக்கது. எறிபந்தாட்ட பயிற்றுவிப்பாளராகவும் மெய்வல்லுனர் போட்டி மத்தியஸ்தகராகவும் விளங்கிய இவர் தனது 59 ஆவது வயதில் (1991.09.04) இப்பூவுலகை நீத்தார்.

## அமரர் செல்லையா அருளம்பலம் அவர்கள்



அப்பா அருளம்பலம் என அன்பாக அழைக்கப்படும் இவர் 26.07.1931 ஆம் ஆண்டில் அரியாலையில் பிறந்தார். அரியாலை நீர்நொச்சித் தாழ்வு ஸ்ரீ சித்தி விநாயகரின் மேல் பக்தி பூண்ட இவர் அக்கோவிலின் முதலாவது பரிபாலன சபையின் உறுப்பினராக தொண்டாற்றியவர். மிகவும் அன்பும், பண்பும் கொண்ட இவர் தனது கணக்கியல் கல்வியை இந்தியாவில் கற்றுத் தேறியவர். அரியாலை ஐக்கிய வியாபார சங்கத்தில் நீண்டகாலமாக பிரதம கணக்காளராக பணிபுரிந்தவர். அரியாலையில் இயங்கிய பல நிறுவனங்களில் கணக்குப் பரிசோதகராக பலமுறை தெரிவு செய்யப்பட்டு சமூக நிறுவனங்கள், நிதி விடயங்களில் சீராக இயங்க வழிகாட்டியாக திகழ்ந்தவர். அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய நிர்வாகத்தில் தலைவர் உட்பட பல பொறுப்பான பதவிகளை வகித்தவர். அதன் வளர்ச்சியில் அக்கறையுடன் செயற்பட்டவர். சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா அரியாலை நீர்நொச்சித் தாழ்வு ஸ்ரீசித்தி விநாயகர் ஆலய வீதியில் நடைபெற்ற காலங்களில் இவர்களின் தாய்வீடு தான் காரியாலயமாக செயல்படுவது வழக்கமாகும். அங்குதான் சோடனை வேலைகளை ஒழுங்குபடுத்தல், நாடக விடயங்களைக் கலந்துரையாடுவது போன்ற விடயங்களுக்கு ஒன்று கூடும் இடமாக விளங்கியது. அப்போதெல்லாம் இவரும் இவரின் சகோதரனான அமரர் செல்லையா கனகசபாபதி அவர்களும் ஒன்று கூடுபவர்களை முறையாக உபசரிப்பது வழக்கமாகும். இவ்வாறாக விழாவின் செயற்பாட்டுக்கு ஆதரவும், அனுசரணையும் வழங்கும் விருந்தோம்பல் பண்பு கொண்டவர். விழாவின் நிர்வாகத்தில் பல பதவிகளை வகித்தவர். இவ்விழாவின் கணக்குப் பரிசோதகராக பலமுறை தெரிவுசெய்யப்பட்டவர். நாடக நடிப்பிலும் ஆர்வமுள்ள இவர் அத்துறையிலும் கால் பதித்தவர். சமூக சீர்திருத்த நாடகங்கள் நடித்துள்ளார். சமதர்மக் கொள்கையில் நாட்டம் கொண்ட இவர் அமரர் தோழர் அ. விசுவநாதன் அவர்களுடன் இணைந்து சமூக நலப்பணிகளில் பங்குபற்றிய இவர் 13.02.2008 இல் அரியாலையில் அமரத்துவமடைந்து சிவபதமடைந்தார்.

## அமரர் தம்பிப்பிள்ளை பஞ்சலிங்கம் அவர்கள்



"மனிதர்கள் பெறும் புகழ் இரண்டு வகைப்படும். ஒன்று பெற்றுச் சாவது. இன்னொன்று செத்துப் பெறுவது. சரித்திரத்தில் நூற்றுக்கணக்கானவர்கள் பெற்றுச்

செத்தவர்கள், கோடிக் கணக்கானவர்கள் செத்துப் பெற்றவர்கள்" இவ்வாறு குறிப்பிடுவார் கவிஞர் கண்ணதாசன். இவ்விரண்டுக் குள்ளும் தன்னை அடக்கிக் கொண்டவர் அமரர் தம்பிப்பிள்ளை பஞ்சலிங்கம் அவர்கள். இவரின் உடலையும், உயிரையும் பஞ்சபூதங்கள் பிரித்து அழித்திருக்கலாம். ஆனால் இவரின் புகழும் பெயரும் என்றும் நின்று நிலவும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

அமரர் பஞ்சலிங்கம் அவர்கள் தான் பிறந்த மண்ணின் பால் தீராத பற்றுடையவர். நல்லதொரு சமூகத் தொண்டனாய், தொழிற்சங்கவாதியாய், கலைஞனாய், பண்பாளனாய், படைப் பாளியாய் தன்னை இம்மண்ணிற்கு இனங்காட்டிக் கொண்டவர். எந்தளவு புகழின் உச்சிக்குச் சென்றாலும் விண்ணைப் பார்த்து நடக்கமால் மண்ணைப் பார்த்து நடக்கும் தன்னடக்கம் என்றும் அவரோடு கூடவே இருந்தது.

இட்டு நிரப்ப முடியாத இழப்பு என்ற கூற்று அமரர் பஞ்சலிங்கத்தின் இழப்பிற்கு சாலப்பொருந்தும். காரணம் பரந்துபட்ட சேவையிலும், பணியிலும் அவர் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். அரியாலை சுதேசிய திருநாட் கொண் டாட்ட விழா அமைப்போடு பஞ்சலிங்கம் அவர்கள் கொண்டிருந்த உறவு மிக நெருக்கமானது.

அவர் வாழ்ந்த காலத்தில் இவ்வமைப்பிற்கு அமரர் ஆற்றிய சேவை பற்பல. சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவின் நிர்வாக உறுப்பினராக மிக நீண்டகாலம் பணியாற்றியவர். அது மட்டுமல்லாமல் நல்லதொரு நாடகக் கலைஞனாகவும் இவர் திகழ்ந்தார். அமரர் பாத்திரமேற்று நடித்த பல நாடகங்கள் அன்றைய நாளில் விழாவின் மேடையை அலங்கரித்தன என்றே கூற வேண்டும். இவரின் நாடகப் பணியினையும், கலைப்படைப்பினையும் பாராட்டி, சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா ஏற்பாட்டுக் குழுவினரால் 2004 ஆம் ஆண்டு சிறந்த கலைஞருக்கான விருது இவருக்கு வழங்கி வைக்கப்பட்டது. இவ்விருதினால் சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா அமைப்பு மேலும் பெருமை கொள்கிறது.

ஆசிரியராகவும், அதிபராகவும் பின்னாளில் உதவிக் கல்விப்பணிப் பாளராகவும் விளங்கிய இவரின் சேவையினை கல்விச் சமூகம் என்றென்றும் நினைவு கூரும். அரியாலை மண்ணிற்குக் கிடைத்த பெருங்கொடை என்றே நாம் இவரைக் கருதவேண்டும். இவர் எம்மத்தியில் இன்று இல்லா விட்டாலும் வாழும் ஜீவனாக என்றும் எம்மோடு இருக்கிறார்.

## அமரர் வைத்திய கலாநிதி தாமோதரம் அருளம்பலம் அவர்கள்



வைத்திய கலாநிதி அவர்கள் அரியாலை யில் 1929இல் பிறந்த வர் தனது ஆரம்ப கல்வியை அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியா சாலையிலும் இடை நிலைக் கல்வியை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலும் கற்றவர். கொழும்பு பல்கலைக்கழகத்தில் மருத்துவத்துறையில் கற்று வைத்திய கலாநிதியாகியவர். இலங்கையின் பல பாகங்களிலும் சேவையாற்றிய இவர் தனது மேற்படிப்பை ஐக்கிய இராச்சியத்தில் மனோதத்துவத் துறையில் கற்று உயர் பட்டம் பெற்ற இவர் தெல்லிப் பளை ஆதார வைத்திய சாலையில் மனோதத்துவப் பிரிவை ஆரம்பிப்பதில் முன்னோடியாக இருந் தார். சைவசமய பற்றுடைய இவர் அரியா லையின் சமய கலாசார வைபவங்களில் பங்கு கொண்டு

ஆதரவு நல்கும் மனப்பாங் குடையவர். கடமை உணர்வுடைய இவரின் சேவை பலராலும் மதிக்கத் தக்கதாக அமைந்தது. சுதேசிய திருநாட் கொண்டாட்டங்களில் ஈடுபாடுடைய இவர் இவ் விழாக்களில் பங்கு கொண்டு சிறப்பிக்கும் இயல் புடையவர். இவர் 1972 இல் இவ்வுலக வாழ்வை நீத்து சிவபதமடைந்து விட்டார்.

## அமரர் வைத்தியகலாநிதி மகேஸ்வரி அருளம்பலம் அவர்கள்

சிவானந்தம் என அன்பாக அழைக்கப்படும் அமரர் அவர்கள் தனது ஆரம்பக்கல்வியை அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலையிலும் இடைநிலைக் கல்வியை யாழ்ப்பாணம் சுண்டுக்குளி மகளிர் கல்லூரியிலும் கற்று கொழும்பு பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்கு தெரிவாகி வைத்திய கலாநிதியானார். பல வைத்தியசாலைகளில் கடமையாற்றிய இவர் தனது சேவைக்காலத்தில் கூடுத லாக யாழ்ப்பாணத்தில் பொது சுகாதார சேவைப் பிரிவில் வைத்திய நிபுணராகவும் பொறுப்பதிகாரியாகவும், பாடசாலை வைத்திய அதிகாரியாகவும் பதவி வகித்தவர். அரியாலை மக்களுக்கு இலவசமாக வைத்திய ஆலோசனை வழங்கி சகலராலும் விரும்பப்பட்டவர். 50வது சுதேசிய திருநாள் கொண்டாட்ட விழாவின் போது மாதர் நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கி முழுக்க முழுக்க பெண்பிள்ளைகளின் நிகழ்ச்சிகளை சிறப்பாக அரங்கேற்ற உதவிய தலைவி யாவார். இவர் சிவபதடைந்து விட்டார்.

## அமரர் வைத்தியகலாநிதி மயிலு கணேசரட்ணம் அவர்கள்



அமரர் வைத்திய கலாநிதி மயிலு கணேசரட்ணம் அவர்கள் கல்வி மேன்மையிலும் செல்வச் சிறப்பிலும் பண்பாட்டிலும் மேலோங்கிய அரியாலை பூர்வீக குடும்பங்களில் ஒன்றான விசுவர் குடும்பத்தைச் சேர்ந்த மயிலு மீனாச்சி தம்பதிகளுக்கு 05.12.1943இல் 7 ஆவது புத்திரனாக தோன்றினார்.

இவர் கொழும்பு றோயல் கல்லூரி, யாழ்ப்பாணம் சென் ஜோண்ஸ் கல்லூரிகளின் பழைய மாணவருமாவார். தனது மருத்துவ நெறியை 1963 - 1968 வரை பேராதனைப் பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ளும்போதே 1967 இல் பெரிய பிரித்தானியா மன்செஸ்ரர் பல்கலைக் கழகத்தின் புலமைப்பரிசில் பெற்றார். தனது மருத்துவக் கற்கை நெறியை முடித்த பின்னர் கண்டி போதனா வைத்திய சாலையில் உள்ளக பயிற்சியை முடித்துக் கொண்ட இவர் 1971 - 1974 காலப் பகுதியில் கொழும்பிலும் யாழ்ப் பாணத்திலும் சிரேஸ்ட மருத்துவராக பணியாற்றியுள்ளார். பிரித்தானியாவில் பட்டப்பின் படிப்பை நிறைவுசெய்த பின் சத்திரசிகிச்சை நிபுணராக மாத்தளையிலும் நீர்கொழும்பிலும் பணியாற்றிய இவர் 1986 - 1996 ஆண்டு காலப்பகுதியில் யாழ்ப்பாண போதனா வைத்தியசாலை யில் சிரேஸ்ட சத்திர சிகிச்சை நிபுணராக பணியாற்றினார். இடர்மிகுந்த அக் காலப்பகுதியில் இரவு பகலாக ஓய்வின்றி மனிதநேயத்துடன் அவர் செய்த தொண்டு காலவெள்ளத்தால் அழியாதது. இவ் இடர் காலத்தில் யாழ்ப்பாண பல்கலைக் கழக மருத்துவ பீடத்தின் சத்திரசிகிச்சை அலகு தடங்களின்றி தொடர்ந்து செயற்படுவதற்கு தன்னாலான பங்களிப்பை நல்கி இறுதி ஆண்டு மாணவர்களின் ஆசானாகவும் தலைமை பரீட்சகராகவும் செயற்பட்டார். யாழ்ப்பாண மருத்துவ சங்கத்தின் தலைவராக 1992 - 1994 ஆண்டு வரை பணியாற்றினார். யாழ்ப் பாண பல்கலைக்கழக பேரவை உறுப் பினராக செயற்பட்டார்.

1992-2003 ஆண்டு வரை கொழும்பு தேசிய வைத்தியசாலையில் மூத்த சத்திர சிகிச்சை நிபுணராக கடமையாற்றிய காலப்பகுதியில் கொழும்பு பல்கலைக் கழகத்தின் மருத்துவ பட்டபின் படிப்பு நிறுவனத்தில் சத்திரசிகிச்சை பயிலுனர் களுக்காக பயிற்றுவிப்பாளராக, மேற் பார்வையாளராக, பரீட்சகராகச் செயற் பட்டார். 2003 இல் ஓய்வுபெற்ற பின்பும் யாழ்ப்பாண மருத்துவ பீடத்துக்கு சத்திரசிகிச்சை துறையின் வருகைதரு பேராசிரியராக 2004 -2006 ஆண்டு வரை பணியாற்றினார். இலங்கை சத்திர சிகிச்சை நிபுணர்களின் கல்லூரியின் தலைவராக 2007 இல் பதவி வகித்த இவர் இலங்கை மருத்துவ சத்திரசிகிச்சை துறையின் வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க பங்கை வழங்கியுள்ளார். அன்னார் பொது மக்களுக்கும் யாழ்ப்பாண பல்கலைக் கழக மருத்துவ மாணவர் களுக்கும் வழங்கிய தன்னலம் அற்ற மீஉயர் சேவையினை கௌரவிக்கும் முகமாக யாழ்ப்பாண பல்கலைக்கழகம் 2010 இல் கௌரவ கலாநிதிப்பட்டம் வழங்கி சிறப்பித்தது.

நம்முள் ஒருவரான அன்னாரை எம்மூர் மக்கள் பெரிதும் விருப்பத்தோடு கௌரவித்த பல சந்தர்ப்பங்கள் உண்டு. அவற்றுள் அரியாலை சரஸ்வதி நூல் நிலையத்தின் பவள விழா தலைவராக தெரிவு செய்யப்பட்டமை, அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட நூற்றாண்டு விழா பெருந்தலைவராக தெரிவு செய்யப்பட்டவற்றை குறிப்பிடலாம். மேலும் யாழ்ப்பாண மக்களுக்கு மட்டுமல்லாது முழு இலங்கையருக்கும் அன்னார் வழங்கிய மருத்துவ சேவையை போற்றும் முகமாக இலங்கை கம்பன் கழகம் தனது பொற்சபையில் மகர யாழ் விருது வழங்கி கௌரவித்துள்ளது.

கொடை வள்ளலான இவர் தனது சொந்தக் காணிக்குள்ளேயே தனது சொந்தப்பணத்தில் தனது தாய் தந்தையரான அமரர்களான மயிலு மீனாச்சி தம்பதிகளின் ஞாபகார்த்தமாக கலியாண மண்டபத்தைக்க கட்டி ஏழை எளிய மக்கள் இலவசமாக பாவிப்பதற்கும் பொது வைபவங்கள் நடாத்துவதற்கும் உவந்தளித்த பெருமகனாவார். எமக்கு இலவச மருத்துவ சேவையை தொடர்ச்சி யாக வழங்கி வந்த உத்தமனை இழந்து விட்டோம்.

இவர் மிகவும் தன்னம்பிக்கையும் ஆற்றலும் அறிவும் பண்பட்ட தூய உள்ளங்கொண்ட புண்ணியவானாக வாழ்ந்து இயற்கையை விரும்பி பெற்று இனிப்பிறவாத பெருவாழ்வை அடைந்தார்.

## அமரர் சங்கீத பூஷணம் சபாபதிப்பிள்ளை பாலசிங்கம் அவர்கள்



சபாபதிப்பிள்ளை பாலசிங்கம் அவர்கள் 15.09.1929 ஆம் ஆண்டு அரியாலை யில் பிறந்தார். இசைப் பரம்பரையைக் கொண்ட இவரது தந்தையார் ஒரு அண் ணாவியார் ஆவார். அவரது நெறியாள்கை யில் மேடையேற்றப்பட்ட பல நாடகங் களில் பாலசிங்கம் அவர்கள் நடித்தும் பின்னணிப்பாடல்கள் பாடியும், ஆர் மோனியம் வாசித்தும் இளவயதிலேயே பிரபலம் அடைந்தார்.

பின்னர் 1955 ஆம் ஆண்டு இந்தியா சென்று அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் நான்கு வருடங்கள் முறைப்படி கர்நாடக இசையைப் பயின்று சங்கீதபூஷணம் எனும் பட்டத்தினைப் பெற்றார்.

அதே வருடம் யாழ் மாநகர சபை மண்டபத்தில் அப்போதைய அரசாங்க அதிபர் திரு. ம. ஸ்ரீகாந்தா தலைமையில் "இசை அரங்கேற்றத்தை" நிகழ்த்தி அனைவரதும் பாராட்டைப் பெற்றார்.

1959 ஆம் ஆண்டு அரசாங்கப் பாடசாலையில் இசை ஆசிரியராக நியமனம் பெற்று முப்பது வருடங்கள் சேவையாற்றி தனது அறுபதாவது (1989) வயதில் ஓய்வு பெற்றார். ஓய்வு பெற்ற அதே ஆண்டிலிருந்து 1992 ஆம் ஆண்டு வரை இராமநாதன் நுண்கலைக் கல்லூரியில் இடை வரவு விரிவுரை யாளராகப் பணியாற்றி பல மாணவர் களுக்கு இசை பயிற்றுவித்தார்.

1959 ஆம் ஆண்டில் நல்லூரில் ஆரம்பிக்கப்பட்ட "அண்ணாமலை இசைத் தமிழ் மன்றத்தின்" செயலாளராகப் பணியாற்றி, தமிழிசை வளர அரும்பாடு பட்டவர். மாதாந்த இசைக் கச்சேரிகள், வருடாந்த இசை விழாக்கள் போன்ற வற்றை சக அங்கத்தவர்களுடன் சேர்ந்து நடத்திப் புகழ் பெற்றவர். இவரிடம் இசை பயின்ற மாணவிகள் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக, உதவிக் கல்விப் பணிப்பாளராக, ஆசிரிய ஆலோசகராக, இசை ஆசிரியர்களாகப் பணிபுரிகின்றார் கள். வெளிநாடுகளிலும் இவருடைய மாணவர்கள் பலர் இசை ஆசிரியர்களாக விளங்குகிறார்கள். தனது சொந்த ஊரான அரியாலையிலும் "விஸ்வநாதன் இசைக் கல்லூரி" என்னும் நிறுவனத்தை ஆரம்பித்து இசை வகுப்புக்கள் நடத்தி இசை வளரப் பாடுபட்டவர்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தில் "அதி விசேட பிரிவு" பாடகராகத் தெரிவு செய்யப்பட்டு கர்நாடக இசைக்கச்சேரி, பண்ணிசைக் கச்சேரி என்பவற்றை முப்பது வருடங் களாக நிகழ்த்தியதுடன் "ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்திலும்" முதல் தரக் கலைஞராகத் தெரிவு செய்யப்பட்டு இசைக்கச்சேரி நிகழ்த்தி இலங்கையின் புகழ்பூத்த இசைக் கலைஞராக இனங் காணப்பட்டவர்.

இசைஞான பரம்பரையில் உதித்த இவர் தனது தந்தையான அண்ணாவி சபாபதிப்பிள்ளை அவர்களிடமே நேரடியாக நாடகம் பயிற்சி பெற்றவர். நளன் - தமயந்தி நாடகம் அரியாலை சனசமூக நிலையத்தில் அரங்கேற்றப்பட்ட போது அதில் தமயந்தியாகத் தோன்றி பலரதும் பாராட்டைப் பெற்றவர். திருமறைக் கலாமன்றம், இளம் கலைஞர் மன்றம், அரியாலை சுதேசிய திருநாள் கொண்டாட்ட விழா, அரியாலை சன சமூக நிலையம், கலாசார பேரவை போன்ற பல்வேறு அமைப்புக்களால் கௌரவிக்கப்பட்ட பெருந்தகையாவார். இவர் சிவபதமடைந்து விட்டார்.


## அமரர் சோதிநாதர் சிவசுந்தரம் அவர்கள்



அரியாலையில் பிறந்த அமரர் அவர் கள் கலைப்பட்ட தாரியாவார். ஆசிரிய ராக, அதிபராக பதவி வகித்த இவர் தனது கல்விச் சேவையை உள்நாட்டிலும். வெளி நாட்டிலும் வழங்கிப் பெரும் புகழ் பெற்றவர். எமது சுதேசிய திருநாள் கொண்டாட்ட விழாவின் கலை, விளையாட்டுப் போட்டிகளை நடாத்தி முடிப்பதில் பெரும் பங்காற்றியவர். குறிப்பாக விழாவின் பிரமாண்டமான தயாரிப்பாக வெளிவரும் நாடகங்கள் பலவற்றிலும் நடித்து புகழ் பெற்றவர். யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாசாலையில் ஆசிரியராக பணி யாற்றிய காலத்தில் மாணவர்களை நெறிப்படுத்தி நாடகங்களை அரங்கேற்றி யவர். 1965 ஆம் ஆண்டு பாடசாலைகளுக்

கிடையிலான நாடகப் போட்டியில் யாழ் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் பாதுகா பட்டாபிசேகம் என்னும் நாடகம், சாகிக்கிய மண்டல பரிசு பெறுவதற்கு மூலகாரணமாக விளங்கியவர். அரியாலை ஐக்கிய கழகம், அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம் ஆகியவற்றில் தலைவராக பணியாற்றிய இவர் அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் முன்பள்ளி கட்டடத்தை அமைப்பதில் பெரும் பங்காற்றியவர். மிகவும் அன்பாகவும், மரியாதையாகவும் நடந்து கொள்ளும் சுபாவம் கொண்ட இவர் சமதர்மக் கொள்கையில் மிகவும் ஈடுபாடுடையவராக விளங்கினார். அரியாலையில் 23.07.1929 இல் பிறந்த இவர் லண்டன் மாநகரில் 13.02.2011 இல் இவ்வுலக வாழ்வை நீத்தார்.

## அமரர் சபாரெத்தினம் சதானந்தன் அவர்கள் (சந்திரபோஸ்)



சந்திரபோஸ் என்று அன்பாக அழைக்கப் பட்ட இவர் எமதூரி லும் யாழ் மாவட்டத் தில் மிகவும் பிரபலிய மான பிரமுகராக விளங்கினார். எவருக் கும் எந்த நேரத்திலும் உதவிகளை செய்யத் தயாராகவே இருப்பார். நேர காலம் பார்க்காமல் தொண்டாற்றுகின்ற மனப்பான்மை யுடையவர். குறிப்பாக எமது சுதேசிய திருநாள் கொண்டாட்ட விழாக்களில் நிர்வாகத்தில் இருந்தால் என்ன? இல்லாவிட்டால் என்ன? அதைக் கொண்டு நடத்துவதில் முன்னின்று செயல்படுபவர். எந்தவித சாவலுக்கும் முகம் கொடுக்கக் கூடிய ஆற்றலுடைய வராக விளங்கினார். எவரோடும் மிகவும் நெருக்கமாகவும், அன்பாகவும் பழகும் இயல்புடையவர். பணத்தை சேர்த்து வைக்க வேண்டும் என்ற அவா அவரிடம் இல்லை. அதை நன்றாகச் செலவு செய்து ஆடம்பர வாழ்க்கை வாழ வேண்டும் என்ற கொள்கையுடைய இவர் தனது ஆரம்பக் கல்வியை அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலையிலும் பின் பரியோவான் கல்லூரியிலும் கற்றார். இவர் கூட்டுறவு பரிசோதகராகவும், ஆசிரிய ராகவும் கடமையாற்றி ஓய்வு பெற்றவர். பின் களியாட்ட விழாக்களை ஒழுங்கமைத்து நடாத்தும் தொழிலை மேற்கொண்டு வடமாகாணம் முழுவதும் பல நிகழ்ச்சிகளை நடத்திபெரும் பாராட் டைப் பெற்ற இவர் அரியாலையில் 1926 யூன் 21 ஆம் திகதி பிறந்த இவர் 1994 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 1 ஆம் திகதி லண்டனில் இவ்வுலக வாழ்க்கை நீத்தார்.


## அமரர் கந்தையா மகாலிங்கம் அவர்கள் (S.K. மகாலிங்கம்)



அரியாலையின் 07.09.1934 இல் பிறந்த அமரர் தனது ஆரம்ப கல்வியை கொழும்புத்துறை இந்து மகா வித்தியால யத்திலும் உயர்தரக் கல்வியை யாழ்ப் பாணம் பரி.யோவான் கல்லூரியிலும் மேற்கொண்டவர். மாணவ தலைவராய் இருந்தவர். இன்றும் அக்கல்லூரியின் மாணவர்கள் கூடும் மண்டபத்தில் அவரின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தியாவில் சையிதாப்பேட்டை பல்கலைக்கழகத்தில் உடற்கல்வி போதனாசிரியர் கற்கை நெறியை பூர்த்தி செய்தவர். பலாலி அரசினர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் ஆங்கில மொழியில் விசேட பயிற்சி பெற்று சென்

ஜோண்ஸ் கல்லூரியில் நீண்டகாலம் ஆங்கில ஆசிரியராக பணி புரிந்தவர். இயல்பாகவே எவருடனும் அன்பாகவும், பண்பாகவும் நடந்து கொள்ளும் இவர் தனது நாளாந்த வாழ்க்கையை நேர அட்டவணைக்கு ஏற்ப ஒழுங்குபடுத்தி கருமமாற்றும் கொள்கையுடையவராக விளங்கினார். விளையாட்டுத்துறை ஆர்வலர்களால் பெரிதும் மதிக்கப்படும் கவர்ச்சிமிக்க விளையாட்டு வீரராக மிளிர்ந்தவர். உதைபந்தாட்டம், எறிபந்தாட்டம், மெய்வல்லுனர் போட்டி என்பவற்றில் பாடசாலை, மாவட்ட மட்டத்தில் (Colours) பெற்ற சாதனை யாளராவார். அரியாலை ஐக்கிய கழகம், அரியாலை சனசமூக நிலையம் ஆகிய விளையாட்டு அணிகளில் தலைவராகவும் அங்கத்தவ ராகவும் இருந்து போட்டி களிலும் வெற்றி வாகை சூடி அரியாலை மண்ணுக்கு பெருமை சேர்த்த வீரர்களில் ஒருவராவார். ஒரு காலத்தில் யாழ்ப் பாணத்தில் சவாலுக்குட்படுத்த முடியாத லிங்கம் சகோதரர்களின் றிலே அணியில் ஒருவராக செயல்பட்டு அணியின் வெற்றிக்கு உழைத்தவர். யாழ்ப்பாண உதைபந்தாட்ட அணியின் தலைவராகவும் அங்கத்தவ ராகவும் செயல்பட்டு அதன் வெற்றிக்கும் முன்னேற்றத்துக்கும் உழைத்தவர். சிறந்த எறிபந்தாட்ட பயிற்றுவிப்பாளரான இவர் சென் ஜோண்ஸ் கல்லூரியில் நீண்ட காலம் பயிற்றுவிப்பாளராக கடமையாற்றி பல வீரர்களை உருவாக்கிய பெருமைக் குரியவர். அரியாலையில் நடைபெறும் விளையாட்டு போட்டிகளுக்கு மத்தியஸ்த ராக கடமையாற்றி போட்டிகள் சிறப்பாக நிறைவேற உழைத்தவராகும், குறிப்பாக அரியாலை சனசமூக நிலைய விளை யாட்டு போட்டிகளை ஒழுங்காக கால நேரத்துக்குள் முடிப்பதற்கு பெரிதும் உதவுபவர் இவரின் விளையாட்டுத்துறை சேவையை கௌரவித்து சுதேசிய திருநாள் கொண்டாட்ட விழாவினர் இவரை கௌரவித்தமை குறிப்பிடத்தக்கதாகும். இவ் விளையாட்டு வீரர் 27.03.2018 இல் இவ்வுலக வாழ்வை நீத்து சிவபதம் அடைந்து விட்டார்.

## அமரர் ச. சதாசிவம் அவர்கள்



சான்டோ மாஸ்ரர் என அன்பாக அழைக் கப்படும் இவர் அரி யாலையின் விளை யாட்டுத்துறை, கலைத் துறை ஆகியவற்றுக் குப் பெரும் பங்காற்றிய தொண்டராவார். அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாக்களில் பல தசாப்தமாக சகல துறைகளிலும் செயற்பட்ட பெருமைக் குரியவர். குறிப்பாக சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா நாடகங்களை நெறிப்படுத்துவதில், ஒழுங்கமைப்பதில் பங்கு கொள்பவர். தனது 12 ஆவது வயதில் கிருஷ்ணன் தூது நாடகத்தின் மூலம் கலை உலகில் பிரவேசித்த இவர் நாடகக் கலையோடு இசை, நடனம் போன்ற கலைகளும் அரியாலையில் வளர உறுதுணையாக இருந்தவர். அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாசாலையில் தனது ஆரம்பக் கல்வியை ஆரம்பித்த இவர் ஆசிரியர் சேவையில் இணைந்து பின் அதிபராகக் கடமையாற்றி இளைப்பாறிய வராவார். 1974 இல் நடைபெற்ற உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் இவரால் நெறியாள்கை செய்யப்பட்ட "பாதுகை" நாடகம் பலராலும் பாரட்டப்பட்டது. மேலும் நாவலர் பெருமானின் நூற்றாண்டு விழாவையொட்டி மேடையேற்றப்பட்ட "நல்லை நகர் நாவலர்" என்ற நாடகமும்

பலரதும் பாராட்டுக்களைப் பெற்றது. இவரது கலைச்சேவையைப் பாராட்டி **1983** ஆம் ஆண்டு நடைபெற்ற சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவின் சிறந்த கலைஞருக்கான விருது வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டது.

கலைத்துறையைப் போலவே விளையாட்டுத் துறையிலும் ஆர்வமிக்க இவர் பாரம் தூக்குதல், குண்டெறிதல் என்பவற்றில் எப்போதும் எமது ஊரில் பரிசில்கள் பெற்றுக் கொள்வார். சிறந்த கரபந்தாட்ட வீரரான இவர் யாழ் மாவட்ட கரபந்தாட்ட அணியில் ஒருவராக விளங்கியவர். மேலும் சமயப் பணிகளிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட இவர் அரியாலை ஸ்ரீஞான வைரவர் ஆலயம், நாயன்மார்கட்டு ஸ்ரீ இராஜஇராஜேஸ்வரி ஆலயம் போன்ற கோவில்களின் திருப்பணிகளில் முன்னின்று உழைத்தவர். தினமும் யோகாசனப் பயிற்சியை மேற்கொள்ளும் இவர் எப்போதும் புன்சிரிப்புடன் வெள்ளை வேட்டியும், நஷினலும் அணிந்த வண்ணம் தோற்றம் அளித்த இவர் இன்று எம்முடன் இல்லை, சிவபதமடைந்து விட்டார்.

## அமரர் ஆறுமுகம் சண்முகநாதன் அவர்கள்



அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியா சாலை, யாழ்ப்பாணம் பரி.யோவான் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவரான இவர் இலங்கை மக்கள் வங்கியில் உயர்பதவி வகித்து இளைப்பாறிவராவார். இளம் வயதிலிருந்தே சமூகசேவையில் தன்னை அர்ப்பணித்தவர். அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவில் முக்கிய பொறுப்பாளராக பதவி வகித்து அதன் சிறப்புக்கு தொண்டாற்றியவர். அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்திலும் முக்கிய பதவிகளை வகித்தவர். அரியாலை ஐக்கிய கழகத்தின் செயலாளராக நீண்டகாலம் செயலாற்றி அதன் வெற்றிக்கு பெரிதும் உழைத்தவர். அரியாலை கிராம அபிவிருத்திச்சங்கம், அரியாலை நாடக மன்றம், அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானம், ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை பழைய மாணவர் சங்கம், இளைஞர் விவசாயக் கழகம் ஆகியவற்றில் முக்கிய பதவிகளை வகித்த இவர் சமதர்மக் கொள்கையில் நம்பிக்கையுடைய தொண்டனாக வாழ்ந்து மறைந்த அரியாலை மைந்தர்களில் ஒருவராவார்.


## அமரர் நவரத்தினம் சண்முகராசா (சந்திரா) அவர்கள்



சந்திரா என அன்பாக அழைக்கப்படும் அரியாலையில் **23.10.1937** இல் பிறந்தவர் தனது ஆரம்ப கல்வியை அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியா சாலையிலும் இடைநிலை கல்வியை யா/ கனகரத்தினம் மத்திய மகா வித்தி யாலயத்தில் கற்றவர். தபால் திணைக்களத்தில் கடமையாற்றி ஓய்வு பெற்றவராவார். சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாக்களின் நிர்வாகத்தில் பல பதவிகளை வகித்து விழா சிறப்பாக நடைபெறுவதற்கு பெரிதும் உழைத்தவராவார். சிறந்த கலைஞரான இவர் பல்வேறு கால கட்டங்களில் பல நாடகங்களை நடித்து புகழ் பெற்றவர். சிறப்பாக பெண் பாத்திரங்களை ஏற்று பலரதும் பாராட்டுக்களைப் பெற்றவர். கதாநாயகியாக பல நாடகங்களில் நடிக்கும் வாய்ப்பைப் பெற்றவர். கர்ணன்,

இராஜராஜசோழன் இவரின் வெற்றி நாடகங்களில் சிலவாகும். மிகவும் இனிமையாகவும் கலகலப்பாகவும் பேசும் இயல்புடையவர். சினேக பாவத்துடன், விட்டுக்கொடுக்கும் இயல்பினர். பரந்துபட்ட எமதூரில் பல நண்பர்களைக் கொண்ட சமூகநலன் கொண்ட தொண்டனாவார். உதைபந்தாட்டம் போன்ற விளையாட்டுகளில் ஆர்வம் கொண்ட இவர் ஓர் சிறந்த ரசிக்கும் அறிவிப்பாளருமாவார், வினோத ஆடை போட்டியாளருமாவார். இவர் **23.10.2000** ஆம் ஆண்டில் இவ் பூவுலகை நீத்து சிவபதமடைந்து விட்டார்.

## அமரர் செல்வரெத்தினம் மோகனரஞ்சிதம் அவர்கள்



S.M. ரஞ்சன் என அழைக்கப்படும் இவர் **14.06.1942**இல் பிறந்து **14.05.2013** இல்இவ்வுலகவாழ்வை நீத்தவர் யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரியின் பழைய மாணவரான இவர் சிறந்த அறிவிப்பாளராவார். எமது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாக்களில் நிகழ்ச்சித் தொகுப்பாளராக அறிவிப்பாளராக கடமை ஆற்றியதோடு நிர்வாக சபையில் பல பதவிகளை வகித்தவர். வட மாகாணத்தின் பல பாகங்களிலும் சந்திரபோஸ் அவர்கள் நடத்திய களியாட்ட நிகழ்ச்சிகளுக்கு அதிகளவு மக்களை இழுக்கும் சக்தியாக இவரது கணீர் என்ற குரல் உந்து சக்தியாக விளங்கியது. காலம் நேரம் பாராது சேவையாற்றியவராவார். சிறந்த கடவுள் பக்தி கொண்டவர். யாழ்ப்பாண முற்ற வெளியில் நடைபெறும் விளையாட்டுப் போட்டிகள் பலவற்றுக்கு வர்ணனை யாளராக செயல்பட்டு கலகலப்பான தன்மையை ஏற்படுத்துவதோடு, சமயோசித புத்தியோடு பார்வையாளர்களை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரக்கூடிய வல்லமை படைத்தவராக விளங்கியவர் மிகவும் இனிய சுபாவம் கொண்டவர். எல்லோருடனும் அன்பாக பழகும் இயல்பினராவார்.

## அமரர் பொன்னம்பலம் தவநாதன் அவர்கள்



சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாக்கள் பலவற்றில் வினோத ஆடைப் போட்டியில் பங்கு கொண்டு விழாவை கலகலப்பாக்கும் கலைஞரான இவர் அரியாலையில்பிறந்தவர். கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம், யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவராவார். சிறந்த உதைபந்தாட்ட வீரரான இவர் பரி. யோவான் கல்லூரியின் உதைபந்தாட்ட அணியிலும் அரியாலை ஐக்கிய கழக அணியிலும் பங்கு கொண்டு அணியின் வெற்றிக்காக உழைத்த விளையாட்டு வீரராவார். அரியாலை சனசமூக நிலையத்தின் விளையாட்டு அணிகளில் பங்குகொண்டு அதன் வெற்றிக்கு உழைத்தவராவார். சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாக்களில் நிர்வாக உறுப்பினர் பதவி உட்பட பல பதவிகளை வகித்த பெருமைக்குரியவர். சிறப்பாக சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாக்களிலும் மேடையேற்றப்படும் மகிழ் நாடகங்கள் பலவற்றிலும் நடித்து சபையினரை கலகலப்பாக வைத்திருக்கும் கலைஞராக திகழ்ந்தவராவார். ஆண் பாத்திரம் மட்டுமல்ல பெண் பாத்திரங் களிலும் தோன்றி பலரதும் பாராட்டுக் களைப் பெற்றவராவார். குறிப்பாக

"வாய்க்கார வள்ளி" என்ற சிரிப்பு நாடகத்தில் வாய்க்கார வள்ளியாகத் தோன்றி அவர் காட்டிய முகபாவனை சொல் உச்சரிப்புத்தன்மை நளினம் என்றும் நினைவில் நிற்கத்தக்கதாகும். சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாக்களில் கலை விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்ற அமரர் **06.02.1943** இல் பிறந்து **19.01.1998** இல் சிவபதமடைந்து விட்டார்.

## அமரர் அருளானந்தம் சந்திரகுமார் அவர்கள்



நகைச்சுவை நாடகங்களை வெற்றிகரமாக மேடையேற்றிய அமரர் தனது உடல் அசைவுகளாலும் முக பாவனையாலும் பல உள்ளங்களை மகிழ்வித்து சிரிக்க வைத்த கலைஞராவார். எந்நேரமும் மகிழ்ச்சியாகக் காணப்படும் இவரை மேடைகளில் பார்த்ததும் சிரிப்பு வரும். அவரது தோற்றம் உடலை வளைத்து, அவர் பேசும் விதம், உடுக்கும் உடை அலங்காரம், எடுக்கும் நாடகக் கருப்பொருள் எல்லாமே சந்திரகுமார் என்ற இயல்பான நகைச்சுவைக் கலைஞனை இலகுவில் அடையாளம் காட்டி விடும். **1949** இல் அரியாலையில் பிறந்த இவர் ஆரம்பக்கல்வியை அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாசாலையிலும், உயர் கல்வியை யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்திலும் கற்றுத் தேறியவர். கொக்குவில் பல்தொழில் நுட்பக் கல்லூரியில் உதவி நூலகராகப் பணிபுரிந்தவர். இடம் பெயர்ந்த நிலையிலும் தனது கலை ஆர்வத்தைக் கைவிடாத இவர் சங்கரத்தை இந்து வாலிபர் முன்னேற்ற சங்கத்தின் வேண்டுகோளை ஏற்று அவர்களுடன் இணைந்து "கண்டறியாத கல்யாணம்" என்ற நாடகத்தை நெறியாளுகை செய்து பாராட்டைப் பெற்று அரியாலைக்குப் புகழைத் தேடிக் கொடுத்தவராவார். யாழ் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர் மன்றத்தினரால் கௌரவிக்கப்பட்டவர். சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவில் சிறந்த கலைஞருக்கான கௌரவத்தைப் பெற்றுக் கொண்டவராவார். அத்தோடு அரியாலை ஐக்கிய கழகத்தினர் இவருக்கு "கலைஜோதி" என்ற பட்டத்தை வழங்கிக் கௌரவித்தமை குறிப்பிடத்தக்கதாகும். சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாக்கள் பலவற்றில் நகைச்சுவை நாடகங்களை மேடையேற்றிய இவர் சிவபதமடைந்து விட்டார்.

## அமரர் கணபதிப்பிள்ளை மகேஸ்வரன் அவர்கள்



அரியாலையில் **21.04.1937** இல் பிறந்த அமரர் தனது ஆரம்பக்கல்வியை கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலத்திலும் பரமேஸ்வராக் கல்லூரியிலும் கற்று உயர்தரக் கல்வியை யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரியிலும் கற்றவர். நாடகக் கலைஞரான இவர் அரியாலை சனசமூக நிலையத்திலும் சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாக்களிலும் பல நாடகங்களில் நடித்து பெயர் பெற்றவர். குறிப்பாக பிருதிவி ராஜன், சித்தூர்ராணி பத்மினி, முகமது கோரி போன்றவற்றில் மக்களை கவரும் விதமாகவும் பாத்திரத்துக்கு ஏற்றவிதமாகவும் நடிக்கும் வல்லமை படைத்தவராக விளங்கினார். தனக்கு பொருத்தமான பாத்திரத்தை வாதாடிப் பெற்றுக் கொள்ளும் ஆர்வ மிக்க

கலைஞராக காணப்பட்டார். நாடகங்கள் பழகும் போது உரிய நேரத்துக்கு வருகைதரும் நேர ஒழுங்குக்கு அமைவாக செயல்படுபவர். பொதுவாக விளை யாட்டுக்களில் ஆர்வமுள்ள இவர் உதைபந்தாட்ட அணியில் அங்கம் வகித்தவர். கலையிலும், விளையாட்டி லும் ஆர்வம் மிக்க இவர் 17.03.2006 இல் சிவபதமடைந்து விட்டார்.

## அமரர் கணபதிப்பிள்ளை சண்முகலிங்கம் அவர்கள்



அரியாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் கணபதிப்பிள்ளை செல்லம்மா தம்பதி களுக்கு சிரேஷ்ட புத்திரனாக 18.02.1942 இல் பிறந்தார். அன் பினை உயிராகவும், அறத்தினை வளமாகவும், அரிய நற் பண்புகளை உடலாகவும் கடமை, நேர்மை என்பவற்றைக் கண்களாகவும் கொண்டு வாழ்ந்து வந்தார். இவர் ஆரம்பக் கல்வியை யா/அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாசாலையிலும், இடைநிலைக் கல்வியை யா/ கனகரத் தினம் மத்திய மகா வித்தியாலயத்திலும் (ஸ்ரான்லிக் கல்லூரி) பயின்றார். இவர் இளம் வயது முதல் சமய அனுட்டானங் களில் நம்பிக்கை உடையவராய் கோயில் தொண்டில் தம்மை ஈடுபடுத்த விருப்பங் கொண்டு நல்லூர் கந்தசுவாமி கோயிலில் கணக்காளராகக் கடமை புரிந்தார். ஆசிரியராகவும், அதிபராகவும் பணி யாற்றிய இவர் தம்மை முழுமையாக பொதுச்சேவையில் ஈடுபடுத்திக் கொண்டார். யாழ் அரியாலை ஸ்ரீ ஞான வைரவர் கோயிலில் 40 வருடங்களுக்கு மேல் செயலாளராகவும், அரியாலை அருணோதயா சனசமூக நிலையத்தின் தலைவர், உபதலைவராகவும், அரியாலை அபிவிருத்திச் சங்கத்தின் செயலாள ராகவும், அரியாலை ஸ்ரீ ஞான வைரவர் கோயில் அறநெறிப் பாடசாலையின் ஆசிரியராகவும், யா/ கனகரத்தியம் மத்திய மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்க உறுப்பினராகவும், அரியாலை மத்தி அபிவிருத்திச் சங்க போஷகராகவும், யாழ்ப்பாண சைவ பரிபாலனசபை உறுப்பினராகவும், நல்லூர் மத்தியஸ்தர் சபை உறுப்பினராகவும் இருந்து சேவைகள் புரிந்தமை இவரின் பொதுச் சேவையினைப் பறைசாற்றுகின்றது. இவரது பொதுச் சேவைகளைப் பாராட்டி 84 ஆவது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவின்போது (2003) சிறந்த சமூக சேவையாளருக்கான கௌர வத்தைப் பெற்றார். இவர் அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவில் இடம்பெறும் கலைப் போட்டிகளில் ஒன்றான சமய அறிவும் திருக்குறளும் போட்டிக்குரிய சகல பிரிவுகளுக்கும் உரிய வினாத்தாள்களை பல வருடங்களாகத் தானே தயாரித்து மதிப்பீடும் செய்து தந்தவராவார். அவர் நீத்த பின் அவரது குடும்பத்தினர் அவரது ஞாபகார்த்தமாக சமய அறிவும், திருக் குறளும் போட்டிக்குரிய பரிசை வருடந்தோறும் வழங்கி வருகின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. இவர் சிவபதம் அடைந்து விட்டார்.


## அமரர் இராமப்பிள்ளை சேதுராசா அவர்கள்



அரியாலையில் 18.07.1946 இல் பிறந்த அமரர் அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியா சாலை, யாழ்ப்பாணம், பரி. யோவான் கல் லூரி ஆகியவற்றின் மாணவராவார். எல் லோராலும் விரும்பப்படும் விதத்தில் நடந்து கொள்ளும் இயல்பினர் சைவ


சமயத்தில் மிகவும் ஈடுபாடு கொண்டவர். கோவில் வழிபாட்டை மிகுந்த சிரத்தை யோடு தொடர்ச்சியாக கடைப்பிடிக்கும் பக்தனாக விளங்கினார். மற்றவர்களை மகிழ்விக்கும் விதமாக பேசும் வல்லமை படைத்தவர். இதனால் பலரும் அவரைச் சந்திக்கும்போது அவருடன் சிறிது அளவளாவி மகிழ விரும்புவது இயல்பா கும். அநேகமாக எல்லோருடைய நன்மை, தீமை நிகழ்வுகளில் பங்குகொண்டு சமூகக்கடமையை நிறைவேற்றுவதில் அக்கறையுடன் செயல்படுபவர். எவரை யும் மனம் நோகாமல் காரியம் பார்ப்பதில் வல்லவராகத் திகழ்ந்தார். அரியாலை அருணோதயா நூல் நிலையத்தின் வளர்ச்சியிலும் அபிவிருத்தியிலும் முக்கிய பங்கு வகித்தவர். அதில் தலைவர் உட்பட பல பொறுப்பான பதவிகளை வகித்தவர். சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாக்களின் நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டு அவற்றின் சிறப்புக்கு பங்காற்றிய இவர் 09.01.2012 இல் இவ் பூவுலக வாழ்வை நீத்து சிவபதமடைந்து விட்டார்.

## அமரர் நாகலிங்கம் செல்வராசா அவர்கள்



அமரர் அவர்கள் தனது கல்வியை அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாசாலையில் மேற்கொண்டு யாழ் சென் ஜேம்ஸ் மகா வித்தியாலயத்தில் பாடசாலை உதவி யாளராக சேவை செய்து ஓய்வு பெற்றவர். இவர் சமூகச் செயற்பாடுகளில் பல்வேறு பணிகளை ஆற்றியுள்ளார். அரியாலை கலைவாணி சனசமூக நிலையத்தில் தலைவர் உட்பட பல பொறுப்பான பதவிகளை வகித்த பெருமைக்குரியவர். முற்றாக சேதமடைந்த நூல் நிலையத்தை புனரமைப்பதற்காக அயராது உழைத்த பெருமகனாவார். கிராம அபிவிருத்திச் சங்க தலைவராகப் பணிபுரிந்து எமதூரின் அபிவிருத்திக்கு முன்னின்று உழைத்தவராவார். அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலையின் பழைய மாணவர் சங்க உறுப்பினராக நீண்டகாலம் பணியாற்றியவர். கெடுபிடியான கால கட்டத்தில் அரியாலை மக்களின் நெற்செய்கையை மீள மேற்கொள்ள அரும்பாடுபட்டு உழைத்தவர். ஆத்மீக பணியில் ஆர்வம் கொண்ட இவர் அரியாலை கொட்டுக் கிணறு மாணிக்கப் பிள்ளையார் ஆலயத்தின் பரிபாலன சபையின் தலைவராக செயல்பட்டு சிதைவடைந்து இருந்த ஆலயத்தை புனருத்தாரணம் செய்வதற்கு அரும்பாடு பட்டவர். மிகவும் பண்பு நிறைந்த இவர் பழகுவதற்கு மிகவும் இனிமையானவர். மற்றவர்களுடன் கௌரவமாக பழகும் இயல்புடையவர். சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவின் நீண்டகால நிர்வாக உறுப்பினராக கடமையாற்றி அவ் விழாக்கள் சிறக்க உதவியவர். 2011 ஆம் ஆண்டில் சிறந்த சமூக சேவையாளராக கௌரவிக்கப்பட்டவர். 2011 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் சிவபதம் அடைந்து விட்டார்.


## அமரர் கந்தையா சோதிநாதன் அவர்கள்



அரியாலையில் பிறந்த இவர் பெரிய பிரித்தானியாவுக்கு புலம் பெயர்ந்தவரா வார். 1979 ஆம் ஆண்டில் லண்டனில் அரியாலை மக்களை கூட்டி ஒரு தமிழ் சங்கத்தை லண் டனில் அமைத்தவர் களில் முக்கிய பங்கு வகித்தவர். இச்சங்கம் பிறன்ற் தமிழ்ச் சங்கம் என்று பதிவு செய்யப்பட்டுள்ளது

குறிப்பிடத்தக்கதாகும். இச்சங்கத்தின் கொடியும் எமது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவில் எமது அடையாளத்தை பிரதிபலிக்கும் நந்திக் கொடி அமைப்பைப் போன்று காணப் படுகிறது. முத்தமிழ் விழா என்ற அடிப் படை யில் கலை கலாச்சார விழாக்களும், கோடை காலங்களில் மெய் வல்லுநர் போட்டிகளும் பெருவிளையாட்டுக் களும் நடாத்துவதற்கு ஏற்ற வகையில் ஒழுங்கமைப்பு முறையை உருவாக்கு வதில் சோதிநாதன் ஆற்றிய பங்களிப்பு குறிப்பிடத்தக்கது. 2000 ஆம் ஆண்டில் இச்சங்கம் பிரித்தானியா சட்டத்திற்கமைய ஒரு தருமஸ்தாபனமாக பதிவு செய்யப் பட்டுள்ளது. இதற்கு அமரரே முன்னோடி யாக செயல்பட்டு ஆரம்ப நடவடிக்கை களை எடுத்தார் என்பது குறிப்பிடத் தக்கது. இந்த ஆரம்ப நடவடிக்கை திரு.சு.ஜெகன் மோகனால் நிறைவேற்றப் பட்டதை எண்ணி அமரர் திருப்திய டைவார். இவரின் செயல்பாடுகளை கௌரவித்து தமிழ் சங்கம் பொன்னாடை போர்த்தி கௌரவித்தமை குறிப்பிடத்தக்க தாகும். அரியாலையில் வாழ்ந்த காலத்தில் சுதேசிய திருநாட் கொண்டாட்ட நாடகங்களில் நடித்து பெருமை சேர்த் துள்ளார். மனோன்மணி நாடகத்தில் முக்கிய பாத்திரமேற்று பலரதும் பாராட்டுக் களைப் பெற்றவர் என்பது குறிப்பிடத் தக்கதாகும். இவர் 2016 ஆம் ஆண்டில் லண்டனில் சிவபதமடைந்து விட்டார்.

## அமரர் சின்னத்தம்பி ஆனந்தசுந்தரம் அவர்கள்



அரியாலையில் 13.04.1938 ஆம் ஆண்டு பிறந்த இச் சமூக சேவையாளர் அரியாலையின் சிறந்த விவசாயியாக விளங் கியவர். அன்பும், பண்பும் ஒழுக்கமும் நிறைந்த இவர் பழகுவதற்கு மிகவும் இனிமையானவராக காணப்பட்டார். மிகவும் நகைச் சுவையாகப் பேசவல்ல இவர் ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்மன் ஆலய பரிபாலன சபைத் தலைவராகவும், இத்திருப்பணிச்சபை உறுப்பினராகவும் இருந்து ஆலய வளர்ச்சிக்கு ஆலோசனை களும் உதவிகளும் செய்த சமூகத் தொண்டனாவார். அரியாலை ஸ்ரீ கொட்டுக் கிணற்று மாணிக்கப்பிள்ளை யார் ஆலய தலைவராகவும் செயல்பட்டு அதன் வளர்ச்சிக்கு அர்ப்பணிப்புடன் செயலாற்றியவர். சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவினரால் சிறந்த சமூக சேவையாளருக்கான கௌர வத்தைப் பெற்ற இவர் 16.04.2014 ஆம் ஆண்டு சிவபதமடைந்து விட்டார்.

## அரியாலையின் முதலாவது விதானையார் சின்னத்தம்பி அவர்கள்




அரியாலையின் மைந்தனாக முருகேசு தெய்வானைப்பிள்ளை யின் இளைய மகனா கப் பிறந்த சின்னத்தம்பி அவர்கள் வளரும் காலத்தே ஆளுமை மிக்கவராகவும், சிறந்த மொழிப் புலமையாளராகவும் விளங்கி னார். அவரது பேச்சை பொன் மொழி களும், மரபுத் தொடர்களும் வளம் பெறச் செய்யும். அவரது திறமையும் கல்வி அறிவும், ஆளுமையும் ஆங்கிலேய ராட்சியில் கிராமத்துக்கு ஒரு விதா னையை நியமித்தபோது அரியாலை கிராம விதானையாளராக நியமனம் பெற வைத்தது.

கிராமத்தில் ஏற்பட்ட பிணக்குகள், காணிச் சண்டைகள், குடும்பத் தகராறுகள்

போன்றவற்றில் நியாயமான முடிவுகள், தீர்வுகள் வழங்கியும் சமயச் சடங்குகள் கோவில் விழாக்கள் போன்றவற்றில் முன்னின்று உழைத்தும், ஏழை மக்களுக்கான உதவிகள் வழங்கியும் மக்கள் மனதில் இடம் பிடித்தார்.

விதானையார் என்ற பதத்திற்கு அடையாளமாக விளங்கிய சின்னத்தம்பி விதானையாரின் பெயர் குடும்ப முழுமைக்கும் வழங்கலாயிற்று. அது மட்டுமன்றி மிகச் சிறந்த திறமையான விவசாயியான இவர் சிறந்த உழைப்பாளி யாகவும், சிக்கனம் பேணுபவராகவும் வாழ்ந்ததும் இவ்விடத்தில் குறிப்பிடத் தக்கது. அன்னார் 1986 ஆம் ஆண்டில் இவ்வுலகை நீத்தார்

## அமரர் பொன்னம்பலம் விஜயரத்தினம் அவர்கள்



அரியாலையில் 23.06.1941 இல் பிறந்த இவர் யாழ். பரியோவான் கல்லூரியின் பழைய மாணவராவார். இவர் வடபிராந்திய போக்குவரத்து சபையில் சாலைப் பரிசோதகராக கடமையாற்றி இளைப்பாறியவராவார். “கந்தன் கருணை” நாடகத்தின் மூலம் பிரபல்யமடைந்த இவர் தொடரந்து பல நாடகங்களில் பங்கேற்றும் பெரும் புகழ் பெற்றவர். அரியாலை சனசமூக நிலையத்துடன் நெருங்கிய தொடர்புடைய இவர் அந்நிலையத்தின் கலைப் பகுதிக்குப் பொறுப்பாகவிருந்து அரும் பெருந் தொண்டாற்றியவர். அந்நிலையத்தின் ஆண்டு விழாக்களில் மேடையேற்றப் படும் நாடகங்களில் நடித்துள்ளார். இவற்றுள் இராஜராஜசோழன், எல்லாளன் போன்ற நாடகங்களைக் குறிப்பிடலாம். இவர் புராண சரித்திர நாடகங்களுடன் சமூக நகைச்சுவை நாடகங்களிலும் பங்கேற்று நடித்துள்ளார். ‘சாத்திரி சரவணை’ “ஆலமரம்” போன்றவை குறிப்பிடத்தக்கவை. மேலும் பேச்சுப் போட்டி, சிரிப்புப்போட்டி போன்றவற்றி லும் பங்குகொண்டு வெற்றிபெற்று அரியாலைக்கு புகழ்தேடித்தந்த இக் கலைஞரை அரியாலை சனசமூக நிலையம் “கலை மன்னன்” என்ற பட்டத்தை வழங்கி கௌரவித்தமையும் சுதேசியதிருநாட் கொண்டாட்ட விழாவில் 1994 இல் சிறந்த கலைஞரென கௌரவித்தமையும் குறிப் பிடத்தக்கவையாகும். இத்தகைய பெருங் கலைஞர் 20.12.2001 இல் சிவபத மடைந்துவிட்டார்.

## அமரர் பொ.சண்முகலிங்கம் அவர்கள்



அரியாலையில் பிறந்த இவர் யாழ்ப் பாணம் கனகரத்தினம் மத்திய மகா வித்தி யாலயத்தின் பழைய மாணவராவார். மாண வப் பருவத்திலேயே நாடகத் துறையில் ஆர்வமுள்ள இவர் கல்லூரியில் நடை பெற்ற முத்தமிழ்விழாவில் “சோக்கிடட்டீஸ்” நாடகத்தில் சோக்கிரட்டீசாக் நடித்து நாடக உலகில் பிரவேசித்தவராவார்.

நடிப்புத்திறன், நல்ல குரல்வளம், தோற்றப்பொலிவு என்பன வரப்பெற்ற இவர் எல்லோராலும் சிறந்த நடிகனான இலகுவில் அடையாளம் காணப்பட்டார். சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாக்களில் ஒரு தசாப்தத்திற்கு மேலாக நாடக நடிகனாக புகழ் நாட்டியவர். இதிகாச புராண நாடகங்கள் மட்டும் அல்ல, இசைநாடகத்திலும் வல்லவராக திகழ்ந்தவராவார். மயானத்தில் மன்னன்

என்ற பெயரில் அரிச்சந்திர மயான காண்ட நாடகத்தை அரங்கேற்றி சுதேசிய திருநாட் கொண்டாட்ட நாடகத் துறைக்குப் பெருமை தேடித்தந்த பெருமகனாவர். அந்நாடகத்தில் அரிச் சந்திரனாக அவர் தோன்றி நடித்த காட்சி எல்லோரையும் சோகத்தில் ஆழ்த்தியது. இவரின் புகழ்பெற்ற நாடகமாகிய கர்ணனில் கர்ணனாகத் தோன்றி நடித்த காட்சி எவராலும் இலகுவாக மறந்துவிட முடியாது. அந்நாடகத்திற்காக பெரும் சிற்பக் கலைஞர் வல்லிபுரம் கந்தையா (சுப்பிரமணிய மாஸ்டர்) ம.சந்திரசேகரம் போன்ற மேடை ஒப்பனைக் கலைஞர் களின் பிரமாண்டமான தத்ரூபமான மேடையலங்காரங்கள் மெருகூட்டின. இந்நாடகம் யாழ்ப்பாணக் குடாநாட்டில் பல இடங்களில் மேடை ஏற்றப்பட்டு அரியாலைக்குப் புகழை தேடித்தந்தது. பல நாடகங்களில் நடித்து புகழ்பெற்ற இக்கலைஞர் சிவபத மடைந்துவிட்டார்.

## அமரர் சி. பத்மநாதன் (ஸ்ரீபத்) அவர்கள்



அரியாலையில் பிறந்த இவர் இலங்கை தபால் திணைக்களத் தில் பணிபுரிந்தவர். மிகவும் நகைச்சுவை யாக பேச வல்லவரான இவர் தனது சக ஊழியரான பூலோக சிங்கம் அவர்களோடு இணைந்து சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவில் கலகலப்பான நட்சத்திரமாக திகழ்ந்தவர். போட்டிகள் நடைபெறும் சுற்று வட்டாரத்தில் நின்றுகொண்டு பார்வை யாளர்களை கவரும் வண்ணம் விநோதமான ஆடல் பாடல்களை நிகழ்த்துவது, சம்பாஷணைகளை நடத்தி பார்வை யாளர்களைச் சிரிக்க வைப்பது பூலோக சிங்கம் பெண்போலவும் இவர் ஆண் போலவும் தோன்றி வீடுகளில் நடை பெறும் குடும்பத் தகராறு போன்ற கோலத்தில் சம்பாஷனைகளை நிகழ்த்து வது இவர்களின் வழக்கமான காரியமாக பல வருடங்கள் நடைபெற்றது. சில நாடகங்களிலும் நடித்துள்ளார். அநேக மாக மந்திரி வேடம், பெண்ணின் தகப்பன் வேடம் போன்ற முதிய வேடங்களில் தோன்றி நடித்தவர். சுதேசிய திருநாட் கொண் டாட்ட விழாக்களில் பங்குபற்றிய இவர் பெரிய பிரித்தானியாவுக்கு புலம் பெயர்ந்து சிவபதமடைந்து விட்டார்.

## அமரர் பொ. இராசரத்தினம் அவர்கள்

அரியாலையில் பிறந்த விளை யாட்டு வீரன் ஓட்டப் போட்டிகளின் சாதனையாளர். துடிப்பான வாலிப வயதில் துவழாது பொதுச்சேவை செய்தவர், அரியாலையின் விளையாட்டு வெற்றி வானில் மறக்க முடியாத நட்சத்திரமாகத் துலங்கியவர் ஓய்வு பெற்ற காவல்துறை உத்தியோகத்தர். 68 ஆவது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா வில் சிறந்த விளையாட்டு வீரருக்கான கௌரவம் இவருக்கு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

## அதிபர் அமரர் ஆறுமுகம் சோமசுந்தரம் அவர்கள் (A.சோமர்)



சிறந்த கல்விமானும் யாழ் கனகரத்தினம் மத்திய மகா வித்தியா லயத்தின் வளர்ச்சிக்கு தம்மை முழுமையாக அர்ப்பணித்து தொண் டாற்றிச் சமூகபுரட் சியை செயல்வடிவில் கொண்டு வந்தவருமான அமரர் அவர்கள் சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா


நாடகத் துறையில் தொடர்ச்சியாக பங்குபற்றி அதன் வளர்ச்சிக்கு பங்காற்றிய பெருமகனாவார். சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா வரலாற்றிலேயே முதலாவதாக மேடையேற்றப்பட்ட சத்தியவான் சாவித்திரி என்ற இசை நாடகத்தை இவரும் இவரது தந்தையார் சாத்திரி ஆறுமுகம் அவர்களும் இணைந்து பாடல்களை எழுதியுள்ளார் கள். 6 மாதங்களாக பழக்கப்பட்ட இந் நாடகத்தை அண்ணாவியார் சபாபதிப் பிள்ளை நெறியாள்கை செய்திருந்தார். இவ் நாடகத்தில் கம்பீரமான உயர்ந்த தோற்றத்தையுடைய அமரர் எமதர்ம ராஜாவாகத் தோன்றி அனைவரையும் அச்சப்படுத்தும் விதத்தில் நடித்து புகழ்பெற்றவராவார். இந்நாடகம் யாழ்ப் பாணத்தில் பல இடங்களில் மேடை யேற்றப்பட்டு பலரதும் பாராட்டுக் களைப் பெற்றது. அரியாலைக்கு புகழை தேடித்தந்த கலைஞர்களில் ஒருவராகத் திகழ்ந்து தொடர்ந்தும் பல நாடகங்களை எழுதியும் நடித்தும் சுதேசிய திருநாட் கொண்டாட்டங்களுக்கு பெருமையை ஈட்டித் தந்தவர்.

கல்லூரி அதிபராக இருந்த திரு.மு.இராமலிங்கம் அவர்கள் கல்லூரி யின் வைரவிழா மலரில் அதிபர் ஆ.சோம சுந்தரம் அவர்களைப் பற்றி பின்வருவாறு விபரித்துள்ளார் "பதினொரு வயதுப் பாலகனாக 1945 தை 15 இல்' கல்லூரிக்கு வந்தபோது அந்த முதல் நாளில் ஆஜானு பாகுவாக நெடிய உருவத்தோடு கம்பீர தோற்றத்தோடு கருணை நிறைந்த முகத் தோடு எமது அதிபர் ஆ.சோமசுந்தரம் அவர்கள் வீற்றிருந்த காட்சி இன்றும் உள்ளக் கிழியில் உருவெழுதி உள்ளது. இனிமையாக பேசும் கனிந்த உள்ளம் குழந்தைகளை கவர்ந்திழுக்கும் உளவியல் அணுகுமுறை இவை அனைத்தும் ஒருங்கே அமைந்த அந்த பேராசான் மாணவராகிய எம்மையெல்லாம் அன்போடு வரவேற்று அன்பு காட்டிய பாங்கினால் வீட்டை விட்டு பிரிந்து வந்த கவலையெல்லாம் பறந்தோடின இக் கல்லூரியில் விடுதியில் இருந்தபோது மலேரியாக் காய்ச்சலினால் பீடிக்கப் பட்டிருந்தபோது இரவு வேளைகளில் கூட வந்து தாயுமாகி தந்தையுமாகி அன்போடு கவனித்த அதிபரை எப்படி மறப்போம்? இக்கல்லூரியில் யான் பயின்ற ஏழு வருடங்களும் அந்தக் கனவானின் கண்காணிப்பிலும் கருணை யிலும் கழிந்தன. அன்று அவர் கற்பித்த கணிதம் எம் இன்றைய நிலைக்குக் காரண மாயமைந்தது" என்று எழுதி யிருப்பது மிகவும் பொருத்தமான சான்றிதழாகும்.

சொக்கன் என்று கௌரவமாக அழைக்கப்படும் இக்கல்லூரியின் பழைய மாணவரும் கல்லூரி அதிபருமான அமரர் க.சொக்கலிங்கம் அவர்கள் கனகரத்தினம் மத்தியமகா வித்தியாலய வைரவிழா மலரில் பின்வருமாறு குறிப்பிடுகிறார். "எமது அதிபராக விளங்கிய கௌரவ ஆ.சோமசுந்தரம் அவர்கள் அரியாலை வாசகரும் கணித நிபுணரும், யாழ்ப் பாணம் இந்துக்கல்லூரியில் நீண்ட காலம் கணித ஆசிரியராய் பணி புரிந்தவர். மேலும் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் கணித ஆசிரியராகவும் பிரதி அதிபராகவும் பணிபுரிந்தவர் ஸ்ரான்லி கல்லூரி கல்வித்தரத்திலும் மாணவர்கள் தொகையிலும் தேய்ந்து இறுத்து நின்று பயன் இல்லாது போய்விடுமோ என்று அஞ்சப்பட்ட தொரு காலத்திலலேயே பல ஊர் பெரியவர்களின் வற்புறுத்தல்களை ஏற்று தனது பதவியைத் துறந்து சோமசுந்தரம் அவர்கள் கல்லூரியின் அதிபர் பதவியை ஏற்றமை மிகவும் துணிச்சலான செயல்தான். வேறு வகையில் நோக்கி னால் தம் ஊர் வாழ் மக்களுக்குத் தமது

கல்விப்பணியை முழுமையாக அளிக்க அவர் மேற் கொண்ட தியாகம் என்று கூட அதைச் சொல்லலாம். சோமசுந்தரம் அவர்கள் கல்லூரியை உயர்நிலைக்கு கொண்டுவர பல துரித நடவடிக்கைகளை கையாண்டார். தலைசிறந்த ஆசிரியர் குழு ஒன்றை அவர் தெரிந்தெடுத்து அவர்களின் சேவையை முழுமையாக பயன்படுத்தியது குறிப்பிடத்தக்கதாகும். மேலும் தமிழ் மொழி மூலம் கற்ற என்னைப் போன்ற வர்களையும் சேர்த்து எமக்குகந்த வகையிலே ஆங்கிலக்கல்வி வழங்க அவர் ஏற்பாடு செய்ததுமாகும். அரியாலை யிலும் சூழலில் உள்ள ஊர்களிலுமிருந்து புதியதொரு கல்விப் பாரம்பரியத்தை உருவாக்கிய முதல்வரும் தாழ்நிலையில் சென்று கொண்டிருந்த ஸ்ரான்லியை மீண்டும் புத்தயிர் அளித்துப் புதுவாழ்வு வழங்கிய அவர் கம்பீரமான உருவமும் பிரம்போடு உலாவித்திரிந்தும் அதைப் பயன்படுத்தாது மாணவர்களை தமது சொந்தப் பிள்ளைகள்போல் நடத்திய அவரின் அன்புள்ளமும் என் நினைவில் பசுமையாக மேலெழுகின்றன" என எழுதியுள்ளார்.

## அமரர் இளையதம்பி இராசகுலசூரியர் அவர்கள்



அரியாலையில் **21.12.1916** இல் பிறந்த இவர் அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியா சாலை யாழ் பரியோ வான் கல்லூரி, சென் பற்றிக்ஸ் கல்லூரி கொழும்பு சென் யோசேப் கல்லூரி என்பவற்றின் பழைய மாணவராவார். இவர் ஒரு விளையாட்டு வீரராவார். உதைபந்தாட்டத்தில் விருப்புடையவர் Junior Cambridge Exam சிறப்புச் சித்தியடைந்தவர். இதனால் அதிபரால் பாராட்டப்பட்டவர். இவர் **17** ஆவது வயதில் Senior Cambridge Exam சித்தியடைந்த போதிலும் வயது குறைவு காரணமாக பல்கலைக்கழக அனுமதி கிடைக்கவில்லை. இதனால் இலங்கை புகையிரத சேவையில் பயிற்றுனராக இணைந்து கொண்டார். படிப்படியாக கல்வித் தரத்தையும் பதவி உயர்வையும் பெற்று பிரதம இயந்திரவியல் பொறியிய லாளராக ஒய்வு பெற்றவர். **1980** இல் சாட்டற் மெக்கானிக் பொறியியல் பரீட்சையில் சித்தியடைந்தவர் (U.K.) அரியாலை மண்ணின் மைந்தனான இவர் **44** ஆவது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவின் தலைவராக செயல்பட்டவர். இயன்றவரை இவ்விழாவில் ஒவ்வொரு வருடமும் பங்குகொள்பவர். பல உள்ளூர் உள்நாட்டு வெளிநாட்டு சமூக நலன் கழகங்களில் நிர்வாகத்தில் பங்கு கொண்டவர். பிறின் தமிழ் சங்கத்தின் தலைவராக தெரிவுசெய்யப்பட்டவர். (U.K.) இவர் தனது வாழ்கையை வெற்றிகரமாக நிறைவுசெய்த பெருமக னாவார். இலங்கை புகையிரத ஊழியர் சங்கத்தின் தலைவராக இருந்து சங்கத்தின் நலனில் அக்கறையுடன் செயற்பட்ட வராவார். அரியாலை நீர் நொச்சித்தாழ்வு ஸ்ரீ சித்திவிநாயகர் மீது பக்தி கொண்ட இவர் லண்டனில் சிவபதம் அடைந்து விட்டார்.

# அரியாலை சமகால விளையாட்டு வீர, வீராங்கனைகள் பற்றிய தகவல்கள்



தர்மலிங்கம் பிரதீபன்
சிரேஸ்ட விரிவுரையாளர்
நிதியியல் மற்றும் கணக்கியல் துறை
வியாபாரக் கற்கைகள் நெறிப்பீடம்
வவுனியா வளாகம், யாழ் பல்கலைக்கழகம்.

*அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட நூற்றாண்டு விழா மலர்க்குழுவினர் அரியாலை வாசிகளிட மிருந்து தகவல்கள், கட்டுரைகள், அனுபவங்களைத் தருமாறு சுவரொட்டிகள், துண்டுப் பிரசுரங்கள், முகநூல்கள் ஆகியவற்றின் ஊடாகத் தகவல்களை கோரியிருந்தோம். அதற்கான ஆதரவு மிகக் குறைவாகவே காணப்படுகிறது. இருந்தும் கிடைத்த தகவல்களின் அடிப்படையில் இந்த திரட்டுத் தயாரிக் கப்பட்டுள்ளது. இது மேலும் செம்மைப் படுத்தப்படவேண்டும். எதிர்காலத்திலே இதற்கான நடவடிக்கைகள் எடுப்பதற்கு உதவியாக விரும்பியவர்கள் தகவல்களை தந்துதவுமாறு கோருகின்றோம்.*

*-மலர்க்குழு-*

## வைத்தியகலாநிதி முத்தையா தெய்வேந்திரா



*அமரர்கள் முத்தையா வியாளம்மா தம்பதியினரின் மூன்றாவது மகனாக கொழும்பில் பிறந்து தனது ஆரம்பக் கல்வியை கொழும்பு தேஸ்ரன் கல்லூரியிலும் இடைநிலைக் கல்வியை யாழ். பரியோவான் கல்லூரியிலும் கற்று பேராதனைப் பல்கலைக் கழகத்தில் மருத்துவபீடத்துக்கு தெரிவாகி வைத்திய கலாநிதி ஆனார்.*

### கல்லூரி மட்டம்

*1956 ஆம் ஆண்டு கொழும்பு தேஸ்ரன் கல்லூரியில் தனது 9 ஆவது வயதில் 10 வயதிற்குக் கீழ்ப்பட்ட எறிபந்தாட்ட அணியில் தெரிவாகி விளையாடியவர்.*

*1957 இல் இதே கல்லூரியில் 12 வயதிற்கு உட்பட்ட அணியில் தெரிவாகி விளையாடியவர்.*

*1959 இல் யாழ் பரியோவான் கல்லூரி 17 வயதிற்கு உட்பட்ட எறிபந்தாட்ட அணியில் தெரிவாகி விளையாடியவர்.*

*1960 இல் தனது 14 ஆவது வயதில் யாழ். பரியோவான் கல்லூரின்* 1st Eleven *எறிபந்தாட்ட அணியில் இணைந்து விளையாட ஆரம்பித்தவர்.*

### 1960-1965 ஆம் ஆண்டு வரை

*யாழ். பரியோவான் கல்லூரி எறிபந்தாட்ட அணியில் அங்கம் வகித்து விளையாடியவர்.*

### 1966ஆம் ஆண்டு

*கல்லூரி எறிபந்தாட்ட அணித் தலைவராக விளங்கியவர்.*

### 1963ஆம் ஆண்டு

"Times of Ceylon" *பத்திரிகை நடாத்திய* School Boy Cricketer of the Year *ஆக தெரிவு செய்யப்பட்டவர்.*

**1961 ஆம் ஆண்டு**

*யாழ். பரியோவான் கல்லூரி இல்ல மெய் வல்லுனர் போட்டியில் நீளம் பாய்தல், கெந்தியடி வைத்துப்பாய்தல், 110 மீற்றர் தடைதாண்டல் போட்டிகளில் முதலாம் இடத்தைப் பெற்று மத்திய பிரிவு மேற்பிரிவு சம்பியனாகத் தெரிவானவர்.*

***1966ஆம் ஆண்டு*** *- யாழ் பரியோவான் கல்லூரியின் சகலதுறை விளையாட்டு வீரரிற்கான Scott துரைச்சாமி சுற்று கிண்ணத்தை வென்றவர். பரியோவான் கல்லூரி 2 ஆம், 1ஆம் உதைபந்தாட்ட அணியில் விளையாடியவர்*

**மாகாண மட்டம்**

**1963ஆம் ஆண்டு**

Daily News *பத்திரிகை நடத்திய வடமாகாணத்திற்கான சிறந்த துடுப் பாட்ட, சிறந்த சகலதுறை ஆட்ட வீரராக தெரிவு செய்யப்பட்டவர்.*

**1974 ஆம் ஆண்டு**

*மத்திய மாகாண எறிபந்தாட்ட அணியில் அங்கம் வகித்து இங்கிலாந்து,* MCC *எறிபந்தாட்ட அணியுடன்விளையாடியவர்.*

**பல்கலைக் கழக மட்டம்.**

**1974 ஆம் ஆண்டு**

*பேராதனைப்பல்கலைக்கழக எறிபந்தாட்ட அணிக்காக விளையாடியதோடு அணிக்கு தலைவராகவும் விளங்கியவர்.*

**தேசிய மட்டம்**

***1963ஆம் ஆண்டு*** *அகில இலங்கை பாடசாலை எறிபந்தாட்ட அணியில் அங்கம் வகித்து Sara வெற்றிக் கிண்ணத்திற்காக பல்கலைக்கழக அணியுடன் விளையாடியவர்.*

***1964 ஆம் ஆண்டு*** *கொழும்பில் அகில இலங்கை பாடசாலைகளுக் கிடையே நடைபெற்ற மெய்வல்லுனர் போட்டியில் பங்குபற்றி 110மீற்றர் தடை தாண்டல் போட்டியில் 1ஆம் இடம் பெற்றவர்.*

***1965 ஆம் ஆண்டு*** *- மேற்படி போட்டியில் கெந்தியடி வைத்துப் பாய்தலில் 1ஆம் இடம் பெற்றவர்.*

*நீளம் பாய்தலில் 3ஆம் இடம் பெற்றவர்.*

**1963ஆம் ஆண்டு**

*கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் அகில இலங்கை* Junior AAA *போட்டி யில் அரியாலை ஐக்கிய கழகம் சார்பாக நீளம் பாய்தலில் 1ஆம் இடம் பெற்றவர்.*

*1979,80 ஆம் ஆண்டுகளில் கொழும்பு* Tamil Union *எறிபந்தாட்ட அணிக்காக* Daily News *கிண்ணப் போட்டியில் விளையாடியவர். மேலும் 1983 ஆம் ஆண்டு லண்டன்,* South wales *இல்* Country *எறிபந்தாட்டப் போட்டியில் விளையாடியவர்.*

*1983 -1986 ஆண்டுவரை - லண்டன்* Harrow *இல் அரியாலை எறிபந்தாட்ட அணிக்காக விளையாடியதோடு தலைமையும் வகித்துள்ளார்.* British *தமிழ் கிறிக்கெட் கழக போசகராகவும், தலைவராகவும் இருந்துள்ளார்.*

## மகாதேவா ஜெயரத்தினம்



*அரியாலையைச் சேர்ந்த அமரர்கள் மகாதேவா குணநாயகி தம்பதியினரின் மூத்த புதல்வரான ஜெய ரத்தினம் அவர்கள் தனது ஆரம்ப இடை நிலைக் கல்வியை யாழ் பரியோவான் கல்லூரியில் கற்றுப் பின் இலங்கை கடற்படையில் பதவிபெற்று சிலகாலம் சேவை புரிந்த பின் லண்டனில் புலம்பெயர்ந்து வாழ்ந்து வருகின்றார். இவர் யாழ். பரியோவான் கல்லூரியில்*

எறிபந்தாட்ட, உதை பந்தாட்ட, ஹொக்கி விளையாட்டு அணிகளில்விளையாடியவர். கல்லூரி ஹொக்கி அணிக்கு தலைவராகவும், யாழ் மாவட்ட ஹொக்கி அணித்தலைவ ராகவும் விளங்கியவர். இவர் அரியாலை ஐக்கிய கழக செயலாளராக 1965ஆம் ஆண்டிலிருந்து 1977ஆம் ஆண்டுவரை பதவி வகித்தமை குறிப்பிடத் தக்கது.

**கல்லூரி மட்டம்**

**1968- 1969 ஆம் ஆண்டுகளில்**

யாழ். பரியோவான் கல்லூரி எறிபந் தாட்ட உதைபந்தாட்ட அணியில் அங்கம் வகித்து விளையாடியவர். பரியோவான் கல்லூரி ஹொக்கி அணியில், அங்கம் வகித்து விளையாடிய தோடு, தலைமையும் (Captain) வகித்த வர். 1968 - 1971 ஆம் ஆண்டு வரை அரியாலை ஐக்கிய கழக செயலாளராக 4 ஆண்டுகள் பதவி வகித்தவர்.

**மாவட்ட மட்டம்**

1968 ஆம் ஆண்டு யாழ் மாவட்ட ஹொக்கி அணித்தலைவராக விளங்கிய வர். **மேலும்** இவர் கடற்படையில் சேவையாற்றிய காலத்தில் சிறந்த சகலதுறை விளையாட்டு வீரருக்கான விருது பெற்றுள்ளார். அகில இலங்கை கடற் படை அணிக்காக உதைபந்தாட்ட, எறிபந்தாட்ட, ஹொக்கி அணிகளில் விளை யாடியவர்.

## திருமதி பிரபாவதி கமலநாதன் (சிவகுரு)



அரியாலையைச் சேர்ந்த அமரர்கள் சிவகுரு பரஞ்சோதி தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வி யான இவர் யாழ் சுண்டுக்குளி மகளீர் கல்லூரியில் கல்வி கற்ற காலத்தில் கல்லூரி இல்ல மெய் வல்லுனர் போட்டியில் 100 மீற்றர், தடை தாண்டுதல், நீளம் பாய்தல், உயரம் பாய்தல், குண்டெறிதல் ஆகிய போட்டி களில் பங்குபற்றிச் சம்பியன் பட்டம் பெற்றதோடு உயரம் பாய்தலில் 1961 ஆம் ஆண்டு கல்லூரி சாதனையையும் நிலை நாட்டியவர் (4 அடி, 7அங்குலம்). கல்லூரி வலைப்பந்தாட்ட அணியிலும் அங்கத்துவம் வகித்தவர்.

**மாவட்ட மட்டம்**

1961 ஆம் ஆண்டு - யாழ் மாவட்ட பாடசாலைகளுக்கான மெய் வல்லுனர் போட்டியில் உயரம் பாய்தலில் 4 அடி 7 அங்குலம் பாய்ந்து முதலாம் இடமும் பெற்று மாவட்டத்தின் புதிய சாதனையையும் நிலைநாட்டியவர்.

**தேசிய மட்டம்**

1961 ஆம் ஆண்டு - அகில இலங்கை மெய்வல்லுனர் போட்டியில் C.T & F.C அணியில் இணைந்து உயரம் பாய்தலில் முதலாம் இடம் பெற்றவர். CT & FC கழகம் பெங்களூர் சென்ற குழுவில் அங்கத்துவம் பெற்று உயரம் பாய்தலில் முதலாம் இடம் பெற்றவர்.

இவர் யாழ் பரியோவான் கல்லூரி எறிபந்தாட்ட அணித்தலைவர்களாக இருந்த க.பிரசாந்தன் (1995) க.பிரகாசன் (1999) ஆகியோரின் தாயார் ஆவார்.

## திருமதி ஜயந்தி விஜயலக்சுமி சோமசேகரம் டி சில்வா



அரியாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட "ஜயந்தி" அவர்கள் தனது ஆரம்ப இடைநிலைக் கல்வியை யாழ் வேம் படி மகளீர் உயர்தரக் கல்லூரியில் கற்றார்.

பின்பு கொழும்பு பல்கலைக்கழகத்தில் கல்வி கற்றுப் பின் மகாத்மா பல்கலைக் கழகத்தில் MBA பட்டம் பெற்றதோடு, Associate of Institute of Bankers - இலங்கை – AIB பட்டமும் பெற்றார். விளையாட்டுத்துறை சார்பான "அகில இலங்கை" வலைப் பந்தாட்ட பயிற்றுவிப் பாளர், "வலைப் பந்தாட்ட போட்டி" நடுவர் பரீட்சையிலும் சித்தியெய்தி நடுவராகவும் (Referee) செயற்பட்டு வருகிறார்.

## கல்லூரி மட்டம்

கல்வி கற்கும் காலத்தில் 1976ஆம் ஆண்டு தனது 10 ஆவது வயதில் "யா/ வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலை யில் CREEDY இல்லத்தைச்சேர்ந்த கல்லூரி விளையாட்டுத் தலைவியுமான அரியா லையைச் சேர்ந்த தர்சினி நவரத்தினராசா (திருமதி தர்சினி பாலசிங்கம் - கனடா) அவர்களின் தூண்டுதலின் பேரில் கீழ்ப்பிரிவில் "உயரம் பாய்தல்" போட்டி யில் பங்குபற்றி முதலாம் இடம் பெற்றதோடு Best Performence இற்கான விருதையும் பெற்றுக் கொண்டார். இதன்பின் விளையாட்டுத் துறையில் ஏற்பட்ட ஆர்வம் காரணமாக 15, 17, 19 வயதிற்குட்பட்ட "உயரம் பாய்தல்", தடைதாண்டல் (Hurdles), 200 மீற்றர் ஓட்டப் போட்டி ஆகியவற்றில் முதலாம் இடத்தைப்பெற்று சாதனை புரிந்தார். கல்லூரி "வலைப்பந்தாட்ட" அணியில் இடம்பெற்று பல வெற்றிகளுக்கு பங்கு தாரரானார்.

## மாவட்ட மட்டம்

யாழ் மாவட்ட பாடசாலைகளுக் கிடையிலான மெய்வல்லுனர்போட்டிகளில் "உயரம் பாய்தல்", தடைதாண்டல்", 200 மீற்றர் ஓட்ட போட்டிகளில் முதலாம் இடத்துக்கும் சாதனைக்கும் சொந்தக் காரரானார்.

## மாகாண மட்டம்

1981 இல் மாத்தளையில் நடை பெற்ற இலங்கை மாகாணங்களுக் கிடையிலான தேசிய விளையாட்டு விழாவில் பங்குபற்றி "வலைப்பந் தாட்டத்தில்" வெள்ளிப் பதக்கம் பெற்றார். உயரம் பாய்தல், தடைதாண்டல், 200 மீற்றர் ஓட்ட போட்டிகளில் 1ஆம் இடம் பெற்றார்.

1982 இல் குருணாகலையில் நடை பெற்ற மாகாணங்களுக்கிடையிலான தேசிய விளையாட்டு விழாவில் "உயரம் பாய்தலுக்கான" வெள்ளிப்பதக்கம் பெற்றார்.

## யாழ்ப்பாணத்தில் அங்கம் வகித்த விளையாட்டுக் கழகங்கள்

- றிம்மர் விளையாட்டுக் கழகம்
- அரியாலை ஐக்கிய கழகம்
  - வலைப்பந்தாட்டம்
  - கரபந்தாட்டம்
  - உயரம் பாய்தல்
  - 200 மீற்றர் ஓட்டம்
  - தடை தாண்டல்

"வலைப்பந்தாட்ட" போட்டியில் வடமாகாண சம்பியனாகத் திகழ்ந்தது.

## தேசிய மட்டம்

இவர் தனது தொழிலை "Hatton National Bank" இல் பெற்றுக்கொண்டு கொழும்பிலேயே வாழ்ந்துவந்த வேளை யில் இலங்கை "வலைப்பந்தாட்ட" அணி யில் அங்கம் வகித்ததோடு தலைவியாக வும் (Captain) திகழ்ந்து வெளி நாடுகளுக்கும் இலங்கை அணியில் அங்கம் வகித்ததோடு "Best Shooter" என்ற விருதை பல தடவை பெற்றுள்ளார்.

1990ம் ஆண்டு "கூடைப்பந்தாட்ட அணியில்" சிங்கப்பூர் ABC Confederation 1992 ஆம் ஆண்டு "கூடைப் பந்தாட்டம்"

சீயோல் - தென்கொரியா ஆசிய நாடுகளுக்கு சென்றார். 1991 ஆம் ஆண்டு அவுஸ்திரேலியா 1995 ஆம் ஆண்டு - இங்கிலாந்து 1999 ஆம் ஆண்டு நியூசிலாந்தில் நடைபெற்ற உலக வலைப் பந்தாட்ட சம்பியன் போட்டியில் அங்கத்துவம் பெற்றார்.

1997, 1998 ஆம் ஆண்டுகளில் மலேசியாவில் நடைபெற்ற Commonwealth போட்டியில் இலங்கை சார்பாக வலைப்பந்தாட்ட அணித் தலைவியாக விளங்கினார்.

Queensland இல் நடைபெற்ற வலைப்பந்தாட்ட போட்டியில் தலைவியாக விளங்கினார்.

இலங்கை பகாறின் (Sri Lanka – Baharin) தொடரில் இலங்கை அணித் தலைவியாக விளங்கினார்.

1997 ஆம் ஆண்டு இலங்கையில் நடைபெற்ற 3 நாடுகளுக்கிடையிலான வலைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி அணித் தலைவி (TRINATION) இலங்கை அணி சம்பியன் பட்டத்தைப் பெற்றதோடு ஜயந்தி அவர்கள் ஆசியா கண்டத்தின் Net Ball – Best Shooter ஆகவும் விருது பெற்றார்.

1996 ஆம் ஆண்டு Auckland இல் நடைபெற்ற வலைப்பந்தாட்ட போட்டிக்கு இலங்கை அணி துணைத்தலைவியாக விளங்கினார்.

2011 ஆம் ஆண்டு இலங்கை ஸ்கொட்லாந்து "வலைப்பந்தாட்ட" சுற்றுப்போட்டிக்கான அணி முகாமையாளராக (Team Manager)விளங்கினார்.

2017 -2018 ஆம் ஆண்டுகளில் Botswana சிங்கப்பூரில் நடைபெற்ற சர்வதேசவலைப்பந்தாட்ட மாநாட்டிற்கான இலங்கைத் தூதுவராகவும் அணி முகாமையாளராகவும் அங்கம் வகித்தார்.

இவைகளுக்கு மேலாக ஆசிய வலைப்பந்தாட்ட போட்டி ஏற்பாட்டுக்குழு அங்கத்தவராக, போட்டி வர்ணனையாளராக (Commentator) விளங்கினார்.

2014 இல் இருந்து இன்றுவரை Mercantile வலைப்பந்தாட்ட சங்க தலைவியாகவும், செயலாளராகவும் பதவி வகித்து வருகின்றனர். கொழும்பு பல்கலைக்கழக வலைப்பந்தாட்ட, கூடைப்பந்தாட்ட, ரெனிஸ்மெய் வல்லுநர் Colours பெற்றுள்ளார். இவரின் விளையாட்டுத்துறைச் சாதனைகள் பெண் பிள்ளைகளுக்கு ஒரு உந்து சக்தியாக நிகழும் என நம்புகின்றோம்.

## திருமதி தயாளினி இராஜேந்திரம் (பரமநாதன்)



அரியாலையைச் சேர்ந்த அமரர் பரமநாதன் மகேஸ்வரி தம்பதியினரின் மூத்த புதல்வியான இவர் தனது ஆரம்ப, இடைநிலைக்கல்வியை யாழ் சுண்டிக்குளி மகளீர் கல்லூரியில் கற்ற காலத்தில் இல்ல மெய்வல்லுனர் போட்டிகளில் பல பரிசில்கள் பெற்றுள்ளார். மாவட்ட மட்டத்திலும் வலைப்பந்தாட்ட போட்டிகளிலும் பங்குபற்றியவர்.

### கல்லூரி மட்டம்

1971 - 1972 வரை உயரம் பாய்தல், நீளம் பாய்தல், தடைதாண்டல் போட்டிகளில் முதலாவது இடமும் சம்பியன் பட்டமும், பெற்றுள்ளார், வலைப்பந் தாட்ட அணியின் தலைவியாக விளங்கினார்.

### மாவட்ட மட்டம்

1971 - 1972 வரை மாவட்ட ரீதியிலான மெய்வல்லுனர் போட்டிகளில் பரிசு பெற்ற

வர். அரியாலை ஐக்கிய கழக வலைப் பந்தாட்ட அணியில், முக்கியமான வீராங்கனையாகப் பங்குபற்றியவர்.

இலங்கை வங்கி வலைப்பந் தாட்ட அணியின் அங்கத்தவராவார்.

## செல்வி இராதை அருளம்பலம்



அரியாலையைச் சேர்ந்த அருளம்பலம் புலோமிசை தம்பதி களின்கனிஷ்டபுதல்வி. ஆரம்ப, இடைநிலைக் கல்வியை யாழ் வேம் படி மகளீர் உயர்தரப் பாடசாலையிலும் பட்டப்படிப்பை யாழ் பல்கலைக் கழகத்திலும் பெற்றார். வேம்படி மகளீர் உயர்தரப் பாடசாலையில் தடகளப் போட்டியிலும் வலைப்பந்தாட்ட போட்டிகளிலும் பரிசுகள் பெற்றவர். வலைப்பந்தாட்ட அணிக்கு தலைமை வகித்தவர். தற்போது யாழ் பல்கலைக்கழக உடற்பயிற்சி விரிவுரையாளராக விளங்கு கிறார். அகில இலங்கை வலைப் பந்தாட்ட நடுவர் பரீட்சையில் சித்தி யெய்தியவர்.

யாழ் பல்கலைக்கழக வலைப் பந்தாட்ட அணிக்கு தலைமை தாங்கியவர்.

### கல்லூரி மட்டம்

100, 200 மீற்றர் ஓட்டப்போட்டிகளில், பரிசு பெற்றவர் வலைப்பந்தாட்ட அணியில் அங்கம் வகித்தவர்.

## செல்வி சுரேந்தினி சிதம்பரநாதன்



அரியாலையைச் சேர்ந்த சிதம்பர நாதன் தேவசேனா தம்பதிகளின் மக ளாகிய இவர் தனது ஆரம்ப, இடைநிலைக் கல்வியை யாழ் சுண் டுக்குளி மகளிர் கல்லூரியிலும் உயர் கல்வியை யாழ் பல்கலைக்கழகம், தமிழ்நாடு அண்ணாமலை பல்கலைக் கழகம் ஆகியவற்றில் பெற்றார். கல்லூரியிலும் மாவட்ட ரீதியிலும் பல்கலைக்கழக ரீதியிலும் விளையாட்டு போட்டிகளில் பல விருதுகள் பெற்றார். தற்போது யாழ் பல்கலைக்கழக உடற் பயிற்சி விரிவுரையாளர். உடற்பயிற்சி கல்வியில் முதுநிலைப்பட்டம் பெற்றவர்.

### கல்லூரி மட்டம்

- சுண்டுக்குளி மகளீர் கல்லூரியில் வலைப்பந்தாட்ட Colours பெற்றார்
- தடகளப் போட்டியில் பல விருதுகள் பெற்றவர்
- 1998 யாழ் மாவட்ட வலைப்பந் தாட்ட அணித்தலைவியாக விளங்கியவர்
- சிறந்த கூடைப்பந்தாட்ட வீராங்கனை விருது பெற்றவர்
- யாழ் பல்கலைக்கழக வலைப்பந்து, கூடைப்பந்து, மேசைப்பந்து, தாச்சி அணி வீராங்கனை Colours பெற்றார்.
- தமிழ்நாடு அண்ணாமலை பல்கலைக் கழக கூடைப்பந்தாட்ட அணித்தலைவி யாக விளங்கியவர்

தற்போது யாழ் மாவட்ட வலைப்பந்தாட்ட சங்க செயலாளராக உள்ளார்.

## திரு. செ.க.சண்முகலிங்கம்



அரியாலையைச் சேர்ந்த கந்தையா கனகம்மா தம்பதி களின் இரண்டாவது புதல்வனான இவர் தனது ஆரம்பக் கல் வியை யா/ கொழும்புத் துறை இந்து மகா வித்தியாலயத்திலும் இடைநிலைக் கல்வியை யா/பரியோவான் கல்லூரியிலும்

கற்றவர். பரந்தன் இரசாயணக் கூட்டுத் தாபனத்தில் தொழில்புரிந்து ஓய்வு பெற்றவராவார்.

யாழ்.பரியோவான் கல்லூரி சார்பிலும் அரியாலை ஐக்கிய விளை யாட்டுக் கழகம் சார்பிலும் அரியாலை சனசமூக நிலையம் சார்பிலும்தான் தொழில்புரிந்த பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம் சார்பிலும் பலபோட்டி களில் பங்குபற்றி வெற்றிபெற்று அரியாலைக்கு புகழ்தேடிக் கொடுத்த வீரராவார். கல்லூரியின் மாணவத் தலைவராகவும் அரியாலை சனசமூக நிலையத்தில் தலைவர் உட்பட பல முக்கிய பதவிகளை வகித்த இவர் அரியாலை சுதேசிய திருநாட் கொண் டாட்ட விழாத் தலைவராகவும் பணி புரிந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

**பாடசாலை மட்டம்**

உதைபந்தாட்டம், எறிபந்தாட்டம், தடகள விளையாட்டுகளில் இவரின் திறமையைப் பாராட்டி Colours வழங்கப் பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். இவரின் பெயர் யாழ். பரியோவான் கல்லூரியின் அசம்பிலி மண்டபத்தில் பொறிக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**மாவட்ட மட்டம்**

யாழ் மாவட்டத்தில் சவாலுக்குட் படுத்தமுடியாத பலம் வாய்ந்த அஞ்சல் ஓட்ட அணியாகிய லிங்கம் சகோதரர்கள் அணியின் உறுப்பினர்களில் ஒருவராக செயல்பட்டு பல போட்டிகளில் வெற்றி பெற உழைத்துள்ளார்.

அரியாலை ஐக்கிய கழகத்திற்காக உதைபந்தாட்டம், கரபந்தாட்டம், எறிபந்தாட்டம் போன்ற விளையாட்டு அணிகளில் அங்கத்தவராக இருந்து சாதனை புரிந்தவர்.

## திருமதி ர. கிருஷ்ணவேணி (துரைச்சாமி)



அரியாலையைச் சேர்ந்த பாடசாலை அதிபர் துரைச்சாமி யோகம்மா தம்பதி களின் புதல்வியான கிருஷ்ணவேணி யா/ கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் கல்வி கற்றவர். தற்போது கனடா நாட்டில் உயர்பதவி வகித்து வருகின்றார். அரியாலையில் வாழ்ந்த காலத்தில் தனது கல்லூரிக்கும் அரியாலை ஐக்கிய கழகம் அரியாலை சனசமூக நிலையம் ஆகிய வற்றின் சார்பில் மெய்வல்லுனர் போட்டி அணியிலும் வலைப்பந்தாட்ட அணியி லும் பங்குகொண்டு வெற்றிகள் பல பெற்றுக் கொடுத்து அரியாலைக்கு பெருமை சேர்த்தவர். அணிகளின் தலைவி யாக இருந்து நெறிப்படுத்திய முகாமைத் துவம் மிக்க இவர் சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா போட்டிகளில் பங்குபற்றி வெற்றிகள் பல பெற்றவர்.

**கல்லூரி மட்டம்**

1969 ஆம் ஆண்டு தொடக்கம் 1975 ஆம் ஆண்டுவரை கல்வி கற்ற காலத்தில் பாடசாலை மட்டத்தில் நடைபெற்ற சகல பிரிவுகளிலும் 100மீ, 200மீ, நீளம் பாய்தல் ஆகியவற்றில் முதலிடத்தைப் பெற்று சாதனை புரிந்தவர். 1971 ஆம் ஆண்டு வலுவான வலைப் பந்தாட்ட அணியின் தலைவியாக (Captain) இருந்து பிரபல பாடசாலை களைத் தோற்கடித்து வெற்றிபெற உதவியவர் எனப் பலராலும் பாராட்டப் பட்டவர் Colours பெற்ற வீராங்கனை.

**மாவட்ட மட்டம்**

1971 இல் யாழ் மாவட்ட பாட சாலைகளுக்கு இடையிலான போட்டி யில் 100மீ ஓட்டப்பந்தையத்தை 10.6

செக்கனில் கடந்து சாதனை புரிந்தவர். 200மீ ஓட்டப்பந்தயத்தில் 1 ஆம் இடத்தைப் பெற்றவர். நீளம் பாய்தலில் 15.9 மீற்றர் பாய்ந்து சாதனை புரிந்தவர்.

### தேசிய மட்டம்

1971 இல் கொழும்பில் நடை பெற்ற போட்டியில் 100 மீ 1 ஆம் இடத்தையும், 200மீ. நீளம் பாய்தல் போட்டிகளில் முறையே இரண்டாம் இடத்தையும் பெற்றவர்.

## திருமதி கலாயினி பிறேம்குமார் (துரைச்சாமி)



அரியாலையைச் சேர்ந்த பாடசாலை அதிபர் துரைச்சாமி யோகம்மா தம்பதி களின் புதல்வியான கலாயினி யா/கனக ரத்தினம் மத்திய மகா வித்தியாலயம், யாழ்ப் பாணம் இந்து மகளீர் கல்லூரி ஆகிய வற்றின் பழைய மாணவியாவார். தற்போது கனடா நாட்டில் வசித்து வருகின்றார். அரியாலையில் வாழ்ந்த காலத்தில் தனது கல்லூரிக்கும் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம், அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம், அரியாலை சனசமூக நிலையம் ஆகியவற்றின் சார்பில் மெய்வல்லுனர் போட்டிகளில் குறிப்பாக மைதான விளையாட்டு போட்டிகளிலும், வலைப்பந்தாட்ட அணிகளிலும் பங்கு பற்றி கல்லூரிகளுக்கும் அரியாலைக்கும் பெருமை தேடித்தந்த வீரங்கனையாகும். இவர் சுதேசிய திருநாள் கொண்டாட்ட விழாவின் கலை, விளையாட்டு போட்டி களில் பங்குகொண்டு பரிசுகள் பெற்றவ ராவர். 1979 இல் அரியாலையின் வலைப் பந்தாட்ட அணிக்கு தலைமை வகித்து (Captain) அவ் அணியின் வெற்றிக்கு உழைத்த வீராங்கனையாகும்.

### கல்லூரி மட்டம்

குண்டெறிதல், ஈட்டி எறிதல், ஓட்டப்போட்டி ஆகியவற்றில் முதல் இடம் பெற்ற சாதனையாளராவார். இவர் பரிதிவட்டம் எறிதலில் சிறப்பிடம் பெற்றவர். கல்லூரியின் வலைப்பந்தாட்ட அணியின் தலைவியாக இருந்து பாராட்டைப் பெற்றவர். Colours பெற்ற வீரங்கனையாவார்.

### மாவட்ட மட்டம்

1979 இல் யாழ் மாவட்டத்தில் பாடசாலைகளுக்கு இடையிலான போட்டி யில் பரிதி வட்டம் எறிதல், ஈட்டி எறிதல் போட்டிகளில் முதலாம் இடத்தைப் பெற்ற சாதனையாளராவார். 1980 இல் குண்டெறிதல், பரிதிவட்டம் எறிதல் போட்டிகளில் முதலிடம் பெற்று சாதனை படைத்தவர்.

### தேசிய மட்டம்

1980 இல் பரிதிவட்டம் எறிதலில் 100.1மீ எறிந்து புதிய சாதனையை நிலைநாட்டியவர். குண்டெறிதலில் 57 மீ எறிந்து இரண்டாம் இடத்தையும் பெற்றவர். 1981 இல் ஈட்டி எறிதலில் 80 மீ எறிந்து முதலாம் இடத்தைப் பெற்றவர்.

## திரு. சொக்கலிங்கம் சண்முகலிங்கம்



அரியாலையில் பிறந்த இவர் சுதேசிய திருநாட் கொண் டாட்ட விழா விளை யாட்டுப் போட்டி களுக்கு நீண்ட காலமாக ஆரம்பிப் பாளராகக் கடமை

புரிந்து தொண்டாற்றியவர். இவர் சிறந்த விளையாட்டு வீரருமாவார் இவர் யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியால யத்தின் பழைய மாணவரான தனது கல்லூரி சார்பாகவும் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம் சார்பாகவும் போட்டிகளில் பங்குகொண்டு வெற்றி பெற்று அரியாலைக்குப் புகழ் சேர்த்த விளையாட்டு வீரராவார்.

**கல்லூரி மட்டம்**

நீளம் பாய்தல், 100மீ, 200மீ ஆகிய போட்டிகளில் பல பிரிவுகளில் முதலாம் இடம் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். 1969 இல் 100 மீ ஓட்டத்தை 11.1 செக்கனில் கடந்த சாதனையாளராவார்

**மாவட்ட மட்டம்**

யாழ்ப்பாண மாவட்ட பாடசாலை களுக்கிடையிலான போட்டியில் 1969 இல் நீளம் பாய்தலில் 1 ஆம் இடத்தையும் 100 மீற்றர் ஓட்டத்திலும் 1 ஆம் இடத்தையும் பெற்றவர்.

**தேசிய மட்டம்**

கொழும்பில் நடைபெற்ற பாடசாலை களுக்கிடையிலான போட்டியில் பங்கு பற்றி 1969 இல் நீளம் பாய்தலில் முதலாம் இடத்தைப் பெற்ற சாதனையாளராவார்.

## திருமதி உத்தமராணி புஸ்பராஜா (சுப்பையா)

அரியாலையை சேர்ந்த இவர் சுப்பையா தம்பதிகளின் மகளாவார். யா/கனகரத்தினம் மகாவித்தியாலயத்தின் பழைய மாணவியாவார். இவர் தற்போது பிரான்ஸ் நாட்டில் வசித்து வருகின்றார். இவர் அரியாலையில் வசித்த காலத்தில் தனது கல்லூரிக்கும் அரியாலைக்கும் புகழ் ஈட்டித்தந்த வீரங்கனையாவார். அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தின் சார்பில் கழகங்களுக்கிடை யிலான மெய்வல்லுனர் போட்டியில் 100மீ, 200மீ, நீளம் பாய்தல் போன்ற வற்றில் பங்குகொண்டு கழகத்தின் வெற்றிக்காக உழைத்தவர்.

**கல்லூரி மட்டம்**


100மீ முதலாம் இடம்
நீளம் பாய்தல் 2 ஆம் இடம்

**மாவட்ட மட்டம்**

100மீ முதலாம் இடம்
200மீ இரண்டாம் இடம்

கல்லூரி மட்டத்தில் 17 வயதுக்கு உட்பட்ட பிரிவில் அதிசிறந்த மெய் வல்லுனர் போட்டி வீரங்கனையாக தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத் ததக்கது. பாடசாலைகளுக்கிடையிலான போட்டிகளில் தேசிய மட்டத்தில் விருதைப் பெற்ற வீராங்கனையாவார்.

## திரு. மகாதேவா கஜேந்திரா அவர்கள்



அரியாலையின் 04.10.1977 இல் பிறந்த ம.கஜேந்திரா யா/கன கரத்தினம் மத்திய மகா வித்தியாலயத் தின் பழைய மாணவ ராவார். கல்லூரி மட்டத்தில் நடை பெற்ற 15 வயதுக்கு கீழ், 17வயதுக்கு கீழ், 19 வயதுக்கு கீழ் ஆகிய சகல பிரிவு களிலும் சம்பியனாக திகழ்ந்தவர் வெற்றிக் கேடயங்களைப் பெற்றவர்.

**மாவட்ட மட்டம்.**

இதிலும் சகல பிரிவுகளிலும் யாழ்ப்பாண மாவட்டத்தில் 1992ஆம் ஆண்டு தொடக்கம் 1995 ஆம் ஆண்டு வரை சம்பியனாக வந்தவர். 1995 இல் இவரின் சாதனைகளாவன 100மீ 11.1 செக்கன் 200 மீற்றர் 23.2 செக்கனாகும்.

இவரைப்பற்றி அப்போதைய விளையாட்டுத்துறை அதிகாரியாக இருந்த சி.கணேசலிங்கம் அவர்கள் பாராட்டிய விதம் கவனிக்கத்தக்கது. "கஜேந்திரா ஆரம்ப நிலையை எடுத்த பாங்கு ஓட்டத்தின்போது அவரின் உறுப்புக்களின் செயற்பாடுகள் முடிவைத் தாண்ட அவர் எடுத்த முன்முயற்சி யாவுமே வியக்கத்தக்கதாக இருந்தது. அவர் மைதானத்துக்கு வரும்போது காணப்படும் கம்பீரமும் போகும்போது காணப்படும் கவர்ச்சியைக் கண்டுதான் விளையாட்டு மைதானத்தில் ஒரு விளையாட்டு வீரனைக் கண்டேன் என இங்கு குறிப்பிட விரும்புகின்றேன்" எனக் குறிப்பிட்டிருந்தமை கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய விடயமாகும்.

### மாகாண மட்டம்

இடம்பெயர்ந்து வவுனியாவில் தங்கி இருந்தபோது 1998 இல் வவுனியா விளையாட்டு கழகம் சார்பில் பங்குபற்றி 100 மீ 11.1செக்கனில் கடந்து சாதனை புரிந்துள்ளார். 1999 ஆம் ஆண்டில் வடக்கு கிழக்கு மாகாணசபை விளை யாட்டு போட்டியில் 100 மீ 11.2 செக்கனில் கடந்து முதலிடத்தைப் பெற்றுக்கொண்ட சாதனையாளராவார். 2000 ஆம் ஆண்டில் லண்டன் மா நகருக்குப் புலம்பெயர்ந்த நிலையிலும் அரியாலையின் விளை யாட்டுத்துறை பற்றியும் சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாக்கள் பற்றியும் அவற்றின் முன்னேற்றத் திலும் ஆர்வமுடன் செயல்படும் அரியா லைச் சுதேசியாவர்.

## செல்வன் அகிலன் மிதிலன்



அரியாலையைச் சேர்ந்த சண்முக லிங்கம் அகிலன் - விஜிதா தம்பதிகளின் மூத்த புதல்வன் மிதிலன் அவர்கள் நோர்வே யில் பிறந்து அங்கேயே கல்வி கற்றவராவார்.

### நோர்வே தேசிய அணி

இவர் நோர்வே 15 வயதின் கீழ், 16 வயதின் கீழ்ப்பட்ட உதைபந்தாட்ட தேசிய அணியில் அங்கம் வகித்து எம் ஊருக்குப் பெருமை தேடித்தந்துள்ளார். நோர்வேயின் மஞ்செஸ்டர் ஐக்கிய கழகம், ஸ்கெய்ட், ஸ்ராபக் போன்ற மிகப் பெருங் கழகங்களின் உதைபந்தாட்ட அணிகளில் அங்கம் வகித்துள்ளார்.

விளையாட்டு முகாமைத்துவ மாணியாகிய இவர் தற்பொழுது முது மாணிக் கற்கைநெறியின் இறுதி நிலையில் உள்ளார்.

இவரது பேரனான விளையாட்டு வீரன் S.K. சண்முகலிங்கம் அவர்களைப் போல் விளையாட்டுத்துறையில் மிதிலனும் சிறந்து விளங்குவதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றோம்.

## திரு. சூடாமணி அகிலன்



அரியாலையின் பிரபல எழுத்தோவி யரும் கலைஞருமான சூடாமணி பத்மாவதி (முத்தையா) தம்பதி யரின் மூத்த புதல்வ ரான இவர் அரியா லையில் பிறந்தார். தற்போது யாழ்ப் பாண பிரதேச செயலகத்தில் கணக் காளராகப் பணிபுரிகின்றார்.

### பாடசாலை மட்டம்

பரிதி வட்டம் வீசுதல், உயரம் பாய்தல் என்பவற்றில் முதலிடம் பெற்றுள்ளார். அஞ்சல் ஓட்டப் போட்டி களில் பங்கு பற்றியுள்ளார். கலப்பு வலைப் பந்தாட்டம், ஆண்களுக்கான வலைப்பந் தாட்டம், கூடைப்பந்தாட்டம் போன்ற அணிகளில் அங்கம் வகித்துள்ளார். அணி நடை, பாண்ட் வாத்தியக் குழுவில் அங்கம் வகித்தவர்.

### பல்கலைக்கழக மட்டம்

கூடைப்பந்தாட்ட அணியில் இடம்பெற்றுள்ளார். அதில் முழுவர்ண விருதினை 2002 ஆம் ஆண்டில் பெற்றுக் கொண்டதோடு இவ் அணியின் உப தலைவராகவும் விளங்கியவர். 2001 இல் அனைத்துப் பல்கலைக்கழக கூடைப் பந் தாட்ட போட்டியில் வெள்ளிப்பதக்கம் பெற்ற அணியில் அங்கம் வகித்துள்ளார்.

### மாகாண மட்டம்

வடகிழக்கு மாகாண சபை நடத்திய 7 மாவட்டங்களுக்கிடையி லான போட்டியில் வெற்றிபெற்ற அணியில் இடம்பெற்றுள்ளார். அவ் அணி வெள்ளிப் பதக்கத்தை வென்று சாதனை கள் படைத்தது.

### மாவட்ட மட்டம்

2001 -2005 ஆம் ஆண்டு வரை யாழ் மாவட்ட கூடைப்பந்தாட்ட அணியில் இடம்பெற்றுள்ளார். 2002 ஆம் ஆண்டு அணியின் உபதலைவராக செயற்பட்டுள்ளார். கூடைப்பந்தாட்ட அணியின் மத்தியஸ்தராகவும் கடமை புரிந்துள்ளார்.

### தேசிய மட்டம்

அகில இலங்கை கூடைப்பந் தாட்ட சம்மேளத்தினால் யாழ் மண்ணில் சிறப்பாக நடத்தப்பட்ட போட்டியில் அங்கம் வகித்து முதல் இறங்கும் ஐந்து வீரர்களுள் இடம் பிடித்துள்ளார். மேலும் பல தேசியமட்டப் போட்டிகளின் அணியில் இடம்பிடித்த கூடைப் பந்தாட்ட வீரராவார். கலப்பு வலைப் பந்தாட்ட அணி தேசிய மட்டத்தில் 2003 ஆம் ஆண்டு சாதனை நிலை நாட்டித் தங்கப் பதக்கம் பெற்ற அணியில் அங்கம் பெற்றுள்ளார். தேசிய மட்டத்தில் சிறந்த தடுத்தாடும் வீரனுக்கான விருதைப் பெற்றுள்ளார். அகில இலங்கை அரச ஊழியர் விளையாட்டு சம்மேளனம் நடத்தும் அகில இலங்கை ரீதியான கலப்பு, ஆண்கள் வலைப்பந்தாட்ட போட்டிகளில் பங்குபற்றி வருகிறார்.


## கலாநிதி திருமதி பவானி அகிலன் (சதானந்தன்)



சிறந்த பல்துறை விளையாட்டு வீராங் கனையான இவர் குறிப்பாக வலைப் பந்தாட்ட பாடசாலை மட்டம், மாவட்ட மட்டம், தேசிய மட் டம் போன்ற நிலை களில் பங்குகொண்ட அணியில் இடம் பெற்றவர். யாழ். சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் கல்விகற்ற இவர் அக்கல்லூரியில் இடம்பெற்ற விளை யாட்டுகளில் பரிசில்கள் பெற்றவர். கலைமாணிப் பட்டதாரியான இவர் 1996 – 1997 ஆம் ஆண்டு வீராங்கனைக்கான விருதைப் பெற்றவர். 2012 இல் கலாநிதிப் பட்டத்திற்கான சிறந்த ஆய்வுக் கட்டுரை எழுதி கலாநிதி சிவசங்கரன் ஞாபகார்த்த தங்கப்பதக்கம் பெற்றவர். 2012 – 2013 இல் யாழ் மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கத் தின் சிறந்த முன்னாள் வீராக்கனைக்கான விருதைப் பெற்றவர். இலங்கை வலை பந்தாட்ட சம்மேளனம், இலங்கை அமெச்சூர் மெய்வல்லுனர் சங்கம் ஆகிய வற்றால் நடத்தப்பட்ட பரீட்சைகளில் சித்தியடைந்தார். இளம் விளையாட்டு விராங்கனைகளுக்கு பயிற்சி வழங்கி வரும் இவர் 2010 முதல் உடற்கல்வி சிரேஷ்ட விரிவுரையாளராகவும் கடமையாற்று கிறார். அரியாலை ஐக்கிய கழகம் மற்றும் சுதேசியத் திருநாள் நிகழ்வுகளிலும் பங்கு கொண்ட வீராங்கனையாகும்.

# அரியாலையூர் நாடக வரலாறு

ப. ஸ்ரீஸ்கந்தன்
கலைத்தலைவர்
சுதேசிய திருநாட் கொண்டாட்ட
நூற்றாண்டு விழா



ஈழத்தில் மிக நீண்ட காலமாகக் கலைத்துறையில் குறிப்பாக நாடகக் கலையில் பல்வேறு பரிமாணங்களைத் தொட்டது என்ற பெருமைக்குரிய ஊர் எமது அரியாலை என்பதை நாடக வல்லுநர்கள் சொல்லக்கேட்டிருக்கிறோம். கூத்து இசைவழி நாடகங்கள், மரபுவழி நாடகங்கள், சமகால நாடகங்கள், நவீன நாடகங்கள், நகைச் சுவை நாடகங்கள் அனைத்திலும் வியக்கத்தக்க வகையில் அரியாலையூர்க் கலைஞர்கள் கோலோச்சினர். சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா ஆரம்பிக்கப்பட்டதற்கு முற்பட்ட காலத்தில் இருந்து நாடக ஆற்றுகைகள் வளர்ச்சி கண்டு வந்துள்ளன. சுதேசிய விழா நாடகங்கள் ஏற்படுத்திய எழுச்சி காரணமாக அரியாலையின் சகல பகுதிகளிலுமுள்ள சனசமூக நிலையங்களின் விழாக்களில் எல்லாம் நாடகங்கள் மேடையேற்றப்பட்டதனால் நாடகக்கலை எமது ஊரில் அபரிதமான வளரச்சியைக் கண்டது.

இன்று நினைத்தாலும் மெய் சிலிர்க்கின்ற பல நாடகங்களை நான் மண்ணில் பார்த்திருக்கின்றேன். ஐ.எஸ். சண்முகநாதன் நடித்த ‘மந்திரி குமாரி’, இ.கே. குமரையாவின் ‘சாணக்கிய சபதம்’, பொ. சண்முகலிங்கம் அரிச்சந்திரனரகத் தோன்றிய ‘மயானத்தில் மன்னன்’, பொ. விஜயரட்ணத்தின் ‘பாதுகை’, ஸ்ரான்லிக் கல்லூரி மைதானத்தில் மேடையேறிய ‘கர்ணன்’ என்பன நான் ரசித்த நாடகங்களிற் சிலவாகும். கர்ணன் நாடகத்தில் போர்க்காட்சியின்போது தேர்கள் நகர்ந்த காட்சி, சாணக்கிய சபதம் நாடகத்தின் கட் அவுட் ஒன்று இ.கே. குமரையாவின் சாணக்கியத் தோற்றத்துடன் பழைய பூங்கா வாசலில் உள்ள வாகை மரத்தில் கட்டப்பட்டிருந்தது போன்ற பல நினைவுகள் இன்றும் நீங்காமல் உள்ளன. இந்நாடகங்களில் சிலவற்றை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தேசிய சேவைப் பிரிவினர் அரியாலை சனசமூக நிலையத்தில் வைத்து பதிவு செய்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

எமது ஊர் கலைஞர்கள் அரியாலைக்கு வெளியேயும் புகழ் பெற்றவர்களாக இருந்துள்ளார்கள். அவர்களில் முதன்மையாகக் குறிப்பிடப்பட வேண்டியவர் க.பாலேந்திரா அவர்கள். இன்று உலகத் தமிழ் நாடக வரலாற்றில் தொடர்ச்சியாக நவீன நாடகங்களை மேடையேற்றி வரும் முன்னோடிக் கலைஞர். மேலும் நடிகமணி வி.வி. வைரமுத்து அவர்களது ‘மயான காண்டம்’ நாடகத்தில் சந்திரமதியாகத் தோன்றிய செல்வம் மற்றும் வி.கே. இரத்தினம், யாழ். நாடக அரங்கக் கல்லூரியின் நாடகங்களில் நடித்துப் புகழ் சேர்த்த ச.உருத்திரேஸ்வரன், பொப்பிசைப் பாடல்கள் மூலமாக இலங்கைபூராவும் அறியப்பட்ட எஸ். ராமச்சந்திரன், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன அறிவிப்பாளராகிப் புகழ் சேர்த்த லோகேஷ், ஈழத்துத் திரைப்படங்களை நெறியாள்கை செய்த நா.கேசவராஜ்.

வெளிநாடுகளில்எங்கு சென்றாலும் அரியாலையூரான் என்று அறிந்ததும் 'வெளிக்கிடடி விசுவமடுவுக்கு' நாடகம் பற்றிப் பேசுகின்ற அளவுக்கு பேரும் புகழும் பெற்ற அரியாலை திடீர் நாடக மன்றக் கலைஞர்கள், ஆயிரம் தடவை களுக்கு மேல் மேடையேறிய அடங்காப் பிடாரி நாடகத்தில் தோன்றிய என்.ரி. குணம்.

மேலும் சங்கீதத் துறையில் கோலோச்சிய சங்கீதபூஷணம்ச.பாலசிங்கம், கவிஞராகத் திகழ்ந்த வே.ஐயாத்துரை, பட்டிமன்றப் பேச்சாளர் ஆசிரியர் ச.சதாசிவம் என அரியாலைக்கு வெளியே பிரபலமாகி எமது ஊருக்குப் பெருமை தேடித்தந்த பல கலைஞர்கள் இருக் கின்றனர்.

## ஆரம்பகால நாடகங்கள்

எங்கள் அரியாலை ஊரில் சமூக, சரித்திர, புராண இதிகாச நாடகங்களை யும் இசை நாடகங்களையும் நாம் எமது நாட்களில் பார்த்திருக்கிறோம். ஆயினும் ஈழத்தவரின் பாரம்பரியக் கூத்து வடிவங்களான வடமோடி, தென்மோடி வகைக் கூத்துக்களும் அரியாலை மண்ணில் ஆடப்பட்டதற்குச் சான்றுகள் உள்ளன.

1910 ஆம் ஆண்டளவில் ஆனந்தன் வடலி வீதியில் அருணோதயா சனசமூக நிலையத்துக்குக் கிழக்குப் புறமாக உள்ள வைத்திலிங்கம் வளவில் கொட்டகை அமைத்து 'அழகேந்திரன்' என்ற கூத்துப் பாடி ஆடி நடிக்கப்பட்டுள்ளது. பார்வையாளர்கள் வட்டமாகச் சுற்றி இருக்க வட்டக்களரி மேடை போன்று நடிகர்கள் மத்தியில் நின்றவாறு இந்நாடகத்தில் நடித்துள்ளனர். ஊர்வசி யாக நாகலிங்கம், கவுந்தாரியாக செல்லையா மற்றும் பலர் பங்குகொண்ட இந்நாடகத்தை அச்சுவேலி கந்தப்பு அண்ணாவியார் பழக்கியிருந்தார். தேங்காய் எண்ணெய்ப் பந்த ஒளியில் விடிய விடிய ஆடப்பட்ட இந்த 'அழகேந்திரன்' கூத்தில் விண்ணிலிருந்து ஊர்வசி பூவுலகிற்கு இறங்கி வரும் காட்சி எல்லோரையும் பிரமிப்பில் ஆழ்த்தியது என்று அறிகிறோம்.

அரியாலை மண்ணில் இக்கால கட்டத்தில் பல வடமோடி, தென்மோடி நாட்டுக்கூத்துக்கள் இடம் பெற்றது என்றும் வேறு இடங்களில் இருந்து அண்ணாவிமாரை வரவழைத்து ஒரு வருடகாலம் தாம் வடமோடி ஆட்டங்கள் பயின்றதாக எமது மூத்த கலைஞர் இ.சுப்பிரமணியம் சொல்லிக் கேட்டோம். அப்போது நொத்தாரிசு வளவு என அறியப்பட்ட தற்போதைய கலைமகள் சனசமூக நிலையப் பகுதியில் 1915 ஆம் ஆண்டளவில் 'பவளக்கொடி' என்ற இசை நாடகம் மேடையேற்றப்பட்டுள்ளது. இதுவே அரியாலையில் மேடையேற்றப் பட்ட முதலாவது இசை நாடகமாகும். 'பவளக்கொடி' நாடகத்தில் அருச்சுனன் தம்பிப்பிள்ளை, அல்லி பரமு, ஆசாரியார் வல்லிபுரம் (சுபத்திரை), குளப்பர் கந்தையா (பவளக்கொடி) பைபிள் நாகலிங்கம் (கிருஷ்ணர்), அம்மா நாகலிங்கம் (பபூன்) ஆசாரியார் சின்னத்துரை (புலேந்திரன்), தி. நாகநாதி, கொழும்பர் முத்தையா ஆகியோர் நடித்திருந்தனர். மின் வசதிகளற்ற அந்நாளில் எல்லோரும் கேட்கும்படியாக உரத்த சாரத்தில் பாடி நடித்தனர். ஆறு மாதங்களாக நாடகத்தைப் பழகி யிருந்தனர். இந்நாடகம் பண்ணை லைற் வெளிச்சத்தில் நடைபெற்றது.

இதன் பின்னர் 1918 இல், கனகரட்னம் வீதியிலுள்ள மாம்பழத்தார் வளவில் 'அல்லி அருச்சுனா' என்ற நாடகம்

மேடையேற்றப்பட்டுள்ளது. விளம்பரம் எதுவும் செய்யாத நிலையில் வெறும் வாய்மொழி மூலம் கேட்டு வேறு ஊர்களில் இருந்தும் மாட்டு வண்டிகளில் மக்கள் வருகை தந்தனர். இந்நாடகத்தில் முத்தர்பரமு அல்லியாகவும், சி.பொன்னையா முன் அருச்சுனனாகவும், மிளகாய் இராசையா பின் அருச்சுனனாகவும், இ.சுப்பிரமணியம் கிருஷ்ணராகவும், செ.மயிலு செங்கமலமாகவும், சின்னையா குறத்தியாகவும், பரமு பாம்புப்பிடார னாகவும் வேடமேற்றுச் சிறப்பாக நடித்திருந்தனர்.

இதே காலகட்டத்தில் கச்சேரி கிழக்கு ஒழுங்கையிலுள்ள அக்கினி வைரவர் கோயில் பகுதியில் 'பூதத்தம்பி' என்ற நாடகம் தொட்டார் கந்தையா, முனிசிப்பல் வாகன சாரதி செல்லையா மற்றும் பொலிஸ் கைலாயபிள்ளை, சிவலைச் செல்லையா, பொ. செல்லக் கண்டு, சிட்டான் சின்னத்தம்பி, குக்கர் கந்தையா, எலியர் செல்லையா ஆகியோ ரின் நடிப்பில் மேடையேறியது.

மேலும் கச்சேரி கிழக்கில் ஒரு வளவில் 'நவரத்தின மாலை' என்ற இசை நாடகமும் மேடையேறியதாக அறிகிறோம். இந்நாடகத்தில் யு.டி.சி. சிவக்கொழுந்து, நெடுவல் நவசிவாயம், மத்தளம் நமசி வாயம், பாஞ்சாலி கனகு, சாமி கந்தையா, எலியர் செல்லையா ஆகியோர் நடித்துச் சிறப்புச் செய்துள்ளனர். கண்டி வீதிக்கு அண்மையில் உள்ள வெடிப் பொன் னையா வளவில் காத்தான் கந்தையா நடித்த 'காத்தவராயன்' என்ற சிந்து நடைக்கூத்து இடம் பெற்றுள்ளது. சிறந்த குரல் வளம் படைத்த கந்தையா பாம்புக் கடி வைத்தியத்திலும் பிரபலமாக விளங்கியவர்.

ஆத்திக்காட்டு வளவில் அண்ணாவி ராமுப்பிள்ளையின் நெறிப்படுத்தலில் அனுமார் கூத்து, இராமாயணம், வள்ளி திருமணம், கோவலன் ஆகிய நாடகங்கள் நடைபெற்றுள்ளன. இவை தவிர நாடகங்களில் பங்குபற்றிய நடிகர்கள் இணைந்து சித்திவிநாயகர் முன்றலிலும், கனகரட்ணம் சந்தியிலும் பாரதம், ராமாயணம், கந்தபுராணம் போன்றவற்றை வாசித்து அவற்றிற்கு உரைகள் சொன்ன தாகவும் அறிகிறோம். இவையே அரியாலையில் மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப கால கலை முயற்சிகளாகும். இனி சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா நாடக விடயங்கள் பற்றிப் பார்ப்போம்.

## சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா நாடகங்கள்

தமிழனுக்கு என்றொரு நாகரிகம், ஓர் பாரம்பரியம் ஓர் பண்பாடு உண்டு என்பதை வலியுறுத்தியும், நாம் எப்போதும் சுதந்திர மக்களாக வாழ வேண்டும் என்னும் பெருநோக்குடன் **1919** ஆம் ஆண்டு சித்திரை வருடப் பிறப்பன்று சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா ஆரம்பிக்கப் பட்டது. நமது சுதேசிய விழாவில் நாடகங்கள் பிரதான பங்கு வகித்து வந்திருக்கின்றன. பிரபல்யமான பல நாடகக் கலைஞர்களை உருவாக்கியதில் சுதேசிய திருநாட்கொண்டாட்ட விழா நாடகங்களுக்கு முக்கிய பங்குண்டு.

முதலாவது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவின் இரவு கலை நிகழ்ச்சிகளில் முதலாவதாக விழாவின் நோக்கத்தை மக்கள் அறியும் முகமாக மேடையில் ஒரு சம்பாஷணை நிகழ்த்தப் பட்டது. கர்வசமனன், சர்வசமனன் என்ற இரு பாத்திரங்களை வைத்து நொத்தாரிசு சுப்பிரமணியம் எழுதிய சம்பாஷணையில் சி. சோதிநாதர், எஸ். வைத்திலிங்கம் ஆகியோர் பங்குபற்றினர். எமது சுதேசிய திருநாட்கொண்டாட்ட விழாவின்

முதலாவது நாடகமாக சத்தியவான் சாவித்திரி என்ற இசை நாடகம் மிகவும் பிரமாண்டமான முறையில் மேடை யேற்றப்பட்டுள்ளது. ஆ. சோமர் என்ற ஆறுமுகம் சோமசுந்தரமும் அவரது தந்தையார் சாத்திரியார் ஆறுமுகம் அவர்களும் இணைந்து இந்நாடகத்திற்கு வசனம், பாடல்களை எழுதியிருந்தனர். ஆறு மாதங்களாகப் பழக்கப்பட்ட இந் நாடகத்தை அண்ணாவியார் சபாபதிப் பிள்ளை நெறியாள்கை செய்திருந்தார். இயமலோகக் காட்சிகள் எல்லாம் சிறப்பாக அமைக்கப்பட்ட இந்நாடகம் அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை மண்டபத்தில் எண்ணை லைற் வெளிச்சத்தில் நடைபெற்றுள்ளது.

இந்நாடகத்தில் ஐமன் கந்தையா (சத்தியவான்), எஸ்.சோமர் (முன் சாவித்திரி), கரடி தம்பிப்பிள்ளை (பின் சாவித்திரி), ஆ.சோமர் (யமதர்மராஜன்), கலியான் கனகரத்தினம் (நாரதர்), இத்தி நாகலிங்கம் (சாவித்திரியின் தகப்பன்), புறூடி சபாரட்ணம் (சத்தியவானின் தகப்பன், விதானை சின்னத்தம்பி (தூதுவன்) ஆகியோர் மிகவும் சிறப்பாக நடித்துள்ளனர். மிகவும் இனிமையாகவும் உச்ச ஸ்தானத்திலும் பாடவல்ல சிட்டான் சின்னத்தம்பி மற்றும் பாட்டுக்கார கனகசபை ஆகிய இருவரும் பிற்பாட்டுக் காரராக விளங்க துரையப்பா என்பவர் ஹார்மோனியம் இசைத்துள்ளார்.

பழைய வின்சர் திரையரங்கு இடத்தில் இருந்த றிட்ஜ்வே மண்டபத் திலும் (பழைய நகர மண்டபம்) மற்றும் யாழ்ப்பாணத்தின் பல இடங்களிலும் 'சத்தியவான் சாவித்திரி' நாடகம் மேடையேற்றப்பட்டு அரியாலைக்குப் பெரும்புகழைப் பெற்றுக் கொடுத்துள் ளது. இதைத் தொடர்ந்து வந்த சுதேசிய விழாக்களில் ஜெயாதி, சகுந்தலை, அரிச்சந்திர காண்டம், அயோத்தியா காண்டம், கிஷ்கிருந்த காண்டம் மனோகரா, இலங்காதகனம், பாமா விஜயம் போன்ற நாடகங்கள் மேடை யேற்றப்பட்டுள்ளது. இதில் பெரும் பாலானவை அண்ணாவியார் சபாபதிப் பிள்ளை அவர்களால் நெறிப் படுத்தப் பட்டன. அண்ணாவியார் சபாபதிப் பிள்ளை அரியாலை நாடக வரலாற்றில் மிக முக்கியமான ஒருவர்.

**1927** இல் இடம்பெற்ற **9** ஆவது சுதேசிய திருநாட்கொண்டாட்ட விழா வில் சகுந்தலை நாடகம் மேடை யேற்றப்பட்டுள்ளது. ஆ.சோமர் துஷ்யந்த னாகவும், எஸ்.சோமர் சகுந்தலை யாகவும், சி.பொன்னையா கண்ணுவர் முனிவராகவும், சொக்கலிங்க வாத்தியார் செம்படவனாகவும் இதில் நடித்துள்ளனர்.

அடுத்த வருடம் **10** ஆவது சுதேசிய திருநாட்கொண்டாட்ட விழா பெரு விமரிசையாகக் கொண்டாடப் பட்டுள்ளது. இவ்விழாவில் 'அயோத்தியா காண்டம்' என்ற நாடகம் பிரமிப்பான காட்சி அமைப்புக்களுடன் மேடை யேறியுள்ளது பிரபல நடிகராகவும் நாடக நெறியாளராகவும் அறியப்பட்ட ப.சிவஞானபோதம் அவர்களின் முதலாவது நாடகம் இதுவாகும். இதில் பரதனாக அவர் வேடமேற்றிருந்தார். மேலும் சி. பொன்னையா (இராமர்), பண்டிதர் இராசையா (இலக்குமணன்), என்ஜினியர் முத்தையா (வசிட்டர்), கலியான் கனகரத்தினம் (விசுவாமித்திரர்), பொலிஸ் கைலாயம் (சீதை), எஸ். சோமர் (கைகேயி), ஆ. சோமர் (தசரதன்), சிவக்கொழுந்து (குகன்) மற்றும் அருச்சுனன் தம்பிப்பிள்ளை ஆகியோரும் இந்நாடகத்தில் நடித்திருந்தனர். இந் நாடகத்தில் கடலில் தோணி போதல் மற்றும் போர்க் காட்சிகள் யாவும்

தத்ரூபமாக அமைந்திருந்தாகச் சொல்லப் படுகிறது. 'கிஷ்கிந்த காண்டம்' நாடகத்தில் இ. சுப்பிரமணியம் சுக்கிரீவ னாகவும் சி. பொன்னையா இராமனாகவும், பொலிஸ் கைலாயம் சீதையாகவும் நடித்துள்ளனர்.

1935 ஆம் ஆண்டு இடம்பெற்ற 17 ஆவது சுதேசிய திருநாட்கொண்டாட்ட விழாவில் 'அரிச்சந்திரா காண்டம்' இசை நாடகம் சிறப்பாக மேடையேற்றப் பட்டுள்ளது. ஆ.சோமர் அரிச்சந்திர னாகவும், எஸ். சோமர் முன் சந்திரமதி யாகவும், கரடி தம்பிப்பிள்ளை பின் சந்திரமதியாகவும், சி. பொன்னையா விசுவாமித்திரராகவும் ப.சிவஞானபோதம் ஜயராகவும் நடித்துள்ளனர். இந்நாடகத் தின் பாடல்களை ஆ. சோமர், பண்டிதர் இராசையா, சி. பொன்னையா ஆகியோர் எழுதியிருந்தனர்.

சுதேசிய விழா நாடகங்களில் காட்சிகளுக்கிடையே சு. தம்பாபிள்ளை பபூனாக வந்து நகைச்சுவை விடயங்களைச் செய்ததாக அறிகிறோம். இக்கால கட்டத்தில் அப்புக்காத்து சரவணமுத்து, மொக்கர் தாமோதரம்பிள்ளை, அனுமர் சின்னத்தம்பி ஆகியோரும் நாடகங்களில் பங்குபற்றியதாக அறியப்படுகிறது. இக்காலகட்டத்தில் அண்ணாவியார் சபாபதிப்பிள்ளை, அண்ணாவியார் அப்புக்குட்டி ஆகியோர் பல இசை நாடகங்களைப் பழக்கியிருந்தனர். இவர்கள் வழியில் ப.சிவஞானபோதம் அவர்கள் பல நாடகங்களை இயக்கும் பணியை ஆற்றியிருந்தார். இவர்கள் தவிர பிரபலமான நடிகர்களாக விளங்கிய அருச்சுனன் தம்பிப்பிள்ளை, நீலன் கணபதிப்பிள்ளை போன்றோரும் நாடக நெறியாள்கையில் ஈடுபட்டுள்ளனர்.

சிவஞானபோதம் திரௌபதை வஸ்திராபரணம், மனோன்மனி, அரிச்சந்திர காண்டம், பாரதப்போர், சாணக்கியா, குந்தலப்பிரியா, சுபத்திரா அருச்சுனா போன்ற பல நாடகங்களை நெறியாள்கை செய்திருந்தார். நெறியாள்கை செய்தது மட்டுமல்லாது மனோன்மணி, சாணக்கியர், திரௌபதை வஸ்திராபரணம், அரிச்சந்திர காண்டம், பாரதப்போர் ஆகிய நாடகங்களில் முக்கிய பாத்திரங் களில் நடித்துப் புகழ் பெற்றிருந்தார்.

1930 இல் நடைபெற்ற சுதேசிய திருநாட்கொண்டாட்ட விழாவில் 'அல்லி அருச்சுனா' நாடகம் மேடையேற்றப் பட்டுள்ளது. இந் நாடகத்தில் ச.தம்பிப் பிள்ளை அருச்சுன னாகவும், தொண்டர் கந்தையா அல்லியாகவும், பைபிள் நாகலிங்கம் கிருஷ்ணனாகவும், முத்தர் தருமராகவும், சிவலைச் செல்லையா சகாதேவனாகவும் அப்பா நாகலிங்கம் வேடனாகவும் மற்றும் கொழுப்பர் முத்தையா, சிட்டான் சின்னத்தம்பி, பொலிஸ் கைலாயம், பொ. செல்லக் கண்டு, குக்கர் கந்தையா, எலியர் செல்லையா ஆகியோரும் நடித்திருந்தனர்.

நாடகங்களில் சிறப்பாக நடித்த காரணத்தால் கதாபாத்திரங்களின் பெயர்கள் நடிகர்களின் பெயர்களுடன் ஒட்டிக்கொண்டமைக்குச் சான்றுகள் உண்டு. அருச்சுனன் தம்பிப்பிள்ளை, அல்லி பரமு, கரடி தம்பிப்பிள்ளை, கலியான் கனகரத்தினம், கூனி இராம நாதன், அப்பா அருளம்பலம், சிட்டான் சின்னத்தம்பி, காத்தான் கந்தையா போன்ற பலரை இங்கு குறிப்பிடலாம்.

1940 ஆம் ஆண்டுகளிலிருந்து சுதேசிய விழாவில் இசை நாடகங்கள் மருவிச் செல்ல, வசன நடை நாடகங்கள் முதன்மை பெறத் தொடங்கின. வசன நடை நாடகங்களின் ஆரம்ப காலத்தில் வே.க.சண்முகராசா,ஐ.எஸ்.சண்முகநாதன் இ.கே.குமரய்யா, ச.பாலசிங்கம், சி.குலத்

துங்கம், சு.பாலசுந்தரம், சு.தம்பாபிள்ளை, ச.சதாசிவம், வ.ஐயாத்துரை, ம.இராம நாதன், சோ.சிவசுந்தரம், இராசகிளி, பொன்னுத்துரை போன்ற பெரும் நடிகர்கள் பல வெற்றி நாடகங்களை அளித்துள்ளனர்.

1940 இல் இடம்பெற்ற சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவில் இடம்பெற்ற 'குந்தளப்பிரியா' என்ற வசன நடை நாடகத்தில் வே. க. சண்முகராசா, சு. தம்பாபிள்ளை, ம.இராமநாதன், ஐ.எஸ்.சண்முகநாதன், சோ.சிற்றம்பலம், கனகலிங்கம் ஆகியோர் நடித்திருந்தனர். 1941 இல் முதன் முறையாக சத்தியவாணி என்ற ஒரு சமூக நாடகம் சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவில் மேடை யேறியது. இந்த நாடகத்தில் வ.ஐயாத் துரை, வே.க. சண்முகநாதன், ஐ.எஸ். சண்முகநாதன், ம. இராமநாதன், ச.கணேசு ஆகியோர் பங்குபற்றி இருந்தனர். 1942 இல் நடைபெற்ற விழாவில் 'சுபத்திரா அருச்சுனா' என்ற நாடகம் மேடையேற்றப்பட்டுள்ளது.

ச. கணேசு, வே.க. சண்முகராசா, ம. இராமநாதன், வே. தர்மலிங்கம், மு.சோமசுந்தரம் ஆகியோர் இந்நாடகத் தில் நடித்துச் சிறப்புச் செய்துள்ளனர். 1943 இல் ப.சிவஞானபோதம் நெறியாள்கையில் பாரதப் போர் நாடகம் பிரமாண்டமான மேடையலங்காரங் களுடன் மேடையேற்றப் பட்டுள்ளது.

## வெள்ளி விழா

சுதேசிய திருநாட் கொண்டாட் டத்தின் வெள்ளி விழா 1944 இல் வெகுவிமரிசையாகக் கொண்டாடப் பட்டது. இதில் அருச்சுனன் தவநிலை, பரசுராமர், பிரகலாதன் மற்றும் சேக்ஸ்பியரின் வெனிஸ் நகர வாணிபன் ஆகிய நாடகங்கள் இடம்பெற்றன. அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை மண்டபத்தில் இடம்பெற்ற இந்நாடகங் களில் வே.க.சண்முகராசா, ஐ.எஸ்.சண்முக நாதன், ம. இராமநாதன், சு.தம்பாபிள்ளை மற்றும் அ. விசுவநாதன், வே. மகாதேவா, புறாடி மாஸ்டர் ஆகியோர் நடித் திருந்தனர்.

1945 இல் நடைபெற்ற விழாவில் மனோன்மணி என்ற நாடகம் மேடை யேறியது. இதில் வே.க.சண்முகராசா, ம. இராமநாதன், வ.ஐயாத்துரை, சி.பரம நாதன், மு.சோமசுந்தரம் ஆகியோர் நடித்திருந்தனர். எனினும் மனோன்மணி நாடகம் பல்வேறு நடிகர்களால் வெவ்வேறு காலங்களில் மேடையேற்றப் பட்டு சிறப்புப் பெற்றது.

வெள்ளி விழாவைத் தொடர்ந்து மேடையேற்றப்பட்ட நாடகங்கள் பல வற்றில் ஐ.எஸ். சண்முகநாதன், வே.க.சண் முகராசா, இ.கே.குமரையா, ம.இராம நாதன் சி. குலத்துங்கம், ஸ்ரீபத், சோ.சிவ சுந்தரம், ச. பாலசிங்கம், வை. தில்லையம் பலம் போன்ற கலைஞர்கள் பங்குபற்றி யிருந்தனர். சகுந்தலை, இரு சகோதரர்கள், சீவகசிந்தாமணி, உண்மையின் வெற்றி, சாணக்கியர், அம்பிகாபதி, வணங்காமுடி, தலைநகர், மந்திரிகுமாரி, இராஜராஜ சோழன் ஆகிய நாடகங்கள் மேடை யேற்றப் பட்டன. இவற்றில் சில நாடகங் கள் வேறு இடங்களிலும் மேடையேற்றப் பட்டு அரியாலைக்குப் பெருமை தேடித்தந்தன.

இவர்கள் வழியில் பொ. சண்முக லிங்கம், பொ. விஜயரட்ணம் ம. நவரட் ணம், ந.கிருஷ்ணசிங்கம், என். எஸ். லோகேஸ் வரன் ஆ. தேவராசா, க.மகேஸ்வரன், ந. அருட்பிரகாசம் மற்றும் பலரும் இணைந்து பல வெற்றி நாடகங்களை மேடையேற்றினர். இவர்களது நாடகங் களில் கர்ணன், கந்தன் கருணை என்பன

குறிப்பிடத்தக்க நாடகங்களாகும் கர்ணன் நாடகத்தில் கர்ணனாக பொ. சண்முக லிங்கம், துரியோதனனாக இ.கே. குமரையா, அருச்சுனனாக ம.நவரட்னம், கிருஷ்ணனாக அருட்பிரகாசம் மற்றும் குந்திதேவியாக பிரான்சிஸ் ஜனம் என்ற சிறப்புக் கலைஞனும் நடித்திருந்தனர். இந் நாடகத்தில் யுத்தக்காட்சியில் தேர் ஓடும் காட்சி தத்ரூபமாக அமைந்திருந்தது. மேலும் கந்தன் கருணை நாடகத்தில் சிவனாக இ.கே. குமரையா வீரவாகு தேவராக பொ. விஜயரட்ணம். ஔவை யாராக ம.இராமநாதன், சூரபத்மனாக ம.நவரட்னம், பால முருகனாக விஜயனும் சிறப்பாக நடித்திருந்தனர்.

## பொன்விழா

அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்டத்தின் பொன்விழா 1969 இல் ஒரு வாரமாகக் கொண்டாடப் பட்டது. சித்திரை 08, செவ்வாயன்று தீர்க்க சுமங்கலி, கண்டி அரசன் ஆகிய இரு நாடகங்களும் முடிவில் இந்தியா விலிருந்து வருகை தந்த சிலம்புச் செல்வர் ம.பொ. சிவஞானம் அவர்களது 'சிலம்புச் செல்வி' என்ற தலைப்பிலான சொற் பொழிவும் இடம்பெற்றது.

சித்திரை 10, வியாழனன்று யாழ். தியாகு நாடக மன்றத்தின் 'ஆனந்தக் கண்ணீர், குருநகர் ஒலிம்பிக்ஸ் மன்றத்தின் 'கண் திறந்தது' ஆகியன நாடகப் போட்டியில் வெற்றிபெற்றன. இரு நாடகங்களும் மேடையேறின. சித்திரை 11, வெள்ளியன்று இலங்கை வானொலி லண்டன் புகழ் கலாஜோதி சாணா அவர்களின் கதாப்பிரசங்கம் மற்றும் நல்லூர் தெற்கு சனசமூக நிலையத்தினரின் 'கந்தன் கருணை' நாடகமும் இடம் பெற்றன. சித்திரை 12, சனியன்று அரியாலையூர் பழம்பெரும் நடிகர்கள் பங்குபற்றிய 'மனோன்மணி' என்ற காப்பிய நாடகம் மேடையேறியது. இந்நாடகத்தில் சி. சுப்பிரமணியம், வே.க. சண்முகராசா, ஜ.எஸ். சண்முகநாதன், சு.தம்பாபிள்ளை, ஸ்ரீபத், சி. குலத்துங்கம், ம.இராமநாதன் ஆகியோர் நடித்திருந்தனர். சித்திரை 14, வருடப்பிறப்பன்று வாண வேடிக்கையுடன் ஆரம்பமான இரவுக் கலைநிகழ்ச்சியில் திருவிளையாடல் நாடகம் மேடையேற்றப்பட்டது. மேலும் முற்றிலும் பெண்கள் தோன்றி நடித்த கற்புக் கனல் நாடகமும் இடம்பெற்றன.

இந்நாடகங்களில் இ.கே.குமரையா, பொ. சண்முகலிங்கம், சோ. சிவசுந்தரம், பொ. விஜயரட்னம், திருமதி ராசாம்பாள் சிவசுந்தரம் ஆகியோரும் பெண்களின் கற்புக்கனல் நாடகத்தில் திருமதி ஜ.எஸ். இராசா, திருமதி. திருஞானசம்பந்தன் போன்ற பலரும் நடித்திருந்தனர். பொன்விழாவைத் தொடர்ந்து மேடை யேற்றப்பட்ட நாடகங்களை வரிசைக் கிரமமாகத் தருகிறேன்.

### 1970: 51 ஆவது விழா

நாடகம்: பாண்டிய மகுடம்.

நடிகர்கள் : பொ. சண்முகலிங்கம், ஆ.தேவராசா, என்.ரி. குணம், ந.அருட் பிரகாசம், செல்வம், எஸ்.எஸ்.மனோகரன், செ. சீவரட்ணம்.

### 1971: 52 ஆவது விழா

சேகுவேராக் கிளர்ச்சி காரணமாக நடைபெறவில்லை.

### 1972: 53 ஆவது விழா

நாடகம்: மருது பாண்டியர்.

நடிகர்கள் : க. தர்மராஜா, மு. கேசவநாதன், ந. துரைரட்ணம், பரமநாதன்.

குறிப்பு: இந்நாடகத்தில் நீண்ட வசனங்களைப் பேசி மிகவும் திறமையாக இந்நாடகத்தில் நடித்திருந்தனர்.

### 1973: 54 ஆவது விழா

நாடகம்: நாகவல்லி

நடிகர்கள்: சு.குமரகுரு, ந.அருட்பிரகாசம், ஆ. தேவராஜா, ம. இராமநாதன், ச.உருத்திரேஸ்வரன்.

சிறந்த நடிகரான குமரகுரு தற்போது ஐரோப்பிய நாடுகளில் நடித்து வருவது குறிப்பிடத்தக்கது.

நாடகம்: வெற்றித்திலகம்

நடிகர்கள்: வி.ரி.ஏ. விஸ்வா, பொ.விஜய ரட்னம், மகேந்திரன், மயில்வாகனம், நெடுவல் கணேசு

### 1974: 55 ஆவது விழா

நாடகம்: ராஜபத்தினி

நடிகர்கள்: ச. உருத்திரேஸ்வரன், சு.குமர குரு, க. மகேஸ்வரன்.

நாடகம்: 'பெண் பார்க்க மாப்பிள்ளை வந்தார்' தாளலய நாடகம்

நடிகர்கள்: க. பாலேந்திரா, பொ. கணே சானந்தன், இ.சிறிதரன்

நாடகம்: வெற்றித் திருநகர்

நடிகர்கள்: வி.ரி. ஏ. விஸ்வா, மகேந்திரன், சோமசேகரம், நெடுவல் கணேசு.

### 1975: 56 ஆவது விழா

நாடகம்: ராஜதிலகம்

நடிகர்கள்: ச. உருத்திரேஸ்வரன், ந. அருட் பிரகாசம், என்.ரி. குணம், சு. சிவதாஸ், க.மகேஸ்வரன்.

நாடகம்: வெற்றிச் சின்னம்

நடிகர்கள்: வி.ரி.ஏ.விஸ்வா, பொ. விஜய ரட்னம், சோமசேகரம், மகேந்திரன்.

### 1976: 57 ஆவது விழா

நாடகம்: மாலிக்கபூர்

நடிகர்கள்: என்.ரி.குணம், மகான், ஜெயா, உதயகுமார், குமாரசாமி

நாடகம்: வெற்றிவேந்தன்

நடிகர்கள்: வி.ரி.ஏ. விஸ்வா, மகேந்திரன், பொன்சேகா, மயில்வாகனம், த.பஞ்ச லிங்கம்

### 1977: 58 ஆவது விழா

நாடகம்: கிருஷ்ணன் தூது

நடிகர்கள்: என்.ரி. குணம், வை. சுதாகரன், ச. கோபிநாத், உதயகுமார்

நாடகம்: வெற்றி முழக்கம்

நடிகர்கள்: வி.ரி.ஏ. விஸ்வா மகேந்திரன் நெடுவல் கணேசு, மயில்வாகனம், த.பஞ்ச லிங்கம்

### 1978: 59 ஆவது விழா

நாடகம்: புதுமைப்பித்தன்

நடிகர்கள்: வை. சுதாகரன், ச. கோபிநாத், ம. சுகுமார், ந.நேதாஜி, த. கிருபா

குறிப்பு: புதுமைப்பித்தன் நாடகம் புதுவிதமான காட்சி அமைப்புகளுடன் மேடையேறியது. மத்திய விளையாட்டு மைதானத்தில் திரைச்சீலைகள் அனைத் தும் திறக்கப்பட்டு பிணங்கள் எரிய புதுமைப் பித்தன் கண்டி வீதியிலிருந்து மேடைக்கு வருவதாக காட்சி அழகாக அமைக்கப் பட்டிருந்தது.

நாடகம்: வெற்றி மாளிகை

நடிகர்கள்: பொ. விஜயரட்ணம், க.சோம சேகரம், பொன்சேகா

## வைரவிழா 1979

*சுதேசிய திருநாட்கொண்டாட்ட வைர விழாவில் ராஜராஜ சோழன், சமாதியின் சாம்ராஜ்யம் ஆகிய இரு சரித்திர நாடகங்கள் இடம்பெற்றன. ராஜராஜ சோழன் நாடகத்தில் ச.உருத்திரேஸ்வரன், ஆ. தேவராஜா, வை.சுதாகரன், ச.கோபிநாத் ஆகியோர் நடிதிருந்தனர்.*

*1980 இல் நடைபெற்ற 61 ஆவது விழாவில் ராஜரட்சசனும், 62 ஆவது விழாவில் மனோன்மணி நாடகமும் மேடையேறின. மனோன்மணியில் பழம்பெரும் நடிகர் வே.க. சண்முகராசா குடிலனாகவும் மற்றும் உருத்திரேஸ்வரன், ஆ. தேவராஜா, க. மகேஸ்வரன், உதயகுமார் ஆகியோர் நடித்திருந்தனர். இதன் பின்னர் நாட்டில் நிலவிய அசாதாரண நிலைமை காரணமாக பகல் நிகழ்ச்சிகள் மட்டும் நடாத்தப்பட்டன. 1992 இல் நடைபெற்ற 73 ஆவது விழாவில் அரியாலையூர் வே ஐயாத்துரை எழுதி இரத்தினம் நெறிப்படுத்திய 'பண்டார வன்னியன்' இசை நாடகம் மேடை யேற்றப்பட்டது. இந்நாடகத்தில் கற்கண்டு, இராமண்ணா, செல்வம், சிவலிங்கம் உட்பட பல கலைஞர்கள் பங்குபற்றியிருந்தனர்.*

*1993 இல் நடைபெற்ற 74 ஆவது சுதேசிய திருநாட்கொண்டாட்ட விழாவில் ராஜராஜ சோழன் மேடை யேற்றப்பட்டது. இந்நாடகத்தில் ச.உருத்திரேஸ்வரன் (ராஜ ராஜசோழன்), பொ. விஜயரட்ணம் (விமலாதித்தன்), சடகோபன் (ராஜேந்திரன்), த.பஞ்ச லிங்கம் (பாலதேவர்), பொ.மகேஸ்வரன் (குந்தவி), கா.பொன்னுத்துரை பொன்சேகா (வீரமாதேவி), ம.இராமநாதன் (குந்தவை) ஆகியோர் நடித்திருந்தனர்.*

## பவளவிழா

*1994இல் சிரமங்களுக்கு மத்தியில் பவளவிழா சிறப்பாக நடைபெற்றது. இதில் எல்லாளன் நாடகம் மேடை யேறியது. இந்நாடகம் பவள விழாத் தலைவர் செ. பத்மநாதனின் மீளாய்வில் கவிஞர் தேவதாசனால் உருவாக்கப் பட்டது. இந் நாடகத்தில் ச.உருத்திரேஸ் வரன் (எல்லாளன்), பொ. விஜயரட்னம் (துட்டகைமுனு), இ. சடகோபன் (ராஜகுரு), த. பஞ் சலிங்கம் (பாலதேவன்), பொ.மகேஸ்வரன் (விகாரமாதேவி), பொன்சேகா (நீலவேணி), யதிஸ் (மித்தன்), சு. பாலசுந்தரம் (அமைச்சர்), இ.செல்வமாணிக்கராசா (வில்லவன் கோதை) மற்றும் கணேஷ்வரன், சந்திரகுமார், ராகுலன், ஐங்கரன் உட்பட பலர் பங்குபற்றியிருந்தனர். ச. த.கணநாதன், அ. உபயசேகரம் ஆகியோர் இந்நாடகத் தயாரிப்புக்கான ஒத்துழைப்பைத் தந்திருந்தனர்.*

*1995 இல் இலங்கேஸ்வரன் நாடகம் மேடையேற்றப்பட்டது. அதில் பொ. விஜயரட்னம், ச. உருத்திரரேஸ்வரன், இ. சடகோபன், மனோகரன், கேசவராஜ், இரட்ணசபாபதி, செல்வராஜா ஆகியோர் பங்குபற்றினர். 1996 இல் இடம்பெற்ற இடப்பெயர்வு காரணமாக வரணி மத்திய மகாவித்தியாலயத்தில் இடம்பெயர்ந்த ஊரவர்கள் சிலரால் 77 ஆவது விழா ஒரு பகல் கூட்டத்துடன் நடத்தப்பட்டது. இடம்பெயர்ந்த நிலையிலும் சுதேசிய விழாவை நடாத்த வேண்டும் என்ற அவர்களது வைராக்கியம், பற்றுதல், அர்ப்பணிப்பு நிச்சயம் பாராட்டப்பட வேண்டியது. 1997 இல் இருந்து 2007 வரை நாட்டில் நிலவிய மோசமான சூழ்நிலை காரணமாக சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா பெரும்பாலும் பகல் நிகழ்ச்சிகளுடன் முடிவடைந்தன.*

2008 இலிருந்து ஒரு புதிய இளைஞர் அணி உள்வாங்கப்பட்டு சுதேசிய விழா மீண்டும் மறுமலர்ச்சி பெறத் தொடங்கியது. மறைந்த பழம்பெரும்கலைஞர்களின்புதல்வர்களான பரமநாதன் மோகன்ஜித், தவநாதன் ஹரிசாந்த், பஞ்சலிங்கம் ஹரிகரன், மதுரதன் போன்ற பல இளங்கலைஞர்கள் எமது நாடக உலகில் கால்பதித்தார்கள். 2008 இல் இடம்பெற்ற 89 ஆவது விழாவில் இ. ப. மோகன்ஜித் த.ஹரிசான்ந் பிரதான பாத்திரங்கள் ஏற்று நடித்த 'தாய்த் திருநாடு' என்ற நாடகம் மேடையேறியது. 2009 இல் மோகன்ஜித், விமலன், ஹரிசான்ந் மற்றும் பலர் பங்குகொண்ட ராணி சம்யுக்தா, சங்கிலியன் ஆகிய இரு நாடகங்கள் மேடையேற்றப்பட்டன. 2010 இல் நடைபெற்ற 91 ஆவது விழாவில் ராஜ ராஜ சோழன், மயான காண்டம் ஆகிய இரு நாடகங்கள் மேடையேறின. ராஜ ராஜ சோழனில் ஆ.தேவராசா, ச.உருத்திரேஸ்வரன், இ.சடகோபன், இ.செல்வமாணிக்கராசா ஆகியோர் நடித்திருந்தனர்.

இவ்விழாவில் 'மயான காண்டம்' இசை நாடகம் நீண்ட நாட்களின் பின்னர் மேடையேறுகிறது. எமது இளம் கலைஞர்கள் இ.ப. மோகன்ஜித், ப.ஹரிகரன், ப. மதுரதன் மற்றும் பலர் பங்குபற்றி மிகவும் சிறப்பாக இதனை ஆற்றுகைப்படுத்தினர்.

2011 இல் கனகரட்னம், சடகோபன் நடித்த 'சகுந்தலை' நாடகமும் 2012 இல் பாசையூர் வளர்பிறை நாடக மன்றத்தினரின் தீர்க்க சுமங்கலி நாடகமும் மேடையேறின சகுந்தலை நாடகத்தில் இ.கே. கனகரட்னம், இ.சடகோபன், ரி.சிவலிங்கம், ப. சதீஸ், த. பிரணவராவ், த. பிரபாகர், கலாநிதி, தர்ஷிகா, அர்ச்சனா, விஷானி ஆகியோர் நடித்திருந்தனர்.

2013 இல் இடம் பெற்ற 94 ஆவது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவில் பாரதியாரின் கவிதா நாடக மான 'பாஞ்சாலி சபதம்' மேடை யேற்றப்பட்டது. இந்நாடகத்தில் பிரான்சிலிருந்து வந்திருந்த திருமதி மனோரதி ருத்திரசிங்கம் பாஞ்சாலியாக நடித்திருந்தார். மேலும் இந்நாடகத்தில் ச.உருத்திரேஸ்வரன் (துரியோதனன்), இ.சடகோபன் (சகுனி), இ.ப. மோகன்ஜித் (தருமன்), த. ஹரிசான்ந் (வீமன்), ம.சசிகாந்த் (கர்ணன்), ம. ஆரூரன் (அருச்சுனன்), கு. கஜிந்தன் (விகர்ணன்), த.பானுகோபன் (விதுரன்), தே.பபிதாஸ் (நகுலன்), எஸ். ஜெயந்தன் (துச்சாதனன்) பா. காந்தரூபன் (சகாதேவன்), உ.தனுசன், (தேர்ப்பாகன்), தோ. தேவராஜன் பாரதியார் ஆகியோர் பங்குபற்றினர். செல்வி கிருத்திகா நடராசாவின் மாணவிகள் கோரஸ் பாடல்களைப் பாட ச. உருத்திரேஸ்வரன் இந்நாடகத்தை நெறியாள்கை செய்திருந்தார். முதன் முறையாக ஒரு கவிதா நாடகம், பாடல்களுடன் மேடையேற்றப்பட்ட பெருமையைப் பெற்றது 'பாஞ்சாலி சபதம்'.

97 ஆவது (2016) சுதேசிய விழாவில் சொக்கனின் 'தெய்வப்பாவை' என்ற நாடகம் மேடையேற்றப்பட்டது. இந்நாடகத்தில் சமணத் தலைவர்களாக இ. சடகோபன், கு.விந்துஜன் ஆகியோ ரும் நெடுமாறனாக ம. சசிகாந்த், அமைச்ச ராக க.பகீரதன், ஞானசம்பந்தராக சிறுமி பாடகி கில்மிசா தரிசன் ஆகியோர் நடித்திருந்தனர்.

98 ஆவது (2017) விழாவில் அரக்குமாளிகை, முட்டை ஆகிய நாடகங்கள் மேடையேற்றப்பட்டன. இந்நாடகத்தில் தர்மனாக இ. சடகோபன் குந்திதேவியாக நா. தமிழ்ச்செல்வன்,

ஏழைப் பெண்ணாக தோ. தேவராஜன், பெண்ணின் மகளாக க. பகீரதன் ஆகியோர் சிறப்புச் செய்தனர். மாவை நித்தியானந்தன் எழுதிய 'முட்டை' என்ற நாடகத்தில் த. ஹரிஷான்ந், தோ.தேவ ராஜன், கு.வித்துஜன் ஆகியோர் நடித்திருந்தனர்.

99 ஆவது (2018) விழாவில் மருதுபாண்டியர் நாடகம் மிகவும் விறுவிறுப்பாக மேடையேறியது. இதில் சின்னமருதுவாக த. ஹரிஷான்ந், வெள்ளைமருதுவாக ம. கபில்ராஜ், வெள்ளைத்துரைமார்களாக இ.சடகோபன், செ. மயில்வாகனம், சி. சிவரங்கன் ஆகியோர் நடித்திருந்தனர். தெய்வப்பாவை, அரக்கு மாளிகை, மருதுபாண்டியர், முட்டை ஆகிய நாடகங்களை ப.ஸ்ரீஸ்கந்தன் நெறியாள்கை செய்திருந்தார்.

நடிகர்கள், நெறியாளர்கள் மட்டு மல்லாது நாடக மேடையேற்றத்தின் பின்னணியில் பலரது உழைப்பு இருக்கும். அந்த வரிசையில் ச.த. கணநாதன், அ.உபயசேகரம், கனகசிங்கம், நெடுவல் கணேஸ் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

சுதேசிய திருநாட்கொண்டாட்ட விழாவின் பிரதான நாடகங்கள் யாவும் அரியாலை நாடக மன்றத்தினரால் மேடையேற்றப்பட்டது இங்குகுறிப்பிடத் தக்கது.

## அரியாலை சனசமூக நிலைய நாடகங்கள்

வருடா வருடம் சித்திரை வருடம் பிறப்பை முன்னிட்டு நடத்தப்படும் சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா தவிர அரியாலையிலுள்ள சனசமூக நிலையங்கள், வாசிகசாலைகள், கழகங்கள் போன்ற நிறுவனங்களும் தமது ஆண்டு விழாக்களிலும், விசேட நிதிக்காகவும் நாடகங்களை மேடையேற்றினார்கள்.

இந்த வகையில் அரியாலை சனசமூக நிலையத்தினர் இதுவரை நூற்றுக்கு மேற்பட்ட நாடகங்களை மேடையேற்றியுள்ளமை குறிப்பிடத் தக்கது. இந்நிலையத்தின் ஆரம்ப நாட்களில் அண்ணாவியார் சபாபதிப் பிள்ளை அவர்கள் நளதமயந்தி, ஜெயாதி, சகுந்தலை, பிரிதிவிராஜன், நந்தனார், இலங்கேஸ்வரன், பூம்புகார் போன்ற நாடகங்களை நெறிப்படுத்தி மேடை யேற்றினார். இந்நாடகங்களில் இ.கே. குமரையா, பொலிஸ் கைலாயம், தளுக்கர் ஆறுமுகம், சு. பாலசுந்தரம், ச.பாலசிங்கம், ச. பொன்னுத்துரை, ந. கிருஷ்ணசிங்கம், என்.எஸ். லோகேஸ்வரன் போன்ற பல கலைஞர்கள் பங்கு பற்றியிருந்தனர்.

நிலையத்தினர் கௌரவம், தங்கப்பதக்கம், பொலிஸ்காரன் மகள், ஞான ஒளி போன்ற திரைப்பட நாடகங் கள், சாந்தி மற்றும் ப.ஸ்ரீஸ்கந்தனின் ஆத்மாவின் ராகம், அபஸ்வர கீதம் போன்ற சமூக நாடகங்கள் என்பவற்றை மேடையேற்றினர். இதில் பொ. விஜய ரட்னம், ம. நவரட்னம், க.சோமசேகரம், வி.ரி.ஏ. விஸ்வா, நெடுவல் கணேசு, மகேந்திரன், மயில்வாகனம், பொன்சேகா, மகேஸ்வரன், பஞ்சலிங்கம், உருத்திரேஸ் வரன், செல்வம், பொ. கணேசானந்தன், த.புஸ்பலிங்கம் போன்ற பல கலைஞர்கள் பங்கேற்றுள்ளனர். இவர்களில் பொ.கணே சானந்தன், த.புஸ்பலிங்கம் பரியோவான் கல்லூரி மேடையேற்றிய வீரமைந்தன் என்ற நாடகத்தில் நடித்து ஊருக்குப் பெருமை சேர்த்தனர்.

சங்கீத வித்துவான் கதையை மையமாகக் கொண்ட ப.ஸ்ரீஸ்கந்தனின் ஆத்மாவின் ராகம் நாடகத்தில் த.பஞ்ச லிங்கம் வித்துவானாகத் தோன்றிச் சிறப்புச்செய்தார். மேலும் பிரபல கலைஞர்கள் பொ.விஜயரட்ணம்,

வி.ரி.ஏ.விஸ்வா, உருத்திரேஸ்வரன், என்.ரி.குணம், ராஜரூபன் ஆகியோரும் நடித்துப் புகழ் சேர்த்தனர். சனசமூக நிலையத்தின் நாடகங்களில்க.சோமசேகரம் முக்கியமான பெண் பாத்திரங்களில் தோன்றி எல்லோரையம் அசரவைத்தார்.

அரியாலை சனசமூக நிலையத் தினரின் மகிழ்நெறி நாடகங்களில் பொ.தவநாதனின் 'வாய்க்கார வள்ளி', எஸ். எஸ். மனோகரனின் 'நாரிப்பிடிப்பு நாகலிங்கம்' வெள்ளை தனபாலின் 'அட தாலியைக் கட்டு' என்பன குறிப்பிடத்தக்க நாடகங்களாகும். எஸ்.எஸ். மனோகரன் தானே பாடல்களை இயற்றிப் பாட வல்லவராகவும், மென்டலின் வாத்தியக் கருவியில் பாடல்களை இசைக்க வல்லவராகவும் விளங்கினார். இவர்கள் தவிர எம்.பி. சிவலிங்கம், அமரசிங்கம் போன்றோர் நிலையத்தின் மகிழ்நெறி நாடகத்தில் நடித்துள்ளனர்.

## நிலையம் மேடையேற்றிய ஏனைய நாடகங்கள்

அமுதவல்லி, மனோகரா, தலை நகரம், ஸ்ரீவள்ளி, தளபதி, துளிவிஷம், கன்னிக்கோட்டை, வீரபத்தினி, பாதுகா பட்டாபிஷேகம், பொற்சிலை, கண்டி ராஜன், முடி துறந்த மன்னன், உயிரோவியம், கங்கைக் கரைக் காவலன், காசியப்பன், ராட்சகன், ராஜநாகம், சாம்பிராட் அசோகன், வீர சௌந்தர், போர்க்களம், கர்ணன் (பெண்கள்), துட்டகைமுனு, மனோன்மணி, சித்தூர் ராணி பத்மினி, யூலிய சீசர், தேசிங்கு, கற்புக்கனல் (பெண்கள்), முல்லை மகுடம், உண்மையின் வெற்றி, மனக்கோவில், வாழ்க்கை வாழ்வதற்கே, வெண்கட்டி, கண்ணீர், பாவ மன்னிப்பு, பாவத்தின் பரிசு, மனக்கோயில் உனக்காக, புன்னகை யின் புயல், சமூகத் தொண்டன், ராதா, தியாகி, அன்பே அகிலா, சறுக்கிய சாஸ்திரம், புளியடி சகாயச் சங்கம், பட்டிக்காட்டுப் பரமர், அதிலை வேலையில்லை, சீமைத்தம்பி, அவுட்டு விடு நாயை, யாழ்ப்பாணம் கொழும் பில், நவீன யமலோகம், மலிவான மாப்பிள்ளை, சோக்கெல்லோ சம்பந்தி.

## அரியாலை மத்திய விளையாட்டுக் கழகம்

மேற்படி கழகத்தின் ஆண்டு விழாக்களில் எஸ்.எஸ். இராசரத்தினம் (ராசகிளி) பிரதான பாத்திரத்தில் நடித்துள்ளார். மணி மகுடம், ராஜ துரோகம், மந்திரிகுமாரி, கர்ணன், காஞ்சனா ஆகிய நாடகங்கள் மேடை யேற்றப்பட்டுள்ளன. மந்திரி குமாரியில் அ.உபயசேகரம் (பார்த்திபன்) முக்கிய மான பாத்திரத்தில் நடித்திருந்தார். மேலும் லேடி டைப்பிஸ்ட், அப்புவின்ர ஆசை, சோக்கல்லோ சோமணிணை, சோக்கான சோடி, முட்டாள் முருகப்பு போன்ற பல மகிழ்நெறி நாடகங்களையும் மேடையேற்றியுள்ளனர். இந்நாடகங் களில் ஆர், தர்மரத்தினம் சோமபாலன், பரமநாதன், செ.சீவரத்தினம், சி. சிவசுந்தர லிங்கம் ஆகியோர் பங்குபற்றியிருந்தனர்.

## அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம்

இந்நிலையத்தினரின் ஆண்டு விழாக்களில் பாதுகா பட்டாபிஷேகம், தலைநகர் போன்ற நாடகங்களை மேடையேற்றியுள்ளனர். அத்துடன் சரஸ்வதி சனசமூக நிலையத்தின் பெண் உறுப்பினர்கள் ரஜனி, துளசி, புஸ்பராணி, வாசுகி, வடிவரசி, நளாயினி இன்னும் பலர் நடித்து நாடகங்களை மேடை யேற்றியுள்ளனர். மாருதப்புரவல்லி (1992) தெய்வப்பாவை (1993), சங்கிலியன் (1993), வீரமைந்தன் (1994) ஆகியவை குறிப்பிடத்தக்கவை.

## அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம்

ஐக்கிய கழகத்தினர் ந. கிருஷ்ண சிங்கம் எழுதிய வீடுகள் விழிக்கின்றன, (1987) விளைநிலங்கள் (1991), பட்டது போதும் (1992) ஆகிய சமகாலப் பிரச்சனைகளை மையமாகக் கொண்ட நாடகங்களை மேடையேற்றினர். இந் நாடகங்களில் பெரும்பாலும் சந்திரகுமார் மாலினி தம்பதியினருடன் ஸ்ரீகாந்தி, நளினி, கற்கண்டு லோகேஸ், சின்னத்துரை ஆகியோர் நடித்தனர்.

## அரியாலை திருமகள் சனசமூக நிலையம்

திருமகள் சன சமூக நிலையத்தினர் நக்கீரன், சாணக்கியன், வெண்ணிலா, பாவத்தின் பரிசு, மாலிக்கபூர், அமரேந்திரன், பாஞ்சாலியின் சபதம், ஓடிப்போனவள், சலனங்கள், சந்தர்ப்பம், நினைவலைகள் ஆகிய நாடகங்களை மேடையேற்றி யுள்ளனர். இந்நாடகங்களில் என்.ரி.குணம், மகான், மயில்வாகனம், பொ. ஆறுமுகம், ஈசன் போன்ற பல தரமான கலைஞர்கள் பங்குபற்றியிருந்தனர் நேமிநாதன் பல நாடகங்களை எழுதி இயக்கியிருந்தார்.

## அரியாலை கலைமகள் சனசமூக நிலையம்

எமது இசை நாடகங்களை அழியாது தொடர்ந்தும் பேணி வருவதில் கலைமகள் சனசமூக நிலையத்தின் பங்கு மறக்க முடியாதது. நிலையத்தின் ஆரம்ப நாட்களில் பெரும் இசை நாடகக் கலைஞர்களான நீலன் கணபதிப்பிள்ளை, நீ. செல்லக்கண்டு, க.கதிர்காமு, வ.சண் முகம், வி.கே. இரத்தினம், செல்வம், கவிஞர் வே. ஐயாத்துரை, செட்டி செல்லத்தம்பி ஆகியோர் பங்குபற்றிய இசை நாடகங்கள் பல மேடையேற்றப் பட்டன. சத்தியவான் சாவித்திரி, சதி நந்தாவதி, சசி அகல்யா, மதனசேனா, ஆரிய மாலா, ஸ்ரீ வள்ளி, பிரகலாதன், அசோக்குமார், அரிச்சந்திர மயான காண்டம், பவளக்கொடி போன்ற பல இசை நாடகங்களை அவர்கள் மேடை யேற்றினர். இவர்களில் வி.கே இரத்தினம், செல்வம் ஆகியோர் நடிகமணி வி.வி. வைரமுத்து அவர்களுடன் இணைந்து நடித்து புகழின் உச்சியைத் தொட்டனர். நிலையத்தின் நாடகங்களுக்கு திருநாவுக் கரசு ஹார்மோனிய இசை வழங்கி நாடகங்களை மெருகூட்டினர்.

நிலையத்தைச் சார்ந்த எஸ்.புஷ்ப ராஜன் பல சமூக நாடகங்களை எழுதி மேடையேற்றினார். நிலையத்தினர் பெண்களைக் கொண்டு ஆட்டக்கூத்து முறையில் 'பாஞ்சாலி சபதம்' நாடகத் தையும் மற்றும் சிறுவர், சிறுமிகளைக் கொண்டு ஸ்ரீ வள்ளி, சத்தியவான் சாவித்திரி நாடகங்களையும் மேடை யேற்றினர் இவர்களுக்கு கவிஞர் வே.ஐயாத்துரை, வி.கே. இரத்தினம் ஆகி யோர் துனைபுரிந்தனர். நடிகமணி வி.வி. வைரமுத்துவின் மறைவுக்குப் பின்னர் செல்வம் 'மயான காண்டம்', 'தீர்க்க சுமங்கலி' போன்ற இசை நாடகங்களை உள்ளூர்க் கலைஞர்களைக் கொண்டு மேடையேற்றினார். இவருடன் வெள்ளை தனபால், பச்சடி யோகராசா, இரா மண்ணா போன்றோர் நடித்திருந்தனர்.

## அரியாலை அமரகலா சனசமூக நிலையம்

இந்நிலையம் செல்வராசாவின் துணையுடன் பெண்களைக் கொண்டு இசை நாடகங்களை மேடையேற்றி வருகிறது. இவர்களில் பூதத்தம்பி, மயான காண்டம் ஆகிய நாடகங்கள் சிறந்தவை யாகும். இவர்களுக்கு சிவலிங்கம் ஆதரவு நல்கி வருகிறார்.

## நல்லூர் தெற்கு சனசமூக நிலையம்

நல்லூர் தெற்கு சனசமூக நிலையத் தினர் அரிச்சந்திர மயான காண்டம்

போன்ற தரமான நாடகங்களை ஆண்டு தோறும் மேடையேற்றியுள்ளனர். ந.அருட் பிரகாசம், செல்வ மாணிக்கராசா போன் றோர் இந்நிலையத்தின் நாடகங்களில் நடித்துள்ளனர். எஸ்.எஸ். மனோகரன், சௌந்தாரஜன் போன்றோர் பல மகிழ் நெறி நாடகங்களை இந் நிலையத்துக்காக மேடையேற்றினர்.

## அரியாலை அருணோதயா சனசமூக நிலையம்

அருணோதய சனசமூக நிலையத் தினர் 'ஆயிரம் தலைவாங்கி அபூர்வ சிந்தாமணி', 'விதியின் விளிம்பில்' போன்ற நாடகங்களை மேடையேற்றியுள்ளனர். இவர்களுக்கு ச.சதாசிவம், சோ. சிவ சுந்தரம், க.சண்முகநாதன் ஆகியோர் ஆதரவு கொடுத் துள்ளனர்.

## அரியாலை கலைவாணி சனசமூக நிலையம்

கலைவாணி சனசமூக நிலையத் தின் சார்பாக உதயகுமார் பல நாடகங்களைத் தயாரித்து மேடை யேற்றியுள்ளார்.

## பெண்கள் நாடகங்கள்

அரியாலையூர் பெண்களும் தாங்களும் சளைத்தவர்கள் அல்ல என்பது போல் நாடகத்துறையில் தமது பங்களிப் புக்களைச் செய்திருந்தனர். திருமதிகள் இராசாம்பாள் சிவசுந்தரம், இராஜேஸ்வரி கதிரவேலு, திருலோசனி குமாரத்தியானன் போன்றோர் நாடகத் தயாரிப்புகள் பலவற்றில் ஈடுபட்டுள்ளனர். முற்றிலும் பெண்கள் நடித்த சில நாடகங்களை பிரபல நாடகக் கலைஞர்கள் ஐ.எஸ் சண்முகநாதன், இ.கே. குமரையா ஆகியோரும் நெறிப்படுத்தியிருந்தனர். பெண்கள் நடித்து மேடையேற்றப்பட்ட நாடகங்களுள் கற்புக்கனல், தெய்வமகள், சரஸ்வதி சபதம், தபசினி, பாதுகை என்பன மிகவும் பரவலாகப் பேசப் பட்டவை. சுதேசிய திருநாட் கொண் டாட்ட விழாக் குழுவினர் மற்றும் அரியாலை மகளிர் அமைப்பு ஆகிய வற்றால் இந்நாடகங்கள் மேடையேற்றப் பட்டன.

கற்புக்கனல் நாடகத்தில் யோகேஸ் வரி துரைச்சாமி கண்ணகியாகவும் கிரிஜா இராசையா கோவலனாகவும் ரூபகுமாரி கைலாசபிள்ளை மாதவியாகவும் மற்றும் நளாயினி கனகசபாபதி, சந்திரமலர் ஜெபராணி சின்னையா, தேவசி சுப்பிர மணியம், அம்பிகை சுப்பிரமணியம், மனோரதி உருத்திரசிங்கம் ஆகியோர் நடித்திருந்தனர். இந்நாடகத்தை இ.கே. குமரைய்யா அவர்கள் நெறிப்படுத்தி யிருந்தார்.

தெய்வமகள் நாடகத்தில் ரஞ்சினி கதிரவேலு (சரஸ்வதி), பாலா கைலாய பிள்ளை (உமையாள்), நளாயினி கனகசபாபதி (லஷ்மி ), பாமா சிவசுந்தரம் (நாரதர்), சாந்தினி மயில்வாகனம் (விஷ்ணு), சுசிலா அருளானந்தம் (சிவன்), கலா கனகசபாபதி (புலவர்) என பாத்திரங்களை ஏற்றுச் சிறப்புச் செய்தனர். இந்நாடகத்தை திருமதி இராசாம்பாள் சிவசுந்தரம் இயக்கியிருந்தார்.

மகளிர் தினத்துக்காக மேடை யேற்றப்பட்ட பாதுகை நாடகத்தில் சாந்தினி மயில்வாகனம் சீதையாகவும், பாமா சிவசுந்தரம், இராமராகவும், சைலஜா துரைரட்ணம் இலக்குவன னாகவும், லதா கணேசதாசன் குகனாகவும் மற்றும் கமலி தர்மலிங்கம் ஆகியோர் நடித்திருந்தனர். இந்நாடகத்தையும் இராசாம்பாள் சிவசுந்தரம் நெறியாள்கை செய்திருந்தார்.

மகளிர் அமைப்பினருக்காக திருலோசனி குமாரத்தியானன் பழக்கிய தபசினி என்ற நாடகம் முல்லைத்தீவு உட்பட பல இடங்களில் மேடையேற்றப் பட்டது. இந்நாடகத்தில் லதா கணேச தாசன், சைலஜா துரைரட்ணம், குமுதினி சீவரட்ணம் ஆகியோர் நடித்திருந்தனர்.

சுதேசிய விழாவுக்காக மேடை யேற்றப்பட்ட கலிங்கத்துப்பரணி என்ற நாடகத்தில் ஆண்களும் பெண்களும் இணைந்து நடித்துப் புதுமை செய்தனர். இந்நாடகத்தில் தர்மராசா கணேசதாசன் கேசவராஜா முத்தையா, லதா கணேச தாசன், குமுதினி சீவரட்ணம், சரோ பொன்னுத்துரை ஆகியோர் நடிக்க ஐ.எஸ். சண்முகநாதன் அவர்கள் இந் நாடகத்தை நெறியாள்கை செய்திருந்தார்.

மேலும், இல்லப் போட்டிகளுக் காக அம்பிகாபதி, சிலையின் சீற்றம் சத்தியவான் சாவித்திரி போன்ற சில நாடகங்கள் மேடையேற்றப்பட்ட போதிலும் அவை பற்றிய விபரங்கள் அறியக்கிடைக்கவில்லை.

மேலும் எமது ஊரவரான ராஜேஸ்வரி கதிரவேலு இலங்கையில் தயாரிக்கப்பட்ட பொன்மணி என்ற திரைப்படத்திலும் நடித்துப் புகழ் சேர்த்துள்ளார்.

## அரியாலை சிறுவர் நாடக மன்றம்

**1975** இல் பதின்ம வயது இளைஞர்கள் சிலர் சேர்ந்து அரியாலை சிறுவர் நாடக மன்றத்தை உருவாக்கி னார்கள். அந்த ஆண்டில் அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட நாடகப் போட்டியில் இவர்கள் மேடையேற்றிய 'சாம்பிராட் அசோகன்' என்ற நாடகம் முதற்பரிசினைப் பெற்றது. இதன் மூலம் காத்திரமான கலைஞர்களாக அறியப் பட்ட இக் குழுவினருக்குத் தொடர்ந்து வந்த விழாக்களில் நாடகங்களை அரங் கேற்ற சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. சாம்பிராட் அசோகன் நாடகத்தில் சோ.ஸ்ரீகுமார் புத்த பிக்குவாகவும், க.ரவீந்திரன் அசோகனாகவும் மற்றும் ந. நேதாஜி, ச.அருணன், ம. ஜெயந்தன் ஆகியோரும் நடித்திருந்தனர்.

**1976** இல் தசரதன் கதையை 'இரு வரங்கள்' என்ற பெயரில் நாடகமாக மேடையேற்றினர். இந்நாடகத்தில் சோ.ஸ்ரீக்குமார் தசரதனாகவும் க.ரவீந்திரன் பரதனாகவும், ச. அருணன் இராமராகவும், ந.நேதாஜி கைகேயியாக வும் மற்றும் கிருஷ்ணகுமார், சிவபாலச் சந்திரன், அ. சுதர்சன் ஆகியோரும் பங்கு பற்றியிருந்தனர்.

**1977** இல் மேடையேறிய காசியப்பன் நாடகத்தில் ந. நேதாஜி காசியப்பனாகவும், அவரது பிள்ளைகளாக சோ. ஸ்ரீகுமார், க. ரவீந்திரன் ஆகியோர் நடித்திருந்தனர்.

**1978** இல் சிறுவர் நாடக மன்றத்தினர் மேடையேற்றிய வீரவாகுத் தேவர் நாடகத்தில் சோ. ஸ்ரீக்குமார் வீராகுத்தேவராகவும், ந. நேதாஜி சூரனாகவும், மு. பிரேம்குமார் முருக னாகவும் த. கிருபா காவலாளியாகவும் நடித்திருந்தனர்.

## அரியாலை திடீர் நாடக மன்றம்

மகிழ்நெறி நாடகங்கள் மூலம் வெளியிடங்களில் அரியாலைக்குப் பெருமை சேர்த்ததில் அரியாலை திடீர் நாடக மன்றத்தினருக்கு முக்கிய பங்குண்டு. அபசகுனம் என்ற நாடகத்தின் மூலம் அறிமுகமான இந்த நகைச்சுவைக் கலைஞர்கள் தொடர்ந்து 'வெளிக்கிட்டி விசுவமடுவுக்கு' நாடகத்தால் பிரபல்ய

மடைந்தார்கள். மேலும் உடையாரின் உபத்திரவம், சுழலும் சுந்தரி, வைப்பன் டைனமைற், கண்டறியாத கல்யாணம் போன்ற பல நாடகங்களை மேடையேற்றி மக்களைச் சிரிக்க வைத்தனர். இவர்களது ஒரு நாடகத்தை எத்தனை தடவைகள் பார்த்தாலும் சிரிப்பு வரும். ஏனெனில் நாடகத்தின் மூலக்கரு ஒன்றாக இருக்க ஒவ்வொரு தடவையும் வெவ்வேறு பகிடிகளை கலைஞர்கள் உதிர்ப்பர். அவர்கள் இயற்றிப் பாடும் பாடல்களும், கலைஞர்கள் கதைக்கும் தொனியும் மிகவும் சிறப்பாக இருக்கும்.

திடீர் நாடகமன்றத்தின் நாடகங் களில் முக்கிய பாத்திரங்களில் பரமநாதன், நாகாராஜா, சடகோபன், லோகு, வெள்ளை தனபால், பரமசாமி போன்றவர்களும் மேலும் இராஜேந்திரம், சந்திரகுமார், பொன்சேகா, மாணிக்க வாசகர், மகேந்திரன் ஆகியோரும் நடித்திருந்தனர்.

## ஏனைய நாடகங்கள்

ஏனைய நாடகங்கள் தனிப்பட்ட முறையில் சில கலைஞர்கள் தரமான நல்ல நாடகங்களை எமக்குத் தந்தனர். அந்த வகையில் பொ. சண்முகலிங்கம் பாடி நடித்த 'மயானத்தின் மன்னன்' இசை நாடகம் பல இடங்களிலும் மேடை யேற்றப்பட்டு பலத்த பாராட்டுதலைப் பெற்றுக் கொண்டது. இந்நாடகத்தில் செல்வம், துரைச்சாமி, பச்சடி போன்ற பல கலைஞர்கள் பங்குபற்றினர். மேலும் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் பொ. சண்முகலிங்கம் மேடையேற்றிய 'ஓதல்லோ' நாடகமும் சிறப்புப் பெற்றது.

க. மகேஸ்வரனின் தயாரிப்பில் மேடை யேறிய 'ஞான ஒளி' புகழ்பெற்ற நாடகமாகும் ஆ.தேவராசா, க.மகேஸ்வரன் ஆகியோருக்குப் புகழ்சேர்த்த இந் நாடகத்தில் எஸ்.எஸ். மனோகரன், தி.நல்லநாதன், மயில்வாகனம் ஆகியோ ரும் நடித்திருந்தனர்.

பொ. விஜயரட்னத்தின் 'ஆலமரம்' நாடகம் பல இடங்களில் மேடையேற்றப் பட்டு ஊருக்குப் பெருமை சேர்த்தது. இந்நாடகத்தில் பொ. விஜயரட்னம், ம.நவரட்னம், த. சுந்தரலிங்கம், சோம சேகரம் போன்ற தரமான நடிகர்கள் பங்குபற்றியிருந்தனர்.

மலர்மகள் விளையாட்டுக் கழகத்துக்காக மகேந்திரன், கேதீஸ்வரன் பங்கு கொண்ட நக்கீரன், சரஸ்வதி சனசமூக நிலையத்தில் லோகு மேடை யேற்றிய 'டிரகுல்லா' என்ற பயங்கர நாடகம், ஸ்ரான்லி கல்லூரி மாணவர்கள் தா.தியாக சீலன், ம.ஜெயகுமார் போன்றோர் பங்குபற்றிய தசரதன், சாம்ராட் அசோகன் போன்ற பல நாடகங்கள் நினைவில் நிற்பவை.

## பல்கலைக்கழக நாடகங்கள்

இன்று உலகெங்கும் வாழும் தமிழர்களில் தொடர்ந்து தரமான நாடகங்களைத் தயாரித்து மேடை யேற்றும் கலைஞர்களில் முதன்மை யானவர் என்ற பெருமைக்கு உரியவர் க.பாலேந்திரா கட்டுப்பெத்தை பல்கலைக் கழகத்தில் ஆரம்பமான அவரது நாடக வாழ்வு அவரது தமிழ் அவைக்காற்றுக் கலைக்கழகம் மூலம் விருட்சமாகி வளர்கிறது. ஊரவரான க. பாலேந்திரா வின் நாடகப் பக்கங்கள் தனியானதொரு சரித்திரமாகும். நாடகக் கற்கை நெறியை பல்கலைக் கழகத்தில் பயின்று பட்டம் பெற்ற பெருமை ச. உருத்திரேஸ்வரனுக்கு உண்டு. தவிர யாழ் நாடக அரங்கக் கல்லூரியில் நடிப்புப் பயிற்சிபெற்று நாடகமே உலகமாக வாழும் கலைஞராவர்.

த. சர்வேந்திரா, த.லங்கேஸ்வரன், சைலஜா துரைரட்னம் ஆகியோரும் பல்கலைக்கழக மட்டத்து நாடகங்களில் பங்கேற்றுள்ளனர்.

## நாடக எழுத்தாளர்கள்

சோமரின் தந்தையார் சாத்திரியார் ஆறுமுகம் அவர்களிலிருந்து இன்றுவரை பலர் நாடகங்களை எழுதி வந்துள்ளனர். சாத்திரியார் ஆறுமுகம் வீரவேங்கை, பூதத்தம்பி ஆகிய இசை நாடகங்களை எழுதினார். தோழர் தர்மலிங்கம்: பதவி மோகம், கன்னிக்கோட்டை, வாழ்க்கைப் போர். ந. கிருஷ்ணசிங்கம்: வீடுகள் விழிக்கின்றன, பட்டது போதும், விளை நிலங்கள். ச.த. புவனநாதன் அன்று செய்த தவறு, ராஜா தேசிங்கு ச.த.கணநாதன் - யார் கதாநாயகி, மாமியாரும் மருமகளும்.

எஸ்.புஸ்பராஜன்: கண்ணாடி, தலைத்தீபாவளி, வசந்த வாழ்வு, பயணங்கள் முடிவதில்லை, கொஞ்சும் குமரி க. நேமிநாதன் / செ. மயில்வாகனம் இரு ஜீவன்கள், வெண்ணிலா, பாவத்தின் பரிசு, சலனங்கள், சந்தர்ப்பம், நினை வலைகள், ஓடிப்போனவள், மாலிக்கபூர், ராஜநாகம், அமரேந்திரன். ப. ஸ்ரீஸ்கந்தன்: தியாகதீபம், அனாதையின் கீதம், ஆத்மாவின் ராகம், அபஸ்வர கீதங்கள், ஒரு ஆத்மா அழுகிறது, தூரத்தே ஒரு, அக்கினிப் பூக்கள், என்றோ ஒருநாள், வேடதாரிகள், மாடும் மரமும்.

இவர்கள் தவிர பொன்னுத்துரை மனோகரன், மகேந்திரன், பொ.விஜயரட்ணம், வி.ரி.ஏ. விஸ்வா, மகாலிங்கம், ந.கேசவ ராஜ் போன்ற பல எழுத்தாளர்கள் நாடகங்களை எழுதியிருந்த போதிலும் அவற்றின் விபரங்கள் கிடைக்கவில்லை.

## முடிவுரை

1978 ஆம் ஆண்டு நானும், ச.உருத்தி ரேஸ்வரன் அவர்களும் இணைந்து எமது பழம்பெரும் கலைஞர்களான இ.சுப்பிர மணியம், சி. பொன்னையா, ம.இராம நாதன், காத்தான் கந்தையா, ஐ.எஸ்.சண்முக நாதன், வே.க.சண்முகராசா, வே.ஐயாத்துரை, வி.கே. இரத்தினம், ச.பாலசிங்கம், ச.சதாசிவம் போன்ற பலரைச் சந்தித்துப் பல அரிய தகவல்களைச் சேகரித்தோம். இதன் அடிப்படையிலும் பூமிப்பந்தம் எங்கும் பரந்து வாழும் எமது கலைஞர் களிடம் இருந்து பெறப்பட்ட தகவல் களையும் கொண்டு இக்கட்டுரை எழுதப் பட்டுள்ளது. ஆயினும் அரியாலையின் நாடகக் கலைஞர்களின் வரலாற்றை முழுமையாக எழுத முடியாது. ஆயினும் எமது ஊரின் நாடக வரலாற்றின் பெரும்பகுதியை இக்கட்டுரை சொல்லும்.



அண்ணாவியார்
பெ.சபாவதிப்பிள்ளை



நாடக நெறியாளர்
ப.சிவஞானபோதகர்

# தூய அரியாலையைக் கட்டியெழுப்புவோம்



**திரு. ந. குகதாசன்**
ஓய்வுநிலை மின் அத்தியட்சகர்

*யாழ்ப்பாண மாவட்டமல்ல முழு இலங்கையுமே பாராட்டத்தக்க விதமாக அரியாலை மக்கள் சுதேசிய திருநாட் கொண்டாட்டத்தை வருடந்தோறும் வெகு விமரிசையாகக் கொண்டாடி வருகின்றார்கள். அதன் மைல் கல்லாக இவ்வாண்டு நாம் பெருமைப்படும் வகையில் நூற்றாண்டு விழாவாகக் கொண்டாடுகின்றோம்.*

*எமது மூதாதையர்கள் மிகவும் தூரநோக்கோடு இலங்கை மக்கள் சுதந்திரத்திற்காக போராடிய காலத்தில் அப்போராட்டத்தில் ஓர் அங்கமாக மக்களிடம் தேசிய ஒற்றுமையை வளர்ப்பதற்காக ஆரம்பிக்கப்பட்டது தான் இத் சுதேசிய திருநாட் கொண்டாட்டம்.*

*எல்லாவற்றுக்கும் சிகரம் வைப்பது போல் நூற்றாண்டு ஞாபகர்த்தமாக நந்தி நினைவுத் தூபி அமைக்கப்படுகின்றது. இவ் நினைவாலயம் பின்வரும் விடயங்களை எமக்கு ஞாபகப்படுத்திக் கொண்டிருக்குமானால் எந்த நோக்கத்திற்காக இவ்விழா ஆரம்பிக்கப் பட்டதோ அதை நிறைவேற்றுவதற்காகவும் ஒரு தூய அரியாலையைக் கட்டியெழுப்புவதற்கும், நாம் மகிழ்ச்சியாக வாழ்வதற்கும் உதவும் என்று நம்புகின்றேன்.*

***1) ஒழுக்கத்தைப் பேண வேண்டும்***

*தனிமனித ஒழுக்கம், சமூக ஒழுக்கம் கொண்ட வாழ்க்கை நெறியாகப் பேணப் பட வேண்டும்.*

***2) சமூக சேவை புரிவோர் வெளிப் படைத் தன்மையுடன் நேர்மை யாகச் செயல்பட வேண்டும்.***

*மக்கள் சேவையே மகேசன் சேவை என்போர் சான்றோர். இறைவன் எல்லாவற்றையும் கண்காணித்துக் கொண்டிருக்கின்றார் என்பதை உணர்ந்து செயல்பட வேண்டும்.*

***3) கல்வி அறிவை வளர்க்க வேண்டும்***

*கல்வி அறிவே சமூக அந்தஸ்தையும் சமத்துவத்தையும், வளர்ச்சியையும் தரவல்லது. அதை கட்டாயம் வளர்த்துக் கொள்ள வேண்டும்.*

***4) அறநெறிக் கருத்துக்களை வாசிக்க வேண்டும்***

*மன சமநிலையை வளர்க்கவும், மனித வாழ்வை பக்குவப்படுத்திக் கொள்வதற்கும் வாசிப்பதால் பூரணத்துவம் அடையலாம்.*

**5) ஆன்மீகத்தின் உண்மைத் தன் மையை அறிந்து பின்பற்ற வேண்டும்.**

*அன்பை அடிப்படையாக் கொள்ள வேண்டும். கருணை உள்ளம் கொண்டவர் களாக விளங்க வேண்டும். நடுநிலை பேண வேண்டும்.*

**6) கோயில் வழிபாடுகளை மேற் கொள்ள வேண்டும், கிரியை நெறிகளைப் பின்பற்ற வேண்டும், தொண்டுகள் புரிய வேண்டும்**

கோயிலுக்குப் போவது நல்வாழ்வை அடைவதற்கான பயிற்சியேயாகும். எந்தக் கருமங்களையும் ஒழுங்கு முறையில் மேற்கொள்வதே கிரியையாகும். கடமையைச் செய்து, பலனை எதிர் பார்க்காமையே தொண்டு எனப்படும்.

**7) மற்றவர்களின் கருத்துக்களைக் கேட்கவும், மதிக்கவும் பழகிக் கொள்ள வேண்டும். ஜனநாயக நெறிமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.**

சமுதாயக் கட்டமைப்புக்களைச் சீராகக் கொண்டு செல்வதற்கு மற்றவர் களின் கருத்துச் சுதந்திரத்தைக் கேட்டு வாழ்வதன்மூலமே சமுதாய அபிவிருத்தியை அடைய முடியும்.

**8) வேற்றுமையில் ஒற்றுமை காணவும் விட்டுக் கொடுக்கவும் பொறுமையைக் கடைப்பிடிக்கவும் வேண்டும்.**

தனிமனித சிந்தனைகள் வேறு பட்டனவே. இதனால் வேற்றுமைகள் எழுவது இயல்பு. வேற்றமையில் ஒற்றுமை கான நாம் விட்டுக் கொடுக்கத் தயாராக இருக்க வேண்டும். பொறுமையாக விடயங்களைக் கையாளப் பழகிக் கொள்ள வேண்டும். இதனால் பல துன்பங்களைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

**9) அன்பாகப் பேச வேண்டும். அரவணைத்துச் செல்ல வேண்டும்.**

கனி இருக்கக் காய் கவரக் கூடாது. எந்த விடயத்தையும் அன்பாகவும், இனிமையாகவும் பேசி அரவணைத்துச் செல்ல வேண்டும்.

**10) அரியாலையின் ஒற்றுமையைப் பேண வேண்டும்.**

அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு. நீதியான சமத்துவமான நடவடிக்கைகள் மூலம் அனைவரும் ஒன்று திரண்டு அரியாலையின் புகழுக்காகவும் அபிவிருத்திக்காகவும் தூய அரியாலை யைக் கட்டியெழுப்ப ஒன்று சேர்ந்து அர்ப்பணிப்புடன் பாடுபடுவோமாக.



# மருவிவரும் விளையாட்டு நிகழ்ச்சிகளின் இறுதி நிகழ்வு



தவநாதன் ஹரிஷான்ந் B.B.A
நாடகப் பொறுப்பாளர்
அரியாலை சுதேசிய திருநாட்
கொண்டாட்ட நூற்றாண்டு விழா

"நாம் அறிவிக்கும் வரை எவரும் மைதானத்திற்குள் பிரவேசிக்க முடியாது" "யாராவது எமது அறிவிப்பை மீறி மைதானத்திற்குள் பிரவேசித்தால் பரிசு வழங்கப்பட மாட்டது" "இனிப் போட்டி யாளர்கள் மைதானத்துக்குள் பிரவேசிக்க லாம்." இவ்வறிவிப்பு கிடைக்கப் பெற்றவுடன் விளையாட்டுப் போட்டி யில் கலந்துகொண்ட சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை மகிழ்வுடன் மைதானத்தை உற்றுநோக்குவார்கள் (நான் உட்பட)

ஆம் அதுதான் விநோத ஆடை நிகழ்வு அந்நிகழ்வை விளையாட்டு நிகழ்வின் இறுதி நிகழ்வாக தொடர்ச்சியாக அறிவிக்கப்பட்டு மக்களை கலையாது போட்டிகளை முழுமையாக பார்க்க வைக்கும் நிகழ்வாக இருந்தது.

எழுத்தாளர் ப.ஸ்ரீஸ்கந்தன் அரியாலையூரவரின் விநோத உடைப் பாரம்பரியம் குறித்து இவ்வாறு குறிப்பிடுகின்றார்.

"விநோத உடை என்றாலே மக்களிடையே பலத்த எதிர்பார்ப்பு இருக்கும் இந்நிகழ்ச்சி மூலம் மக்களை மகிழ்விப்பதற்காக தங்கள் உடல், பொருள்களை அர்ப்பணித்துப் பலர் இயங்கி வந்தனர். இயல்பான நகைச் சுவையாளர்களாக அவர்கள் இருந்ததும் விநோத உடைப்போட்டி சிறப்புப் பெற்றதற்கு முக்கிய காரணம். அந்த வகையில் எனது காலத்தில் அடையாளம் காணக்கூடியவர்களாக பூலோகசிங்கம், தவநாதன் ஆகியோர் இருந்தனர். பூலோக சிங்கம் போட்ட குரங்கு, பாதிரியார், மீன்காரி, எம்.ஜி.ஆர், மேளக்காரன் போன்ற வேடங்கள் மறக்கமுடியாதவை. மலவண்டி தள்ளிக்கொண்டு தன் நுனிக்காலில் துள்ளித் துள்ளி வந்த விதம் அபாரம். அந்த வேடத்திற்கு அந்நாளில் பிரமாண்டமாக நடைபெறும் யாழ் தினகரன் விழா விநோத உடைப் போட்டியில் முதற்பரிசு கிடைத்தது குறிப்பிடத்தக்கது.

தவநாதன் விசரியாக, மீன் காரியாக வந்தது நினைவில் இருக்கின்ற போதிலும் நல்லூர் தெற்கு சனசமூக நிலையம் நடத்திய விநோத உடைப் போட்டியில் அவர் போட்ட ஆமை வேடம்தான் விநோத உடையின் உச்சம். அந்நாளில் விநோத உடைப் போட்டி யாளர்கள் கச்சேரி வை.எம்.சி.ஏ சந்தியில் இருந்து கச்சேரி நல்லூர் வீதி வழியாக கற்பக விநாயகர் கோவில் வீதியை அடைய வேண்டும். ஆமை உருவத்தி னுள்ளே இருந்த நான்கு சில்லு வண்டி மீது அமர்ந்து கொண்டு சில்லுகளைக் கைகளினால் உருட்டிக்கொண்டு அவர் வந்த அந்தக் காட்சியை இன்று நினைத்தாலும் மெய் சிலிர்க்கும்"

அரியாலையில் பல நாடக நடிகர்கள் விற்பன்னர்கள் இருந்த போதிலும் இத்துறைக் கலைஞர்கள் குறைவாகவே காணப்படுகின்றனர். இத்துறையில் பிரகாசிப்பதற்குத் தனித்திறமையும் இயல்பான தன்மையும் அவசியமாகும். இதனால் பலரின் பங்குபற்றல் குறைவடைந்து வருவதால் வினோத உடைப் போட்டி மருவி வருகின்றது. இருந்த போதிலும் நான் முற்காலத்தில் பார்த்த அளவுக்குத் தரமாக அமையா விட்டாலும் ஏதோ தற்போதும் இவ் வினோதஉடைப் போட்டி தொடர்ச்சி யாக நடைபெற்று வருகின்றமை வரவேற்கத்தக்கது.

இக்குறைபாட்டிற்குக் காரணங் களாக எனக்கத் தெரிந்த வகையில்

1. வினோத உடைப்போட்டியில் பங்குபற்ற வேண்டும் என்ற உணர்ச்சி தற்போதைய சமூகத்தில் காணப்பட வில்லை.
2. வினோத உடைப்போட்டி தொடர்பான அறிவுடையவர்கள் நிர்வாக சபையில் காணப்படவில்லை.
3. வினோத ஆடைப்போட்டிக்கு வழங்கப்படும் பரிசின் தரம் போதியதாகக் காணப்படவில்லை.
4. வினோத ஆடைப்போட்டி தொடர் பான அறிவுடையவர்கள் நடுவர் களாக நியமிக்கப்பட வேண்டும். (எல்லோருக்கும் எல்லாம் தெரியாது)

மேற்கூறப்பட்ட விடயங்களை கவனித்து வினோத ஆடைப்போட்டிக்கு உயிர் கொடுக்க வேண்டும். அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட நூற்றாண்டு விழாவினர் இச்செயற் பாட்டை செய்வார்கள் என நம்புகின் றேன். அதாவது உயிர்போவதற்கு மூச்சை இழுத்துக் கொண்டிருக்கும் வினோத உடைப்போட்டிக்கு எம்மூச்சை கொடுத்து உயிர்கொடுப்போம்.

"தொடரட்டும் அரியாலை சுதேசியத்தின் சரித்திர சாதனை நோக்கிய பயணம்"
வாழ்க சுதேசியம்



# எமது கலை, கலாசார, சைவசமய வளர்ச்சியில் நாவலரின் தொண்டுகள்



திருமதி.பு. இரகுநாதன் B.Sc (Agric) M.Sc. M.Phil

**திருச்சிற்றம்பலம்**

*அன்புறு சிந்தைய ராகி அடியவர்*
*நன்புறு நல்லூர்ப் பெருமணம் மேவிநின்*
*றின்புறும் எந்தை இணையடி யேத்துவார்*
*துன்புறு வாரல்லர் தொண்டுசெய் வாரே*

**திருச்சிற்றம்பலம்**

*என்று திருஞானசம்பந்தர் சிவ தொண்டையே செய்து வரும் தனக்கு அம்மி மிதித்துச் செய்யும் திருமணம் வேண்டாமென்று அந்தணப் பெரு மக்களுக்குச் சொன்னது போலவே யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலரும் தனது தமையன்மார் நெருக்கிய போதும் கல்யாணப் பேச்சைத் தன்னிடம் பேசவேண்டாமென்று மறுத்தவர். நைட்டிகப் பிரம்ச்சாரியாக வாழ்ந்து காட்டிய நாவலர் தான் விவாகம் செய்யாததன் காரணம் என்னவென்று விளக்கிச் சொன்னார். சைவத்தையும், தமிழையும் வளர்க்க வேண்டுமென்ற பேரவா தான் (நான்கு ஆச்சிரம தர்மங்களையும் தமக்கு அழகுற விளக்கிய) நாவலர் அவர்களை பிரமச்சாரியாகவே வாழ வைத்தது. இவர் பிறருடைய இகபரசுகங்களையும் தன்னுடைய பரசுகமொன்றையுமே வேண்டி எல்லாக் கருமங்களையும் செய்தவர். சந்தேக மில்லாமல் இவை அத்தனையும் தொண்டுகள் தான். இவர் புகழுக்கு சிறிதும் ஆசைப்படவில்லை. அது தானாகவே இவருக்கு உண்டாவதாயிற்று.*

*அந்தக் காலகட்டத்திலேயும் அரசனே வெறுத்தொதுக்கிய சைவ சமயம் யாழ்ப்பாணத்திலே தப்பியிருந்தது திருவருளாலேயன்றி வேறொன்றினாலு மில்லை. தமிழ் பாஷையும் அப்படித்தான் தப்பியிருந்தது. பரம்பரையாக தமிழ்ப் புலமை வாய்ந்த கந்தர் சிவகாமி தம்பதிகளின் இறுதி மகனான ஆறுமுக நாவலர் சைவ சமயமே மெய்ச் சமய மென்று நாம் தெளிந்து உய்ய வேண்டுமென்றே பிறவியெடுத்தவர்.*

*சைவத்தைப் பேணுவதற்கும் அந்த அறிவைப் பரவச் செய்வதற்கும் தமிழை வளர்ப்பதற்கும் திருவருள் நாவலரை தளமாக பயன்படுத்த அவர் இணங்கியது போல் வேறு எவரும் இணங்கவில்லையென்று கொள்ளலாம். சிறு வயதிலேயே நல்லாசிரியர்களிடம் இலக்கண இலக்கியங்களை ஆர்வத்துடன் கற்று வந்த படியால் இவர் கந்த புராணம், திருவிளையாடற் புராணம், திருவாத வூரடிகள் புராணம் என்பவை படிக்கப்படும் கோயில்களிலே அவற்றைக் கேட்டு அறிந்து கொண்டார். அந்தச் சின்ன வயதிலேயும் புராணங்களுக்குப் பிழையாக அர்த்தம் சொல்பவரை உடனுக்குடன் திருத்தியும் வந்தார். எழுத்தறிவில்லாத பாமர மக்களுக்கு புராண படனமே முறையான வழியென்று அதைத்தானும் கடைப்பிடித்து சைவ அறிஞர் பலரையும் கடைப்பிடிக்கத் தூண்டினார்.*

பர்சிவெல் பாரியாரிடம் ஆங்கிலம் கற்றதோடு வடமொழியையும் தானாகவே கற்றபடியால் வேதாகம நூல்களோடு வேறு முக்கியமான வடமொழி நூல்களையும் கற்று தமிழ் இலக்கண இலக்கிய நூல்களை இலகு வான வசன நடையிலே இயற்றினார். சமய அறிவையும் தமிழையும் வளர்க்கும் வல்லமையைப் பெற்றார். பால பாடம், சைவ வினாவிடை போன்ற தொடர் நூல்களை இயற்றித் தந்தார். ஆங்கில மொழி விளக்கத்திற்குப் பயன்பட்ட குறியீடுகளைத் தகுந்த முறையிலே தமிழ்ப் பாஷையிலே புகுத்தி திருத்தங்கள் செய்தார். தனது பேச்சிலும் எழுத்திலும் செந்தமிழையே பயன்படுத்தினார். ஒரு ஊதியமும் பெறாது பல மாணவர்களுக்கு ஆங்கிலமும், தமிழும் கற்பித்து வந்தார். தமிழை இங்கிலிசுப் படுத்துவதிலும், இங்கிலிசை தமிழ்ப்படுத் துவதிலும் நாவலருக்கு நிகர் நாவலரே. இவர் தமிழ்ப் படுத்திய விவிலியம் இதற்கு நல்ல சான்றாகும். விவிலியத்தை தமிழ்ப் படுத்திய பின்னர் சைவம் வேகமாகக் குன்றி வருவதையுணர்ந்து சைவ சாத்திரங்கள் படிப்பதில் முன்னை விட அதிக அக்கறை செலுத்தி வந்தார்.

சிவஞான போதம், சிவஞான சித்தியார், திருக்களிற்றுப் படியார், திருவருட்பயன், நெஞ்சு விடு தூது, கொடிக்கவி, சிவப்பிரகாசம் முதலிய நூல்களை சந்தேக விபரீதமறத் தாமே கற்று வந்தார்.

சிவபெருமான் அருளிச் செய்த முதன் நூல்கள் வேத சிவாகமங்களே என்றும் அவைகளுள் வேதம் பொது நூலென்றும் ஆகமம் சிறப்பு நூலென்றும் அறிந்தார். அறிந்து சிறப்பு நூலாகிய சிவாகமத்தைக் கற்றற்கு சமஸ்கிருதம் அவசியமென்று சில நாட்களுக்குள்ளேயே சமஸ்கிருத நூல்களை வாசிக்கவும் அவற்றின் பொருளை ஐயந்திரபர விளங்கிக் கொள்ளவும் கற்றுக் கொண்டார். அந்த வேத சிவாகம உண்மைப் பொருட்கள் தேவார திருவாசகங்களிலே அடங்கியதை உணர்ந்து அவற்றையும் முழுதாகக் கற்றுணர்ந்தார். மற்ற உயர்ந்த இலக்கண இலக்கிய நூல்களையும் எங்கே யாரிடத்தில் கற்றார் என்று அறியமுடியாத படி வேதாகமத்தைத்தானே கற்றுணர்ந்தார். இவர் ஒரு நல்லாசிரியனுக்கு இலக்கண மாகத் திகழ்ந்து தனக்கு நன்கு தெரிந்த பாஷைகள் மூன்றையும் பயன்படுத்தி தன்னால் இயன்ற தொண்டுகள் அனைத்தை யும் செய்து வந்தார். உலகத்திலேயே சைவ சித்தாந்த சாத்திரங்களிலே மிக்க பாண்டித் தியம் உடையவர் எனவும் விளங்கினார்.

கல்வி சமய விடயங்களிலே பலர் சந்தேகம் கேட்க நாவலரையே நாட வேண்டிய நிலை ஏற்பட்டது. இப்படி நாவலரை அணுகியோர் நாவலர் ஞானகாண்டப் பொருளைச் சுருக்கி இனிது விளக்குவதைக் கேட்டு தாங்கள் முன்னொரு காலத்தும் கேட்டறியாத நூல்களைப்பற்றி இவர் சொல்லுகிறார். இவற்றை எங்கே கற்றார்? எப்போது கற்றார் என்று ஆச்சரியமடைவார்கள். இவையெல்லாம் பழைய ஏடுகளிலே இரவிரவாக இலுப்பெண்ணெய் விளக் கொளியிலேயே சிவத்தியானத் தோடு உருகி உருகி உடல் வருத்தத்தையும் பொருட்படுத்தாது நாவலர் கற்றுணர்ந்த வைதாம்.

இவர் ஏதோ ஒரு விதமான இறையருள் பெற்றிருந்தபடியால் படிக் காத நூல்கள் சிலவற்றைத் தொட்டுப் பார்த்து அந்த நூல்களிலுள்ளவற்றை விளங்கிக் கொண்டார் என்று கைலாச பிள்ளையவர்கள் குறிப்பிட்டிருப்பதை

நாம் கவனத்திற் கொள்ள வேண்டும். சுவாமி விவேகானந்தர் அவர்களுக்கும் இப்படியானதொரு திறமை அவருடைய குருவருளினாலே கிடைத்ததாக அறிகிறோம். இவ்வுலகில் இப்படியான அருள் பெற்றவர்கள் இறைவன் என்றே போற்றப்படுகிறார்கள்.

நாவலர் 20 - 22 வயசாயிருக்கும் போதே திருமுருகாற்றுப் படையை தினமும் பாராயணம் பண்ணுவார். அந்தக் குருமூர்த்தியின் அருளோ அல்லது வண்ணை தட்ஷணாமூர்த்தியின் அருளோ இவருக்கு இருந்திருக்கிறது. அதனாலே இவருடைய தொண்டுகள் எல்லாம் மிகச் சிறப்புப் பெற்றன. பெரிய புராணத்தைப் பலர் படிக்க வேண்டும் என்று விரும்பி கத்தியரூபமாகச் செய்து வாசிப்பவர்களுக்கு எளிதில் பொருள் விளங்கும்படி அச்சிற் பதித்தார். ஆனால் நாவலர் படித்தவையோ செய்யுள்களாக விருந்த ஏடுகள் தாம். வெறும் மூல நூல்கள் அவை. கந்தபுராணமும், திருவிளையாடற் புராணமும் ஏனையவை யும் அப்படியே இருந்தன.

இவர் யாழ்ப்பாணத் தமிழின் சிறப்பை விவிலிய மொழி பெயர்ப்பின் மூலம் தமிழ் நாட்டாரும் அறிந்து வியக்க வைத்தார். இவர் விவிலியத்தை ஊன்றிப் படித்ததனால் பாதிரியார் பலருக்கும் தெரியாத விவிலியத்திலுள்ள விடயங் களை நன்கு தெரிந்து வைத்துக் கொண்டார். எனினும் இவர் கிறிஸ்து மதத்தை பரசமயமாகவே மதித்து வந்தார். பாதிரியாருக்குப் பண்டிதராக விருந்த காலத்திலே அவர் செய்யும் உபாயங்களை யெல்லாம் நன்கு அறிந்து கொண்டார். இந்த வகையில் வெள்ளிக்கிழமை தோறும் கோயிலிலே பிரசங்கம் செய்யும் முறையை ஆரம்பித்து வைத்தார். இவர் கிறிஸ்து சமயத்திலே சேரவிருந்த சிலருக்கு சைவ உண்மைகளைப் போதித்து அவர்கள் பெறவிருந்த மதமாற்றத்தை தனியொருவ னாக நின்று தடுக்க முடிந்தது. சைவ தீட்ஷை பெறாத பலரைத் தீட்ஷை பெறச் செய்தார். மாமிச உணவுப் பழக்கமுள்ள பலரை சைவ உணவுப் பழக்கமுடையவர் களாக மாற்ற முடிந்தது.

தமிழ்நாட்டு ஓதுவார்களை வருவித்து தேவார திருவாசகங்களையும் ஏனைய அருட்பாக்களையும் கோயில் களிலே பண்ணோடு பாடுவித்தும் சைவப் பிள்ளைகளுக்கு பயிற்றுவித்தும் திரு விழாக் காலங்களிலே தானும் பாடிக் கொண்டு கிரமமாக ஓதும் முறையை பரவச் செய்தார். பாடசாலைகளில் வகுப்புக்கள் ஆரம்பமாகும் முன்னர் இறைவணக்கம் செய்யும் முறையையும் வெள்ளிக்கிழமைகளிலே சிவபுராணம் ஓதும் முறைகளையும் நாவலரைப் பின்தொடர்ந்து பல அதிபர்கள் பின்பற்றி வந்தனர். இவற்றாலே தான் நமது கந்தபுராணக் கலாசாரம் என்பது இன்று இந்த அளவிலாவது நிலைத்து நிற்கின்றது.

நாவலர் குடும்பப் பற்று அற்றவர் போல் ஏனைய தொண்டுகளைச் செய்து வந்தார். செந்தி நாத ஐயர் எட்டு வருடங்கள் உபாத்தியாயராயிருந்தும் பிள்ளைகளுக்கு படிப்பிப்பதை விட நாவலரிடத்திலே படிப்பதிலே அதிக நேரத்தைச் செலவிட்டார். நாவலர் தமது சம்பாத்தியத்தை தமது வித்தியாசாலை களுக்கும், தாம் மேற்கொண்ட பிற தர்மங்களுக்கும் செலவழித்ததே யல்லாமல் தமது சுற்றத்தாருக்குக் கொடுத்ததில்லை. இதற்குக் காரணம் இவருக்கு சிறு வயதிலிருந்தே சைவ சமயத்தை வளர்க்க வேண்டுமென்ற பேராசை உண்டாகியதே. தனது பதின்மூன்று வயதிலே சைவம் குன்றுவதைப் பற்றி சிவபெருமானுக்கு வெண்பா பாடியுள்ளார். சைவம், தமிழ்

ஆகியவற்றின் சுவையை தானறிந்தது போல எல்லாரும் அறிய வேண்டுமென்று பேராசைப்பட்டார்.

சைவர் மாமிசம் புசித்தலும், கோயில்களை ஆகம முறையின்றி அமைத்தலும், அந்தணர் ஆசாரங்களைக் கைவிடுதலும், பூசை, திருவிழா என்பன விதிப்படி நடவாமையும் நாவலரின் கவலையையும், மனவருத்தத்தையும் பன்மடங்காக்கின. இவற்றால் அவர் தமது சைவ மத விடயங்களுக்கே பல கண்டனங் கள் தெரிவிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

இதேபோல் இராமலிங்க அடிக ளாரின் பாடல்களை அருட்பா என்று சொல்லி கோயில்களில் பாடி வந்ததையும் தேவார திருவாசகங்களைப் பாடாது இவற்றிற்குப் பதிலாக அடிகளாரின் பாடல்கள் மட்டும் பாடப்பட்டு வந்ததையும் நாவலர் கடுமையாகக் கண்டித்து வழக்காடினார். இது தமிழ் நாட்டிலே அப்போதைய காலகட்டத்தில் நடந்தது. தற்போது எமது நாட்டு நிலைமை இதைவிடக் கேவலமாகி வருகிறது. பரமசிவனின் திரு உலா ஒரு களியாட்ட நிகழ்வாக மாறி வருகிறது. சில கோவில்களிலே நமது கலாசாரம் இன்றும் ஓரளவு பேணப்படுகிறது. ஏனைய கோயில்களிலே நாவலர் எடுத்துக் கொண்ட முயற்சிகளிலே மிகச் சிலவே வெற்றியளித்தன என்றும் ஏனைய பணிகளும்சிறக்க தனக்கு உதவிகளில்லையே என்று தனது இயலாமையை நொந்து அவர் வருந்தியதுமுண்டு. 56 வயது வரை வாழ்ந்த நாவலர் இன்னும் ஒரு நாற்பது வருடங்களாவது வாழ்ந்திருந்தால் அவர் பலவற்றைச் சாதித்திருப்பார். அவருக்கு மேலும் பல சீடர்களும் உருவாகி யிருப்பார்கள். இலங்கையும் தொடர்ந்து சிவபூமியாகவே திகழ்ந்திருக்கும். இவரைப் போல் வேறு ஒருவர் எமக்குக் கிடைப்பது அரிது என்று இவரே சொல்லி விட்டார். ஆதலால் நாம் வீணே ஏங்குவதிலே அர்த்தமில்லை.

இவருக்கு தமிழில் இலக்கணமும் நன்றாக வரும். இலக்கியமும் நன்றாக வரும். தருக்கமும் நன்றாக வரும். பாட்டுப் பாடவும் நன்றாக வரும்.

இவர் சைவ சமயத்தைப் பற்றியும் நன்றாக அறிவார். புறச் சமயங்களைப் பற்றியும் நன்றாக அறிவார். சமயத்திலே ஞானகாண்டமும் நன்றாக வரும். கிரியா காண்டமும் நன்றாக வரும். இவர் தமிழிலும் மிக வல்லவர். சமஸ்கிருதத்திலும் மிக வல்லவர். இங்கிலிசிலும் மிக வல்லவர். எமது ஏச்சுக்கும் பேச்சுக்கும் ஈடுகொடுத்து சைவத் தொண்டாற்ற வேறு யார் வருவார்? நாவலரை கவிமணி தேசியவிநாயகம்பிள்ளை அவர்கள் பள்ளிப் பிள்ளைகளுக்கு அறிமுகம் செய்து வைத்தார். எப்படியெனில்

“ஆடும் தில்லை அம்பலவன் அடிகள் மறவா அன்புடையோன்

பீடு பெறவே செந்தமிழைப் பேணி வளர்த்த பெரும் புலவா

நீடு சைவம் நிலவுலகில் நிலவச் செய்த குருநாதன்

நாடு புகழும் ஆறுமுகநாவலர் பேர் மறவோமே”

நாவலர் சைவதூஷண பரிகாரம் போன்ற பல கண்டன நூல்களை எழுதியதற்கும் துண்டுப்பிரசுரங்கள் வெளியிட்டமைக்கும், பிரசங்கங்கள் செய்ததற்கும் முக்கியமான பல காரணங் கள் இருந்தன. நாவலர் காலத்திலே பல சைவர்கள் சைவ சாஸ்திர நூல்களைச் சிறிதும் அறியாமலிருந்தது முதலாவது. இரண்டாவது விவிலிய நூலை முற்றும் வாசித்தறியாது சைவதூஷணம் செய்து

வந்த பாதிரிமார் மதமாற்றம் செய்வதிலே கண்ணும் கருத்துமாயிருந்தது. மூன்றாவது பாதிரிமாரின் தூஷணங்களெல்லாம் சரிதானென்று மதிமயங்கி ஏற்றுக் கொண்ட பல சைவர்கள் கிறிஸ்து மதப் படுகுழியில் வீழ்த்தப்பட்டது.

பாதிரிமார் சைவதூஷணத்திலே சொன்ன விடயங்கள் விவிலியத்திலே விதிக்கப்பட்டவைக்கு எதிரானவை என்று நாவலரால் மட்டுமே (விவிலியத்தையும் சைவ நூல்களையும்) ஆதாரம் காட்டி அழகாக அவர்களுடைய விளக்கங்கள் எல்லாம் தவறானவை என்று நிரூபிக்க முடிந்தது. இவற்றையெல்லாம் இங்கு விபரிக்கின் இக்கட்டுரை மிகப் பெரிதாகி விடும். நாவலர் நமக்கு விளக்கிய விடயங்கள் பல. அவற்றிலே சிலவற்றைச் சுருக்கமாக இங்கு தருகிறோம்.

1) சைவரின் பல தெய்வ வணக்கத்திற்குரிய கண்டனத்தை பதி உண்மை கூறி பின்னர் பிற தெய்வ வணக்கத்தையும் விளக்கியதாலே தெரிவிக்கப்பட்டது.

2) புண்ணிய ஸ்தலங்களிலே ஆன்மாக்களுக்கு விசேடமாக அருள் கொடுக்கவே சிவன் உறைகிறார் என்று சைவ நூல்கள் கூறுவதையே விவிலியத்திலும் மக்கள் சில இடங்களிலே கிறிஸ்துவை வணங்கி இரட்ஷிக்கப்பட்டதாக கூறுவதைச் சுட்டிக் காட்டினார்.

3) தலயாத்திரைகள் சைவர்களுக்கு அத்தியாவசியமானவையென்றும் நாயன்மார் வாழ்க்கையை ஆதாரமாக்கியதோடு மட்டும் நில்லாது விவிலியத்தில் விதித்தவற்றையும் மிகப் பொருத்தமாக எடுத்துக் கூறினார்.

4) நாம் ஆலயம் கட்டி விக்கிரகம் பிரதிஷ்டை செய்வது சிவ புண்ணியம் என்று விதித்த சைவ சமய நூல்களை எடுத்துக் காட்டி அவை நமது சரியை வழியென்று விவாதித்தார்.

5) விக்கிரங்களுக்கு அபிஷேகம் செய்வதும், நைவேத்தியம் பண்ணுவதும், தூபம் காட்டல், தீபம் காட்டல், வாத்தியம் முழங்கல் என்பன சிவனுக்கு ஏற்புடையன என்று சைவ நூல்களை ஆதாரங்காட்டி நிரூபித்தார்.

6) புண்ணியகாலங்களிலே விரதமிருத்தல், ஆத்மார்த்த லிங்க பூசை, தீட்ஷை முதலிய செய்வதற்கு அதிகாரிகளை நியமித்தல் என்பன சிவாகமங்களிலே விதிக்கப்பட்டுள்ளன என்றும் இப்படியான அதிகாரிகள் சிலர் கிறிஸ்துவ சமயத்திலும் உள்ளனர் என்றும் கூறினார்.

7) சரீர சுத்தி என்பது இரு சமயத்திலும் அத்தியாவசியமாகக் கொள்ளப்படுவதாகவும் சுத்தியின்றி சித்தியில்லையென்று சைவம் கூறுவதாகச் சொன்னார்.

8) ஆசௌசம் கூட பொதுவாக ஒப்புக் கொள்ளப்பட்டது என்றும், சிவாலயங்களுக்கு நிபந்தங்கள் கொடுப்பது புண்ணியம் என்று சைவ ஆகமங்கள் கூறுவது போலவே கிறிஸ்தவ ஆலயங்களுக்கு உதவுதல் நல்லது என்று விவிலியத்திலும் காணப்படுவதாகவும் கூறினார்.

9) சிவசின்னங்கள் தரிப்பது பரம சிவனுக்கு நாம் என்றும் அடிமைகள் என்பதை நினைவூட்டி பக்தியை வளர்ப்பதற்கே என்றுகூறி நாங்கள் மந்திர ஜெபம் செய்வது பாவம் என்று ஜெபம் செய்கின்ற நீங்களே இகழ்வது நீதியா என்று கேட்கிறார்.

10) சிவனை விதிப்படி நமஸ்கரித்து அங்கப்பிரதிஷ்டை செய்வது புண்ணியம் என்று சைவ நூல்கள் கூறியிருக்கும் போது கிறிஸ்துவை முழங்கால் படியிட்டு பாடிப் பிரார்த்திக்கும் கிறிஸ்தவர்களாகிய நீங்கள் தூற்றலாமா? என்று கேட்டார்.

11) சிவபுராணங்கள் மக்களுக்கு பாவங் களிலே வெறுப்பையும், புண்ணியங் களிலே விருப்பையும் ஊட்டுவதால் அவற்றை வாசித்தலும் பிரசாரம் பண்ணுதலும் யாவருக்கும் புண்ணி யமே என்றார்.

12) தீர்த்தங்களிலே அருட்சக்தி படிகிற படியால் விதிப்படி ஸ்நானம் பண்ணி பாவங்களையும், நோய்களையும் தீர்க்கலாமென்று கூறும் சைவ நூல்களையும் ஆதாரம் காட்டினார்.

13) சிவனடியார்களுக்கும், வறியவர் களுக்கும் திரவிய தானம் கொடுப்பது புண்ணியத்தைப் பெருக்கும் என்றும் கூறி இவற்றிற்குப் பயன் ஒன்று மில்லை யென்று கூறுவது பாவம் என்றும் பாதிரிமாரைச் சாடுகிறார். (நல்ல விவிலியச் சான்றுகளுடன்)

14) அன்னதானம் மேலாகிய புண்ணியம் என்று சைவ நூல்கள் கூறும் கிறிஸ்தவ சமயமும் இதனை ஏற்றுக் கொண்டுள்ள போது சைவர் இதனைச்செய்வதனாலே பயனடைய மாட்டார்கள் என்று பாதிரியாராகிய நீர் சொல்வது சரியா? என்று கேட்டார்.

15) சிவனை நினைத்துத் தவம் பண்ணுதல் பெரிய புண்ணியம் என்று சைவ நூல்கள் கூறும் உன்னுடைய சமயமும் இறைவனை விடாது சிந்தித்தல் புண்ணியம் என்று கூறும். சைவ தூஷணத்தை செய்ய வேண்டுமென்பதற்காக சிவன் அருளிய வேதாகம மெய்நூல்களிலே கூறப்பட்டவை பொய் என்று நீ கூறலாமா? கிறிஸ்துவை விசுவாசிக் காதவர்கள் எல்லாரும் நித்திய நரகத்திற்குச் செல்வார்களென்று நீ சொல்லலாமா? என்றார்.

16) சிவ சிவ, அர அர என்ற பெயர்கள் சிவனுடைய நாமங்கள். இவற்றை நினைப்பினும், உச்சரிப்பினும் கேட்கினும் பாவம் நீங்கிப் புண்ணியம் உண்டாகும் என்று சைவ நூல்கள் சொல்லும். ஆனால் கிறிஸ்து சமயத்திலே பிரவேசியாதவர்களும் கிறிஸ்துவின் நாமத்தைச் சொல்லி பிசாசுகளை ஓட்டினார்கள் என்று விவிலியம் சொல்லுவது உங்களுக்குத் தெரியும் தானே என்று கேட்டார்.

நாங்கள் சிவநாமம் சொல்லுவதால் பயனில்லையென்று பிறர் குற்றம் சொல்கிறீர்களே நீங்கள் உங்கள் மேல் குற்றம் சுமத்தாமலிருக்க வேண்டில் பிறர் மேலே குற்றம் சுமத்தாமலிருக்க வேண்டும் என்று கூறி சைவதூஷணம் மகா பாவம் என்று நம்மெல்லோருக்கும் தெளிவு படுத்தியுள்ளார்.

நாவலர் ஒரு பெரிய மகான். தான் படிக்க வேண்டிய எல்லாவற்றையும் படி படியென்று படித்தார். பிறர் படிக்கவும், படித்து விளங்கவும் கூடியதாக பல நூல்களை எழுதினார், அச்சிட்டார், கற்பித்தார், பிரசங்கங்கள் செய்தார். கண்டனங்கள் செய்து பிறர்குறை களைய முயன்றார். வேற்றுமை பாராட்டாது சுயநலமின்றிய மேலும் பல தொண்டுகள் செய்து வாழ்நாளை ஒரு நிமிடமும் வீணாக்காது தானே சைவ ஆசாரசீலராக வாழ்ந்து காட்டினார். புகழ் ஈட்டினார் பல முற்போக்குச் சிந்தனைகளோடு செயற்பட்ட வீர புருஷன். நாமனைவரும் அவரைப் போற்றித் துதி செய்ய வேண்டும்.

அவரைப் பற்றிக் கற்க வேண்டியன ஏராளம் உள்ளன. அவர் காட்டிய வழியில் நிற்க வேண்டியது நமது தலையாய கடமை. என்றும் சிற்றின்பத்தையே அனு பவித்துக் கொண்டிருக்கும் நாம் இவர் அனுபவித்த பேரின்பத்தை அனுபவிக்க வேண்டும் என்றுதான் இவர் இச்சித்தார்.

ஐயையோ! எங்களுக்கு இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ தெரியாதே! இப்பிறவியின் எல்லை கூட எதுவென்று தெியாதே. இன்றோ இல்லை.

*பின்னொரு நானோ இதற்குள்ளே*
*உலகத்தீரே! உலகத்தீரே!*
*நாக்கடிப்பாக வாய்ப்பறையறைந்து*
*சாற்றக்கேன்மின் சாற்றக் கேன்மின்!*
*மனிதர்க்கு வயது நூறல்ல தில்லை*
*ஐம்ப திரவி லகலுந் துயிலினால்*
*ஒட்டிய இளமையா லோ ரைந்து நீங்கும்*
*ஆக்கை யிளமையி லைம் மூன்று நீங்கும்*
*எழுபது போக நீங்கியிருப்பது முப்பதே*
*அவற்றுள்*
*இன்புறு நாளும் சிலவே யதா அன்று*
*துன்புறு நாளும் சிலவே யாதலால்*
*பெருக்கா றொத்தது செல்வம் பெருக்காற்*
*றிடிமகரை யொத்த இளமை யிடிகரை*
*வாழ்மர மொத்தது வாழ்நாளாதலால்*
*ஒன்றே செய்யவும் வேண்டு மொன்றும்*
*நன்றே செய்யவும் வேண்டு நன்றும்*
*இன்றே செய்யவும் வேண்டு மின்னும்*
*இன்னே செய்யவும் வேண்டு மின்னும்*
*நாளை நாளை யென்பீ ராகில்*
*மவனுடை முறை நாளாவது மறியீர்*
*நம்முடை முறை நாளாவது மறியீர்*
*எப்போதாயினும் கூற்றவன் வருவான்*
*அப்போ தந்தக் கூற்றவன் றன்னைப்*
*போற்றவும் போகான் பொருளொடும் போகான்*
*சாற்றவும் போகான் றமரொடும் போகான்*
*நல்லாரென்னா னல்குர வறியான்*
*தீயாரென்னான் செல்வரென் றுன்னான்*
*தரியா னொருகணந் தறுகணாளன் எனப் பெரியோர்*
*கூறினர் ஆதலான் இச்சரீர முள்ள போதே முத்தியதை*
*முயலக் கடவீர்கள்*

*சுபம்*

### துணை நூல்கள் பட்டியல்


*1)* *நாவலர் ஆளுமையும் தலைமைத்துவமும் - பேராசிரியர் இரா. வை. கனகரத்தினம் 2007*
*2)* *நாவலரின் தொலைநோக்கு யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம் - 2001*
*3)* *ஆறுமுக நாவலர் வரலாறு - ஒரு சுருக்கம் - அகில இலங்கை இந்து மாமன்றம் - 2008*
*4)* *நாவலர் பணிகள் - பேராசிரியர் ச. தனஞ்சயராஜசிங்கம்*
*5)* Arumuganavalar - by. V.Muthukumarasamy 1965

6) நாவலர் பெருமான் - வித்துவான் கா. மாயாண்டி பாரதி இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் 2016 நான்காம் பதிப்பு
7) ஆறுமுகநாவலர் கவித்திரட்டு - இந்து சமய அறநெறிக் கல்விப் பிரிவு - 2016
8) நாவலர் நறுமலர் க. இரகுபரன், ஸ்ரீ பிரசாந்தன், மு. கௌரிகாந்தன் - 2016
9) ஆறுமுக நாவலர் சரித்திரம் - த. கைலாசபிள்ளை 1999 சபாநாயகம் பிறிண்டேர்ஸ், சிதம்பரம் (6008001)
10) நாவலர் மாநாடு விழா மலர் - 1969 மெய்கண்டான் அச்சகம், 161, செட்டியார் தெரு, கொழும்பு.
11) பெரிய புராண சூசனம் - ஆறுமுகநாவலர் 2000, சபாநாயகம் பிறிண்டேர்ஸ், சிதம்பரம் (6008001)
12) சைவத் தமிழர்களின் கலங்கரை விளக்கம் - 2016, கலாநிதி ஆறு திருமுருகன். இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.
13) ஆறுமுகநாவலர் - 2007, பேராசிரியர் இரா. வை. கனகரத்தினம், குமரன் புத்தக இல்லம்.
14) ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், செ.கந்த சத்தியதாசன் - 2017
15) சைவதூஷணபரிகாரம் - ஆறுமுகநாவலர் 2013



# இலங்கைத் தமிழர் வரலாற்றில் அரியாலையின் பண்பாட்டு அடையாளங்கள்



திரு. சிவசுப்பிரமணியம் ஆறுமுகதாசன் M.A. (Cult)

*"புலனுணர்வின் இன்பமே எல்லை என்றவாறு நியமங்கள், விழுமியங்களைத் தொலைக்கும் சமூகங்கள் நெருக்கடிக்குள் துயரப்படுகின்றன"*

*- பிற்றிறிம் சொரக்கின் -*

பண்பாடு என்ற பதமானது 1937 இல் D.K சிதம்பரநாத முதலியாரால் அறிமுகம் செய்யப்பட்ட போதிலும் தொன்மை மிக்க நூலாக கருதப் படும் திருக்குறளில் பண்பாடு என்ற சொல்லுக்குப் பதிலாக சால்பு, சான்றாண்மை போன்றவை பயன்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கதாகும். Cult என்ற கிரேக்க விளையாட்டிலிருந்து Culture என்ற சொல்லானது தோற்றம் பெற்றிருந்தது. எவ்வாறு விவசாயத்திற்காக மண்ணைப் பதப் படுத்துவது ஆங்கிலத்தில் Agriculture என அழைக்கப்பட்டதோ அதே போன்று வாழ்வியலுக்காக மனத்தினைப் பண் படுத்தல் பண்பாடு என்ற விளக்கத்தை D.K சிதம்பரநாத முதலியார் வழங்கி யிருந்தார்.

இனத்தின் கூறுகளாகக் காணப் படும் அறிவு, நம்பிக்கை, கலை, ஒழுக்க நெறிகள், சட்டம், வழக்கம், முதலானவையும், மனிதர்கள் சமுதாயத்தில் ஒர் உறுப்பினராக இருந்து கற்கும் பிற திறமைகளும், பழக்கங்களும் அடங்கிய முழுமைத் தொகுதிகள் அனைத்தும் பண்பாடுகளாக அமையும் என T.B டைலர் குறிப்பிடுகின்றார்.

பொதுவாகப் பண்பாடு, நாகரிகம் என்ற இரு பதங்களும் ஒரே கருத்தைத் தருவது போல காணப்பட்டாலும், அவை கருத்தின் அடிப்படையில் வேறுபட்ட சொல்லாகவே அமைகின்றது. நாகரிகம் புறவாழ்க்கையை வெளிக்காட்ட பண்பாடு அக வாழ்க்கையை வெளிப் படுத்துகின்றது. இந்நிலையில் இலங்கைத் தமிழர் சமூகம் பண்பாடு எது? நாகரிகம் எது? என்பதை விளங்கிக் கொள்ளாது கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்ற நிலையில் இந்தியாவின் சினிமாவினுள் மூழ்கிக் கிடப்பது கவலையளிக்கும் ஒன்றாகக் காணப்படுகின்றது.

இலங்கையின் தேசிய இனமாக விளங்கும் தமிழர்கள் தமது இனத்தின் பாரம்பரிய மொழி, பண்பாடு, பழக்க வழக்கம், விழுமியங்கள், மரபுகள், கலைகள், உணவுப் பழக்க வழக்கங்கள், மருத்துவம் மற்றும் ஏனைய பண்பாட்டு அம்சங்களை தெரிந்து கொள்ள வேண்டிய தேவை காணப்படுகின்றது. எனினும் இன்றைய வாழ்வின் சூழ்நிலையில் பண்பாடு தொடர்பான அம்சங்களுக்கு முக்கியம் வழங்கவில்லை என்றே கூறலாம். எமது இனத்தின் பண்பாட்டு அம்சங்களை பாதுகாப்பது தொடர்பில் அனைவரும் கவனத்தில் கொள்ள வேண்டும்.


இந்தவகையில் அரியாலை மக்களால் கொண்டாடப்படும் சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவானது *1919* ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு நூற்றாண்டைக் கொண்டாடும் நிலையில் அரியாலை வாழ் மக்களின் / அரியாலை பிரதேசத்தின் பண்பாட்டு அடையாளங்கள் அழிவடைந்து அல்லது மறைந்து சென்றுள்ளதை காணக் கூடியதாக உள்ளது. இதனை கீழ்வரும் கூறுகளின் அடிப்படையில் சுருக்கமாக அவதானிக்க முடியும். இப்பிரதேசத்தை முழுமையான ஆய்வுகுட்படுத்தும்போது தனியொரு நூலாக வெளிவருவதற்கு சந்தர்ப்பங்கள் உள்ளது.

1. வரலாற்றுத் தொன்மை
2. இட அமைவு
3. சமயம்
4. பெரியார்கள்
5. கட்டிடங்கள் (வீடுகள்)
6. நீர் நிலைகள் (குளங்கள், கேணிகள், கிணறுகள்)
7. பாரம்பரிய போக்குவரத்து முறைகள் (வாகனங்கள்)
8. பாரம்பரிய பாவனைப் பொருட்கள்
9. பாரம்பரிய விளையாட்டுக்கள்
10. பாரம்பரிய வேலிகள்
11. பாரம்பரிய உணவுகள்
12. பாரம்பரிய சடங்குகள்
13. பாரம்பரிய கலைகள்
14. பாரம்பரிய தொழில்கள்
15. பாரம்பரிய கல்வி
16. பாரம்பரிய உடைகள்
17. குடும்பப் பெயர்கள்
18. வாழ்க்கை முறைமை

## 01. வரலாற்றுத் தொன்மை

அரியாலைப் பிரதேசமானது வராலாற்றுத் தொன்மைமிக்க இடமாக விளங்கியுள்ளது. சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா பவள மலரில் காணப்படும். **"அரியாலையும், அம் மக்களும் வரலாற்று நோக்கு"** என்ற தலைப்பிலான கட்டுரை ஆசிரியர் அரியாலைப் பிரதேசம் பூநகரிப் பிரதேசத்துடன் தொடர்புடைய ஒரு பிரதேசமாக இருந்து வந்துள்ளது என்பதைக் கீழ்வருமாறு குறிப் பிடுகின்றார். "அரியாலைக் களப் பிரதேசம் பூநகரி, வெட்டுக் காட்டுப் பிரதேசத்தைப்போல வெண்மண் குன்றுகளையும், பனை, தாளை, கண்டல் மரங்களையும் கொண்ட பிரதேசமாகும். இம் மணல் குன்றுகள் காலக்கிரமத்தில் யாழ்நகரத்தின் கட்டிட தேவைக்காக மணல் அகழ்ந்து எடுக்கப்பட்டு தற்போது வேறு நிலப் பயன்பாட்டுத் தன்மையில் காணப்படுகின்றது. அவ்வாறு மணல் அகழும் பொழுது பல மட் பாத்திரங்கள், ஓடுகள், வெளிநாட்டு நாணயங்கள் கிடைத்ததாகவும், அவற்றின் முக்கியத் துவம் உணராத மக்கள் அவற்றை அழித்து விட்டதாகவும் அப்பிரதேசத்து மக்கள் வாயிலாக நாம் அறியக் கூடியதாக உள்ளது. எனவே, முக்கியமான தொல்லியல் சான்று இல்லாத காரணத் தால் பூநகரிப் பிரதேசத்தில் காணப்பட்ட கி.மு.*1000* ஆண்டுக்கு பிற்பகுதியைச் சேர்ந்த பெருங்கற்காலப் பண்பாட்டின் தாக்கம் இப்பிரதேசத்தையும் உள்ளடக்கி யிருக்கும் அப் பண்பாட்டுக்குரிய மக்கட் குடியேற்றம் இங்கும் இருந்திருக்கலாம் என்று கொள்ள இடமுண்டு" எனக் குறிப்பிட்டுள்ள மையானது இப்பிரதேச மக்களின் தொன்மையை எடுத்துக் காட்டுகின்றது. இதனை உறுதிப்படுத்தும் விதமாக யாழ்ப்பாணத் தொன்மை வரலாறு என்ற நூலில் " கிறிஸ்தாப்த காலத்திலும், அதனைத் தொடர்ந்து வந்த நூற்றாண்டுகளிலும் யாழ்ப்பாணக் குடாநாட்டின் நாகரிக வளர்ச்சியை எடுத்துக் காட்டுவனவாகக் கந்த ரோடை, ஆனைக்கோட்டை, சத்திராந்தை,

கும்புறுப்பிட்டி, சாட்டி, வல்லிபுரம், நாகர்கோவில், கருமணற் கும்பி, தாழையடி, வெற்றிலைக் கேணி, வெடியரசன் கோட்டை, வேரப்பிட்டி, திஸாமளுவை, களையோடை, அரியாலை கிழக்கு, முள்ளி, ஆனைவிழுந்தான், திகழி, துலக்கன் கோட்டை, மண்டலாய், நித்திய வேட்டை, பப்பரவப்பிட்டி ஆகிய இடங்களில் மட்பாண்டங்கள் காணப் படுகின்றன. இத்தகைய நாகரிக வளர்ச்சி யின் சின்னங்களாகச் சிவப்புநிற, மட்பாண்டங்களும் தடித்த விளிம்பினை உடைய சிவப்பு நிற மட்பாண்டங்களும் விளங்குகின்றன என எடுத்துக் காட்டப் பட்டுள்ளது. இவற்றுள் குறிப்பாக தடித்த விளிம்பினையுடைய மட்பாண்டங்கள் தொடர்ந்து பல நூற்றாண்டுகளாக இப்பகுதியில் வழக்கில் இருந்ததாகவும் கூறப் படுகின்றது". இக்கருத்தானது அரியாலையின் தொன்மையை அக்காலப் பகுதிக்குரிய வரைபடத்துடன் சான்று பகர்கின்றது. (படம் 26 அ, 26ஆ)



படம் - 26 அ

மேலும், இப்பகுதியிலிருந்து மேற்கொள்ளப்பட்ட மணல் அகழ்வின் போது ஈமத்தாழி ஒன்று மீட்கப்பட்டு அதன் வரலாறு தெரியாது ஒரு சிலரால் பாவனைக்குட்படுத்தப்பட்டதாக அறிய முடிகின்றது.

## 02. இட அமைவு

இலங்கைத் தீவின் வட பகுதியில் கந்தபுராணத் தலைநகர் என்று சிறப்பிக்கப்படும் யாழ்ப்பாணம் என்னும் நகரத்துக்கு அண்மையாக முக்கியத்துவம் பெற்ற ஓரிடமாக அரியாலை மண் காணப்படுகின்றது. இது தற்போதைய உள்ளூராட்சி அமைப்பின் பிரகாரம் யாழ் மாநகர சபையின் பெரும்பாகத்தையும், நல்லூர் பிரதேச சபையின் ஒரு பகுதியையும் கொண்ட பிரதேசமாகக் காணப்படுகின்றது. இப் பிரதேசம் பத்து சதுர கிலோமீற்றர் பரப்பளவைக் கொண்ட பிரதேசமாகக் காணப் படுகின்றது. இப் பகுதியானது சங்க இலக்கியம் பகர்கின்ற ஐவகை நிலங்களுள் மருதம், முல்லை, பாலை, நெய்தல் ஆகிய நால்வகை நிலங்களையும் தன்னகத்தே கொண்ட இடமாக விளங்குகின்றது. தமிழ் மன்னர்களின் காலப்பகுதியி லிருந்தே முக்கியம் பெற்ற இடமாக அமைந்துள்ளது. நல்லூர் இராசதானி மற்றும் தமிழகத்தின் சிதம்பரம் ஆலயத்துடன் தொடர்புபட்ட இடமாக விளங்கியுள்ளது. இதன் விளைவாக நல்லூர், சிதம்பரக் கோயிலுக்குரிய ஆதனங்கள் இப் பிரதேசத்தில் இன்னும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. அந்நியராட்சிக் காலத்தில் வன்னி மற்றும் ஏனைய இராசதானிகளுடன் தொடர்பினை ஏற்படுத்தும் போக்குவரத்துப் பாதை யைக் கொண்டதொரு இடமாக இம்மண் விளங்கியுள்ளது. பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் பிரதான போக்குவரத்துப்

பாதையானது பின்வரும் இடங்களின் ஊடாக நடைபெற்றுள்ளது.

01. பழைய கண்டி வீதியானது முத்திரைச் சந்தி → செம்மணி வீதி → கண்டி வீதி → உரியான் வீதி → கண்டாவளை பூங்காவனச் சந்தி → இரணைமடுக்குளம் அருகாக → தம்பகாமம் என்ற இடத்தின் ஊடாக கனகராயன் குளத்தின் அருகாக சென்றமை

02. கச்சேரி வழியாக → கண்டி வீதி → உரியான் வீதி → கண்டாவளை பூங்காவனச் சந்தி → இரணை மடுக்குளம் அருகாக → தம்பகாமம் என்ற இடத்தின் ஊடாக கனகராயன் குளத்தின் அருகாக சென்றமை

03. வடமராட்சி → வரணி → கொடிகாமம் → உரியான் வீதி → கண்டாவளை பூங்காவனச் சந்தி → இரணைமடுக்குளம் அருகாக → தம்பகாமம் என்ற இடத்தின் ஊடாக கனகராயன் குளத்தின் அருகாக சென்றமை

04. கண்டி வீதி → அரியாலைச் சந்தி (கேணியடி) → கிழக்கு அரியாலை → முனை → வெட்டுக்காடு → பூநகரி ஊடான கடற்கரைப் பாதை

கிழக்கு அரியாலையின் முனையிலிருந்து பாதைச் சேவை (பெரி) ஊடாக பூநகரிக்கு இலகுவாகப் போக்குவரத்துக்கள் இடம்பெற்றிருப்பதற்கான சான்றுகள் காணப்படுகின்றன. கிழக்கு அரியாலை முனைப் பகுதியில் சீமெந்திலான நங்கூர அமைப்பைக் கொண்ட சிதைந்த கட்டிடம் ஒன்று காணப்படுகின்றது. இது பாதைச் சேவைக்கான தூணாக அமைந்துள்ளது. இதே போன்று கௌதாரி முனைப் பகுதியிலும் இவ்வாறானதொரு நங்கூரம் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (படங்கள் 1,2)


1


2

## 03. சமயம்

அரியாலை பிரதேசமானது இந்துப் பாரம்பரியம் நிறைந்த ஓர் கிராமமாக அமைந்துள்ளது. யாழ்ப்பாண நகரம் அந்நியராட்சிக்கு முன்பே இந்து சமயம் சார்ந்த இராசதானியாக விளங்கியமையால் அரியாலைக் கிராமமும் இந்து சமயம் சார்ந்த பிரதேசமாகவே இருந்துள்ளது. குறிப்பாக சைவசமயம் சார்ந்த மக்களாக விளங்கியுள்ளனர். ஆரியர்களின் வருகைக்கு முன்னரே தமிழர்களின் தெய்வமாக யாழ்ப்பாணத் தொன்மைக் காலத்தில் வழிபடப்பட்ட சிவன், விநாயகர், அம்மன், ஐயனார் போன்ற கடவுளர்கள் அரியாலை பிரதேசத்தில் வழிபடப்பட்டமை சமயப்

பண்பாட்டை எடுத்துக் காட்டுகின்றது. சித்தி விநாயகர் ஆலயம் யாழ்ப்பாணன் காலத்தில் நிறுவப்பட்டது என்பதை ஆ.முத்துத்தம்பிப்பிள்ளையின் "யாழ்ப்பாணச் சரித்திரம் மீள வாசிப்பு 1912" என்ற நூலின் ஊடாக அறிய முடிகின்றது. இதில் [3] "நாட்டிலே நல்லொழுக்கமும், ஒற்றுமையும், ஈசுர பக்தியும் அபிவிருத்தியாகுமாறு ஒரு பாடசாலையையும், புரோகிதராகத் தம்மோடு வந்த கச்சிக்கணேசையர் கொணர்ந்த சித்தி விநாயகரையும் ஓராலயம் வகுத்துத் தாபித்தனர். இதுவே யாழ்பாடிக் காலத்தில் உண்டாகிய விக்கிநேசுரராலயம். இது நல்லூரில் எவ்விடத்தில் இருந்த தென்று தெரிய வில்லை. இப்போதுள்ள சித்தி விநாயகர் ஆலயத்திலுள்ள விக்கிநேசுர மூர்த்தி அதுவே போலும்" எனக் குறிப்பிட்டுள்ளார். அத்துடன், [4] "பிறக்டர் வி.காசிப் பிள்ளையெனும் பரோபகாரசீலர் இக்கல்லூரியை மாத்திரமன்று, இன்னும் பல வித்தியா சாலைகளைத் தமது கைப்பொருள் கொண்டு தாபித்தும் நடாத்தியும் வருகின்றார். இவருடைய வித்தியாபிமானமும் உண்மைப் பரோபகார விருப்பும் அறியாதார் யார்! இவரே சித்தி விநாயகராலயத்தைப் பெருந் தொகை செலவிட்டுக் கற்றிருப் பணியாகக் கட்டுவிப்பவர்" என்று குறிப்பிட்டுள்ளமை இந்து மதத் தொன்மையை விளக்கும் சிறந்த எடுத்துக் காட்டாக அமைந்துள்ளது. மேலும் மட்ட வருச்சி அம்மன் ஆலயம் பற்றிய தகவல்களும் உண்டு. இதனைத் தவிர அரியாலைப் பிரதேசத்தில் அரியாலைக் கடற்கரை யோரமாக இரண்டு ஐயனார் ஆலயங்கள் இருந்தமை பற்றிய செய்தி பவள விழா மலரில் காணப்படுகின்றது.

## 04. பெரியார்கள்

சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா நூற்றாண்டு காலப் பெருமை கொண்டதாக அமைவதற்கு பெரியார் களும் காரணமாக இருந்துள்ளனர். ஆங்கிலேயர் ஆட்சியின்போது எமது மரபுகள், பழக்கவழக்கங்கள், பண்பாடு, மற்றும சமயம் என்பவற்றைப் பாது காக்கும் நோக்கில் சுதேசிய இயக்க மானது தோற்றம் பெற்றது. அந்த வகையில் அரியாலையின் சுதேசியத் திருநாட் கொண்டாட்ட விழாவினைத் தொடக்கி வைத்த ஆரம்ப கர்த்தாக்க ளாகத் தலைவர்களாக திரு.வி.காசிப் பிள்ளை, திரு. ஆறுமுகம் கதிரவேற் பிள்ளை, மற்றும் திரு. ஆறுமுகம் கனகரத்தினம் ஆகியோரைக் குறிப்பிட முடியும்.

இவர்களைத் தவிர சமயம், கல்வி, மருத்துவம், விளையாட்டு, பொதுச் சேவை, மற்றும் கலை போன்ற அனைத்துத் துறைகளிலும் சிறந்து விளங்கிய பெரியார்கள் பலர் அரியாலையில் வாழ்ந்து இருப்பதும், வாழ்ந்து கொண்டிருப்பதும் இப்பிரதேச சிறப்பை எடுத்துக் காட்டுகின்றது. இவர்கள் தொடர்பான கருத்துக்கள் பவள விழா மலரில் குறிப்பிடப்பட்டுள்ளதால் அதனைத் தவிர்த்துள்ளேன்.

## 05. கட்டிடங்கள்

கட்டுமாணத் துறையில் இருப் பிடங்கள் முதன்மை பெறுகின்றன. தமிழர்களின் தாம் வாழும் சூழல், காலநிலை, சுகாதாரம் மற்றும் கூட்டுக் குடும்ப வாழ்வு என்பவற்றை கருத்திற் கொண்டு வீடுகள் அமைக்கப்பட்டன. குடில், குடிசை, தலைவாசல், என்ற பெயர்களில் வெவ்வேறு அமைப்புக் களுடன் வீடுகள் அமைக்கப்பட்டன.

உயர்ந்தவர்கள் நாற்சார் அமைப்பு வீடுகளை அமைத்திருந்தனர். இவ்வாறான வீடுகள் சில இன்றும் அரியாலைப் பிரதேசத்தில் பராமரிப்புடன் காணப் படுன்றமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் மக்களின் தொழில் முறைக்கு அமைவாக வீடுகள் அமைக்கப்பட்டு இருந்தமையை அவதானிக்க முடிகின்றது. நாற்சார் அமைப்பைத் தொடர்ந்து முன்பக்கம் எதிரேதிரே இரண்டு அறைகளைக் கொண்ட வீடமைப்பு முறை, முன்பக்கம் ஒற்றை அறை கொண்ட வீடமைப்பு முறை என்பன இப்பிரதேசத்தில் காணப்பட்டன. இவற்றிக்கான கதவு நிலைகளும், கதவுகளும் பலம் பொருந்தியதாக அதிக தடிப்பம் உடையதாக அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. மேலும், திராவிட கட்டிட அம்சங்களைத் தாங்கி அரியாலைப் பிரதேசத்தில் பல வீடுகள் காணப்பட்டிருந்த போதும் போர் அனர்த்தங்களினால் முற்றாக அழிந்தும், நவீன மாற்றத்திற்கு உள்வாங்கப்பட்டு மாற்றங்களுக்குள்ளாகி உள்ளமை குறிப்பிடத்தக்கது. (நாற்சார் வீடு படம் 3)


3

## 06. நீர்நிலைகள். (குளங்கள், கேணிகள், கிணறுகள்)

அரியாலைப் பிரதேசத்தில் குளங்களின் கட்டமைப்புக் காணப் படுகின்றது. இவை, வயல்களுக்கு நீரை வழங்கும் வகையில் மதவுகளைக் கொண்டதான அமைப்பு முறையில் குளங்கள் அமைக்கப்பட்டு இருந்தன. இதன் மூலம் நிலத்தடி நீரைப் பேணும் வகையில் இப்பிரதேசத்தில் குளக் கட்டமைப்பு காணப்பட்டிருந்தது. கிழக்கு அரியாலையிலிருந்து அரியாலையின் முடிவு வரையான பிரதேசத்தில் பல குளங்கள் காணப்பட்டிருந்தன. இவை போக்குவரத்துப் பாதையுடன் தொடர்புற்ற வகையில் அமைந்திருந்ததோடு கேணி, கிணறு, சுமைதாங்கி என்பவற்றையும் தன்னகத்தே கொண்டதாக அமைந்திருந்தது. தூரதேசங்களுக்கு செல்வோரின் பயணக் களைப்பையும், குதிரை, மாடு போன்றவற்றின் களைப்பைத் தீர்க்கவும் இவை பயன்படுத்தப்பட்டிருக்க முடியும். இப்பிரதேசத்தில் காணப்படும் குளங்கள் பற்றிய விபரம் வருமாறு

01. முத்துப் பிள்ளையார் ஆலயத்திற்கு அருகில்
02. ஐயனார் ஆலயத்திற்கு அருகில்
03. துரவடி பிள்ளையார் ஆலயத்திற்கு அருகில் கோப்பர் குளம் (படம் 4)
04. கோண்டர் குளம்


4

05. பூம்புகார் பகுதியில் புளியங்குளம்
06. நாவலடிக்கு அண்மையில் கோட்டைக் குளம்
07. மகீபன் குளம்
08. நெடுங்குளம்
09. தபாற் கட்டைச் சந்திக்கு அண்மையில் நீர்நொச்சித்தாழ்வு குளம்

10. மாம்பழம் சந்திக்கு அண்மையில் பிரப்பங்குளம்

11. புங்கன் குளம்

12. காரக்குளம்

13. வண்ணான்குளம்

இவற்றில் சில மழைகாலங்களில் நீர் நிரம்பி குளங்களாக காணப்படுகின்றது. இதனைத் தவிர சிறிய துரவுகளும் கிழக்கு அரியாலைப் பகுதியில் காணப் படுகின்றது. இதனைத தவிர அரியாலை தொடரூந்து கடவைக்கு செல்லும் முன் சீமெந்தினால் கட்டப்பட்ட குள அமைப்பை ஒத்த நீர்நிலை ஒன்று காணப்படுகின்றது. இது கேணியாகவும் இருக்கலாம். மேலும், அரியாலைப் பிரதேசத்தில் உள்ள வடிகாலமைப்பு குளங்கள் இருந்தமையை உறுதி செய்ய போதுமானதாகும். முறையான கட்டமைப்புடன் இது காணப்படு கின்றமை குறிப்பிடத்தக்கதாகும். நீர்நிலைகளில் ஒரு பகுதியான கிணறுகள் என்ற விடயத்தை எடுத்துக் கொண்டால் வன்னிப் பிரதேசத்திற்கு கால்நடையாகச் செல்லும் மக்களின் குடிநீர் தேவையை நிவர்த்தி செய்யும் நோக்கில் பல கிணறுகள் வீதியோரங்களில் அமைக்கப் பட்டு இருந்தன. இவை அதிகமாக இடது கைப் பக்கமாக அமைந்திருக்கின்றது. அவற்றில் அடையாளப்படுத்தப்பட்ட கிணறுகளாக கீழ்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

01. கிழக்கு அரியாலையில் அன்னை வேளாங்கண்ணி ஆலயத்திற்கு அருகாமையில் எதிர்ப்புறத்தே ஒரு கிணறு

02. முத்துவிநாயகர் ஆலயத்திற்கு செல்லும் வீதிக்கருகில் ஒரு கிணறு

03. சித்தி விநாயகர் கோயில் காணியில் உள்ள கிணற்றுக்கு சற்றுத் தொலை வில் ஒரு கிணறு

04. கிழக்கு அரியாலையில் சித்தி விநாயகர் கோயில் காணியில் மக்கள் பாவனை யில் இருக்கும் குடிநீர் கிணறு ஒன்று காணப்படுகின்றது.

05. கோப்பர்குளத்திற்கு அருகாமையில் ஒரு கிணறு காணப்பட்டுள்ளது.

06. நாவலடி கற்றடிப் பகுதியில் ஒரு கிணறு புனரமைக்கப்பட்ட நிலையில் காணப்படுகின்றது.

07. நாவலடிச் செல்லும் வீதியில் ஒரு கிணறு கியூடெக் நிறுவனத்தால் புனரமைக்கப்பட்டது

08. தொடரூந்து கடவை கடந்த பின்னர் நாவலடிக்கு அருகாமையில் ஒரு கிணறு

09. கொட்டுக்கிணறு பிள்ளையார் ஆலயத்திற்கு அண்மையிலும் ஒரு கிணறு காணப்பபட்டுள்ளது.

10. A-9 வீதியில் சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எதிர்புறத்தில் குடிநீர் கிணறு ஒன்று காணப்படுகின்றது.

11. அன்று கேணியடி என்று அழைக்கப் பட்ட அரியாலைச் சந்தியில் கிணறு ஒன்று காணப்படுகின்றது.

12. A-9 வீதியில் நெடுங்குளம் சந்திக்கு அண்மையில் மகிப்பன் குளத்திற்கு அருகாக ஒரு கிணறு பாவனையற்று காணப்பட்டது. அது தற்போது சரஸ்வதி சனசமூக நிலைய நிர்வாகத் தால் புனரமைக்கப்பட்டமை குறிப் பிடத்தக்கது.

13. சின்னக்கிணற்றடி ஒழுங்கை ஆரம்ப மாகும் இடத்தில் ஒரு குடிநீர் கிணறு காணப்பட்டுள்ளதுடன், அதன் எதிரே சுமைதாங்கியும் அமைந் திருந்தது. 2009 இற்குப் பின்னரான வீதி அகலிப்பு நடவடிக்கையின்

போது அது அகற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. கிணறு தற் போதுள்ள கட்டிடப் பொருள் விற்பனையகத்தின் பாவனையில் உள்ளது.

14. புங்கன்குளம் தொடரூந்து கடவைக்கு அருகில் ஒரு குடிநீர் கிணறு காணப் படுகின்றது.

இக் கிணறுகள் அரியாலை வாழ் மக்களின் பண்பாட்டுக் கோலங்களைப் பிரதிபலிக்கின்றது. இவற்றின் அருகில் சுமைதாங்கிளும் அமைக்கப்பட்டிருக்க லாம் என்ற வினா எழுவதற்கு இடமுண்டு

## 07. பாரம்பரிய போக்குவரத்து முறைகள் (வாகனங்கள்)

அடுத்து வாகனங்கள் என்ற விடயத்தை எடுத்துக் கொண்டால் அரியாலைப் பிரதேசத்தில் போக்கு வரத்துத் தேவைகளையும், விவசாயத் தேவைகளையும் நிவர்த்தி செய்யும் நோக்கில் மாட்டு வண்டில்கள் பயன்பாட்டில் இருந்துள்ளன. இவை திருக்கை மாட்டு வண்டில், இரட்டை மாட்டு வண்டில்கள் என்ற பெயர்களால் அழைக்கப்பட்டிருந்தது. திருக்கை மாட்டு வண்டில்கள் ஒற்றை மாட்டினைக் கொண்டதாகக் காணப்பட்டிருந்தது. வண்டில்கள் வைத்திருந்தோர் "வண்டில் கார" என்ற அடைமொழி கொண்டு அழைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத் தக்கதாகும்

கிழக்கு அரியாலை மக்கள் கால்நடையாகவும், வண்டில்கள் மூலமும் தமது பயணத்தைத் தொடர்ந்ததுடன், 1960களின் நடுப்பகுதியில் இலங்கை போக்குவரத்துச் சபை பேரூந்துகள் மூன்று நேர சேவையை ஆற்றியிருந்தது. இதனைத் தவிர மண் ஏற்றும் லொறிகள், உழவு இயந்திரங்கள் என்பன போக்கு வரத்துக்கு உதவியிருந்ததுடன், குறிப்பிட்ட எண்ணிக்கை யானவர்களே ஈருருளிகள் மூலம் பயணங்களை மேற்கொண்டிருந்த னர். சீரற்ற போக்கு வரத்துப் பாதை காணப்பட்ட போதும் 1980களின் நடுப்பகுதியில் தனியாரினால் சிற்றூர்திச் சேவை நடத்தப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## 08. பாவனைப் பொருட்கள்

அரியாலைக் கிராமம் பல்வேறு பாரம்பரிய பாவனைப் பொருட்களை உற்பத்தி செய்தும், பாவனைப்படுத்தியும் வந்துள்ளனர். இப்பாவனைப்பொருட்களை இரண்டு வகையாகக் பிரிக்கலாம்.

1. வீட்டுப் பாவனைப் பொருள்
2. அடுக்களைப் பாவனைப் பொருள்.

### 1. வீட்டுப் பாவனைப் பொருள்

- கிடுகினால் அடைக்கப்பட்ட குப்பைத் தொட்டி
- பிரம்பினாலும் துவரம் தடியாலும் அமைக்கப்பட்ட கோழிக் கரப்பு
- மட்டையினால் அமைக்கப்பட்ட கோழிக்கூடு
- மாட்டுத் தொழுவம்
- மூக்குப் பேணி
- துலா
- இஸ்திரிப் பெட்டி
- துலாபட்டை போன்ற பலவற்றைக் குறிப்பிடலாம்



## 2. அடுக்களைப் பொருட்கள்

- அடுப்புக்கள்
- அடுப்படி
- பிட்டுக்குழல்
- கைவிளக்குமாறு
- பறன்
- திரிகை, அம்பி, ஆட்டுக்கல், உரல் போன்ற பலவற்றைக் குறிப்பிடலாம்.

உதாரணமாக அரியாலை மக்களின் பாவனையில் மூக்குப்பேணி இருந்து வந்துள்ளது. இது சுகாதார முறையில் நீர் பருகுவதற்கு உபயோகிக்கப் பட்டுள்ளது. தண்ணீர் பந்தல்களில் இதன் பயன்பாடு அதிகம். இதனைத் தவிர தண்ணீர் கொண்டு செல்வதற்கும், தண்ணீரை கிணற்றிலிருந்து அள்ளி



இறைப்பதற்கும் பட்டை என்ற பொருள் பயன்பாட்டில் இருந்துள்ளது. இவ்வாறான தனித்தனிப் பொருட்கள் பற்றிக் குறிப்பிட்டு எழுதும்போது இவ்வாக்கம் தனியொரு நூலாக வெளிவரக் கூடிய சாத்தியம் காணப்படுவதால் அவை பற்றிய விளக்கத்தை தவிர்த்துக் கொள்கின்றேன்.

## 09. பாரம்பரிய விளையாட்டுக்கள்

விளையாட்டுக்கள் என்ற விடயத்தை எடுத்துக் கொண்டால் மக்கள் சுகதேகிகளாக வாழ்வதற்கு விளை யாட்டும் பண்பாட்டுக் கோலத்துடன் ஒன்றிணைந்து காணப்படுகின்றது. இக்கால மக்கள் பல்வேறு வீரதீர விளையாட்டுக்களில் ஈடுபட்டு வந்தமை அறியக் கூடியதாக உள்ளது. போர்த் தேங்காய் அடித்தல், பாண்டி, கிட்டிய டித்தல், கயிறு இழுத்தல், வழுக்கு மரம் ஏறல், கெந்தியடித்தல், தலையனைச் சண்டை, முட்டி உடைத்தல், வண்டில் சவாரி, கபடி, கெந்திக்கோடு, மற்றும் வீரதீர விளையாட்டுக்களை விளையாடும் மரபைக் கொண்டதாக காணப் பட்டிருந்தனர்.

## 10. பாரம்பரிய வேலிகள்

அரியாலை வாழ் சுதேச மக்கள் பாரம்பரிய வேலியமைப்பைக் கொண்டு தமது வீட்டு எல்லையை பாதுகாத்து வந்தனர். அந்த வகையில் வேலிகள் பல வகைகளில் அமைக்கப்பட்டிருந்தன. பூவரசம் வேலி, சீமைக்கிளுவை வேலி, முட்கிளுவை வேலி, அலம்பில் வேலி, பனைமட்டை வேலி, கிடுகு வேலி பனையோலை வேலி என்பவற்றைக் குறிப்பிடலாம். இவை இப்பிரதேசத்தில் இன்றும் அவதானிக்க கூடியதாக உள்ளமை அதன் தொன்மையை எடுத்துக் காட்டுகின்றது. இவை சூழலில் குளிர்ச்சியை ஏற்படுத்தியிருந்தது.

## 11. பாரம்பரிய உணவுகள்

அரியாலை வாழ் மக்கள் பாரம் பரிய உணவுகளை சாப்பிட்டு சுகதேகிகளாக வாழ்ந்திருந்தமை குறிப்பிட்டுக் கூற வேண்டிய விடயமாகும். குரக்கன் மற்றும் அரிசிமாவில் பிட்டு, தோசை, இடியப்பம், என்பவற்றுடன், பனை உற்பத்திப் பொருட்களான பனங்கிழங்கு, புழுக் கொடியல், பனாட்டு, பனங்கட்டி, நுங்கு, போன்றவற்றை பயன்படுத்தி வந்தனர். இன்று இப் பொருட்களைப் பயன் படுத்துவோர் குறைவு என்றே கூறலாம். இவ் உள்ளூர் பொருட்களை நாம் மறந்து

விட்டு அதிக விலையில் மேற்கத்தைய உணவுப் பொருட்களையும், உடனடி உணவினையும் (Fast food) நுகர்வது தவிர்க்க முடியதாகி விட்டது.

## 12. பாரம்பரிய சடங்குகள்

அரியாலை வாழ் மக்கள் பாரம்பரிய சடங்கினை முறையாகப் கடைப்பிடித்து வந்தமையை அறியக் கூடியதாக உள்ளது. திருமணம், பூப்புனித நீராட்டு விழா, மரணச்சடங்கு, சரஸ்வதி பூசை, ஏடுதொடக்கல், பல்லுக் கொழுக் கட்டை கொட்டுதல் போன்ற சடங்கு களை நிகழ்த்தி வந்துள்ளதுடன், சமயம் சார்ந்த சடங்கு முறைகளான பாற்செம்பு, காவடி, போன்றவற்றையும் மேற் கொண்டு வந்துள்ளனர். இது இன்றும் சில மாற்றங்களுடன் தொடர்ந்த வண்ணம் உள்ளமை அரியாலையின் தொன்மையை எடுத்துக் காட்டுகின்றது.

## 13. பாரம்பரிய கலைகள்

அரியாலை மண் பாரம்பரிய கலை வடிவங்கள் பேணப்பட்டு வந்துள்ளமையை தகவல்கள் மூலம் அறிய முடிகின்றது. இசை, நாடகம், நடனம், இயல் ஆகிய துறைகளில் சிறந்து விளங்கிய பலர் வாழ்ந்து வந்திருந்தமை இவற்றின் தொன்மையை எடுத்துக் காட்டுகின்றது. எடுத்துக் காட்டாக இசைநாடகத் துறையில் “அரியாலையூர் செல்வம்” சிறப்புப் பெற்றிருந்தார். இதனைத் தவிர சிற்பம், ஓவியம், கட்டிடம் ஆகிய துறைகளிலும் சிறப்புப் பெற்றிருப்பதை அவதானிக்க முடிகின்றது. அதே போன்று ஒவ்வொரு துறையிலும் புகழ்பூத்த கலைஞர்கள் இம்மண்ணில் வாழ்ந்திருப்பது இம்மண்ணின் பெருமையை பறை சாற்றுகின்றது. இது தொடர்பான ஆய்வுகளை முன்னெடுக்கப்பட வேண்டிய தேவையுள்ளது.

## 14. பாரம்பரிய தொழில்கள்

அரியாலை மண் பாரம்பரிய தொழில்கள் பலவற்றைக் கொண்ட ஒரு பிரதேசமாக விளங்கியுள்ளது. இப் பகுதியில் வாழ்ந்த மக்கள் தத்தம் குல வர்ணப் பாகுபாட்டிற்கு அமைய தொழில்களை மேற்கொண்டிருந்தனர். குறிப்பாக விவசாயம். மட்பாண்ட உற்பத்தி, எண்ணெய் உற்பத்தி, பாய் இழைத்தல், கிடுகு பின்னல், இரும்பு ஆலை, நெசவுத் தொழில், பால் விற்றல், கள் உற்பத்தி, மரக்கறி விற்றல் போன்ற பாரம்பரிய தொழில்களை மேற்கொண்டு வந்ததுடன், சில தொழில்கள் இன்றும் செய்யப்பட்டு வருவது தொன்மையை எடுத்துக் காட்டுகின்றது.

## 15. பாரம்பரிய கல்வி முறைமை

அரியாலைப் பிரதேச மக்கள் கல்வியறிவு படைத்தவர்களாக விளங்கி யமைக்குச் சான்றுகள் காணப்படுகின்றது. தமிழரின் குருகுலக் கல்வி முறை, திண்ணைக் கல்வி முறை என்பவற்றோடு யாழ்பாடி காலத்தில் கச்சிக் கணேசைய ரால் பாடசாலை ஒன்று ஆரம்பிக்கப் பட்டு இருந்தமை தொடர்பான தகவல் காணப்படுகின்றது. அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை **1913** இல் ஆரம்பிக்கப்பட்டிருந்தமையும், வி.காசிப் பிள்ளை, ஆ. கனகரத்தினம், ஆ.கதிரவேற் பிள்ளை ஆகியோர் சிறந்த கல்விமான்க ளாக விளங்கியமை கல்வியின் பெருமையை எடுத்துக் காட்டுகின்றது. பெரியவர்களால் ஆரம்ப காலத்தில் மாணவர்களுக்கு கல்வி இலவசமாக போதிக்கப்பட்டமையும் கல்வியின் தொன்மையை எடுத்துக் காட்டுகின்றது.

## 16. பாரம்பரிய உடைகள்

அரியாலை வாழ் மக்கள் பாரம்பரிய உடைகளில் அதிக கவனம் செலுத்தியிருந்தனர். படித்த வர்க்கத்தினரில் ஆண்கள் தலைப்பாகை, வேட்டி, சால்வை அணிந்திருந்ததுடன், பெண்கள் சேலை, மேற்சட்டை போன்ற வற்றை அணிந்திருந்தனர். கணவனை இழந்த பெண்கள் வெள்ளை நிற சேலையை அணியும் வழக்கத்தைக் கொண்டிருந்தனர். இதனைத் தவிர குறுக்குகட்டு, பாவாடை, சட்டை போன்ற உடைகளையும் ஆரம்ப கால சுதேசிகள் அணிந்திருந்தமை பண்பாட்டின் அடையாளமாகக் காணப் படுகின்றது.

## 17. குடும்பப் பெயர்கள்

குடும்பப் பெயர்களும் அரியாலை வாழ் மக்களின் பயன்பாட்டில் பண் பாடாக இருந்து வந்துள்ளது. இது தொழில் முறையாலும், பெயர் ரீதியிலும் ஏற்பட்டதாகும். இது தொடர்பான கட்டுரை சுதேசிய பவள மலரில் வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இது தொடர்பான ஆய்வும் மேற் கொள்ளப்பட வேண்டியது.

## 18. வாழ்க்கை முறை

அரியாலை வாழ் மக்களின் வாழ்க்கை முறையானது கூட்டுக்குடும்ப வாழ்க்கை முறையாக காணப்பட்டது. இதனைத் தவிர தமிழரின் ஏனைய பண்பாட்டுக் கோலங்களான

- சுமைதாங்கி
- ஆவுரஞ்சிக்கல்
- தெருமூடிமண்டபம்
- சங்கடப்படலை
- கல்வெட்டுக்கள்
- நாணயங்கள்
- பழைய பொருட்கள்

போன்றவை உதாரணங்களாக காணப்படுகின்றது.

**சுமைதாங்கி**



தமிழர்களின் பண்பாட்டம் சங்களில் ஒன்றாக சுமைதாங்கி விளங்கு கின்றது. இது மக்கள் பயன்படுத்தும் தெருவோரங்களில் அமைக்கப்பட்டு இருந் தது. தூரதேசத்திலிருந்து சுமைகளைச் சுமந்து கால்நடையாக வருபவர்கள் இளைப்பாறி, தாகம் தீர்த்துச் செல்ல இவை உதவுகின்றது. இச் சுமை தாங்கிகள் அமைக்கப்படும் இடத்திற்கு அருகில் மண்டபங்களோ அல்லது பொதுக் கிணறோ காணப்படும். இவற்றில் சுமை களை வேறு ஒருவரின் உதவியின்றி இறக்கி வைத்து விட்டு அவற்றை உதவியின்றி மீண்டும் எடுத்துச் செல்ல உதவுகின்றது. சுமைதாங்கி ஏறத்தாழ நாலரை அடி உயரமும் ஒன்றரை - இரண்டு அடி தடிப்புக் கொண்ட சுவர்க் கட்டுமானம் போன்று காணப்படும். இது மூன்று வெவ்வேறு மட்டங்களைக் கொண்டதாக காணப்படும்.

எனவே, தமிழர்களிடம் காணப் படும் பண்பாட்டு அம்சங்களை இயன்ற வரையில் பேணி எமது எதிர்கால சந்ததியினர் எமது சுதேசியத்தைப்

பாதுகாத்து தமிழ்ப்பண்பாட்டைப் பேணும் ஒரு சமூகமாக வாழ்ந்து எமது இனத்தின் துயரத்தினை தவிர்த்துக் கொள்ள முடியும்.

உசாத்துணை


1. சமூகவியல் கோட்பாடுகள் - கலாநிதி. நா. சண்முகலிங்கன்.
2. ஈழத்தமிழர் மரபுரிமை அடையா ளங்கள் பேராசிரியர். ப.புஸ்ப ரட்ணம்.
3. இலங்கைத் தமிழர் ஒரு சுருக்க வரலாறு பேராசிரியர். ப.புஸ்ப ரட்ணம்.
4. யாழ்ப்பாணம் தொன்மை வரலாறு - கலாநிதி. சி.க.சிற்றம்பலம்
5. ஆ. முத்துப்பிள்ளையின் யாழ்ப் பாணச் சரித்திரம் 1912 மீள் வாசிப்பு - க.குணராசா
6. அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா பவளவிழா மலர்
7. யாழ் இணையம்
8. யாழ்ப்பாணம் - இணையம்.
9. நேர்காணல்கள்.




# நோய்கள் சம்பந்தமான அறிவுரைகள்



**Dr. Gowry Selvaratnam** MBBS (Jaffna), MD (Colombo),
Senior Lecturer Gr.(I)
Department of Medicine,
Faculty of Medicine,
University of Jaffna.

## சலரோகம்

1. *சலரோக நோயாளர்களே உங்களுடைய இரத்தத்தில் சீனியின் (Sugar) அளவு சாதாரணமாக இருப்பதாக மருத்துவர் கூறினால் அதன் அர்த்தம் என்ன?*

உங்களுடைய உணவுக்கட்டுப்பாடு மற்றும் ஒழுங்கான மருந்து மாத்திரை மூலம் உங்கள் சீனி சாதாரண அளவில் உள்ளது. ஆகவே நீங்கள் தொடர்ந்து மருந்தை உட்கொள்வதுடன் உணவுப் பழக்கத்தை கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும் என்பது தான்.

2. *சலரோக நோயாளர்களுக்கு மாத்தி ரையா, இன்சுலின் ஊசியா சிறந்தது?*

நீங்கள் 30 வயதைத் தாண்டிய பின்பு உங்களுக்கு சலரோகம் ஏற்பட்டிருப்பின் உங்களைப் பரிசோதித்த மருத்துவர் உங்களுக்கு இருக்கும் சலரோகத்தின் தன்மையை அறிந்து கொண்டு மாத்தி ரைக்கு கட்டுப்படக் கூடிய சலரோகம் எனின் மாத்திரைகள் மூலம் கட்டுப் படுத்தலாம். இன்சுலின் தேவையில்லை.

30 வயதைத் தாண்டியவர்களுக்கும் காலப்போக்கில் (10 - 15 வருடங்களின் பின்) மாத்திரைகள் மட்டும் சலரோகத்தைக் கட்டுப்படுத்த போதாம லிருந்தால் இன்சுலின் பரிந்துரைக்கப்படும்.

ஆனால் உங்களின் வயது 30 இற்கு குறைவாயின் உங்களைப் பரிசோதித்த மருத்துவர் இன்சுலின் கட்டாயம் தேவை எனத் தீர்மானித்தால் நீங்கள் இன்சுலின் ஊசி போட வேண்டும்.

3. *சலரோகத்திற்கான மருந்துகளை எடுக்கும் போது எமக்கு அதிக தண்ணீர்த்தாகம் சலம் கூடுதலாகப் போவது அதிக பசி போன்ற அறிகுறிகள் இல்லையாயினும் நாம் இரத்தத்தில் சீனியின் அளவை பரிசோதிக்க வேண்டுமா?*

ஆம் கட்டாயம் சோதிக்க வேண்டும். ஏனெனில் இரத்தத்தில் சீனியின் அளவு சாதாரண அளவை விட சிறிதளவு மட்டும் கூடியிருப்பின் எங்களுக்கு மேற்சொன்ன குணம் குறிகள் ஏற்படாது. ஆனால் இந்த சிறிதளவு கூடியிருக்கும் சீனியினால் கண், இதயம், சிறுநீரகம் மற்றும் இரத்த நாடிகள் பாதிப்படைய தொடங்கி விடும். ஆகவே நாம் கட்டாயம் சோதிக்க வேண்டும்.

4. *எந்த வயதிலிருந்து நாம் எமக்கு சலரோகம் இருக்கிறதா என சோதிக்க வேண்டும்?*

30 வயதிற்கு மேல் யாருக்கும் சலரோகம் ஏற்படலாம். ஆகவே 30 வயதிலிருந்தே ஒவ்வொரு வருடமும் சோதித்துப் பார்ப்பது அவசியம். மேலும் இந்த வயதிற்குக் குறைந்தவரானாலும் அவர்களுக்கு அதிக தாகம் அதிகமாக சலம் போவது கூடிய பசி மற்றம் உடல்

மெலிவு இருப்பின் கட்டாயம் இரத்தத்தில் சீனியின் அளவு பார்க்க வேண்டும்.

## உயர் குருதி அமுக்கம் பற்றி சில கருத்துக்கள்

**1. நாம் கிளினிக்கிற்கு போகும் போது வழமையாக குருதி அமுக்கத்திற்கான மாத்திரைகளை எடுக்க வேண்டுமா?**

ஆம் கட்டாயம் அந்த குறிப்பிட்ட நேரத்திற்கு எடுக்கும் மாத்திரைகளை எடுத்துக் கொண்டு தான் செல்ல வேண்டும். இல்லையேல் உங்கள் இரத்த அழுத்தம் கூடியிருக்க வாய்ப்பாயிருக்கும். அந்தச் சந்தர்ப்பத்தில் உங்களுக்குத் தரப்படும் மருந்துகளைக் கூட்ட வேண்டுமா அல்லது அதே அளவில் தருவதா என ஒரு குழப்பம் ஏற்படும்.

*2. கிளினிக்கிற்குப் போகும் போது உங்களின் இரத்த அழுத்தம் சாதாரணமாக இருப்பதாக வைத்தியர் கூறினால் அதன் அர்த்தம் என்ன?*

உங்கள் இரத்த அழுத்தம் நீங்கள் எடுக்கும் மாத்திரைகளுடனும் உணவில் உப்புக் கட்டுப்பாட்டின் மூலமும் சாதாரணமாக இருக்கின்றது. ஆகவே நீங்கள் வழமையாக எடுக்கும் மாத்திரை களை எடுக்க வேண்டும்.

*3. இரத்த அழுத்தத்திற்கான மாத்திரைகளை தொடர்ந்து பாவிக்க வேண்டுமா?*

ஆம் இரத்த அழுத்தம் தடிமன் காய்ச்சல் போல மாறிப்போகும் நோயல்ல. (சில விதி விலக்குகளைத் தவிர) அனேகமாக அது தொடர்ந்து பாவிக்கத்தான் வேண்டும்.

### சில விதிவிலக்குகளுக்கு உதாரணம்

கர்ப்பிணித்தாய்மார்களுக்கு ஏற்படும் உயர் குருதி அமுக்கம் குழந்தை பிறந்த பின்னர் அனேகமாக சாதாரண நிலைக்கு வந்துவிடும். இதை வைத்தியர் உறுதி செய்த பின் மருந்து தேவைப்படாது.

*4. உயர் குருதி அமுக்கத்திற்கு மருந்து எடுக்காவிட்டால் ஏற்படும் பாதிப்புக்கள் எவை?*

இதயம் கூட வேலை செய்து தடிப்படைவதால் இதய செயலிழப்பும் குருதிக் குழாய்கள் தடிப்படைவதால் பக்கவாதம் (Stroke), மாரடைப்பு (heart attack) சிறுநீரகச் செலிழப்பு போன்ற பாரதூரமான பிரச்சினைகளும் ஏற்படு வதற்கான வாய்ப்புக்கள் அதிகரிக்கும்.

## தொய்வு அல்லது ஆஸ்துமா

*1. ஆஸ்துமா (தொய்வு) நோய்க்கு உறிஞ்சி (inhaler pumps) மருந்துகள் ஏன் பரிந்துரைக்கப்படுகிறது?*

ஆஸ்துமா நோய் உள்ளவர்களுக்கு அவர்களின் காற்று குழாய்கள் சுருங்குவதால் மூச்சு விடக் கஷ்டம் ஏற்படுகிறது. ஆகவே உறிஞ்சி மருந்து பாவிக்கும்போது தேவையான மருந்து நேரடியாக சுவாசக் குழாய்க்குச் செல்வதால்

1) மருந்து வேகமாகச் செயற்படத் தொடங்கும்.

2) அதில் பாவிக்கும் மருந்துக் குளிசை மிக சிறிதளவு மருந்தைக் கொண்டி ருப்பது.

3) மருந்து உடலில் மற்ற பகுதிகளுக்குப் போகாது. ஆகவே மருந்தின் பக்க விளைவுகள் மிகவும் குறைவாகும்.

**2. உறிஞ்சி மருந்துகள் ஆஸ்துமா நோய் கடுமையாக இருப்பவர் களுக்கு மட்டுமா பாவிக்கப்படும்?**

இல்லை மிக குறைந்தளவில் இருந்தாலும் சரி, மிகக் கடுமையாக

இருந்தாலும் சரி இந்த மருந்து பாவிக்கப் படுகின்றது. நோயின் தீவிரத்தைப் பொறுத்து மருந்தின் அளவு பரிந்துரைக் கப்படுகின்றது.

### 3. ஆஸ்துமா நோயை முற்றாகக் குணப்படுத்த முடியுமா?

இந்த நோயை பரிந்துரைக்கும் மருந்துகளை சரியான அளவில் பாவித்து பூரண கட்டுப்பாட்டில் வைத்திருப்பதன் மூலம் நோயற்ற ஒருவர் போல வாழ முடியும்.

மேலும் குழந்தைப் பருவத்தில் ஏற்படும் ஆஸ்துமா நோய் அவர்கள் வளர்ந்து வரும் போது 13 -15 வயதளவில் குறைவடைந்து போகக் கூடும்.

### 3. ஆஸ்துமா நோய் உள்ளவர்கள் விளையாட்டுப் போட்டிகளில் பங்கு பற்றலாமா?

ஆம் நிச்சயமாகப் பங்குபற்றலாம்.

எப்படி?

1) உங்கள் ஆஸ்துமாவை கட்டுப் பாட்டில் வைத்துக் கொள்ளவும்.

2) போட்டியில் 30 நிமிடங்களின் முன் 10 நிமிட ஆயத்த அப்பியாசம் (warming up) செய்யவும்.

3) போட்டி தொடங்க 15 நிமிடத்தின் முன் salbutamoul உறிஞ்சி மருந்தைப் பாவிக்கவும்.

4) மற்றவர்கள் போல விளையாடவும்

## மாரடைப்பு

### 1. மாரடைப்பு நோய் ஏற்படப் பிரதான காரணங்கள் எவை?

1) புகைப்பிடித்தல்

2) உயர் குருதி அமுக்கம்

3) சலரோகம்

4) இரத்தத்தில் அதிக கொலஸ்ரோல் இருத்தல்.

5) இரத்த உறவினர் யாருக்காவது 55 வயதிற்குள் மாரடைப்பு நோய் ஏற்பட்டிருத்தல்.

### 2. மாரடைப்புக்கான குணம் குறிகள் எவை?

நடு நெஞ்சு அல்லது இடது நெஞ்சுப் பகுதியில் அடைப்பு /இறுக்கம் அல்லது அமத்துவது போல நோ ஏற்படுவது. இந்த நோ தாடை இடது தோள் மூட்டு, இடது மேல் அவயவத்திற்கு பரவலாம். அத்துடன் வியர்வை வாந்தி தலைசுற்று மூச்சுக் கஷ்டம் ஏற்படலாம்.

### 3. நீங்கள் வேலை செய்யும்போது மாரடைப்பு ஏற்பட்டால் என்ன செய்ய வேண்டும்?

நாக்கிற்குக் கீழ் வைக்கும் TNT மாத்திரை கைவசம் இருப்பின் அதையும், அஸ்பிறின் மாத்திரை இருப்பின் அதில் ஒன்றையும் பாவித்து நோ 3 - 5 நிமிடத்தில் நின்று விட்டால் நீங்கள் வழமையாக மருந்து தரும் வைத்தியரிடம் தெரிவிக்க வேண்டும்.

மேற்படி நெஞ்சு நோ நீங்கள் கட்டிலில் படுத்திருக்கம் போது அல்லது சும்மா இருக்கும்போது ஏற்பட்டிருப்பின் உடனடியாக வைத்தியசாலைக்கு வர வேண்டும்.

## வலிப்பு நோய்

### 1. ஒருவருக்கு வலிப்பு ஏற்பட்டால் நாம் எவ்வாறு முதலுதவி செய்யலாம்?

1) அவரை இடது பக்கம் திருப்பி பக்கவாட்டில் படுக்க விடுதல்.

2) அவரின் கை கால்களை இறுக்கமாகப் பிடிக்கக் கூடாது.

3) அவருக்கு நிலத்துடன் உரஞ்சி காயம் வராமல் துணிகளை வைத்தல்.

4) வாய் மூலம் எதனையும் பருகக் கொடுக்கக் கூடாது.

5) பற்களுக்கிடையில் கரண்டி, இரும்பு போன்றவற்றை வைக்கக் கூடாது.

6) வலிப்பு 5 நிமிடத்திற்கு மேல் இருந்தால் உடனடியாக வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லுதல்.

அவர் வழமையாக வலிப்பு நோய் ஏற்படும் நோயாளியானாலும் வலிப்பு தொடர்ந்து இருப்பின் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லுதல் வேண்டும்.

## வெள்ளைப்பூரான் கடித்தால் பயமா?

ஆம் பயமே தான்

குறிப்பாக வெள்ளைப்பூரான் மிகவும் விஷம் கூடியது. இது கடித்த இடத்தில் தாங்க முடியாத நோ ஏற்படுவதுடன் அதிக வியர்வை, நெஞ்சு படபடப்பு, மூச்சுச் சிரமம் ஏற்பட்டு பாரதூரமான நிலைக்குப் போகலாம். ஆகவே வைத்தியசாலைக்கு கொண்டு செல்லுதல் வேண்டும்.

## காய்ச்சல்

### 1. காய்ச்சல் ஏற்பட்டால் எந்த சந்தர்ப்பத்தில் நாம் வைத்தியரிடம் செல்ல வேண்டும்?

உங்களுக்கு காய்ச்சலுடன் நடுக்கம், கடுமையான தலையிடி, சத்தி, வயிற்றோட்டம், வயிற்றுவலி, தசைகளில் கடுமையான நோ, வலிப்பு, மாறாட்டம், தலைசுற்று, சலம் அடிக்கடி எரிந்து கொண்டு போதல், நாரி நோ, மூட்டு வீக்கம் மற்றும் இருமலுடன் கூடிய சளி, மூச்சுக் கஷ்டம், காதால் சீழ் வடிதல் போன்ற பிரச்சினை இருப்பின் உடனடியாக வைத்தியரிடம் காண்பிக்க வேண்டும்.

மேற்படி அறிகுறிகள் இல்லாத சந்தர்ப்பத்தில் மூன்று நாட்களுக்கு மேல் காய்ச்சல் இருப்பின் வைத்தியரை நாடவும்.

### 2. ஒருவருக்கு காய்ச்சலின் போது கொடுக்கப்பட்ட மருந்தினை இன்னொருவருக்கு காய்ச்சல் ஏற்படும் போது பாவிக்கலாமா?

கொடுக்கப்பட்ட மருந்து பனடோல் ஆயின் பாவிப்பு கால எல்லை முடியாவிட்டால் பாவிக்கலாம். ஆனால் அவருக்கு கிருமி எதிர்ப்பு மருந்து (Antibiotic) கொடுக்கப்பட்டிருப்பின் அதனை பாவிக்க முடியாது. ஏனெனில் அது அவருக்கு என்னத்தால் ஏற்பட்ட காய்ச்சல் என்ற அனுமானத்துடனும், அவரின் வயது மற்றும் அவர்கள் பாலூட்டுபவரா அல்லது தற்போது கருத்தரிக்கின்றாரா என்பதைப் பொறுத்து வேறுபடும்.

# தமிழர் சுதேசியமாம் சித்த மருத்துவம்



Dr. திருமதி. சியாமா துரைரட்ணம்
வடமாகாண சுதேச மருத்துவ ஆணையாளர்.

அரியாலை வாழ் மக்களால் ஆண்டு தோறும் கொண்டாடப்படும் சுதேசிய திருநாள் கொண்டாட்டமானது இவ்வருடம் நூற்றாண்டாகக் கொண்டாடப்படுவதை நாம் பெருமையுடன் நினைவு கூரலாம். எமது மூதாதையர்கள் எமது மண்ணின் கலை, கலாசாரம், பாரம்பரியம், பண்பாடு, கல்வி, விளையாட்டு ஆகியவற்றின் தனித்துவத்தையும் பெருமையையும் பேணுவதற்கான தீர்க்க தரிசனத்துடன் 1919 ஆம் ஆண்டில் இந்த விழாவை அறிமுகப்படுத்தினார்கள். இன்று இந்த விழாவானது வளர்ச்சியடைந்து எம் மக்களிடையே சிநேகத்துவம், அன்பு, ஒற்றுமை, அர்ப்பணிப்பு என்பவற்றை மேலோங்கச் செய்யும் 100 ஆவது ஆண்டில் பூர்த்தி செய்வதையிட்டு அரியாலை மண்ணில் பிறந்தவர் என்ற வகையில் நான் பெருமை கொள்கின்றேன்.

இத்தகைய பெருமைமிக்க ஒரு சந்தர்ப்பத்தில் தமிழரின் தொன்மையான மருத்துவமான சித்த மருத்துவம் தொடர்பான அறிமுகம் மிகவும் பயனுள்ளதாக அமையும். தமிழர் வாழ்வியலில் சித்தர்களின் பங்கு குறிப்பிடத்தக்கதொன்றாகும். விசேடமாக சித்த மருத்துவத்தில் சித்தர்களின் உடற்பிணி மட்டுமன்றி பிறவிப்பிணி நீக்கத்திற்குமான இம் மருத்துவத்தை வரலாற்றுக்கு முற்பட்ட கால மருத்துவமாக வர்ணிக்கலாம். சித்த மருத்துவமானது இலங்கையைப் பொறுத்த வரை அகத்தியரால் இராவணனுக்கு கற்பிக்கப்பட்டதென்றும் இவை தொடர்பான ஆதாரங்கள் திருகோணமலையிலுள்ள அகத்திய தாபனத்தில் இருப்பதாகக் கூறப்படுகின்றது. அது போன்றே யாழ்ப்பாணத்தை ஆண்ட பரராஜசேகர மன்னன் செகராஜசேகர மன்னன், சிங்கை ஆரியச் சக்கரவர்த்தி ஆகியோரது காலமும் சித்த மருத்துவத்தின் பொற்காலம் எனவும் வர்ணிக்கப் படுகின்றது.

சித்த மருத்துவ துறையின் வளர்ச்சியில் மன்னரது காலத்திற்குப் பின்னதாக தலைசிறந்த சித்த பாரம்பரியர்களால் சித்த மருத்துவம் மக்கள் மயப்படுத்தப்பட்டிருந்தது. வளம்புலியர் பரம்பரை, நாயன்மார்க்கட்டு முறிவு வைத்தியர் பரம்பரை, நந்தீஸ்வரர் பரம்பரை, கரடி பூவலர் பரம்பரை, இன்னாசித்தம்பி பரம்பரை, பெரிய பரிகாரியார் பரம்பரை ஆகியன இவற்றுள் குறிப்பிடப்பட்டு சொல்லத் தக்கனவாகும். எனினும் எமது பிரதேசத்தில் ஏற்பட்ட போர்க்காலச் சூழலும். இடப்பெயர்வுகளும் இப் பாரம்பரியங்களில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியதுடன் இவர்களின் பாரம்பரிய சொத்துக்கள், ஆவணங்கள் என்பன அழிவுறக்கூடிய ஆபத்து நிலையை தோற்றுவித்திருந்தது.

1920 ஆம் ஆண்டுகளில் சித்த மருத்துவத் துறையானது நிறுவனமயப் படுத்தப் பட்டு கல்லூரிகளாகவும், 1980 ஆம் ஆண்டுகளில் பல்கலைக்கழக


அந்தஸ்தினையும், பெற்று புத்துயிர் பெற்றிருந்தது. தற்போது சித்த மருத்துவத்துறையில் பட்டப்படிப்புக்கள், பட்டத்தின் பின் படிப்புக்கள் ஆகியவை மூலம் இத்துறையானது புதிய பரிமாணத் துடன் வளர்ச்சி கண்டு வருகின்றது. இந்த வளர்ச்சிக்கு ஏற்றால் போல் சித்த மருத்துவ வைத்தியசாலைகளும், மூலிகைத் தோட்டங்களும், மருந்து உற்பத்தி நிலையங்களும், சமூக மருந்து பிரிவு களும், மாகாண சபை நிர்வாகத்தின் கீழ் உருவாக்கப்பட்டு சிறப்புடன் இலவச வைத்திய சேவையினை மக்களுக்கு வழங்கி வருகின்றது. மக்களுக்கான நோயாளர் கவனிப்பு சேவை, நோய்த்தடுப்பு சேவை, மற்றும் சுகாதார மேம்பாட்டுச்சேவை, பாரம்பரிய மருத்துவ முறைகளை பாதுகாத்தல், சுதேச மருத்துவ நிலையங்களை ஒழுங்கமைத்தல் ஆகியன மாகாணசபை நிர்வாகத்தினால் ஆற்றப்படும் பிரதான கருமங்களாகக் காணப்படுகின்றன. இதன் மூலம் வருடாந்தம் வடமாகாண நிர்வாகத்தின் கீழ் இரண்டு லட்சத்திற்கும் மேற்பட்ட நோயாளிகள் பயன்பெற்று வருகின்றனர். விசேடமாக எமது மாணவர் சமுதாயத்திற்கான உள நல மேம்பாடு, போஷாக்கு மேம்பாடு, போதைவஸ்திலிருந்து பாதுகாப்பு போன்ற சமூக நலம் சார்ந்த விடயங்களில் சித்த மருத்துவத் துறையின் சமூக மருத்துவப்பிரிவின் பங்களிப்பானது குறிப்பிடத்தக்கதாகக் காணப்படுகின்றது.

இந்த அடிப்படையில் தமிழர் பாரம்பரியமான சித்த மருத்துவமானது தனது பாரம்பரியத்திற்கு அப்பாலே சென்று வினைத்திறன் மிக்க சுகாதார சேவை வழங்கலின் பங்காளராக பரிணமிக்கின்றது என்று கூறினால் அது மிகையாகாது. இருந்த போதிலும் இந்த மருத்துவத் துறையானது நாட்டின் பிரதான சுகாதார துறையுடன் போதியளவு ஒன்றிணைக்கப்பட்டால் மட்டுமே எமது நாட்டின் சுகாதார சவால்களை வென்றெடுக்க முடியும் என்பதுடன், எமது தமிழரின் பாரம்பரியமும் வளர்ச்சியடையும்.

அரியாலை பழங்குடி மக்க ளிடையே சித்த வைத்தியத்துறை சார்ந்த அறிவு பரம்பரையாக செவிவழிப் புலனாகப் பெறப்பட்டு வந்தது. மூலிகை களையும், சரக்குப் பொருட்களையும் கொண்டு வைத்தியம் என்ற பெயரில் பிறந்த குழந்தை முதல் முதியவர் வரை பயன்பெற்றதாக அறியமுடிகின்றது. குறிப்பாக குடும்பத் தலைவிகள் இத்துறைசார்ந்த மரபு ரீதியான கொள்கைகளையும் கோட்பாடுகளையும் விளக்க வல்லவர்களாக விளங்கினார். சித்த வைத்தியத்தை தமது வீட்டு மனைகளில் கைக்கொண்ட யூடிஸ் சிவக்கொழுந்து, கையிலாயத்தார் நடராசா போன்ற வர்களின் சித்த வைத்திய சிறப்பை அவர்கள் மறைந்து பல தசாப்தங்கள் சென்ற போதும் கூட பல முதியவர்களால் இப்போதும் கூட நினைவில் வைத்தி ருக்கக் கூடிய விதத்தில் சித்த வைத்தியம் எமது வாழ்க்கையில் முக்கிய பங்கை வகித்த தன்மையை அறியக் கூடியதாக வுள்ளது.

# புதியன கழிதலும் பழையன புகுத்தலும்

வி. சுதாகர் Bsc. Eng. C.Eng. MIE (S.L)
கௌரவச் செயலாளர்,
சுதேசிய திருநாட் கொண்டாட்ட நூற்றாண்டு விழா 2019



*உங்கள் அனைவருக்கம் இவ் விகாரி புது வருட தினத்தில் இனிய புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். புதுவருடம் என்றாலே பழையன கழிதலும், புதியன புகுத்தலும் என்பதே ஆன்றோர் வாக்கு. பழையன கழிதல் என்பது எம்மால் பாவித்து கழித்து விடப்பட்ட பொருட்களை அப்புறப் படுத்தி புதிய பொருட்களை வாங்கிச் சேர்த்தல் என்பது பொருளாகும்.*

*ஆனால் நான் இங்கு புதிய கழித்துப் பழையன புகுத்துவோம் எனும் தலைப்பில் உங்களுடன் உரையாடலாம் என எண்ணுகின்றேன்.*

*அண்மையில் பேராதனைப் பல்கலைக்கழகத்தில், பொறியியலாளர் களுக்கு விசேட கருத்தரங்கு ஒன்று நடைபெற்றது. அக்கருத்தரங்கில் பிரபல வைத்திய நிபுணர் முன்வைத்த கருத்துக்களில் முக்கியமானவற்றை தங்களுடன் பகிர்ந்து கொள்ளலாம் என எண்ணுகின்றேன்.*

*பல்லாண்டு காலம் நீ நீடூழி வாழ வேண்டும் என வாழ்த்துகின்றோம். பல்லாண்டு என்பதும் நீடூழி என்பதும் எவ்வளவு காலத்தைக் குறிக்கின்றது என்பது அவரவர் பழக்க வழக்கங் களினால் தீர்மானிக்கப்படுகின்றது என எண்ணுகின்றேன். விஞ்ஞான ஆய்வுகளின் படி எமது மூதாதையினரின் சராசரி ஆயட்காலம் 114 வருடங்களாக இருந்தது என்று கணிக்கப்பட்டுள்ளது. தற்கால யுகத்தில் ஆயுட்காலம் 74 வருடங்கள் என விஞ்ஞானிகளின் கருத்து. எதிர்கால இளைஞர்களின் ஆயுட்காலம் 35 வருடங்கள் என விஞ்ஞானிகளின் ஆய்வுகளில் குறிக்கப்பட்டுள்ளது. அதாவது பெற்றோர் இருக்க பிள்ளைகள் மரணிக்கும் யுகமாகும். இது வரப்போகும் யுகமாகும். ஆனால் இவ்யுகம் தற்போதே ஆரம்பிக்கப்பட்டு விட்டது என்பதே எனது கணிப்பாகும். ஏன் இந்த அதிசயத்தக்க காலமாற்றம்! அவை அனைத்தும் எமது பழக்கவழக்கங்க ளினாலேயாகும்.*

*ஆதி யுகத்தில் மனிதன் மிருகங் களை வேட்டையாடியும் இயற்கையான காய்கறிகளை மரத்தில் ஏறிப் பறித்தும் உணவாகக் கொண்டான். மனிதன் வேட்டையாடும்போது அவனும் வேகமாக மிருகங்களைத் துரத்தி ஓடினான். மிருகங்களும் அவனிடமிருந்து தப்பி வேகமாக ஓடின. மனிதன் ஓடும் போது எல்லா சுரப்பிகளும் சரியாக தொழிற்பட்டு சரியான கலோரிகள் கிடைத்தன.*

*அதே போல் அவன் உண்ட இறைச்சியும் மிருகங்கள் வேகமாக ஓடியதால் சகல போஷணைகளும் கிடைக்கப்பெற்ற இறைச்சியையே உண்டான். அதனாலேயே எமது மூதாதையர்கள் நீடூழி காலம் உயிர் வாழ்ந்தனர்.*

*ஆனால் இன்றைய நிலையை எண்ணிப் பாருங்கள். இன்றைய மனிதன் கணினி,* I Phone, T.V, A.C *அறை என அசையாத மனிதனாக இருந்து கொண்டு*

*40* நாட்களில் அபரிமிதமாக வளர்ச்சி யடைந்த அசையாத புரொயிலர் கோழி இறைச்சியை உண்ணும்போது என்ன நடக்கின்றது.

தற்போது மனிதனும் இயங்கு வதில்லை. அதே போல் இறைச்சியை தரும் கோழிகளும் அசைவதில்லை. உணவைப் பொறுத்தவரை அசைவ உணவு ஆண்மைக்கு வலுச் சேர்க்கக் கூடியது. ஆனால் இன்றைக்கோ கோழி இறைச்சி சாப்பிடும் ஆண்களுக்கு ஆண்மைத் தன்மை பறி போகும் நிலை ஏற்படுகின்றது. கறிக் கோழிகளின் கலங்களை வேகமாக வளர வைக்க, அதன் எடையை அதிகரிக்க, ஈஸ்ரோயன் ஊசி போடுகிறார்கள். ஈஸ்ரோயன் என்பது பெண்மைக்கான ஓமோன். அந்த ஓமோனைச் செலுத்திய கோழியைச் சாப்பிட்டால் என்னவாகும். மேலும் அந்தக் கோழி முட்டை போடவும் மாட்டாது. இறைச்சிக்காக மட்டும் வளர்க்கப்படுகின்றது. அதாவது முழுமை யான பெண்மைத் தன்மை கிடையாது. அந்தக் கோழியைச் சாப்பிடும் போது ஆண், பெண் இருவருக்கும் இதனால் பிரச்சினைகளே ஏற்படும்.

அது மட்டுமல்ல வேலைச் சூழல் காரணமாக நீண்ட நேரம் நாற்காலியில் அமர்ந்திருப்பது மற்றும் AC இல் நீண்ட நேரம் அமர்ந்திருப்பது, இறுக்கமான உடைகளை நீண்ட நேரம் அணிந்திருப்பது போன்றவற்றால் உள்உறுப்புக்கள் சூடாகி விடும். இதையெல்லாம் மருத்துவர்கள் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் டெஸ்டோஸ்டீரான் (Testosterone) குறைந்து விட்டது என்று மிக எளிதாக சொல்லி விட்டு சிகிச்சை எடுக்கச் சொல்லிவிடுவார்கள்.

சூரியஒளி உடம்பில் பட்டாலே டெஸ்டோஸ்டீரான் அதிகரிக்க வாய்ப் புண்டு. ஆனால் முழுக் கைச் சட்டை அணிந்து, கூலிங்கிளாஸ் போட்டுக் கொண்டு செல்வது சூரிய ஒளி புகாத இருட்டறையில் நாள் முழுக்க இருப்பது என்பது பழக்கமாகி விட்டது. எண்ணெய்க்குளியல் எடுக்காததும் குழந்தையின்மைக்கு ஒரு காரணம் தான். அதிக சூடுள்ள உடலில் உயிரணுக்கள் நிலைத்து நிற்காது. எள்ளெண்ணைக் குளியல் உடல் சூட்டைச் சமநிலைப் படுத்தி, உயிரணுக்கள் வாழும் சூழலை ஏற்படுத்திக் கொடுக்கும். அன்றைய நாட்களில் சனிக்கிழமைகளில் உடல் முழுவதும் எண்ணெய் தடவி *2 - 3* மணித்தியாலயம் ஊற விட்டு எலுமிச்சை, அரப்பு தேய்த்து முழுக்கு என்பது எமக்கு நினைவுக்கு வருகிறது. ஏன் அவை தொலைந்து போயின நேரமின்மையே அதற்கு காரணமாகும். சமூக மாற்றம் வராமல் மருந்துகளை மட்டும் சாப்பிட்டு பயனில்லை. ஒட்டு மொத்தமாக எமது பாரம்பரியத்தை மீட்டெடுத்தால் தான் எல்லோரும் நலமாக வாழ முடியும்.

## புதியன கழித்து பழையன புகுத்துவோம்

உணவுப்பழக்கம் மட்டுமல்ல எமது செயல்களும் பழமைக்கு திரும்ப வேண்டியது அவசியமாகிறது. எந்த விலங்கினமும் சிரிப்பதில்லை. சிரிப்பு என்பது மனிதர்களுக்கு மட்டுமே இயற்கை கொடுத்த கொடை எனலாம். பணிச்சுமை, கடன் சுமை, நோய், போட்டி, பொறாமை என்று சுற்றிச் சுழலும் பிரச்சினைகளால் மனிதர்கள் பலருக்கு சிரிப்பு என்பதே மறந்து போய்விட்டது.

சிரிக்கக் கற்றுக்கொண்டால் எல்லாப் பிரச்சினைகளுக்கும் தீர்வு கிடைக்கும் என்கிறார்கள் ஆராய்ச்சி யாளர்கள். தினமும் சற்று நேரம் சிரிக்கக்

கற்றுக் கொண்டால் மருத்துவர்களிடம் போக வேண்டிய அவசியம் ஏற்படாது என்பது அவர்களது ஆராய்ச்சியின் முடிவு.

தினமும் 10 நிமிடங்கள் வயிறு குலுங்க சிரித்தால் அட்ரினல் சுரப்பிகள் ஊக்குவிக்கப்படும். அதனால் உடலிடை நோய் எதிர்ப்புச் சக்தி அதிகரிக்கும். மேலும் உடல் சார்ந்த வலிகள் அனைத்தும் பறந்து போய் விடும் என்கிறார்கள் விஞ்ஞானிகள். மேலும் சிரிக்கும்போது மூளையின் அடியிலுள்ள பிட்யூட்டரி சுரப்பிகள் தூண்டப் படுகிறது. இதனால் மூளையில் உள்ள குருதிக் குழாய்கள் தூண்டப்பட்டு மூளையின் அனைத்து பகுதிகளுக்கும் நல்ல குருதிச் சுற்றோட்டம் இடம் பெற்று மூளை புத்துணர்ச்சி பெறுகிறது. நகைச்சுவையாக பேசிக் கொண்டிருந்து விட்டு சாப்பிடச் சென்றால் உணவு சமிபாடு சிறப்பாக நடைபெறுகிறது. அன்றாடம் வாய்விட்டு சிரிப்பவர்களுக்கு குடல் சார்ந்த கோளாறுகள் வராது. குறிப்பாக மலச்சிக்கல் எளிதாக நீங்கி விடும்.

உடலில் அதிக நிறை அதிகரிப்பு ஏற்பட்டு தோற்றமளிப்பவர்களை தற் போது அதிகளவில் காணமுடிகிறது. பெரும்பாலும் இவர்கள் மன அழுத்தத்தால் தவிப்பவர்களாகவே உள்ளனர் என்று ஆய்வு சொல்கின்றன. மன அழுத்தத்தைப் போக்க எதையாவது சாப்பிட்டுக் கொண்டே இருப்பது இவர்களது இயல்பு . அதிகரித்து விட்ட உடல் நிறையைக் குறைக்க சிரிப்பு ஒரு வரப்பிரசாதமாகும்.

நன்றாக சிரித்து கலகலப்பாக இருப்பவர்களுக்கு உடலில் கொழுப்பு சேராது. உடலில் தேவையில்லாத சதை உருவாகாது. மாரடைப்பு இப்போது 30 வயதில் கூட வருகிறது என்கிறது மருத்துவ ஆய்வு. பிரச்சினைகளை எளிதாக சிரித்துக் கொண்டே எதிர் கொண்டால் இதயமும் மகிழ்ச்சியாக இருக்கும். மாரடைப்பு வருவதையும் குறைக்கலாம் என்றும் தெரிவிக்கப் படுகின்றது. “சிரித்தே காரியத்தைச் சாதித்து விடுவான்” என்று சொல்வார்கள். இன்முகமும் சிரித்த அணுகுமுறையும் இருந்தால் எந்த வேலையையும் சாதித்து விடலாம் என்பதே இதன் பொருள். ஆக உடலும் உள்ளமும் இனிதாக இருக்க இப்போதே சிரிக்கத் தொடங்குங்கள். சிரிப்பு வராதவர்கள் நல்ல நகைச்சுவை நடிகர்களின் படங்களைப் பார்த்தால் சிரிப்பு கைவசம் வந்து சேரும்.

இப்போதைய இளைஞர்கள் I Phone இலேயே காலத்தைக் கழிக்கிறார்கள். இளைஞர்கள் எல்லோரும் இணைந்து மைதானத்திற்கு வந்தாலும் கூட, இளைஞர்கள் ஒருவரோடு ஒருவர் அளவளாவி கலகலப்பாகக் கதைப்பதில் நாட்டம் செலுத்துவதில்லை. ஒவ்வொரு இளைஞரும் வெவ்வேறு திக்கிலிருந்து I Phone இல் ஏதோ விளையாடிக் கொண்டிருப்பதை காணலாம். பூங்காக்கள், கடற்கரைகளுக்கு சென்று பார்த்தாலும் இதே நிலை தான்.

Bus அல்லது புகைவண்டியில் தூர பிரயாணம் செய்யும்போது கூட தற்போது பக்கத்தில் இருப்பவருடன் உரையாடுவதில்லை. இளைஞர் மட்டுமல்ல வயோதிபரும் I Phone ஊடாக Message அனுப்புவதும், Internet பார்ப்பதுமே பொழுதுபோக்கு. இதனால் இயற்கை தன்மைகளை இழந்து வருகின்றோம். எமது ஆயுளும் 35 ஆகக் குறைகிறது. புதியன கழித்து பழைய னவை புகுத்தினாலேயே எம் இனத்தை நாம் காக்கலாம்.

அது மட்டுமல்ல இயற்கையாக கடவுள் அருட் கொடையால் கிடைக்கும் நிலத்தடி நீரை மாசுபட வைத்துவிட்டு விலை கொடுத்து போத்தல்களில் அடைத்த நீரை வாங்கி அருந்தி விட்டு சிறுநீரக பிரச்சினைகளுக்கு நாமே ஆளாவதுதான் விசித்திரம்.

பிளாஸ்ரிக் போத்தல்களில் அடைக்கப்பட்ட நீர் பல இடங்களில் தேங்கியிருந்து பல கைகள் ஊடாக பரிமாற்றப்பட்டு வரும் போத்தல்களை வாங்கி அருந்துகின்றோம். பிளாஸ்ரிக் போத்தல்களில் அடைக்கப்பட்ட நீர் சூரிய ஒளியில், வெயிலில் வைக்கப் படுமானால் அவை சிறிது சிறிதாக தாக்கமடைந்து நஞ்சூட்டப்படுகிறது. அவ் நீரை நாம் அருந்தும் போது சிறுநீரகப் பிரச்சினைக்கு முகம் கொடுக்கின்றோம்.

இப்போது அதை உணர்ந்த பலர் Filter வாங்கி பொருத்துகின்றார்கள். தங்களிடம் மிகப்பெரிய Filter இருப்பதை மறந்து. ஆமாம் இறைவனால் இயற்கை யாகக் கொடுக்கப்பட்ட கிணற்று நீரே Filter பண்ணப்பட்டு கிடைக்கும் அருங்கொடையாகும். ஆதலால் கிணற்று நீரை கொதிக்க வைத்து ஆறவிட்டு அருந்துதல் மூலம் நீடூழி காலம் நோயற்ற வாழ்வை வாழலாம்.

புதியன கழித்து பழையன புகுத்தி இனி வரப்போகும் குறுகிய ஆயுளுடைய இருண்ட யுகத்தினை மாற்றியமைத்து நீடூழி காலம் நோயற்ற வாழ்வை வாழ்வோமாக.



# மாம்பழம் சந்தியில் மணியத்தார்



நடராஜா கோகுலதாசன்
கணனி வடிவமைப்பாளர்

அன்று பின்னேரம் 5.00மணி இருக்கும். நான் எனது சுப்பர்கப் மோட்டார் சைக்கிளில் மகாமாரி அம்மன் கோவிலுக்கு போட்டு வந்து கொண்டிருந் தனான். நானும் கொஞ்சம் speed தான், அந்த வேகத்துக்குள்ளே நான் கவனிக் கேலை, மாம்பழம் சந்தியில் மணியம் அண்ணை அங்கும் இங்குமாக நடந்து திரிந்தார். நானும் என்ன ஏதும் புதினமோ எண்டு விடுப்பு கேக்கிறதுக்காக, போன வேகத்தில் மோட்டார் சைக்கிள் பிரேக்கைப் புடிச்சன், அது கிறீச் எண்ட சத்தத்தோட ஒரு பக்கமா திரும்பி நின்றது.


மாம்பழம் சந்தியில் இருக்கிற Bus stand இல் பஸ்சுக்கு காத்துக் கொண்டி ருந்த இரண்டு பெண்டுகள் இந்த மோட்டார் சைக்கிள் பிரேக் சத்தத்தைக் கேட்டு எழும்பி ஓட ஆயத்தம்.

நானும் மெதுவாக மோட்டார் சைக்கிளை உருட்டிக்கொண்டு மணியம் அண்ணைக்கு பக்கத்தில் போய், “அண்ணோய் ஏன் அண்ணை அங்கையும் இங்கையுமாக திரியிறியள்” எண்டு கேட்டன்.

அதுக்கு மணியண்ணை என்னை ஏற இறங்க பார்த்துவிட்டு, இந்த மாம்பழம் சந்தியில் எத்தினை விபத்து நடந்துவிட்டுது, எத்தனை உயிரை கொண்டு போயிட்டுது என்று சொல்லி பெருமூச்சு விட்டார்.

ஓமண்ணை இந்த மாம்பழம் சந்தியில் மட்டுமல்ல, யாழ்ப்பாணத்தில் எல்லா சந்திகளிலையும் யார் சட்ட திட்டங்களை மதிச்சு நடக்கிறாங்கள், எண்டு நான் ஒரு போடு போட மணியண்ணையும் ஓமடா தம்பி, எல்லாருக்கும் இப்ப அவசரம் கண்டியளோ எண்டார்


இந்தச் சந்தியில் இலந்தைக் குளம் ரோட்டாலையோ, நாவலர்வீதியாலையோ வரும்போது, அந்த stop line இல் நிக்கவேணும். எல்லோருக்கும் பஞசி, வடிவான வெள்ளை கோடு, டபிள் லைனா அடிச்சிருக்கிறார்கள். அதுல Break ஐ அமத்தி நிப்பதற்கு எங்கட ஆக்களுக்குப் பஞ்சி. கொழும்பில பாருடா எல்லா சனமும் பொறுமையாய், வீதி ஒழுங்குகளை கடைப்பிடிக்கின்றார்கள். அங்க விபத்துக்கள் குறைவு கண்டியளோ.



இப்படி நாங்கள் கதைச்சுக் கொண்டு இருக்கேக்கை, முருகேசு அண்ணையும் ஆட்டுக்கு குழை வெட்டிக்கொண்டு போனவர் எங்களைக் கண்டிட்டு அவரும் வந்து எங்கட சம்பாசணையில் கலந்து கொண்டார்.

முருகேசு அண்ணையும் நல்லா கதைப்பார், அவர் மாம்பழச் சந்தியை முற்றும் பார்த்துவிட்டு, இதென்ன பெரிய விசயம், உந்த சத்திர சந்தியில், சிக்னல் லைட் போட்டிருக்கிறாங்கள். என்னத் துக்குப் போட்டிருக்கிறாங்கள்? எல்லோ ரும் விபத்து ஏற்படாமல் சந்தியை கடக்கோணும் என்டுதானே, ஆனா எங்கட சனம் அதுல என்ன செய்யுதுகள். சந்தியில் வலப்பக்கம் திரும்போணும் எண்டா இடப்பக்கமாக சிவத்தலைற் எரியும் வரைக்கும் நிண்டுபோட்டு, பச்சை லைற் எரிய சடாரென்று வலப்பக்கமாக திரும்புதுகள். உதுகளுக்கு வலப்பக்கம் திரும்பவேணுமெண்டால், சென்ரர் லைன் பக்கமாக நிக்கவேணும் எண்டு யோசினையே இல்லை. சரியாச் சொன்னாய் எண்டு மணியம் அண்ணை யும், முருகேசண்ணையை ஆமோதித்தார்.


### சிக்னல் லைட் சந்திகளில், திரும்பும் போது சரியான பக்கத்தில் நிற்றல்



ஓமடா நீ சரியாக சொன்னாய் என்று மணியண்ணை ஆமோதித்தார். அதுமட்டுமல்ல நாங்கள் ஒரு வானில் போய்கொண்டிருக்கேக்க, ஒரு வலப்பக்க ஒழுங்கைக்குள் திரும்ப வேண்டு மெண்டால், வலப்பக்கமாக சிக்னல் லைட் போட்டுத் திரும்போணும் எண்டால், பின்னுக்கு இருந்து வாறவன் வேகமாக வலப்பக்கமாமாகவே வாறான். நாங்கள் வலப்பக்கமாக திரும்புவதற்கு சிக்னல் லைட் போட்டு விட்டால் நேராப் போறவன் அங்க இடப்பக்கமாக தனது வாகனத்தை செலுத்த வேணும் கண்டியோ இப்ப உந்த அவசரத்துக் குள்ள யார் உந்த signal களை எல்லாம் கவனிக்கிறார்கள்.


ஓமண்ணை இங்க என்ன பிரச்சினை எண்டால், மித வேகத்தில் வாறதால அவங்களுக்கு தங்களது வேகத்தை கட்டுப்படுத்தி இடப்பக்கம் செலுத்த முடியாமல் போகுது, எண்டு நாங்கள் கூற முருகேசண்ணையும் இதாலதானே இப்ப வாகன விபத்துக்கள் கூட என ஆமோதித்தார்.

### திரும்புவதற்கு சிக்னல் போட்டால் பின்னுக்கு வரும் வாகனம் அடுத்த பக்கத்துக்கு வரவேண்டும்



அதுமட்டுமே over take பண்ணி முந்தும் போது எல்லாரும் வலப்பக்கமாக over take பண்ண வேண்டும், எங்கடையள் இடப்பக்கமாக over take பண்ணுதுகள் எண்டு மணியம் அண்ணை கூறி அலுத்துக்கொண்டார்.

**வலதுபக்கமாக over take பண்ணவேண்டும்**




இது எல்லாத்துக்கும் மேலாக மித வேகத்தைப் பின்பற்றினால் விபத்துக்களிலிருந்து தப்பித்து எமது உயிர்களைக் காக்கலாம்.

மணியண்ணையும், முருகேசண்ணையும் இப்படி சட்டதிட்டங்களை சொல்லிக் கொண்டிருக்கேக்க, நானும் அதுக்க மூக்கை நுழைச்சு, இந்த மஞ்சள் கோட்டில், வீதியை மக்கள் கடக்கும் போது தங்கட கையை உயர்த்தி, வாகன சாரதிகளுக்கு, நிப்பாட்டுங்கோ என்று சைகை காட்டிக்கொண்டுதான். கடக்க வேணும் என்று நான் கூற, மணியம் அண்ணையும் ஓமடா இப்ப எங்கட சாரதிமார் எல்லாரும் மிக வேகமாக செல்லவேணும் என்று நினைக்கிறதால, மஞ்சள் கோட்டில் நடந்து கடக்கிற சனங்களையும் அவை கவனிக்கிறேலை. மஞ்சள் கோட்டிலை சனம் கால் வைக்கத் தொடங்கினா எல்லா வாகனமும் நிப்பாட்டியே ஆகோணும் என்று இப்பத்தய சாரதிகளுக்குத் தெரியாது என திட்டினார்கள்.

இதுகளை நாங்கள் 3 பேரும் கதைச்சு என்ன பயன் இதுகளை மக்களுக்கு விளங்கப்படுத்த வேண்டும். ஓமண்ணை அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட நூற்றாண்டு விழா மலருக்கூடாக இதுகளை மக்களுக்கு தெரியப்படுத்துவம் என்று கூறி, ஏதோ விவாத மேடையில் கலந்துகொண்ட சந்தோசம் போல மூவரும் கலைந்து சென்றோம்.



# பாடப்புத்தகங்கள் எழுதி அரியாலை மண்ணுக்குப் பெருமை சேர்த்த பேராசான்கள்



எஸ். சி. செல்வராசா J.P
ஓய்வுநிலை உத்தியோகத்தர்
இலங்கை வங்கி

*யாழ்ப்பாண மாநகர எல்லைக்குள் இருக்கும் கிராமங்களில் மிகப் பெரிய கிராமம் அரியாலைக் கிராமம் ஆகும். இந்தக் கிராமத்திற்குப் பெரும் சிறப்பு உண்டு. யாழ்ப்பாண மாநகர சபை, நல்லூர் பிரதேச சபை ஆகிய உள்ளூராட்சி சபைகளை உள்ளடக்கிய கிராமம் இதுவாகும். மேலும் யாழ்ப்பாண மாவட்டத்தைப் பரிபாலனம் செய்யும் மாவட்டச் செயலகம் இக்கிராமத்திற் குள்ளேயே அமைந்திருக்கின்றது. இக் கிராமத்தை மூன்று பெரும் பிரிவுகளாக முன்னர் அமைத்தனர். அது இன்றும் நிலைத்திருக்கின்றது. அவையாவன கிழக்கு, மத்தி, மேற்கு ஆகியனவாகும். கிழக்குப் பரிவானது பரந்த நெல் வயல்களையும், மணற்றிடர்களையம், தென்னம், பனந் தோப்புக்களையும் கொண்டது. இங்கு மிகக் குறைவான மக்களே வாழ்ந்து வருகிறார்கள். மத்தியிலும், மேற்கிலும் கூடுதலான மக்கள் செறிந்து வாழ்ந்து வருகின்றார்கள். இவர்களில் பெரும் பாலானவர்களுக்கு கிழக்குப் பகுதியில் நெல் வயற் பரப்புக்கள், காணிகள் சொந்தமாக உள்ளன. ஆரம்பகால மக்கள் விவசாயம், குடிசைத் தொழில்களை நம்பி வாழ்ந்தவர்கள் ஆவர்.*

*காலப்போக்கில் இம்மண்ணில் வாழ்ந்த மக்களின் பரம்பரையினர் கல்வியில் புகழ் மிக்கவர்களாக மாறினார்கள். ஸ்ரீமான். ஆ. கனகரத்தினம் அவர்கள் இலங்கை சட்ட நிரூபன சபை அங்கத்துவம் பெற்றதும் சுதந்திர இலங்கையின் முதலாவது பாராளு மன்றத்தில் ஸ்ரீமான் க. சிற்றம்பலம் அவர்கள் தபால் தந்தி அமைச்சுப் பொறுப் பேற்றதும் குறிப் பிடத்தக்கதாகும்.*

*மனநோய் மருத்துவம், மகப் பேற்று மருத்துவம், பொது மருத்துவம் ஆகிய துறைகளில் உயர்நிலை மருத்து வர்களாகவும், பொறியியல், தொழில் நுட்பத்துறை விற்பனர்களாகவும், கணக்காளர்களாகவும், நீதித்துறை சட்ட நிபுணர்களாகவும் அரச திணைக்களங்களை வழிநடத்தும் உயர் நிலை அதிகாரி களாகவும் இருந்துள்ளார்கள் என்பதும் தற்போதும் அவ்வாறான பதவிகளில் இருந்து வருவதும் நாம் அறிந்தவையே. மேலும் சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளின் அரச உயர் பதவிகளை அலங்கரித்த பெரியார்களும் எம் அரியாலை மண்ணில் வாழ்ந்துள்ளார்கள். அத்தனை சிறப்பும் புகழும் பெற்ற அரியாலை மண்ணின் கல்விக் களத்தில் பேராசான்களாகத் திகழ்ந்தவர்களும் தம் கல்விச் சிறப்பினை மற்றவர்களும் நுகர்ந்து உன்னத நிலையடைய வேண்டுமென்பதற்காக பாடநூல்களை எழுதி வெளியிட்டு எமது அரியாலை*

மண்ணிற்கு பெருமை சேர்த்துள்ளார்கள். அத்தகைய பேராசான்களை இச்சுதேசிய திருநாளின் நூற்றாண்டுக் காலத்தில் நினைவு கூறுவதோடு அரியாலை மண்ணின் வரலாற்றுப் பதிவில் அவர்களை எதிர்காலமும் அறிந்து கொள்ளும் வகை செய்வது அவசிய மானதாகும்.

1970 ஆம் ஆண்டுக்கு முன்னரான காலப்பகுதியில் பாடசாலைகளை அரசாங்கம் முழுமையாகப் பொறுப் பேற்கும் வரை பாடசாலைகள் சைவ வித்தியா விருத்திச் சங்கம், கத்தோலிக்கத் திருச்சபை, அமெரிக்க மிஷனறி போன்ற நிறுவனங்களின் பரிபாலனத்தின் கீழும் ஒரு சில பாடசாலைகள் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழும் இயங்கி வந்தன. அப்பொழுதெல்லாம் பாடநூல்கள் யாவும் அவ்வவ் துறைசார் பேராசான்க ளால் எழுதி வெளியீடு செய்யப்பட்டு வந்தன. அந்த வகையில் கணிதம், பூமி சாஸ்திரம், குடியியல் ஆகிய துறைசார் பாட நூல்களை அரியாலையைச் சேர்ந்த பேராசான்கள் சிலர் எழுதி வெளி யிட்டார்கள். அவர்களால் வெளியிடப் பட்ட இந்நூல்கள் இலங்கை பூராகவும் தமிழ்மொழியூடான பாடநூல்களாக பின்பற்றப்பட்டு வந்தன. அவ்வாறாக பாடநூல்கள் வெளியிட்ட நான்கு பேராசான்கள் பற்றி இங்கு நோக்குவோம்.

## 1) ஆறுமுகம் சோமசுந்தரம் அவர்கள் எழுதிய பாடநூல்கள்

இவர் சித்தி விநாயகர் ஆலயச் சூழலில் வாழ்ந்தவர். பார்ப்பதற்கு மிகவும் கம்பீரமான தோற்றங் கொண்ட இவர் ஏழை மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக இலங்கை சட்ட நிரூபண சபை உறுப்பினராக இருந்த ஸ்ரீமான் கனகரத்தினம் அவர்கள் முயற்சியின் பயனாக எம் அரியாலைக் கிராமத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்ட அரசாங்க பாடசாலையான ஸ்ரான்லி மத்திய கல்லூரியின் (யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தின்) அதிபராக நியமிக்கப்பட்டார். அக்கல்லூரியின் முழு வளர்ச்சிக்காகப் பாடுபட்டதுடன் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து மேற்படிப்பை மேற்கொள்ள வரும் ஏழைச் சிறுவர்கள் தங்கியிருந்து கல்வி கற்பதற்கான விடுதி வசதியை ஏற்படுத்தி அவர்களுக்கு ஊக்கமளித்ததோடு எம் அரியாலைக் கிராமத்திலிருந்து தூர இடங்களிலுள்ள கத்தோலிக்க பாட சாலைகளில் கூடிய நிதி செலுத்தி கற்று வந்த மாணவர்களை ஸ்ரான்லிக் கல்லூரியில் உள்ளீர்ப்புச் செய்து அவர்களது கல்வியிலும் அக்கறை செலுத்தி வந்த பன்முக ஆளுமை கொண்ட அதிபராகச் செயற்பட்டவர். இப்பேராசான் கணித பாடத்தில் பெரும் புலமை மிக்கவராக விளங்கிய காரணத்தால் பாடி கணிதம் (எண்கணிதம்), அட்சர கணிதம், கேத்திர கணிதம் ஆகிய மூன்று கணித நூல்களைத் தமிழ் மொழியிலும், ஆங்கில மொழியிலும் ஆக்கித் தந்தவர். இவரால் எழுதி வெளியீடு செய்யப்பட்ட இந்நூல்கள் இலங்கையின் எல்லாப் பாகத்திலும் பாடநூலாகக் கொள்ளப் பட்டது. இப்பெரியாரைக் கௌரவிக்கும் முகமாக இப்பாடசாலையில் இவரது பெயரால் சோமசுந்தரம் இல்லம் இணைக்கப்பட்டது. அது இன்று வரை இப்பாடசாலையில் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

## 2) சின்னையா பொன்னம்பலம் அவர்கள் எழுதிய பாடநூல்

இவரும் அரியாலை மத்தியில் சித்தி விநாயகர் ஆலயச் சூழலில் வாழ்ந்து வந்தவர். ஆன்மீகச் செயற்பாடுகளில் ஈடுபாடு கொண்ட இவர் அரியாலை சித்தி விநாயகர் ஆலயத் திருவிழாக்களின் போது தேவாரப் பாடல்கள் இசைப்ப தோடு, ஆன்மீகச் சொற்பொழிவுகள்

நிகழ்த்தியும் வந்தவர். மேலும் தமது இல்லத்தில் சத்தியசாயி பாபாவின் பெயரால்சமித்தி அமைத்து வாரந்தோறும், சாயி பாபாவின் விசேட தினங்களிலும் பிரார்த்தனைகள் செய்து வந்தமையோடு இந்தியாவில் புட்டபர்த்தி நகருக்குச் சென்று சத்தியசாயி பாபாவிடம் நேரில் ஆசியும் பெற்றவர். யாழ்ப்பாணத்தில் இருக்கும் பிரபல பாடசாலைகளில் கலைப் பாடத்தினைப் போதித்து வந்த இப்பேராசான் பூமி சாஸ்திரப் பாடம் கற்பிப்பதில் சிறப்புடையவராக விளங்கியவர். இவர் அக்காலப்பரப்பில் ஆறாம் வகுப்புத் தொடக்கம் உயர்தர வகுப்புக்கள் வரை பூமி சாஸ்திரப் பாடநூலை எழுதி வெளியிட்டவர். இவரது நூல் தமிழ் மாணவர்களிடையே பிரபல்யம் பெற்ற நூலாக விளங்கியது. அரியாலை மக்களின் சுதேசிய திருநாட் கொண்டாட்ட நிகழ்வுகளில் முன்னின்று உழைத்த இவர் மிக அண்மைக்காலம் வரை வாழ்ந்த ஒருவர் ஆவார்.

### 3) அருளம்பலம் விஸ்வநாதன் எழுதிய பாடநூல்

யாழ்ப்பாணத்தில் கத்தோலிக்கப் பாடசாலைகளும் அமெரிக்க மிஷனரிப் பாடசாலைகளும் மிக வேகமாக வளர்ச்சியடைந்ததன் மூலம் கிறிஸ்தவ மதம் முன்னிலை பெற்று வந்த காலத்தில் சைவ மதத்தை வளர்க்கும் நோக்கில் இந்துப் பாடசாலைகளை வளர்ப்பதில் முன்னின்று உழைத்த பெருமகனான அருளம்பலம் அவர்களின் மகனே விஸ்வநாதன் அவர்கள். அரியாலை சித்தி விநாயகர் ஆலயம், அரியாலை சிவன் ஆலயம், அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாசாலை ஆகியவற்றை முன்னின்று பரிபாலனம் செய்துவந்த விஸ்வநாதன் அரியாலை மத்தியில் பிறந்த போதும் இவர் வாழ்விடமாகக் கொண்டது அரியாலை மேற்கில் அமைந்துள்ள யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்திற்கு அண்மையிலாகும். விஸ்வநாதன் அவர்கள் சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் ஆசிரியராகப் பணியாற்றிய போதும் அரசியலில் முழுமையாகத் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர்.

இடது சாரிக் கொள்கையை கொண்ட இவர்கலாநிதி என். எம்.பெரேரா, கொல்வின் ஆர்.டி.சில்வா போன்ற சிங்களத் தலைவர்களுடனும் அரியாலையைச் சேர்ந்த அமரர்களாகிய சி. குகதாசன் தோழர் தர்மலிங்கம் போன்ற உள்ளூர் தலைவர்களையும் இணைத்துக் கொண்டு யாழ்ப்பாணத்தில் ஸ்ரீலங்கா சமசமாசக் கட்சியின் கொள்கையைப் பரப்புவதில் முன்னின்று உழைத்த கொள்கை வாதியாவார்.

சிறந்த கல்விப் பாரம்பரியத்தில் பிறந்த இவர் பொருளியல், குடியியல் போன்ற நூல்களை வெளியிட்டு தமிழ் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு பெரிதும் உழைத்த ஆசானாவார்.

### 4) பண்டிதர் சி. இராசையா அவர்கள்

அரியாலையில் சைவத்தையும், தமிழையும் வளர்ப்பதில் முன்னின்று உழைத்த பெரியாராவார். அரியாலை சித்திவிநாயகர் ஆலயத்தில் நீண்ட காலமாக புராணபடலப் பாராயணம் செய்வதில்முன்னின்று தொண்டாற்றியவர். பாடசாலை அதிபராக பணிபுரிந்த இவர் தமிழ்மொழி, தமிழ் இலக்கியம் ஆகியவற்றில் பாண்டித்தியமுடையவர். இதனால் கம்பராமாயணத்துக்கு விளக்க தொகுப்பு நூல் வெளியிட்டு பலரதும் பாராட்டைப் பெற்றவராவார்.

இப்பேராசான்கள் நால்வரையும் அரியாலை சுதேசியத்தின் நூற்றாண்டு விழாவில் நினைவு கூர்வது சாலவே பொருத்தமானதாகும்.

# எமது உணர்வுகள்



தாமோதரம்பிள்ளை தியாகசீலன்
(லண்டன் -செல்வன்)

கடந்த நூறு வருடங்களாக தொடர்ந்து ஒரு பெருவிழாவை தமிழ்ப் புத்தாண்டில் கொண்டாடும் ஊர் இலங்கையில் நம் அரியாலை ஊர் மட்டும் தான். இவ் அழகிய தருணத்தில் இவ் விழாவை ஆரம்பித்து வைத்தவர் களையும் இவ்வளவு காலமாக மிகச் சிறப்பாக நடாத்தி வரும் அனைவரையும் நன்றியுடனும் மன மகிழ்வுடனும் நினைவு கொள்வோம்.

எமது ஊரின் பெருமையை உலகறியச் செய்த பெருமை புலம் பெயர் நம் ஊர் மக்களின் ஊர்ப்பற்றாகும். தாம் வாழும் நாடுகளில் விழாக்களிலும், கொண்டாட்டங்களிலும் ஒருவரை யொருவர் சந்தித்துக் கொள்ளும்போதும் எமது ஊர் பற்றியும் தாம் அங்கு வாழ்ந்த வாழ்க்கையையும் மிகவும் பூரிப்புடனும் இன்ப நினைவாக பகிர்ந்து கொள்வதும் ஊரின் வளர்ச்சிக்கும், கொண்டாட்டங் களுக்கும் தம்மால் இயன்ற உதவி செய்வதும் மிகவும் சந்தோசம் அளிக்கும் விடயமாகும்.

நாம் அரியாலையில் வாழ்ந்த காலத்தில் விழாக்களில் போட்டிகளில் பங்குபற்றிய நினைவுகள். விடிய விடிய நாடகங்கள் இசை நிகழ்ச்சிகளை கண்டு கழித்த இன்பவுணர்வுகள் இன்று கூட பசுமையான நினைவுகளாக எமது உள்ளக் கிழியில் இடம் பெற்றுள்ளது. எமது அரியாலை நீர்நொச்சித்தாழ்வு சித்தி விநாயகரது அருள்திறனும் அக்கோவிலில் உள்ள வாகனங்களின் தத்துரூபமான தன்மையும் இன்றும் கூட எமது உள்ளத்தில் நிலைத்துள்ளது. சிவன்கோவில் வேட்டைத் திருவிழாவுக்காக நாடக கலைஞர் I.S. சண்முகநாதன் அவர்களிடம் கோவில் வடக்கு வீதியில் பெற்ற பயிற்சியையும் மறக்கமுடியுமா? அரியாலை மண்ணுக்கு பல விதமான சிறப்புகள் உண்டு. அமைதியான வாழ்வு, மற்றவர்களுக்கு தீங்கு செய்யாத வாழ்க்கைமுறை, மற்றவர்களுடன் இணைந்து வாழும் இயல்பு போன்ற பண்புகளை நாம் கொண்டிருப்பதால் புலம்பெயர்ந்த நிலையிலும் அந்நாடுகளில் இணைந்து வாழக்கூடிய வாய்ப்பை பெற்றுள்ளோம். இவற்றுக்கெல்லாம் எமது சமுதாயத்தின் நல்நோக்கு கொண்ட சமுதாய கட்டமைப்பே காரணமாகும். அதை நாம் பேணிப்பாதுகாக்கவேண்டும். அதற்கான பொறுப்பை இளம் சந்ததி யினர் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

நம் நாட்டில் இடம்பெற்ற அசாதாரண சூழ்நிலை நிலவிய காலத்திலும் நம் இளஞ்சந்ததியினர் தாயகம் சென்றுவர முடியாத அவலநிலை இருந்த நேரத்திலும் நம் ஊர் பற்றியும், விழாக்கள் பற்றியும் முக்கியமாக நம் ஊர் மக்கள் அனைவரும் ஒன்று கூடி கொண் டாடும் சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா பற்றியும் எடுத்துக் கூறி வரும் நம்மவர்கள் இன்றைய சூழ்நிலையில் அவர்களை அங்கு அழைத்து இது போன்ற விழாக்களில் பங்குபற்ற சந்தர்ப் பம் அளிக்க வேண்டியது ஒவ்வொருவரது கடமையாகும். நாம் அரியாலை ஊர் மக்கள் என்பதில் பெருமை கொள்வோம்.


# சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவின் எழுச்சி
## சுதேசியத்தின் எழுச்சி



திரு. சின்னத்துரை லோகதாஸ்
குகன் வீதி, அரியாலை

*எமது முன்னோர்கள் சுதேசியத்தின் பால் கொண்ட பற்றுக் காரணமாக இன்றைக்கு நூறு ஆண்டுகளுக்கு முன்னர் பெருந்தலைவர் ஆ. கதிவேலு போன்ற பெருமக்கள் **1919** ஆம் ஆண்டு எமது அரியாலை ஊரின் மையப் பகுதியில் சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவாக ஆலம் விழுதாக விதையிட்டார்கள். சுதேசிய திருநாளை தமிழர்களின் புதுவருடப் பிறப்பன்று கொண்டாடும் முகமாக அந்த நாளை தேர்ந்தெடுத்து தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டு, நாடகம், கலைநிகழ்வுகள் என்று கொண்டாடு வதற்கு ஏற்றாற்போல் நிகழ்வுகளை ஏற்பாடு செய்து அந்நிகழ்வுகள் ஒரு களியாட்ட நிகழ்வு அல்லாமல் அரியாலை வாழ் மக்களை சுதேசியத்தின் பால் ஈர்க்கும் முகமாக மக்களிடையே பாரம்பரிய விழுமியங்களுக்கு ஏற்ப போட்டிகளை ஒழுங்கு செய்து வெற்றி பெறுவோருக்கு புது வருடப்பிறப்பன்று பகல் நேர விளையாட்டு நிகழ்வோடு இரவு கலை நிகழ்ச்சிகளை கொண்டாடி பரிசில்களை வழங்கி கௌரவித்தார்கள். இதன் பலனான எமது முன்னோர்களின் தூரநோக்கு, சிந்தனையின் பலனாக மக்களிடையே சுதேசிய கொண்டாட்ட விழாவில் பற்றை ஏற்படுத்தி இளைஞர் முதல் பெரியோர் வரை பெரும் ஆர்வம் கொள்ள வைத்தார்கள். இதன் காரணமாக படிப்படியாக பெரு விழாவாகக் கொண்டாடப்பட்டு அரியாலை வாழ் மக்களை ஒரு குடையின் கீழ் ஒன்று படுத்தியது. நாட்டில் நடந்த கோர யுத்தம் எமது சுதேசிய விழாவையும் விட்டு வைக்கவில்லை. அகோர யுத்த சூழலிலும் எமது சதேசியத்தில பற்றுக் கொண்ட பெரியோர் முதல் இளைஞர்கள் வரை அது ஆரம்பித்த நோக்கத்தில் இருந்து தடம் மாறாமல் எவ்வளவோ கஸ்டங்களுக்கு மத்தியிலும் கொண்டாடி வந்தனர். பின் நாளில் சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவிற்கு என்று தனியான யாப்பு தயாரிக்கப்பட்டு அரியாலை கிராமத்தில் அமைந்துள்ள சனசமூக நிலையங்களையும், சுதேசிய திருநாட் கொண்டாட்டங்களிற்குள் உள் ஈர்த்து அவர்களுக்கும் சுதேசியத்தின் பால் ஈர்ப்பை ஏற்படுத்தினர். இப்படியாக இதன் வளர்ச்சி ஆலமர விருட்சமாக வளர்ந்து கிளை பரப்பி இன்று நூறாவது ஆண்டில் கால் பதித்து நிற்கின்றது. இன்று அரியாலை கிராமத்தில் விளையாட்டு, நாடகம், கலைத்துறைகளில் புகழின் உச்சியில் இருப்பவர்களின் ஆரம்ப புள்ளியாக இருந்தது என்றால் அது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவில் நடந்த போட்டிகளில் பெற்ற அனுபவத்தின் பால் வந்தது. யாழ் மாவட்டத்திலேயே ஒரு கிராமம் நூறாவது ஆண்டாக ஒரு விழாவை கொண்டாடுகிறது. வாழையடி வாழையாக வந்த பெரியோர் முதல் துடிப்புள்ள இளைஞர்களின் பங்களிப்பே ஆகும்.*

# பிரித்தானியாவில் அரியாலை மக்கள்



த. செல்வரத்தினம் Dip in Com. ASCA (U.K)

"திரை கடல் ஓடியும் திரவியம் தேடு" என்பதற்கிணங்க இலங்கைத் தமிழ் மக்கள் பல்வேறு நாடுகளுக்குப் புலம் பெயர்ந்து சென்றுள்ளார்கள். அவ்வாறே அரியாலை மக்களும் வேலை நிமித்த மாகவும் வியாபாரம் சம்பந்தமாகவும் பிரித்தானியா போன்ற மேலை நாட்டுக்குச் சென்றுள்ளார்கள். இலங்கையைப் பொறுத்தவரை 1983ஆம் ஆண்டு நடந்த "கறுப்பு ஜூலை" என்னும் இனப்படு கொலையை தொடர்ந்து பிரித்தானியா போன்ற மேல் நாடுகளுக்குப் பெருவாரியாகப் புலம்பெயர்ந்துள்ளார்கள். அவர்களுள் கணிசமான அரியாலை மக்களும் இச் சந்தர்ப்பத்தைப் பயன் படுத்தியுள்ளார்கள்.

## பிறன்ற் தமிழ் சங்கம்

பிரித்தானியாவுக்குச் சென்ற அரியாலை மக்கள்தாங்கள் அரியாலையில் சித்திரை வருடப்பிறப்பன்று வருடா வருடம் நடாத்தும் சுதேசிய தினக் கொண்டாட்ட விழாவை இழந்திருப்பதை உணர்ந்தார்கள். இவ்விழப்பை நிவர்த்தி செய்யும் பொருட்டு அமரர் கந்தையா சோதிநாதன் அவர்கள் 1979ஆம் ஆண்டில் அரியாலை மக்கள் சிலரைக்கூட்டி ஒரு தமிழ் சங்கத்தை அமைத்து 1980ஆம் ஆண்டு அமரர் மயிலு ஜெயரத்தினம் அவர்கள் தலைமையில் London இல் உள்ள Willesden என்னுமிடத்திலுள்ள Anson என்னும் மண்டபத்தில் தமிழ் கலாசார நிகழ்வுகளைக் கொண்டாடி னார்கள். இந்நிகழ்வில் நானும் கலந்து கொண்டேன். பெரும்பாலான அரியாலை மக்கள் பிறன்ற் (Brent) என்று அழைக்கப் படும் மாநகரசபையில் வதிந்த தன்மை யால் இச்சங்கத்தை பிறன்ற் தமிழ் சங்கம் என்று பெயர் இட்டு பதிவு செய்துள்ளார்கள். இச்சங்கத்தின் கொடியின் இலச்சனையாக அரியாலை யில் உப யோகித்த மஞ்சல் நிறத்தில் அதே நந்தியைப் பாவனையில் வைத்திருக்கின் றார்கள் என்றால் என்னே அவர்களின் அரியாலை மண்பற்று என்பதனை ஊகித்துக்கொள்ளுங்கள். இச்சங்கம் வருடாவருடம் தமது உத்தியோகத் தவர்களை ஜனநாயக முறைப்படி தெரிவு செய்வார்கள். அதன் விபரம் இக் கட்டுரையின் இறுதியில் இணைக்கப் பட்டுள்ளது. திரு. வைத்திலிங்கம் கணேசநாதன் அவர்கள் தனது சொந்த வீட்டு விலாசத்தை சங்கத்தின் விலாசமாக இடம் அளித்ததுடன் இக்கட்டுரை எழுதுவதற்கு வேண்டிய ஆதாரங்களைச் சேகரித்து உதவியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## இச்சங்கம் செய்யும் சேவைகள்

1) வருடாவருடம் சித்திரை தமிழ் வருடப்பிறப்பை தமிழ் கலாச்சாரப்படி முத்தமிழ் விழா கொண்டாடுவார்கள். (இலங்கையிலுள்ளவாறு இத்தினம் விடுமுறையில்லாத படியால் அத்

தினத்தை அண்டிய சனி / ஞாயிறு நாட்களில்தான் இவ்விழா நடைபெறும்.)

2) கோடைகாலங்களில் வருடாவருடம் மெய்வல்லுனர் போட்டி நடாத்துவார்கள் மூன்று வயது பாலகர் தொடக்கம் அறுபது வயதுக்கு மேற்பட்ட முதியவர்கள் வரை பங்கு பற்றி குது/கலிப்பார்கள்

3) இளம் சந்ததியினருக்கிடையிலே துடுப்பெடுத்தாட்டப்போட்டி உதை பந்தாட்டப்போட்டி, வலைபந்தாட்டப் போட்டிகள் வேறு தமிழ் குழுக்க ளிடையே நடாத்தப்படும். இதனால் ஏனைய தமிழ் மக்களிடையே பரஸ்பர உறவைப்பேணக்கூடியதாக இருக்கும்

4) கோடைகால பாடசாலை விடுமுறை நாட்களில் பிள்ளைகளைப் பராமரிப்பதற்கு Holiday Play Scheme நடாத்துவார்கள் இந்நாட்களில் பிள்ளைகளுக்கான பல்வேறு நிகழ்ச்சிகளுடன் உல்லாசப் பிரயாணமும் செய்து அவர்களின் பொழுதை கள்ளம் கபடம் அற்றமுறையில் இனிதே களிப்பார்கள் அதேபோன்று பிறன்ற் தமிழ் சங்கத்தவர்கள் மற்றையவர்களுடன் சேர்ந்த கடற்கரை கோவில்கள் போன்ற லண்டனிலிருந்து தூர இடங்களுக்கு உலாச் சென்று பொழுதை இனிதே கழிப்பார்கள்.

5) தற்கால மோகப்படி தமிழ் மக்களிடையே தமிழ் சினிமாப் பாட்டு பாடும் Super Singer போட்டிகளும் நடைபெறுகின்றன.

6) அரியாலை மக்களை ஒருங்கிணைக்கும் பொருட்டு அரியாலை மக்களிடையே நிகழும் நன்மை தீமை விடயங்களில் அவரவர் வதியும் வீட்டு விலாசம் போன்ற விபரங்கள் பரிமாறப்படும் வசதிகள் உண்டு.

7) 2000ஆம் ஆண்டில் இச்சங்கம் பிரித்தானியா சட்டத்திற்கமைய ஒரு தருமஸ்தாபனமாக Charity Commission இல் பதிவு செய்யப் பட்டது. இதற்கும் அமரர் கந்தையா சோதிநாதன் அவர்களே முன்னேடியாக இருந்து திரு.சுப்பிரமணியம் ஜெகன்மோகன் அவர்களால் நிறைவேற்றப்பட்டது என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

1942 ஆம் ஆண்டு அரியாலை மண்ணில் அவதரித்த அமரர் கந்தையா சோதிநாதன் அவர்கள் 2012ஆம் ஆண்டு சிவபதம் அடைந்துள்ளார். 2000ஆம் ஆண்டில் பிறன்ற் தமிழ் சங்கத்தின் போஷகராக பொன்னாடை போர்த்து கௌரவிக்கப்பட்டார்கள்.

## தமிழ் பாடசாலை

பிறன்ற் தமிழ் சங்கத்தின் அங்கத்தவர்களின் பிள்ளைகள் வளர்ந்து வந்த பின்னர் அவர்களைத் தமிழ் கலாசாரத்துடன் வளர்ப்பதற்கு தமிழ் பாடசாலையின் தேவையை உணர்ந்து 1985ஆம் ஆண்டில் ஒரு தமிழ் பாடசாலையை ஆரம்பித்துள்ளார்கள். தமிழ் பாடசாலை என்றால் வாரஇறுதி நாட்களில் வசதியான ஒரு நிரந்தர பாடசாலையை வாடகைக்கு எடுத்து வாரஇறுதி நாட்களில் (சனி அல்லது ஞாயிற்று கிழமைகளில்) பகுதி நேரமாக நடாத்துவார்கள். இப் பாடசாலையில் சில வருடங்களில் 200க்கு மேற்பட்ட மாணவர்கள் பங்குபற்றியதும் உண்டு. பிறன்ற் தமிழ் சங்கம் நடாத்தும் இப்பாடசாலையை பிறன்ற் தமிழ் பாடசாலை எனப்பெயர் சூட்டியுள்ளார்கள். இப்பாடசாலையை ஆரம்பிப்பதற்கும்

முன்னோடியாக அமரர் கந்தையா சோதிநாதன் அவர்கள் இருந்தார் என்பதும் குறிபப்பிடத் தக்கதாகும்

இப் பாடசாலையில் தமிழ் இலவசமாகக் கற்பிக்கப்படும். ஆசிரியர் களும் தொண்டர் அடிப்படையில் இலவசமாகக் கல்வி கற்பிப்பார்கள். திருமதி கலாயினி மோகனதாஸ் அவர்கள் 30 வருடங்களுக்கு மேலே தமிழ் படிப்பித்துள்ளார் என்பது குறிப்பிடத் தக்கதாகும். எனவே அவர்களின் தமிழ் ஆர்வம் என்னே. கலாச்சார வகுப்புகளாக சங்கீதம், பரதநாட்டியம், மிருதங்கம், வயலின், வீணை, key board போன்ற வகுப்புக்கள் நடைபெறும். ஆர்வம் உள்ள மாணவர்கள் பிரத்தியேக வகுப்புகள் எடுத்து அரங்கேற்றம் நிலைக்கு முன்னேறியுள்ளார்கள்.

பிறன்ற் தமிழ்பாடசாலையில் ஆரம்ப கலைக்கல்வியைப் பெற்று பின்னர் பாடசாலை தவிர்ந்த வேறு ஆசிரியர்களுடன் கல்வி பயின்றும் அரங்கேற்றம் செய்த அரியாலை பிள்ளைகளை இடம் சிக்கனம் கருதி இங்கே குறிப்பிடப்படவில்லை. எனினும் எனக்குக் கிடைத்த தகவல் அடிப்படை யிலேயே மேற்குறிப்பிட்ட பிள்ளைகளின் விபரம் தரப்பட்டுள்ளது. தவறுதல் இருந்தால் தயவுசெய்து மன்னிக்கவும்.

மற்றும் திரு கனகரட்ணம் பாலேந்திரா, திருமதி ஆனந்தராணி பாலேந்திரா தலைமையில் தமிழ் அவைக்காற்று கலைக்கழகம் அங்கத்தவர் களால் நடாத்தப்படும் சிறுவர் நாடகங்களில் எமது தமிழ் பாடசாலை மாணவர்கள் பங்கு பற்றி புகழ் பெற்றுள்ளார்கள். “வேடனை உச்சிய மாடப்புறா” 1991இல் மேடையேற்றிய இவர்களின் முதல் நாடகமாகும். இதன் பின்னர் 20க்கு மேற்பட்ட சிறுவர் நாடகங்கள் மேடை யேற்றப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

தமிழ் பாடசாலையில் அவரவர் துறையில் திறமை அடைந்த பிள்ளைகள் தமது திறமையை வெளிப்படுத்தும் வண்ணம் சித்திரை வருடப்பிறப்பு விழாவில் காண்பிப்பார்கள். அதே போன்று நிதிசேகரிக்கும் பொருட்டு கலைவிழா நடாத்துவார்கள். அத்துடன் வருடாவருடம் திறமை சார்ந்த பரீட்சை நடாத்துவதுடன் அரியாலை சுதேசிய தினக்கொண்டாட்ட விழாவில் நடை பெறுவது போன்று பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி, சதுரங்கப்(Chess) போட்டி,கராட்டிப்போட்டி போன்றவை நடைபெற்று சித்திரை வருடப்பிறப்பு விழாவில் பரிசு வழங்கப்படும்.

பாடசாலை நாட்களில் இலவச வைத்திய ஆலோசனை வழங்கி வைத்திய கருத்தரங்குகள் நடைபெறுகின்றன.

இத்தமிழ் பாடசாலைக்குத் தலைமை ஆசிரியர்களாகக் கடமை புரிந்தோர் விபரம் பின்வருமாறு:

**1985-1986**
திரு பொன்னையா பத்மநாதன்
**1986-1989**
திருமதி பத்மா சண்முகநாதன்
**1990-1992**
திருமதி லோகா கணேசரத்தினம்
**1993-1999**
திருமதி கமலாசனி கெங்காதரன்
**2000-2004**
திருமதி கமலினி சிவகுருநாதன்
**2005-2009**
திருமதி பத்மா தவஞானம்
**2009-2012**
திருமதி சுமித்திரா விஜயேந்திரன்

*2012-2015*
*திருமதி யசோராணி தயானந்தன்*
*2015-2018*
*திருமதி பத்மா தவஞானம்*
*2018-2019*
*திருமதி சுபத்மா தவஞானம்*
*திருமதி தருமலிங்கம் திருநாவுக்கரசு*

*வாரம் தோறும் நடைபெறும் இப்பாடசாலையில் பெற்றோர்களுக்குப் பிரயோசனமான ஆங்கிலம், தையல், சமையல், யோகா போன்ற வகுப்புக்கள் நடை பெறும்*

## ஆலயப்பணி

*தமிழ் சங்கம், தமிழ் பாடசாலை ஆகிய இவற்றுடன் நிறுத்தாமல் 2001ஆம் ஆண்டிற்குப் பின்னர் அரியாலை மக்களின் சிந்தனை ஆன்மீகத்தில் இலயித்தது. நாள் தோறும் அரியாலை நீர்நொச்சித்தாழ்வு ஸ்ரீ சித்தி விநாயகரை துதிக்கும் எண்ணம் கரோ (Harrow) பதியில் தன்னைத் துதிக்கும் வண்ணம் எம் ஐவர் மத்தியில் கணிசமான முதலீடு இட்டு சிறிய அளவில் ஒரு சைவக்கோவில் ஸ்தாபிக்கும் உத்வேகத்தை அளித்தார். அவர்கள் திரு பரமு தனபாலசிங்கம் திரு. மயில்வாகனம் மோகனதாஸ், திரு.குமார சுவாமி கெங்காதரன், திரு.வல்லிபுரம் சிறீரஞ்சன், திரு. சரவணமுத்து அருணன் ஆகியோராவர். ஆரம்பத்தில் பகுதி நேர ஆலயமாக இருந்தாலும் 2010ஆம் ஆண்டில் இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்ட 5 அடி உயர விநாயகர் விக்கிரத்துடன் சிவலிங்கம் சமேத விசாலாட்ச்சி அம்மன், முருகன் சமேத வள்ளி தெய்வானையும், நவக்கிரகங் களும் எடுக்கப்பட்டு 21.10.2010 இல் கும்பாபிஷேகம் நடைபெற்று தினமும் நான்குநேர பூசை நடைபெற்றுக் கொண்டு வருகின்றது. பிரித்தானியாவில் மற்றைய சைவத்திருக் கோவில்களை இணைக்கும் சைவத் திருக்கோவில் ஒன்றியத்தில் இணைந்திருக்கும் இக் கோவில் ஈழநாட்டில் இயங்கும் ஏனைய சைவக்கோவில்களைப் போன்று தைப்பொங்கல், சிவராத்திரி, சித்திரை வருடப்பிறப்பு, ஆடிப்பிறப்பு, ஆடிப் பூரம், ஆடி அமாவாசை, புரட்டாதிச்சனி விரதம், நவராத்திரி பூசைகள், கௌரி காப்பூ, பிள்ளைார்கதை, திருவெம்பாவை, திருவாதிரை போன்ற விஷேட பூசைகளும் சதுர்த்தி பூசைகளும் கார்த்திகை விரதமும் கந்த ஷஷ்டி விரத பூசைகளும் சூரன் போரும் நடைபெறும். அத்துடன் விஷேடமாக வருடா வருடம் அலங்காரத் திருவிழா ஆவணி மாதத்தில் நடை பெறும். 2018ஆம் ஆண்டில் மூஷிக வாகனத்துடன் பலிபீடம் வைரவர் மூர்த்தியும் கும்பாபிஷேகத்துடன் இணைந்துள்ளார்கள். 2019 இல் கொடித்தம்பம் ஸ்தாபிக்கப்பட்டு மஹோற்சவ காலத்தில் ஐங்கரப் பிள்ளை யார் தேர்த்திருவிழாவன்று வீதி உலா வருவதற்கு நிர்வாகம் முடிவெடுத்துள்ளது.*

## சிறந்த கல்வி

*பிரித்தானியாவில் உலகப் பிரசித்தியுடைய பல்கலைக்கழகங்கள் உண்டு. அத்துடன் மாணவர்களின் கல்வித்தராதரத்திற்கேற்ப அவர்களுக்கு விருப்பமான துறையில் கல்வி பயின்று உயர் பட்டங்கள் பெறலாம். அவ்வாறு பெரும்பாலான அடுத்த சந்ததியினர் உயர்நிலைக் கல்வியைப்பெற்றுள்ளது பெருமைக்குரியதாகும். அதனால் அவர்கள் உயர்நிலைப் பதவிகள் வகிப்பதுடன் வாணிபத்துறையிலும் முன்னோடியாக இருக்கின்றார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.*

## எதிர்காலம்

அரியாலை சமுதாயம் பிரித்தானியாவில் என்னதான் முன்னேற்ற நிலையை அடைந்தாலும் இந்த நிலை தொடர்ந்து நிலைக்குமா என்பது எனது கருத்தாகும். இதற்கு முக்கிய காரணிகளாவன:

1) **நாட்டுப்பற்று:** இலங்கையிலுள்ள இனப்பிரச்சனை மழுங்கடிக்கப் பட்டுள்ளதால் உள்ளூரைப்போன்று வெளிநாடுகளில் நாட்டுப்பற்று குறைந்து கொண்டே போகின்றது. பிரித்தானியாவில் நடக்கும் அரசியல் போராட்டங்களில் அரியாலை மக்களின் பங்களிப்பு மிகக் குறைந்ததாகவே காணப்படுகின்றது.

2) **மேலைநாட்டுக் கலாசார மோகம்:** நம்மவர்களிடையே மேலை நாட்டுக் கலாசார மோகம் கூடிக் கொண்டே போகின்றது. இதனால் கோவில் தமிழ் பாசாலை கலை நிகழ்ச்சிகள் வெறும் சம்பிர தாயங்களாகவே அமையும் என எண்ணுகின்றேன்.

3) **கலப்புத்திருமணம் :** எங்களது அடுத்த சந்ததியினரிடம் கலப்புத் திருமணம் சர்வசாதாரணமாக நடைபெறுகின்றது. இதனால் எமது அடுத்த சந்ததியினர் தமிழ் கதைக்கத் தெரியாதவர்களாக தமிழ் அடையாளம் வெகுவிரைவில் அற்றுப்போகும் என்று அபிப்பிராயப்படுகின்றேன்.

தற்போது (2019) பிரித்தானியா போன்ற வெளிநாடுகளில் நிலைத்திருக்கும் தமிழ் கலை கலாசாரம் இத்தகைய சூழ்நிலை காரணங்களால் இரண்டு அல்லது மூன்று சந்ததியினருக்கு இழுத்துப்பிடித்தாலும் அதன் பின்னர் குறிப்பாக **2119** ஆம் ஆண்டிற்குப்பின்னர் தமிழ் அடையாளம் அற்ற ஒரு தொலைந்து போன சந்ததியினரை (Lost generation) உருவாக்கிக் கொண்டிருக் கின்றோம் என்றே நான் ஆதங்கப் படுகின்றேன் எனவே திரைகடல் ஓடியும் திரவியம் தேடு என்பதுடன் நிறுத்தாமல் அங்கே தடம் பதித்து எமது சந்ததியை தொலைப்பதன் தார்ப்பதியத்தை நாம் உணரவேண்டும் எனக்கேட்டுக் கொள்கின்றேன்.


---

### நித்திய கருமவியல்

- நாள் தோறும் நியமமாக எந்த நேரத்திலே நித்திரை விட்டெழுதல் வேண்டும்?
  சூரியன் உதிக்க ஐந்து நாழிகைக்கு முன்னே நித்திரை விட்டெழுதல் வேண்டும்.

- நித்திரை விட்டெழுந்தவுடன் யாது செய்தல் வேண்டும்?
  விபூதி தரித்துச் சிவபெருமானைத் தியானித்துத் தோத்திரஞ் செய்துகொண்டு பாடங்களைப் படித்தல் வேண்டும்.

# அரியாலையூர் நாடக ஆளுமைகள்



குழந்தை சண்முகலிங்கம்
நாடகக் கலைஞர்

யாழ் நகரின் புறத்தே உள்ள ஊர்களில் ஒன்ற அரியாலை. யாழ்ப்பா ணத்தில் கல்வியும், கலைகளில் பலவும் வளர்ந்துள்ள ஒரு சில கிராமங்களில் அரியாலையும் ஒன்று. கல்விமான்களும் கலைவல்லுனர்களும் நிறைந்த ஊர். கல்வியும் கலைகளும் நீண்ட நெடும் பாரம்பரியத்தைக் கொண்டிருக் கும் அரியதொரு ஊர். இவ்வூரை நினைக்கும் வேளைகளிளெல்லாம் இவ்விரு துறை களின் வளர்ச்சிதான் எமது நினைவில் ஓடி வந்து நிற்கும். இவ் விரண்டையும் அடுத்து வந்து நிற்பது விளையாட்டுத் துறை. எனவே “காலை எழுந்தவுடன் படிப்பு, பின்பு கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு, மாலை முழுதும் விளையாட்டு....” என்று பாரதி கூறிய மூன்று துறைகளிலும் அக்கறையும் ஆர்வமும் கொண்டு, தமது ஊரின் இளையோர், இடை வயதினர், இளமனம் கொண்ட முதியோர் தம் உடல், உள, உணர்வு ஆரோக்கியத்தைக் கரிசனை யோடு வளர்த்து வந்த ஊரவர் தம்மைக் கொண்ட ஊர்தான் அரியாலை எனும் அரிய ஊர். இது உண்மை. வெறும் புகழ்ச்சியில்லை.

வழி வழி வந்த மரபாலும், ஆசையாலும், ஆர்வத்தாலும் உந்தப் பட்டு, நாடகக் கலையின் பால் ஈடுபாடு கொண்டு உழைத்து, தமக்கும், தமது ஊருக்கும் தாம் சார்ந்திருந்த கலைத் துறையாம் நாடகத்துக்கும் பெருமை சேர்த்துக் கொண்ட உயர்ந்தோர் பலரில் சிலர் பற்றிய அரிய தகவல்களை அரியாலையூர் நாடக ஆளுமைகள் என்ற நூல் தருகிறது. இந்த அரிய பெறுமதி மிக்க நூலை ஆக்கித் தந்துள்ளவர் இந்த ஊரைச் சேர்ந்தவர். நாடகக் கலையில் ஆர்வமும் அக்கறையும் கொண்டு உழைத்து வருபவர். அக்கலை மீண்டும் தனது ஊரில் மிடுக்கோடு வளரவேண்டும் என்பதில் பெருவிருப்புக் கொண்டு உழைப்பவர். இளைஞர், நம்பிக்கை ஆர்வம் மிக்கவர். அவர்தான் அருமை நண்பர் ப. ஸ்ரீஸ்கந்தன்.

இலங்கைத் தமிழர் தம் இசை வரலாற்றிலும், நாடக வரலாற்றிலும் அரியாலையூரின் பங்களிப்பு மிக மிகக் காத்திரமான ஒன்று என்பதை எவரும் மறுக்க முடியாது. மிகச் சிறந்த இசை வல்லாரும் நாடக ஆளுமைகளும் இங்கு தோன்றிப் பாரம்பரிய நாடக வகை களையும், நவீன நாடக வகைகளையும் சிறப்புற வளர்த்துள்ளனர். அந்த வகையில் நாடகக் கலையை வளர்த்த கலைஞர் பற்றிய இந்நூல் நாடக ஆர்வலர்களுக்கு நல்லதொரு விருந்தாக அமைகிறது.

நீண்ட நெடுங்காலமாக அரியாலை பல வழிகளில் பலவகையான நாடகங் களையும், நாடக வடிவங்களையும் வளர்த்து வந்துள்ளது. அக்கலையினைச் இளந்தலை முறையினருக்குப் பயிற்று வித்து வந்துள்ளது. போர்ச் சூழல் காரணமாக இடையில் சில ஆண்டுகள் செயற்பாடு குன்றிய காலமாகக் கடந்து விட நேர்ந்தது. செயற்பாடு குன்றிய தேயன்றி முற்றிலுமாக அற்றுப்போய் விடவில்லை. இளையோர் மத்தியில்

நாடகக் கலையின்பால் ஆர்வத்தையும் பயில்வையும் ஏற்படுத்தும் நோக்கத் தோடு, பாரதியின் "பாஞ்சாலி சபதம்" எனும் நாடகத்தை இளையோருக்குப் பயிற்றுவித்து மேடையேற்றியுள்ளனர். இந்த முயற்சியில் இங்குள்ள கலைஞர் களோடு இந்த நூலின் ஆசிரியரும் நேரடியாகப் பங்கு கொண்டுள்ளார். இது இவரது ஆசைக்கும் ஆர்வத்துக்குமான தொரு சிறந்த சான்று.

இவ்வூரின் நாடகக் கலைப் பாரம்பரியம் நெடியது மட்டுமல்லாமல் பரந்ததாகவும் இருந்து வந்துள்ளது. பரந்தது என்னும் போது ஊரில் பலரால் ஆடப்பட்டது எனும் பொருளிலும் பல நிறுவனங்களால் நிகழ்த்தப்பட்டது எனும் பொருளிலும் வெளியூர்க் கலைஞர்கள் பலர் இவ்வூரவரோடு இணைந்து நாடக முயற்சிகளில் ஈடுபட்டனர் என்னும் பொருளிலும், இவ்வூர்க் கலைஞர்கள் வெளியூர்க் கலைஞர்களோடு இணைந்து நாடக ஆற்றுகைகளிலும் தயாரிப்புக் களிலும் ஈடுபட்டு வந்தனர் என்னும் பொருளிலும், இவ்வூரின் மன்றங்கள் நடத்திய நாடகப் போட்டியில் இவ்வூரின் நிறுவனங்களும், வெளியூர்கள் பலவற்றி னதும் மன்றங்களும் பங்குகொண்டன என்னும் பொருளிலும் கொள்ளப்பட வேண்டிய ஒன்றாக உள்ளது. மேலும் இவ்வூரின் நாடகக் கலைப்பாரம்பரியம் "நெடியது" என்னும் போது, அரியாலையின் நாடக வரலாறு அதாவது பதிவிலுள்ள வரலாறு நூற்றாண்டுகளைத் தாண்டியுள்ளது என்பதைக் குறிப்பதாக உள்ளது என்பதை நாம் மனங்கொண்டு பெருமை கொள்ளலாம்.

இவ்வூரின் நாடகப் பாரம்பரியம் பரந்துபட்டது என்னும்போது, மற்று மொரு மிக முக்கியமான விஷயத்தைக் கருத்திற்கொள்வது அவசியமாகிறது. அதாவது இவ்வூரின் பரந்துபட்ட நாடகப்பாரம்பரியம், தமிழ்ப்பாரம் பரியம், தமிழ் நாடகப் பாரம்பரியத்தி னதும் உலகப் பொதுமை யான நாடகப் பாரம்பரியத்தினதும் வடிவங்கள், மோடிகள், வகைகள் நுட்பங்கள் என்பவற்றுள் பெரும் பாலானவற்றில் அக்கறை கொண்டு ஆடிப்பார்த்து, அனுபவம் பெற்று, அருங்கலை படைத்து வந்துள்ளது. இக்கூற்றுப் புனைவல்ல, வரலாற்றின் பதிவு.

அரியாலையின் அரங்க ஆற்றுகையாளர்கள், வடமோடி மற்றும் தென்மோடிக் கூத்துக்கள், காத்தவராயன் கூத்து, நாடகம் பலவகையான கதைகளைக் கூறும் இசை நாடகங்கள், வரலாற்று புராண இதிகாச நாடகங்கள், மொழி பெயர்ப்பு நாடகங்கள், இந்திய நாடகாசிரியர் தம் நாடகங்கள், இலங்கை நாடகாசிரியர்கள் தம் நாடகங்கள், நவீன நாடகங்கள் எனப் பலதையும் ஆற்றுகை செய்து வந்துள்ளனர். நவீன நாடகங் களைப் பொறுத்த வரையில் வீறமைவான நாடகங்கள் முதல் நகைச்சுவை, மகிழ் நெறி நாடகங்கள் வரை பலப்பலவகையில் அமைந்த நாடகங்களை ஆற்றுகை செய்துள்ளனர். இந்த நாடகங்கள் பெரும்பலம் சமகாலப் பிரச்சனைகளை ஆராய்வனவாக அமைந் தவை என்பதை நாம் மனங் கொள்ளலாம்.

இத்தகைய நீண்ட நாடக ஆற்றுகைப் பாரம்பரியம் பல நற் பேறுகளை இலங்கைத் தமிழ் நாடக அரங்கக் கலைக்கு நல்கி வந்துள்ளது. பலவகையான நாடகங்களை ஆற்றுகை செய்து வந்தமையால் நடிகர்களும், நெறியாளர்களும், பார்வையாளர்களும் பல்பரிமாணம் கொண்ட பரந்த ஆற்ற லையும் அனுபவத்தையும் பெற்றுக் கொண்டனர். இதனால் அனைத்து

மோடிகளையும் நயக்கும் வல்லமையைப் பெற்றுக் கொண்டனர். மேலும் நாடக ஆற்றுகை என்பது அடிப்படையில் ஒரு கலைப் படைப்பு என்பதையும், அது கலை என்பதால் பார்ப்போர்க்கும் படைப்போர்க்கும் அழகியல் எனப்படும் கலானுபவத்தைத் தந்து நிற்க வேண்டும் என்பதையும், அது கூற முற்படும் கருத்து, பொருள் அனுபவம், கலானுபவத்துள் கலந்து, கரைந்து, மறைந்து நின்று வரவேண்டிய ஒன்று என்பதையும் மேற்கண்ட பல்வகைமை கொண்ட படைப்புக்கள் பலருக்கும் பட்டறிவுப் பாடமெனப் புகட்டி நின்றது. மக்கள் சமூகத்தின் எந்தவொரு தேவைக்காகவும் நாடகத்தைப் பயன்படுத்தினாலும் படைப்பு என்று வரும் போது அது நயத்தகு நாகரிகம் கொண்ட கலைப் படைப்பாகவே இருக்க வேண்டும் என்ப தையும் இப்படைப்புக்கள் வெளிப்படுத்தி நின்றன.

நாம் அறிந்தவரை வேறு எந்த ஊருக்கும் இல்லாத தனிச்சிறப்பு மிக்க ஒன்றை அரியாலையூர் தோற்றுவித்து வளர்த்து வந்துள்ளது. "சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா" எனும் பெரு நிகழ்வே அந்தத் தனிச்சிறப்பு மிக்க நிகழ்வாகும். இந்தப் பெருவிழா 1919 ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் கொண் டாடப்பட்டு வந்துள்ளது. இடப் பெயர்வு களாலும் இடர்ப்பாடுகளாலும் ஒரு சில ஆண்டுகள் இவ்விழாவினைக் கொண்டாட முடியாத போயினும், இவ்வாண்டு நூற்றாண்டு விழாவாகக் கொண்டாடப் படுகிறது. இது இனி இனிதே தொடரும் என்பது உறுதி. சந்ததி இடைவெளி அகன்று சமூக நல்லுறவு வளர இது நிச்சயம் உதவும். ஏனைய ஊர்களுக்கும் இது நல்லதொரு உதாரணம்.


அரியாலையில் கற்ற அரிச்சுவடி இலங்கை முழுவதும் பரவிப்பயின்ற பின் உலக அளவில் வளர்ந்திருப்பதை நாம் அரியாலை ஈன்ற பாலன் பாலேந்திராவின் "அவைக்காற்றுக் கலைக்கழகத்தின்" செய்யாற்றுகைகள் மூலம் காண்கிறோம்.

"நாடக அரங்கியல்" கற்கை என்பதன் அரிச்சுவடி பாடப் புத்தகங் களில் ஆரம்பிப்பதில்லை. அது பல்வேறு மோடிகளில், வகைகளில் அமைந்த ஆற்றுகைகளின் பயில்வில் ஆரம்பிக்கும் ஒன்று என்பதை அரங்கியல் ஆசிரியர் களும், மாணவர்களும் மனங்கொள்வது நல்லது.

அரியாலையூரின் நாடக வரலாற்றை, நாடக, அரங்க வரலாற்று நிலை நின்று ஆய்வு செய்யும் பணியினை எவரேனும் நிச்சயம் மேற்கொள்ள வேண்டும். அரியாலையூரின் அரும்பணி தொடரும்.

# கல்விச் செல்வமே சிறந்த செல்வம்

**திரு.வ. செந்தில்ராஜா**
சிரேஷ்ட விரிவுரையாளர்,
உயர் தொழினுட்ப நிறுவனம்,
யாழ்ப்பாணம்.



*"அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது" என ஔவையாரால் குறிப்பிடப்படுவதே மனிதப் பிறப்பின் சிறப்பாகும். உலகின் பல்லாயிரக் கணக்கான உயிர்கள் இருப்பினும் ஆறறிவுடைய மனிதனாக இவ்வுலகில் பிறத்தலே சிறப்பானதாகும். மனிதனின் சக்திக்கு அப்பாற்பட்டு கொடுத்ததைப் பறிப்பதும் இல்லாததை கொடுப்பதுமே காலத்தின் வல்லமை. இக்காலத்தாற் கூட மனிதர்களிடமிருந்து பிரிக்கப்பட முடியாதவை ஒரு சிலவே. அவையாவன அறிவு, கல்வி, நற்பண்பு என்பனவாம்.*

*இம்மூன்றிலும் முதன்மையானது கல்வி. கல்விச் செல்வத்தை யாராலும் அழிக்க முடியாமையே இதன் காரண மாகும். இதனையே அன்றொரு நாள் "கேடில் விழுச் செல்வம் கல்வி ஒருவர்க்கு மாடல்ல மற்றப் பிற" என்று திருவள்ளுவர் இயம்பியுள்ளார். இதனையே ஔவையார் "மன்னனும் மாசறக் கற்றோனும் சீர் தூக்கின் மன்னனில் கற்றோன் சிறப் புடையன் மன்னனுக்குத் தன் தேசமல்லாற் சிறப்பில்லை. கற்றோனுக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு" என இயம்பினார். என்னதான் சகல செல்வங்களையும் மன்னன் தன்னகத்தே கொண்டிருந்தாலும் அவனுக்குத் தன்னாடு தவிர பிற இடங்களில் சிறப்பில்லை. ஆனால் கல்வி கற்ற ஒருவர் தான் செல்லும் இட மெல்லாம் சிறப்பைப் பெறுவார் என்பது கண்கூடு.*

*"கல்லாதான் ஒட்பம் கழியநன்று ஆயினும் கொள்ளார் அறிவுடை யார்"*

*என்பதும் வள்ளுவன் வாக்கு. கல்வி அறிவு இல்லாதவர்கள் கிணற்றுத் தவளை போன்றவர்கள். அதாவது கற்காதோரின் சரியான கருத்துக்கள்கூட கற்றோர் சபையில் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. பல்லாயிரக் கணக்கானவர் கூடிய சபையில் தன் கையிலிருப்பதை வாசிக்கத் தெரியாமல் தடுமாறும் ஒருவனை மரம் என்கிறார் ஔவையார். "கவையாகி கொம்பாகி காட்டகத்தே நிற்கும் அவையல்ல நல்ல மரம்." அத்துடன் "சபை நடுவே நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறியமாட்டாதவன்" என கல்லாதோரை ஔவையார் இழிவுபடுத்து கிறார். இதிலிருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டிய ஓர் நற்பண்பு "வாசிப்பதால் மனிதன் பூரணமடை கிறான்" என்பதாகும்.*

*"கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே" எடுப்பது பிச்சையானாலும் கற்பதை கைவிடாதே என சான்றோர்கள் சும்மாவா சொன்னார் கள்? நம் இளம்பராயத்தில் பெற்றுக் கொள்ள வேண்டியவற்றுள் மிக முக்கியமானது கல்வி. இதனையே "இளமையில் கல்வி சிலையில் எழுத்து" என்பர். கல்வி கற்பதற்கு வயதெல்லை கிடையாது. ஆனாலும் கல்வி கற்கக் கிடைக்கும் வாய்ப்பை நழுவ விடுவதும் பின்னர் பார்க்கலாம் என்பதும் நமது முட்டாள்த்தனம். இதனையே "நாம் அனைவரிடமும் ஒரே திறமை இருப்பதில்லை. ஆனால் நம் திறமையை*

வளர்க்க ஒரே சந்தர்ப்பத்தைப்பெற முடியும்" என்றார் அப்துல் கலாம். "நன்றே செய் அதை இன்றே செய்" என்ற சான்றோரின் வாக்கினை நம் மனத்திற் கொள்வது நலம்.

கல்வி அறிவுடைய ஒருவரின் சிறப்பை புறநானூறு பின்வருமாறு குறிப்பிடுகின்றது. "பரந்த திறலாரைப் பாசிமேல் இட்டுக் கரந்து மறைக்கலும் ஆமொ? நிரந்தெழுந்து வேயின் திரண்டதோள் வேல் கண்ணாய்! விண் இயங்கும் ஞாயிற்றை கைமறைப்பார் இல்." அறிவுடையார் ஒருவரை பாசி போல் அடாது பழி சுமத்தி அவரின் புகழை மறைக்க முடியாது. அவ்வாறு மறைக்க முயல்வது சூரியனை கையால் மறைக்க முயல்வதற்கு ஒப்பான ஓர் மடத்தனமான காரியம். ஏனெனில் சூரியனை யாராலும் மறைக்க முடியாது.

நம்மில் பலர் வேண்டா வெறுப் பாகவும், வெறும் தற்பெருமைக்காகவும் கல்வியைப்பெற நினைக்கின்றனர். ஆனால் இவர்கள் விளங்கிக் கொள்ள வேண்டியது யாதெனில் பெருமைக்காகத் தேடிப்பெறுவது அல்ல கல்வி. மாறாக பெற்றதைக் கொண்டு பெருமை தேடிக் கொள்வதே கல்வி.

நிறைகுடம் எப்போதும் தளம்பு வதில்லை என்பதைப்போல கற்றவர்கள் எப்போதும் தம் ஆற்றலைப் பெரிதாக அலட்டிக்கொள்ள மாட்டார்கள். "அடக்கம் உடையார் அறிவிலர் என்று எண்ணிக் கடக்கக் கருதவும் வேண்டா மடைத்தலையில் ஒரு மீன் ஓட உறுமீன் வருமளவும் வாடி இருக்குமாம் கொக்கு" எனக் கற்றவர்களின் நற்பண்புகளை எடுத்தியம்புகின்றது வாக்குண்டாம். "பாலோ டளாய நீர் பாலாகு மல்லது நீராய் நிறைந்தெரிந்து தோன்றாதாம் நல்ல பெரியார் பெருமையைச் சார்ந்து" பாலோடு கலந்த நீர் பால் நிறமாக தோன்றுமே தவிர நீராய் தன் நிறத்தைக் காட்டாது. இதேபோல் சிறியார் ஒருவரின் குறைபாடும் தோன்றாது நல்ல பெரியார் ஒருவரைச் சேரும்போது என்ற நாலடியாரிற்கு அமைவாக நாம் எப்போதும் சேரும் சேர்க்கை சிறப்பாக இருக்க வேண்டும். இதனையே கற்றார் முன் கல்வி உரைத்தல் மிக இனிதே மிக்காரைச் சேர்தல் மிகமான முன் இனிதே." கற்றவர் முன்பு தாம் கற்றதைச் சொல்வதும், அறிவில் சிறந்தவரை அடைவதும் இனிது எனத் தெளிவு படுத்துகிறது இனியவை நாற்பது. நாம் ஒரு விடயத்தைக் கூறும்போது அதற்குத் தகுந்தவரிடம் கூற வேண்டும். பாத்திர மறிந்து பிச்சையிடு என்பதற்கேற்ப நாம் செயற்பட வேண்டும்.

அறிவிலி ஒருவன் அறிவாற்றல் நிரம்பிய சபையில் பிரசன்னமாவதை திருவள்ளவர் "கழா அக்கால பள்ளியுள் வைத்தாற்றால சான்றோர் குழா அத்து பேதை புகல்" எனக் குறிப்பிடுகின்றார். இதில் அவர் விளக்க முனைவது யாதெனில் சான்றோர் சபையில் பேதை செல்வது ஒருவன் தூய்மையில்லாத வற்றை மிதித்து கழுவாத காலை படுக்கையில் வைத்தாற் போன்றது என்பதாகும்.

எமது உடல், நிறம், அணியும் ஆடை ஆபரணங்களால் எம்மை அழகாக்க முடியாது. நாம் சிறந்தவர்கள் என்பதை எம்மை எண்ண வைப்பது நமது கல்வி மட்டுமே. கல்வியினால் மட்டுமே எம்மை மென்மேலும் அழகாக்க முடியும். இதனையே "குஞ்சி அழகும் கொடுத்தா னைக் கோட்டழகும் மஞ்சள் அழகும் அழகல்ல நெஞ்சத்து நல்லம் யாம் எனும் நடுவரிலமையாற் கல்வி அழகே அழகு" என விபரிக்கின்றது நாலடியார்.

நாம் இவ்வளவு கற்று விட்டோம் என எப்போதும் இறுமாப்பு கொள்ளக் கூடாது. நாம் எவ்வளவு விடயங்களை அறிந்துள்ளோமோ அதேபோல் நாம் அறியாதவையும் ஏராளம். "கற்றது கைமண் அளவு கல்லாதது உலகளவு" என்பதும் இதனையே குறித்து நிற்கின்றது. அப்துல் கலாம் குறிப்பிடுவதைப் போல் நம் பிறப்பு ஒரு சம்பவமாக இருக்கலாம். ஆனால் நம் இறப்பு ஓர் சரித்திரமாக இருக்க வேண்டும். இவ்வாறாக நமது இறப்பைச் சரித்திரமாக்குவது கல்வி என்றால் அது மிகையாகாது.

நம் வாழ்க்கை ஓர் சரித்திரமாக அமைய வேண்டும் என்பதே ஒவ்வொரு தாயினதும் கனவாகும். "ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன் மகனை சான்றோன் எனக் கேட்ட தாய்." தனக்கு மகன் பிறந்த பொழுதில் கிடைக்கும் மகிழ்ச்சியைக் காட்டினும் தனது மகனை உலகம் சான்றோன் எனப் புகழ்வதைக் கேட்கும் பொழுதில் கிடைக்கும் மகிழ்ச்சியே ஒரு தாய்க்கு ஒப்பற்றது என்கிறது திருக்குறள்.

தாயானவள் தன் அறிவாற்றல் நிரம்பிய மகனைக் கண்டு அடையும் மகிழ்ச்சிக்கு சற்றும் குறைவில்லாதது ஒரு தந்தை அடையும் பெருமை. இதை திருக்குறளும் எடுத்துக் காட்டத் தவறவில்லை. "மகன் தந்தைக் காற்றும் உதவி இவன் தந்தை என்னோற்றான் கொல் எனும் சொல்" அறிவாற்றல் நிறைந்த ஒருவனைக் காணும்போது இவ்வுலகம் என்ன நினைக்கும் தெரியுமா? இவ்வளவு அறிவாற்றலைக் கொண்டவனை தன் மகனாக ஈன்றெடுக்க இவன் தந்தை என்ன தவம் செய்தானோ? என எண்ணுமாம்.

எந்த வயதிலும் நாம் கற்பதை நிறுத்தக் கூடாது. அத்துடன் நாம் கற்றால் மட்டும் போதும் என்று எண்ணுவதை விடுத்து நம் எதிர்கால சந்ததியினரும் கல்வியைத் தொடர தூண்டுகோலாக விளங்க வேண்டும். "தாயோடு அறுசுவை போம் தந்தையோடு கல்வி போம்" என்பதன் மூலம் நம் பெரியோர்கள், சான்றோர்கள் நமக்க உணர்த்துவது யாதெனில் தாயின் கைப்பக்குவமும், தந்தையின் கல்வியறிவும் சந்ததி சந்ததியாக வாழையடி வாழையாக தொடர வேண்டும் என்பதாகும். "யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்பதற்கு இணங்க கல்வி அறிவுள்ள சமூகத்தை உருவாக்கி நாமும் வாழ்ந்து பிறரும் வாழ வழிவகுப்போமாக.

"கற்போம் உயர்வோம்"
"அரியாலை மாதாவை அடிபணிந்து போற்றுவோம்"



# நூற்றாண்டு காணும் அரியாலை சுதேசியமும் அதன் தேவைப்பாடும்



திருமதி. பிரதீபன் ஜசந்தினி B.B.A(HRM Spl),
P.G.Dip.Edu,M.Ed (2nd upper)
அரியாலை

## அறிமுகம்

*அரியாலை மக்களின் உணர்வுடன் கலந்திட்ட, எமது மூதாதையரால் உருவாக்கப்பட்ட அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா நூற்றாண்டு காண்கின்ற பெருமைமிகு விழாவாக வுள்ளது. அந்நியர் (ஆங்கிலேய) ஆதிக்கத்திற்கு உட்பட்டிருந்த காலத்தில் எமது முன்னோர்களால் எமது சைவத்தையும், தமிழையும், கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்களையும் பேணிப் பாதுகாப்பதற்காக உருவாக்கப் பட்ட இவ்விழா சரியான முறையில் எமது எதிர்கால சந்ததியினருக்கு கையளிக்கப்பட வேண்டியிருப்பதுடன், அவர்களும் தமது அடுத்த சந்தயினருக்கு கவனமாகக் கையளித்து சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவானது ஒரு நூற்றாண்டு அல்ல இன்னும் பல நூற்றாண்டுகள் காண வேண்டும் என்பதே உண்மையான உணர்வுமிக்க ஒவ்வொரு அரியாலைக் குடி மக்களினதும் எண்ணமாகும்.*

*1919 ஆம் ஆண்டு உருவாக்கப் பட்ட இவ்விழா எமது தமிழ் இராச்சியத்தினையும், தமிழ் அரசர் களினையும், சைவத்தையும் நிலைநிறுத்தக் கூடியவகையில் தமிழருக்கே உரித்தான நந்திச் சின்னத்தைத் தன் சின்னமாகக் கொண்டுள்ளது. இந்த நந்திச் சின்னம் என்றும் நிலைத்திருக்க வேண்டும் என்பதற்காகவும், இளைய சந்ததியினருக்குச் சுதேசியத்தின் முக்கியத்துவத்தினை உணர்த்துவதற்காகவும் இக் கட்டுரை வரையப்படுகின்றது.*

## சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவின் அவசியமும் பொருளாதார ரீதியிலான பங்களிப்பும்

*இன்றைய நவீன பொருளாதாரப் போக்குகளில் அதிகம் பேசப்படும் விடயங்களில் நிலைத்திருக்கும் அபி விருத்தியும், அறிவுசார் பொருளாதார எண்ணக்கருவும் மிக முக்கியம் பெறு கின்றது. இவ்விரண்டுக்குமே எமது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா பங்களிப்புச் செய்யும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.*

*நாம் முதலில் நிலைத்திருக்கும் அபிவிருத்தி மற்றும் அறிவுசார் பொருளாதாரம் போன்றன பற்றி நோக்குவோமாயின்,*

## நிலைத்திருக்கும் அபிவிருத்தி பேண்தகு அபிவிருத்தி (Sustainable Development)

*குறித்த பொருளாதாரத்தின் எதிர்கால சமூகம் தமது தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் இயலுமையை விட்டுக் கொடுக்கா வண்ணம் நிகழ்கால சந்ததி தமது தேவைகளைப் பூர்த்தி செய்வதனைக் குறிக்கும்* -Brundland Commision

"Sustainable development is development that meets the needs of the present without compromising the ability of future generations to meet their own needs. It contains within it two key concepts:

- the concept of **needs**, in particular the essential needs of the world's poor, to which overriding priority should be given; and
- the idea of **limitations** imposed by the state of technology and social organization on the environment's ability to meet present and future needs."

வேறுவிதமாகக் கூறுமிடத்து பொருளாதார, சமூக, மற்றும் சூழல் ஆகிய மூன்று பாகங்களிலும் சமநிலையாக அபிவிருத்தி அடையப்படுதல் நிலைத் திருக்கும் அபிவிருத்தியாகும்.

2015 செப்டெம்பரில் நியூயோர்க் கில் நடந்த ஐக்கிய நாடுகளின் பேணத்தகு அபிவிருத்தி மாநாட்டில் உலகத் தலைவர்களால் உருவாக்கப்பட்ட புதிய உலகிற்கான நிலைத்து நிற்கும் அபிவிருத்திக் குறிக்கோள் வெளியிடப் பட்டது. இது 17 நிலைத்து நிற்கும் அபிவிருத்திக் குறிக்கோள்களை உள்ளடக்கியது. இவை ஒவ்வொன்றும் 169 இலக்குகள் வரைக்கும் சேர்க்கப் பட்டிருந்த பல்வேறு இலக்குகளை ஒன்றாகக் கொண்டிருந்ததுடன் நிலைத் திருக்கும் அபிவிருத்திப் பிரச்சினைகளின் பரந்துபட்ட வீச்சினை உள்ளடக் கியிருந்தது. இவை கி.பி 2030ஆம் ஆண்டைக் கருத்திற் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. இவ் நிலைத்து நிற்கும் அபிவிருத்திக் குறிக்கோள்கள் ஐந்து விடயங்களில் விரிவாகக் கவனம் செலுத்துகின்றது. அவை **மக்கள், கோள், சுபீட்சம், சமாதானம், பங்குடமை** என்பனவாகும்.

## நிலைத்திருக்கும் அபிவிருத்தியின் முக்கிய மூன்று தூண்கள் (Pillars)

பொருளாதார அபிவிருத்தி, சமூக அபிவிருத்தி, சூழல் பாதுகாப்பு என்பன நிலைத்திருக்கும் அபிவிருத்தியின் முக்கிய மூன்று தூண்களாகக் கருதப்படுகின்றன.

## நிலைத்திருக்கும் அபிவிருத்திக்கு அவசியமாக மூலதனங்கள்

நிலைத்திருக்கும் அபிவிருத்திக்கு **மனித மூலதனம், பௌதீக மூலதனம், இயற்கை மூலதனம் , சமூக மூலதனம்** போன்ற நான்கு மூலதனங்கள் மிகவும் முக்கியமாகும்.

இங்கு குறிப்பிட்டுள்ள மூலதனங் களில் சமூக மூலதனம் என்ற வகைக்குள் எமது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவினை உள்ளடக்க முடியும்

## சமூக மூலதனம் Social Capital

பொதுநலனை அடையும் நோக் காகக் கொண்டு மக்களால் உருவாக்கப் படுகின்ற பரஸ்பர ஒத்துழைப்புக் குழு அமைப்புக்கள் என்பவற்றின் மூலம் உருவாக்கப்படும் மக்களிடையேயான சமூக நன்மைகள் சமூக மூலதனம் ஆகும். வேறு விதமாகக் கூறுமிடத்து சமூகங் களுக்கிடையேயான தொடர்புகளை அளவு ரீதியாகவும், பண்பு ரீதியாகவும் விருத்தியடையச் செய்யும் நிறுவனங்கள், நல்லொழுக்கங்கள், விழுமியங்கள், நியமங்கள், சங்க அங்கத்துவம் போன்ற தொடர்பாடல் வலையமைப்புக்கள் சமூக மூலதனமாகும். இது இலங்கையின் கலாசாரத்தின் ஒரு அம்சமாகும்.

Eg: விவசாய அமைப்புக்கள், மகளிர் அமைப்புகள்

எத்தகைய வளங்கள் இருப்பினும் சமூக மூலதனம் சிறப்புற அமையாத விடத்து உற்பத்தி வினைத்திறனை அடைவதில் சிரமங்களை எதிர்நோக்கும்.

சமூக மூலதனம் என்பதனுள் நபர்களிடையோன உறவு கூட்டிணைப்பு என்பவற்றினை நோக்கலாம். இந்தகைய வகையில் சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவினை உள்ளடக்க முடியும்

## அறிவுசார் பொருளாதாரம்

பொருளாதார வளர்ச்சியையும் அபிவிருத்தியையும் ஊக்குவிக்கும் பொருட்டு அறிவை உருவாக்குதல், அதனை விரிவாக்கல் மற்றும் அறிவை நிலைநிறுத்தல் போன்றவற்றை அடைய முற்படும் பொருளாதாரங்கள் அறிவுசார் பொருளாதாரங்கள் ஆகும்.

வெற்றிகரமான அறிவுசார் பொருளாதாரங்கள் பின்வரும் பண்பு களைக் கொண்டதாக அமையும்

- பொருளாதாரம் விஞ்ஞானம் தொழில்நுட்பத்துடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டிருக்கும்
- புத்தாக்கத்திற்கு உயர்முன்னுரிமை வழங்கும்
- கல்வி மற்றும் ஆராய்ச்சி அபிவிருத் திக்கு அதிக பங்களிப்புச் செய்யும்
- புத்திசாலிகளின் வெளியேற்றத்தை இயன்றளவு தவிர்க்கும்

இருபத்தோராம் நூற்றாண்டில் உலகப் பொருளாதாரத்தில் போட்டித் தன்மையினை பேணிச் செல்லும் பொருட்டு பௌதீக முதலீட்டு உள்ளீடு களில் முதலீடு செய்வதை விடுத்து பண்புசார் அறிவினை விருத்தி செய்யும் பொருட்டு அதிகளவு முதலீடுகளை மேற்கொள்வது அதிகம் முக்கியமான தாகக் கருதப்படுகின்றது.

கொரியா, தாய்வான் போன்ற நாடுகள் அறிவுசார் முதலீடுகளை மேற்கொண்டு இன்று வெற்றிபெற்று வரும் நாடுகளாகக் காணப்படுகின்றது.

இங்கு நாம் நோக்க வேண்டியது எதிர்காலப் பரம்பரையினர் தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் ஆற்றலைப் பாதிக்காத வகையில் நிகழ்காலப் பரம்பரை தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் விதத்திலான அபிவிருத்தியே நிலைபேறான அபிவிருத்தி என்ற கருத்தினை ஏற்படுத்துவதற்கு எமது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா எங்களுக்கு உதவுகின்றது. மேலும் நிலைபேறான அபிவிருத்திக்குப் பொருளாதார, சமூக மற்றும் சூழல் ஆகிய மூன்று துறைகளிலும் ஒரு சமநிலையான வளர்ச்சியொன்று ஏற்பட வேண்டும். அதற்கும் சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா எங்களுக்கு உதவுகின்றது

நிலைபேறான அபிவிருத்தியின் தோற்றப்பாடுகள் சூழல் ரீதியான தோற்றப்பாடு, சமூக ரீதியான தோற்றப் பாடு, பொருளியல் ரீதியான தோற்றப் பாடு, சுற்றாடல், வினைத்திறன், உறுதிப்பாடு, சூழல் ரீதியான தோற்றப் பாடு, மக்களுக்குச் சாதகமான சுக நலமுள்ள சூழல், சமூக ரீதியான தோற்றப் பாடு, நியாயத்துவம், பங்குபற்றல், வலுவூட்டல்,சமூக சகவாழ்வு ,கலாசார ரீதியான அடையாளம் போன்றவற்றைக் குறிப்பிடலாம் இவற்றிற்கு எமது சுதேசியம் உதவுகின்றது

அதுமட்டுமல்லாமல் மனிதனின் அறிவு, திறன், மனப்பாங்கு என்பவற்றை யும் விளையாட்டு, கலை, பண்பாடு, விழுமியங்களையும் வளர்க்க உதவுகின் றது. மேலும் பல கல்விமான்களையும் விளையாட்டு வீரர்களையும் உயர்பதவி

வகிப்போர் களையும் உருவாக்குவதற்கு அடிப்படையாக எமது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா எங்களுக்கு உதவுகின்றது

மானிட அபிவிருத்தி என்பது மனிதர்களுக்குத் தமது மானிட ஆற்றல்களை முழுமையாக விரிவு படுத்திக் கொள்வதற்குப் போலவே அவ்வாற்றல்களைப் பொருளாதார, சமூக, கலாசார மற்றும் அரசியல் துறைகளினுள் உச்ச அளவில் பயன்படுத்துவதற் கானஆற்றலைப் பெற்றுக் கொடுப்பதும் எதிர்கால பரம்பரைக்கு அவ்வுரிமையை உறுதிப்படுத்துவதுமாகும்.

மானிட அபிவிருத்தி என்பது பல்வேறு தோற்றப்பாடுகள் கொண்ட சிறந்த ஒரு எண்ணக்கருவாகும். அதேவேளை அது செயற்பாடொன்று என்ற வகையில் ஒவ்வொரு தனி நபரினதும் மரபுகள் மற்றும் உரிமைகளை வேறுபடுத்திக் காட்டும் பூகோள ரீதியாக தொடர்புபடுகின்ற அரசியல், பொருளா தார மற்றும் கலாசார கட்டமைப்பினுள் செயற்படுவதொன்றாகும். அதன் மூலம் பொதுமக்களால் அனுபவிக்கப்படுகின்ற சுதந்திரம் நிர்ணயிக்கப்படுகின்றது. அத்தோற்றப்பாடுகளுக்குரிய துறைகள் வருமானம், கல்வி, சுகாதார நிலைமை, வலுவூட்டம் ,அரசியல் சுயாதீனம், நல்ல சமூகத் தொடர்பு, சமத்துவம், வேலை செய்யும் சூழல்,ஓய்வை அனுபவிக்கும் வசதி,அரசியல் ரீதியில் பாதுகாப்பு, பொருளாதார சுதந்திரம்,சுற்றாடலின் தரம் என்பனவாகும் இத்துறைகளின் பல வற்றிற்கு சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா எங்களுக்கு உதவுகின்றது. எனவே நாம் எமது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவை கவனமாக எதிர்கால சந்ததியினரிடம் கையளிக்க அவர்கள் அவ்வாறே அடுத்த தலை முறையிடம் கையளிக்க வேண்டிய தேவை காணப்படுகின்றது.

மேலும் அறிவை உருவாக் குதல்,அதனை விரிவாக்கல் மற்றும் அறிவை நிலைநிறுத்தல் போன்றவற்றிற்கும் சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா உதவுகின்றது

**முடிவுரை:**

எமது முன்னோரால் தூர நோக்குச் சிந்தையுடன் உருவாக்கப்பட்ட இச் சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா அந்நியரின் ஆட்சிக்காலத்தில் இருந்து இன்றுவரை எமது கலை, கலாசார பண்பாட்டு விழுமியங்களை வளர்த்து வருவது மட்டு மல்லாது. **1995** இல் யாழ்ப்பாணத்திலிருந்து இடம் பெயர்ந்து இன்னல்பட்ட காலத்திலும் கூட எமது வழிகாட்டிகளால் **வரணியில்** வைத்து இவ்விழா கொண்டாடப்பட்டு இடைவிடாது இயங்கிவரும் ஒரு சமூகக் கட்டமைப்பாக இருந்து வருகின்றது. அதுமட்டுமல்லாது நூற்றாண்டு காணும் பெருமைமிகு சமூகக் கட்டமைப்பாகவும் உள்ளது. இவ்விழாவிற்காக உண்மை உணர்வுடனும் உரிமையுடனும் சேவை செய்வதற்கு வயது முதிர்ந்தவர்களும், இளைய சந்ததியினரும் உள்ளூர் அரியாலைச் சுதேசிகளும், புலம்பெயர் நாடுகளில் வாழ்கின்ற அரியாலை மீது பற்றுக் கொண்ட எமது அரியாலைச் சுதேசிகளும் இன்றும் என்றும் என்றென்றும் தம்மால் ஆன சரீர ,பண ரீதியிலான பங்களிப்பை மேற்கொள்வ தற்குத் தயாராக உள்ளனர். அந்த வகையில் அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவை இன்னும் பல நூற்றாண்டுகள் மேலும் மெருகூட்டி வளர்த்தெடுத்து எமது அரியாலைக் கிராமத்தின் கலை, கல்வி, விளையாட்டு, ஒற்றுமை,பலம் என்பவற்றை உலகிற்கு எடுத்துக் காட்டுவோம். உண்மையில் ஒற்றுமையானதும் அர்ப்பணிப்புடனும்

*சமூக வளர்ச்சியில் அக்கறை காட்டும் சமூகக் கட்டமைப்புள்ள அரியாலை மண்ணில் அவ் மண்ணின் புதல்வர்களாக இருப்பதையொட்டி நாம் பெருமை யடைகின்றோம். நந்திக் கொடியதனைக் கொண்டு நாற்றிசையும் அரியாலையின் புகழ் பரப்பும் நூற்றாண்டு காணும் சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா என்றும் நிலைத்திட வாழ்த்துகின்றேன். சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா வெறுமனே ஒரு கிராமத்தின் விழா இல்லை, அது ஒட்டுமொத்தப் பொருளாதாரத்தின் வளர்ச்சிக்கும் நிலைத்திருக்கும் பொருளாதார அபிவிருத்திக்கும் உதவும் ஒரு விழாவாகும்.*

**உசாத்துணை**


- *இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை 2015*
- *நிலைத்திருக்கும் அபிவிருத்திக்கு சூழல் பாதுகாப்பின் அவசியம் வலம்புரி 2018.06.05*
- *ஆசிரியர் வழிகாட்டி தரம் - 13*


## விபூதியியல்

- சிவபெருமானை வழிபடும் சமயத்திற்குப் பெயர் யாது?
  சைவசமயம்
- சைவசமயிகள் சரீரத்திலே அவசியமாகத்தரிக்க வேண்டிய அடையாளம் யாது?
  விபூதி
- விபூதியாவது யாது?
  பசுவின் சாணத்தை அக்கினியாலே சுடுதலால் உண்டாகிய திருநீறு
- எந்த நிற விபூதி தரிக்கத்தக்கது?
  வெள்ளை நிற விபூதி
- விபூதியை எதில் எடுத்து வைத்துக் கொண்டு தரித்தல் வேண்டும்?
  பட்டுப் பையிலேனும், சம்புடத்திலேனும் எடுத்து வைத்துக் கொண்டு தரித்தல் வேண்டும்.
- விபூதியை எந்தத் திக்குமுகமாக இருந்து கொண்டு தரித்தல் வேண்டும் யாது?
  வடக்கு முகமாகவேனும், கிழக்கு முகமாக வேனும் இருந்து கொண்டு தரித்தல் வேண்டும்.
- விபூதியை எப்படித் தரித்தல் வேண்டும்?
  நிலத்திலே சிந்தாவண்ணம் அண்ணாந்து ஓம் சிவ சிவ என்று சொல்லி வலக்கையின் நடுவிரல் மூன்றினாலும் நெற்றியிலே தரித்தல் வேண்டும்.

"பணி என் அணி"

# அரியாலை இந்து இளம் சந்ததியர் ஒன்றியம் பற்றிய சிறுகுறிப்பு



சரவணமுத்து அருணன்
(லண்டன்)

அரியாலையூர் செழுமை மிகுந்த ஊர் என்பதனை பலரும் கூற நாம் கேள்வியுற்றிருக்கிறோம். இதில் ஐயம் ஏதுமில்லை. இச் செழுமைக்குக் காரணங்கள் பலவுண்டு. கல்வியில் சிறந்த ஊர். கலைகளை வளர்த்த ஊர். விளையாட்டுத்துறையில் சாதனைகள் பல படைத்த ஊர். வேளாண்மையில் திளைக்கும் ஊர். கோவில்கள் நிறைந்த ஊர். சனசமூக நிலையங்கள் பல இயங்கும் ஊர். இவையெல்லாம் அரியாலையூரின் சிறப்பையும் செழுமையையும் சுட்டி நிற்பன.

அரியாலை ஊரின் சிறப்பை, செழுமையை விதந்து கூறுவதற்கு இவற்றையெல்லாம் விட இன்னோமொரு தகுதி உண்டு. மக்கள் தொண்டில் மகிழும் ஊர் என்பதே அது. அரியாலையின பல்வேறு நிறுவனங்களும், பற்பல முயற்சிகளும் சிறப்பாக நடைபெற வழிகோலி நிற்பது அரியாலை ஊரின் பண்பாட்டோடு இணைந்திருக்கும் மக்கள் பணி எனும் அரும் பண்பேதான். இப் பண்பாட்டின் ஓரங்கமாகவே 'பணி என் அணி' என்ற முழக்கத்துடன் தோற்றம் பெற்ற அரியாலை இந்து இளைஞர் சந்ததியர் ஒன்றியத்தின் செயற்பாடுகளை நாம் இனங்காணலாம்.

1970 ஆம் ஆண்டு நடுப்பகுதிக் கால கட்டம். இலங்கைத்தீவின் தேசிய இனமுரண்பாடு தமிழர் பகுதிகளைத் தீண்டத் தொடங்கிய நேரம். கல்வி வாய்ப்பிலும் தொழில் வாய்ப்புகளிலும் தமிழர்கள் புறக்கணிக்கப்படத் தொடங்கிய காலம். போர்க்குணம் கொண்ட இளைஞர்கள் அநீதிக்கெதிராக ஆயுதம் ஏந்தி போராட அணிசேர முனைந்த காலகட்டம். தமிழ் இளைஞர்களில் ஒரு பகுதி ஊரை விட்டு வேறுநாடுகளுக்குத் தொழில்வாய்ப்புத் தேடி புறப்படும் எண்ணம் தோற்றம் பெற்ற ஆரம்பக் காலம்.

இவ் வேளையில் ஊருக்கான மக்கள்பணிச் செயற்பாடுகளில் சற்று மந்தம் ஏற்படுவதாக உணரப்பட்ட போது, மக்கள் பணி ஆற்றுவதற்காக ஓர் இளையோர் அணியினை கட்டியெழுப்பும் சிந்தனை அரியாலை அருளம்பலம் வீதியில் இருந்த ஒரு தனியார் கல்வி நிறுவனத்தின் வாணி விழாவில் கூடியயிருந்த சில இளையோர் மத்தியில் ஏற்படுகிறது. இந்த சிந்தனையின் தொடர்ச்சியாக ஒரு அமைப்பாக தம்மை ஒழுங்கமைத்துக் கொள்ள அவர்கள் முடிவு செய்து கொள்கிறார்கள். 'பணி என் அணி' என்ற பதாகையினைத் தமது செயற்பாட்டு முழக்கமாக வரித்துக் கொள்கிறார்கள். தமது அமைப்புக்கு அரியாலை இந்து இளம் சந்ததியர் ஒன்றியம் எனப் பெயர் சூட்டிக் கொள்கிறார்கள்.

அரியாலை இந்து இளம் சந்ததியர் ஒன்றியம் தனக்கென சிறந்த வொரு நிர்வாகக் கட்டமைப்பை அமைத்துக் கொள்கிறது. ஒன்றியத்துக் கான தலைவர், செயலாளர், பொருளாளர்

போன்ற பொறுப்பு நிலைகளுடன் கல்விக் குழு, சமூகசேவைக் குழு, விளையாட்டுக் குழு போன்று குழுக்களும் உருவாக்கப் பட்டன. நிர்வாக மற்றும் செயற்பாட்டு உறுப்பினர்களுடன் ஒன்றியத்துக்கான போசகர், ஆலோசகர்கள், காப்பாளர் களும் தெரிவுசெய்யப்பட்டனர். காலம் சென்ற பொன்னம்பலம் ஆசிரியர் அவர்கள் ஒன்றியத்தின் போசகராக விளங்கி இளையோருக்கு தனது ஆசிகளை வழங்கினார்கள். காலம் சென்றவர்களான நடராஜா ஆசிரியர், கதிரவேலு ஆசிரியர், திரு.த. ஆலாலசுந்தரம் போன்றோர் ஒன்றியத்தின் ஆலோசகர் களாகச் செயற்பட்டு ஒன்றியத்தின் செயற் பாடுகளுக்கு உறுதுணையாக விளங்கி னார்கள். ஒன்றியத்தின் வளர்ச்சிக்கு காப்பாளர்களின் பங்களிப்பும் குறிப் பிட்டுச் சொல்லப்பட வேண்டியது. காலம் சென்ற க. மகாலிங்கம், மற்றும் ப.சிறிஸ்கந்தன், ம.சிறிதேவா, கு.மதிசூடி, க.மகேந்திரன், அ.சுதர்சன் ஆகியோர் அரியாலை இந்து இளம் சந்ததியர் ஒன்றியத்தின் காப்பாளர்களாக பணி யாற்றி ஒன்றியத்தின் சிறந்த செயற் பாட்டுக்கு பங்களித்திருக்கிறார்கள்.

அரியாலை இந்து இளம் சந்ததி யர் ஒன்றியம் பல்வேறு செயற்திட்டங் களை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தி வந்தது. அனைத்துச் செயற்திட்டங்களும் ஊதியம் எதுவும் பெற்றுக்கொள்ளாத மக்கள் தொண்டு அடிப்படையிலேயே மேற்கொள்ளப் பட்டன. க.பொ.த. உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான கல்வி வகுப்புகள் நடாத்துதல், வாராந்தம் அரியாலை சித்திவிநாயகர் ஆலயத்தை கழுவிச் சுத்தம் செய்தல், கோவில் திருவிழாக்களின் போது தண்ணீர்ப்பந்தல் அமைத்தல், சரஸ்வதி நூல் நிலையம், மத்திய வியைாட்டுக் கழகம், சுதேசியத் திருநாட் கொண்டாட்டவிழா போன்ற வற்றின் சிறப்பான செயற்பாடுகளுக்கு உறுதுணை வழங்குதல், ஆலயத் திருவிழாக் காலங்களில் சிரமதான ஏற்பாடுகளை ஒழுங்குசெய்து நிறை வேற்றல், வருடாவருடம் வாணி விழாவினை சிறந்த பேச்சாளர்களை வரவழைத்து, நல்ல பல நிகழ்ச்சிகளை ஒழுங்கமைத்து சிறப்பாக ஏற்பாடு செய்தல் போன்றவை அரியாலை இந்து இளம் சந்ததியர் ஒன்றியம் மேற்கொண்ட பணிகளில் இன்றும் நினைவில் நிற்பவை.

அரியாலை இந்து இளம் சந்ததியர் ஒன்றியத்துடன் இணைந்து செயற்பட்ட இளையோர் படையணி செயற்திறன் மிக்கதாய் இருந்தது.

இப்போது இவர்கள் தமது வாழ்க்கைப்பயணத்தின் இளமுதுமைக் காலத்தைத் தொட்டு நிற்கிறார்கள். பலர் அரியாலை மண்ணை விட்டுப் புலம் பெயர்ந்து வெவ்வேறு நாடுகளில் வாழ்ந்து வருகிறார்கள். இவர்களில் சிலர் நம்மை விட்டுப் பிரிந்து எமது நினைவுகளுக்கு மட்டும் உரியவர்களாகி விட்டார்கள். இருந்தும் 4 தசாப்தங் களுக்கு முன்னர் 1975 முதல் 1982 ஆண்டு காலம்வரை இவர்கள் எமது ஊருக்கு ஆற்றிய பணி ஊரின் வரலாற்றுப் பக்கங்களில் தனக்கொரு இடத்தைப் பிடித்தே வைத்துள்ளது.

அரியாலை மக்களால் பாரம்பரிய மாக கொண்டாடப்பட்டு வரும் சுதேசிய திருநாட் கொண்டாட்டவிழாவின் நூற்றாண்டுவிழா மலரில் அரியாலையின் வரலாற்றுடன் தன்னை இணைத்து நின்ற அரியாலை இந்து இளம் சந்ததியர் ஒன்றியம் தொடர்பான இச் சிறு குறிப்பு இடம்பெறுவது காலப் பொருத்தம் நிறைந்ததாகும். இதற்கு வாய்ப்பளித்த மலர்க் குழுவுக்கு நன்றி!

# சிறந்த நூல்களை வாசிப்பதால் உன்னத வாழ்வை அடையலாம்



சபாரட்ணம், தனபாலசிங்கம்
ஓய்வுபெற்ற பிரதம நூலகர், யாழ் பொதுசன நூலகம்
செயலாளர், நூலக விழிப்பணர்வு நிறுவகம்

வாசிப்பு என்பது எழுத்து வடிவில் அல்லது அச்சு வடிவில் இருக்கும் சொற்களை அர்த்தத்துடன் உச்சரிப்பதுடன் அவற்றை விளங்கிக் கொள்வதாகும். வாசிப்பு எமது அன்றாட வாழ்வின் தேவைக்கும் கல்வி அபிவிருத்திக்காகவும் அவசியமான அடிப்படைக் கருவியாகும். வாசிப்பு நாம் புதிய சிந்தனையை உருவாக்குவதற்கும், தேவையான தகவல்களைப் பெறுவதற்கும், மகிழ்ச்சியை பெருக்குவதற்கும், உந்து சக்தியாக இருக்கும் ஒரு செயற்பாடாகும்.

எனவே மனித வாழ்விற்கு வாசிப்பு மிக முக்கியமான செயற்பாடாக அமைகிறது. பாடசாலை மாணவன் தனது கல்வி வளர்ச்சிக்கும் பரீட்சை சித்தியடைவதற்கும், தொழில் புரிவோர் தமது தொழிலை சிறப்பாக நிறைவேற்றுவதற்கும் புதிய நடைமுறைகளை உள்வாங்குவதற்கும், சமூகத்திலுள்ளோர் தங்கள் வாழ்க்கையை உயர்த்துவதற்கும் வாசிப்பை மேற்கொள்கின்றனர்.

வாசித்தல் மனிதனை சமூக மட்டத்தில் சிறந்த பிரஜையாக உருவாக்குகிறது. வரலாற்று ரீதியாக நோக்கும்போது வாசிப்புப் பழக்கம் பல நூற்றாண்டுகளிற்கு முன்னரே ஆரம்பித்து விட்டது என்பதை உறுதிப்படுத்தலாம். நூலானது ஒவ்வொரு மனிதனும் தனது சிந்தனையில் தோன்றிய கருத்துக்களை ஏனைய மனிதர்களும் அறிவதற்காகப் பதிவு செய்யப்பட்ட ஆவணமாகும். ஆரம்ப காலத்தில் கல்லில் செதுக்கியும், மரப்பட்டைகளிலும், மிருகத்தோல்களிலும் சாயங்களைக் கொண்டு எழுதியும், களிமண் தட்டுகளில் பதித்தும் தமது கருத்துக்களை ஏனையவர்களிற்கு வெளிப்படுத்தினார்கள். பின்னர் இப்பதிவுகள் புற்பாய்களில், துணியில், காகிதத்தில் என பல வடிவங்களில் பதிவு செய்யப்பட்டன. நாகரிகம் வளர்ச்சியடையாத காலத்தில் இப்பதிவுகளை எல்லோரும் வாசிக்க முடியாதவர்களாக இருந்தனர். வாசிக்கக் கூடிய அறிவாளிகளென போற்றப்பட்டவர்கள் மக்களிற்கு வாசித்துக் காட்டி அவர்களது அறிவாற்றலை மேம்படச் செய்தனர். இதனை உற்று நோக்கினால் வாசிப்பு என்பது மனித வளர்ச்சிக்கு மிக அவசியமானது என்பது புலனாகின்றது. இதனால்தான் ஆன்றோர் “வாசிப்பதனால் மனிதன் பூரணமடைகின்றான்” என தெரிவித்துள்ளனர்.

அதிகளவு எழுத்தறிவு குறைந்த வாசிப்புப் பழக்கத்தை வளர்க்காமல் இருக்கும் மக்களைக் கொண்டிருக்கும் நாடுகள் பொருளாதாரத்திலும், அரசியலிலும் கீழ்மட்ட நிலையிருப்பதால் வாழ்க்கைக்குத் தேவையான தகவல்களையோ தரவுகளையோ பெற முடியாமலிருப்பதுடன் தங்கள் வாழ்க்கையை வளப்படுத்த முடியாமலிருப்பார்கள்.

மனிதன் சமூகத்தில் மதிப்பிற்குரியவனாகவும், எழுத்தறிவாற்றல் உடையவனாகவும், சுய சிந்தனையில் செயற்படக் கூடியவனாகவும் இருக்க வேண்டுமானால் கல்வி கற்றிருக்க வேண்டும். இதனாலதான் ஆன்றோர்கள் "கண்டதைக் கற்றால் பண்டிதனாவான்" எனப் பகின்றுள்ளார்கள். கற்றலிற்கு வாசிப்பு என்பது முக்கிய செயற்பாடாகும். வகுப்பறைக் கல்விக்கு அப்பால் மாணவன் தனது அறிவாற்றலை வளப்படுத்துவதற்கு வாசிப்புப்பழக்கம் மிக அவசியமாகின்றது. அதனைப் பரீட்சைகளில் சிறந்த பெறுபேறுகளைப் பெறும் மாணவர்களை ஆய்வு செய்தால் அவர்கள் நூலகங்களைப் பயன்படுத்துவதையும் தமது பொழுதுபோக்கிற்காக வாசிப்பை மேற்கொள்ளுவதையும் அவதானிக்க முடியும். வாசிப்பதனால் மாணவர்கள் தமது பாடங்களை இலகுவாகப் புரிந்து கொள்ளக் கூடியவர்களாகவும் உலக அறிவைத் தம்முள் உள்வாங்கியவர்களாகவும் காணப்படுகின்றனர். இதற்கு மேலாக நல்ல மொழிநடையில் எழுத பேசக் கூடியவர்களாகத் திகழ்கின்றனர்.

வாசிப்பு மனித வாழ்வின் சிறந்த நற்பழக்கங்களில் ஒன்றாகத் திகழ்கின்றது. பல வருடங்களிற்கு முன்னர் எம்மவர்கள் தமது ஓய்வு நேரத்தை நல்ல நூல்களை வாசிப்பதிலேயே செலவழித்தனர். பாடசாலைகளிலும் வாசிப்பு பழக்கத்தைக் கட்டாயப்படுத்தியிருந்தனர். பாடசாலை நேரத்தில் வாரமொருமுறையாவது நூலகங்களிற்கு சென்று வாசிக்க தூண்டப்பட்டனர். இதனால் அனைத்து மாணவர்களும் வாசிப்பு பழக்கத்தை பெற்றிருந்தனர். அது மட்டுமல்லாமல் அப்போதைய கற்பித்தல் முறையில் பாடப் புத்தகங்கள் மட்டுமே பயன்படுத்தப் பட்டன. இதனால் ஒவ்வொரு மாணவரும் புத்தகங்களை அத்தியாயம் அத்தியாயமாக வாசிக்க வேண்டிய கட்டாயம் இருந்தது. இப்பழக்கம் மாணவரை வேறு நூல்களை வாசிக்கத் தூண்டின. தற்காலத்தில் கற்றல் என்பது பரீட்சையை மையப்படுத்தியிருப்பதால் மாணவர்கள் பரீட்சை வழிகாட்டி நூல்களை படிப்பதற்கு முக்கியத்துவம் கொடுப்பதால் வாசிப்புப் பழக்கத்தை மறந்து விட்டனர். இதனால் மாணவர்களிடையே ஆழமான வாசிப்புப்பழக்கம் ஏற்படவில்லை. இது அவர்களது அறிவு ஆற்றலை ஒரு குறுகிய வட்டத்திற்குள்ளே அடக்கியுள்ளது. எனவே வாசிப்புப் பழக்கத்தை அனைத்து பிள்ளைகளிடமும் ஏற்படுத்த வேண்டும். வாசிக்க தொடங்கும் பிள்ளை ஆயிரக் கணக்கான சொற்களை மனதில் பதிப்பதனால் மொழி ஆற்றலில் சிறந்தவனாக திகழ முடிகிறது. அத்துடன் சிறந்த மொழி நடையில் கற்கும் எல்லா மொழிகளிலும் எழுத வாசிக்க கூடியவனாக மாறுகின்றான். தான் படித்த சொற்களின் அர்த்தங்களையும் அவற்றிற்கு ஈடான சம சொற்களையும் எதிர் கருத்துக்களையும் அறிந்து கொள்கிறான்.

வாசிப்பு என்பது சிறந்த பொழுது போக்கு. வாசிப்புப் பழக்கத்தையுடையவர் தனது புலனை வேறு வழிகளில் செல்லவிடாது நல்ல சிந்தனையை உருவாக்குபவர்களாகத் திகழ்கிறார்கள். இதனால்தான் ஆன்றோர் "மனிதனுக்கு சிறந்த நண்பர்கள் நல்ல நூல்களே" எனத் தெரிவித்தனர். வாசிப்பு மனித மனத்தை ஒரு முகப்படுத்துவதற்கு சிறந்த செயற்பாடாகும். வாசிப்பு பழக்கம் உடைய ஒருவர் தனது வாழ்க்கை செயற்பாடுகளையெல்லாம் சிந்தித்து ஒழுங்கு முறையில் செய்வார்கள். சிந்திப்பது சிறந்த நூல்களை வாசிப்பதால் தூண்டப்படுகிறது. உளவியல் பேரறிஞ

ரான சிக்மண்ட் ப்ராய்ட் "உடலிற்கு உடற்பயிற்சி எவ்வளவு முக்கியமோ அதே போல் மனப்பயிற்சிக்கு நூல்களை வாசித்தல் முக்கியமாகும்" என தெரிவித்துள்ளார். நல்ல நூல்களை வாசிக்க வேண்டுமென்றால் கட்டாயமாக நூலகங்களிற்குச் செல்ல வேண்டும். நூலகம் அறிவுத் தேடலினதும், தகவல் தேடலினதும் மையமாக விளங்குகின்றது. நூலகத்தைப் பார்த்து ஒரு அறிஞர் "உள்ளே பல அறிவாளிகள் தூங்கிக் கொண்டிருக்கிறார்கள் அவர்களைத் தட்டி எழுப்பி அவர்களுடன் உசாவுங்கள். அப்போது நீங்களும் அறிஞர்கள் ஆவீர்கள்" என சொன்னார். இது ஒரு எவ்வளவு அற்புதமான கூற்று. அவர் நூலகத்தினுள்ளே அறிஞர்கள் நூல்கள் உருவத்தில் இருக்கின்றார்கள், அவர்களை எடுத்து வாசித்தால் அவர்களது சிந்தனைகளிலே உருவான கருத்துக்களை அறியும் போது வாசகனின் சிந்தனையில் மேலும் புதிய கருத்துக்களைக் கொண்ட சிந்தனைகள் உருவாகும். இது சமூக வளர்ச்சிக்கு வித்திடுகின்றது எனத் தெரிவித்துள்ளார். மனிதர்களான நாம் கட்டாயமாக நூலகங்களைப் பயன் படுத்திப் பல தரப்பட்ட நூல்களை வாசிக்க வேண்டும். அப்போதுதான் நாம் உலக அறிவு எல்லாவற்றையும் உள்வாங்க முடியும். நமது சமூகத்திற்கும் நன்மை களைச் செய்ய முடியும். வாசிப்பு மூலம் பெறப்படும் அறிவால் உருவாகும் புதிய சிந்தனைகளால் அபிவிருத்தியிலும் புதுப்புதுவிதமான நுட்பங்களை பிரயோகிக்க முடியும்.

'மனிதனிற்கு சிறந்த நண்பன் நான்கு நூல்களே' என எம் முன்னோர் எடுத்துரைத்துள்ளனர். மனிதன் நல்ல நூல்களை வாசித்து தனது ஓய்வு நேரங்களை பிரயோசனப்படுத்தியதால் அவனது சிந்தனைகள் வேறு பயனற்ற செயற்பாடுகளிற்கு தூண்டப்படவில்லை. தான் காணமுடியாத பிரதேசங்களைப் பற்றி பல விடயங்களை அறிய முடிகின்றது. பொழுது போக்கிற்காக வாசிப்பவர்கள் பல தரப்பட்ட பிரயாண நூல்கள், விஞ்ஞான கண்டு பிடிப்புக்கள், வரலாறு போன்ற நூல்களை வாசிப்பதால் உலகில் காணப்படும் பல விடயங்களை உள்வாங்கி தமது அறிவிற்கு மேலும் வளத்தை ஏற்படுத்துகிறார்கள். சிறந்த நல்லறிவைப் புகட்டக் கூடிய நூல்களை வாசித்ததனாலேயே எமது சமூகம் கற்றறிந்த சமூகமாகவும் நல்ல பண்புள்ள சமூகமாகவும் வாழ்ந்தது. ஆனால் அண்மைக் காலமாக வாசிப்புப் பழக்கத்தை கைவிட்ட சமூகம் உருவாகிய பின்னர் தமது ஓய்வு நேரங்களை பல தரப்பட்ட சமூக விரோத செயற்பாடு களிற்குத் தம்மை உட்படுத்தத் தொடங்கி விட்டனர். இன்றைய காலத்தில் அதிகரித்துவரும் சமூக விரோதச் செயற்பாடுகளுக்கு, வாசிப்பு பழக்கம் அற்றுப்போனதே காரணமாகக் கொள்ளலாம். ஆகவே வாசிப்புப் பழக்கத்தைக் குழந்தைகளிடத்தில் உருவாக்கப் பெற்றோர் ஊக்குவிக்க வேண்டும். நூலகங்களும் பாடசாலைகளும் பிள்ளைகள் வாசிப்பதற்கான தூண்டு தல்களை ஏற்பாடு செய்தல் அவசிய மாகும். தொழில்நுட்பம் வளர்ச்சி யடைந்தமை வாசிப்பிற்குத் தடையாக இருக்கின்றது என்னும் கோஷம் நாட்டில் பரவியிருப்பதை எவராலும் ஏற்க முடியாது. வாசிக்க விரும்பும் எவருக்கும் தொழில்நுட்ப வளர்ச்சி தடையாக இருக்க மாட்டாது. இது தடையாக இருக்குமாயின் தினமும் உலகம் முழுவதும் பல லட்சக் கணக்கான நூல்கள் அச்சிடப்பட்டு வெளியிடுவது தடைப்பட்டிருக்கும். ஆனால் அப்படி நடைபெறாமல் தினமும் பல லட்சக் கணக்கான நூல்கள் பல மொழிகளில் வெளியிடப்படுகின்றன. தொழில்நுட்ப

வளர்ச்சியடைந்த இந்தியா, சிங்கப்பூர், ஜப்பான் போன்ற நாடுகளில் பல ஆயிரக்கணக்கான நூல்கள் அச்சிடப் படுவதையும் அவற்றை வாசிக்க இளைய சமூகம் முண்டியடிப்பதையும் அவ தானிக்க முடியும். சிங்கப்பூரில் பாட சாலை விடுமுறை விடும் நாளில் பாட சாலை நூலகங்களிலிருந்து விடுமுறை வாசிப்பிற்கென பல நூல்களை மாணவர் கள் எடுத்துச் செல்வதை அவதானிக் கலாம். ஒரு மாணவன் 30 நூல்களை விடுமுறை வாசிப்பிற்காக எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுகிறது. இது மாணவர் தமது ஓய்வு நேரத்தை வாசிப்பில் கழிப்பதை விரும்புகிறார்கள் என்பதை வெளிப்படுத்துகிறது. இங்கு தொழில் நுட்ப வளர்ச்சி அச்சிட்ட நூல்களை வாசிப்பதில் எவ்விதத்திலும் பாதிக்க வில்லை. மாறாக புதிய புதிய சிந்தனைகளைக் கொண்ட பல நூல்கள் அச்சிட்டு வெளிவந்து கொண்டிருக் கின்றன. அதற்கு மேலாக எழுத்துக்களை வாசிக்கத் தெரியாத குழந்தைகளை வாசிக்க பழக்குவதையும் அவதானிக்க முடிகிறது.

வாசிப்புப் பழக்கம் சிறு குழந்தை யாக இருக்கும் பொழுதே வீட்டிலிருந்து ஆரம்பிக்கப்படுகின்றது. வீட்டில் குழந்தைகளுக்கு பாடல்கள் சொல்லிக் கொடுப்பதன் மூலம் படப் புத்தகங்களை பார்க்க வைப்பதன் மூலம் வாசிப்புப் பழக்கத்தை ஆரம்பிக்கத் தூண்ட முடியும். குழந்தைப் பருவத்தில் வாசிப்புப் பழக்கத்தைத் தூண்டுவதற்காக இலங்கை அரசால் ஒவ்வொரு ஆண்டும் ஒக்டோபர் மாதத்தை தேசிய வாசிப்பு மாதமாகப் பிரகடனப்படுத்தி அம் மாதத்தில் பாடசாலைகளிலும் நூலகங்களிலும் வாசிப்புப் பழக்கத்தை மேம்படுத்த நிகழ்வுகளை நடாத்த ஆலோசனைகள் வழங்கியுள்ளது. அத்துடன் ஒவ்வொரு ஆண்டும் வேறு வேறு தொனிப் பொருளில் மகுட வாசகங்களை உருவாக்கி இந்நிகழ்வுகளை நடத்துமாறு பணிப்புரையும் வழங்கப்படுகிறது.

மேலும் இலங்கை அரசு இலங்கையில் 1969 ஆண்டு கல்வி நூற்றாண்டை கொண்டாடிய காலத்தில் “சியவச நூலகம்” என பல பாடசாலைகளில் நூலகங்களை நிறுவி மாணவர்களை வாசிப்பதற்கு உற்சாகமளித்தனர். இதனால் நகரப் பாடசாலைகளில் மட்டுமே இருந்த நூலக சேவை கிராமப் பாடசாலை களிலும் உருவானது. இது கிராமப்புற மாணவர்களும் தங்கள் வகுப்பறைக் கல்விக்கு அப்பால் தங்கள் அறிவை வளர்க்கக்கூடிய நூல்களை வாசிக்க உதவியளிக்கப்பட்டது.

காலம் சென்ற இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி மாண்புமிகு ஆர்.பிரேமதாஸா அவர்கள் இலங்கை மந்திரி சபையில் உள்ளூராட்சி அமைச்சராக இருந்த வேளையில் 1970களில் கிராமங்கள் தோறும் நூலகங்கள் நிறுவ வேண்டுமென்ற நோக்கில் கிராம சபைகள், பட்டின சபைகள், நகர சபைகள் அனைத்திலும் சிறிய நூலகங்களை நிறுவுமாறு பணிப்புரை வழங்கி மக்களை வாசிப்புப் பழக்கத்திற்கு உள்வாங்க உற்சாக மளித்தார். இதனால் கிராம மக்கள் தங்கள் ஓய்வு நேரங்களில் நல்ல நூல்களை வாசிக்கத் தூண்டப்பட்டனர்.

வாசிப்புப் பழக்கத்தை பாட சாலைக்கு அப்பால் வளர்ப்பதற்கு நூலகங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. சிறார்கள் வாசிக்க விரும்புவதற்கு ஏற்ற படப் புத்தகங்கள், ஒரு சொல்லில் அல்லது ஒரு வரியில் படத்திற்கான விளக்கத்தையும் தரும் நூல்கள், பல வடிவங்களில் அச்சிட்ட நூல்கள், படக்கதை புத்தகங்கள்

போன்றவற்றை நூலகங்களில் சேர்த்து வைத்தல் சிறார்களை நூலகத்திற்கு வருகை தந்து நூல்களைப் பார்க்கத் தூண்டும்.

சிறுவர்களைக் கவரக்கூடிய கதை சொல்லும் நிகழ்ச்சியை நடாத்துதல், கதை வாசித்தல் நிகழ்ச்சியை நடாத்துதல் சிறுவர்களின் வாசிப்பு ஆர்வத்தை தூண்ட வல்லன. இந்நிகழ்ச்சியின் முடிவில் கேள்விகளை கேட்டு சிறப்பாக பதிலளித்த வர்களிற்கு பரிசளித்தலும் ஒருவகைத் தூண்டுதலாகும்.

அடிக்கடி சித்திரப்போட்டி, பொது அறிவுப் போட்டி நடத்தி அவர்க ளது பெயர்களையும் ஆக்கங்களையும் காட்சிப்படுத்துவதும் வாசிப்புப் பழக்கத் தைத் தூண்டும். நூலக பூங்காவில் தொங்கும் நூலகம் அமைத்து சிறுவர்கள் விளையாடிக் கொண்டு வாசிப்பதை ஊக்குவித்தலும் வாசிப்புப் பழக்கம் மேலும் விருத்தியாக்கும். இவ்வாறு சிறுவர்களை வாசிக்கத் தூண்டினால் அவர்களிற்கு புதிய புதிய சொற்களை அவற்றின் கருத்துக்களுடன் உள்வாங்க முடியும். சிறு வயதில் நூலகங்களிற்கு அழைத்துச் செல்லப்படும் குழந்தைகள் பின்னாளில் சிறந்த வாசிப்பாளனாகவும் பல்வேறுபட்ட அறிவைப் பெற்றவனாகவும் திகழ்வதை அவதானிக்க முடியும்.

நூலகப் பொறுப்பாளர்கள் நூலகத்திற்கு வரும் நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் ஏனைய வாசிப்புச் சாதனங்கள் என்பவற்றின் உள்ளடக்கங் களை வாசித்து நூலக பயனாளிகளிற்கு வெளிப் படுத்தும்போது அவர்களும் வாசிக்கத் தூண்டப்படுவார்கள். உலகத் தில் பல வேறுபட்ட நூல்கள், சஞ்சிகை கள், பத்திரிகைகள் வெளிவரு கின்றன. அவற்றை எல்லாம் அனைவராலும் வாசிக்க மாட்டார்கள். ஒவ்வொருத்தரும் தங்கள் விருப்பத்திற் கேற்ற விடயங்கள் வாசிக்க விரும்புவர். நூலகப் பொறுப்பாளர் ஒவ்வொரு வாசிப்புச் சாதனத்தின் உள்ளடக்கங்களை வெளிப்படுத்தும்போது வாசகன் தனக்குத் தேவையானதைத் தெரிவுசெய்து வாசிக்க விரும்புவான். இதை நூலகத் தந்தையென போற்றப்படு கின்ற கலாநிதி எஸ்.ஆர்.இரங்கநாதன் தனது ஐங் கொள்கைகளில் "ஒவ்வொரு வாசகனிற்கும் ஒவ்வொரு நூலுண்டு" எனவும் "ஒவ்வொரு நூலிற்கும் வாசகனுண்டு" எனவும் இரண்டு கொள்கைகள் வெளிப்படுத்தினார். இச் செயற்பாடு மக்களை நூல்கள்பால் ஈர்த்து வாசிப்புப் பழக்கத்தை மேலும் தூண்டும்.

இதற்கு மேலாக வெளிவரும் நூல்கள் ஏனைய வாசிப்புச் சாதனங்களைப் பற்றி விமரிசனங்கள் வெளியிட்டால் மக்கள் அவ்விமரிசனங்களை வாசித்து அந்நூல்களை விரும்பி வாசிப்பார்கள். இதனால் மக்கள் கற்றிவுள்ள சமூகமாக வளர்ச்சியடைவார்கள்.

மனித வாழ்வில் வளமான வாசிப்பு என்பது மிக முக்கிய தொழிற் பாடாக அமைகிறது. ஒரு நாடு எழுத்தறி வற்ற சமூகத்தை இல்லாதொழிப்பதற்கு மக்கள் அனைவரும் சிறந்த நூல்களை வாசிப்பதையும் அன்றாடத் தகவல்களை பெறக்கூடிய வாசிப்புப் பழக்கத்தை கொண்டிருப்பதையும் ஊக்குவித்தல் வேண்டும். மொத்தமாக ஆராய்ந்தால் வாசிப்புப் பழக்கம் தனிமனித வாழ்வின் உயர்ச்சிக்கும். சமூக அபிவிருத்திக்கும், நாட்டின் பொருளாதார, அரசியல், கைத்தொழில், உற்பத்தி அபிவிருத்திக்கும் மிக இன்றியமையாததாகும். நாமும் இப்பழக்கத்தை கற்பதுடன் எதிர்கால சந்ததியினரும் இப்பழக்கத்தை கற்று முன்னேற ஊக்குவிப்போம்.

நன் நூல்களை வாசிப்போம்
வளமாக வாழ்வோம்

# சமுதாய மாற்றத்தில் பாடசாலைகளின் பங்களிப்பு



திருமதி. ப. ஹரிஷான்ந் B.A
ஆசிரியை

சமூகம் என்பதால் கருதப்படுவது முழு சமுதாயமல்ல. இது ஒரு குறித்த பிரதேசத்தில் வசிக்கும் பொது இலக்கு களையும் விழுமியங்களையும் கொண்ட அமைப்புத் தொகுதிக்கு உரிமை பாராட்டும் ஒரு மக்கள் கூட்டமாகும்.

இன்று சமுதாயம் என்பது ஆரம்ப காலங்களைப் போலல்லாமல் பரந்து விரிந்ததொரு பொருளைத் தருகின்றது என்று "மீரியம் கிளாஸ்பி" என்பவர் குறிப்பிட்டுள்ளார்.

மனிதனின் அத்தியாவசியத் தேவைகளில் ஒன்றான கல்வியை வழங்குகின்ற பிரதான நிறுவனமாக பாடசாலைகள் காணப்படுகின்றன. "கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பது பழைய சிந்தனை. "பாடசாலை இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பது புதிய சிந்தனை. பண்டைக்காலத்தில் கோயில்களை மையமாக வைத்தே சமுதாய மாற்றம் ஏற்பட்டது. ஆனால் இன்று சமுதாய மாற்றத்தின் முக்கிய நிறுவனமாக பாடசாலைகள் காணப்படுகின்றன.

அந்த வகையில் சமுதாயத்தின் பல்வேறுபட்ட அம்சங்களையெல்லாம் பிரதிபலிக்கும் வகையில் பாடசாலையில் கலைத்திட்டம் அமைதல் வேண்டும். பாடசாலைக்கும் அதன் அயற் சூழலிற்கும் நல்ல தொடர்புகள் பேணப்பட வேண்டும். சமுதாயம் மதிக்கும் கலாசாரப் பண்புகள், விழுமியங்கள், சமுதாயத்தின் உண்மையான வாழ்க்கையில் எதிர் நோக்கப்படும் பிரச்சினைகள், சமுதாய வளங்கள் போன்ற பலவிடயங்கள் எல்லாம் பிள்ளைகளிடையே சமுதாய மாற்றத்தை ஏற்படுத்தும் என்பதால் இவற்றை கல்விச் செயற்பாடுகள் மூலம் பாடசாலை வழங்க வேண்டும்.

ஒரு சமுதாயத்தின் சிறிய கூறாக விளங்குகின்ற பாடசாலைகள் சமுதாய மாற்றத்தில் தனது பல்வேறுபட்ட செயற்பாடுகளின் ஊடாக பங்களிப்புக்களை ஆற்றிவருகின்றது. ஓர் சமூகத்தில் மாற்றத்தை ஏற்படுத்தி சமூகத்தை நவீன மயப்படுத்தி சமூக மரபினையும், பண்பாட்டினையும் காத்து அடுத்த தலைமுறையினரிடம் ஒப்படைக்கின்ற பெரிய பணியாகிய கல்விப் பணியினை பாடசாலைகளே மேற்கொண்டு வரு கின்றன. ஒரு தனி மனிதனுக்கு வழங்கப் படும் கல்வி மூலம் சமூகத்தில் மாற்றத்தை ஏற்படுத்தி சமுதாயத்தை மேன்மை யடையச் செய்யும் பணியினை பாட சாலைகளே ஆற்றி வருகின்றன.

சமுதாய மாற்றம் என்பதில் கல்வி, பொருளாதாரம், அரசியல், பண்பாடு, கலாசாரம், பழக்கவழக்கங்கள் என பல்வேறுபட்ட காரணிகள் இனங்காணப் படினும் கல்வி தான் முதன்மையான எல்லாவற்றையும் மாற்றியமைக்கும் அடிப்படைக் காரணியாகக் கொள்ளப் படுகின்றது. இதனை மையப்படுத்தியே

கல்வியிய லாளர்கள் "நீங்கள் சமுதாயத்தில் எதனைப் புகுத்த விரும்புகின்றீர்களோ அதனை முதலில் பாடசாலையில் புகுத்துங்கள்" என கூறுகின்றனர்.

பாடசாலைக்கும் சமுதாயத்திற் கும் இடையில் நிலவுகின்ற பரஸ்பர தொடர்புகள் பாடசாலையின் வினைத் திறனையும், விளைதிறனையும் அதிகரிப்ப தோடு சமூகத்தில் நற்பிரஜைகளை உருவாக்குகின்றது. பல பாடசாலைகள் நூற்றாண்டுகளைக் கடந்து சிறந்த பாடசாலைகளாகத் திகழ்வதற்கு அப் பாடசாலைகளுக்கு அச்சமூகத்தின் பங்கு அளப்பரியதாகும். பாடசாலையில் ஏற்படும் அசைவியக்கம் சமூகத்திலும், சமூகத்தில் ஏற்படும் அசைவியக்கம் பாடசாலையிலும் தாக்கத்தை ஏற்படுத்தும். பாடசாலைகள் தொடர்ந்து நிலைத் திருப்பதற்கும், சமுதாயம் தனது இருப்பியல்புகளை நிலைக்கச் செய்வ தற்கும் ஒன்றிலொன்று தொடர்ந்து தங்கியிருக்க வேண்டியுள்ளது. பாடசாலை திட்டமிடலுக்கு சமூகமும், சமூக திட்டமிடலுக்கு பாடசாலையும் உதவி புரியவேண்டும். பாடசாலை சமூகத்திற் காக எந்நேரமும் திறந்திருக்க வேண்டும். பாடசாலையின் வளங்கள் சமூகத்திற்கு உச்சப் பயன்பாட்டை அளிக்க வேண்டும். அதே போன்று சமூக வளங்கள் உச்சப் பயன்பாட்டுடன் பாடசாலையில் உட் பாய்ச்சப்படல் வேண்டும்.

பாடசாலைகளால் மேற்கொள்ளப் படும் சமுதாய மாற்றச் செயற்பாடு பல பரிமாணங்களைக் கொண்டது. சமுதா யத்தின் இயல்புகளுடன் இணைந்து செல்லக்கூடியவாறு சமுதாய மாற்ற பரிமாணங்களைப் பாடசாலைகள் மாணவர்களிடத்தில் ஏற்படுத்துகின்றன. அந்த வகையில் சமூகம் உருவாக்கிக் கொள்ளும் புதிய தொழில்நுட்ப விசைகளுக்கு இசைவுபட வைப்பதுவும், சமூக ஊட்டங்களையும் தொடர்பாட லையும் வளமாக்கிக் கொள்ளவும் பாடசாலைகள் உதவுகின்றன.

அண்மைய தசாப்தங்களில் குறிப்பாக புதிய நூற்றாண்டில் உலகளாவிய ரீதியில் பரவிவரும் அறிவார்ந்த பொருளாதாரம் என்ற புதிய சிந்தனையும், தகவல் தொடர்பாடல் புரட்சியும் கல்வி முறைகளை, கல்வியின் நோக்கங்களை, கல்வி கற்கின்ற கற்பிக்கும் முறைகளையும் மாற்றி வருகின்றன.

இன்றைய கோள மயப்படுத்தப் பட்ட உலகில் தகவல் பொருளாதார முறைக்கு தகவல் தொடர்பாடல் தொழிநுட்பங்களும், தொலைபேசி, தொலைக்காட்சி, வானொலி வலைய மைப்பு என்பனவும் தேவைப் படுகின்றன. இவற்றின் மூலம் உலகளாவிய ரீதியில் பெருகி வரும் தொழிநுட்ப அறிவுத் தொகுதியை உள்வாங்கி பாடசாலைகள் மாணவர் மத்தியில் பரப்பி சமுதாய தேவைக்கேற்பவற்றை இசைவாக்குவதற்கு உலகமயமாதலின் சவால்களுக்கு ஏற்ப வாழ மனிதனைப் பாடசாலைகள் இயக்குகின்றன.

கணினி, இணையத்தளம், கைய டக்கத் தொலைபேசி, முகப்புத்தகம் போன்றவையற்ற உலகம் பற்றி எவராலும் தற்போது சிந்தித்துக் கூடப் பார்க்க இயலாது. இத்தகைய பின்னணியில் இவற்றை நவீனத்துவத்திற்கேற்ப மாற்றும் பொறுப்பும் அதனை ஐதார்த்த மாக்குகின்ற பொறுப்பும் பாடசாலை களிடம் உண்டு. முனைப்பான மாணவர் களின் பங்கேற்பு வினைத்திறன், வெளிப் படைத் தன்மை, தற்கால சவால்களை வெற்றி கொள்ளுதல் என்பனவற்றை மாணவனுக்கு வழங்கி சமுதாய மாற்றத்தை விளைவிப்பன பாடசாலைகள்.

நவீன தொழில்நுட்ப சாதனங்கள் மனித நாகரிகத்தை மாற்றியமைத்த பிரதான காரணியாக மாறிவிட்டதனால் முனைப்பான மாணவர்களின் பங்கேற்பு வினைத்திறன், வெளிப்படைத் தன்மை தற்கால சவால்களை வெற்றி கொள்ளல், பூகோளமயமாக்கலுடன் பொருந்தி வாழுதல் என்பவற்றை மாணவனுக்கு வழங்கி சமுதாயத்தின் போக்குக்கு ஏற்ப சமுதாயம் விரும்பும், எதிர்பார்க்கும் அறிவுடன் கூடிய பிரஜையாக விளைவிப் பது பாடசாலைகள்தான்.


கைத்தொழில் சமூகத்தில் அறிவே ஆற்றல் (Knowledge is power) என்ற பிரான்ஸிஸ் பேகனது கூற்று, இன்றைய தகவல் யுகத்தில் தகவலே ஆற்றல் (Information is power) என மாறி விட்டது. இவை யாவும் நவீன தொழில்நுட்ப சாதனங்களின் பரிமாணங் களே. ஆதலால் சமகாலத்தில் இவற்றைக் கையாளும் திறன் மாணவனுக்குக் கிடைக்குமானால் சமுதாய மாற்றம் என்பது திண்ணம். இதனை பாடசாலை கள் மிகத் திட்ட மிட்ட முறையில் வழங்கி வருவது கண்கூடு.

Fritz Machlup என்ற பொருளி யல் அறிஞரின் கருத்துப்படி கல்வி, ஆய்வு, அபிவிருத்தி, தொடர்பு ஊடகங்கள், தகவல் இயந்திரங்கள், தகவல் சேவைகள் என்ற 5 துறைகளையும் உள்ளடக்கிய தகவல் தொழில் துறை யானது உழைப்புச் சக்தியை விட அதியுயர் மொத்தத் தேசிய உற்பத்தியை வழங்கும் துறையாக மாறியிருக்கின்றது. ஆதலால் அதற்கேற்ப கல்வி முறையை மாணவனுக்கு அளிக்க வேண்டும். ஆதலால் இன்று ஒரு சமுதாயத்தின் மாற்றத்திலும் வளர்ச்சி யிலும் பாடசாலைகள் அளப்பரிய பங்களிப்பினை நல்குகின்றன.

பிள்ளை ஒன்றின் சமுதாய மாற்றம் என்பது சாதாரண விடயமல்ல. பல்வேறு தடைகள் காரணிகள் இருக்கின்றன. இவற்றை இனங்கண்டு அவர்களை சரியான பாதைக்கு வடம்பிடித்துக் காட்டும் கயிறாக அனைவரும் செயற் பட்டால் மாணவர்களை சிறந்த பிரஜையாக உருவாக்குவது நிச்சயம். ஆகவே மாணவர்களை

"உலகமொரு நிலை இய
பலர் புகழ் சிறப்பின் புலவர்"
(புறம் - 72)

என உருவாக்க வேண்டும்.



# சங்கீதமும் நாமும்



செல்வி கிருஷ்ணவேணி மயில்வாகனம்
ஓய்வுநிலை உதவிக் கல்விப்பணிப்பாளர்
(அழகியல்)

"இசை கேட்டால் புவி அசைந் தாடும்" என்பது நாம் அடிக்கடி கேட்கும் பக்திப்பாடல்களில் ஒன்று. அந்த இசையானது தமிழிசை, இன்னிசை, மெல்லிசை, துள்ளிசை, நாட்டார் இசை எனப் பலவகைப்படுகின்றது. உலக இசை வகைகள் மெலடி, ஹாமனி, பொலிபோனி என மூன்று வகையாக இருந்தாலும் மேற்கூறிய இசை வகைகள் மெலடி இசையின் பிரிவுகளேயாகும். 64 கலைகளிலும் சங்கீதமே முதன்மையானது எனச் சொல்லப்படுகின்றது. சங்கீதம், நடனம், சிற்பம், ஓவியம் என்பவை கவின்கலைகள் அல்லது அழகியற் கலைகள் எனப்படுகின்றன. கலைகள் மனிதனுக்கு இன்ப உணர்ச்சியை உண்டாக்குகின்றது.

சங் என்பது நல்ல எனவும், கீதம் என்பது பாட்டு என்றும் பொருள் படுகின்றது. இசை என்பது இணைதல். அதாவது இசை கேட்பவனோடு இணையக்கூடியது. உணர்ச்சிகளைத் தூண்ட வல்லதும் இசையோடு இணைந்ததும் கவிதையாகும். குரலிசை மூலம் கவிதையைக் கேட்டு ரசிக்க முடிகின்றது.

பாலர் முதல் விருத்தர் வரை, பாமரர் தொடக்கம் பண்டிதர் வரை, மனிதர்கள், மிருகங்கள் அனைத்து உயிரினங்களையும் தன்வசப்படுத்தும் சக்தி இசைக்கு உண்டு. இசையைக் கற்பதனால் அன்பு, அடக்கம், பக்தி, நட்பு, மனத்திருப்தி, சாந்தம், இன்பம், அறிவு, புத்திக்கூர்மை, கற்பனாசக்தி, ஞாபகசக்தி, நல்லொழுக்கம் என பல பண்புகளைப் பெற்றுக் கொள்ளலாம் என்பது அறிஞர் கள் கண்ட உண்மை.

இசை இறுவட்டுக்களை ஒலி பரப்பி விட்டுப் பசுவின் பால் கறக்கும் பொழுது அதிக பால் சுரக்கின்றது, என்றும், இசை கேட்கும் அயலிலுள்ள மரங்கள் வளர்வதையும் விஞ்ஞான ரீதியாக ஆராய்ந்து கண்டிருக்கின் றார்கள். அதிலும் கர்நாடக இசையை ஒரு தொகுதி பயிர்களுக்கு இறுவட்டு மூலம் ஒலி பரப்பியும், மறுதொகுதிக்கு அதே மண், நீர் வளங்களுடன் பொப்பிசை இறுவெட்டுகளை ஒலிபரப்பி பயிரின் தன்மையை அவதானிக்கும் பொழுது கர்நாடக இசை கேட்ட பயிர்கள் செழிப்பாக வளர்ந்தமை கண்டறியப் பட்டது.

தமிழிசை என்பது பண்ணி சையைக் குறிக்கின்றது. தேவார முதலிகளான திருஞானசம்பந்தர் முதல் மூன்று திருமுறைகளையும், திருநாவுக்கரசு நாயனார் 4, 5, 6 திருமுறைகளையும், சுந்தரமூர்த்தி சுவாமிகள் 7 ஆந் திரு முறையையும் பண்முறையில் தாளத்துடன் பாடியுள்ளனர். "திருவாச கத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார்" என்ற முதுமொழிக்கிணங்க மணி

வாசகரின் திருவாசகம், திருக் கோவையார் உள்ளன. சேந்தனார், திருமாளிகைத் தேவர், கருவூர்த்தேவர் போன்ற 9 பேர் இயற்றிய திருவிசைப்பா பாடல்கள், சேந்தனார் பாடிய திருப் பல்லாண்டுப் பாடல்கள், திருமூலர் இயற்றிய திருமந்திரப் பாடல்கள், பட்டினத்தடிகள், நம்பியாண்டார் நம்பி போன்ற 12 பேர் பாடிய பாசுரங்கள், சேக்கிழார் அருளிய பெரிய புராணம் என்பன 12 திருமுறைகளில் அடங்கு கின்றன. இவை அனைத்தும் தெய்வீக இசை. இவை 23 பண்களிலே அமைந்துள்ளன. இங்கு கவிதையும் முக்கிய இடம்பெறுகின்றன. சிலப்பதிகார காலத்திலிருந்து தமிழிசை காணப்பட்ட பொழுதிலும் ஏழாம் நூற்றாண்டிலிருந்து தான் அதிக வளர்ச்சியடைந்தது. தமிழசை தான் கர்நாடக இசைக்கு முன்னோடியாக விளங்கியது.

கர்நாடக இசை, ஹிந்துஸ்தானி இசை இரண்டும் மெலடி இசையின் பிரிவுகளாகும். கர்நாடக இசையைத் தமிழர்களும், தென்னிந்தியர்களும் கையாளுகின்றனர். ஹிந்துஸ்தானிய இசையை சிங்கள மக்களும் வட இந்தியர்களும் கையாளுகின்றனர். சில ஆண்டுகளுக்கு முன்பு “சோக கீதம்” இசைக்கப்பட்டதை யாழ்ப்பாணத்தவர்கள் யாவரும் அறிவர். இது ஹிந்துஸ்தானி இசையில் ஷணாய் என்ற துளைக் கருவியில் வாசிக்கப்பட்ட இசையாகும். இதில் சோக ரச இராகங்கள் என்று வாசிக்கப்படாமல் கல்யாணி, காம்போதி போன்ற மகிழ்ச்சிக்குரிய இராகங்களும் வாசிக்கப்பட்டன என்பது குறிப்பிட வேண்டியதொன்றாகும்.

ஹாமனி இசை என்பது மேலைத் தேய இசையாகும். தற்காலத்தில் வெளி வரும் சினிமாப் பாடல்களில் கர்நாடக இசையுடன் ஹாமனி இசை, ஹிந்துஸ்தானி இசை வடிவங்கள் கலப்புற்ற ஒரு புதிய இசை வடிவத்தையே பெரும்பாலும் காண்கின்றோம். அன்று ஐரோப்பியர் தமது மதத்துடன் (Western Music) மேலைத்தேய இசையையும் புகுத்தினர். ஆனால் அது பெரு வெற்றியைத் தரவில்லை. ஆங்கிலத்திலேயே அவ்விசை பயிற்றுவிக்கப்பட்டது. ஆனால் இன்று அந்த இசை வடிவத்தை இலகுவாகத் தமிழில் அமைத்து வெளியிட்ட பொழுது அவ்விசைக்குப் பெரு வரவேற்புக் கிடைத்தது எனலாம். இதனால்தான் இசை அமைப்பாளர் ரகுமானுக்கு “ஒஸ்கார் விருது” மிக இளம் வயதிலே கிடைத்தது எனலாம்.

இன்னிசை என்பது கர்நாடக சங்கீத வடிவமைப்பில் அமைந்த பாடல்களைக் குறிக்கும். இசைக்கு ஸ்ருதி, லயம், தாளம், ஸ்வரஸ்தானசுத்தம், இராகபாவம், அர்த்தபாவம் என்பன முக்கியமானவை. கர்நாடக இசை பெரும்பாலும் தெய்வீக இசையாக அமைந்துள்ளது. இறை வனையடைய எளிய மார்க்கம் இசையாகும்.

கர்நாடக இசையிலுள்ள சில இராகங்கள் சில நோயைத் தீர்க்க வல்லன என்பது ஆராய்ச்சி மூலம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. பொதுவாக நோயுற்றவர்கள் நல்ல இசையை மனம் விரும்பிக் கேட்கத் தானாகவே நோய் குணமடையும் என்பர். யாழ் போதனா வைத்தியசாலையில் பல வருடங்களுக்கு முன்பு பக்திப் பாடல்கள் மெல்லிய தொனியில் ஒலிபரப்பப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. திருநாவுக்கரசர் தீராத வயிற்று வலியினால் துன்பப்பட்டபோது கொல்லிப் பண்ணில் அமைந்த “கூற்றாயினவாறு” என ஆரம்பிக்கும் தேவாரப் பதிகத்தை நவரோஸ்

இராகத்தில் பாடி வலி நீங்கப் பெற்றார். திருஞான சம்பந்தர் பாண்டிய மன்னனின் விஷச் சுரத்தினை நீக்க “மந்திரமாவது நீறு” என்னும் பதிகத்தைக் காந்தாரப்பண் நவரோஸ் இராகத்தில் பாடினார். நீலாம்பரி, யது கலகாம்போதி இராகங்கள் உறக்கத்தை உண்டு பண்ணு கின்றன. தியாகராஜ சுவாமிகள் பிலகரி இராகத்தில் “தொரகுண இடுவண்டி” எனும் கீர்த்தனையைப் பாடி இறந்தவனை உயிர்ப்பித்தார். வராளி இராகம் வாதநோயைக் குணப்படுத்துகின்றது. ஆனந்தபைரவி, காம்போதி போன்ற இராகங்கள் மன அழுத்தத்தையும் இரத்த அழுத்தத்தையும் மனச்சோர்வையும் போக்குகின்றன. மேலும் தலைவலி தூக்கமின்மையும் நீங்கு கின்றன. இசை மூலம் நோய்களைக் குணப்படுத்தும் “ராகசிகித்ஸா” எனும் சமஸ்கிருத நூல் ஒன்று தஞ்சை சரஸ்வதி மஹால் நூலகத்தில் உள்ளது.

பம்பாய் மருத்துவமனையைச் சேர்ந்த ராமகாந் கே. கினி என்ற இந்திய மருத்துவர் மூட்டுவலி, காக்கை வலிப்பு, இதய நோய்கள், போதை மருந்தினால் ஏற்படும் நோய்கள் போன்றவற்றை இசையினால் குணப்படுத்த முடியும் என்று ஆராய்ச்சி மூலம் கண்டு பிடித்துள்ளார். கூடுதலான நோய்கள் மனக் கவலைகளினால் ஏற்படுகின்றன. மனதிற்கு இன்பத்தைத் தரவல்லது இசை. எனவே இசையை நன்கு இரசிக்கத் தெரிந்தவனுக்கு மனக்கவலைகளினால் ஏற்படும் நோய்கள் பெரும்பாலும் பாதிப்பைக் கொடுப்பதில்லை. புற்று நோயின் வேதனையை இசை கேட்பதன் மூலம் குறைத்துக் கொள்ளலாம் என நிரூபிக்கப்பட்டுள்ளது. இசை மூலம் “ஆஸ்துமா” நோயிலிருந்து குணமடை கின்றனர்.

முத்துஸ்வாமி தீஷிதர் அமிர்த வர்ஷினி இராகம் பாடி மழை பொழியச் செய்தார். அதனை அடியொற்றி 80 களில் குன்னக்குடி வைத்தியநாதன் அவர்கள் அமிர்தவர்ஷினி இராகத்தை காவிரி ஆற்றில் நின்று கொண்டு 3 மணித்தியாலங் கள் வாசித்து மழை பொழியச் செய்தார் என்பதைப் பத்திரிகை மூலம் தெரிந்து கொண்டோம்.

அடுத்து மெல்லிசைப் பாடல் என்பது மென்மையான ஓசையை உடையன. கர்நாடக இசையைத் தழுவியும், வேறு சில இசை வடிவங்களைக் கலந்தும் அமைந்துள்ளன. எளிமையான இசையமைப்பில், எளிய கவிதை வடிவில் பெரும்பாலும் அமைந்துள்ளன. சினிமா இசையில் காணப்படும் (Melady songs) இந்த வகையைச் சேர்ந்தன. இங்கும் நுட்பமான ராகங்கள், பாவம் நிறைந்து காணப்படுகின்றன.

துள்ளிசை என்பது சிங்கள இசையில் காணப்படும் “பைலா” இசையை ஒத்தது. ஆடுவதும், பாடுவதும், ஆனந்தக் களிப்புமே இதன் சாரம்சமாக இருக்கும். இசையமைப்பும், கவிதை வடிவமும் துள்ளல் நயத்தை ஊட்டுவதாக அமைந்திருக்கும்.

இவற்றைவிட நாட்டார் இசை மிகவும் தொன்மையானது. மருத்துவிச்சிப் பாட்டு, தாலாட்டு, உழவுப்பாட்டு, அரிவி வெட்டுப் பாட்டு, ஓடப்பாட்டு, தொழிற்பாடல், ஏற்றப்பாட்டு, கும்மி, கோலாட்டம், ஊஞ்சற்பாட்டு, கொழுந்து கொய்யும் பாடல், பொலிப்பாடல், ஒப்பாரி எனப் பல வகையுண்டு. இவையும் எல்லா நாட்டிலும் அவரவர் மொழிகளிற் பாடப்படும் அழியாச் சொத்துக்கள். “கானா இசை” என்பதுவும் நாட்டுப் பாடல் வகையை ஒத்தது.

இசை என்பது மனிதனை மனிதப் பண்புள்ளவனாக்குகின்றது. இந்த வகையிலே எம்மூரிலே இசை வளர்த்த பெரியார் வரிசையில் "அண்ணாவி சபாபதி" என்பவர் முதலில் குறிப்பிடக் கூடியவர். இவர் வாய்ப்பாட்டுடன் வயலின் இசையிலும் புலமைபெற்ற வராகக் கருதப்பட்டவர். அவருடைய மகனாக விளங்கியவர் பிரபல வானொலி Super Grade பாடகரான அமரர் சங்கீத பூஷணம் S. பாலசிங்கம் அவர்கள்.

இவர் இசை ஆசிரியராக இருந்து பல மாணவர்களை உருவாக்கியதுடன் அண்ணாமலை இசைத்தமிழ் மன்றத்தின் செயலாளராகவும் ஆசிரியராகவும் சேவை செய்து பல மாணவர்களை இசை வித்துவான்களாக்கியவர். அரியாலையிலும் விசுவநாதர் இசைக்கல்லூரி மூலம் இசை மாணாக்கர்களை உருவாக்கியும் இசை விழாக்களை நடாத்தியும் பல அரிய சேவைகள் புரிந்தவர் அவரது மகள் கல்யாணி சுதாகர் கனடா நாட்டில் வீணை, வாய்பாட்டு ஆசிரியராக பல மாணவர்களை இசையில் உருவாக்கி வருகின்றார்.

அண்ணாவி சபாபதி அவர்களின் கடைசிப் புத்திரி செல்வி இராதாதேவி சபாபதி அவர்கள் இசையில் நல்லாசிரியர் என்ற பெயர் பெற்றவர். இவரும் தனிப் பட்ட முறையிலும் அண்ணாமலை இசைத் தமிழ் மன்றம், விசுவநாதன் இசைக் கல்லூரி மூலமாகவும் பல மாணவர் பரம்பரையினரை உருவாக்கியவர்.

அடுத்து அமரர் வல்லிபுரம் பரமசாமி அவர்கள் வாய்ப்பாட்டிலும் வயலினிலும் பண்ணிசையிலும் பாண்டித் தியம் உடையவர். இவரும் அண்ணாமலை இசைத்தமிழ் மன்றம், விசுவநாதன் இசைக்கல்லூரி மூலமும் தனிப்பட்ட முறையிலும் இசை வளர்த்ததுடன் பல இசைக்கச்சேரிகளையும் நடத்தி புகழ் பெற்றவர் பல வித்துவான்களை உரு வாக்கியவர். அவருடைய பிள்ளைகளாக திருமதி கலாராணி ஸ்ரீஸ்கந்தராசா (சங்கீத ஆசிரிய ஆலோசகர், கொழும்பு) அவர்களும் தனிப்பட்ட முறையில் கொழும்பில் இசைக்கச்சேரிகள் செய்தும் இசை மாணவர்களை உருவாக்கியும் வருகின்றார். திரு. பரமசாமி கிருபாகரன் அவர்கள் லண்டனில் "ஆவர்த்தனா" எனும் இசை நிறுவனத்தை நிறுவி பல மாணவர்களை மிருதங்கத் துறையில் வித்துவான்களாக்கி வருகின்றார்.

அமரர் குகதாம்பாள் கோபால சுந்தரம் அவர்கள் இசை ஆசிரியராக விளங்கியதுடன் கோவில்களில் மனமுருகி இசையால் அர்ச்சனை செய்தவர். அமரர் சின்னத்தம்பி குணரட்ணம் அவர்களும் இறைவனுக்கு பாமாலை சூட்டிப் பண்முறை வழுவாமல் பாடி வந்ததுடன் மரணச்சடங்குகளிலும் பண்ணிசையை ஓதியமை இன்றும் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கிறது. அமரர் பரமசாமி ஆசிரியரின் தம்பியாரான திரு. வல்லிபுரம் நடராஜா ஆசிரியர் அவர்களும் கோவில்களிலும் மரணச்சடங்குகளிலும் அண்மைக்காலம் வரை தம் கணீரென்ற குரலில் பாடியும் பஜனைகளை நடாத்தியும் வந்துள்ளார். இசை நாடகங்களில் அரியாலையூர் சிறப்புப் பெற்றிருந்தது. அமரர் இரத்தினம் அமரர் செல்வம், அமரர் P.சண்முகலிங்கம் போன்றவர்களும் இன்னும் சிலரும் இசை நாடகத்துறையில் அழியா இடம் பிடித்தவர்களாவர்.

**1975** தொடக்கம் **1995** வரையான காலப்பகுதியில் அரியாலையில் அதிகளவானோர் இசை கற்று வந்தனர். பின்பு இடம்பெற்ற இடப்பெயர்வுகள்,

குழப்பங்கள் காரணமாக இசை ஈடுபாடு குறைவடைந்து இன்று மிகவும் குறைவானவர்களே இசைத்துறையில் ஈடுபட்டுள்ளனர். இங்கிருந்து புலம் பெயர்ந்து வாழும் தமிழ்மக்கள் தமது பிள்ளைகளுக்கு இசை நடனக்கலைகளில் அதிக ஆர்வம் செலுத்தி வருவதுடன் பல அரங்கேற்றங்களையும் அங்கு நிகழ்த்தி உள்ளனர்.

திரு. வி.கே. சண்முகராஜா அவர்கள் கிராம சேவையாளராக இருந்த போதிலும் புல்லாங்குழல் இசையை முறைப்படி பயின்று பல மாணவர்களுக்குக் கற்பித்து வித்துவான்களாக்கியுள்ளார். நல்லூர் திருவிழாப் பஜனைக் கோஷ்டியில் பல வருடங்கள் புல்லாங் குழலை பக்கவாத்தியமாக வாசித்தார். இராக ஆலாபனை செய்வதில் சிறந்த பாண்டித்தியம் பெற்றவர். "கலைஞான கேசரி" என்ற விருதை நல்லூர் பிரதேச சபையில் பெற்றுக்கொண்டார்.

அமரர் சபாபதி நடேசு அவர்கள் ஹார்மோனியம் வாசிப்பதில் தேர்ச்சி யடைந்திருந்தார். புல்லாங்குழலையும் வாசிக்கக் கூடியவராக விளங்கியுள்ளார்.

அரியாலையூர் சித்தி விநாயகர் ஆலயத்திலும் மஹாமாரி அம்மன் ஆலயத்திலும் அமரர் தங்கவேலு என்பவர் நாதஸ்வரம் வாசித்து வந்தார். அவரைத் தொடர்ந்து அவரின் மருமகன் அமரர் இராசமாணிக்கம் அவர்களும் அதனைத்தொடர்ந்து அவரது மருமகன் அமரர் யசோதரன் அவர்கள் தவில் வாத்தியத்தை வாசித்து வந்தனர். யசோதரன் குழுவினர் வருடந்தோறும் நடைபெறும் சுதேசிய திருநாட் கொண்டாட்டங்களிலும் மங்கல இசையை வழங்கி வந்தனர். தற்போது அவரின் புத்திரரான திரு.நவரூபன், திரு.காண்டீபன் சகோதரர்கள் மங்கல இசையை வாசித்து வருவதுடன் சித்தி விநாயகர் ஆலயத்திலும் நாதஸ்வரம் வாசித்து வருகின்றனர். அத்துடன் இவர்கள் சக்ஸபோன் வாத்தியத்தையும் திறம்பட வாசித்துப் புகழ் பெற்றுள்ளனர்.

இசை கற்பவர்கள் எல்லோரும் மேடைப் பாடகர்களாகவோ அல்லது இசை ஆசிரியர்களாகவோ வரவேண்டும் என்பது கட்டாயமில்லை. இசை கற்பதனால் சபையில் முன்னிலை வகுக்க முடியும். தான் பயின்று கொண்டிருக்கும் அல்லது வேலைபார்க்கும் இடங்களில் தனித்துவத்தைப் பெறமுடியும் ஆத்ம திருப்திக்காகக் கற்கலாம். இசை கற்பவர்களுக்கு மன விரக்தி, மனக்கவலை மிகக் குறைவாகவே உள்ளது. இன்பமாக வாழக் கற்றுக்கொள்கின்றான்.

பாடசாலை மட்டத்தில் இசைக் கல்வி போதிக்கப்படுகின்றது. அங்கு கற்கும் மாணவர்கள் அடிப்படை அறிவை ஓரளவு பெறுகின்றார்கள். இன்று அதிலும் கூட நாட்டம் குறைவாகவே காணப்படுகின்றது. எல்லோருமே சினிமாப் பாடல்களை முணுமுணுக் கிறார்கள். அடிப்படை அறிவிருந்தால் தானே சரியாகப் பாட முடியும். பெற்றோர்களே சிந்தியுங்கள்.

சிறிய வயதிலே 7-10 வயதிற்குள் இசைக் கல்வி பயிலும் மாணவர்கள் நல்ல சுருதி, லயம் கொண்டவர்களாக விளங்கு கின்றார்கள். எனவே பெற்றோர்கள் இசைக்கல்வியில் ஊக்குவிக்க வேண்டும் என்பதே எனது கருத்தாகும். பண்ணிசை வளர்க்கப்பட வேண்டும். கோவில்களில் பண்முறையில் ஓதப்பட வேண்டும். கோவில்கள், பொது இடங்களில், இசை நிகழ்ச்சிகள், நடாத்தப்பட வேண்டும். இதனை ரசிப்பதற்கேற்ற மனநிலையை

பெறுவதற்கு இசையின் அடிப்படை அறிவை ஊட்ட வேண்டும். கேள்வி ஞானத்தைப் பெறவேண்டும்.

1974 ஆம் ஆண்டிலிருந்து 1984 ஆம் ஆண்டுவரை அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாசாலையில் "விசுவநாதன் இசைக் கல்லூரி" வார விடுமுறை நாட்களில் பிற்பகல் வேளையில் திறம்பட நடாத்தப் பட்டது. வருடாவருடம் இசை விழாவும் அரியாலை சித்திவிநாயகர் ஆலய சிவன்கோவில் மண்டபத்தில் நடாத்தப் பட்டன. அக்காலத்தில் பல மாணவர்கள் வாய்ப்பாட்டிசையையும் மிருதங்க வாத்தியத்தையும் பயின்றனர்.

சுதேசிய திருநாட்கொண்டாட்ட விழாவையொட்டி அன்றிலிருந்து இன்று வரை சங்கீதப் போட்டிகள் நடாத்தப் பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. அப்போட்டிகளில் முதலிடம் பெறும் மாணவர்களுக்கு மேடையில் சங்கீதம் பாடுவதற்கு வாய்ப்பளிக்கப் பட்டது. அந்த வகையில் போட்டிகளில் பங்கேற்று மேடை நிகழ்ச்சிகளிலும் பாடியதனால் தான் இன்று நான் சங்கீத உலகில் பிரவேசிக்க முடிந்தது. என்பதனை மகிழ்வுடனும் நன்றியுடனும் குறிப்பிட விரும்புகின்றேன். எனவே இன்று வெளிநாட்டிலே வாழும் புலம்பெயர் மக்களின் பிள்ளைகள் இசையில் பெற்ற முன்னேற்றத்தை எம் ஊரவர்கள் எட்டிப்பிடிக்க முனையவேண்டும். முக்கியமாக பெற்றோர்கள் இசைக் கல்வியில் ஆர்வம் காட்ட வேண்டும். நல்ல மனிதப் பண்புள்ளவனாக வாழ வேண்டும் எனின் இசைக்கல்வி அவசியம்.

வளர்க சங்கீதம்.



# எனது செஞ்சக்கருத்துக்கள்



திரு.ம.கதிர்காமநாதன்
ஓய்வுநிலை நிர்வாக அதிகாரி
முன்னாள் பொருளாளர்,
சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா

எமது நாடு ஆங்கிலேயரின் ஆட்சிக்குட்பட்டு அவர்களின் கலாசாரம், மொழி, சமயம் மற்றும் மேல்நாட்டு பழக்கவழக்கங்களுக்கு அடிமைப்பட்டுக் கொண்டிருந்த காலத்தில் எமது மக்களின் மனதில் விடுதலை உணர்வு எமது சமயம், எமது மொழி மற்றும் தேசிய உணர்வுகளை ஏற்படுத்துவதற்காக எமது சுதேசியத்தை வளர்ப்பதற்கு ஒரு விழாவைக் கொண்டாடவேண்டும் என்ற உணர்வால் உந்தப்பட்ட சில எம்மூர் பெரியவர்கள், கல்விமான்கள், ஒன்று கூடி இவ் விழாவை கொண்டாட ஏற்பாடு செய்து இவ் விழாவை தமிழரின் புதுவருட தினமான அதாவது சூரியன் மேட ராசியில் வரும் சித்திரை மாத முதலாம் நாள் கொண்டாட ஏற்பாடு செய்யப்பட்டு 1919 ஆம் ஆண்டு முதலாவது விழாவை ஏற்பாடு செய்தனர்.

இவ்விழாவில் முக்கியமாக எமது மக்களின் கலை கலாசாரம், விளையாட்டு இடம்பெற வேண்டும் என்று எழுத்து மூலம் இல்லாத கொள்கையை வகுத்து கடைப்பிடித்து வந்தனர். இவ்விழா இன்று நூறாவது வருடத்தை தாண்டி தடம் பதிக்கிறது.

இச்சந்தர்ப்பத்தில் இவ்விழாவை ஆரம்பித்தோர்களில் ஒருவரான பெரியார் அமரர் ஆறுமுகம் கதிரவேலு அவர்களை நினைவு கூர்வது அவசியம் என கருதுகின்றேன். அவரின் முயற்சியில்தான் எம்மூர் மக்களின் வாசிப்புத்திறனை மேம்படுத்துவதற்காக சரஸ்வதி வாசிக சாலையை ஆரம்பிப்பதில் முன்னின்று உழைத்தார். இதுவே அரியாலையில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது வாசிக சாலையாகும். இவர் அரியாலையைச் சேர்ந்த ஒரு சட்டத் தரணியாவார். அதேபோல் ஆறுமுகம் கனகரத்தினம் அவர்களும் சிறந்த சட்டத்தரணியும் அக்கால கல்விமான்களில் ஒருவரும் ஆவார். ஆங்கிலேய ஆட்சி காலத்தில் இலங்கை ஐந்து மாகாணங்களாக பிரிக்கப் பட்டிருந்தது. இதில் தற்போதைய வட மத்திய மாகாணப் பகுதிகளும் உள்ளடக் கப்பட்டிருந்தது.


ஆங்கில அரசினால் 1924 ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட சட்ட நிர்ணய சபைக்கு தெற்கு பிரிவுக்கு எம்மூர் வாசியாகிய அமரர் ஆறுமுகம் கனகரத்தினம் அவர்கள் போட்டியிட்டு தெரிவு செய்யப்பட்டு அரியாலைக்கு பெருமையைத் தேடித்தந்தார். கல்வி மூலமே சமுதாயத்தை முன்னேற்றலாம் என்ற பெருநோக்குடன் தனது சொந்தப் பணத்திலே தனது சொந்தக்காணிக்குள் கல்லூரியை நிறுவி அப்போதைய தேசாதிபதியாக இருந்த ஸ்ரான்லி என்பவரை அழைத்து திறப்புவிழா நடத்தி மாணவர்களுக்கு அளித்த பெருந்தகையாவார்.

மகாயுத்தம், இராணுவ கெடுபிடி இவற்றுக்கு மத்தியிலும் எமது விழா தொடர்ந்து நூறாவது ஆண்டை கொண்டாடுவதையிட்டு நாம் எல்லோரும் பெருமைப்படுகின்றோம். இந்த சந்தர்ப் பத்தில் இசை நாடகங்களை நெறிப்படுத்திய பெரும் கலைஞர் அண்ணாவியார் பெ.சபாபதிப்பிள்ளை அவர்களை நினைவு கூர்வது எமது கடமையாகும். அக்காலத்தில் நடித்த நாடகக் கலைஞர்கள் தத்துருபமாக சிறப்பாக நடித்ததால் அவர்களின் சொந்தப் பெயருடன் அவர்களின் நாடக பாத்திர பெரும் ஒட்டிக்கொண்டமை குறிப்பிடத் தக்கது. நான் அறிந்த மட்டில் சிலரை குறிப்பிட விரும்புகிறேன். அர்ச்சுனன் தம்பிப்பிள்ளை அல்லி பரமு கரடி தம்பிப்பிள்ளை போன்றோரைக் குறிப்பிடலாம். அவர்கள் இதைவிட இன்னும் பல இசை நாடகங்களிலும் நடித்துள்ளார்கள். வசன நாடகங்களைப் பொறுத்த மட்டில் பழம் பெரும் கலைஞர் ப.சிவஞான போதம் குறிப்பிடத்தக்கவர். அவர் நடித்த மனோகரா நாடகம் இதற்குச் சிறந்த உதாரணமாகும். மற்றும் I.S.சண்முகநாதன், E.K.குமரையா, P.சண்முகலிங்கம், P.விஜயரத்தினம், N.அருட்பிரகாசம் மற்றும் நாடகத்தை எழுதுதல், நெறிப்படுத்தல், நடித்தல் ஆகிய சகல துறைகளிலும் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட தோழர் தர்மலிங்கம் போற்றப்படவேண்டும். தற்போது நாடக உலகில் போற்றப்படும் க. பாலேந்திரா உட்பட சகலரும் எமது சுதேசிய திருநாள் கொண்டாட்ட விழாவில் நடித்து பயிற்சி பெற்று முன்னேறியவர்களாகும். எனவே சுதேசிய திருநாள் கொண்டாட்ட விழாவே நாடக வளர்ச்சிக்கு மூலவேராக திகழ்ந்தது என்றால் மிகையாகாது. கலை, விளையாட்டுக்களைப் பிரதிபலிக்கின்ற அரியாலை நாடக மன்றம், அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம் போன்றன சுதேசிய திருநாள் கொண்டாட்ட விழாக்களின் எழுச்சியால் ஏற்பட்ட அமைப்புகளே

யாழ்ப்பாணத்தில் தினகரன் விழாவினரால் நடாத்தப்பட்ட சைக்கிள் ஓட்டப் போட்டியின் பின் 1959 ஆம் ஆண்டு எமது 40 ஆவது சுதேசிய திருநாள் கொண்டாட்ட விழாவில் மாவட்ட ரீதியாக 40 ஆவது விழாவை குறிக்கும் விதமாக 40 மைல் சைக்கிள் ஓட்டப் போட்டி நடத்தப்பட்டது. இப் போட்டிக்கு தம்பிஐயா சபாரத்தினம் அவர்களின் முயற்சியால் அவர் கடமை ஆற்றிய ஏரிக்கரை பத்திரிகை தாபனத்தின் தினகரன் பத்திரிகை அனுசரணையுடன் நடாத்தப்பட்டது. என்னதான் சொன்னாலும் எமது விழாவின் பிரமாண்டமான இறுதி நாள் நிகழ்ச்சி எமது பிரமாண்ட தயாரிப்பான நாடகமேயாகும்.

# சமூக நிறுவனங்களில் எமது இளைஞர்களின் தலைமைத்துவம்

திரு.சு.சண்முகரட்ணம்
B.A, M.A (Merit), Chart.Acct. S.L (L.L), H.N.D (Acc.), HND (Com.)



அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்டத்தை ஆரம்பித்த ஆன்றோரின் கொள்கைகளும் அவர்களின் வாழ்க்கை நெறியும் எம்மை வழி நடாத்த இக்காலத்திற்கும் பொருத்தமான சிந்தனையாக விளங்குகின்றது.

ஒரு சமூகத்தின் முதுகெலும்பாக விளங்குபவர்கள் அந்த சமூகத்தின் இளைய பரம்பரையாகும். அந்த வகையில் செழிப்பு மிக்க அரியாலையைக் காண இளைஞர்கள் சமூக நிறுவனங்களில் இணைந்து பங்காற்ற வேண்டியது அவர்களின் கட்டாயமான கடப்பாடாகும்.

அந்தக் கடமைகளை வெற்றிகரமாக நிறைவேற்ற ஒவ்வொரு இளைஞரினதும் வாழ்க்கை முறை, அறிவு பூர்வமான சிந்தனைகள் செல்வாக்குச் செலுத்தியே தீரும். இதனால் ஒவ்வொரு இளைஞரும் கல்வி அறிவை இயன்றவரை வளர்த்துக் கொள்ளவேண்டும். உலகமயமாக்கப் பட்ட சமூகத்தில் நாம் 21 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். அந்த சவாலை எதிர்கொள்ள உலகெங்கிலும் ஏற்படும் சகல மாற்றங்களையும் வாசித்துத் தெளிவுபெற வேண்டியவர்களாக இருக்கின்றோம். இது மனித குலத்திற்கு நல்ல செய்திகளையும் தீய செய்திகளையும் தருகின்றது. இதனால் தேர்வு விடயத்தில் சிக்கல் நிலை தோன்றும். இதற்காகத்தான் பல ஆன்மீக சிந்தனையாளர்களின் வாழ்க்கைமுறையையும் சிந்தனைகளையும் படிப்பதன் மூலம் எது சரி, எது பிழை என்பதினை நிட்சயமாக மனச்சாட்சி என்ற தெய்வீகத்தன்மை மூலம் பெறப்படுகிறது.

தனிமரம் தோப்பாகாது, அடம்பன் கொடியாக இருந்தாலும் அது திரண்டால் அதற்கோர் மிடுக்கு ஏற்படும். எனவே எல்லோரும் ஒன்று சேர்ந்து ஒற்றுமையாகச் செயல்படும்போது சமுதாயம் வெற்றி பெறுகின்றது. அவ்வாறு அந்த சமுதாயம் வெற்றி பெறுவதற்கான கருவியே சமூக நிறுவனங்களாகும். அந்த வகையில் நூற்றாண்டை கொண்டாட உள்ள அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா அமைப்பும் ஒன்றாகும். அவ்வாறான நிறுவனங்களைப் பேணிக் காத்து வளர்க்க யாவரும் முன்வர வேண்டும்.

நிறுவனங்களின் வளர்ச்சியில் காணப்படும் அதிகாரப் போட்டியை எவ்வாறு தீர்க்கலாம் என்பது பற்றி பல ஆய்வுகள் மேலைத் தேசங்களில் நடாத்தப்பட்டு வாதப் பிரதிவாதங்களின் பின் கூட்டுத் தலைமைத்துவம் இணைத் தலைமை என்ற செயற்பாட்டின் மூலம் கூட்டாகப் பயணித்தல் என்ற கருப்பொருளுக்கு முக்கியத்துவம் அளித்து வருவதை நாம் அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. பரம்பரை வழியாக மன்னர் தலைமைத்துவம் ஜனநாயக ரீதியான தலைமைத்துவம் என்ற பலவகையான தலைமைத்துவத்தைக் கடந்து அதிகாரம் ஓர் இடத்தில் குவிந்திராமல் அதிகாரப்

பகிர்வின் மூலமே வினைத்திறனான விளைவுகளைப் பெற முடியும் என்ற கருத்து மேலோங்கி வருகின்றது.

ஆண்டாள் அடிமை முறை முடிந்துவிட்டது. மக்களின் சிந்திக்கும் ஆற்றல் தர்க்கித்தல், கிரகித்தல் மேலிருந்து வரும் கட்டளையை எப்படி முறியடிக்க லாம் என்ற நுட்பத்தை கண்டுபிடித்து வியாக்கியானங்களையும், விமர்சனங் களையும் செய்து கட்டளைகளை நடை முறைப்படுத்தாமல் விடுகின்றார்கள். இதனால் எடுத்துக் கொண்ட வளர்ச்சிப் பணி சிதைந்து போவதை நாம் காண்கின்றோம்.

இதனால் தான் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் குழுவிடமே திட்ட வரைபு உட்பட சகல அதிகாரங்களையும் வழங்குவதன் மூலம் திட்டத்தினை வெற்றிகரமாக நிறைவேற்றிக் கொள்ள முடியும். மேலும் குழு ரீதியான வேலைதான் (Team Work) சமூக நிறுவனங்களுக்கு இன்று தேவைப் படுகின்றது. கூட்டுத்தலைமைத்துவத்தின் மூலம் சகலரும் பங்காளர்களாகவும் பொறுப்புக்கூற வேண்டியவர்களாகவும் ஆக்கப்படுகிறார்கள். இது வினைத் திறனுக்கு வழிவகுக்கிறது. மேலும் இவ்வாறு பொதுமக்களுடன் தொடர் புடைய சமூக நிறுவனங்களின் செயற்பாடு களைத் தீர்மானிக்குபோது அது தன்னுடைய தனிப்பட்ட விடயமாக இருப்பதாக கற்பனை செய்து கொண்டு அது தனது மனத்திற்கு வரவேற்கக் கூடியதுதானா? அல்லது ஏற்க முடியாததா? அல்லது பயனுடையதா, அல்லது தீமையானதா? என நன்கு அலசி ஆராய்ந்து முடிவு எடுக்கப்படும்போது அது எல்லோராலும் ஏற்கக்கூடியதாகவும் காத்திரமானதாகவும் அமையும் என்ப தனை யாவரும் மனதில் இருத்திக் கொள்வது அவசியத்திலும் அவசியமாகும்.

கூட்டுத் தலைமைத்துவத்திற்கு அத்திவாரமாக அமைவது கொள்கை ரீதியான ஒற்றுமைப்பாடாகும். ஒத்த கருத்தும் ஒத்த சிந்தனையாளர்களும் கொள்கை ரீதியாக ஒன்று பட முடியும் என்பது கோட்பாடாகும். ஆனால் சமுதாயத்தில் வேறு பட்ட சிந்தனையும் கொள்கைகளும் உடையவர்கள் வாழ்வது சகசம். இதனால் ஒரு இணக்கப்பாட்டிற்கு வர வேண்டிய அவசியம் ஏற்படுகின்றது. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலருக்கு இப்படி யான நிலை தனக்கு ஏற்பட்டிருந்தது எனக்குறிப்பிட்டு அதைச் சீர்செய்ய பிரசாரங்கள் வழி வகுத்தது எனக் கூறியுள்ளார். நல்ல கருத்துக்களை மற்றவர்களுடன் நாம் பகிர்ந்து கொள்ள வேண்டும். நாம் சரியாக வாழ்ந்து கொண்டு, மற்றவர்களுக்கு நல்ல கருத்துக்களைச் சொன்னால் அவர்கள் நிட்சயமாக காலகதியில் சரியான பாதைக்கு வந்துவிடுவார்கள். அவர்கள் சமூக நிறுவனங்களைச் சூறையாடவோ, சீரளிக்கவோ ஒருபோதும் முற்பட மாட்டார்கள். எனவே நல்ல கருத்துக் களைப் பரப்ப வேண்டியது எமது பொறுப்பாகும்.

சமூக நிறுவனங்களில் பதவி பெறுபவர்கள் மிகவும் கண்ணியத் துடனும், அந்நிறுவனத்திற்கு விசுவாச மாகவும் நடந்து கொள்ள வேண்டியது அவசியமாகும். துரதிஸ்ர வசமாக ஒரு சிலர் அந்த பதவியை அந்நிறுவனத்தின் நன்மைக்கு எதிராக நமது சுய இலாபத்திற்கும், தம்மை சார்ந்தவர்களின் பொருளாதார நலனுக்காகவும், தான் பதவி வகிக்கும் நிறுவனத்தையே சீரழித்து பயன்படுத்தும் போக்கைக் காண்கின் றோம். இந்நடவடிக்கைகள் மிகவும் துன்பகரமானதாகவும், அருவருக்கத் தக்கதாகவும், தவிர்க்கப்பட வேண்டிய வையாகவும் உள்ளது. இது ஒரு

தாயானவள் தனது பச்சிளம் குழந்தையைப் புறக்கணிப்பது போன்றதாகும். தனது குழந்தையைத் தானே புறக்கணித்தால் அந்தக் குழந்தையின் வாழ்வே சீரழிவது போல அந்த நிறுவனமும் சீரழிந்து விடும் என்பதை நாம் யாபேரும் உணர்ந்து நிறுவனத்தின் நலனுக்காக உழைக்க வேண்டும்.

எமது இளைஞர்கள் ஒழுக்க சீலர்களாக எமது கோவில்களில் தொண்டு புரிவது மகிழ்ச்சியளிக்கின்றது. அரியாலை இளைஞர் இந்துமா மன்றம் நல்ல செயல்பாடுகளை முன்னெடுக்கின் றது. இது மேலும் வலுவடைந்து எமது சமய நிகழ்வுகளுக்கு நல்ல தலைமைத் துவத்தை நல்கவேண்டும்.

மேலும் இன்னுமோர் இடர் பாடும் சமூகத்தில் காணப்படுகின்றது. அதுதான் முதியவர்களின் தலைமைத்துவ இடைஞ்சலாகும். அவர்கள் தாம் வயது முதிர்ந்தவர்கள் என்றும் தமக்கு எவ்வளவோ அனுபவங்கள் உண்டு. என்றும் எப்போதும் சுட்டிக் காட்டு வார்கள். இதனால் தலைமைத்துவ இடைவெளி ஏற்படுகின்றது. இதைப் பகுத்தறிவு மூலம் தீர்த்துக் கொள்ள வேண்டும். எந்த சமூக நிறுவனங்களுக்கும் ஒவ்வொரு வரலாறு உண்டு. அவற்றினை உருவாக்கியவர்களின் சிந்தனைகளைப் பற்றிய தெளிவு வேண்டும். ஒரு காலத்தில் அந்த சூழலில் உள்ள கொள்கையும், தேவைகளும் பிற்கால சூழலுக்கு பொருந்தும் என நாம் எதிர்பார்க்க முடியாது. அவை மாறுபடலாம். வளர்ச்சிக்கு மாற்றங்கள் அவசியம் தான். அவை அந்த வரலாற்று அத்திவாரத்தி லிருந்து கட்டப்பட்டதாக அமைய வேண்டும். அவ்வாறு செல்லும் போது பிழைகள் விடுவதற்கான சந்தர்ப்பங்கள் குறைவாகவே இருக்கும். முதியவர்கள் புதிய சிந்தனைகளையும், புதிய தொழில் நுட்ப அறிவுகளையும் திறந்த மனத்துடன் ஆராயத் தங்களை தயார்ப்படுத்திக் கொள்ள வேண்டும். இதன்மூலம் ஓர் இணக்கப்பாட்டுக்கு வரமுடியும். கலந்துரையாடல் என்ற பொறிமுறை மிகச் செழிப்பான வளர்ச்சிக்கு ஓர் இணக்கப்பாடான சரியான தீர்வை காண்பதற்குச் சிறந்தபொறி முறையாக விளங்குகின்றது. இணக்கப்பாடு இல்லையேல் அது தோல்வியிலேயே போய்முடியும். இணக்கப்பாட்டிற்கு நேர்மைத் தன்மை, அர்ப்பணிப்பு, உணர்வு, சகிப்புத்தன்மை, விட்டுக் கொடுத்து கூட்டாக வாழும் எண்ணம் போன்ற நல்ல சமூகப் பண்புகளை இளைஞர்கள் பின்பற்ற வேண்டும்.

பொது நிதி தெய்வத்தின் நிதி என்பது சத்தியவாக்காகும். ஆனாலும் ஒரு சில சிறிய தவறுகள் ஏற்படத்தான் செய்யும், ஏனென்றால் ஆன்மீகத்துறையில் போதிய பயிற்சி இன்மை ஒரு தேக்க நிலை காணப்படுவதே இதற்கான அடிப்படைக் காரணமாகும். மற்றையது ஆன்மீகம் என்றால் என்ன என்பது பற்றிய போதிய விளக்கமின்மையும் ஒரு காரணமாகும். ஆன்மீகம் ஆலய வழிபாட்டுடன் மட்டும் மட்டுப்படுத்தப்படவில்லை. ஆலய வழிபாடு மிக மிக அவசியம் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. அத் தோடு எமது பாரம்பரிய பண்பாடுகளை வழுவாமல் கடைப்பிடிக்க வேண்டும். எமக்கென முன்னோர்களால் வகுக்கப் பட்ட கிரிகை நெறிகளை அர்த்தத்தோடு கடைப்பிடிக்க வேண்டும். அத்தோடு தனி மனித நீதி, சமூக நீதி ஆகியவற்றிற்கு நாம் ஆட்பட வேண்டும். மற்றவர்களுக்கு இடைஞ்சல் இல்லாமல் நாம் வாழ வேண்டும். சரியானதை சரியான நேரத்தில் சொல்லவும், செய்யவும் நாம் பழகிக் கொள்ள வேண்டும். அது மனிதனுக்கு ஒரு இக்கட்டான சூழ் நிலையை ஏற்படுத்தத்தான் செய்யும்.

அதை நாம் பொருட்படுத்தத் தேவை யில்லை. குறுக்கு வழி வெற்றி போல மற்றவர்களுக்கு தோற்றமளித்தாலும் அது உண்மையில் அவர்களுக்கு வெற்றியளிக் காது, மனதிலே சதா, போராட்டமாகத் தான் இருக்கும். மன நிம்மதி கிடையாது. குற்ற உணர்வு சதா வாட்டும், தனக்குள்தானே கூனிக்குறுகி வாழும் பரிதாபநிலை நிட்சயம் ஏற்படும். உதவி பெற்றவர்கள் அனைவரின் செயல் பாடுகள் அனைத்தும் பாசாங்காகத் தான் இருக்கும். பரிவாக இருக்காது. இறுதியில் எங்களால் கொண்டு போகவேமுடியாத பணம் இறுதியில் எமது சீரழிவுக்கும் மற்றவர் களின் கேலிக்குமே வழி வகுத்து விடும்.


எனவே நாம் பொதுப்பணத்திற்கு ஆசைப்படக்கூடாது. உள்ளதைக் கொண்டு திருப்தியாக வாழ்வதன் மூலமே கௌரவமான வாழ்க்கையை அமைத்துக் கொள்ளமுடியும். ஆகவே நேர்மையான வாழ்க்கை மிகமிக அவசியமாகும்.

அடுத்ததாக, எமது சைவ சமயப் பண்புகளை நாம் திடமாகக் கடைப் பிடிக்க வேண்டும். ஏனென்றால் எமது சமூக அமைப்பின் நிலைத்தன்மைக்கும், செழிப்பிற்கும் சைவசமய கோட் பாடுகளே அடித்தளமாக அமைந் துள்ளது என்பதுடன் எங்களை தீயவழிகளில் செல்ல விடாது, தடுத்து நிறுத்தக்கூடிய புராணக் கதைகளை நன்றாக வாசித்து அதன் உட்பொருளில் தெளிவு பெற வேண்டும். எமது அடையாளத்தை நாம் ஒருபோதும் இழந்துவிடக்கூடாது. அடையாளம் இல்லையேல் சமூகக் கட்டமைப்பு சிதைந்துவிடும். நிறுவனங்கள் கால வெள்ளத்தால் உருமாறி, சிதைந்து அதன் நோக்கம் செயற்பாடுகள் அனைத்துமே வேறுபட்டுவிடும்.

போதைப் பொருள் பாவனை, மதுபாவனை, திட்டமிடப்பட்ட சமயமாற்றம், சுயநிலையை தடுமாறச் செய்யும் புறக்காரணிகள் போன்ற ஆபத்தான காரணிகளில் இருந்து இளைஞர்கள் தப்பிக்கொள்ள வேண்டும். அதற்கு யோகா போன்ற தன்னடக்க பயிற்சிகள் அவசியமாகின்றது. அத்தகைய யோகா பயிற்சியை அரியாலை இந்து இளைஞர் மா மன்றம் தற்போது முன்னெடுத்து வருவது பாராட்டுக்குரிய ஒரு விடயமாக உள்ளது.

வேற்றுமையில் ஒற்றுமை காண்பது மிகச் சிறந்த மானிட தத்துவ மாகும். அந்தவகையில் எமது இளைஞர் கள் செழிப்பான அரியா லையைக் காண யதார்த்த நிலையை மதிப்பிட்டு அறிவு பூர்வமான சிந்தனையுடன் மற்றவர் களையும் நேசித்து அவர்களின் ஒத்து ழைப்புடனும், வினைத்திறனுடனும் எமது முன்னோர்களால் உருவாக்கிய காட்டிய சமூக நிறுவனங்களான சன சமூக நிலையங்கள், ஆலய நிர்வாக அமைப்புக்கள், மற்றும் பலவகையான சங்கங்கள் குறிப்பாக அரியாலை சார்ந்த சகல மக்களையும் ஒன்று திரட்டி கடந்த 99ம் ஆண்டுகளாக கொண்டாடி இவ் வருடத்தில் நூறாவது விழாவாக மிக விமரிசையாக கொண்டாடும் அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா அமைப்பு போன்றவற்றில் ஒன்றிணைந்து பயணித்து தம்தம் பங்களிப்புக்களை அரியாலையில் நிலைநாட்ட வேண்டும் என அன்பாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

# எனது அனுபவம்



சிவலோகநாதன் கணேஸ்வரன்
முன்னாள் அறிவிப்பாளர்
சுதேசிய திருநாட்கொண்டாட்ட விழா

எமதூர் பல்வகைச் சிறப்பு பெற்றது அரியாலையில் பிறந்ததையிட்டு பெருமையடைகின்றேன். கோவில்கள் சனசமூக நிலையங்கள், விளையாட்டுத் திடல்கள் என பல் பரிமாணங் கொண்ட அமைப்புக்களில் இடம்பெறும். நிகழ்ச்சி களில் பங்குதாரராகவும், பார்வையாள ராகவும் கலந்து மகிழ்ந்த நினைவுகள் இன்றும் பசுமரத்தாணி போல் இன்றும் மனக்கண் நிழலாடிக் கொண்டே இருக்கின்றது. இவற்றுக்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல் எமது ஊர்மக்கள் எல்லோரும் திரண்டு ஒன்றுபட்டு நடாத்தும் சுதேசிய திருநாள் கொண் டாட்ட விழா பெருமைக்குரியது அது நூற்றாண்டு விழாவாக வளர்ந்ததையிட்டு நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். அது பல்லாண்டு பல்லாண்டு காலம் தொடர்ந்தும்வாழவேண்டும்என்பது எமது பேரவாவாகும்.

நான் பல்கலைக்கழகம் சென்ற காலங்களிலேயே எனது மும்மரமான செயற்பாட்டுக்காலமாக இருந்தது. **1989**ஆம் ஆண்டியிலிருந்து **1994**ஆம் ஆண்டு வரையிலான காலமாகும். இக்காலத்தில் மின்சாரம், எரிபொருள், தொலைபேசி அற்ற காலம் வடக்கு மட்டும் தனிமைப்படுத்தப்பட்டு வெளி யிடங்களிலிருந்து தொடர்புகள் உதவிகள் அற்றகாலம் இக்காலங்களில் மிகக் குறைந்த பொருளாதார வளத்துடன் இவ் கால கட்டத்தில் இவ் விழாக்களை வெகு விமர்சையாகக் கொண்டாடினோம். மக்களுக்கு வேறு பொழுதுபோக்குகள் அற்ற காலம் அதனால் ஊர்மக்கள் எல்லோரும் எல்லா நிகழ்ச்சிகளிலும் மும்முரமாகக் கலந்து கொண்டனர். யுத்தத்தை மட்டும் எண்ணிக் கொண்டி ருந்த மக்களுக்கு பெரிய ஆறுதலைக் கொடுத்தது.

இந்த விழாவை ஆரம்பித்தவர் களின் நோக்கத்தைப் பற்றியும் நாம் இவ்வேளையில் சிந்திக்க வேண்டும். சைவத்தையும் தமிழையும் வளர்க்க வேண்டும். தமிழர்களின் கலை கலாசாரம் பண்பாடுகள் பேணிப்பாதுகாக்கப்பட வேண்டும். விளையாட்டுக்களின் மூலம் வெற்றியையும் தோல்வியையும் சமமாக ஏற்றுக்கொள்ளும் மனப்பாங்கை உருவாக்க வேண்டும். நாம் எல்லோ ரும் ஒன்று சேர்ந்து வாழவேண்டும் என்ற பெருநோக்குக் கொண்டவர்களாக விளங்கியதை நாம் கருத்தில் கொள்ள வேண்டும். அவர்கள் அந்தக் கொள்கை களை கோட்பாட்டு ரீதியாக மட்டும் கருதாமல் தமது வாழ்க்கை முறையிலும் நடைமுறைப்படுத்திக் காட்டியுள்ளார்கள். இந்த சீரிய கொள்கைகளை இளைஞர்கள் தொடர்ந்தும் கடைப்பிடித்து வருவதை யிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன். இம்முறை அதிகமான போட்டி யாளர்கள் முன்னோடி நிகழ்ச்சிகளில் பங்கு கொள்வ தாக அறிகின்றேன் இந்த நிலை தொடர வேண்டும் என்பதே எனது விருப்பமாகும்.


# அரியாலை சமூக அபிவிருத்தி சங்கம் (ஐ.இ)

தலைவர் பொருளாளர் செயலாளர்

*இச்சங்கம் 2003 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் வாழும் அரியாலை மீது அக்கறை கொண்ட ஒரு சில அரியாலை மக்களால் அரியாலை மக்களை ஒன்றிணைக்கவும், யாழ்ப்பாணத்தில் இருக்கும் அரியாலை மக்களின் பொதுவான தேவைகளை பூர்த்தி செய்யவும் தொடங்கப்பட்டது. அரியாலை மக்களின் மாதாந்த பங்களிப்புடன் நடைபெற்று வந்தது. 2009 ஆம் ஆண்டு போர் முடிவுற்ற காலத்திலிருந்து இன்றுவரை யாழ்ப்பாணத்தில் இருக்கும் அரியாலை மக்களின் நலன்கருதி ஆ.தேவராசா தலைமையில் (J.P) வாழ்வாதாரமற்ற பெண்களுக்கு மாதாமாதம் பணம் கொடுக்கப்பட்டது. பின்பு யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் விடுதியில் தங்கி படிக்கும் பிள்ளைகளுக்கு உணவுத்தேவைக்காக 2015 வரை பணம் கொடுக்கப்பட்டது. இடைப்பட்ட காலத்தில் அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம், அரியாலை சனசமூக நிலையம், அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழகம், அரியாலை மாதர் சங்கம் ஆகிய அமைப்புக்களுக்கும் நிதி உதவி புரிந்துள்ளோம்.*

*இறுதியாக அரியாலை சுதேசி திருநாட் கொண்டாட்ட நூற்றாண்டு விழா தூபி அமைப்பதற்கும் பணம் வழங்கப்பட்டது. நினைவுத் தூபிக்கு காசிப்பிள்ளை கணேசன் ஞாபகார்த்தமாக காணியை இலவசமாக வழங்கிய இங்கிலாந்தில் வசிக்கும் அவரது மனைவி பிள்ளைகளுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.*

*எமது அடுத்த நோக்கமாக அரியாலை மக்களின் தேவை கருதி அரியாலை சித்துப்பாத்தி மயானத்தை புணருத்தாரனம் செய்ய இருக்கிறோம்.*



# அரியாலை தந்த அனுபவங்கள்

நல்லையா சுதேஸ்குமார் B.B.A(Hons)
M.A in Regional Planning (Merit)



என்னைப் பலரும் பாராட்டும் விதமாக என்னை அரியாலை மண் எவ்வாறு வளர்ந்தது என எண்ணி மகிழ்கின்றேன் அரியாலையில் நல்லையா இராஜேஸ்வரி தம்பதிகளுக்கு இரண்டாவது மகனாகப் பிறந்த நான் எனது ஆரம்பக் கல்வியை நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலையிலும், யாழ் புனித பத்திரிசியார் கல்லூரியிலும் தொடர்ந்தேன். விளையாட்டுக்கு பெயர் போன எனது ஊரின் பெயரைக் கேட்டவுடனேயே பத்திரிசியார் கல்லூரியில் இவன் அரியாலையைச் சேர்ந்தவன் இரும்பன் சண்முகலிங்கத்தின் மருமகன் சிறந்த விளையாட்டு வீரனாக வருவான் என பாடசாலையில் சேர்ந்தவுடனேயே பச்சை குத்தி விட்டார்கள். அந்த நாட்களை எண்ணிப் பார்க்கின்றேன்.

அவர்களின் கருத்து தவறு இல்லை என்பதற்கு இணங்க எனது துடுப்பாட்ட பயிற்சிகளை எனது அம்மாவின் மூத்த சகோதரனும் யாழ் மாவட்டத்தின் பிரபலமான துடுப்பாட்ட வீரனும் பயிற்சியாளருமாகிய வி.கே.சண்முகலிங்கம் அவர்களிடம் தொடங்கினேன். 11 வயதில் இருந்து தினமும் காலை 5.00 மணிக்கு மாமாவின் வீட்டிற்கு சென்று பல நுட்பங்களையும் நேரம் தவறாமை கீழ்ப்படிவு போன்ற சிறந்த பண்புகளையும் கற்றுக்கொண்டேன்.

பாடசாலையின் துடுப்பாட்ட அணியில் ஆரம்ப வேகப்பந்தாட்ட வீரனாக எனது துடுப்பாட்ட போட்டியினை ஆரம்பித்தேன். எனது பந்தின் வேகத்தினைக் கண்டு வியக்காத நபர்கள் இல்லை என்றே சொல்லலாம். பாடசாலையில் சாகாயராஜா (குக்கா சேர்) அவர்கள் என ஆரம்பகால பயிற்றுவிப்பாளராக இருந்து எனது திறமைகளை வெளிக்கொண்டு வந்தார். இன்றும் எனது முதலாவது போட்டியினை மறக்க முடியாது. புனித பரியோவான் கல்லூரிக்கு எதிராக 01 ஓட்டத்தினால் பெற்ற வெற்றியானது இன்றும் எனது பசுமையான நினைவுகள்.

இவ்வாறாக ஆரம்பித்த துடுப்பாட்டத்தில் எனது பயணம் தொடர்ந்தாலும், எனது கிராமத்தில் இருந்த சனசமூக நிலையங்கள் அனைத்திலும் கரபந்தாட்டம் (ஓவர்கேம்) பிரபல்யமான விளையாட்டாக காணப்பட்டது. குறிப்பாக திருமகள் சனசமூக நிலையம் மற்றும் அரியாலை சனசமூக நிலையங்களில் பெரும் எண்ணிக்கையான வீரர்கள் ஆர்வத்துடன் ஓவர்கேம் விளையாடினார்கள். எனக்கும் இதில் ஆர்வம் ஏற்பட எனது பதினைந்தாவது வயதினில் ஓவர்கேம் கரபந்தாட்டத்தினை விளையாட ஆரம்பித்தேன். விவசாய திணைக்கள குணம் சேர், நெடுவல் கணேஸ் அண்ணா, சிவம் அண்ணா, சூரியண்ணா, சண்முகலிங்கம் மற்றும் பரமலிங்கம் அண்ணா அவர்களுடன் சிறுவயதில் இருந்தே ஓவர்கேம் விளையாடியமை மறக்கமுடியாத நினைவுகள்.

இந்த கட்டத்தில் பாடசாலையில் துடுப்பாட்ட பயிற்சிகளிலும் மாலையில்

கரபந்தாட்ட விளையாட்டும் தினசரி வழக்கமாகியது. இதனை அவதானித்த மறைந்த பொலிஸ் இராசரட்ணம் ஐயா அவர்கள் புதிய முறையிலான கரபந் தாட்டத்தினை எம்மை கொண்டு ஆரம்பிக்க முன்வந்தார். அவரின் விடாமுயற்சியின் பயனாக கரபந்தாட்டப் பயிற்சிகள் திருமகள் சனசமூக நிலைய மைதானத்தில் ஆரம்பமாகியது. அதிலும் மாலை 5.00 மணிக்கு ஓவர்கேம் போட்டிகள் நடைபெறுவதனால் எமக்கு அதற்கு முன்னர் தான் பயிற்சிகளை எடுத்தோம். காலப்போக்கில் பயிலும் வீரர்களின் ஆர்வம் அதிகரிக்க பொலிஸ் ஐயாவுடன் நிசாந்தன் தென்னக்கோன் (லக்கி அண்ணா) ஜெயகுமார் அண்ணா அவர்களும் இணைந்து பயிற்சிகளை சரஸ்வதி சனசமூக நிலையத்தில் தொடர்ந்தோம். தொடர்ச்சியாக செற்றப் போட்டிகளுக்கான மைதானம் பிரச்சினை யாக அமைய அருணோதயா சனசமூக நிலையத்தில் பொலிஸ் ஐயா அவர்களி னால் புதிய கரபந்தாட்ட மைதானமானது போடப்பட்டு எமது பயிற்சிகள் சிறப்பாகவும் விரைவாகவும் வளர்ச்சி யினையும் கண்டது. ஒருநாள் பயிற்சிக்கு செல்லா விட்டாலும் எனது வீட்டிற்கு வந்துவிடுவார் பொலிஸ் ஐயா. என்னைப் போன்றே மன்னாரில் இருந்து எனது வீட்டிற்கு அருகாமையில் குடியமர்ந்த எனது நண்பன் மணி என்று அழைக்கப்படும் ஸ்ரீபன் ஜெகதீபன் கரபந்தாட்டத்தில் சிறப்பான விளை யாட்டினை விளையாடி எமது ஐக்கிய கழக அணியானது 1992 ஆம் ஆண்டு களில் ஏனைய அணிகளுக்கு சவால்விடும் அணியாக மாற்றம் பெற்றது. 1994 ஆம் ஆண்டு நடுப்பகுதியில் அரியாலை ஐக்கிய கழக அணியானது யாழ் மாவட்டத்தில் அசைக்க முடியாத அணியாக உரு வெடுத்தது. பொலிஸ் ஐயாவின் கனவு நனவாகியது. ஆனால் அந்த கனவு, நீண்டநாள் நிலைக்கவில்லை. 1995 ஆம் ஆண்டு ஏற்பட்ட இடப் பெயர்வு எமது அணியினை சீர்குலைத்து விட்டது. எனக்கு பல்கலைக்கழக அனுமதி கிடைத்தமை பல வீரர்கள் வன்னி நிலப்பரப்பில் நிரந்தரமாக வசித்தமை வெளிநாடுகளுக்கு சென்றமை போன்ற காரணங்களினால் எமது கரபந்தாட்ட வளர்ச்சி குறைவடைந்து இன்று வரை அவ்வாறான நிலையில் காணப் படுகின்றமை மனவேதனை யளிக்கின்றது.

பாடசாலையில் துடுப்பாட்ட அணித் தலைவன் மற்றும் கரபந்தாட்ட அணித்தலைவனாக இருந்ததுடன் இரண்டு துறைகளிலும் விருதுகளையும் பெற்றுள்ளேன். எனது நண்பர்கள் பலர் என்னுடைய பாடசாலையில் கல்வி பயின்றமையால் பாடசாலையில் கரபந்தாட்ட அணியினை உருவாக்கும் முயற்சியினை மேற்கொண்டு 1993 ஆம் ஆண்டு யாழ் மாவட்ட பாடசாலை அணிகளுக்கிடையிலான கரபந்தாட்ட சுற்றுப்போட்டியில் சம்பியான வந்தோம் இது எமது பாடசாலை வரலாற்றில் முதலும் கடைசியுமான பதிவாக உள்ளது.

விளையாட்டுக்களில் புகழ் பெற்றமையால் கல்வியிலும் கவனம் செலுத்த வேண்டிய பயம் எனக்கு தினமும் இருக்கும் அனைவரும் பரீட்சை முடிவுகள் தொடர்பாக வினாவுவார்கள் என்பதனால் அதிகாலையில் எழுந்து படித்ததன் விளைவாக உயர்தரத்தில் 2A, 2B சித்தியுடன் யாழ் பல்கலைக்கழகத்தில் வியாபார முகாமைத்துவ கற்கையினை தொடர்ந்தேன்.

நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக நான் பல்கலைக்கழகத்தில் தங்கியிருந்தே எனது கல்வியினைத் தொடர்ந்தேன். இதனால் அரியாலையில்

மீண்டும் கரபந்தாட்டத்தினை கட்டியெழுப்ப முடியாமல் போனது பல்கலைக்கழகத்தில் துடுப்பாட்டம் கரபந்தாட்ட அணிகளுக்கு தலைமை தாங்கியதுடன் தொடர்ச்சியாக நான்கு வருடங்கள் விருதுகளையும் பெற்றுள்ளேன். பல்கலைக்கழக கரபந்தாட்ட அணிக்கு நான் தலைமை தாங்கிய அணியானது யாழ் மாவட்டத்தின் அனைத்துப் போட்டிகளிலும் பங்குபற்றி 02 போட்டிகளை தவிர 11 சம்பியன் பட்டத்தினையும் 02 இரண்டாம் இடத்தினையும் பிடித்தமை இங்கு குறிப்பிடப்படவேண்டிய விடயமாகும்.

யுத்த சூழல் தணிந்து 1998 ஆம் ஆண்டு முதன் முறையாக யாழ் மாவட்ட அணியானது கொழும்பில் பல துடுப்பாட்ட போட்டிகளில் பங்கு பற்றியது அந்த அணியின் வேகப்பந்து வீச்சாளராக செயற்பட்டு சிறந்த பந்துவீச்சாளர்பரிசினையும்வென்றிருந்தேன். அதேபோல 2002 ஆம் ஆண்டு ஜனசக்தி காப்புறுதி நிறுவன திறப்பு விழாவினை முன்னிட்டு நடாத்தப்பட்ட இலங்கையின் பிரபல்யமான விளையாட்டு வீரர்களான முத்தையா முரளிதரன் களுவிதரனா, உச்சிகபெரேரா பங்குபற்றிய துடுப்பாட்ட போட்டிக்கு யாழ் மாவட்ட அணிக்கு தலமைதாங்கிய பெருமை என்னைச்சாரும்.

இவ்வாறு எனது விளையாட்டு பயணமானது முக்கியமாக துடுப் பாட்டம் சார்ந்து இருந்தாலும் 2003 ஆம் ஆண்டு இலங்கை கரபந்தாட்ட சம்மேளனத்தினால் முதன்முறையாக யாழ்ப்பாணத்தில் நடாத்தப்பட்ட கரபந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கான கருத்தரங்கு அதனைத் தொடர்ந்து நடாத்தப்பட்ட தேசிய மத்தியஸ்தர்களுக் கான பரீட்சை எனது வாழ்கையின் திருப்புமுனையாக அமைந் தது. குறித்த பரீட்சையில் சித்தியடைந்த 14 பேருள் நானும் ஒருவன். அதன் பின்னர் மத்தியஸ்தம் வகிக்கா விட்டாலும் தொடர்ச்சியாக விளையாடிக் கொண் டிருந்த எனக்கு மோட்டார் சைக்கிள் விபத்தினால் முழங்கால் பாதிப்பானது இது 2009 ஆம் ஆண்டு ஏற்பட்டது. இதனால் விளையாட்டுக்களில் இருந்து மத்தியஸ்தராக எனது பயணம் ஆரம்பித் தது. யாழ் மாவட்ட கரபந்தாட்ட மத்தியஸ்தர்கள் பற்றாக்குறை கரபந் தாட்ட சங்க நிர்வாகத்தில் பொறுப் பானவர்களின் பற்றாக்குறை காரணமாக கரபந்தாட்டம் சம்பந்தமாக எனது சேவைகள் தொடங்கியது.

2010 ஆம் ஆண்டு கொழும்பில் சர்வதேச கரபந்தாட்ட சம்மேளனத்தினால் நடத்தப்பட்ட மத்தியஸ்தர்களுக்காக 12 நாட்கள் கொண்ட கற்கைநெறியில் ரூபா 20,000.00 செலுத்தி கலந்து கொண்ட நான் அங்கு நடாத்தப்பட்ட தரங்கணிப்பில் முதலாவதாக வந்தமை கொழும்பு கரபந்தாட்ட நிர்வாகிகளை என் பக்கம் திரும்பிப் பார்க்க வைத்தது. யாழ் மாவட்டத்தில் திறமையானவர்கள் உள்ளார்கள். இவர்களையும் தேசிய போட்டிகளுக்கு மத்தியஸ்தம் வகிக்க அழைக்கலாம் என்ற எண்ணம் தோன்றியது. அதனைத் தொடர்ந்து நடைபெற்ற அனைத்து தேசிய ரீதியிலான போட்டிகளுக்கும் மத்தியஸ்தம் வகிக்க எனக்கு கிடைத்த அனைத்துச் சந்தர்ப்பங் களையும் நான் தவறவிட்டது இல்லை. யுத்த காலம் கொழும்பில் தமிழர் நடமாட முடியாத நிலை மொழிப்பிரச்சனை கொழும்பு செல்வதானால் 5 பஸ் எடுக்கும் நிலை இருந்தும் எனது சந்தர்ப்பங்களை நான் தவறவிட்டதில்லை. ஆரம்ப காலங்களில் சிங்கள மொழி எனக்கு ஒன்றும் விளங்காது போட்டிக்கு மத்தி

யஸ்தர் கட்டணம் கூட வாங்காமல் வந்த நாட்கள் கூட உண்டு.

இவ்வாறான எனது விடா முயற்சியின் பயனாக 2014 இல் நடைபெற்ற ஆசிய கிண்ண கரபந்தாட்ட போட்டிக்கு எல்லைக் கோட்டு நடுவராகவும் புள்ளியிடும் வேலைக்காக வும் கடமை யாற்றும் சந்தர்ப்பம் கிடைத்தது. அதனைத் தொடர்ந்து இலங்கை கரபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத் தலைவர் திரு.பியந்த செனிவிரத்தனா எனது கடமை உணர்வு, கரபந்தாட்டத்தில் கொண்டுள்ள பற்று, மத்தியஸ்தம் வகிப்பதில் உள்ள தனித்துவம் என்பன வற்றினைக் கண்டு பல எதிர்ப்பின் மத்தியில் எனக்கு 2015 ஆம் ஆண்டு அல்ஜீரியா நாட்டில் சர்வதேச கரபந்தாட்ட மத்தியஸ்தர் பரீட்சைக்கான பயிற்சிக்கு அனுப்ப சிபார்சு செய்தார்.

குறித்த பரீட்சைக்கு அல்ஜீரியா நாட்டுக்கு செல்வதற்கான அனைத்து விதமான செலவுகளும் ரூபா 400,000.00 இற்கும் அதிகமான தொகை என்னாலேயே செலுத்தப்பட்டன. காரணம் கரபந்தாட்டத்தின் மேல் இருந்த பற்று ஆசை ஆகும் எனது பாடசாலை நண்பர்கள் குறித்த செலவின் ஒரு பகுதியினை பொறுப்பேற்றார்கள். அவர்களுக்கு இவ்விடத்தில் நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன். குறித்த பரீட்சையில் திறமைச்சித்திகளுடன் இலங்கையில் காலடி வைக்கும்போது இலங்கையின் கரபந்தாட்ட நூற்றாண்டு வரலாற்றில் ஒரு தமிழ் மகன் சர்வதேச மத்தியஸ்தராக வந்துள்ளான் என நினைக்கும்போது என் மண்ணை நினைத்து பெருமையடைந்தேன். இந்த புகழுக்கு எம் ஊர் அனைத்து சனசமூக நிலையங்களும் கௌரவம் கொடுத்து என்னை வாழ்த்தியமைக்கும் நன்றிகள்.

அதனைத் தொடர்ந்து 2017ஆம் ஆண்டும் 2018 ஆம் ஆண்டும் ஈரான் நாட்டிற்கு ஆசிய கிண்ண கரபந்தாட்ட போட்டிகளுக்கு பிரதான நடுவராக கடமையாற்றும் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. உலக அரங்கில் அரியாலையைச் சேர்ந்த ஒருவன் தலைநிமிர்ந்து நிற்கும் பெருமையினை ஏற்படுத்துவதற்கு உதவிய எம் ஊர் மைதானங்கள் சகவீரர்கள் குறிப்பாக என் குரு பொலிஸ் இராசரட்ணம் ஐயா மற்றும் என் பெற்றோர் அனைவருக்கும் நன்றிகளை தெரிவிப்பதுடன் என்னை இரவு பகல் பாராது கரபந்தாட்டத்திற்காகவும் அரியாலை சுதேசிய விழாவிற்கான அனைத்து கடமைகளுக் காகவும் மனமுவந்து சேவையாற்ற அனுமதிக்கும் என் அன்பு மனைவிக்கும் நன்றிகள்.

நான் அரியாலை மண்ணை நேசித்ததும் அந்த மண்ணில் வாழ்ந்த நம்மவர்கள் அரியாலை மக்களை நேசித்த பாங்கும் தான் எனது அனுபவங்களாகும்.

# Ariyalai in Many Manifestations



**Mrs. Sri Ranjini Anandakumarasamy**
**Lecturer in English Language**
**University of Jaffna**

It is very difficult to project all the aspects of a village like Ariyalai in a short article like this. The writer has ventured to portray only a few of them. The facts and the details need more modifications and information. The inadequacy of the facts should not diminish the real fame of the village.

The village Ariyalai is unique in many perspectives. Its location, at the opening of the Jaffna Town after crossing the Navatkuli Bridge, its massive extent of land, population, agricultural utility, life style of the people, occupation of the inhabitants, religious and cultural beliefs of the community, the importance of unity it imparts to its public, social welfare considered by various institutions etc. project the village unique. The writer uses qualitative and quantitative methods to make sure what she presents are supported by documents.

**Location, Extent and population of Ariyalai**

The village Ariyalai is a suburb whose western boundary is Jaffna town, on the South Columbuthurai, on the North Nallur and the east juts into the lagoon. The Trunk Road (A9 road) passes through this village after crossing the Navatkuli Bridge to lead to Jaffna Town. It is one of the largest villages in Sri Lanka. The massive area is administered both by Jaffna and Nallur AGA Division under ten Grama Sevaka Divisions. There are eight Grama Sevaka Divisions under Nallur Division and two Grama Sevaka Divisions under Jaffna Division.

The Land extent of the village is 17.1 sq km and the population according to 2018 census is 15,492.[11] Land in the Ariyalai East is mostly used for paddy cultivation and Farming.

**Forefathers and their Hereditary**

Ariyalayans were of a distinguished Tamil Family whose ancestry can be traced to the ancient Royal Kuriyans, highly respected noblemen of the king's Court of the Tamil kingdom of Nallur. Two descendants of these noblemen, Vanniyasingam Kuriyan and Canagasekara Kothanda Kuriyan, lived in Jaffna later during the Dutch regime.[4][6][9]

In the 19th century some influential men who descended from Canagasekara Kothanda Kuriyan[], abandoned the prestigious Kuriyan title as no longer relevant under the British and became famous as an entrepreneur for leasing large extends of crown land at Ariyalai for salt production on large scale. Subsequently,

many of his descendants were to distinguish themselves in public life of Northern Province. Most of them follow their forefathers' step and became crown proctors and generous philanthropists.

Ariyalayans' noble hereditary can be witnessed by their acquaintance with Shrila Shri Arumuganavalar and Pasupathi Chettiyar[9] in reviving Saivism and establishing Hindu Colleges.[8]

## Occupation of the people

The occupation of the majority of the people before colonization was farming. The minority contained artisans who involved in other essential services. During the reign of the ancient kings many influential Ariyalayans embellished their ruling by being the ministers who were named as Royal Kuriyans [13]. The Queens' conveyance called "Palanquins" were under these Kuriyans' supervision and custody since they were much relied on by the kings.[12] The consecration of the idol of Sithi Vinayagar, which was brought from Thondai Naadu, India by the order of the ancient kings before the foreign invasion, at Neernochchithalvu Sri Siththi Vinayagar Temple, Ariyalai is a solid proof.[7]

Two of these Kuriyans were found in the Dutch period and adopted their Christian names too before their titles.[13] However, their descendants throw away their noble title and involved themselves in reviving their religion, Hinduism and establishing Saiva Paribalana Saba and Hindu Colleges.[8]

Late Viswanathar Casipillai, A.Kathiravelu, A. Canagaratnam, C.Sittampalam, C. Ponnampalam, S.C.Mahatheva and their descendants founded many so called famous schools and supported the children from poor families for their education.[9] Thus many of their descendants were lawyers, consultants, professors, engineers and better politicians. Most of them grabbed the uppermost hierarchy in the civil service.[13]

## Agricultural Utility of the Land

Even though colonization diverted the younger generation to different profession, almost each and every family still has their ancestral paddy and farm lands. In addition to their main occupation they consider cultivating their land as a tribute to their home land. Thus during rainy season the Ariyalai East is flourished with green paddy shoots and vegetable plants.

Though Ariyalai is a suburb the people prosper the land around their houses with jack, mango, plantain, jambo, guava, pomegranate trees. There is no house without coconut or margosa or drumstick trees. Most of the families fulfill their daily need from these products. Above all, Ariyalai is not that much affected by the scorching sun because of this vegetation.

## Religious and Cultural Beliefs

The permanent residents of Ariyalai never shirked their own religion Saivism even during the colonization or after globalization. It is not without proof that one can say that they bring up their children religious and culture based. The temples in Ariyalai are well maintained and regularly attended by the residents. Wearing cultural dress is unwritten rule in attending the

temples and even an adolescent knows how to wear saree or veshti.

**Education, Art and Sports**

These three are main areas which the people of Ariyalai consider precious. They expose their skill not only in education but also in aesthetic art and sports. Many proved to be international and national level players.[14] Well known classical musicians, dancers and actors are hailed from Ariyalai.[15]

**Unity and Social welfare**

This happens to be the motto of the ancestors to inaugurate the National Day Celebration. The Centenary Celebration of which witness the faith the Ariyalayans have on unity. The Community Centres, Development Societies, United Clubs, Religious Societies, Service Clubs etc. look after the welfare of the public.

Above all the patriotism of the Diaspora should be mentioned here. They are always ready to lend their hand in every requirement.

**Reference:**


1. Ancient Ceylon – Parker H, Archeological Survey of India

2. Ancient Jaffna – Rasanayagam M. C.

3. C. Sittampalam – Revolvy

4. Dictionary of Biography of the Tamils of Ceylon - compiled by S. Arumugam, London

5. Stamp to honour Cathiravelu Sittampalam – Daily News 26.02.2004

6. Family History – devaluxmy.itgo.com

7. History of Jaffna – Muththuthambipillai A

8. History – Jaffna Hindu College

9. Viswanathar Casippillai – Wikipedia

10. Yaalppana Vaipavamalai – Mathakal Mylvaganap Pulavar

11. Census – 2018 – District Secretariat

12. Native Identification of the Writer – whose grandfather was the GS before Independence

13. Platinum Jubilee Magazine – National Day Celebration 1994

14. Magazines and name boards – St. John's College

15. Documents related to Cultural shows.

# Precious memories from my Ariyalai Village Childhood to Teenager :

# A Message from Ex-Athletic Captain of Ariyalai United Club



**Mrs. R. Krishnaveny**
*(Canada)*

I was born in Jaffna Srilanka, grew up in Chundiculi Jaffna and am now currently living in Ontario, Canada. We belong to a village called Ariyalai. Our house is one of the far north-east boundary of our Village.

My parents were government servants and so was my grandfather. For most of my childhood, my sister and I grew up with my grandparents. I have such wonderful memories and sceneries from my childhood which I have cherished and locked in my mind. I am going to open them up and illustrate some of them in the following paragraphs.

I gained a valuable education from our village. I went to three different schools. First I went with my mother's school for Grade 1 and 2 and then I went to study in the school where my mother studied and taught. In elementary school, I learned math, art and even sewing, in addition to Hindu values and prayers. I learned what is good and what is bad in that school. I came pretty much last in marks for the subjects in school. Then I move to Grade 6, and I became first in my class. I was proud of myself for being first. I felt proud for striving for my potential. Since then, I have tried to keep that attitude. Whatever I do I strive to improve and learn from my mistakes and try to correct them moving forward. Today, even though I hold several professional degrees, the values and childhood education I got from my village made me who I am today. I am still serving as a public servant here. I gained that passion of serving the public from my parents and the educators who taught me in my Village. My principal Mr. Sellappah wrote me a recommendation letter saying that he believes and entrusts me to do a highly responsible work. I am still abiding and vowing to that sentiment and his confidence in me.

In addition to studying, I also participated in many sports as many others did. For my schools and for the Ariyalai United Club, I participated in individual sports and team sports. Individual sports gave me the strength of competing against each other. Team sports taught me how to collaborate and accept other mates/ colleagues' views and accommodate them to win a common goal. Sharing, accepting and collaborating are attributes that I learned in my Village and I encourage the younger generation to have them as well. With those, you will succeed in your public and personal life.

In my village, I used to sprint to the playground next to Ariyali Sanasamuga Nillayam. I wore stripped, black and white spikes. They all called me as my nick name

– which was The Horse. Not only was I a sprinter, I also did skipping, ball throwing, book balancing and potato racing. Each individual sport taught me something to improve my inherent self and guided me on my path through life. I wanted to express my sincere vow and prayers for the soil that I ran on, I still cherish and pray for that soil to be free and fearless like I had been in the 1960's and 1970s. When I drive my car in the express ways, I still envision that I am sprinting in my lane towards my goals. Still, I am running in my allocated lane and making turns which I consider safe and sound.

My family is a very religious family. Our houses are surrounded by temples. I used to hear the Nallur Murugan Temple bells ring — I would wake up with that to study. After, when Sithivi Nayagar Temple bells ring we go to get some water from the well for the day to drink. When I used to come back and visit home while studying in Colombo, I get off at Pungankulam Railway Station and walk home alone in the dark without any fear. I would stop at the Amman Temple, put my bag down, and wash my face and pray before I headed home. First thing I see when I go home is our Cow. As soon she sees me she gets up and makes a sound that I know. I put my fingers across her face and she smiles at me. I cherish that smile in my mind forever.

We made paddy from our paddy land that we had in Ariyalai. We also made other seeds/ monkatta seeds as well. I cleared weeds with the ladies in the paddy fields who we hired to clear the weeds. I used to stand up in the field after the paddy grew full. The rice seeds stood tall and vibrant across the land and the tops of their stalks were huddled together. As the wind blew they would brush against one another, producing a beautiful melody across the land. It was as beautiful as our Village. I cherished that melody, and I hear it in my mind like a "Theva Hannam'[1]. The sunset I saw from our paddy filed touching the sea bed of Navatkuli was an amazing scene.


Finally, I want to say few words about the 100th anniversary of my village club. I wish all the best from my bottom of my heart for a successful celebration of 100 years of National Day Calibration success. I will stand by my village at any time if they need me to do so.

For the youngsters I want to say a few words:

Remember that, at the end of the day, no one can force another person to feel anything. Our emotions are our own. We create and fuel them. So, we can, and ought to, choose whether to feel or not to feel and what to feel, no matter what another person may do to us. Similarly, we can choose to pay attention to or ignore our emotional experiences. The choice is yours. Follow your passions, but I urge you to do so with your full effort. That is the lesson of being an Ariyalain.

Good luck and all the best.

# அரியாலையூரின் அருங்கல்வி



பூரணானந்தம் குகதாசன் B.Ed
ஆசிரிய ஆலாசகர் (கணிதம்)
ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளர்
(ஆரம்பக் கல்வி)

"கல்வி" என்பது ஒரு தேசத்தின் நற்பிரஜைகளை உருவாக்குவதையே நோக்கமாகக் கொண்டது. "கல்" என்பது தோண்டுதல் எனக் கருதப்படுகிறது. எனவே கல்வியின் மூலம் மனிதனுள் மறைந்து கிடக்கும் உள்ளார்ந்த ஆற்றல்களை வெளிக்கொணர்வத னூடாகவும், ஒருவரது நடத்தையில் அறிவு, அனுபவம், பயிற்சி, திறன் ஆகியவற்றினூடாகவும் நல்ல மனிதர்களை உருவாக்க முடியும். இதற்கமைய அரியாலையூரின் அருங்கல்வியே பலநல்ல மனிதர்களை உருவாக்கி வருகின்றது.

"தமிழர் என்ற பெருங்கடலில் ஒரு கூறாகிய ஈழத்தமிழர்களில் அரியாலையூர் தமிழர்கள் கல்வியை மிக மதிப்புடன் நேசிப்பவர்கள்." "கல்விச் செல்வம் அழியாத செல்வம்" கல்விச் செல்வத்தின் மூலமாகவே ஏனைய செல்வங்களையும் பெற முடியும் என்பதையும் கல்விச் செல்வமே மூலாதாரமானது என்பதையும் நம் முன்னோர்கள் அறிந்திருந்தனர். இதனாலேயே கல்வியில் அதீத அக்கறை செலுத்தி கல்வியறிவு பெற்ற அரியாலையூர் சமூகத்தை உருவாக்கினர், உருவாக்கி வருகின்றனர்.

**ஊரின் பெருமை**

முன்னைய காலத்தில் எம்மூர் மக்கள் நெல்விவசாயம், விலங்கு வேளாண்மை, தென்னை பனை வளக் கைத்தொழில், உப்பு விளைவித்தல், பிரம்புவேலை, சாயம் போடுதல், நெசவுத்துணி தயாரித்தல் போன்ற பல்வேறு துறைகளில் ஈடுபட்டு பல் வகைத் தொழில்நுட்பத்திறன் மிக்கவர்க ளாகத் திகழ்ந்தனர். கல்வித் துறையில் பொறியியல், மருத்துவம், புத்தாக்கம், விஞ்ஞானம், வர்த்தகம், கூட்டுறவு என்ற துறைகளில் வல்லுனர்களாக திகழ்ந்தார் கள். கலைத்துறையில் அண்ணாவிமார் கள், இசைக் கலைஞர்கள், நாடக நடிகர்கள், கவிஞர்கள், பாடகர்கள், இசையமைப்பாளர்கள், நவீனநாடக இயக்குனர்களாக அரியாலை யூரின் அருங்கலைஞர்களாகத் திகழ் கின்றார்கள்.

சட்ட நிரூபண சபை உறுப்பினர்க ளாக, பாராளுமன்ற உறுப்பினர்களாக, அமைச் சராக, அமைச்சுச் செயலாளராக, அரச அதிபராக, துணைவேந்தராக, பிரதம பொறியியலாளர்களாக, சேவை யும் திறமையும் மிக்க வைத்தியர்களாக, பட்டயக் கணக்காளர்களாக பலர் பதவி வகிக்கவும், விளையாட்டுத் துறையில் தேசியமட்ட வீரர்களாக திகழவும் எமது கல்வி முயற்சியே காரணமாகும்.

அரியாலையூர் நிலவளம், நீர் வளம் நெல்வளமும், தென்னை வளமும் பனை வளமும் மிக்க சிறந்த ஊராக திகழ்கின்றது. "அறிந்தவன் அறிய வேண்டும் அரியாலைப் பனாட்டை" என்னும் முதுமொழி. எமது ஊரின் பனைவனத்தின் சிறப்பினை எடுத்துக் கூறுகின்றது. ஊர்க் கைக்குத்தரிசியும்,

பனம் பண்டங்களும் உண்டு திடகாத்திர மான மனிதர்களாகத் திகழ்ந்தார்கள். பனை வளத்தினைப் பயன்படுத்திய எம் மூரவர்கள் ஈழத்தில் உயர்ந்த பனை களாகத் திகழ்ந்தவர்கள். கல்வியிலும் செல்வாக்கு மிக்கவர்களா யிருக்கின்றனர். கல்வியில் அக்கறையும் ஆதிக்கமும் செலுத்தி கல்வியாளர்கள் உருவாகின் றார்கள்.

தமிழ் கல்விப் பாரம்பரியமானது குருசீடமுறை குருகுலத் திண்ணைப்பள்ளி முறை, முறைசாராக் கல்வி முறை, முறைசார் பாடசாலைக் கல்விமுறை என்பவற்றினூடாக வளர்ச்சியடைந்து வருகின்றது. எமது ஊரிலும் இக்கல்வி முறைகள் பயன்படுத்தப்பட்டன.

ஒருவனைப் பூரணமாக்குவதே கல்வி என்பது உலகமே ஏற்றக்கொண்ட உண்மை. மனிதனைப் பூரணப்படுத்த அவனில் இரு அம்சங்களைக் கல்வி நிறைவு செய்தல் அவசியமாகும். ஒன்று அவனை உலகத்தோடு ஒன்றிய சமூக மனிதனாக உருவாக்குதல், மற்றையது தனிமனித ஆளுமையை வெளிக் கொணர்ந்து பல்வகைத் திறன்களைப் பெற்றவனாக்குதல். இவ்விரு நோக்கங் களையும் நிறைவு செய்யுமுகமாக பல்வேறு கல்விமுறையினூடாக கல்வியிய லாளர்கள் செயற்படுகின்றனர்.

## திண்ணைக்கல்வி முறை

முன்னைய காலத்தில் சமூகத்தில் முன்னோடிகளாகத் திகழ்ந்தவர்கள் ஆசான்களே ஆவார். இந்தவகையில் எமது முன்னாள் ஆசிரியர்கள் செயற்பட்டுக் கல்வியை வளர்த்தனர். திண்ணைக் கல்விமுறையின் சாயலில் எமது மூத்தகுடியைச் சேர்ந்த ஆசிரியர்கள் அயலிலுள்ள பிள்ளைகளை தமது வீடுகளிற்கு அழைத்து கல்வியறிவை ஊட்டினர். முன்னைய காலத்தில் எமது ஊரின் மூத்த ஆசான், சைவமும், தமிழும் சாஸ்திரமும் கைவரப்பெற்ற பண்டிதர் மு.வேதநாயகம் அவர்கள் ஊர்ப்பிள்ளை களைத் தமது வீட்டிற்கு அழைத்து தமிழ் இலக்கணமும், இலக்கியமும், சைவசமய அறிவும் புகட்டினார். ஆசிரியர் அருணாசலம், அருளம்பலம், குணரத்தினம் போன்றோர் அதேபோல எம்பிள்ளை களிற்கு சைவப் பண்பாட்டினை சொல்லிக் கொடுத்தனர். பண்டிதர் இராசையா அவர் மனைவி தங்கரத்தினம் ஆகியோர் ஆரம்பக்கல்வியை இனிதே கற்பித்தனர். எண்கணித வல்லுனரான க.சுப்பிரமணியம் அவர்கள் தமது வீட்டின் தலைவாசல் கட்டிடத்தில் மாணவர்களுக்கு எண் கணிதத்திறணை இலகுவாய் பயிற்று வித்தார். மற்றும் ஆசிரியர் ப.கணபதிப் பிள்ளை க.சதாசிவம் போன்றோர்கள் சமயத்தையும், நாடக கலையையும் படிப்பித்தனர்.

இவ்ஆசான்கள் வெள்ளைவேட்டி, சால்வை, நஷனலுடன் கம்பீரமாகத் தோற்றமளித்தனர். அடுத்த தலைமுறை யில் கணித ஆசான் நா. நல்லையா அவர் களும் தமிழ் ஆசான்களான பொ.பூரணா னந்தம், பொ.ஏரம்பு பரமானந்தம் ஆகியோர்கள் தமது பகுதிப் பிள்ளை களிற்கு சமய, தமிழ் கலாசாரத்தை வழிகாட்டினார்கள். அமரர் தமிழாசிரியர் வே.ந.செல்வரத்தினம் அவர்கள் தமது வீட்டில் பிள்ளைகளிற்கு மேலதிக வகுப்புக்களை நடத்தி ஊக்குவித்தார். அக்காலத்தில் வாத்தியார் என ஆசிரியர் களையும் தயலக்கா என ஆசிரியை களையும் அழைத்தோம். தங்கரத்தினம், பாக்கியரெத்தினம், லங்கா ரீச்சர், யோகம்மா, சரஸ்வதி, கிளி ரீச்சர், இலட்சுமிப்பிள்ளை ஆகிய தயலக்காக் களும் விசுவாசமாக கல்விப் பணி புரிந்தனர். இவ் ஆசான்கள் என்றும் எம்மால் போற்றப்பட வேண்டியவர்கள்.

## கல்விச்சாலைகள் நிறுவிய கனவான்கள்

மேலும் எமது ஊரின் கல்வி வளர்ச்சி கருதி கல்விக்கு அத்திபார மிட்டவர்கள் உயர்திரு சி.காசிப்பிள்ளை அவர்களும் உயர்திரு வி.கனகரத்தினம் அவர்களும் என்றும் மறக்க முடியாதவர் கள். அமரர் வி.காசிப்பிள்ளை அவர்கள் அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியா சாலையையும் அமரர் ஆ.கனகரத்தினம் அவர்கள் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தையும் (ஸ்ரான்லி கல்லூரி) தமது சொந்தக் காணியில் நிறுவி வறிய பிள்ளைகளின் கல்விக்கு வித்திட்டனர். தொடர்ந்து அரியாலை கிழக்கு அரசின் தமிழ்க் கலவன் பாடசாலையும், ஆனந்தா வித்தியாலயமும் தோற்றம் பெற்றன. இடைக்காலத்தில் மறுமலர்ச்சிக்கான புரட்சிகர இளைஞர் களினால் பூம்புகார் என்ற மாதிரிக்கிராமம் அமைக்கப் பட்டது. பூம்புகார் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையை அமைத்தனர்.

## அரியாலையூர் பாடசாலைகள்

தற்போது எமது ஊரின் கல்விக்கூடங்களான யா/ கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் (ஸ்ரான்லிக் கல்லூரி), யா/ அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியா சாலை, யா/ அரியாலை கிழக்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, யா/பூம்புகார் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை என்பன மிகவும் சிறப்பான கல்வியை வழங்கி வருகின்றன. இதனால் கற்றறிந்த சமூகம் உருவாகிறது. எமது ஊர் மக்களிற்கு இறையருள் சுரக்கும் ஆலயங் களைப் போன்று, கல்வியை வழங்கும் கோவில்களாக வித்தியாலயங்கள் திகழ்கின்றன.

காலவோட்டத்தில் இடப் பெயர்வுகள் நகரத்தை நோக்கி மக்கள் நகர்தல் போன்ற செயற்பாடுகளினால் சிலபாதிப்புக்கள் ஏற்பட்டாலும் அத் தடைகளைத் தாண்டி எம்மூர் முன்னேறி வருகின்றது. யாழ்ப்பாண நகரின் கிழக்கு எல்லைக்கிராமமாகவும் எல்லை நகரமாகவும், எமது ஊர் புகழ் பெற்று விளங்குகின்றது. ஒன்றோடொன்று கலந்த நகர வாழ்வும் கிராம வாழ்வும் இணைந்த வித்தியாசமான வாழ்க்கை முறையில் எம்மூர் மக்கள் வாழ்கின்றனர் என்பது குறிப்பிடத் தக்கது.

## வடபகுதி மக்களிற்கான கல்விப்பணி

எமது நாட்டின் தேசாமானிகளில் ஒருவராகிய கௌரவ சேர் பொன்னம்பலம் இராமநாதன் அவர்களின் உயரிய நாடளாவிய கல்விப்பணியினை வடக்கே திசை திரும்பிய பெருமை எமது ஊர்க் கல்விமான்களில் ஒருவராகிய உயர்திரு. வி.காசிப்பிள்ளை அவர்களையே சாரும். இப்பெரியார் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி உருவாகுவதற்கு முக்கிய காரண கர்த்தாவாக திகழ்ந்தார். யாழ். இந்துக் கல்லூரி தற்போது தேசிய மட்டத்தில் சிறந்த பாடசாலைகளில் ஒன்றாகத் திகழ்கின்றது. எம்மூரவர்கள் பலர் யாழ் இந்துக்கல்லூரியில் கற்று கல்விப்பேறு பெற்று நல்ல நிலையில் வாழ்ந்தனர், வாழ்கின்றனர். இக் கல்விமான் தனது சொந்தக் காணியில் உருவாக்கிய அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை, அரியாலைப் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கு பெருந்துணையாக நிற்கின் றது. ஸ்ரீ பார்வதியின் புதல்வர்கள் பலர் நல்ல உத்தியோகங்களைப் பெற்று சீரும் சிறப்புடனும் வாழ்கின்றனர். அடுத்து எமது ஊர்ப்பெரியார் ஆறுமுகம் கனகரத்தினம் அவர்கள் எமது ஊரின் பொருளாதார நலிவுபெற்ற மாணவர் களுக்காக தனது சொந்தக் காணியை வழங்கி ஸ்ரான்லிக் கல்லூரியை ஸ்தாபித்தார். ஸ்ரான்லிக் கல்லூரியில் ஆண், பெண் இருபாலாருக்குமான வசதிகள் உருவாக்கப்பட்டன. வட

பகுதியில் நிறுவப்பட்ட அரசினர் மத்திய மகா வித்தியாலயங்களில் ஒன்றாக அமைந்தது. புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்கள் கட்டாயமாக இப்பாடசாலையில் அனுமதிக்கப் பட்டனர். வெவ்வேறு பிரதேச தமிழ் மாணவர்கள் பாடசாலையில் அனுமதிக் கப்பட்டனர். இதனால் வெவ்வேறு பிரதேச தமிழ் மாணவர்கள் கல்வி கற்க வழி ஏற்பட்டது. இதனால் பல கல்வி மான்கள் உருவாக்கப்பட்டனர். தற்போது யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தி யாலயம் என சிறப்பான தராமான கல்வியை மாணவர்களுக்கு வழங்கி வருகின்றது. விடுதி ஆய்வுகூடம் விளையாட்டு மைதானம், நூலகம், சிறந்த வகுப்பறை, கணனிக் கூடம் எனப் பல கற்றல் வசதிகள் கொண்ட இப்பாடசாலை சிறப்பான நிர்வாகக் கட்டமைப்பின் கீழே இயங்கிவருகின்றது. கலை, விஞ்ஞானம், வர்த்தகம் தொழில்நுட்பம் ஆகிய துறைகளிலும் தேர்ச்சிபெற்ற மாணவர்கள் உருவாகின்றனர்.

வர்த்தகத்திற்கு மிகப்பெயர் பெற்ற பாடசாலை இதுவாகும். நல்ல கல்வி பெற்ற நற்பிரசைகள் பலர் உருவாகி வருகின்றனர். எம்மூர் அயற்பாடசாலை களான யா/நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயம், யா/ நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியா சாலை, யா/ கொழும்புத் துறை இந்து மகா வித்தியாலயம், கொழும்புத்துறை துரையப்பா வித்தியால யம் ஆகியவையும் தரமான கல்வியை அளித்துவருகின்றன மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

## கல்விப்பணிக்கு அணி சேர்த்த அதிபர்கள்

எமது அரியாலையூரின் சமூகத்தின் கல்வி முன்னேற்றத்திற்கு சமூகச் சிற்பி களாக கல்விச் சேவைக்கே அணிகலனாகத் திகழ்ந்த பாடசாலை அதிபர்கள் என்றும் மறக்க முடியாதவர்கள். அத்தகைய அதிபர்கள் வரிசையில் அமரர்கள் அதிபர் ஆ.சோமசுந்தரம் (A.சோமர்) உபஅதிபர் வித்துவான் வீ.கதிரவேலு ஆகியோர் யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தி யாலயத்தை கட்டியெழுப்பிப் பெருமை சேர்த்தவர்கள். அதேபோல அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலயத்தை வளர்த் தெடுத்த பெருமை முன்னாள் அதிபர்கள் க. மாணிக்கவாசகர், பண்டிதர் இராசையா க.சுப்பிரமணியம், ப.கணபதிப் பிள்ளை ஆகியோரையே சாரும். அதேபோன்று அரியாலை கிழக்கு அரசினர் தமிழ்கலவன் பாடசாலையை முன்னைய அதிபர்கள் சு.தம்பாப்பிள்ளை, க.பாலசிங்கம், கணபதிப்பிள்ளை ஆகியோரும், பூம்புகார் அரசினர் பாடசாலையை ஆரம்ப காலத்திலிருந்து கட்டியெழுப்பியவர் அமரர் அதிபர் வே.க.சண்முகலிங்கம் அவர்களும் வளர்த்தனர். நற்பணிபுரிந்த அதிபர்கள் வேட்டி சால்வையுடன் நஷனல் உடை அணிந்து கையில் பிரம்பு டன் கம்பீரமாக பணியாற்றியவர்கள்.

## முன்பள்ளிக் கல்வி

ஒரு குழந்தை பாடசாலைக்கு காலடி எடுத்து வைப்பதற்கு அதற்குரிய மனரீதியாக, உளரீதியாக தன்னைத் தயார்படுத்திக் கொள்வதற்கு முன் பள்ளிகளே உதவுகின்றன. குழந்தைப் பருவத்திலேயே தமது உள்ளார்ந்த திறன்களை வெளிக்கொணர்தலும் சேர்ந்து பழகுதல், சுயஇயக்கம், சுய கட்டுப்பாடு, சமூகத் தொடர்பினைப் பெற்றுக்கொள்ளவும் முன்பள்ளிகள் வழியமைக்கின்றன. இந்த வகையில் அரியாலைப் பிரதேசத்தில் இயங்கி வருகின்ற பாலர் பாடசாலைகள் சிறப்பாக இயங்கிவருகின்றன. அநேக பாலர் பாடசாலைகள் எம்மூர் சனசமூக நிலை யங்களினால் செவ்வனே இயக்கப்படு கின்றன. ஒரு சில தனியார் பாலர் பாடசாலைகளும் செயற்பட்டு வருகின்றன.

அரியாலை கிழக்கு பாலர் பாடசாலை
பூம்புகார் முன்பள்ளி
நாவலடி பாலர் பாடசாலை
கலைவாணி முன்பள்ளி
அமரகலா பாலர் பாடசாலை
சரஸ்வதி முன்பள்ளி
அருணோதயா முன்பள்ளி
திருமகள் பாலர் பாடசாலை
கலைமகள் பாலர் பாடசாலை

இவற்றுடன் ஓரிரு தனியார் முன்பள்ளிகளும் சிறார்களுக்கு முன் அறிவூட்டுகின்றன.

## ஆரம்பக்கல்வி - இடைநிலைக்கல்வி உயர்கல்வி

ஒரு பிள்ளையின் கல்வி வளர்ச்சியில் ஆரம்பக் கல்வியே வாழ்க்கையில் அடித் தளமாக அமைகின்றது. தரமான ஆரம்பக் கல்வியை ஒருபிள்ளை பெற்றுக் கொண்டால் தொடர்கல்வி உயர்ந்ததாக அமையும். இடைநிலைக்கல்வி அப் பிள்ளையின் உயர்கல்விக்கு வழி காட்டுவதோடு அப்பிள்ளையின் எதிர் காலத்தையே தீர்மானிக்கின்றது. இம் மூன்றுநிலைக் கல்வியையும் எமது பிரதேச கல்விச்சாலைகள் நிறைவாக வழங்குவதின் மூலம் கற்ற சமூகம் உருவாகின்றது.

## அறநெறிக்கல்வி

எமது ஊரிலுள்ள ஆலயங்களில் பிரதேச செயலக கலாசாரப்பிரிவின் வழிகாட்டலில் இயங்கும் அறநெறிப் பாடசாலைகள் மூலமாகவும் பிள்ளைகளின் சமய அறிவு சைவப் பண்பாடு, பண்ணிசை ஆகிய திறன்கள் கொடுக்கப்படுகின்றது ஸ்ரீ சித்தி விநாயகர் அறநெறிப்பாடசாலை, அரியாலை கிழக்கு அறநெறிப் பாட சாலை ஸ்ரீ ஞானவைரவர் அறநெறிப் பாடசாலை குறிப்பிடத்தக்கவை. இதனால் நல்ல பிள்ளைகள் பண்பாடு, விழுமியங் கள் போன்றவற்றை அறிந்து அதன்படி வாழவும் வழி கிடைக்கிறது. சமயக்கல்வி இலவசமாக கற்பிக்கப்பட்டு வலியுறுத்தப் படுகின்றது.

## அரியாலை இளைஞர் இந்து மாமன்றத்தின் கல்விப்பங்களிப்பு

எழுபதாம் ஆண்டுகளில் தனியார் கல்வி நிலையங்கள் செல்வாக்கு பெற்றிராத நிலையில் மேலதிக கல்வி வகுப்புக்களை மாணவர்கள் பயன்படுத்த முடியாத காலத்தில் அரியாலை இந்து இளைஞர் மாமன்றம், அருளம்பலம் ஞாபகர்த்த மண்டபத்தில் க.பொ.த.சா/த, உ/த மாணவர்களுக்காக இலவச வகுப்புக்களை நடத்தியது. தமிழ், ஆங்கிலம், கணிதம், சைவம், விஞ்ஞானம் போன்ற பாடங்கள் நல் ஆசான்களால் போதிக்கப்பட்டன. இதனால் எம்மூர் மாணவர்கள் நல்ல பலனைப் பெற்றுக் கல்வியில் முன்னேறி அரச உயர் பதவிகளைப் பெற்று சமூகத்தில் சிறப்பாக வாழ்கின்றனர். அத்துடன் இவ் இளைஞர் இந்து மா மன்றம் ஆலயங்களின் திருவிழாக் காலங்களில் சமயப் பேச்சுக்கள், கதாப் பிரசங்கங்கள், இன்னிசைக் கச்சேரிகள் போன்றவற்றை நடாத்துவதன் மூலம் எம்மக்களிற்கு சைவ விழிப்புணர்வை ஊட்டி வருகின்றது. மாணவர்களுக்கான சமயஅறிவுப்போட்டி, திருமுறை மனனப் போட்டி என்பவற்றையும் நடாத்துவதன் மூலம் மாணவர்களின் சமய அறிவிற்கு ஊக்கம் அளித்து வருகின்றது.

## சனசமூக நிலையங்களின் கல்விப்பணி

மாணவர்கள் கல்வியில் இணை பாடவிதானச் செயற்பாடுகளும் முக்கிய பங்கு வகிக்கின்றது. எமது ஊரிலுள்ள சனசமூக நிலையங்கள் இளைஞர்களின் கலை, விளையாட்டுத் திறன்களை ஊக்குவிக்கின்றன. ஆண்டு தோறும் சனசமூக நிலையங்கள் கொண்டாடும்

ஆண்டு விழாக்களின்போது நடத்தப் படும் கலைப்பிரிவில் பேச்சு கட்டுரை மொழித்திறன், ஆக்கத்திறன் கிராமிய சம்பாஷனை, நடனம், நாடகம் சமய அறிவு பொதறிவு ஆகிய போட்டிகளில் பிள்ளைகள் பங்கு பற்றுவதின் மூலம் தமது வாண்மையை விருத்தி செய்து கொள்கின்றனர். மாதந்தோறும் நடத்தப் படும் போட்டிப் பரீட்சைகள் இலவசக் கல்வி வகுப்புக்கள் துணை செய்கின்றன.

விளையாட்டுப் பிரிவில் கரபந்து, உதைபந்து, கிரிக்கெட், தாச்சி, கபடி போன்ற குழுவிளையாட்டுகளிலும், ஓட்டம், பாய்தல், போன்ற மைதான நிகழ்ச்சிகளிலும் பங்குபற்றுவதன்மூலம் தமது உள்ளார்ந்த திறன்களை வெளிக் கொணரச் சந்தர்ப்பமும் சமூக மயமாக்க லும் கிடைக்கின்றது. உள்ளக விளை யாட்டுக்களான சதுரங்கம், கரம், பட் மின்ரன், மேசைப்பந்து போன்றவற்றில் பங்கு பற்றுவதால் உள, உடல் விருத்தி களை பெற்றுக்கொள்ளவும் வசதி ஏற்படுகின்றது. இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்திப் பல மாணவர்கள் பாடசாலைகளில் வெற்றி பெறுவதோடு, தேசியரீதியிலும் முன்னேற வாய்ப்பு ஏற்படுகின்றது.

## சுதேசிய விழாக்களின் பங்களிப்பு

நூற்றாண்டு காலமாக எமது மூதாதையினரால் ஆரம்பித்து தொடர்ந்து தமிழர் திருநாளாம் தமிழ்ப்புத்தாண்டு, சித்திரைப்புத்தாண்டு தினத்தில் அரியாலை சுதேசிய திருநாள் கொண்டாட்ட விழா கொண்டாடப்படுகின்றது.

ஆண்டுதோறும் பெரும் திட்ட மிடலுடனும் எமது ஊர் மக்களின் திறன்களை வளர்க்கவும் கலை, விளை யாட்டு நிகழ்வுகளில் பங்குபற்றவும் ரசித்து மகிழவும் சுதேசிய விழா நிகழ்வுகளே உதவுகின்றன. கலைப் போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டி மேடைகளில் தம் நிகழ்ச்சிகளை மேடை யேற்றுவதன் மூலம் சுயநம்பிக்கை, சுய கௌரவம் என்பவற்றை வளர்த்துக் கொள்ள முடியும். அதே போல பிரமாண்டமுறையில் இடம்பெறும் விளையாட்டு நிகழ்ச்சிகளில் மைதானங் களில் பங்குபற்றவதன் மூலம் தமது உடற் திறன்களை வெளிக்கொணர்ந்து உற்சாகம் பெற்றக் கொள்கின்றனர். இதனால் பிள்ளைகளின் சமநிலை ஆளுமைப் பண்புகள் வளர வாய்ப்பேற்ற படுகின்றது.

எனவே அரியாலையூரில் கல்வி பெற பல சந்தர்ப்பங்களை கல்வி அணுகுமுறையில் உருவாக்கப் படுகின்றன. அரியாலைத்திருவூர் கல்விச்செல்வம் பெற்று அரியதோர் கல்விச்சமூகமாகத் திகழ இறைவனை வேண்டுகிறேன்.

# அரியாலையில் நடனக்கலை



இராமநாதன் சடகோபன்
ஓய்வு நிலை வங்கி உத்தியோகத்தர்

கலைவளம் நிறைந்த அரியாலையில் நடனக் கலையிலும் சளைத்துவிடவில்லை. அரியாலையில் நடனக்கலைக்கு வித்திட்டவர் கொக்குவிலைச் சேர்ந்த அமரர் எரம்பு சுப்பையா நடன ஆசிரியராவார். இவர் யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் நடன ஆசிரியராகக் கடமைபுரிந்த பொழுது எம் ஊரிலிருந்து இக்கல்லூரியில் கற்ற மாணவர்களையும் இணைத்து பல நடன நிகழ்ச்சிகளை நடாத்தியுள்ளார்.

அந்த வகையில் சிறப்பாக நடனக்கலையைக் கற்ற திருமதி யோகாதேவி சிவயோகேஸ்வரன், திருமதி கலாவதி கனகரத்தினம், திருமதி நேசமலர் தேவராஜா, திருமதி குகதாம்பாள் கோபால சுந்தரம் போன்றோர் சிறிய நடன நிகழ்ச்சிகளைத் தயாரித்து வழங்கினார்கள்.

அரியாலை சாண்டோ மாஸ்ரரின் மகள் திருமதி ஜெயந்தி சண்முகலிங்கம் அவர்கள் நடனக்கலையை முறைப்படி அமரர் ஏரம்பு சுப்பையா அவர்களிடம் ஆரம்பித்து செல்வி சாந்தா பொன்னத்துரை அவர்களிடமும் இராமநாதன் நுண்கலைக் கழகத்திலும் பயின்று நடனக் கலை மாணிப் பட்டத்தையும் பெற்றுத் தமது வீட்டில் நடன வகுப்பக்களையும் நடத்திப் பல மாணவர்களை உருவாக்கினார். தற்போது கனடாவில் வசித்து வரும் அவர் சிவநர்த்தனாலயம் எனும் நிறுவனத்தை ஸ்தாபித்து அதன் மூலம் இதுவரை 63 மாணவர்களை அரங்கேற்றம் செய்துள்ளமை அவரது சாதனையை எடுத்துக் காட்டுகின்றது. அவரது சிரேஸ்ட மாணவிகளான மைதிலி அம்பலவாணர், பிறேமா சுந்தரலிங்கம், பாலினி பாலசிங்கம், தாரணி செல்வராஜா என்பவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்கள் நடனக் கலையைத் திறம்படக் கற்று நடனப் பட்டதாரிகளாகி நடன ஆசிரியர்களாகப் பணியாற்றுகின்றனர். மைதிலி அம்பலவாணர் யாழ் பல்கலைக் கழகத்தின் நுண்கலைப்பீட நடன விரிவுரையாளராகக் கடமையாற்றினார்.

அரியாலையைச் சேர்ந்த சுபாஷினி அவர்களும் நடன வகுப்புக்களை நடத்திப் பல மாணவர்களை உருவாக்கினார். அவரது மாணவிகளில் அகல்யா சுந்தரம், பவானி சதானந்தன், சுரேந்தினி சிதம்பர நாதன்என்பவர்கள்குறிப்பிடத்தக்கவர்.

அகல்யா சுந்தரம் அவர்கள் “கீத நர்த்தனாலயா” எனும் நிறுவனத்தை ஸ்தாபித்துப் பல மாணவர்களை உருவாக்கி வருகின்றார் இவர் நடன ஆசிரிய ஆலோசகராக யாழ் கல்வி வலயத்தில் கடமையாற்றுகின்றார். இவரது மாணவர்களான அரியாலையைச் சேர்ந்த கார்திகா பொன்னத்துரை, சுஜீவா செல்வம், கௌசிகா ஏகாம்பரம் ஆகியோர் நடனக் கலைமாணிபட்டம் பெற்று நடன ஆசிரியர்களாக உள்ளனர்.

அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்டத்திலும் நடனப் போட்டி

களிலும் திருமதி ஜெயந்தி சண்முகலிங்கம், பிறேமா சுந்தரலிங்கம், மைதிலி அம்பலவாணர், பாலினி பாலசிங்கம், கார்த்திகா பொன்னத்துரை தாரணி செல்வராஜா என்பவர்கள் நடன ஆற்றுகை நிகழ்ச்சிகளை நடாத்தியும் மாணவர்கள் மூலம் நிகழ்ச்சிகளை வழங்கியும் பங்களிப்புச் செய்துள்ளனர்.


சுதேசிய திருநாட் கொண்டாட்டத்தில் வருடா வருடம் தவறாமல் நடன நிகழ்ச்சிகள் நடைபெற்றுவருவது குறிப்பிடத்தக்கது. தற்போது அரியாலையில் பல மாணவர்கள் நடனக் கலையைப் பயின்று வருகிறார்கள்.

மேலும் ஆண் ஆடல் கலைஞர்களும் எமது மண்ணுக்குப் பெருமை தேடித் தந்துள்ளார்கள். அந்த வகையில் நடன ஆசிரியர் திரு. V. கைலாசம் அவர்களிடம் நடனக்கலையை கற்ற சிறுவனான லோகேஷ் அவர்களின் சிவதாண்டவ அரங்கேற்றம் சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவில் அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை அரங்கில் இடம்பெற்றது. இத் தாண்டவம் பின்னர் அரியாலையூர் சதானந்தன் போஸ் நடாத்திய களியாட்டு விழாக்களில் இடம்பெற்று பலரதும் பாராட்டைப் பெற்றுள்ளது. மேலும் திருவிளையாடல் நாடகத்துக்காக பிரபல நடன ஆசிரியர் ஏரம்பு - சுப்பையா அவர்களிடம் மாதக்கணக்கில் சிவதாண்டவம் பழகிய பெருமை கலைஞர் திரு.E.K குமாரையா அவர்களுக்குரியது. அந் நாடகத்தில் ஆடிய சிவதாண்டவம் அற்புதமாக அமைந்தது. எனவே இந் நடனக்கலையை இன்றும் தனிப்பட்ட வகுப்புகளாகவும், பாடசாலை மட்டத்திலும் பல மாணவர்கள் பயின்று வருவது குறிப்பிடத்தக்கதாகும்.



# அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா பற்றிய நோக்கு

கலாஷணம், சைவப்புலவர்
சதாசிவம் உருத்திரேஸ்வரன் B.A



## அறிமுகம்

*ஒரு நாட்டின் உயிர்நாடி கிராமங்கள் என்பர் அறிவியலாளர்கள். 1914 ஆம் ஆண்டு பிரிட்டிஷ் அரசால் இலங்கையின் பல உள்ளூர் அரசியல் தலைவர்கள் கைது செய்யப்பட்டமையைத் தொடர்ந்து எமது இனத்தின் தனித்துவமான அடையாளங்களான மொழி, கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்கள் மற்றும் பாரம்பரிய விளையாட்டுக்கள் அழிந்து விடுமோ அல்லது அழிக்கப்பட்டு விடுமோ என்ற அச்சத்தில் பல கிராமங்களில் சுதேசிய உணர்வுடன் கூடிய விழாக்கள் கொண்டாடப்பட்டன. காலப்போக்கில் பல கிராமத்தவர்கள் இவ்விழாவை கைவிட அரியாலை மக்கள் தங்கள் மூதாதையோரில் கொண்டிருந்த ஆழ்ந்த பற்றும் அவர்களது தூரநோக்கு சிந்தனையோடு கூடியதுமான சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவை தொடர்ச்சியாக 1919 ஆம் ஆண்டிலிருந்து கொண்டாட ஆரம்பித்து இவ்வருடம் 2019 ஆம் ஆண்டு நூறாவது நூற்றாண்டு விழாவாகக் கொண்டாடுவது எம் எல்லோருக்கும் மகிழ்ச்சிக்குரியதே.*

*அரியாலை கிராமம் இன்றைய கல்வி, செல்வம் ஆகிய நிலைகளிலும் கலை, விளையாட்டு மற்றும்இன்னோரன்ன துறைகளிலும் உயர்ச்சியடைந்து முதன்மை பெற்று விளங்க வித்திட்டவர்களில் குறிப்பிடக்கூடியவர் பெரிய காசிப்பிள்ளை என்ற அமரர் விஸ்வநாதர் காசிப்பிள்ளையும் அவரது அண்ணன் மகன்களாகிய அமரர்கள் ஆறுமுகம் கதிரவேலும், ஆறுமுகம் கனகரத்தினமுமே ஆவார். இவர்கள் மூவரும் 19 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் யாழ்ப்பாணத்தில் தங்களுக்கு நிகராக தக்காரும் மிக்காரும் இல்லாத புகழ்பெற்ற சட்டத்தரணிகளாகவும், மாவட்ட நீதிபதிகளாகவும் இன்னும் பல உயர் பதவிகளை அலங்கரித்து பெருமை பெற்றவர்கள். இவர்கள் யாழ்ப்பாண நகரின் வளர்ச்சிக்கு வித்திட்டவர்களில் முதன்மையானவர்கள். தமிழிற்கும் சைவ சமய வளர்ச்சிக்கும் பாடுபட்டவர்கள். எமது கிராமமான அரியாலையையும், மக்களையும் மறவாது 1910 ஆம் ஆண்டு அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாசாலை என்னும் கல்விக் கூடத்தை நிறுவியதோடு 1914 ஆம் ஆண்டு அரியாலை நீர் நொச்சித்தாழ்வு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தை இந்தியாவிலிருந்து கற்களைக் கொண்டு வந்து அங்கிருந்து சிற்பாசிரியர்களையும் வரவழைத்து புனரமைத்து மகா கும்பாபிஷேகமும் செய்வித்தவர் பெரிய காசிப்பிள்ளை ஆவார். இவரைப் போல் அமரர் ஆ.கதிரவேலு தலைமையில் எமது மக்களின் வாசிப்புத் திறனையும் பரந்த உலக அறிவையும் வளர்க்க வேண்டும் என்ற குறிக்கோளோடு 1919 ஆம் ஆண்டு அரியாலை சரஸ்வதி நூல் நிலையத்தை நிறுவினார். இதே 1919 ஆம் ஆண்டு அமரர் கதிரவேலுவும், அமரர் பரமு கந்தையாவும் இன்னும் சில தூர*

நோக்குச் சிந்தனையாளர்களும் ஒன்று சேர்ந்து அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவை ஆரம்பித்தார்கள். இதற்கென அமரர் கதிரவேலு தலைமையில் ஒரு சபை தெரிவு செய்யப்பட்டு தமிழ், சைவ சமய வளர்ச்சிக்கு அவசியமான பாடவிதானம் உள்ளடங்கிய வினாக்களுடன் கூடிய கலைப்போட்டிகளும் பாரம்பரிய விளையாட்டுக்களுடனான போர்த் தேங்காய் அடித்தல், வாரோட்டம், கெந்தியடித்தல், சடுகுடு உள்ளடங்கிய விளையாட்டுப்போட்டிகளும் நடாத்தி இரவில் நாடகத்துடன் கூடிய கலை நிகழ்ச்சிகளும் நடாத்தினார்கள். முதலாவது விழாவிலிருந்து 24 ஆவது விழா வரை ஒரு சில ஆண்டுகள் தவிர அமரர் கதிரவேலு, அமரர் கனகரத்தினம் மற்றம் அவர்கள் வழி வந்தோரே தலைமை வகித்து விழாவைத் தொடர்ச்சியாக சிறப்பாக நடத்தியமை குறிப்பிடத்தக்கது. 1942 ஆம் ஆண்டு 25 ஆவது வெள்ளி விழாவிலிருந்து அமரர் சட்டத்தரணி சு.செ. மகாதேவா தலைமை வகிக்க ஆரம்பித்ததோடு தலைமைத் துவமும் ஏனைய பதவிகளும் பரவலாக்கப்பட்டு இன்று வரை பலதரப்பட்டவர்கள் தலைமை தாங்கி இவ்விழாவை நடாத்தி வருகின்றார்கள்.

## ஆலோசனைக் கூட்டமும் தொடர் நடவடிக்கைகளும்

எந்த ஒரு சபையோ அல்லது சங்கமோ தமது தொடர் நடவடிக்கை களுக்காக பெயர், அமைவிடம், நோக்கம், பதவிகள், விபரம், தெரிவு முறை, பதவியாளர்களின் பொறுப்புக்கள், கடமைகள் இன்னும் பல தேவையான விடயங்கள் உள்ளடங்கிய சட்ட வரைவு அல்லது எழுத்து மூலமான யாப்போ உருவாக்கப்பட்டிருக்கும். அதன் அடிப்படையிலேயே அவர்கள் இயங்கி வருவார்கள். எமது மேற்படி விழா 1919 ஆம் ஆண்டில் முதலாவது விழாவிலிருந்து 1992 ஆம் ஆண்டு 72 ஆவது விழா வரை எந்தவித எழுத்து மூலமான யாப்புமின்றி, குழப்பமும் இன்றியும் தொடர்ச்சயாக தெரிவு செய்யப்பட்ட விழா சபையிடம் ஒழுங்காகவும், முறையாகவும் நேர்மை யாகவும் கையளித்து வந்துள்ளமை வியப்புக்குரியதே. 1992 ஆம் ஆண்டு 73 ஆவது விழாவின் போது அந்நேர தேவை கருதி அரியாலையிலுள்ள 13 சனசமூக நிலையங்களையும் உள்ளடக்கி மேலே கூறப்பட்ட விடயங்களோடு கூடிய ஒரு எழுத்திலான யாப்பு தயாரிக்கப்பட்டு பொதுச்சபையால் அங்கீகரிக்கப்பட்டு அதன் பிரகாரம் புதிய ஆண்டுக்கான விழா சபை தெரிவு செய்யப்பட்டு விழா நடைபெற்று வருகின்றது.

1919 ஆம் ஆண்டு முதலாவது விழாவிற்கான ஆலோசனைக் கூட்டம் அமரர் ஆறுமுகம் கதிரவேலு தலைமை யில் அரியாலை ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய வடகிழக்கு மூலையில் அமைந்திருந்த திருமடத்தில் நடாத்தப்பட்டு அமரர் ஆ.கதிரவேலு தலைவராகவும், பரமு கந்தையா பொதுச்செயலாளராகவும் கொண்ட சபை தெரிவு செய்யப்பட்டு விழா முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டன.

வருடா வருடம் விழா தொடர் பான ஆலோசனைக்கூட்டம் நடப்பு வருட தைப்பொங்கல் தினத்திற்கு முதல் நாள் மாலை சித்தி விநாயகர் ஆலய திருமடம், சரஸ்வதி நூல்நிலைய முன்புறம் நின்ற ஆலமரத்தின் கீழ் நிலைய பின்புறம் சரஸ்வதி சனசமூக நிலைய மண்டபம், போன்ற இடங்களில் நடைபெற்று 73 ஆவது விழாவில் இருந்து இக்கூட்டம் பரவ லாக்கப்பட்டு அரியாலை சனசமூக

நிலையம், அரியாலை அருணோதயா சனசமூக நிலையம், பிரப்பங்குளம் மகா மாரியம்மன் கல்யான மண்டபம் ஆகிய இடங்களிலும் நடத்தப்பட்டது.

நடந்து முடிந்த விழாவின் தலைவர் தலைமையில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் செயலாளரால் சென்றகூட்ட அறிக்கையும், ஆண்டறிக் கையும் வாசிக்கப்பட்டு பொதுச் சபையால் அங்கீகரிக்கப்பட்ட பின் பொருளாளரால் கணக்குப் பரிசோதகரின் அவதானிப்புடன் கூடிய வரவு, செலவு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு பொதுச் சபையால் ஏற்கப்பட்ட பின் பழைய சபை கலைய ஒரு தற்காலிகத் தலைவர் தலைமையில் கூட்டம் நடைபெற்று புதிய ஆண்டிற்கான தலைவரோடு கூடிய சபை தெரிவு செய்யப்பட்டு வேறு விடயம் என்னம் நிகழ்ச்சியில் கடந்த விழாவில் ஏற்பட்ட தவறுகள், சிறப்புக்கள் சுட்டிக்காட்டப்பட்டு எதிர்கால விழா எப்படி நடாத்தப்பட வேண்டும் பொதுச்சபை தீர்மானம் நிறைவேற்றப் பட்டு இதன் பிரகாரம் விழா நடத்தப் பட்டது.

## விழா தொடர்பான முதல் பிரசுரம்

நடப்பு வருட விழா தொடர்பான பாட விதானங்களோடு கூடிய முன்னோடி, கலை, விளையாட்டுப் போட்டிகள் விபரம், பரீட்சை மற்றும் போட்டிகள் நடைபெறும் காலம், நேரம், இடம் அடங்கியதும் கடந்த வருட விழாவிற்கு நிதி அன்பளிப்பு செய்தவர்கள் விபரம் அடங்கிய வரவு செலவு அறிக்கையும் இணைந்த பிரசுரம் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்று முடிவடைந்து 7 முதல் 10 நாட்களுக்குள் வெளிவந்து விடும் கலைப்போட்டிகள் யாவும் அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை மண்டபத்திலும், விளையாட்டுப் போட்டிகள் யாவும் அரியாலை சனசமூக நிலைய மைதானத் திலும் நடைபெற்றது.

## விழாவின் மைல் கற்கள்

**1919** ஆம் ஆண்டு முதலாவது விழா அமரர் ஆறுமுகம் கதிரவேலு அவர்களைத் தலைவராகவும் அமரர் பரமு கந்தையா அவர்களை செயலாள ராகவும் கொண்டு நடாத்தியுள்ளார்கள். பகல் விளை யாட்டுப்போட்டிகள் முன்பு அரியாலை மத்திய மகா வித்தியாலயம் இருந்த வயல் வெளியிலும் இரவு கலை நிகழ்ச்சிகள் அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாசாலை மண்டபத்திலும் நடை பெற்றது. சிறப்பு நிகழ்ச்சியாக அமரர் நொத்தாரிஸ் சுப்பிரமணியம் அவர்களால் பிரதியாக்கம் செய்யப்பட்ட "கர்வ சமணன் சர்வ சமணன்" என்னும் பாத்திரங்கள் ஊடாக அமரர்கள் சி.சோதிநாதன் மற்றும் வைத்திலிங்கம் ஆகியோரால் சம்பாசிக்கப்பட்ட விழாவின் நோக்கத்தை தெளிவுபடுத்தும் உரையாடல்கள் நடைபெற்றது. அமரர்கள் சாத்திர ஆறுமுகம் அவரது மகன் ஆறுமுகம் சோமசுந்தரம் ஆகியோ ரால் எழுதப்பட்ட "சத்தியவான் சாவித்திரி" என்னம் இசை நாடகமே சுதேசிய திருநாள் கொண்டாட்ட விழாவில் மேடையேற்றப்பட்ட முதலா வது நாடகம். சத்தியவானாக ஐமன் கந்தையாவும், எஸ்.சோமர் சாவித்திரியாக வும், சி. சோமசுந்தரம் இயமனாகவும், கல்யாண் கனகரத்தினம் நாரதராகவும் மற்றும் பலரும் நடித்த நாடகம் மேடையேற்றப்பட்டது.

யாழ் மாவட்ட திட்டப் பணிப் பாளராகப்பதவி வகித்த திரு.செ.பத்மநாதன் தலைமையில் பவளவிழா நடைபெற்றது.

தொடர்ந்து பல வருடங்களாக தென்னிந்திய எழுத்தாளர்கள் எழுதிய சரித்திர நாடகங்களையே மேடையேற்றி வந்த நாம் இம்முறை எமது மண்ணின் வீரம் கூறும் அரசர்களின் சரித்திரங்களை நாடகங்களாக நடிக்க வேண்டும் என்ற தலைவரின் விருப்பிற் கிணங்க பாஷையூர் கவிஞர் தேவதாசனால் எழுதப்பட்ட "எல்லாளன்" என்னும் ஈழ தமிழ் அரசனின் வரலாறு கூறும் சரித்திர நாடகம் அரியாலை சன சமூக நிலைய காசிப்பிள்ளை அரங்கில் மேடையேற்றப் பட்டது. இந்நாடகத்தில் ச. உருத்திரேஸ் வரன், பொ.விஜயரத்தினம், இ. சடகோபன், த. பஞ்சலிங்கம், பொ. மகேஸ்வரன், சி. சதீஸ், அ. சந்திரகுமார், பொன்சேகா மற்றும் பலர் நடித்திருந்தனர். இந் நாடகத்திற்கு பாஷையூர் கலைஞர் பாலதாஸ் பக்க வாத்தியம் வாசித்துப் பெருமைப்படுத்தியிருந்தார்.

இவ்வாண்டிலிருந்து கலாசார விழா என்ற பெயரில் இரவுக் கலை நிகழ்ச்சிகள் **12.04.1992** இல் அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய அமரர் விஸ்வநாதன் அரங்கில் நடைபெற்றது. இக்கலாசார விழா தொடர்ந்து மாறி மாறி அரியாலை சனசமூக நிலைய காசிப்பிள்ளை அரங்கிலும், அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய விஸ்வநாதன் அரங்கிலும் நடைபெற்ற வருகின்றது.

## 1999 ஆம் ஆண்டு 80 ஆவது அமுத விழா

பேராசிரியர் கலாநிதி சு.மோகன தாஸ் அவர்கள் தலைமையில் தம்பு குணரத்தினம் செயலாளராகவும், ப.புஸ்ப ராஜா பொருளாளராகவும் கொண்ட நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டு நாட்டில் நிலவிய அமைதியின்மை காரணமாக விழா சாதாரணமாக நடாத்தப்பட்டது. பகல் விளையாட்டுப் போட்டிகளும், கலை நிகழ்ச்சிகளும் அரியாலை சனசமூக நிலைய மைதானத்திலேயே நடாத்த வேண்டி நேர்ந்தது. இவ்விழாவில் எஸ்.ரி.கணநாதன் நெறியாள்கையில் "ஆசரன் செல்வி" என்னும் சரித்திர நாடகம் மேடையேற்றப் பட்டது. இந்நாடகத்தில் ச. உருத்தி ரேஸ்வரன், இ. சடகோபன், த. சிவலிங்கம், பொன்சேகா, சு. அகிலன், அ.சந்திரகுமார் இன்னும் பலர் நடித்திருந்தனர்.

## நந்தித்தூபி

நூறு ஆண்டுகள் கொண்டாடப் பட்ட இவ்விழா ஞாபகார்த்தமாக எல்லோரும் பார்த்து மகிழக் கூடிய வகையில் கண்டி வீதியில் ஒரு மத்திய இடத்தில் நந்தியுடன் கூடிய நினைவுத்தூபி நிறுவ வேண்டுமென்ற எண்ணத்திற்கு அமைய மாம்பழம் சந்திக்கு அருகாமையில் கண்டி வீதியில் அமைந்திருந்த நான்கு கடைத் தொகுதிகளைக் கொண்ட (இன்று சிதைவடைந்திருக்கும்) காசிப்பிள்ளைக் கட்டடம் இருந்த இடத்தில் நினைவுத் தூபி அமைக்க வேண்டும் என்ற தீர்மானத்திற்கிணங்க திரு. ப. ஸ்ரீஸ்கந்தன் அவர்கள் அதற்கான பொறுப்பாளராக நியமிக்கப்பட்டார். அந்நிலத்தின் சொந்தக் காரரான காசிப்பிள்ளை கணேஷனின் மகனை சந்தித்து ஒப்புதல் பெற்று இன்று அவ்விடத்தில் பல பாகங்களிலும் பயணிப்போர் பிரமிக்கக் கூடிய வகையில் நினைவுத் தூபி அமைந்திருப்பது பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும்.

## விழா தொடர்ந்து நடைபெறுவதில் ஏற்பட்ட தவிர்க்க முடியாத தடங்கல்கள்

**1919** ஆம் ஆண்டு சித்திரை தமிழ்ப் புதுவருடத் தினத்தன்று ஆரம்பித்து வைக்கப்பட்ட எமது பாரம்பரியமான எமக்கே சொந்தமான சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவை தொடர்ச்சியாகத் தடையின்றி வெற்றிகரமாக பலரும் வியக்கும்

வண்ணம் நடாத்தி வந்த வேளையில் சில தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களில் நடாத்த முடியாமல் போனது எம் எல்லோருக்கும் வருத்தமே.

### 1) 1942 ஆம் ஆண்டு 24 ஆவது விழா

2 ஆம் உலக மகா யுத்தம் நடைபெற்ற வேளையில் இலங்கையிலும் குண்டு வீசப்படும் என்ற அச்சத்தில் மக்கள் கூடுவதை தவிர்க்கும் நோக்கில் விழா கொண்டாடவில்லை.

### 2) 1961 ஆம் ஆண்டு 42 ஆவது விழா

தந்தை எஸ். ஜே. வி. செல்வநாயகம் தலைமையில் அகில இலங்கை தமிழ் அரசுக் கட்சியினரால் யாழ்ப்பாண கச்சேரி முன் நடாத்தப்பட்ட சத்தியாக்கிரகம் காரணமாக அரியாலை சித்தி விநாயகர் ஆலய வீதியில் நடத்த வேண்டிய இரவு கலை நிகழ்ச்சிகள் நடத்தப்படாது மக்களை சத்தியாக்கிரகத்திற்கு சென்று பங்குபற்றுமாறு அறிவிக்கப் பட்டது.

### 3) 1971 ஆம் ஆண்டு 52 ஆவது விழா

நாட்டில் ஏற்பட்ட சேகுவேரா கிளர்ச்சியால் நிலவிய அமைதியின்மை காரணமாக விழா கொண்டாட முடிய வில்லை.

### 4) 1984, 1985 ஆம் ஆண்டுகளில் 65 ஆவது, 66 ஆவது விழாக்கள்

நாட்டில் ஏற்பட்ட தமிழீழ விடுதலைப் போராட்டம் காரணமாக நிலவிய அசாதரண சூழ்நிலையால் எமது விழா நடத்த முடியவில்லை.

### 5) 1996 ஆம் ஆண்டு 77 ஆவது விழா

எமது மக்கள் முழுவதும் இடம் பெயர வேண்டிய கட்டாயம் ஏற்பட்டதன் காரணமாக மக்கள் வடமராட்சியிலும், தென்மராட்சியிலும் வன்னி, கொழும்பு போன்ற பிற மாவட்டங்களுக்கும் இடம் பெயர்ந்ததால் எமது கிராமமே வெறிச்சோடிய நிலையில் விழா கொண்டாட முடியவில்லை.

76 ஆவது விழாவின் செயலாளராக இருந்த ச. உருத்திரேஸ்வரன், அமரர் எஸ்.ரி. கணநாதன், த. பஞ்சலிங்கம், சு.பாலசுந்தரம், சி. சதானந்தன் மற்றும் சுதேசிய திருநாள் ஆர்வலர்கள் வடமராட்சியில் சந்தித்து விழாவை கைவிடக்கூடாது என்றும் என்றோ மீள்குடியமர அனுமதிக்கப்பட்டதும் எமது ஊரில் கொண்டாடலாம் என்ற தீர்மானத் திற்கமைய தென்மராட்சி வரணி மத்திய மகா வித்தியாலயத்தில் அடையாள விழாவாக கொண்டாடுவது என்றும் இவ்விழாவிற்கு அப்போதைய யாழ் அரச அதிபராக பதவியேற்ற எம் ஊரவரான திரு. செ. பத்மநாதன் அவர்களை பிரதம விருந்தினராக அழைத்துக் கௌரவிப்பது என்றும் தீர்மானித்து 1995.04.14 ஆம் திகதி சித்திரை புதுவருடப் பிறப்பன்று அடையாள விழா நடாத்தப்பட்டது. 75 இற்கும் மேற்பட்ட ஊர்ப் பற்றாளர்கள் வருகைதர வரணி மகா வித்தியாலயத்தில் விழா சிறப்பாக நடைபெற்றது என்பது குறிப்பிடத் தக்கது.

### 6) 1997 ஆம் ஆண்டு 78 ஆவது விழா

இறையருளால் 1997 இல் மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட காரணத்தால் எமது 78 ஆவது விழாவும் அடையாள விழாவாக யாழ் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் திரு.எஸ்.ரி.பத்ம நாதன் அவர்களை பிரதம விருந்தினராக அழைத்து நடாத்தப் பட்டது. அமரர். அ.சந்திரகுமாரின் நகைச்சுவை நிகழ்வும்

நடைபெற்று இறுதியில் 1998 ஆம் ஆண்டின் 79 ஆவது விழாவிற்கான நிர்வாக சபையும் தெரிவு செய்யப் பட்டது.

## 7) 1998, 1999, 2000, 2001 ஆம் ஆண்டிற்கான 79, 80, 81, 82 ஆவது விழாக்கள்

மாலை 6 மணி பின் 7 மணியி லிருந்து ஊரடங்குச் சட்டம் நடை முறையில் இருந்த காரணத்தாலும் அரியாலை சன சமூக நிலையம், அரியாலை மத்தி விளையாட்டு மைதானம் ஆகியவற்றில் இராணுவத் தினர் நிலை கொண்டிருந்த காரணத்தினாலும் கண்ணி வெடிகள் அகற்றப்படாதிருந்த காரணத்தி னாலும் பகல் நேர விழாவாக அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய மைதானத்திலும் அமரர் அ. விசுவநாதன் அரங்கிலும் நடாத்தப்பட்டது.

## 8) 2008 ஆம் ஆண்டு 89 ஆவது விழா

இவ்விழாவிலிருந்து பார்வையாளர் களின் வசதி கருதி இருக்கைகள் (கதிரைகள்) போடும் வழக்கம் அறிமுகப் படுத்தப்பட்டது. முன்பு பார்வையாளர் கள் குடும்பமாகவும், உறவினர்களோடும் பெருமளவில் வருகை தரும் வேளையில் பாய், சுடு தண்ணீர் போத்தலில் தேநீர், வறுத்த கச்சான், வடை இன்னும் சில நொறுக்குத் தீனிக்களுடன் வருகைதந்து மைதானத்தில் விடியும் வரை இருந்த காலம் போய் இப்போ இடப்பெயர்வு, புலம் பெயர்வு காரணமாக மீதியாக இருப்பவர்களில் பெருமளவு வயது வந்தவர்களே பார்வையாளர்களாக இருந்ததாலும் அவர்களால் முன்பு போல நிலத்தில் உட்கார்ந்ததால் எழும்ப முடியாத தேக நிலையைகருத்திற் கொண்டு பார்வையாளர்களுக்கு கதிரை கள் (இருக்கைகள்) போடும் வழக்கம் 89 ஆவது விழாவில் இருந்து அறிமுகம் செய்யப்பட்டது. அது இன்றும் தொடர்கிறது.

## நயந்ததும் வியந்ததும் தோழர் தர்மலிங்கம் தனி நடிப்பு (உதயணன்)



விழாவிற்காக நடத்தப்படும் கலைப போட்டிகளின் போது “தனி நடிப்பு” போட்டியும் நடத் தப்படுவது வழமை. பங்கேற்போர் எவ ருக்கும் நவரசங் களை எப்படி முகத்தில் கொண்டுவருவது என்பது புரியாத நிலையில் அமரர் தோழர் தர்மலிங்கம் (உதயணன்) 1963 ஆம் ஆண்டு 44 ஆவது விழா அரங்கில் நடித்துக் காண்பித்தது நினைவில் நிற்கின்றது.

## அகில உலக கர்நாடக இசை மேதை மகாராஜபுரம் சந்தானம் அவர்களின் இசைக்கச்சேரி

1965 ஆம் ஆண்டு 46 ஆவது விழா இரவு நிகழ்ச்சிகள் அமரர் த.இரத்தினசுந்தரம் தலைமையில் சித்தி விநாயகர் ஆலய வடக்கு வீதியில் அமைக்கப்பட்டிருந்த அரங்கில் நடை பெற்றது. இந்நிகழ்ச்சியில் அகில உலக கர்நாடக சங்கீத மேதை மகா ராஜபுரம் சந்தானம் அவர்களின் சங்கீதக் கச்சேரி நடைபெற்றது. பிற இடங்களில் இருந்தும் இசை ஆர்வலர்கள் மாணவ, மாணவி களும் வருகை தந்து வடக்கு வீதியை நிறைத்திருந்தார்கள்.

## மொறிஸ் குமாரவேல்

1969 ஆம் ஆண்டு 50 ஆவது பொன் விழாவையொட்டி அகில இலங்கை ரீதியில் நடாத்தப்பட்ட 50 மைல் ஆண்களுக்கான சாதாரண

சைக்கிள் ஓட்டப்போட்டியில் பங்கேற்க அகில இலங்கை "Tour de Lanka" சம்பியன் மொறிஸ் குமாரவேல் என்பவர் கொழும்பில் இருந்து வந்து பங்குபற்றி ஓடிக்கொண்டிருந்த வேளையில் இன்னுமொரு வீரரின் சைக்கிள் இவரின் சைக்கிளில் சிக்குண்டதால் இருவரும் வீதியில் விழுந்து விட்டார்கள். அதுவரையில் முதலாவதாக வந்து கொண்டிருந்த "மொறிஸ் குமாரவேல்" மிகவும் பின்தங்கிய நிலையில் தனது சைக்கிளின் பின் சில்லில் மாட்டியிருந்த பிறேக் கட்டைகளைப் பிடுங்கித் தொங்க விட்டபடி மீண்டும் தொடர்ந்து ஓடி முதலாம் இடம்பெற்றது வியப்புக்குரிய தாகும்.

## மந்திரி குமாரி நாடகம்

எம் எல்லோருக்கும் நாடக ஆர்வத்தை உள்ளுணர்வில் ஊட்டியவர் ஐ. எஸ். சண்முகநாதன் என்ற மாபெரும் கலைஞன். இவர் நடித்த "மந்திரி குமாரி" என்ற நாடகம் **1956** ஆம் ஆண்டு **37** ஆவது விழாவில் சித்தி விநாயகர் ஆலய வடக்கு வீதி அரங்கில் மேடையேறியது. ஐ. எஸ். சண்முகநாதன் அவர்கள் பார்த்தீபன் பாத்திரத்திலும் இ.கே.கும ரையா அவர்கள் ராஜகுரு பாத்திரத்திலும் நடித்திருந்தாரகள். பின்பு திரைப்படத்தை பார்த்த சமயம் இவர்கள் இருவரினதும் நடிப்பும் திரைப்பட நடிகர்களின் நடிப் பையே மிஞ்சி இருந்தது வியப்பிற்குரியது.

## விநோத உடைப் போட்டி பற்றி தகவல்கள்

பகல் விளையாட்டுப் போட்டி யின் இறுதி நிகழ்வாக விநோத உடைப்போட்டி தனி, குழுவாக நடை பெறும். அறிவித்தல் தரும் வரை போட்டியாளர்கள் மைதானத்திற்குள் வரக்கூடாது என அறிவித்தல் வர அதுவரை அவர்கள் புங்கன்குளம் வீதியில் சனசமூக நிலையத்திற்கு முன் உலாவு வார்கள். நாங்கள் விளையாட்டுப் போட்டியை பார்ப்பதை விட்டு ஓடிச் சென்று விநோத உடைப் போட்டி யாளர்களை பார்ப்போம். மிக அற்புதமாக வும் பிரம்மிப்பாகவும் இருக்கும்.

என் நிலையில் நிற்கும் விநோத உடைப் போட்டியாளர்கள்.

நாம் சிறுவயதில் ஆதி வாசிகளான வேடன் எப்படி இருப்பான் அவன் தொடர்பாடல்முறை, இலைகுழை ஆடை, வேட்டையாட தேவையான அம்பு வில் கல் போன்ற ஆயுதங்கள், உணவிற்கான மிருக எலும்புகள் ஆகியவற்றுடன் காட்டில் உலாவுவான். ஒரு முறை நாம் வியக்கும் வகையில் மயில்வாகனம் என்பவர் வேடனாக வேடம் தரித்து மேனி முழுவதும் கறுத்த மை பூசி இலை குழை ஆடையுடன் கையில் அம்பு வில் தோளில் மிருக பச்சை எலும்பு ஆகியவற்றுடன் பரட்டைத் தலையுடனும் காட்சி தந்தார். இவருக்கு இயற்கையாகவே இவரின் உடல் அமைப்பு ஒத்துழைத்திருக்கலாம். வேடனை நேரில் கண்டோம். முதலாம் பரிசு இவருக்கே வேடன் மயிலு என்று சில காலம் அழைக்கப்பட்டார்.

இன்னுமொரு விழாவில் கன்டிய நடனக் குழுவை நேரில் கொண்டுவந்து அவர்கள் வேட உடுப்பு வாத்திய கருவிகள் துள்ளி கழன்று ஆடும் ஆட்ட லாவகம் அருமையாக இருந்தது. கை.விஜயகுமார், கை.ருத்திரா ஆகியோர் இக்குழுவில் இருந்தது நினைவில் நிற்கின்றது. மிக அருமையான நிகழ்வு.

வித்தை காட்டுபவர்கள் தடியில் காலைப்பொருத்தி நடப்பார்கள். சமநிலை தளம்பினால் விழுந்து விடுவார்கள். பல

நாள் பயிற்சியின் பின் ஒரு விழாவில் சொ.சுந்தரலிங்கம் இன்னுமொருவருடன் 15 அடி உயர தடியில் கால்களைப் பொருத்தி மைதானம் முழுவதும் நடந்து வியப்பில் ஆழ்த்தினார்.

இன்னுமொரு சந்தர்ப்பத்தில் சவ ஊர்வலம் ஒன்று மைதானத்திற்குள் வந்தது. பின்புதான் தெரிய வந்தது. குழுப் போட்டிக்காக தி.ராமு மாஸ்ரரால் பாடை கட்டி செய்யப்பட்ட நிகழ்வு என்பது மறக்கமுடியாதது.

தவநாதனின் விசரி, பிச்சைக்காரி பொன்சேகா தெய்வேந்திரம் குழுவினரின் காராம்பசு வேடம், பச்சடி யோகராசாவின் எலும்புக்கூடு மனிதன், ஆணும் பெண்ணும் கொண்ட உருவம், சின்னப்பு துரைசாமி யின் சிலுவையில் அறையப்பட்ட யேசுநாதர் ஆகியவற்றுடன் இன்னும் சில நினைவுக்கு வந்துள்ளது.

## விநோத உடை கலைஞர் ம. பூலோகசிங்கம்



எல்லாவற்றையும் மிஞ்சுகின்ற ஒருவர் எம்மத்தியில் இருந்து பிரம்மிப்பில் ஆழ்த்தி யிருக்கின்றார். ஒரு முறை அரியாலை சன சமூக நிலைய முன் புறம் ஒரு பச்சைநிற சோமசெற் கார் வந்து நின்றது. பின் டிக்கியில் இருந்து ஒரு பெரிய குரங்கு பாய்ந்தது. குதித்தது. முன்னால் இருந்த ஆலமரத்தில் ஏறி இலைகளை முறித்தது கொப்பில் தொங்கியும் ஆடியும் அட்டகாசம் செய்தது. கூரையில் ஓடித் திரிந்தது. போட்டியாளர்கள் உள்ளே வரலாம் என அறிவித்தல் கிடைத்ததும் கூரையில் இருந்து கீழே குதித்து மைதானத்திற்குள் சென்று அங்கு நட்டப்பட்டிருந்த கம்பங்களில் ஏறி விளையாடியது. அற்புதம், அற்புதம். மெய் மறந்தோம். இறுதியில் முதலாம் பரிசு தங்கப்பதக்கம் இவருக்கே. இவர் வேறு யாருமல்ல எங்கள் மத்தியில் வாழ்ந்து அமரத்துவம் எய்திய ம.புலோக சிங்கம் என்பவரே. தொடரந்து பல வருட விழாக்களில் தங்கப்பதக்கம் பெற்ற இவரின் வேடங்கள் என்றும் மறக்க முடியாதவை. மல வண்டி தள்ளி மலம் எடுப்போனாகவும், தவில் வித்துவா னாகவும், கிறிஸ்தவ பாதிரியார் போலவும் தலையாட்டும் தஞ்சாவூர் பொம்மை போலவும் M.G.R போலவும் பல வேடங்களில் வந்து எம்மை மகிழ்வித்தது மறக்க முடியாதவை. விநோத உடைப் போட்டி என்றால் ஒரு காலத்தில் பூலோகசிங்கம் என்பவரே நினைவுக்கு வருவார்.

## கயிறிழுத்தல் போட்டி பற்றிய சுவாரசியம்

பகல் விளையாட்டுப் போட்டி யின் போது சம்சாரிகள் எதிர் வாலிபர்கள் போட்டியிடும் கயிறிழுத்தல் போட்டி சுவாரஸ்யமாக இருக்கும். இப்போட்டி யில் மொத்தம் கனகரத்தினம் என்றழைக் கப்படும் மனேஜர் சம்சாரிகள் அணியில் ஒரு நுனியில் அவர் இடுப்பைச்சுற்றி கயிற்றை கட்டியிருப்பார்கள். அவர் பின்நோக்கி சரிந்து நிற்பார். எவ்வளவு பிரயத்தனம் பண்ணினாலும் அவரை நிமிர்த்த முடியாது. இறுதியில் சம்சாரிகளே பல காலம் போட்டியில் முதல் பரிசு பெற்றார்கள். மொத்தம் கனகரத்தினம் மறக்க முடியாதவர்.

## எமது விழாவில் மேடையேறிய சிறுவர்கள், மாணவர்கள் நடித்த நாடகங்கள்

எமது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா அரங்கில் எமது ஊர்

சிறுவர்கள், மாணவர்கள் நடித்த நாடகங்கள் பல தடவைகள் மேடையேற்றப்பட்டது. 1962 ஆம் ஆண்டு 43 ஆவது விழாவில் ஐந்து நாடகங்கள் போட்டியிட்டு அந் நாடகப் போட்டியில் 1ஆம் இடத்தைப் பெற்ற S.T.கணநாதன், ச.உருத்திரேஸ்வரன், S.S.மனோகரன், செ.சீவரத்தினம், ப.நல்லநாதன், பொ.தவநாதன், செ.பரமநாதன், பூ.நடராசா ஆகியோர் நடித்த "யார் கதாநாயகி" என்னும் நாடகம் மேடையேற்றப் பட்டது. அக்காலத்தில் இவர்களுடைய வயது 15, 16 1964 ஆம் ஆண்டு 45 ஆவது விழாவில் யாழ் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மாணவர்களாக இருந்த அ.உபயசேகரம், K.தனபாலசிங்கம், மரியதாஸ் இன்னும் பல மாணவர்கள் நடித்த "அமுதவல்லி" என்னும் நாடகமும், 46 ஆவது விழாவில் "பாதுகை" நாடகமும் மேடையேற்றப்பட்டது.

1975ஆம் ஆண்டு, 1976ஆம் ஆண்டு, 1977ஆம் ஆண்டு, 1978ஆம் ஆண்டு அக்காலத்தில் சிறுவர்களாக இருந்த க.ரவீந்திரன், சோ.சிறிகுமார், ந.நேதாஜி, ம.ஜெயந்தன், ச.அருணன், க.கிருஷ்ணகுமார், து.சிவபாலச்சந்திரன், அ.சுதர்சன், த.கிருபா போன்றோர் நடித்த "சாம்பிராட் அசோகன்", "இரு வரங்கள்", "காசியப்பன்", "வீரபாகுதேவர்" ஆகிய நாடகங்கள் விழா அரங்கில் மேடை யேற்றப்பட்டது. யா/ கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் தா.தியாகசீலன், ஜெ.ஜெகதீஸ்வரன் K.புஸ்பேந்திரன் போன்றோர் ராஜா தேசிங், சோக்கசரீஸ் போன்ற நாடகங் களில் நடித்துள்ளனர். இச் சிறுவர்கள் பிற்காலத்தில் பெரிய நடிகர்களாக மிளிர்ந்தது குறிப்பிடத்தக்கது.

## 55 ஆவது விழாவும் பாலேந்திராவும்



இன்று சர்வதேச அளவில் தமிழ் நாடக உலகில் பேசப்படும் ஒருவர் எமது கனக ரத்தினம் பாலேந்திரா இவர் மொறட்டுவ பல்கலைக்கழகத்தில் உயர் கல்வி பயிலும் காலத்தில் 1974ஆம் ஆண்டு 55 ஆவது விழாவில் தனது நண்பர்களான அரியாலையைச் சேர்ந்த இ.சிறிதரன், பொ.கணேசானந்தன் ஆகி யோருடன் இணைந்து "பெண் பார்க்க மாப்பிள்ளை வந்தார்" என்னும் தளாலய ஆற்றுகையை எமது விழா அரங்கில் மேடையேற்றினார். ரசிகர்களுக்கு புதுமையான விருந்தாக இருந்தது. இவர் பின்பு "அவைக்காற்று கழகம்" என்னும் அமைப்பை தோற்றுவித்து பல மொழி பெயர்ப்பு நாடகங்களை தயாரித்து இலங்கை முழுவதும் மேடையேற்றி தமிழ் நாடக உலகிற்கு பங்களிப்பு செய்ததோடு இன்று லண்டனில் இதே அமைப்பின் பெயரில் அங்குள்ள சிறுவர்களுக்கு நாடகப் பயிற்சி வழங்கி பல நாடகங்களை பல நாடுகளில் அரங்கேற்றி வருகின்றார். எமது அரங்கில் ஆரம்பித்த "பாலா" வின் ஆர்வம் இன்று சர்வதேச ரீதியாக பரவியதையிட்டு நாம் மகிழ்ச்சி அடையலாம்.

## சிநேகபூர்வ எறிபந்தாட்ட போட்டி

முன்பு விழாவைச் சிறப்பிக்க, பிற மாவட்டங்களில் வசிக்கும், உத்தியோகம் பார்க்கும் அரியாலை மக்கள் 2- 3 தினங்களுக்கு முன்பே தங்கள் அரியாலை கிராமத்திற்கு வந்து விடுவார்கள். குறிப்பாக கொழும்பில் வேலை பார்ப் போர் கூடுதலாக இதில் அடங்குவர். இவர்களுக்காக எறிபந்தாட்ட சுற்றுப்

போட்டியில் சம்பியனான அணியுடன் வெளியூர் அணியினுடனான ஒரு சினேகபூர்வ எறிபந்தாட்ட போட்டி நடத்தப்பட்டது. வெளியூரில் இருந்து வந்தவர்களுக்கு இது ஒரு மகிழ்வானதாக அமைந்திருந்தது. இன்று வெளி மாவட்டங்களிலும் வெளிநாடுகளிலும் வாழ்பவர்கள் மிக அதிகமாக இருப்பதால் இது சாத்தியமற்றது போலும்.

## தலையணைச் சண்டை

விழாவையொட்டி நடைபெற்று வரும் பகல் விளையாட்டுப் போட்டியின் மக்களைக் கவர்ந்த போட்டிகளில் இன்னுமொன்று "தலையணைச் சண்டை" இப் போட்டியில் பலர் வெற்றி பெற்றிருந்தாலும், இப்போட்டியில் தனி முத்திரை பதித்த ஒருவர் வேறு யாரு மில்லை. அமரர் குமாரசாமி குமாரத்தி யாணன். தலையணைச் சண்டை போட்டியின் நுட்பங்களை நன்கு தெரிந்து கொண்டு, போட்டியில் பங்குபற்றிய தடவைகளில் எல்லாம், முதலாம் பரிசு வென்றுள்ளார். கோதாயில் ஏறி உட்கார்ந்ததும் பார்வையாளர்களை தம்பக்கம் இழுத்துவிடுவார். கம்பத்தில் ஏறி உட்கார்ந்ததும் எதிர் போட்டியாளர் தொடர்ந்து தலையணையால் அடிப்பார். சடுதியாக தலையை பின்னோக்கி நகர்த்த எதிர் தரப்பு வீரர் நிதானம் இழந்து கீழே விழுந்து விடுவார். இதேபோல் தானும் அடிக்கத் தொடங்கினால் நிறுத்தாமல் அடித்து எதிரியை நிலை தடுமாற வைத்து வீழ்த்தி விடுவார். தலையணைச் சண்டை என்றால் இது "குமாரத்தியாணனுக்கு" உரியது. அந்த சுவாரஷ்யம் இனி எப்போ?

## திரைப்பட இயக்குநர் ந. கேசவராஜ்




இவர் அரியாலை சுதேசிய விழாவொன் றில் இடம் பெற்ற சாணக்கியன் என்ற நாடகத்தில் நடித்த என்.ரி.குணம் அவர் களின் நடிப்பைப் பார்த்து தானும் நடிக்க வேண்டும் என்ற ஆவலினால் உந்தப்பட்டு சுதேசிய விழா நாடகப் போட்டிக்காக "விதி வலைகள்" என்ற நாடகத்தை எழுதி பிரதான வேடமேற்று நடித்திருந்தார். இவர் அத்துறையில் வளர்ச்சியடைந்து திரையுலகில் தயாரிப் பாளராகவும் நெறியாள்கையாளராகவும் விளங்குவது எமக்கு மகிழ்ச்சியளிக்கிறது.

## விழா கண்ட அறிவிப்பாளர்களும் தொகுப்பாளர்களும்

விழா நிகழ்ச்சிகளை அறிவிப்பு செய்வதிலும் விழா நிகழ்வினை தொகுத் தளிப்பதிலும் பிரபல்யம் பெற்ற பலர் எம்மத்தியில் இருந்திருக்கின்றனர். சிலர் இன்றும் இருக்கின்றார்கள். இவர்கள் வரிசையில் V.A.ரத்தினசிங்கம், R.E.K.பேரம் பலம், M.S.துரைரத்தினம், செ.கனகசபாபதி N.S. லோகேஸ்வரன், S.M. ரஞ்சன், த.விமலராசா, செ.சீவரத்தினம், செ.மகா லிங்கம், அ.தெய்வேந்திரம், மு.விஸ்வ நாதர், சி.கணேஸ்வரன் ஆகியோர் குறிப்பிடக் கூடியவர்கள். ஒவ்வொரு அறிவிப்பாளர்களும் தனித் துவமான குரல் வளத்துடன் விசேடமான தமிழ் வளமும் கொண்டு நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கியமை நினைவில் நிற்கின்றது.

# எனது அனுபவங்கள்

நடராஜா ரவீந்திரன் (சுவிஸ்)
பொன்னம்பலம் வீதி
அரியாலை



*நான் சுவீஸ்லாந்து நாட்டில் வாழ்ந்தாலும், எனது நினைவுகள் எமது சொந்த மண் அரியாலையைப் பற்றியதாகவே இருக்கின்றது. நாம் இளமைக் காலத்தில் வாழ்ந்த நினைவுகள், துள்ளித் திரிந்த சம்பவங்கள் நினைக்க, நினைக்க இனிமையானது. சதேசிய திருநாள் கொண்டாட்டம் எப்போது வரும். திருவிழாக்கள் எப்போ வரும், சனசமூக நிலையக் கொண்டாட்டங்கள் எப்போ வரும் என்ற ஆவலோடு இருப்போம். நாடகங்கள்பழகும் போதே சென்று காத்திருந்து பார்த்து ஆனந்தம் அடைந்திருப்போம். சுதேசிய திருநாள் கொண்டாட்ட முன்னோடி நிகழ்ச்சிகளை தவறாது பார்த்து மகிழ்ந்த நினைவுகள் இன்றும் எம்முள்ளத்தில் உண்டு. இறுதி நாள் நிகழ்வின் போது அரங்கேற்றப்படும் பிரமாண்டமான நாடகத்தை விடிய விடியப் பார்த்த பல வருட அனுபவம் எனக்குண்டு. சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாக்களின் நிர்வாக சபையில் பல முறை இடம் பெற்றுள்ளளேன். 1970 ஆம் ஆண்டில் சுதேசிய திருநாள் கொண்டாட்ட விழா விளையாட்டுச் செயலாளராக பணியாற்றும்போது நான் பெற்ற அனுபவங்கள் பல. போட்டிகளை ஒழுங்குபடுத்தல், செயற்படுத்தலில் நான் பெற்ற மறக்கு முடியாத இனிமைகள் பல. எமது சுதேசியம் பல்லாண்டு பல்லாண்டு சீரும் சிறப்புடனும் வாழ வேண்டும். எம் அரியாலை மண் ஒற்றுமையுடன் வாழ வேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவனை வேண்டிக் கொள்கின்றேன்.*



# உங்களில் ஒருவன் லோகேஸ்...



சு. லோகேஸ்வரன்
கனடா

நான் அரியாலையின் மைந்தர்களில் ஒருவன். கலை உலகுக்குள் என்னை பெருமைப்படுத்தியது அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா என்றால் அது மிகையாகாது. அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலையில் நடை பெற்ற சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவிலே எனது சிவ நடனம் அரங் கேற்றப்பட்டது. நடனத்தைப் பலரும் பாராட்டினார்கள். குறிப்பாக அப் போதைய நாடக நெறியாளர் ப. சிவஞான பேதம் அவர்கள் சிறுவனாகிய என்னைப் பாராட்டி எதிர்காலத்தில் சிறந்த நாடகக் கலைஞராக வருவாய் என வாழ்த்திய மையை நினைத்துப் பார்க்கின்றேன். அதே நேரம் நடனக்கலைளைப் பயிற்று வித்த ஆசான் திரு.ப.கைலாசம் அவர் களின் சிறப்பையும் எண்ணிப் பார்க் கின்றோம். இவரின் நடனம் பல களியாட்ட நிகழ்வுகளில் முக்கிய இடம் பிடித்து யாழ் குடா நாடு முழுவதும் பரவியது.


பெரும் கலைஞர் அண்ணாவி பெ. சபாபதிப்பிள்ளை அவர்களால் நெறியாள்கை செய்யப்பட்ட "நளன் - தமயந்தி" இசை நாடகத்தில் நளமகா ராசாவின் மகனாக சிறுவயதில் அரியாலை சனசமூக நிலையத்தின் 2 ஆவது ஆண்டு விழாவில் நடித்த சம்பவத்தையும் மறக்க முடியாது. அந்த நாடகத்தில் மேடையில் செய்யப்பட்ட காட்சி அமைப்புக்கள் தத்ரூபமாக அமைந்திருந்தமையைக் கண்டு வியந்தேன். இந்தப் பிரவேசம் சுதேசி திருநாட் கொண்டாட்ட விழாக் கள், அரியாலை சனசமூக நிலையக் கலை விழாக்கள், மேலும் பல அரங்குகளில் பல நாடகங்களை நடிக்க வாய்ப் பளித்தமை எனக்கு குறிப்பிடத்தக்கது. பெண் வேடங் களிலும் நடித்து அரியாலைக்கு பெருமை தேடிக் கொடுத்தேன்.

பரமேஸ்வராக் கல்லூரியில் படித்த காலத்தில் இசைப்புலவர் N.சண்முகரட்ணம் அவர்களிடம் இசைப் பயிற்சியை முறையாகக் கற்றுள்ளேன். துரதிஷ்டவசமாக தொண்டையடியில் ஏற்பட்ட விபத்துக் காரணமாக எனது இசைப்பயணத்தில் தடங்கல் ஏற்பட்ட சம்பவமும் உண்டு. மிருதங்க வித்துவான் S. இராமநாதன் அவர்களிடம் முறையாக மிருதங்கப் பயிற்சியும் பெற்றுள்ளேன். இத்தொடர்பு பல்துறை வளர்ச்சிக்கு பங்களிப்பைச் செய்துள்ளது. பல நாடகங்களில் பின்னணி இசை வழங்க இவ் அனுபவம் உதவியது., நகைச்சுவை நாடகங்கள் பலவற்றையும் லோகேஸ் ஆட்ஸ் வழங்கும் என்ற பெயரில் அவ் நாடகங்களை அரங்கேற்றி எமதூருக்குப் பெருமை சேர்த்துள்ளேன். 1995 இல் லண்டன் பிரன்ற் நகர மண்டபத்தில் மேடையேற்றப்பட்ட "பிழைச்சல்ல போச்சு" என்னும் நாடகமே எனது இறுதி நாடகமாக அமைந்துள்ளது.

அறிவிப்புக் கலையில் ஆர்வம் இருந்தது. இதனால் யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்ற கொழும்பு ஜெட் லைனர்ஸ் குழுவின் இசை நிகழ்ச்சியின் அறிவிப்பாளரின் திறமை யைக் கண்டு வியந்து உந்தப்பட்டு பின் தலை சிறந்த அறிவிப்பாளராக அரியாலை யில் நடைபெறுகின்ற விழாக்களில் பங்கு கொண்டு உள்நாட்டிலும், வெளி நாட்டிலும் பிரகாசிக்க தளம் அமைத்து கொடுத்தது அரியாலை மண்தான்.

அப்போதைய பிரதமர் சேர் ஜோண் கொத்தலாவலை, பாக்கு நீரிணையை நீந்திக் கடந்த சாதனைவீரர் திரு. மு. நவரத்தினசாமி, கலையரசு சொர்ணலிங்கம் போன்ற பெருமக்களால் கௌரவிக்கப்பட்டேன்.

வானொலி அறிவிப்பாளராக, மேடை நிகழ்ச்சித் தொகுப்பாளராக, நடிகராக, கர்நாடகப் பாடகராக, நடன மிருதங்கக் கலைஞராக, மேடை அலங்கார விற்பன்னராக, கையெழுத்து கலைஞராக ஆக்கிய பெருமை அரியாலை மண்ணுக்குரியது எனது பெருமைகளை **“ஆழத்து முத்துக் கள் 36”** இன்மூலம் வெளிப்படுத்திய ப.ஸ்ரீஸ்கந்தன் அவர்களுக்கு எனது நன்றிகள்.



# அரியாலை தரும் முன்பிள்ளைப் பருவக் கல்வி

**வி.என்.எஸ்.உதயசந்திரன்**
BA, BEd (Hons), PGDE, MA,MEd, MPhil
சிரேஷ்ட விரிவுரையாளர்
முன்பிள்ளைப் பருவ விருத்தி மற்றும்
ஆரம்பக் கல்வித்துறை
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம.



*யாழ்ப்பாணத்தின் நுழைவாயில் அரியாலை. இது வயலும் வயல் சார்ந்த குடியிருப்புகளையும் கொண்ட கிராம மாகும். யாழ்ப்பாணத்திற்கு அழகு சேர்க்கும் அழகிய கிராமமென்றால் மிகையில்லை. யாழ்ப்பாண மாநகர எல்லைக்குள் இருந்தாலும் கிராமத்திற் குரிய தனித்துவமான பண்புகளைக் கொண்டமைந்துள்ளது. இக்கிராமத்தைச் சூழ கோயில்கள், சனசமூக நிலையங் கள், பாடசாலைகள், வியாபார நிலையங்கள் அமைந்துள்ளன. புகையிரத நிலையமும் இக்கிராமத்தில் அமைந்திருப்பது சிறப்பாகும். இங்கு வாழும் மக்கள் விவசாயத்தின்மீது அக்கறை கொண்டவர் களாகவும் கல்வியில் சிறந்து விளங்குபவர் களாகவும் உள்ளனர்.*

*அரியாலையில் கல்விமான்கள், மருத்துவர்கள், ஆசிரியர்கள், விரிவுரை யாளர்கள், பொறியியலாளர்கள், ஓவியர்கள், கவிஞர்கள், பத்திரிகையாளர் கள், அரசாங்க அதிபர்கள், விளையாட்டு வீரர்கள், நடிகர்கள், இயக்குநர்கள் என பல்துறை சார்ந்தவர்களும் உருவாகி யுள்ளனர். அரியாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவர்கள் உலகின் பல நாடு களிலும் வாழ்ந்து வருகின்றனர். கனடா, இங்கிலாந்து, ஜேர்மனி, பிரான்ஸ் போன்ற நாடுகளில் அதிகமாக வாழ்கின்றனர்.*

*அரியாலை என்றால் "புதுவருடப் பிறப்பு" நினைவுக்கு வரும். உலகமே வியக்கும் வகையிலான சுதேசிய புதுவருடக் கொண்டாட்டத்திற்கு அரியாலை பெயர்பெற்றது. பாரம்பரியக் கலைகளை வளர்ப்பதில் அரியாலை மக்களின் பங்கு அளப்பரியது. பாரம்பரியப் பண்பாடுகள், கலைகள் அழிந்துவரும் இக்காலகட்டத்தில் அவற்றை அழிய விடாமற் பாதுகாப்பதில் அரியாலை மக்களின் தமிழ் உணர்வை எவரும் குறைத்து மதிப்பிட முடியாது.*

*சிறுவர் முதல் பெரியவர்கள் வரையில் கலை, கலாசார கொண்டாட்டங் களில் பங்குபற்றுவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். குழந்தை தாயின் வயிற்றில் கருவாக இருக்கும்போதே தமிழ்ப் பண்பாட்டு உணர்வு ஊட்டப் படுகின்றது. கருவறையில் இருந்தே குழந்தைகள் கலை, கலாசார நிகழ்வுகளை இரசிக்கின்றனர். தாயின் கருவறையில் இரசனை உணர்வைப் பெற்ற குழந்தை வெளி உலகிற்கு வந்ததும் அதனை அடியொற்றி தன் வாழ்வியலை அமைத்துக் கொள்கின்றது. இக்கிராமத்தில் வாழும் பிள்ளைகளுக்கு கருவில் இருந்தே கல்வி வழங்கப்படுகின்றது. சமுதாயக் கல்வியை வழங்குவதில் அரியாலை சனசமூகங்களின் பங்கு அளப்பெரியது.*

*ஒரு நாட்டின் தேசியச் சொத்து பிள்ளைகளேயாவர். எதிர்காலச் சிற்பிகள் அவர்கள்தான். எமது பண்பாடுகளைப்*

போற்றிப் பாதுகாக்க வேண்டியவர்களும் அவர்களே. அறிவுசார் ஆற்றலுடன்கூடிய ஆரோக்கியமான பிள்ளைகளை உருவாக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் எம்மையே சார்ந்துள்ளது.

குழந்தை கருவில் உருவாகும் காலம் முதல் ஐந்து வயதை அடையும் வரையில் உள்ள காலம் **"முன்பிள்ளைப் பருவம்"** என அழைக்கப்படுகின்றது. பிள்ளையின் வாழ்க்கை வட்டத்தில் மிக முக்கியமான பருவமாக இது கருதப் படுகின்றது. பிள்ளையின் முதற்கட்ட விருத்தியினை உருவாக்கு வதில் தாயின் கருவறை முக்கிய பங்கை வகிக்கின்றது.

குழந்தை பிறக்கும்போது அதற்கு வெளியுலகம் பற்றி எதுவும் தெரியாது. ஆனால் சுற்றாடல் தொடர்பாகக் கற்றுக்கொள்ளும் தன்மையுடனேயே பிறக்கின்றது. பிள்ளையின் கல்வி தாயின் கருவறையிலிருந்து தொடங்கி விடுகிறது. அதனாலேயே கருவில் இருந்து கல்வி ஊட்டப்பட வேண்டும் என வலியுறுத்தப் படுகின்றது.

தாயின் வயிற்றில் இருந்து குழந்தை வெளிவந்து இந்த உலகைத் தரிசிக்கும் தருணத்தில் மனித வாழ்க்கை ஆரம்பிக்கப்படவில்லை. பிறப்பிற்கு முன்னர் அதாவது தாயின் கருவிலேயே மனித வாழ்க்கை ஆரம்பமாகிவிடுகின்றது. கருவாக உருவான நாள் தொடக்கம் உணர்வுகள் உள்ள மனிதனைப் போன்று விருப்பு, வெறுப்பை வெளிக்காட்டும் இயல்பை அக்கரு கொண்டிருக்கின்றது.

பிள்ளை பிறந்த பின் உள்வாங்கும் விடயங்களைப் போன்று கருவிலேயே அவ்வுயிர் அநேக விடயங்களை உள்வாங்கிக் கொள்கின்றது என ஆய்வுகள் நிரூபிக்கின்றன. இவ்வாறு உள்வாங்கும் விடயங்களே பிள்ளையின் எதிர்காலத்தை, நற்பழக்கங்களை, தீய குணங்களைத் தீர்மானிக்கும் சக்தியாக விளங்குகின்றன.

சீனத் தத்துவஞானியான கான்பூசியஸ் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் தாயின் வயிற்றில் உள்ள ஆறுமாதச் சிசுவுக்கு உணர்வுபூர்வத் தன்மை இருப்பதால் தாய் தன் குழந்தையுடன் பேசித் தொடர்புகளைப் பேணிக்கொள்ள வேண்டும் எனத் தெரிவித்ததாக வரலாறு கூறுகின்றது.

தற்காலத்தில் கருவில் இருக்கும் போதே குழந்தை அறிவாற்றலைப் பெற்றுக்கொள்கின்றது என விஞ்ஞானிகள் சுட்டிக் காட்டுகின்றனர். களுபோவில பொது வைத்தியசாலையில் பணியாற்றிய பிரசவ மகளிர் நோய்ச் சிகிச்சை வைத்திய நிபுணர் உபாலி மாரசிங்க அவர்கள் தாயின் வயிற்றில் உள்ள சிசுவினால் வெளி உலகத்துடன் தொடர்பு கொள்ள முடியாது என்ற கருத்து தற்காலத்தில் நிராகரிக்கப்பட்டுள்ளதாகக் கூறுகின்றார்.

தாயின் வயிற்றில் பாதுகாப்பாக இருக்கும் சிசு பொதுவாகவே கருவில் அசைந்து கொண்டும் செவிமடுத்துக் கொண்டும் தாயின் உணர்வுகளுக்கேற்ப அசைந்து எதிர் விளைவுகளை வெளிப்படுத்திக்கொண்டும் இருப்பதாக அவரால் மேற்கொள்ளப்பட்ட அலகிடுதல் சோதனைகள் (SCAN) வெளிக்காட்டியுள்ளன.

அமெரிக்க ஐன்ஸ்டைன் மருத்துவக் கல்லூரியின் விஞ்ஞானி டொமினிக் பிரிமன் பிரசவத்திற்கு முன்னால் குழந்தைகள் எப்படித் தம் உணர்வுகளை வெளிப்படுத்துகின்றன என்று அறியப் பல பரிசோதனைகளை மேற்கொண்டார். தனது மனைவி ஏழு மாதக் கர்ப்பிணியாக இருந்தபோது டொமினிக் பிரிமன் அவரின் வயிற்றில்

மெதுவாகத் தட்டி குட் நைட் (Good Night) என்று கூறுவார். இந்த ஸ்பரிசத்திற்குத் தூண்டற்பேறு காட்டும் விதத்தில் சிசு அசைவதை உணர்வதாக விஞ்ஞானியின் மனைவி பலமுறை அவரிடம் தெரிவித்துள்ளார்.

தாய் வயிற்றில் கருவைச் சுமக்கும்போதே நல்ல கதைகளைச் செவிமடுத்தல், மகிழ்ச்சியுடன் உரையாடுதல், ஆரோக்கியமான கனவுகளைக் காணுதல், மனதிற்கினிய பாடல்களைச் செவிமடுத்து இரசித்தல், மென்மையான இசைகளை இரசித்தல், நல்ல நூல்களை வாசித்தல், மாலை நேரங்களில் இயற்கையை இரசித்தவாறு நடத்தல், காற்றோட்டமான இடத்தில் அமர்ந்து ஓய்வெடுத்தல் போன்றன குழந்தையின் அறிவு வளர்ச்சிக்குப் பெரிதும் துணைபுரியும் என விஞ்ஞானிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

குழந்தை தாயின் வயிற்றில் இருக்கும்போதே நிறையக் கற்றுக் கொள்கின்றது. குழந்தை பிறந்த அந்த நிமிடத்தில் இருந்து இயற்கை அதன் ஆசிரியராகி விடுகிறது. குழந்தை பேசத் தொடங்குமுன்பே கற்றுக்கொள்ளத் தொடங்கிவிடுகிறது. ஆரம்பத்தில் பிள்ளையின் செயற்பாடுகள் தாய், குடும்பம், வீட்டுச் சூழல் ஆகியவற்றை ஒட்டியதாகவே அமைகின்றன.

பிள்ளை முதலில் தமது குடும்பத்தினரிடம் இருந்தே மொழியைக் கற்றுக் கொள்கின்றது. இது செவிமடுத்தல் ஊடாகவே நிகழ்கின்றது. குடும்ப அங்கத்தவர்களின் மூலம் செவிவழியாக சொற்களஞ்சியத்தை விருத்தி செய்து கொள்கின்றது.

பிள்ளையின் கற்றலுக்கு ஐம் புலன்கள் பயன்பாடு அவசியமாகும். பிள்ளை ஐம்புலன்களின் வாயிலாகவே கற்கும் ஆற்றலைப் பெறுகின்றது. பிள்ளை தன் கைகளைப் பயன்படுத்துவதற்கும் பேசிப் பழகுவதற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. இவை ஒரே தருணத்தில் தோன்றி வளர்கின்றன. ஒன்றின் வளர்ச்சிக்கு மற்றொன்று தானாகவே உதவுகிறது. பேசும் திறன் வளர்வதற்கு ஐப்புலன்களால் பெறும் அனுபவங்கள் இன்றி யமையாதவை.

குழந்தை பிறந்த நேரத்தில் இருந்து அதன் ஒவ்வொரு திறனும் சுதந்திரமாக வளர அனுமதிக்க வேண்டும். குழந்தையின் வாழ்க்கை பல திறன்களும் இயல்புகளும் இணைந்ததாகும் என்பதை நாம் நினைவிற் கொள்ள வேண்டும்.

மூன்று தொடக்கம் ஐந்து வரையுள்ள பருவத்தை முன்பிள்ளைப் பருவம் என அழைக்கிறார்கள். இப்பருவம் பிள்ளையின் விருத்தியில் மிக முக்கியமான பருவமாகும். இப்பருவத்திலேயே பிள்ளையின் ஆரம்ப சமூகமயமாக்கல் தொடங்குகின்றது. வீட்டிற்கு அப்பால் தொடர்புகள் ஆரம்பமாகின்றன. இக்காலத்திலேயே கற்றலுக்கான அடித்தளம் இடப்படுகின்றது.

முன்பிள்ளைப் பருவத்தில் பிள்ளைகளின் உடல் விருத்தி (Physical development), இயக்க விருத்தி (Motor development), மனவெழுச்சி விருத்தி (Emotional development), அறிவு விருத்தி (Intellectual development), மொழி விருத்தி (Language development), சமூக விருத்தி (Social development) ஆகிய அனைத்தும் வேகமாக நிகழ்கின்றன. இவ்விருத்திகள் அனைத்தையும் அடைய உதவுவதன் மூலமே பிள்ளையிடம் பூரண விருத்தியை ஏற்படுத்த முடியும்.

ஒரு பிள்ளையை நாம் நற்பிள்ளையாக வளரும் வகையில் அல்லது சமுதாயத்திற்கு ஏற்ற வகையில் வழிப்படுத்த வேண்டுமானால் அதற்குப் பொருத்தமான பருவம் முன்பிள்ளைப் பருவமேயாகும். அதனாலேயே இப் பருவம் நெகிழ்வுடைய பருவம் (Plastic period) என அழைக்கப்படுகின்றது.

இப்பருவத்தில் பிள்ளையின் உடல், உள, விருத்திக் குறைபாடுகளை அடையாளம் காண்பதன் மூலம் அதற்கான தீர்வுகளையும் விரைவில் காண முடியும். காது கேளாமை, பார்த்தல் குறைபாடு போன்ற குறைபாடுகளையும் இனங்கண்டு அதற்கான உடனடித் தீர்வுகளையும் வழங்க முடியும். அதே வேளை மருத்துவத் துறையும் முன் பிள்ளைப் பருவத்தின்மீது அதிக அக்கறை செலுத்துவதன் காரணத்தினால் இலகுவில் இக்குறைபாடுகளை நிவர்த்தி செய்து கொள்ள முடியும்.

வளர்ச்சியையும் விருத்தியையும் பொறுத்தவரையில் மூன்று தொடக்கம் ஐந்து வயது வரையுள்ள காலப்பகுதியில் அவர்களது மொழி, ஆளுமை போன்றவற்றில் முக்கிய மாற்றங்கள் ஏற்படும். உண்ணுதல், உடுத்துதல் போன்ற சுய பராமரிப்புச் செயற்பாடு களிலும் பிள்ளைகள் திறமையைப் பெறுவர். எனவே முன்பிள்ளைப் பருவக் கல்வியின் குறிக்கோள்கள் பின்வருவமாறு அமைதல் வேண்டும். முன்பிள்ளைப் பருவக் கல்வியின் குறிக்கோள்கள் நான்கு வகைப்படும்.

1. அடிப்படைத் தேவையைப் பூர்த்தி செய்தல்
2. நற்பழக்கவழக்கங்களை வளர்த்தல்
3. பூரண வளர்ச்சிக்கு ஊக்குவித்தல்
4. அடுத்த நிலைக்குத் தயார்ப்படுத்தல்

மேற்குறிப்பிட்ட குறிக்கோள்கள் நான்கும் ஒன்றுடனொன்று பின்னிப் பிணைந்தவை. இக்குறிக்கோள்களை நிறைவேற்றத் தவறினால், பிள்ளையின் விருத்தியில் பாதிப்பு ஏற்படும். அப்பிள்ளையிடம் பூரண விருத்தியை எதிர்பார்க்க முடியாது.

முதலில் பிள்ளையின் அடிப் படைத் தேவைகளைப் பூர்த்திசெய்தல் வேண்டும். அடிப்படைத் தேவைகளை இரண்டாக இனங்காணலாம்.

1. உடலியற் தேவைகள் (Physical needs)
2. உளத் தேவைகள் (Psychological needs)

உணவு, உடை, உறையுள், சுத்தமான காற்று, நீர், இயற்கைச் சூழல் ஆகியன உடலியற் தேவைகளாகும். காப்புணர்ச்சி (Feeling of Security), அன்பும் அரவணைப்பும் (Love and arrection), சுதந்திர உணர்வு (Freedom), துணிவுடன் செயலாற்றுதல் (Peeling of adventures) ஆகியவை உளத் தேவை களாகும்.

உடலியற் தேவையினைவிட உளத் தேவைகள் முன்பிள்ளைப் பருவத்தினரிடையே கூடுதலாகக் காணப்படும். இத்தேவையினைப் பூர்த்தி செய்வதில் முன்பள்ளிகள் விசேட கவனம் செலுத்துதல் வேண்டுமென எதிர்பார்க்கப் படுகிறது.

முன்பிள்ளைப் பருவப் பிள்ளை களுக்கு சத்துள்ள சுகாதாரமான உணவு, சிறந்த பாடசாலைச் சூழல், சுத்தமான காற்று, சுத்தமான நீர் போன்றவை அளிக்கப்பட வேண்டும். இவற்றைப் பூர்த்திசெய்வதற்கான ஏற்பாடுகள் முன்பிள்ளைப் பருவ கல்விக் கலைத்

திட்டத்தில் (Curriculum) இடம்பெறுதல் வேண்டும்.

பிள்ளைகளின் இயக்க விருத்திக்கு விளையாட்டுக்கள் துணைபுரியும். முன்பிள்ளைப் பருவப் பிள்ளைகளுக்கான விளையாட்டுக்களையும் விளையாட்டு உபகரணங்களையும் அவர்களின் வயது மட்டத்திற்கேற்ப தெரிவு செய்து பயன்படுத்துவதிலேயே பிள்ளையின் விருத்தி தங்கியுள்ளது.

முன்பிள்ளைப் பருவப் பிள்ளைகள் விளையாட்டுமூலமேகற்றுக்கொள்கின்றனர். பிள்ளைகள் விளையாட்டில் ஆர்வத்துடன் பங்கெடுத்து தன் சூழலை உருவாக்குவதில் பங்கேற்பது விளையாட் டிற்கும் போதிய வாய்ப்புகளைக் கொடுக்கும். ஒரு கற்கும் சூழலே பிள்ளைகளின் விருத்திக்கும் முன்னேற்றத்திற்கும் வழி வகுக்கும்.

## விளையாட்டு

- பிள்ளைகளுக்கு இயல்பானது
- மகிழ்ச்சியைத் தரும்
- கூட்டுணர்வை வளர்க்கும்
- விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையை வளர்க்கும்
- மொழித்திறனை விருத்திசெய்யும்
- ஆர்வத்திறனை விருத்தி செய்யும்
- மனவெழுச்சியில் சமநிலையைப் பேணும்
- தேடலை உருவாக்கும்
- சமூக பழக்கவழக்கங்களை கடைப் பிடிக்க உதவும்
- தொடர்பாடல் திறனை விருத்தி செய்யும்
- ஆளுமைத் திறனை விருத்தி செய்யும்.

விளையாட்டைத் தழுவிய பல செயற்பாடுகளில் பங்கேற்க ஒவ்வொரு பிள்ளைக்கும் வாய்ப்பளிக்கும் போது ஒவ்வொரு பிரிவினாலும் விருத்தி ஏற்படும். இச்செயற்பாடுகளின் ஊடாக பிள்ளைக்கு தன்னம்பிக்கை வளரும். தன்னாலும் சாதிக்க முடியும் என்ற உத்வேகம் உருவாகும்.

விளையாட்டின் ஊடாகப் பகிர்ந்துகொள்ளும் திறன், செவிமடுத்தல் திறன், சிந்தனை செய்யும் திறன் போன்றவை விருத்தியடையும். முன் பிள்ளைப் பருவப் பிள்ளைகள் விளையாட்டுச் செயற்பாடுகளின் ஊடாக இலகுவில் கற்றுக்கொள்வர். முன் பிள்ளைப் பருவப் பிள்ளைகளின் வாழ்க்கையுடன் விளையாட்டு பின்னிப் பிணைந்துள்ளமையை கவனத்திற் கொள்வோமானால் பிள்ளைகளின் இளமைக் காலம் இன்பமாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.

அரியாலைப் பிள்ளைகளின் விருத்திக்காக சனசமூக நிலையங்கள் முன்பள்ளிகள் மூலம் முன்பிள்ளைப் பருவக் கல்வியை வழங்கி வருகின்றன. அரியாலையில் தனியார் முன்பள்ளிகள் இயங்கி வந்தாலும் சனசமூக நிலையங்களினால் நிர்வகிக்கப்படும் முன் பள்ளிகள் சமூக அக்கறை கொண்டவை. வருடாந்தம் முன்பள்ளிப் பிள்ளைகளின் உடல் உள விருத்திக்காக விளையாட்டுப் போட்டிகள், கலை விழாக்கள், கண்காட்சிகள் போன்றவற்றை நடாத்தி அவர்களின் ஆற்றல்கள் வெளிக் கொணர களம் அமைத்துக் கொடுக்கின்றன.

எமது முன்னோர்களால் தொடங்கப்பட்ட சுதேசிய புதுவருடக் கொண்டாட்டம் ஒரு நூற்றாண்டைக் கண்டுள்ளது. அரியாலை மக்களின் சுதேசிய, கலை பண்பாட்டு உணர்வுகளை வெளிப்படுத்தும் விழாவாக மட்டுமன்றி அடுத்த தலைமுறையிடம் கொண்டு சேர்க்கும் விழாவாகவும் அமைந்துள்ளது என்றால் மிகையில்லை.

# விளையாட்டும் நாமும்

## (பவள விழா மலரிலிருந்து)

V.K சண்முகலிங்கம்
செ. பத்மநாதன்

*ஆரம்பகாலத்தில் எமது மக்களிடையே கிளித்தட்டு, வார் ஓடல், கிட்டியடி போன்ற சுதேசிய விளையாட்டுக்கள் விளையாடப்பட்டு வந்தன. ஆனால் காலம் செல்ல மேற்கத்தைய நாடுகளது ஆட்சியும் அவர்கள் ஆட்சியோடு ஏற்பட்ட உள்நாட்டு, வெளிநாட்டுத் தொடர்புகளும் அவர்களோடியைந்த விளையாட்டுக்களையும், அதன் பண்புகளையும் எமது விளையாட்டு முறைகளில் காணக் கூடியதாக இருந்துவருகின்றது. எனினும் முன்னே கூறப்பட்ட பாரம்பரிய விளையாட்டுக்கள் தொடர்ந்து விளையாடப் பட்டு வருவதும் அவ்விளையாட்டுக்களுக்குத் தொடர்ச்சியாக இவ்விழாக்களில் மற்றைய விளையாட்டுக்களுக்குச் சமனான முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கதாகும்.*

*எமது பிரதேசம் யாழ் நகரின் ஒரு பகுதியாக அமைந்த காரணத்தால் யாழ் நகரில் ஆரம்பிக்கப்பட்ட பாரிய கல்லூரிகளான யாழ் இந்துக்கல்லூரி, சென் ஜோன்ஸ் கல்லூரி, யாழ் மத்திய கல்லூரி, ஸ்ரான்லிக்கல்லூரி , சென் பற்றிக்ஸ் கல்லூரி ஆகியவற்றில் தமது உயர்கல்வியைப் பெறும் வசதி அவர்களுக்குக் கிடைத்தது. எனவே அக் கல்லூரிகளில் கல்வியோடு பல்வேறு விளையாட்டுக் குழுக்களில் இடம் பெற்று மாவட்ட ரிதியான, தேசிய ரீதியான விருதுகளை எமது வீரர்கள் பெறக் கூடியதாக இருந்தது. அதன் மூலம் அக் கல்லூரிகளுக்கும், எமது ஊருக்கும் பெருமையைத் தேடித் தந்தனர்.*

*அந்த வரிசையில் **1960** இற்குப் பின்னர் முன்னணி வீரர்களாக இருந்தவர்களில் யாழ் பரியோவான் கல்லூரி வீரர்களான S.சுந்தரலிங்கம், மு.தெய்வேந்திரா, மு.சுரேந்திரா, க.சூரிய குமார், சு.தருமராசா, ம.செல்வராசா, ந.வாமசிவன், ந.வாமபாகன், ம.காண்டீபன் ஆகிய வீரர்களும், மத்திய கல்லூரியைச் சேர்ந்த V.K.சண்முகலிங்கம், V.Kஅரசரட்ணம் ஆகிய வீரர்களும், ஸ்ரீகணேஸ், மகேந்திரன் (பாபு) யாழ் இந்துக்கல்லூரி, யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த S.சண்முகலிங்கம், K.தவக்குமார், க.துரைராசா, கு.குமாரத்தியானன், S.மோகனதாஸ், S. சங்கரதாஸ் ஆகிய வீரர்களையும் குறிப்பிடலாம்.*

*வீராங்கனைகளைப் பொறுத்த வரையில் சுண்டிக்குளி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த செல்விகள் சி.பிரபாவதி, சி.மாலா, ம. மஞ்சுளா, ம.காஞ்சனா ஆகியோரும். வேம்படி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த செல்விகள் ஜெயந்தி சோமசேகரம், மாலதி சிவகுரு ஆகியோரும், யா/கனக ரத்தினம் மத்திய மகா வித்தியாலய மாணவிகள் செல்விகள் உத்தமராணி சுப்பையா, சுபத்திரா சுப்பிரமணியம், சுஜாயா சின்னையா, பாமினி சண்முகலிங்கம், தர்மினி சண்முகலிங்கம் ஆகியோரும் அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை மாணவிகளான செல்விகள் ஜமிலா, ஜனிலா ஜேசுதாசன் சகோதரிகளும் முக்கியமானவர்களாகும்.*

*இவ்விளையாட்டு வீரர்களில் S.சுந்தரலிங்கம், மு.தெய்வேந்திரா, க.சூரியகுமார்,*

V.K.சண்முகலிங்கம், சுரேந்திரா, சு.தரும ராசா, M.செல்வராசா ஆகியோர் தேசிய மட்டப் போட்டிகளில் பரிசில்கள் பெற்று தேசிய வீரர்களாகக் கௌரவிக்கப் பட்டவர்களாவார். மற்றைய வீரர்கள் மாவட்ட ரீதியான பல போட்டிகளிலும் கௌரவிக்கப் பட்டவர்களாவர்

செல்வி பிரபாபதி சிவகுரு தேசிய பாடசாலைகளில் உயரம் பாய்தலில் முதலாம் இடத்தையும், செல்வி உத்தம ராணி சுப்பையா அரசினர் பாடசாலை களுக்கிடையிலான ஓட்டப் போட்டியில் தேசிய விருதையும் பெற்ற வீராங்கனை களாகும். இந்தச் சந்தர்ப் பத்தில் மாவட்ட தேசிய ரீதியான போட்டிகளில் சிறந்த வீராங்கனையாகத் தெரிவு செய்யப்பட்ட செல்வி ஜயந்தி சோமசேகரம் தற்பொழுது ஸ்ரீலங்காவின் தேசிய கூடைப் பந்தாட்டக் குழுவிலும், தேசிய கரபந்தாட்ட (பெண்கள்) அணியிலும் அங்கம் வகித்து தமக்கும் எமது ஊருக்கும் பெருமை தேடித் தருபவர்களில் ஒருவராகும்.

தற்போதுள்ள வீராங்கனைகளில் செல்வி ஜமிலா, ஜனிலா சகோதரிகளும், சுபத்திரா சுப்பிரமணியம், பாமினி, தர்மினி சகோதரிகளும் சுஜாத்தா சின்னையாவும் குறிப்பிடக்கூடிய வீராங்கனைகளாகவும் மாவட்ட ரீதியான போட்டிகளில் விருதுகளைப் பெறக் கூடியவர்களாகவும் உள்ளனர். தற்பொழுது வளர்ந்துவரும் இளம் வீரரான மகாதேவா கஜேந்திர னையும் இச்சந்தர்ப்பத்தில் குறிப்பிடுவது சிறந்ததாகும்.

கிரிக்கெட் ஆட்டத்திற்கு யாழ் மாவட்டத்திலேயே அரியாலை அணி பேர் போனதாகும். திரு. சிவகுரு சதானந்தன், ஆலாலசுந்தரம், துரைச்சாமி ஆகியோரது வாரிசுகளாகவும் S.K மகாலிங்கம், சண்முகலிங்கம், பரமலிங்கம் ஆகியோரின் வழிநடத்தல் கொண்டு ஓர் எறிபந்தாட்டப் பரம்பரையே அரியா லையில் உருவாகியுள்ளது. கொழும்பு தமிழ் யூனியன் கப்ரினாக இருந்து பெருமை பெற்ற திரு .க. சூரியகுமார் பல்கலைக்கழகக் குழுவில் கப்ரினாக இருந்த திரு. மு. தெய்வேந்திரா, சுரேந்திரா ஆகியோர் பாராட்டப்பட வேண்டியவர் களாவார். அதேநேரத்தில் கடந்த 30 வருடங்களாக விளையாட்டை தனது பெருமைக்குரிய தொழிலாகவும், தெய்வ மாகவும் கொண்டு செயற்படும் வீரர் V.K.சண்முகலிங்கம் ஒரு பெரு ஆலமரம்.

அவர் மத்திய கல்லூரி வீரனாகவும், தேசிய புகையிரதத் திணைக்கள வீரனாகவும், தேசிய பொலிஸ் திணைக் கள வீரனாகவும், சுப்றா வீரனாகவும் விளையாடியுள்ளார். தற்பொழுது சென்றலைற்ஸ் கழகத்தின் கப்ரினாக உள்ள இவர் ஓர் பல்துறை வீரராவார். இவரால் பயிற்றப்பட்டு வளர்ந்து வரும் யா/ கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய அணி கடந்த ஐந்து வருட காலமாக தோல்வி காணாத அணியாகவும், உதைபந்தாட்டத்தில் மாவட்ட ரீதியாக இரண்டாம் இடத்தைப் பெற்ற அணியாகவும் திகழ அவரது முயற்சியே காரணம் எனலாம். தற்பொழுது யாழ் பல்கலைக்கழக கிரிக்கெட் பயிற்சியாளராக வுள்ள இவ்வீரர் மறைந்த விளையாட்டு வீரர் திரு. த. ஆலாலசுந்தரத்தை தனது குருவாகக் கொண்டவர். திரு.க.சூரிய குமார் தற்பொழுது சென்ஜோன்ஸ் கல்லூரியின் எறிபந்தாட்ட பயிற்றுனராக பல சிறந்த வீரர்களை இம் மண்ணுக்குத் தந்த வீரராகவும், தொடர்ந்து கடந்த 30 வருடங்களாக எறிபந்தாட்ட அணியை வழிநடத்துபவராகவும், விளையாட்டு வீரராகவும் உள்ளார். திரு. க.சூரியகுமாரும், திரு. V.K. சண்முகலிங்கமும் யாழ் மாவட்ட கிரிக்கெட் விளையாட்டைக் கடந்த மூன்று தசாப்தங்களாக

ஆக்கிரமித்து பல வீரர்களை உருவாக்கிய பெருமைக் குரியவராவார்.

இவர்களை விட திருவாளர்கள் V.K. அரசரட்ணம், S. சிவகுமார், ந.வாமசிவன், ச. சுகுமார், ச. வரதன், V.K.S. அகிலன், அ. துருவாசன், கு.ஜசீந்திரா, மகேந்திரராஜா, க.பிரசாந்தன், ம. காண்டீபன், பீஷ்மன், அ. ஜயபாலன், P. தவநாதன் போன்ற பல பல சிறந்த வீரர்கள் உருவாக்கப்பட்டுள்ளனர். இவர்களில் திருவாளர்கள் க. பிரசாந்தன், ம. காண்டீபன், பீஷ்மன் ஆகியோர் யாழ்ப்பாணத்தில் தலை சிறந்த தற் போதைய வீரர்களாவார்.

அதே நேரத்தில் திருவாளர்கள் N.சுதேஸ்குமார், ச.தயாநேசன், V.K.S.விமலன், அரவிந்தன், செ.பார்த்தீபன், ஹரிதாஸ் ஆகிய இளம் வீரர்கள் கல்லூரி மட்டத்தில் சிறப்பு வீரர்களாக உள்ளனர்.

மென்பந்து எறிபந்தாட்டம் மேலே குறிப்பிடட் தோற்பந்து விளையாட்டு வீரர்களுக்கு ஒரு கைவந்த கலையாகும். எனவே தான்யாழ்ப்பாணத்தில் அரியாலை அணி சிறந்ததோர் அணியாகத் திகழ்கின்றது. இதற்கு இவர்களோடு திருவாளர்கள் க. குகதாசன், ச. தேசிகநாதன், S. விஜயன் போன்ற வீரர்களது திறமை அளப்பரியது, போற்றுதற்குரியது.

எமது உதைபந்தாட்ட அணி யாழ் மாவட்ட உதைபந்தாட்ட அணிகளில் ஒன்றாகும். பல சிறந்த மாவட்ட வீரர்களை எமது அணி தொடர்ச்சியாகக் கொண்டிருந்தது. எமது வீரர்கள் பொதுவாக பல் விளையாட்டு விற்பன்னர் களாக இருப்பதால் எறிபந்தாட்டத்தில் பங்கு பற்றியஅனேக வீரர்கள் உதைபந்தாட்டத்திலும் சிறந்த வீரர்களாக விளங்கினர். என்றாலும் வீரர்களுள் தேசிய வீரராக இருந்த திரு. S. K. பரமலிங்கம் எமக்கும் நாட்டுக்கும் பெருமை தேடிக் கொடுத்தவராவார். அவரைத் தொடர்ந்து நீண்டகாலம் இத்துறையில் பிரபல்யமாக இருந்தவர் திரு. பொ. தவநாதன் ஆகும். பரியோவான் கல்லூரியின் கப்டனாக இருந்து பெருமைபெற்ற இவர் அரியாலை ஐக்கிய கழகத்தின் உதைபந்தாட்ட அணிக்குப் பல வருடம் கப்டனாக இருந்துள்ளார். இவரை விடக் குறிப்பிடக் கூடியவர்கள் திருவாளர்கள் ந. வாமசிவன், சுரேந்திரா, மகேந்திரராசா ஆகியோராகும். தற்போதைய இளம் அணியில் பலர் சிறந்த வீரர்களாக வளர்ந்து கொண்டு வருகின்றார்கள்.

கரப்பந்தாட்டத்தில் அரியாலை வீரர்கள் தேசிய ரீதியான விருதைப் பெற்றவர்கள். திருவாளர்கள் த.சீவரத்தினம், ச.சதாசிவம், க.குணரத்தினம், க.தியாக ராஜா, S. துரைரட்ணம், S.K.இராசரட்ணம் ஆகியோர் கொண்ட அணி இன்று 40 வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தின் பல பிரதேசங்களுக்கும் சென்று வெற்றி வாகை சூடி வந்ததையிட்டு இன்றும் பெருமையாகப் பேசிக்கொள்ளும் பல முதியோரைக் காணலாம். இவர்கள் தொடக்கி வைத்த வித்து இன்று மரமாகிப் பல பகுதிகளிலும் சிறந்த கரப்பந்தாட்டக் கழகங்களை உருவாக்கி வளர்ச்சி பெற்ற வருகின்றது.

கரபந்தாட்டத்தில் தேசிய வீரராகவும், பொலிஸ் திணைக்கள வீரராகவும் விளங்கிய திரு.S.K.இராச ரத்தினத்தை இச்சந்தர்ப்பத்தில் குறிப்பிடுவது மிகப் பொருத்த மானதாகும். விசேடமாக யாழ் மாவட்டத்திலும் குறிப்பாக எமது பிரதேசத்திலும் கரப்பந்தாட்ட “செற்றப்” விளையாட்டுப் பயிற்சியை தனது முழு நேரத் தொழிலாக் கொண்டு இயங்கி வருகின்றதோடு பிரபல பாடசாலைகளில் பயிற்சியாளராகவும் உள்ளார்.

கடந்த 10 வருடங்களாக வலைப் பந்தாட்டத்தில் யாழ் மாவட்டத் திலேயே சிறந்த கோஷ்டிகளில் ஒன்றாகத் திகழ்வது எமது கோஷ்டியாகும். அவ்விளையாட்டு ஆரம்பத்தில் அரியாலை சனசமூக நிலையத்தில் ஆரம்பிகக்ப்பட்டு இன்று பல்வேறு சனசமூக நிலையங்களில் விளையாடப்பட்டு வருகின்றது. அது பல வீராங்கனைகளை உருவாக்கியுள்ளது. பரந்து பட்ட விளையாட்டு வசதிகள் ஏற்படுத்தப்பட்டதால் கோஸ்டிகளின் திறமையும் அதிகரித்து செல்விகள் பிரபாபதி சிவகுரு, மாலதி சிவகுரு, காஞ்சனா மகாலிங்கம், கௌதமி தேவந்தி, வருணி அம்பலவானர், சகோதரிகள் வாசுகி, பவானி சதானந்தன், சகோதரிகள் ராதை, அருளம்பலம் ஆகியோர் முக்கியமானவர்கள். தற்போதைய வீராங்கனைகளான செல்விகள் சுபத்திரா சுப்பிரமணியம், கௌரி ஆறுமுகம், யசிந்தா நல்லையா, பிரபாஜினி சுந்தரலிங்கம் வரதாதேவி திரவியம் ஆகியோரைக் குறிப்பிடலாம்.

சுதேசிய விளையாட்டுக்களில் தாச்சிப் போட்டியில் காந்தி சனசமூக நிலைய வீரர்களது பங்கு மெச்சத்தக்கது. தொடர்ச்சியாக எமது பிரதேசத்தில் சிறந்த வீரர்களாக அவர்கள் உள்ளனர். வெளிப் பிரதேசங்களில் நடைபெறும் போட்டி களிலும் இவ்வீரர்கள் வெற்றி பெற்று தமக்கும் எமக்கும் பெருமை ஈட்டித் தருபவர்கள்.

கடந்த வருடம் சுதேசிய விளை யாட்டு அபிவிருத்திக் குழுவால் நடாத்திய யாழ் மாவட்ட பெண்களுக்கான தாச்சிப் போட்டியில் எமது சன சமூக நிலையங்க ளான சரஸ்வதி சனசமூக நிலையக் கோஷ்டி சம்பியனாகவும், காந்தி சனசமூக நிலைய கோஷ்டி இரண்டா வதாக வந்தும் சிறப்புப் பெற்றன.

எமது பிரதேசத்தில் விளையாட்டு மைதானங்களும் வசதிகளும் மற்றப் பிரதேசங்களில் பார்க்க அதிகமாகும். அத்தோடு பல சனசமூக நிலையங்கள் சிறப்பாகச் செயல்படுவது விளையாட்டுப் போட்டிகள் அடிக்கடி நடைபெறுவதன் மூலமும் தரமும் அதிகரித்துள்ளது.

அரியாலை சனசமூக நிலைய மைதானம் தொடர்ச்சியாக சிறந்த சனசஞ்சாரமும், சுறுசுறுப்புமுள்ள மைதானமுமாகும். இங்கு உதைபந்தாட்டப் பயிற்சி, எறிபந்தாட்டம் என்பன நடைபெற்று வருகின்றகன. இங்கு ஆரம்பிக்கப்பட்ட பெண்கள் பகுதி மகளிர் விளையாட்டுக்கள் விருத்தியடைய காரணியாகவுள்ள அரியாலை மத்திய விளையாட்டு மைதானம் பல் வகையிலும் சிறந்ததோர் மைதானமாகும். எறிபந் தாட்டம், உதைபந்தாட்டம் விளை யாட்டுப் போட்டிகளை நடத்த சிறந்த மைதா னமாக இருந்த பொழுதும் அம் மைதானம் செப்பனிடப்பட வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

அரியாலை சரஸ்வதி, அருணோ தயா திருமகள், கலைமகள், காந்தி சனசமூக நிலையங்களில் உள்ள மைதானங்கள் கரபந்தாட்டம், வலைப் பந்தாட்டம் போன்ற விளையாட்டுக்கள் நடை பெறக்கூடிய தாகவுள்ளன. அரியாலை சனசமூக நிலையம் சரஸ்வதி சனசமூக நிலையம் ஆகியவற்றில் விளையாட்டுக் கான வசதிகள் உண்டு.

இவ்விளையாட்டுக்களில் ஈடு படுதல், அதன் பார்வையாளர்களாக இருத்தல் ஆகியன மூலம் ஓர் திடகாத்திர மான சமுதாயத்தை உருவாக்கு வதையே இவ்விளையாட்டுக் கழகங்கள் குறிக் கோளாக உள்ளன. விளையாட்டு வீரர்கள் விளையாடுவதோடு பல ஒழுக்கப் பண்புகளைக் கொண்டிருத்தல் முக்கிய

மானதாகும். விளையாட்டை மதித்தல், எதிரணியை மதித்தல், மத்தியஸ்தர் தீர்ப்பை மதித்தல் என்பவற்றோடு தன்னை அவ்விளையாட்டில் அர்ப்பணித்தல் வேண்டும். இதுவே அவர்கள் தமக்கும் தமது அணிக்கும் எமது சமுதாயத்துக்கும் செய்யும் நற்செயலாகும்.

## தொடர்ச்சி ...

சென்ற தசாப்தத்தின் இறுதிக் காலத்தில் விளையாட்டுத்துறையை ஆக்கிரமித்து பாடசாலை மாவட்ட தேசிய ரீதியாக புகழ் பெற்றிருந்தன. R.M.தெய்வேந்திரா, V.K.சண்முகலிங்கம், திருமதி. ஜெயந்தி சோமசேகரம் போன்றவர்களது வழியாக வளர்ச்சி பெற்ற விளையாட்டுத்துறை தடைக்களம் எறிபந்தாட்டம் உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம் மற்றும் சுதேச விளையாட்டுக்களோடு வளர்ச்சியடைந்து வருவதோடு உள் நாட்டு யுத்தம், மாவட்டங்களுக்கிடையிலான நாடுகளுக்கிடையிலான புலம் பெயர்வு என்பன இத்துறையிலல் புதியதோர்பரிமாணத்தினை எடுத்துள்ளது.

இப்பரிமாணத்தில்பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், கோட்ட, மாவட்ட, மாகாணப் போட்டிகள், கழகங்களுக்கிடையிலான போட்டிகள் என்பனவற்றின் அடிப்படையில் எமது ஊருக்கு பெருமை தேடிக்கொடுத்துக் கொண்டிருக்கும் வீர வீராங்கனைகளையிட்டு மதிப்பீடு செய்தல் அவசியமாகும். மகாதேவா ஜெயரட்ணம் பாடசாலைக் காலத்தில் கொக்கி எறிபந்தாட்டத்தில் பாடசாலை மாவட்ட ரீதியில் தலைசிறந்த வீரனாவார்

தடகளத்துறையில் தொடர்ச்சியாக யாழ் மாவட்டத்தை ஆக்கிரமித்து குறுந்தூர வீரனாக திகழ்ந்த மகாதேவா கஜேந்திரனை குறிப்பிடுதல் அவசியமாகும். யாழ் கனகரத்தினம் மகா வித்தியாலயத்தை பிரதிநிதித்துவம் செய்த கஜேந்திரன் 100, 200 மிற்றர் ஓட்டப் போட்டியில் தேசிய ரீதியாக பங்குபற்றி பாராட்டுதல்களையும் பெற்ற வீரர் என்பதுடன் கழக மட்டப் போட்டியில் அரியாலை ஐக்கிய கழகத்தைப் பிரதிநிதித்துவம் செய்த வீரராவார். வெளிநாட்டுக்குப் புலம் பெயர்ந்த இவர் இங்கும் சில காலம் தனது திறமையைக் காட்டினார். S.K.மகாலிங்கத்தின் மகனான திரு. காண்டீபன் புகழ்பெற்ற குறுந்தூர ஓட்ட வீரராவார். யாழ் பரியோவான் கல்லூரியையும் பிரதிநிதித்துவம் செய்த இவர் அரியாலை ஐக்கிய கழகத்திற்காக பல வருடங்கள் பங்குபற்றி பல பரிசில்களைப் பெற்றவராவார்.

யாழ் பரியோவான் கல்லூரியை பிரதிநிதித்துவம் செய்த பத்மநாதன் தினேஸ் ஓர் பல்துறை வீரராவார். பாடசாலை, மாவட்ட மட்டத்தில் 100, 200 மீற்றர் போட்டிகளில் முடிசூடிய வீரராகும். பின்னர் அரியாலை ஐக்கிய கழகத்திற்காகவும் தனது பங்களிப்பினை நல்கினார். குணரத்தினம் கஜேந்திரா ஓர் இடைத்தூர விரராக யாழ் பரியோவான் கல்லூரியையும் பின்னர் கொழும்பு இந்துக்கல்லூரியையும் பிரதிநிதித்துவப் படுத்திய எமது வீரராகும். அதே நேரம் சென்ஜோன்ஸ் கல்லூரி வீரனாக சண்முகலிங்கம் விமலன், பாடசாலை மாவட்ட ரீதியான நீளம் பாய்தல், கெந்தி மிதித்து பாய்தல், 400 மீற்றர் போன்ற போட்டிகளில் பிரகாசித்ததோடு. யாழ் பல்கலைக்கழக மட்டத்திலும் தனது திறமையை வெளிக்கொண்டு வந்த வீரராகும். திரு.தி.துவாரகள் இன்னுமொரு நற்தூர வீரராக, யாழ் பரியோவான் கல்லூரியை பிரதிநிதித்துவப்

படுத்தினார். பல இளம் வீரர்கள் பாடசாலை மட்டத்தோடு யுத்த நிலை காரணமாக எதிர்கால தமது திறமையை வெளிக்கொண்டு வர முடியாத நிலையேற் பட்டது. யாழ் மத்திய கல்லூரியை பிரதிநிதித்துவம் செய்த திரு.S.பாலசங்கர் தேசிய ரீதியில் உயரம் பாய்தலில் இரண்டாம் இடம்பெற்று எமக்கு பெருமை தேடித் தந்த வீரராவார். திரு.சொ. சண்முகலிங்கம் தலைசிறந்த பாடசாலை, மாவட்ட குறுந்தூர வீரரென்பதுடன், தேசிய ரீதியாகவும், பொலிஸ் திணைக்கள ரீதியாகவும் புகழ் பெற்ற இவர் தொடர்ந்தும் போட்டிகளில் பிரதான ஆரம்பிப்பு வீரராக பணியாற்றி வருவது குறிப்பிடத்தக்கது.

மகளிரைப் பொறுத்தவரை தடகள வீராங்கனைகளாக செல்விகள் ஜமிலா, ஜகிலா போன்ற வீராங் கனைகளும், மிதுலா, மயூரி போன்ற வீராங்கனைக ளும் தடகளப் போட்டிகளில் குறிப்பிடத் தக்களவு தமது திறமைகளை பாடசாலை, மாவட்ட மட்டத்தில் வெளிக்கொண்டு வந்தனர்.

பெண்கள் தடகளப் போட்டிகளில் யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியா லயம், இந்து மகளிர் வித்தியாலயம் மட்டத்திலும், யாழ் மாவட்ட மட்டத்தி லும் குண்டெறிதல், பரிதி வட்டம் எறிதல், ஈட்டி எறிதல் என்பவற்றில் சாதனைகள் செய்தவர். செல்வி கலாயினி பிறேம் குமார் (துரைச்சாமி) ஆவார். அவர் பின் தேசிய ரீதியிலும் சாதனை புரிந்த வீராங்கனையாகும்.

புலம் பெயர்ந்த கிளிநொச்சி உருத்திபுரம் மகா வித்தியாலயத்தை பிரதிநிதித்துவம் செய்த கிளிநொச்சி மாவட்டம், வடமாகாணம் எனப்பல மட்டங்களில் சாதனைகளை, பரிதி வட்டம் எறிதல், குண்டெறிதல், Hammer எறிதல் என்பவற்றைப் புரிந்து தேசிய மட்டப் போட்டிகளிலும் பங்குபற்றி வரும் செல்வி வினேவிதா ஸ்ரீரங்கநாதன் அரியாலையின் வீராங்கனையே.

எறிபந்தாட்டத் துறையில் யாழ் பல்கலைக்கழக அணித் தலைவரான சண்முகலிங்கம் விமலன், சென் ஜோண்ஸ் கல்லூரி தலைவர்களான பத்மநாதன் தினேஸ், பத்மநாதன் லவேந்திரா, திரு. ந. பீஷ்மன், திரு. து. கௌரிபாலன், திரு. ப. நவநீதன், பரியோவான் கல்லூரி வீரர்களான திரு. தட்சன், சஞ்சயன், சத்தியேந்திரா, திரு.T. அரவிந்தன், K.கஜரூபன், P.கிருசாந்தன், த. கிருசாந், கயந்தன், நதீசன் ஆகியோரையும் யாழ் மத்திய கல்லூரி அணித்தலைவர்களான திரு. தயான், T. கோகிலன், வீரர்களான T.தர்சன், திரு. மதுசுதனன், திரு.சி.தினேஸ் போன்றவர்களையும், யாழ் சம்பத்திரி சியார் கல்லூரி வீரர்களான S.அகிலன், P.நவஜீவன், T.பத்மமுரளி, P.பிரகாஸ் தாஸ் போன்றவர்களையும் யாழ் இந்துக் கல்லூரியின் அணித் தலைவராகவும் யாழ் பல்கலைக்கழக அணித்தலைவராக விளையாடிய T.மகேந்திரராஜா மற்றும் வீரர்களான திரு. நிரோஜன் யாழ் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய வீரரும் நடுவருமான குணதாஸ் போன்ற வீரர்களையும் குறிப்பிடுவது பொருத்த மானதாகும்.

இந்த இளம் வீரர்களில் அனேகர் மாவட்ட எறிபந்தாட்ட பயிலுனர் திரு.V.K.சண்முகலிங்கத்தினால் பயிற்றப்பட்ட வீரர்களாகும். இன்னும் பல வீரர்கள் தற்பொழுது எறிபந்தாட்ட துறையில் பிரகாசித்து வருவதைக் காணக் கூடியதாகவுள்ளது.

பல முன்னணி உதை பந்தாட்ட வீரர்கள் எம்மிடையே இருப்பினும் பலம்

பொருந்திய கழக ரீதியான போட்டிகளில் பிரகாசிப்பவர்கள் ஒரு சிலரே யாழ் பல்கலைக்கழக உதைபந்தாட்டக் குழுவில் தலைவராக விளையாடிய திரு.Y.கிருபாகரன், தற்பொழுது புகழ் பெற்ற உதைபந்தாட்ட நடுவர்களில் ஒருவர் என்பதுடன் யாழ் மாநகரசபை உறுப்பினருமாவார்.

வடமாகாணத்தில் புகழ் பூத்த உதைபந்தாட்ட கழகங்களில் ஒன்றாக உருத்திரபுரம் கழகத்திற்காக விளையாடி வரும் திரு ஸ்ரீரங்கநாதன் பிரதீஸ் எமது ஊர் வீரரே. இவர் யாழ் பல்கலைக்கழக விருது பெற்ற வீரராகும்.

மகளிர் வலைப்பந்தாட்டத்தில் பாடசாலை ரீதியாக, கழகரீதியாக யாழ் பல்கலைக்கழக ரீதியாக பிரகாசித்த பல வீராங்கனைகள் உள்ளனர். ஜெயந்தி சோமசேகரம் அவர்களது அடிச்சுவட்டில் பல்கலை விளையாட்டுப் பயிற்றுவிப் பாளர்கள் செல்வி. இராதை அருளம்பலம், சுரேந்தினி சிதம்பரநாதன் அவர்களது வழிகாட்டலில் பல வீராங்கனைகள் உருவாகி உள்ளனர். அவர்கள் எல்லோரையும் பெயர் குறிப்பிட முடியாவிடினும் பலர் பல்கலைக்கழக மற்றும் கழக மட்டத்தில் பங்குபற்றி விளையாடியவர்களாகும்.

ஆண்கள் Basketball அணிகளில், யாழ் பல்கலைக்கழக அணிகளில், எமது பல வீரர்கள் பங்குபற்றியதோடு திரு. S. விமலன், திரு. க. மகேந்திரராஜா போன்றோர் அணித்தலைவர்களாக பங்கு பற்றி பெருமை சேர்த்தவர்கள்.

இக்காலப்பகுதியில் பல்வேறு விளையாட்டுக்களில் பயிற்றுனர்களாக வும், உள்ளூர் தென்கிழக்காசிய ரீதியாகவும், சர்வதேச ரீதியாகவும் பல பயிற்றுநர்கள், நடுவர்களாக எம்மவர்கள் பலர் தொடர்ந்து தமது பெருமையை வெளிக்கொண்டு வருகின்றனர்.

இந்த வகையில் சர்வதேச கரப்பந்தாட்ட நடுவராக தெரிவு செய்யப் பட்டு யாவரினாலும் பாராட்டுப் பெற்றவர். எமது விழாவின் விளையாட்டு பிரிவுத் தலைவர் திரு.நல்லையா சதேஸ்குமாராகும். பல்துறை விளையாட்டு வீரரும் யாழ் சம்பத்தரிசியார் கல்லூரி பழைய மாணவருமாகிய சுதேஸ்குமார் எறி பந்தாட்டம், உதைபந்தாட்டம், வலைப்பந்தாட்டம், கரப்பந்தாட்டம் மற்றும் தடகளப் போட்டிகளில் பாடசாலை, மாவட்டம், பல்கலைக்கழக ரீதியாக விருதுகளையும், பாராட்டுக் களையும் பெற்ற வீரராகும். (சிறப்புக் கட்டுரை பிரசுரிக்கப்பட்டுள்ளது)

இவரைத் தவிர பல்கலைக்கழக உடற்பயிற்சி போதனாசிரியர்களான செல்வி. ராதை அருளம்பலம், மற்றும் சுரேந்தினி சிதம்பரநாதன் ஆகியோர் தென்கிழக்காசிய ரீதியில் உடற்கல்வி நடுவர்களாக தெரிவு செய்யப்பட்டு எமக்குப் பெருமை தேடிக் கொடுத்தவர் களாவார்.

நீண்டகாலம் எறிபந்தாட்ட வீரராக பயிற்றுவிப்பாளராக செயலாற்றி தற்பொழுது ஓய்வு பெற்றுள்ள திரு.V.K.சண்முகலிங்கம் எமக்கு பெருமை தேடித் தந்த சகலதுறை வீரராகும். (சிறப்புக் கட்டுரை பிரசுரிக்கப்பட்டுள்ளது)

அதுபோல் இலங்கை வலைப்பந் தாட்டக் குழுவில் தற்போதைய பயிற்று னர்களின் ஒருவரும் முகாமையாளரு மாகிய விளையாட்டு வீராங்கனை ஜெயந்தி சோமசேகரம் டி சில்வாவும் எமக்கு பெருமை தேடித்தந்தவர்களில் ஒருவராகும். (அவர் பற்றிய தனியான கட்டுரை மலரில் பிரசுரிக்கப்பட்டுள்ளது)

திரு. துரைசாமி, திரு. சிவகுரு, திரு. P.தர்மலிங்கம், திரு. ஜீவரத்தினம், திருமதி.பிரபாவதி, கமலகாசன் ஆகியோரால் ஆரம்பிக்கப்பட்டு லிங்கம் சகோதரர்கள், திரு. P. பஞ்சலிங்கம், திரு. S.சத்திய மூர்த்தி ஆகியோரால் வளர்க்கப்பட்டு, Dr. தெய்வேந்திரா, திரு.P.தவநாதன், திரு.V.K.சண்முகலிங்கம் போன்றவர் களால் வளர்க்கப்பட்ட விளையாட்டுப் பாரம்பரியம் கொண்டு செல்லப்பட்டு திரு.V.K.சண்முகலிங்கத்தினால் பயிற்று விக்கப்பட்டு வந்த இவ் விளையாட்டுப் படையணி பல பகுதிகளாக பாடசாலை மட்டம், பல்கலைக்கழக மட்டத்தில் படர்ந்து தொடர்ந்து அரியாலைக்கு பெருமை தரும் ஓர் துறையாக வளர்ந்து வருவதை அவதானிக்கலாம்.

## சமய குரவர்கள் ...

- சைவ சமயிகள் ஓதவேண்டிய தமிழ் வேதங்கள் எவை?
  தேவாரம், திருவாசகம் என்னும் இரண்டுமாம்.

- தேவாரஞ் செய்தருளினவர் யாவர்?,
  திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார்.

- திருவாசகஞ் செய்தருளியவர் யார்?
  மாணிக்கவாசக சுவாமிகள்

- திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் எங்கே திருவவதாரஞ் செய்தருளினார்?
  சோழநாட்டில் உள்ள சீர்காழியிலே வைதிகப் பிராமணகுலத்திலே திருவவதாரஞ் செய்தருளினார்.

- திருநாவுக்கரசு நாயனார் எங்கே திருவவதாரஞ் செய்தருளினார்?
  திருமுனைப்பாடி நாட்டில் உள்ள திருவாமூரிலே வேளாள குலத்திலே திருவவதாரஞ் செய்தருளினார்.

- சுந்தரமூர்த்தி நாயனார் எங்கே திருவவதாரஞ் செய்தருளினார்?
  திருமுனைப்பாடி நாட்டிலே திருநாவலூரிலே சிவப்பிராமண குலத்தில் திருவவதாரஞ் செய்தருளினார்.

- மாணிக்கவாசக சுவாமிகள் எங்கே திருவவதாரஞ் செய்தருளினார்?
  பாண்டி நாட்டிலே உள்ள திருவாரூரிலே அமர்த்தியப் பிராமண குலத்திலே திருவவதாரஞ் செய்தருளினார்.

# திருமகள் நாடக மன்றக் கலை பற்றிய கருத்துக்கள்



யோ. தயாளன்
SLPS III, B.A., PGDE, Dip. in Teach.

புகழ்பூத்த அரியாலைப்பதி தனிலே பார் போற்றும் நன்மக்கள் பலதேசம் எங்கும் கிளை பரப்பி தலை நிமிர்ந்து தன்மானத் தமிழனாய் இன்று இருக்கின்றான் என்றால் அது இவ்வூர் தந்த அறிவும், ஆற்றலும், பலமும் என்றால் மிகையாகாது. இங்கு கலை, விளை யாட்டு, கல்வி என பல துறைகளிலும் அரியாலை மக்கள் கால் பதித்துள்ளனர். அரியாலை ஒரு தூங்காத கிராமம். அந்த வகையில் எம்மால் தோற்றுவிக்கப்பட்ட கலைக்கூடமான திருமகள் நாடகமன்றம் பற்றிய பல சுவாரசியமான சம்பவங்களை மீட்டி ஞாபகப்படுத்தலாம் என்ற வாஞ்சையில் எழுதுகிறேன்.

கலையைப் பொறுத்தமட்டில் தென்னிந்தியாவிற்கு அடுத்ததாக இலங்கை யிலுள்ள யாழ் நகரின் அரியாலையே சிறந்தது என்ற கருத்தை யாரும் மறுத்துக் கூற முடியாது.

1960 இற்கு முன் எமது மூதாதையர்களான சின்னையா வே.சிவக் கொழுந்து, நாகலிங்கம் போன்ற கலைஞர்களாலும் மற்றும் பலராலும் கன்னி நாடகமாக "ஸ்ரீவள்ளி" என்ற நாடகம் முதன் முதலில் அரங்கேற்றப் பட்டு அக்காலத்தில் எல்லோரது பாராட்டுக் களையும் கௌரவத்தையும் பெற்றது. இதிலே சின்னையா அவர்கள் குறத்தி வேடத்தில் நடித்து அப் பாத்திரமாகவே வாழ்ந்ததால் அவரைக் குறத்தி சின்னையா என்று மக்கள் செல்லமாக அழைப்பார்கள்.

அடுத்ததாக வே. சிவக்கொழுந்து என்பவரை நாம்குறிப்பிட வேண்டியுள்ளது. அமராவதி நாடகத்தில் பெண்வேடம் தரித்து, மிகச் சிறப்பாக நடித்ததன் மூலம் தனக்கான இடத்தைத் தக்க வைத்துக் கொண்டார். மேலே குறிப்பிட்ட இவர்கள் பல புராண, இதிகாச நாடகங்களில் நடித்ததாகக் கூறப் படுகின்றது. 1960 இன் பின் புதிய கலைஞர்களால் திருமகள் நாடகமன்றம் உருவாக்கப்பட்டு புராண இதிகாச நாடகங்கள் தவிர்ந்த சமூக நாடகக் கலாசாரத்திலும் எமது கலைஞர்கள் கால் பதிக்கத் தவறவில்லை. சொந்த கதை வசனம், நடிப்பு, இயக்கம், ஒப்பனை, ஆடை அலங்காரம் ஒருங்கே சேர மேடை ஏற்றிய பெருமை திருமகள் நாடக மன்றத்தையே சாரும். இவர்கள் தென்னிந்திய நாடகக் கலை மரபைப் பின்பற்றாது சமூக நாடகங்களை மிகத் திறமையாக தமது சொந்தக் கற்பனையில் உருவாக்கினார்கள். "சாந்தி" என்ற சமூகநாடகம், "விதியின் விளையாடல்" போன்ற நாடகங்களை எமது முந்திய தலைமுறையினர் மேடையேற்றி நடித்திருந்தனர். அடுத்து "சித்தியா? காதலியா?" என்ற நாடகத்தில் முதல் பெண் வேடத்தில் மயிலு என்ற செல்வராசா அறிமுகமாகி நடித்திருந்தார். அதை யடுத்து இலங்கையில் பல இடங்களில் மேடையேற்றிய "அடங்காப் பிடாரி" நாடகத்தில் கதாநாயகியாக

நடித்த N.T.குணம் அவர்கள் எமது நாடக மன்நறத்தில் நடிப்புப் பயிற்சியைப் பயின்றவர்கள். அதையடுத்து "வெளிக் கிடடி விசுவமடுவுக்கு" என்ற நாடகத்தில் கதாநாயகனாக நடித்த ம. மகேந்திரன் என்பவரும் இந் நாடக மன்றத்தில் நாடகப் பயிற்சியைப் பயின்றவர் என்பதை அறியத் தருகின்றோம். மற்றும் எமது நாடக மன்றத்தின் துணை நடிகர்களாக நடிப்புப் பயிற்சியைப் பெற்ற கலைஞர்கள் A.மகாலிங்கம், S.துரைச்சாமி, P.ஆறுமுகம், S.குமாரசாமி, T.யோகராசா (பச்சடி), N.அருள், பொன்.கணேஸ், தா. தவசோதி, தா.ஞானசோதி, ரகு, S. அருளானந்தம், வே. நல்லையா, க. ரகுபதி, க.குணரட்னம், பொ. கணேசலிங்கம், பொ.தெய்வேந்திரம், செ. ஜெயதரன், சி.சிவராசா, சி. சிங்கராசா, சி. வரதராசா, தனபாலு, க.குணம், திரிலோகநாதன் போன்ற கலைஞர்களைக் குறிப்பிடலாம்.

1980 வரையிலான காலப்பகுதியில் திரு. செல்வராசா (மயிலு) அவர்களின் கதை வசனத்தில் உருவான நாடகங்களாக "ராஜ துரோகி", "கொள்ளைக்காரன் காதலி", "விடை கொடு தாயே", "வீழ்ச்சி," "இரு ஜீவன்கள்", "பாவத்தின் பரிசு", "திரும்பிப்பார்", "வெண்ணிலா", "ஏன் இந்த மாற்றம்" போன்றவை அரங்கேற்றப் பட்டன. இந்த நாடகங்களுக்கு துணை இயக்குநராக N.T.குணம் அவர்கள் கடமையாற்றி இருந்தார். நகைச்சுவை நாடகமாக "வாடா வாத்தியாரிட்ட", "ஓடிப் போனவள்" போன்றவை திரு. செல்வராசாவின் நெறியாள்கையில் மேடையேற்றப் பட்டவையாகும். இந் நாடகத்தில் த.யோகராசா (பச்சடி) என்பவர், தனது நகைச்சுவை நடிப்பினால் மக்களின் மனதிலே இடம் பிடித்தார். பச்சடி என்று அன்பாக அழைக்கப் பட்டார். இதிலே இவருக்கு நகைச்சுவைத் தென்றல் என்ற பட்டம் வழங்கப்பட்டது.

அடுத்த எமது நாடக மன்றத்துக்கு புகழ் சேர்த்த திரு. அருள்பிரகாசம் அவர்களை நினைவு கூருகிறேன். "தேரோட்டி மகன்" நாடகத்தில் கிருஷ்ணனாக நடித்து பெருமை சேர்ரத்தவர். V.T.A.விசுவா திருநெல்வேலி கலைக்குரிசு நாடக மன்றத்திலிருந்து "விதியின் விளிம்பில்" என்ற நாடகத்தின் மூலம் எமது கலைஞர்களுடன் சேர்ந்து புகழ் பெற்று தந்தார்.

அடுத்து எமது நாடகத்துக்கு பல்வேறு வகையிலும் ஒத்துழைப்பு வழங்கியதோடு "மாலிக்கபூர்", "சலனங்கள்", "இதயராகம்", "சந்தர்ப்பம்", "நினைவ லைகள்", "அமரேந்திரம்" போன்ற நாடகங்களை நெறியாள்கை செய்த அமரர் க.நேமிநாதன் அவர் களையும் மறந்து விட முடியாது.

இறுதியாக எமது நாடக மன்றத்தின் தழுவல் நாடகமாக "சகுந்தலை", "பிருதிவிராஜன", "திருவருட் செல்வன்", "பாஞ்சாலி சபதம்", "நக்கீரர்" போன்ற நாடகங்கள் அரங்கேற்றப் பட்டது குறிப்பிடத்தக்கது. இது வரையில் நடைபெற்ற சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாக்களில் அதிகளவு நாடகங்களையும் "காட்சியா? கானமா?" என்ற நிகழ்ச்சியையும் நடத்திய பெருமை எமது திருமகள்நாடக மன்றத்தையே சாரும். பல பட்டங்களையும் கௌரவத் தையும் கொண்டு இன்று "கலைஞானி" என்ற பட்டத்தைத் தாங்கி உள்ள சி. செல்வராசா என்ற கலைஞனின் ஞாபகத்திலிருந்து சிதறிய முத்துக்கள் இங்கு சேர்க்கப்பட்டுள்ளது. இங்கு யாரையாவது குறிப்பிடத்தவறியிருப்பின் அக் கலைஞர்கள் பெரிய மனம் கொண்டு மன்னிக்க வேண்டுகின்றேன்.

ஒலி, ஒளி அமைப்பாளராக எமது நாடக மன்றத்திற்கு நீண்டகாலம் சேவையாற்றிய அமரர் ச.சுந்தரம்


(றோயல் சவுண்ட்) அவர்களுக்கு ஒளி, ஒலி வல்லோன் என்ற பட்டம் வழங்கப் பட்டது.

அடுத்து எமது பக்கவாத்தியக் கலைஞராக ச. கந்தவனம் அவர்கள் மிக நீண்டகாலம் கடமையாற்றி இருந்தார். இவருக்கு "கலைவான்மதி" பட்டம் வழங்கப்பட்டது.

அடுத்து எமது நாடக மன்றத்தின் அறிவிப்பாளராக உங்களில் ஒருவன் "லோகேஷ்" அவர்கள் எமது நாடக மன்றத்திற்கு பெருமை சேர்த்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

குறிப்பு: அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவில் மூன்று தடவைகள் "இரு ஜீவன்கள்", "வெண்ணிலா", "காணாக்கிய சபதம்" ஆகிய இந்த மூன்று நாடகங்களும் முதல் பரிசைப் பெற்று உதயணன் ஞாபகார்தத்க் கேடயம் வழங்கப்பட்டது என்பதையும் நான் இந்த அரியாலை மண்ணில் பிறந்ததையிட்டுப் பெருமைப்படுகின்றேன்.

மேலும் எமது அரியாலை ஊர்மக்கள் ஒற்றுமையுடனும், உற்சாகத் துடனும், ஆவலுடனும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் நூறாவது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவை சிறப்போடு வாழையடி வாழையாக மனிதன் இப்பூமியில் வாழும் வரை தொடர்ந்து நடத்த வேண்டும் என்ற நிறைந்த மனதோடு பிரார்த்தித்துக் கொண்டு இறைவனுக்கு நன்றிகூறி விடை பெறுகிறேன்.



# ஆண்டு நூறு காணும் அரியாலை சுதேசியம்



துரைச்சாமி கேதீஸ்
இங்கிலாந்து

*கோயிலும்பல குளங்களுமாய்
கொண்டமைந்த நிலமதுவாய்
வயல்வடலி கடலும்கொண்ட
இடமெங்கள் அரியாலையூர்*

*கற்றவர் பலரும் வாழ்
உற்றஊர் உகந்தஊர்
மற்றார்க்கும் மதிப்பளிக்கும்
மனங்கொண்டோர் வாழுமூர்*

*இத்தகு ஊர்தனிலே
இற்றைக்கு நூறாண்டு முன்னே
நற்றமிழ் காப்பதற்கு
நாட்டம் கொண்டார் நம்முன்னோர்கள்*

*ஆயிரத்து தொளாயிரத்தின் ஆரம்பக்காலகட்டமது
ஆங்கிலமேயன்று ஆளவேர் விட்டமொழி அது
ஓங்கியே வளர்ந்தது ஒடுக்குவதா நம் தமிழை-என
ஏங்கிய நெஞ்சங்கள் எடுத்தனர் ஒரு முடிவை*

*ஆயநம் கலைகள்தான் அழிந்தொழிந்து போகாமல்
அன்னைத்தமிழ் அருந்தமிழை அந்நியமொழி அடக்காமல்
முன்னோக்கி வளர்ப்போமென
முன்வந்தார் முன்னோர்கள்*

*சுரணை கொண்டோரெல்லாம் சுதேசிகளாய் எழுந்தனர்
உரிமை கொண்டோரெல்லாம் ஊராகவே திரண்டனர்
சபையொன்றமைக்கவே சங்கொலியெழுப்பியே
அவையொன்றைக்கூட்டினர் அன்றைய அரியாலையூரினர்
அன்றே முளைத்தது அரியாலை சுதேசியம்*

அந்நியர் ஆட்சிதனில் நம்
அன்னைமொழி அழிவதா-என
எண்ணிய எம்பாட்டனர்
எடுத்தனரோர் விழாவன்று

செழுமையான நம் கலையெலாம்
முழுமையாக அழிவிடா முயற்சித்து காற்போமென
முடிவெடுத்த முன்னோர்கள்
நிலையெடுத்தாரன்று நிற்கின்றோம் நூறுகண்டு

தைமாசிபங்குனி கடந்து சித்திரை வருடத்தில்
வைத்தார்கள் விழாவொன்றை
கலைகதம்ப நிகழ்வுகள் நிலையங்களில் முகிழ்த்தன
இயலிசை நாடகங்கள்- அவர்கள்
இயற்றியே மகிழ்ந்தார்கள்


பகலெல்லாம் பல்விளை யாட்டு
கரபந்தாடவே கன குழுக்கள் சேரும்
வலைபந்தாட வருவரே மகளிரணி
உதைபந்தாடிட ஊர்கூடுமே பார்த்திட
எறிபந்தாடிட எழுந்திடுவார் இளைஞரெல்லாம்

தூர ஓட்டங்களும் துவிச்சக்கர போட்டிகளும்
ஊரை ஒட்டிய தெருக்களை நிறைக்கும்
கவிபுனைதல் கட்டுரையென பலர்
கவனங்களோ போட்டிகளில்-கலை
நிலையங்கள் திரைநீங்கி நிறைந்துவிடும் நடனங்களால்

பேச்சுக்களால் மேடையெங்கும் வீச்செடுக்கும் எங்கள்தமிழ்
பாட்டுகளால் பலதெருவும் பரவிவிடும் சங்கத்தமிழ்
புராணத்து பாத்திரங்கள் புதியபல பொலிவுகொண்டு
நாடக மேடையேறி நமைச்சிலிர்க்க வைத்துவிடும்

இப்படியாய் வளர்ந்தது எமது சுதேசியம்-அதை
அப்படியே கொடுப்போம் அடுத்த சந்ததிக்கு
ஆண்டு நூறு காணும் அரியாலை சுதேசியம்
நீண்டு நிலைத்து வாழ்க நீண்டு நிலைத்து வாழ்க

# அரியாலை சுதேசியம் வாழியவே!...



அரியாலையூர் யசிதீபன்

அரியாலையின் பெருவிழா
அகிலம் போற்றும் ஒரு விழா
ஆண்டு நூறு கடந்திடும்
ஆனந்தத் திருவிழா...
ஆயகலைகள் அத்தனையும்
ஆற்றுப்படுத்தும் ஒரு விழா

எங்கள் உணர்வுடன் கலந்து
ஏற்றம் பெற வைத்திடும்
மண்ணின் பெருமை சொல்லிடும்
மகத்தான சுதேசிய திருநாள்.
வரலாற்றுச் சாதனை படைத்திட்ட
வையகம் போற்றும் பெருநாள்

சைவமும் தமிழும் நிலைபெறவென
சான்றோர் உருவாக்கிய திருநாள்
வானில் பறந்திடும் நந்திக் கொடியால்
வளம் பெற்றிடும் அரியாலை மண்ணும்
பல நூற்றாண்டு கண்டு நிலைத்திடும்
பாருள்ளவரை எங்களை வளர்த்திடும்

கலையோடு கலாசாரமும் வளர்த்திடும்
காலத்தின் தேவையுணர்ந்து செயற்படும்
விளையாட்டு வீரர்களையும் உருவாக்கிடும்
விந்தைமிகு உலகினை வியப்பாக்கிடும்
எங்கள் சுதேசிய திருநாள்
என்றென்றும் வாழிய வாழியவே..

அரியாலையின் புகழோங்க உதித்திட்ட
அழியாத் திருநாளாம் சுதேசியத் திருநாள்
மங்காப் புகழோடு என்றென்றும்
மறவர் வீரம் வளர்ந்திட வாழியவே
இறைவன் அருளுடன் நித்தம்
இனிதாய் வாழிய வாழியவே...

# தேசவழமைச் சட்டம்



ரிஷிபா இராசா LL.B (Hons)
சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசும்
இலந்தைக்குளம் வீதி, அரியாலை,
யாழ்ப்பாணம்.

## அறிமுகம்

இலங்கை பல்வகைப்பட்ட சட்டங்களால் ஆளப்படும் ஒரு நாடாகும். குடியியல் (Civil) குற்றவியல்(Criminal) சார்ந்து இலங்கையர் அனைவருக்கும் பொதுவான பல சட்டங்கள் காணப்படுகின்ற போதிலும், ஆள்சார், நிலம்சார், வழக்காறுசார் சட்டங்கள் சில குறிப்பிடப்பட்ட ஒரு தொகுதி ஆட்களுக்கு அல்லது பிரதேசத்திற்கு மட்டுமே ஏற்புடையனவாகக் காணப்படுகின்றன. அந்த வகையில் உரோமடச்சுச் சட்டம், ஆங்கிலச் சட்டம் போன்ற பொதுச்சட்டங்களும் கண்டியச் சட்டம், முஸ்லிம் சட்டம், தேசவழமைச் சட்டம் போன்ற தனிநபர் சார், நிலம் சார் சட்டங்களும் இலங்கையில் பிரயோகத்தில் உள்ளன.

அந்த வகையில் வட மாகாணத்தைச் சேர்ந்தவர் என்று சொன்னாலும் சரி, வட மாகாணத்தில் இருக்கின்ற ஆதனம் என்று சொன்னாலும் சரி அது தேசவழமைச் சட்டத்தாலே ஆளப்படும் என்பது பொதுவாக நாம் அனைவரும் அறிந்த ஒரு விடயம்.

## தேச வழமைச் சட்டம் என்பது என்ன?

தேசவழமை என்பது ஒரு தேசம் சார் அல்லது பிரதேசம் சார் வழக்காறுகள் என பொருள்படும் (தேசம் + வழமை). இது இந்திய மலபார் வழிசார் திராவிடர்களின் வழக்காறுகள் மற்றும் பழக்க வழக்கங்களை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட சட்டம் ஆகும்.

பண்டைய காலத்தில் இந்தியாவிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வந்து குடிபுகுந்து யாழ்ப்பாணத்தை காலணித்துவப்படுத்திய மலபார் வம்சாவழியினரின் வழக்காறுகளே இதுவாகும். குறித்த மலபார்களது வழக்காறுகள் “மர்மக்கட்டாயம்” (Marumakattayam) எனும் சட்டத்திலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டவையாகும்.

இவ்வாறாக மலபார் வம்சாவழியினரால் யாழ்ப்பாணத்தில் நிலைநாட்டப்பட்ட தேசவழமைச் சட்டமானது டச்சுக் காலப்பகுதியில் 1706ம் ஆண்டு காலப்பகுதியில் ஆளுநர் சைமன்ஸ் என்பவரது கட்டளைப்படி கிளாஸ் ஐசாக் (Claas Isaacz) என்பவரால் தொகுக்கப்பட்டது. அது பின்னர் ஜான் பிறஸ் (Jan Pirus) என்பவரால் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டது. இவ்வாறாக தொகுக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வந்த தேசவழமைச் சட்டமானது 1806ம் ஆண்டு காலப் பகுதியிலிருந்து முழுமையாகப் பிரயோகப் படுத்தப்பட்டது.

## தேசவழமையின் ஏற்புடமை

தேசவழமைச் சட்டமானது, ஆள்சார் மற்றும் இடம்சார் சட்ட மாகும்.

அந்தவகையில் தேசவழமைச் சட்டமானது ஆள்சார் சட்டமாக யாழ்ப்பாண மாகாணத்தைச் சேர்ந்த (தற்காலம் வடமாகாணம்) மலபார் அல்லது நிரந்தரமாக வசித்துவரும் வழியுரிமைக் காரர்களுக்கு ஏற்புடையதாகும்.

அவ்வாறாக தேசவழமைச் சட்டத் தால் ஆளப்படும் ஆளொருவர் இலங்கை யினுள் செல்லுமிடமெல்லாம் தேச வழமைச் சட்டத்தினாலேயே ஆளப் படுவார். சிலசமயங்களில் இலங்கைக்கு வெளியேயும்கூட தேசவழமைச்சட்டத்தின் ஏற்புடமையை எண்பிக்க முடியும்.

மேலும் **1911** ஆம் ஆண்டின் **1**ஆம் இலக்க யாழ்ப்பாணத் திருமண உரிமை கள் மற்றும் வழியுரிமைகள் கட்டளைச் சட்டமானது **1947**ஆம் ஆண்டின் **57**ஆம் இலக்க கட்டளைச் சட்டத்தினால் திருத்தியமைக்கப் பட்டுள்ளமைக்கு அமைவாக (Jaffna Matrimonial Rights and Inheritance Ordinance No. 1 of 1911 amended by No.57 of 1947) அதனது **3**ம் பிரிவானது திருமணம் மூலமாக பெண்களுக்கு தேசவழமையின் ஏற்புடமை பற்றி சொல்கின்றது. அதாவது தேச வழமையினால் ஆளப்படும் பெண் ஒருவர் வேறு சட்டத்தினால் ஆளப்படும் ஆண் ஒருவரைத் திருமணம் செய்வா ராயின் திருமணம் நிலைத்திருக்கும் காலப்பகுதியில் அவர் தேச வழமை யினால் ஆளப்படமாட்டார் எனவும், மாறாக தேச வழமையினால் ஆளப்படும் ஆண் ஒருவரைத் திருமணம் செய்யும் தேச வழமையினால் ஆளப்படாத பெண்ணும், திருமணம் நிலைத்திருக்கும் காலப் பகுதியில் தேசவழமையினால் ஆளப் படுவார் என்றும் கூறுகின்றது.

தேசவழமைச் சட்டமானது இடம்சார் சட்டமாக யாழ்ப்பாண மாகாணத்தில் அமைந்துள்ள (தற்காலம் வடமாகாணம்) சகல காணிகளுக்கும் ஏற்புடையதாகும். தேச வழமையினால் ஆளப்படாத நபர் ஒருவரினால் தேசவழமைக்குட்பட்ட ஆதனம் ஒன்று கொள்வனவு செய்யப் படுமாயின் அக்காணி தொடர்பில் தேசவழமைச் சட்டம் ஏற்புடையதாகின்ற அதேவேளை ஆதனத்தின் வழியுரிமை யானது அவரது ஆள்சார் சட்டம் மூலமே தீர்மானிக்கப் படும்.

உதாரணமாக முஸ்லிம் அல்லது கண்டிய சிங்களவர் ஒருவர் யாழ்ப் பாணத்தில் காணி வாங்குவாராயின் ஆதனம் தொடர்பிலான முன்வாக்குரிமை போன்ற விடயங்கள் தேசவழமையினால் ஆளப்பட்டாலும், அவர் சொத்தறுதி யற்று இறப்பாராயின் முஸ்லிம் சட்ட அல்லது கண்டிய சட்ட ஏற்பாடுகளின் படியே பாகப்பிரிவினை இடம்பெறும். அதேவேளை தேசவழமையினால் ஆளப் படும் ஆளொருவருக்கு இலங்கையின் எப்பாகத்திலும் காணப்படும் சொத்துக் கள் தேசவழமையினால் ஆளப்படும் என திருமண உரிமைகள் மற்றும் வழியுரிமை கள் சட்டத்தின் **2**ம் பிரிவு கூறுகின்றது.

## திருமணம்

தேசவழமைச் சட்டத்தினால் ஆளப்படுபவர்களுக்கு திருமணம் தொடர்பில் ஏற்புடையதாக **1911**ம் ஆண்டின் **1**ம் இலக்க யாழ்ப்பாணத் திருமண உரிமைகள் மற்றும் வழியுரிமைக் கட்டளைச் சட்டம் காணப்படுகின்றது. (Jaffna Matrimonial and Inheritance Ordinance)

## தேசவழமைச் சட்டத்தின் கீழாக வலிதான திருமணத்திற்கான தேவைப்பாடுகள்

1. திறத்தவர்களின் சம்மதம்.
2. தடுக்கப்பட்ட உறவுமுறைகளில் திறத்தவர்கள் இல்லாதிருத்தல். இரத்த

உறவு முறைகளிலான திருமணங்கள் தடைசெய்யப்பட்டுள்ளன. அதாவது முற்சந்ததியினர் மற்றும் பிற்சந்ததியினர் இடையிலான திருமணம், இரண்டு ஆண் சகோதரர்கள் அல்லது பெண் சகோதரி களின் பிள்ளைகளுக்கிடையிலான திருமணம் மற்றும் பக்கவழி உறவுகளுக்கு இடையிலான திருமணம் இவ்வாறான உறவு முறைகளில் திருமணம் நடைபெறுமாயின் அத்திருமணம் வெற்றும் வெறிதுமாக்கப்படுவதுடன்தண்டனைச் சட்டக்கோவையின் (Penal Code) பிரிவு 364(a) இன் கீழ் 5 தொடக்கம் 20 ஆண்டுகளுக்கு தண்டிக்கப்படக் கூடிய தவறு என ஏற்பாடு செய்கின்றது.

3. திறத்தவர்கள் ஏற்கனவே திருமணமாகாதிருத்தல்.
4. அவசியமான சடங்குகள் நிறைவேற்றப்பட்டிருத்தல்.

### தேசவழமையின் கீழான ஆதனம்

பொதுவாக தேசவழமைச் சட்டத்தின் ஆதனங்களை மூன்றாக வகைப்படுத்தி நோக்க முடியும்.

### 1. முதுசம் (Mudusam)

தேசவழமைக் கோவையின் ஏற்பாடுகளின்படி திருமணத்தின்போது ஆண் ஒருவரினால் கொண்டு வரப்படும் ஆதனம் முதுசம் என குறித்துரைக்கப் பட்ட போதிலும் யாழ்ப்பாண திருமண உரிமைகள் மற்றும் வழியுரிமைகள் கட்டளைச் சட்டத்தின் 15ம் பிரிவின் படி ஆண் அல்லது பெண்ணுடைய பெற்றோர் அல்லது எவரேனும் முன்னோரின் இறப்பின் விளைவாக வம்சாவழியாக வந்தடைகின்ற ஆதனம் முதுசம் என குறித்துரைக்கப்படுகின்றது.

தேசவழமையின் கீழ் சீதனமாக அல்லது ஏதேனும் வகையில் திருமணத்தின் நிமிர்த்தமாகவோ, அல்லது வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதற்காக சொத்துக்களைப் பெற்றுக் கொண்ட பிள்ளைகள் பெற்றோரின் எஞ்சிய ஆதனத்தில் உரிமைகோர முடியாது. ஏனைய ஆண் மற்றும் பெண் பிள்ளைகள் மாத்திரமே இறந்த பெற்றோரின் எஞ்சிய ஆதனத்திற்கு சமனான உரித்துடையவர்கள். இருப்பினும் யாழ்ப்பாண திருமண மற்றும் வழியுரிமைக் கட்டளைச் சட்டத்தின் 33ம் பிரிவின் படி இறந்த பெற்றோரின் ஏனைய சொத்துக்களிலிருந்து பங்கினைப் பெற்றுக்கொள்ள விரும்பும் ஏற்கனவே சொத்துக்களைப் பெற்றுக்கொண்ட பிள்ளைகள் தாம் ஏற்கனவே பெற்றுக் கொண்ட சொத்துக்களை மீளவும் கொண்டுவந்து பெற்றோரின் ஏனைய தளங்களுடன் ஒன்று சேர்த்து சமமாக பிரித்துப் பெற்றுக்கொள்ள முடியும். இவ்வாறாக பெற்றோரின் முதுசத்திலிருந்து சொத்துக்களைப் பெற்றுக் கொண்ட பிள்ளைகள் சந்ததியற்று இறக்க நேரிடின் அவர்களது சொத்துக்கள் எவ்விதம் எங்கிருந்து பெற்றுக்கொள்ளப் பட்டதோ அவ்விதம் அவர்களிடமே சென்றடையும்.

யாழ்ப்பாண திருமண உரிமைகள் மற்றும் வழியுரிமைக் கட்டளைச் சட்டத்தின் 6ம் பிரிவின் கீழ் மனைவி தனது திருமணத்திற்கு முன்னதாகவோ, திருமணத்தின் போதோ, திருமணத்தின் பின்னராகவோ பெற்றுக்கொள்ளும் நன்கொடை அல்லது வழியுரிமை ஆதனமானது அவளின் தனிப்பட்ட ஆதனமாக கருதப்படும். அதில் கணவன் பங்கு கோர முடியாது. இருப்பினும் அவற்றினை கைமாற்றம் செய்வதாயின் கணவனின் அனுமதியுடன் தான் செய்ய

முடியும். அவ்வாறாக கணவனின் சம்மதம் வேண்டுமென்றே மறுக்கப்படுமாயின் மாவட்ட நீதிமன்றின் அனுமதியைப் பெற்று கைமாற்றிக் கொள்ள முடியும். மாறாக பிரிவு 7 இன் படியாக கணவன் பெற்றுக்கொள்ளும் நன்கொடை அல்லது வழியுரிமை ஆதனங்களினை அவர் தனியாகவே கையாளவோ கைமாற்றவோ முடியும்.

## 2. சீதனம் (Dowry)

திருமணத்தின்போது அல்லது திருமணத்தை நோக்கமாகக் கொண்டு வழங்கப்படும் அசையும், அசையா ஆதனங்கள் அனைத்தும் சீதனம் எனக் கொள்ளப்படுகின்றது. தேசவழமையின் நியதிகளின் படி பெண் பிள்ளை திருமணம் செய்கின்றபோது சீதனம் வழங்கப் படுவதற்கான கடப்பாடு பெற்றோருக்கு உண்டு என ஏற்பாடு செய்கின்றது.

திருமணத்தை காரணியாகக் கொண்டு நன்கொடையளிக்கப்பட்டு, பின்னர் திருமணம் நிறைவேற்றப்படின் அந்நன்கொடையானது அத்திருமணத்திற் காக வழங்கப்பட்டதாக கருதப்பட முடியும்.

சீதனமானது திருமணத்தின் போதோ, திருமணம் இடம் பெறுவதற்கு நீண்ட காலத்திற்கு முன்னரோ, திருமணம் இடம்பெற்று நீண்ட காலத்தின் பின்னரோ வழங்கப்பட முடியும். சுருக்கமாக நோக்கின் பெண் ஒருவர் திருமணத்திற்கு தகுதியான பின்னர் (பருவமடைந்த பின்னர்) எவ்வேளை யிலும் சீதனம் வழங்கப்பட முடியும். அவ்வாறாக திருமணத்திற்கு முன்னர் சீதனம் வழங்கப்பட்டு அவ்வாறான திருமணம் ஒன்று இடம்பெறவில்லை யாயின் அச்சீதனமானது வெற்றானதாக (செல்லுபடியற்றதாக) கருதப்பட வேண்டும் என தீர்க்கப்பட்ட வழக்குகளில் கூறப்பட்டுள்ளது. பெண் பிள்ளைக்கு கொடுக்கப்படும் ஆதன மானது சீதனமாக கருதப்படுதவற்கு குறித்த உறுதியில் “திருமணத்தின் பிரதிபலனாக” போன்ற வார்த்தைப் பிரயோகம் காணப்படின் மாத்திரமே அது சீதனமாக கருதப்படும்.

பொதுவாக பெற்றோர் தம்மிட முள்ள எவ்வகையான ஆதனத்தினையும் சீதனமாக வழங்க முடியும். அதாவது மனைவி இறந்ததன் பின்னர் கூட மனைவியின் சீதன ஆதனத்தினை கணவன் பெண் பிள்ளைக்கு சீதனமாக வழங்க முடியும் என தீர்க்கப்பட்ட வழக்குகளில் கூறப்பட்டுள்ளது.

சீதனம் பெற்றுக்கொண்ட பெண் பிள்ளை ஒருவர் சந்ததியற்று இறக்க நேரிடின் அவரது கணவர் அதில் ஆயுள் நலவுரித்தை மட்டுமே கொண்டிருக்க முடியும். அதன் பின்னர் அவ்வாதனமா னது எவ்வழியில் பெற்றுக்கொள்ளப் பட்டதோ அவ்வழியிலேயே சென்றடையும்.

## 3. தேடிய தேட்ட ஆதனம் (Acquired Property)

திருமணம் நிலைத்திருக்கும் காலப்பகுதியில் கணவன் அல்லது மனைவியால் உழைத்து சேர்க்கப்படும் சொத்துக்கள் தேடிய தேட்டம் எனப்படும். தேடிய தேட்டம் தொடர் பான பாகப்பிரிவினைகள் பல்வேறு காலப்பகுதிகளில் மாறுபட்ட வகையில் அமைந்து காணப்பட்டிருந்த போதிலும் தற்போது 1947ம் ஆண்டின் 58ம் இலக்க யாழ்ப்பாண திருமண உரிமைகள் மற்றும் வழியுரிமைகள் திருத்த கட்டளைச் சட்டமே நடைமுறையில் உள்ளது. இச்சட்டத்தின் 19ம் பிரிவானது தேடிய தேட்டத்தினை பின்வருமாறு வரையறை செய்கின்றது. அதாவது,


(அ) திருமணம் நிலைத்திருக்கும் காலப்பகுதியில் கொள்வனவு செய்யப்பட்ட ஆதனம். (இது ஏற்கனவே அவர்களிடமுள்ள தனிப்பட்ட சொத்துக்களை விற்பதன் மூலமாக வந்த பணத்திலிருந்து கொள்வனவு செய்வதனை உள்ளடக்காது)


(ஆ) தனிப்பட்ட ஆதனத்திலிருந்து திருமணம் நிலைத்திருக்கும் காலப்பகுதியில் பெற்றுக் கொள்ளப் பட்ட வருவாய்கள்.

இவை தவிர்ந்த வேறு எவ்வகை யான சொத்துக்களும் தேடிய தேட்டமாக கொள்ளப்பட முடியாது. உதாரணமாக வாழ்க்கைத்துணை ஒருவரது சீதன ஆதனமோ முதுசமோ விற்கப்பட்டு அப்பணத்தினைக் கொண்டு புதிய ஆதனம் கொள்வனவு செய்யப் படுமாயின் அவ்வாதனம் முறையே சீதன ஆதன மாகவோ முதுசமாகவோ மட்டுமே கருதப்படும். இவை தேடிய தேட்டமாக கருதப்பட முடியாது.

தேடிய தேட்ட ஆதனத்தில் கணவனும் மனைவியும் சம உரிமை உடையவர்கள். ஏதேனும் சந்தர்ப்பத்தில் விவாகரத்துப் பெற்றுக்கொள்ளும் நிலை ஏற்படின் தேடிய தேட்ட சொத்துக்கள் சமமாக பிரிவடையும். மாறாக வாழ்க் கைத்துணை ஒருவர் சொத்தறுதியோ இறுதிவிருப்பாவணமோ நிறைவேற்றா மல் இறக்குமிடத்து உயிருடன் இருக்கும் வாழ்க்கைத்துணை இறந்த வாழ்க்கைத் துணையின் தேடிய தேட்டப் பங்கில் அரைவாசிக்கு உரித்துடையவர். சுருக்க மாகக் கூறின் உயிருடன் இருக்கும் வாழ்க்ககைத் துணை தேடிய தேட்டத்தில் ¾ பங்கிற்கு உரித்துடையவர். மிகுதி ¼ பங்கும் பிள்ளைகள் இருப்பின் பிள்ளைகளைச் சென்றடையும். அல்லாத விடத்து இறந்த வாழ்க்கைத்துணையின் தாய், தந்தை, சகோதரர்களைச் சென்றடையும். குறித்த மிகுதி ¼ பாகத்திற்கு உயிருடன் இருக்கும் வாழ்க்கைத்துணை எவ்வகையிலும் உரித்துடையவரல்ல.

## தேடிய தேட்டம் ஒரு பார்வை



## தேச வழமையின் கீழான முன்வாங்குரிமைச் சட்டம் (Pre- Emption)

*1947ம் ஆண்டின் 59ம் இலக்க தேசவழமை முன்வாங்குரிமை கட்டளைச் சட்டமானது தேச வழமையினால் ஆளப்படும் ஆதனங்கள் தொடர்பிலான முன்வாங்குரிமை தொடர்பில் ஏற்பாடு களை கொண்டுள்ளது. அந்த வகையில் பிரிவு 2 இற்கமைவாக,*

*(அ) விற்கப்பட தீர்மானிக்கப்பட்டுள்ள ஆதனத்தின் கூட்டுச் சொந்தக் காரர்கள் / சொரியல் பங்கு தாரர்கள்* (Co - owners or Undivided Share Holders)

(ஆ) *விற்கப்படவிருக்கும் ஆதனத்தின் வழியுரிமைக்காரர்கள் (3 சந்ததி வரை)*

*ஆகியோர் மட்டுமே முன்வாங் குரிமை கொண்டவர்களாக சட்டம் வரையறை செய்கின்றது. அவ்வாறில்லாத வேறெந்த சந்தர்ப்பதிலும் முன்வாங் குரிமையினை செயற்படுத்த முடியாது. ஆகவே தனியுடமையாளராக உள்ள ஆளொருவர் ஆதனத்தினை விற்க எண்ணுகின்ற பொழுது அயலிலுள்ள காணிச் சொந்தக்காரர்கள் முன்வாங் குரிமையினை செயற்படுத்த முடியாது.*

*அவ்வாறு முன்வாங்குரிமை இல்லாத 3ம் நபர் ஒருவருக்கே தனது ஆதனத்தினை விற்பனை செய்ய எண்ணும் கூட்டு ஆதனச்சொந்தக்காரர் பிரசித்த நொத்தாரிஸ் ஒருவர் முன்னிலையில் மூன்று பிரதிகளில் கையெழுத்திட்டு அறிவித்தல் ஒன்றினை நிறைவேற்ற வேண்டும். குறித்த அறிவித்தலில் கொள்வனவாளரால் வாங்கத் தயாராக வுள்ள விலை குறிப்பிடப்பட வேண்டும். பின்னர் குறித்த அறிவித்தலின் பிரதி யானது ஆதனம் அமைந்துள்ள உள்ளூராட்சி அதிகாரசபையின் முதல்வர் அல்லது தவிசாளருக்கு அனுப்பப்பட வேண்டும். அவர் அதனை விளம்பரப் பலகையில் காட்சிப்படுத்த வேண்டும்.*

*அவ்வாறான காட்சிப்படுத்தல் இடம்பெற்று 3 வார காலத்திற்குள் முன்வாங்குரிமையுள்ளவர் குறித்த விற்பனையாளரிடம் குறித்த தொகை யினை செலுத்தி ஆதனத்தினை கொள்வனவு செய்யவோ, உடன்படிக்கையினை நிறைவேற்றவோ முடியும்.*

*அவ்வாறு 3 வார காலத்திற்குள் குறித்த விற்பனையாளர் குறித்த ஆதனத்தை முன்வாங்குரிமையல்லாத கொள்வனவாளருக்கு விற்பனை செய்யுமிடத்து குறித்த விற்பனையானது வெற்றும் வெறிதுமாகி விடும். (செல்லு படியற்றதாகி விடும்) அவ்வாறாக கூட்டுச்சொந்தக்காரர் வாங்கத் தயாராக விருந்தும் விற்பனையாளர் விற்க மறுத்திருந்தால், அறிவித்தலில் இருந்த தொகையை நீதிமன்றில் வைப்பிலிட்டு விண்ணப்பிக்க முடியும். மேலும் விண்ணப்பதாரரால் குறித்த விலை யானது கற்பனை விலை என சத்தியக்கடதாசி மூலமாக எண்பிக்கப்படு மிடத்து நீதிமன்றம் பூர்வாங்க விசாரணையை நடாத்தி உண்மையான சந்தைப்பெறுமதியை கண்டறிய முடியும்.*

*ஆகவே கூட்டுச்சொந்தக்காரர் ஒருவர் தனது ஆதனத்தினை விற்பனை செய்யுமிடத்து முன்வாங்குரிமை கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக் கமைவாக விற்பனை செய்ய வேண்டியது அவசியமாகும். அவ்வாறு மேற்கொள்ளப் படாத விற்பனைகள் வெற்றும் வெறிது மாகிவிடும்.*

## தேச வழமையின் கீழ் மரங்களும் பயன்களும்

*காணிச் சொந்தக்காரர் ஒருவரி னால் பயன்தரு மரம் ஒன்று வளர்க்*

கப்படும் போது குறித்த மரத்தின் பாகம் அயல் காணிக்குள் சென்றாலும் குறித்த மரத்திலிருக்ககூடிய பழங்கள் போன்ற பயன்களை காணிச்சொந்தக்காரரே அனுபவிக்க முடியும்.

மாறாக தானாக வளர்கின்ற புளி, வேம்பு, இலுப்பை போன்ற மரங்களின் கிளைகள் அயற்காணிக்குள் செல்லுமிடத்து காணிச்சொந்தக்காரரின் அனுமதியின்றி அவற்றை வெட்டவும், விற்கவும் அவற்றின் மூலம் வருமானம் ஈட்டிக்கொள்ளவும் அயல்வீட்டுக்காரர் உரித்துடையவர். காணிச்சொந்தக்காரர் குறித்த மரத்தினை வெட்டுவதனை அயல் வீட்டுக்காரர் தடுக்க முடியாதிருப்பினும் அயல் வீட்டுக்காணிக்குள் இருக்கும் மரக்கிளைகளை காணிச்சொந்தக்காரர் அயல் வீட்டாருக்கே கொடுக்க வேண்டும்.

## முடிவுரை

மேலே நோக்கப்பட்டுள்ளவாறாக தேசவழமைச் சட்டமானது ஒரு ஆள்சார் மற்றும் நிலம்சார் சட்டமாக பல்வேறு தனித்துவமான இயல்புகளை கொண்டு விளங்குகின்றது. இவ்வாறாக ஆதனங்கள் மற்றும் திருமணம் தொடர்பில் வட மாகாணத்திலும் சேர்ந்த நபர்களிற்கு தேசவழமைச்சட்டம் ஏற்புடையதாக இருப்பினும் இவை தவிர்ந்த ஏனைய குடியியல் மற்றும் குற்றவியல் விடயங்கள் அனைத்தும் இலங்கையர் அனைவருக்கும் பொதுவான சட்டங்களாலேயே ஆளப்படும். இன்றைய காலகட்டத்தில் நாம் கூர்ந்து நோக்குவோமாக இருந்தால் தேசவழமைச் சட்டத்தின் முழுமையான பிரயோகத்தினை யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் மட்டுமே காணக்கூடியதாக உள்ளது. வடமாகாணத்திற்கு ஏற்புடையதான தேச வழமைச் சட்டத்தின் வழக்காற்றுப் பிரயோகமானது வடமாகாணத்தில் உள்ள ஏனைய மாவட்டங்களில் அருகிவருவதனை அவதானிக்கக் கூடியதாக வுள்ளது.



# கரபந்தாட்டமும் அரியாலையூரும்

திரு.கார்த்திகேசு குணரத்தினம் (Sydney,Australia)
ஓய்வுபெற்ற பிரதிப்பணிப்பாளர், விவசாய ஆலோசகர்,
விவசாய காணி அமைச்சு,
வடக்கு, கிழக்கு
முன்னால் தேசிய ஆலோசகர்,
UN-FAO (வடக்கு-கிழக்கு).



*தமிழ் புது வருடதினத்தன்று வருடா வருடம் அரியாலை ஊர் மக்களால் மிகவும் சிரத்தையுடன் கொண்டாடப்பட்டுவரும் சுதேசிய திரு நாட் கொண்டாட்டமானது நூற்றாண்டை எட்டியுள்ளதை எண்ணி பெரு மகிழ் வடைவதுடன் அரியாலை மக்களின் வீரம், கலை, கலாசாரம், பண்பாடு என்பவற்றை பிரதிபலிக்கும் இவ்விழா சிறப்புற முழுமனதுடன் வாழ்த்துகிறேன். இந் நூற்றாண்டு விழாவை இளைஞர் களும் அனுபவம் வாய்ந்த பெரியோர் பலரும் சேர்ந்து சிறப்பாகத் திட்டமிட்டு ஒழுங்கமைத்துச் செயற்படுத்துவதை அவுஸ்திரேலியாவில் இருந்து கொண்டு எம்மால் அறியக் கூடியதாக உள்ளது. எல்லாம் வல்ல அரியாலை நீர்நொச்சித் தாழ்வு ஸ்ரீ சித்தி விநாயகப்பெருமானின தும் அரியாலை ஸ்ரீஞான வைரவப் பெருமா னினதும் பாதார விந்தங்களைத் தொழுது எனது ஆக்கத்தைத் தொடர்கிறேன்.*

*எனது பதினாறாவது வயதில் (1949) யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரியில்* (St John's College) *காலஞ்சென்ற பஞ்சலிங்கம் மாஸ்ரர் தலைமையிலான கரபந்தாட்ட அணியில் (ஓவர் கேம்) நானும் ஒருவனாக இருந்து எனது கரப்பந்தாட்ட விளை யாட்டை ஆரம்பித்தேன். இந்த அணியானது யாழ்மாவட்ட அனைத்துப் பாடசாலை களுடனான போட்டிகளிலும் வெற்றி பெற்றுத் தேசிய மட்டத்திற்குத் தெரி வானது. தேசியமட்ட இறுதிப் போட்டி யானது (1949) கொழும்பில் நடை பெற்றது. இறுதிப்போட்டியில்* Kandana *(கந்தானை)* Demezond *கல்லூரியுடன் எமது பரியோவான் கல்லூரி* (St John's College) *அணி விளையாடி வெற்றிபெற்று அப்போதைய இலங்கைக்கான கடைசி பிரித்தானிய ஆளுநராக இருந்த கௌரவ* Lord Soulbury *அவர்களால் கௌரவிக்கப் பட்டு அவர் கையால் எமது அணி கேடயம் வாங்கியது இன்றும் எனது மனதில் பசுமரத்தாணி போல் பதிந்துள்ளது.*

*இச்சம்பவத்தைத் தொடர்ந்து எனக்கு கரப்பந்தாட்டத்தில் மிகுந்த ஆர்வம் ஏற்படத்தொடங்கியது. புது உத்வேகத்துடன் விளையாட ஆரம்பித் தேன். எமது ஊரில் கரப்பந்தாட்டத்தை வளர்க்க எண்ணி அப்போது கர பந்தாட்டத்தில் வீறாப்புடன் விளையாடிக் கொண்டிருந்த எனது வீட்டிற்கு அருகில் வசித்து வந்த அமரர் மு. சீவரத்தினம் அவர்களுடன் இணைந்து மைதானம் இல்லாத காரணத்தினால் பல்வேறு இடங்களில் மாறிமாறி விளையாடி வந்தோம். அமரர் க. சுப்பிரமணிய வாத்தியார் மற்றும் அமரர் ச.சதாசிவம் ஆசிரியர்(சாண்டோ மாஸ்ரர்) அவர்க ளின் கடும் உழைப்பால் அரியாலை ஸ்ரீஞான வைரவர் கோவில் வீதியில் தற்போது அருணோதயா சன சமூக நிலை யம் அமைந்துள்ள இடத்திற்கு முன்னால் நிரந்தர இடம் ஒதுக்கி தொடர்ச்சியாக விளையாட ஆரம்பித்தோம்.*

அக்காலகட்டத்தில் வல்வெட்டித் துறை, அல்வாய், உடுவில், நீர்வேலி, பாசையூர், நாவாந்துறை, குருநகர், திருநெல்வேலி, சாவகச்சேரி, ஆவரங் கால், மட்டுவில் ஆகிய இடங்களைச் சேர்ந்த அணிகள் கரப்பந்தாட்டத்தில் மிகவும் பிரபல்யம் அடைந்திருந்தன. அந்தக்காலத்தில் உடுவில் மணியம், அல்வாய் தியாகராஜா மாஸ்ரர், சிவப் பிரகாசம் போன்றோரும் வல்வெட்டித் துறையில் பெரியசட்டம்பி சின்னச் சட்டம்பி மற்றும் பத்மநாதன்(நாதன்) போன்றோரும் கரப்பந்தாட்டத்தில் சிறந்து விளங்கியிருந்தனர். இவர்கள் விளையாடும் நுணுக்கங்களைப் பார்பதற்கு நாங்கள் வல்வெட்டித்துறை, சாவகச்சேரி, உடுவில், மட்டுவில் எனச் செல்வதுண்டு. இவர்களைப் பார்த்து எமது விளையாட்டுத் திறனையும் வளர்த்துக் கொண்டோம்.

இவ்வாறன காலகட்டத்தில் இருபாலையைச் சேர்ந்த அழகரத்தினம் (கூட்டுறவு பரிசோதகர்) என்பவரால் யாழ்ப்பாணத்தில் Volley ball Association ஆரம்பிக்கப்பட்டது. அதில் நாங்கள் அரியாலை விளையாட்டுக்கழகம் (Ariyalai Sports Club) என்ற பெயரில் பதிவு செய்து அங்கத்தவராக இணைந் தோம். அந்த Volley ball Association ஆல் தற்போதுள்ள சுண்டிக்குளி Post Office க்கு முன்னால் மாவட்டச்செயலகத்தின் (கச்சேரியின்) மேற்கு வாசலில் ஒரு Volley ball Court அமைக்கப்பட்டிருந்தது. அதில் எமது விளையாட்டுக்கழகமும் போட்டிகளில் பங்குபற்றி வெற்றிகள் பல பெற்றது.

நானும் அமரர் மு. சீவரத்தினமும் மெல்லிதாகவும் உயரமாகவும் ஒரே தோற்றமுடையவர்களாக இருந்தோம். நாம் இருவரும் ஒற்றைக்கையால் எழும்பி அடிப்பதைப் பார்த்து எல்லோரும் பரவச மடையத் தொடங்கினர். சீவரத்தினம் குணரத்தினம் எனும் இரு அண்ணன் தம்பியரின் அடியின் புகழ் எல்லா இடமும் பரவத்தொடங்கியது. எமது கழகம் ஆடும் ஆட்டத்தைப் பார்ப்பதற்கு மக்கள் கூட்டம் கூடத்தொடங்கியது. எமது Ariyalai Sports Club இல் சாண்டோமாஸ்ரர், இரத்தினசிங்கம், ஞானப்பிரகாசம், கிருஸ்ணசாமி (கந்தவனம்), ஏகாம்பரம் ஆகியோரும் அங்கத்தவராக இருந்து விளையாடினர்.

இலங்கை கரப்பந்தாட்டச் சங்கம் கரப்பந்தாட்டத்தில் Set up விளை யாட்டை இலங்கையில் அறிமுகம் செய்து வைத்த காலகட்டத்தில் அமரர் க.சுப்பிரமணியவாத்தியார் மற்றும் அமரர் சதாசிவம் (சாண்டோமாஸ்ரர்), அமரர் E.K.குமரையா ஆகியோரின் அயராத முயற்சியாலும் ஊக்கப் படுத்தலாலும் நாம் மேலும் முன்னேறி எமது கழகமும் Set up விளையாட்டை ஆரம்பித்து யாழ்ப்பாணத்தில் உள்ள சகல அணிகளையும் வெற்றி கொண்டு சம்பியனாகியது. யாழ்ப்பாணத்தில் நடைபெறும் பல்வேறு களியாட்ட நிகழ்வு (Carnival Show) களுக்கு மக்களை வரவழைப்பதற்காக பல்வேறு அணிக ளுடன் எமது கழகத்தையும் Set up game போட்டிகளில்விளையாட அழைப்பார்கள்.

யாழ்ப்பாணத்துச் சம்பியனான எமது அணியானது யாழ்ப்பாணத்திற்கு சுற்றுலா மேற்கொண்டிருந்த அப்போதைய இலங்கைத் தேசிய மட்ட சம்பியனான கம்பகா(Gampaha) அணியுடன் சினேக பூர்வ ஆட்டம் ஒன்றை எமது அரியாலை ஸ்ரீஞானவைரவர் கோவில் வீதியில் ஏற்பாடு செய்திருந்தனர். அன்றைய ஆட்டத்தைப் பார்வையிடுவதற்கு யாழ்மாவட்டத்தின் பல்வேறு பாகங்களில் இருந்தும் ஏராளமான மக்கள் வந்த ிருந்தனர். எமது ஊர்மக்களின் உற்சாக மூட்டலாலும் தமிழ் மக்களின் ஏகோபித்த

ஆதரவாலும் எமது அணி கம்பகா தேசிய அணியை வெற்றி கொண்டது. இந்நிகழ்வை எமது மக்கள் என்றும் மறக்க மாட்டார்கள்.

நாங்கள் தூர இடங்களுக்கு போட்டிக்காகச் செல்லும் போது அமரர் கிருஸ்ணசாமி (கந்தவனம் விதானையார்) அவர்கள் தனது காரில் எம்மை அழைத்துச் செல்வார். அமரர் க.சுப்பிரமணிய வாத்தியாரும் அமரர் சதாசிவம் (சாண்டோமாஸ்ரர்) உள்ளிட்ட ஊர்மக்கள் பலரும் எம்மை உற்சாக மூட்டுவதற்காக சைக்கிளில் வருவது என்னால் இன்றும் நினைத்துப் பார்க்கையில் பூரிப்பாக உள்ளது.

எமது விளையாட்டின் திறமையை அவதானித்து என்னையும் அமரர் மு.சீவரத்தினம் அவர்களையும் இலங்கை கரப்பந்தாட்ட தேசிய அணியின் பயிற்சிக்காகத் தெரிவு செய்தார்கள். அமரர் மு.சீவரத்தினம் விளையாட்டு உத்தியோகஸ்த்தர் பயிற்சிக்காக (Diploma in Physical Education) தெரிவாகி இந்தியாவிற்குப் பயிற்சிக்காகச் சென்றார். நானும் விவசாய பயிற்சிக்காக (Diploma in Agriculture Peradeniya) Peradeniya செல்ல மெல்ல மெல்ல கரப்பந்தாட்ட Set up game அரியாலை மண்ணில் வீழ்ச்சியுறத் தொடங்கியது. எமது அரியாலை மண்ணில் மீண்டும் கரப்பந்தாட்டத்தில் பலமான அணியை உருவாக்கி அதனை முன்னிருந்த நிலைக்கு கொண்டு வர எல்லோரும் பாடுபட வேண்டும் என இந்நாளில் கேட்டுக் கொள்கிறேன். Ariyalai Sports Club ஆனது கரப்பந்தாட்டத்தில் மட்டுமன்றி உதைபந்தாட்டம், கிளித்தட்டு மற்றும் தடகளப்போட்டிகளிலும் தமது திறமைகளைக் காட்டி பல்வேறு தடவைகளில் சம்பியனாகியிருந்தது. எமது கழகம் பங்குபற்றும் போட்டிகளைப் பார்ப்பதற்கு மக்கள் கூட்டம் தானாகக்கூடிவிடும். அவ்வாறு எமது அரியாலையூர் மக்கள் விளையாட்டுத் துறையிலும் கலைபண்பாட்டு நிகழ்வுகளிலும் சிறப்பாக தமது திறமையை வெளிப்படுத்தியிருந்தனர். கரபந்தாட்டத்திலும் சரி உதைபந்தாட்டத்திலும் சரி எமது கழகம் ஒழுக்கத்தைக் கடைப் பிடித்தது. நடுவரின் தீர்ப்புக்கு மதிப்புக் கொடுத்து நல்ல ஒழுக்கக் கட்டுப் பாட்டுள்ள அணி என்ற பெயரையும் சம்பாதித்திருந்தது. நூற்றாண்டு விழா கண்டிருக்கும் சுதேசிய திருநாள் கொண் டாட்ட விழாவில் எமது முன்னோர்களின் விளையாட்டு ஆர்வத் தையும் ஊர்ப் பற்றையும் வெளிக்காட்டு வதற்காக எனது ஞாபகசக்திக்கு எட்டிய வரை இந்தப் பதிவைத் தந்துள்ளேன். அரியாலை மண்ணை முன்னைய பேரும் புகழும் உடைய நிலைக்குக் கொண்டு வருவதற்கு இப்பதிவானது உதவும் என நான் நம்புகிறேன். யாழ் மாவட்ட கரப்பந் தாட்டச் சங்க தலைவராகவும் மத்தியஸ்த ராகவும் கடமையாற்றி இத்துறையில் யாழ் மக்களை ஊக்கப் படுத்தியுள்ளேன்.

மேலும் **1995**ம் ஆண்டு **76**ஆவது சுதேசிய திருநாள் கொண்டாட்ட பகல் நிகழ்வுக்கு பிரதமவிருந்தினராகக் கலந்து சிறப்பித்தமை இப்போது நினைக்கும் போதும் பெருமையாக உள்ளது. சைவமும் தமிழும் தழைத்தோங்கும் யாழ்மாநகரை வரவேற்கும் அரியாலை மண்ணில் விளையாட்டு வீரர்களை ஊக்கப்படுத்தியும் கலை பண்பாட்டு விழுமியப்பண்புகளைத் தொடர்ந்து வளர்ப்பதற்கும் உதவும் இந்த சுதேசிய திருநாள் கொண்டாட்டமானது மேலும் முன்னேறி சிறப்பாக நடைபெற எல்லாம் வல்ல இறைவனை வணங்கி வாழ்த்துகின்றேன்.

# கந்தையா கடை பற்றிய நினைவுகள்



கிருஸ்ணபிள்ளை ரவீந்திரன்
நோர்வே

யாழ் அரியாலை என்னும் கிராமம் மற்றும் பட்டண குணாதிசயங்களை கொண்ட அரியாலை தபால்கட்டை சந்தியில் கந்தையா கடை என்றால் 2019 வரை அக்கடையை தெரியாதவர்கள் இருந்திருக்க முடியாது.

தபால் போடும் அழகிய சிகப்பு நிற உயர்ந்த, எமது உணர்வுகளையும் உணர்ச்சிகளையும் தாங்கி உரியவர்களிடம் உரிய நேரத்தில் சேர ஆங்கிலேயர் காலத்தில் கட்டப்பட்ட பெட்டி சந்தைக்கு அருகே இருந்ததால்தான் அரியாலையிலுள்ள மடத்தடிக் குறிச்சியில் இச் சந்தியின் பெயர் தபால்கட்டை சந்தி.

கந்தையா கடை ஒரு பலசரக்கு கடை. இந்தக் கடையை கூப்பன் கடை என்று அழைக்கப்பட்டதும் உண்டு. ஆரம்பத்தில் இக்கடைமட்டுமே கூப்பன் கடையாக இருந்ததிற்கு காரணம் வேறு பெரிய கடைகள் இருக்கவில்லை. காலப்போக்கில் சங்கக்கடை உருவாக்கப்பட்டது. அப்போதும் சங்ககடையை விட பெரிய கூப்பன் கடை கந்தையா கடைதான்.

கூப்பன் கடை என்றால் ஒன்றும் புதிதல்ல சாதாரணமான பலசரக்குக்கடை தான். இக்கடையில் பணத்திற்காக கூப்பன்களை கொடுத்து அரிசி, மா, சீனி, பருப்பு, எண்ணெய் என்று வாங்குவார்கள். கடை சல்லாப்பெட்டியில் சின்ன சின்ன மட்டை துண்டுகளாகவே இருக்கும் காசு இருக்காது. கூப்பன் என்பது வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு அவர்களின் அடிப்படை மனித உரிமைகளை காப்பாற்ற அரசால் வழங்கப்படும் உதவி மற்றும் சலுகைகள்.

கந்தையா கடை எப்போது தொடங்கப்பட்டது என்பதற்கு என்னிடம் சான்றில்லை. ஆனால் அது கந்தையா அவர் மகன் செல்வரத்தினம் (இரத்தினம்) அதன்பின் மகள் குடும்பம் குகன் என்று மூன்று தலைமுறைகளை சுமந்து வந்த கடை தான் கந்தையா கடை.

இக்கடையை சுற்றி இருந்த அனைவருக்கும் நம்பிக்கையைக் கொடுத்த கடை. காசு இல்லாவிட்டிலும் சாமான் வாங்கலாம் என்ற பாதுகாப்பை கொடுத்த கடை. வெற்றிலை வாங்குவற்கென்று ஒரு கூட்டம். இவ்வாறு மக்களுடன் இணைந்த கடை.

இன்று இக்கடையில்லை. இக் கடை தபால்கட்டை சந்தியில் இல்லை. கடையின் நினைவுகள் மட்டுமே எஞ்சியுள்ளன.

# The article is taken and translated from the Silver Jubilee book Leaders Born & Bred in Ariyalai

**-Late Mr. T. Sabaratnam**
(Lake House)
Translated by:
**Mrs. S. Anandakumarasamy**
(Lecturer in ELT., University of Jaffna)

Though there were many elites, Born & Bred in Ariyalai, who served benevolently to their country, Sri Lanka, in politics, education, Co-operative campaign, religious renaissance, printing and journalism, medicine and many other fields it is not possible to write the valuable services of all of them in a short article like this. Thus I mention only a few who brought fame to our village. This attempt should not lead to think that the services of others are valued less.

It is not wrong in saying that Mr. Visvanathar Kasippillai was the Prime Cause in making Ariyalai rich in Education and economy. He is the one who brought new glory and honour to our village.

Mr. Kasippillai who activated in deed of the Hindu Renaissance revolted by Arumuga Navalar by establishing Jaffna Hindu College in 1895 with Pasupathi Chettiyar and Appukkaththu Nagalingam was considered by all as the best influential in Jaffna peninsula.

Being born in 1847 and became a proctor in his twenty fifth year and started the carrier first in Mannar, Mr. Kasippillai came to serve in Ariyalai in 1874. He won Jaffna within six months by his excellent talent.

Even though there was no better or equal to him for forty years as Proctor of the Crown, District Judge, Magistrate and many other, Mr. Kasippillai served as the Manager of Jaffna Hindu College for 20 years (1895 – 1915) and its co-ordinating schools Vaddu Hindu College, Urumpirai Hindu College, Kokkuvil Hindu College and Chavakachcheri Hindu College when it completed its childhood and grew nutritiously as a strong educational institute. While considering building the Jaffna Hindu College as his prime most service Mr. Kasippillai went round not only Sri Lanka but also Malaya in search of money. Both Mr. Pasupathi Chettiyar and Appukkaththu Nagalingam, who worked together with him to establish Hindu College, highly respected Mr. Kasippillai for his untiring effort and honesty. At the very beginning, they bought the whole land for Hindu College in the name of Mr. Kasippillai. In addition they left him the responsibility of giving wages to the teachers and other things. Many teachers of the College of that time had told me that when there was no fixed salary for the teachers, Mr. Kasippillai had acted very honestly. They had also mentioned with thanks that he even offered money to the teachers when they needed from the personal account held at the home of Pasupathi Chettiyar in the name of Hindu College since the economical support of the government was not sufficient.

The President of Jaffna Society, Rev. Dr. Isaac Thambia, portrayed, "How could Mr. Kasippillai be the Uncrowned King of Jaffna for 30 to 40 years? The reasons were not only his excellent talent but also his service mind and honesty."

Having the public service as his responsibility, he went straight to reconciliate from family problem to party fights. There were no weddings or funerals without his presence. He would help the needy then. Many of those who are in the high posts have told stories of their parents who had received economic support from Mr. Kasippillai. Many a poor students had been taught with his personal money.

During the then period when there was less number of banks, those who sent money from Malaya would send it through the Chetties to Mr. Kasippillai. He collected it from them and handed over to the respective people. It is a valid witness for the faith they had in Mr. Kasippillai.

### School and Temple

Mr. Kasippillai, who spent most of his life for the Tamil community, especially to the Hindus, didn't forget his own village, Ariyalai. For the educational benefit of our village people, he founded Sri Parwathi Vidyalaya in 1913. In 1914 he reconstructed Sri Sidhi Vinayagar Temple and held a grand libation. The work he did with the sculptures and stones he brought from India is very precise and strong. There is no other temple except Kailayappillayar Temple with such best infrastructure in Jaffna Peninsula.

Mr Kasippillai who retired in 1914 and died in 1936 was sought after for many a profession. As the Officer A Naganathan indicated in his tribute at Mr. Kasippillai's funeral, 'with the wave of his tongue he shook the country' and didn't opt to take up any of these profession. As Sir Vaithilingam Duraisamy said, 'It was his words that were the rules in Jaffna Peninsula', he appointed his elder brother, Mr. Arumugam's sons Kathiravelu and Kanagaratnam in some of these posts.

As a very important person mentioned earlier, the main reason for 'Mr.Kasippillai's family to hold an important role next to Ramanathan's family' was not the individual talents of Kanagaratnam and Kathiravelu but the influence of Mr. Kasippillai.

### Kathiravelu

Mr. Kasippillai joined Mr. Kathiravelu who was born in 1861 and became a proctor in 1889 with him. He organized the Institute of Kasippillai and Kathiravelu Proctors with Kathiravelu.

When Mr. Kasippillai retired from the post of the Proctor of the Crown Mr. Kathiravelu was appointed for that post. He also served as the Magistrate like Mr. Kasippillai. He was appointed as the addl. Magistrate during First World War and continued his service in that post until his death.

Like Mr. Kasippillai, being the member of Saiva Paribalana Sabha, Mr. Kathiravelu became the President of the Bar Council with the influence of Kasippillai. When local councils were introduced in 1917 Mr. Kathiravelu was a member in that council. Being a member in District Regulatory Council and Provincial Regulatory Council, Mr. Kathiravelu was the pioneer to form 'Friends Society in need'. It took up the service to help the

poor when there was no government support system.

Even though Kathiravelu and Kanagaratnam were under the influential shelter of the Banyan Tree called Kasippillai, they were not just the areal roots of the branches. They brought fame to Kasippillai's family by stepping into different fields where Mr. Kasippillai didn't enter.

### In the Printing Media

Mr. Kathiravelu took the responsibility of the Editor of the paper 'Hindu sadhanam' which was published in English and Tamil by Saiva Paribalana Sabha to propagate their principles and philosophy. Mr. Kanagaratnam canvassed for Ponnampalam Ramanathan (he was not addressed Sir then) when he contested against Mr. H.M. Fernando, a Sinhalese contestant, for the Educated Sri Lankan Electorate in 1908 by purchasing the English Paper called Ceylon Patriot. The then English papers, Ceylon Independent and Morning Leader, canvassed for Mr. H.M. Fernando. Mr. Kanagaratnam not only replied the canvass of those two papers in his paper but also sent the copies of his paper to Sinhala people free of charge.

### Celebration of Sudhesiya Thirunaal

Like Kasippillai both Kanagaratnam and Kathiravelu were keen in the progress of our village. Mr. Kathiravelu showed immense interest in establishing a Library for our village youth to improve their knowledge by reading. Saraswathy Library was established by his effort. He also formed a Literary Association to improve the younger generation. Presided by him, youngsters gathered on Sundays and discussed about different matters. He was the pioneer for the Celebration of Sudhesiya Thirunaal. He presided for the celebration of Sudhesiya Thirunaal from 1919 till his death. Being the Justice of Peace, he was interested in the progress of the low caste people. He built a school for those low caste people and handed over it to the Educational Development Society (Vidhya Viruththy Sangam).

### Stanley College

Proctor Mr. Kanagaratnam, who was born in 1871 and educated in Calcutta, too was interested in the progress of our village. Feeling the necessity of English education in that period, he founded Stanley College (Kanagaratnam Maha Vidyalaya) in 1928 in his own land and opened it by the Governor and handed over it to the government. He is the one who governed Sri Sidhi Vinayagar Temple and Sri Parwathi Vidyalaya.

The main cause for Mr.Kanagaratnam to serve and influence in the national level was the great influence of Mr. Kasippillai. Mr. Kanagaratnam, who bought the news paper 'Ceylon Patriot' in 1908 to canvass for Ponnampalam Ramanathan, and sought a unique glory by conducting the paper, had contested against Sir Vaithilingam Duraiswamy in the electorate of Northern Province when Ceylon was divided into nine electorates. He lost by a very few votes. After the establishment of the new South Electorate of the Northern Province, he defeated Sir Ambalavanar Kanagasabai, who served as the Executive Committee Member of Southern Electorate and the appointed member for more than ten years, in the election in 1923.

Being the strong supporter of Sir Ponnampalam Ramanathan, Mr. Kanagaratnam participated in many well known debates in those days. He participated in the debate with Sir Ponampalam Ramanathan in the famous debate, whether the Ceylon University should be constructed in Colombo or Peradeniya, supporting Colombo. All the other Tamil Leaders supported Peradeniya. Mr. Kanagaratnam chaired the First All Ceylon Tamil Conference which was held in Tower Hall in Colombo in 1927 and was the First President of Jaffna Town Council when it was established in 1923.

### In the Co-operative Field

Even though the followers could not surpass the glory of these three leaders, they almost maintained such glory. Although the son of Kasippillai, Appukkaththu Arulampalam, was not much interested in politics, he perfectly continued the services of his predecessors and untiringly served to spread the Co-operative Campaign in Jaffna. In order to honour his services as the Secretary of the Co-operative Campaign and the Secretary of the Co-operative Bank, he was conferred the Justice of Peace.

Being educated in Hindu College and Royal College and passed well in the exams of Appukkaththu, Mr. Arulampalam had the self same passion of his father in the Hinduism. Having the honorary title of 'Saiva Palam', he served as the Secretary of the Hindu Society of the Jaffna Hindu College. There was hardly any Hindu Conferences without him. Being a very learned of Hindu Philosophy, Appukkaththu Arulampalam was a member of Temple Inquiry Commission, Local Council and then in Jaffna Town Council. He in collaboration with Mr. M.S. Ilayathamby established Y.M.H.I. However it was not much successful.

### In Medicine

Dr. Kandiah also showed much enthusiasm in local matters like Appukkaththu Arulampalam who perfectly administered Sri Sidhi Vinayagar Temple and Sri Parwathi Vidyalaya. He, being the President of Ariyalai Community Centre in the early days, formed Jaffna Health League and served as the Superintendent of the Hospitals in Jaffna Region. He was appreciated by Sir John Koththalavai as 'A speaker who would speak meaningfully and humorously after dinner parties'.

Mr. P. Kasippillai was the representative for a long period for Columbuthurai in the Jaffna Town Council and Urban Council and functioned as the Mayor of Jaffna. He was a Proctor and very influential, and well known for honesty like the Senior Kasippillai.

Mr. S. Sittampalam followed the political path of Mr. Kanagaratnam and became a Member of the First Cabinet of the First Ceylon Parliament. Mr. Sittampalam being one of the best students of Royal College received many prizes at school and won a scholarship for post graduation in Cambridge University. After passing in the Ceylon Civil Service, Mr. Sittampalam returned to Ceylon and held many a high posts. After retiring from the post of Mannar Govt. Agent, Mr. Sittampalam won in the Mannar electorate in the election in 1947 and functioned as the Minister of Posts from 1947 to 1952 and was the representative for Mannar until 1956.

It should also be mentioned the other three people who brought glory to our village by being involved in politics. They are the then Jaffna Mayor Mr. S. Ponnampalam, Mr. S. Kasippillai and Mr. S. C. Mahadeva.

The last Chair Person of Jaffna Urban Council and the second Mayor of Jaffna Municipal Council, Mr. Ponnampalam, was the representative of not only Ariyalai but also Nayanmarkaddu. He was praised by all as the best advocate and he was in the youth council of Ceylon Tamil Congress when he was young.

Mr. Ponnampalam, who is still influential in Jaffna politics, is praised by all as 'the establisher of Jaffna Mayors'.

Mr. S. C. Mahadeva, served as Jaffna Mayor, is a very influential in Tamil Federal Party. He who had served as the President of Ariyalai Community Centre for a long time chaired the Silver Jubilee of the celebration of the Ariyalai Sudhesiya Thirunal.

Our village has been very powerful in the politics of Jaffna. It is said to be very proud that three of the Jaffna Mayors were from our own village.

**(from the Golden Jubilee book of 1969)**

## The article is taken and translated from the Platinum Jubilee book.

**Mr. S. Pathmanathan**

As a translator I wish to confess here that this article is not complete. There comes many more day to day and the up-dating, that I covered, touched the development of the leaders the original writer identified. Thus I mention only a few who brought fame to our village. This attempt should not lead to think that the services of others are valued less.

### After 1979

The role played by the leaders of Ariyalai was of different aspects until 1979. In general, Most of the leaders' qualities were acquired by their ancestral wealth and education, prominence by English medium education and eminence earned by their legal career and such leadership was appropriate for the Sri Lankan national policy. However, with the new political trend of Tamil Eelam and separate nation of Tamils, the need for new leadership was felt. During this period, Rather than having individual potentiality, leaders who were able to exert themselves for the social welfare was required. There was less number of great leaders during this period since the people of Ariyalai were mostly leftists.

When political trend changed to armed conflict, which produced young leaders, many youngsters of Ariyalai took part in the movement as pioneers. Some of them left us as martyrs and others are in abroad. Even though the ethnic conflict lured many academics to leave their mother land still there are many more academics and administrators in our midst.

Professor T. Kandiah from Ariyalai was the Professor of Biology when University of Jaffna was established and served as the first Dean of Agriculture Faculty when it was formed.

Former Vice Chancellor, Dean of Agriculture Faculty and Rector of Vavuniya Campus Professor S Mohanadhas is not only a veteran academic but also a

philanthropist who work hard to uplift his village Ariyalai. He serves for the development of J/Canagaratnam Maha Vidhyalayam whose present high status is due to his untiring services. He also served soundly as the President of the Village Development Societies, Saraswathy Community Centre and Ariyalai United Club for several years.

At this juncture, it is important to mention the Ariyalayans who were in the administrative position of the government sector. Messrs T.Somasegaram, T.Ratnasunderam, V.Ragunathan, A.Jeyaratnam, S.Pathmanathan, Dr.M.Ganesharatnam are some of them. It is widely suitable to cite the social service rendered by Mr. T. Somasegaram, who served as the surveyor General in the Sri Lankan Survey Department. He also served as the member of Public Service Commission appointed by the President of Sri Lanka. The village is made proud by his achievements. Being a B Sc Degree Holder of Peradeniya University he completed his M Sc in an American University. He received the Presidential Award for his services in the Department of Survey. It is said to be proud that he was also elected as the President of the Society for Professionals of Sri Lanka. He was the Treasurer of the 34th celebration held in 1952 and the President of the 48th celebration held in 1967 of National Day Celebration. He as the President led admirably the Diamond Jubilee of the Nation Day Celebration held in 1979. Having significant interest in the development of Ariyalai, he improved the Saraswathi Community Centre being the President of the centre for several years.

The next to be mentioned here is Mr. T. Ratnasunderam, a B Sc (Hons) Degree holder from Peradeniya University. He started his career as the Income Tax Officer of the Income Tax Department and brought fame to his village Ariyalai by becoming the Commissioner General of the Income Tax Department. His interest in the growth of his own village is proved by carrying out the Presidency of the 46th National Day Celebration in 1966.

The very next to be referred here is Mr. S. Pathmanathan, a Economics (Spl) Degree holder. He honoured the Presidency of National Day Celebration Committee in its two distinct functions of Platinum and Centenary Jubilee celebrations. He joined the Sri Lankan Administrative Service in 1976 and served in many distinguished positions at different parts of Sri Lanka. Securing the a Special Degree in Regional Planning at Israel University, he brought honour to his village Ariyalai as being the Government Agent of Vavuniya District from 1989 to 1990 and offering his services devotedly to the war torn Jaffna and its people as the Director of Rehabilitation Programme of Jaffna District. He became the Govt. Agent of Jaffna District twice and his contribution during the mass exodus and the closure of trunk road was immeasurable. He not only functioned as the treasurer and the President of the National Day celebrations but also accomplishes many responsible positions in many social and welfare organizations.

When the Provincial Councils were established in 1987, out of five ministries two ministry secretaries were the Ariyalayans. While Mr. A. Jeyaratnam was

the Secretary of the Ministry of Finance Mr. V. Ragunathan was the Secretary of the Ministry of Irrigation and Highways. Being an Economics Degree holder, Mr. A. Jeyaratnam was a senior officer of the Sri Lankan Administrator Service.

Irrigation Engineer Mr. V.Ragunathan was also an Economics Degree holder. Served as the Deputy Director of Irrigation Department he shows immense concern in the development of North and Eastern Provinces. He still donates books to enlighten the prize winners of the National Day Celebration competitions.

At this juncture, Mr. S. T. Pathma nathan who served as Asst. Director of Agriculture Jaffna District is to be remembered. He is a well known leader and philanthropist. He functioned as not only the President of Ariyalai United Club, Ariyal Development Society and different community centres for several years but also the president of 73rd National Day Celebration. Ariyalai Community is honoured by his services.

Following Mr. S. T. Pathmanathan, Mr. K. Kunaratnam, a good sportsman, served as the Asst. Director of Agriculture Jaffna District. He credited the Presidency of National Day Celebration Committee in ……

It is appropriate to mark the services of Mr. K mylvaganam who served as the Director of Housing Authority, Tricomalee District.


The person who secured a unique place in the press, Mr. T. Sabaratnam is to be remembered here. Mr. T. Sabaratnam while serving as the Special Editor of Daily News was very much concerned about the welfare of the people and the village.

Many doctors had been turned out on the soil of Ariyalai. However most of them migrated to developed countries due to war and individual prospects. Amidst them the famous consultants Doctors Mayilu Gunaratnam and Mayilu Ganesharatnam make us to be proud of them for they remained in the land for the welfare of the public instead of their own luxury and earnings. They both exposed immense attention on the wellbeing of the people of the province especially the Ariyalai people. Even though both of them are no more they deserve a great salute.

The present leaders who involve themselves in social work such as Pandithar K. Kanapathippillai, Teacher S. Sathasivam and Mr. S. Balasuntharam and the young energetic activists K. Logeswaran, S.T. Kamalanathan, S.K Shanmugalingam, S.K. Rasaratnam, V.K. Shanmugalingam and M. Panchalingam are to be recognized here.

It is widely anticipated that the leadership qualities are hereditarily passed over from the leader Mr. A. Kathiravelu to the future generation forever and will build up a unique tradition of unity.

# சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவில் காலத்துக்கு காலம் பங்கு பற்றயவர்கள்



## வலைப்பந்தாட்ட அணியில் காலத்துக்கு காலம் பங்கு கொண்ட வீராங்கனைகளின் கிடைக்கப்பெற்ற பெயர் விபரம்

*கலாயினி பிரேம்குமார், நிர்மலா மோகன் (நிம்மி) தயாநிதி, மகாலட்சுமி, உமாபதி வாமபாலன், மலா, சரஸ்வதி, கௌதமி, அம்பலவாணர், தேவந்தி அம்பலவாணர், வருணி அம்பலவாணர், மஞ்சுளா மகாலிங்கம், மகிலா மகாலிங்கம், வாசுகி சதானந்தன், அமிர்தவாசினி பாலசிங்கம், மைதிலி அம்பலவாணர், தேன்மொழி சண்முகலிங்கம், சுரேந்தினி சிதம்பரநாதன், பவானி சதானந்தன், ஸ்ரீ ரஞ்சினி, ஆறுமுகம், காஞ்சனா மகாலிங்கம், சுபத்திரா கிருஷ்ணசிங்கம், இரதி அருளம்பலம், பரபாலினி சுந்தரலிங்கம், கிருபாலினி, கௌரி ஆறுமுகம், யசிந்தா, சுகுணா சூடாமணி, சியாமா சூடாமணி, லஜிதா, மிருணி, சுபானி, சுகனி, மயூரி, மிதிலா, சுஜீவா செல்வம், நிலாந்தி பாலகிருஷ்ணன்,* ***தேவலதா காசிப்பிள்ளை, சாந்தினி சிதம்பரநாதன் (ஸ்ரீகரன்), ஜயந்தி சோமசேகரம் டீ சில்வா ஆகியோர் வடமாகாண வலைபந்தாட்ட அணியில் 1981 இல் அங்கம் வகித்தவர்கள்தேசிய விளையாட்டு விழாவில் வெள்ளிப்பதக்கம் பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.***

## கடந்த வருடங்களின் சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவின் தலைவர்கள்

*ஆ.கதிரவேலு, ஆ.கனகரத்தினம். C.அருளம்பலம், A.M.புறூடி, V.காசிப்பிள்ளை, C.பொன்னம்பலம், S.C.மகாதேவா, P.காசிப்பிள்ளை, C.சிற்றம்பலம், Dr.S.பரமநாதன், செல்வி.ச.சரவணமுத்து, சு.அருளம்பலம், C.தில்லையம்பலம், க.குகதாசன், இராசா புறூடி, செல்வி.தி.சோதிநாதன், சி.பொன்னம்பலம், E.முத்தையா, E.K.குமரையா, E.இராசகுலசூரியர், K.S.நடராசா, த.இரத்தினசுந்தரம், I.S.சண்முகநாதன், தா.சோமசேகரம், த.சோமசேகரம், Dr.A.சிற்றம்பலம், கா.கணேசன், க.சுப்பிரமணியம், V.A.கனகசிங்கம், சி.இரவீந்திரன், சி.சதானந்தன், வீ.கதிரவேலு, சி.க.சுப்பிரமணியம், சி.குலதுங்கம், சி.சுந்தரலிங்கம், ம.இராமநாதன், Dr.ஸ்ரீவிக்கினேஸ்வரா, ச.முத்துச்சாமி, த.மயில்வாகனம், வே.தருமலிங்கம், சு.பாலசுந்தரம், ப.மாணிக்கராசா, மு.சீவரத்தினம், செ. பத்மநாதன், ந.கிருஷ்ணசிங்கம், ச.சத்தியமூர்த்தி, ந.வாமசிவம், மு.வேதநாயகம், கா.குணரத்தினம், ப.கணபதிப்பிள்ளை, திருமதி.பா.வேல்முருகு, எஸ்.ரி.கணநாதன், S.T. பத்மநாதன், எஸ்.கே.இராசரத்தினம், மு.மயில்வாகனம், மு.விஸ்வநாதன், பேராசிரியர் சு.மோகனதாஸ், ச.உருத்திரேஸ்வரன், பொ.நடராசா, ஆ.தேவராசா, வி.கே.சண்முகலிங்கம், க.மயில்வாகனம், பொ.பஞ்சலிங்கம், க.கனகசபாபதி, மு.தனபாலசிங்கம், அ.உபயசேகரம், S.C.செல்வராஜா, த.செல்வரத்தினம், இ.சடகோபன், S.K.சண்முகலிங்கம், ந.சுதேஸ்குமார், திருமதி ஸ்ரீரஞ்சினி ஆனந்தகுமாரசாமி, இ.ப.மோகன்ஜித், Dr.ம.கணேசரத்தினம்.*

## கடந்த வருடங்களின் சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவின் செயலாளர்கள்

ப.கந்தையா, நா.நடராசா, நா.கோவிந்தசாமி, ச.முத்துச்சாமி, I.S.சண்முகநாதன், V.மகாதேவா, த.கோபாலபிள்ளை, ம.ஜெயரத்தினம், தா.அருளம்பலம், த.சோமசேகரம், ப.வீரசிங்கம், ச.சத்தியமூர்த்தி, V. அம்பலவாணர், S. ஸ்ரீபத்மநாதன், சு.சகாதேவன், C.S.காராளசிங்கம், செ.அருளம்பலம், சி.பாலசிங்கம், சோ.சிற்றம்பலம், ஆ.சண்முகநாதன், பொ.சண்முகலிங்கம், மு.விசுவநாதர், கா.சௌந்தரராஜா, பொ.குலசேகரப்பிள்ளை, பொ.கிருஷ்ணசாமி, ஆ.பேரம்பலம், த.ஆலாலசுந்தரம், E.K.குமரையா, S.M.ரஞ்சன், அ.உபயசேகரம், செ.கனகசபாபதி, பொ.விஜயரட்ணம், சோ.குமரகுரு, வை.பிரபாகரன், ச.உருத்திரேஸ்வரன். கா.லோகேஸ்வரன், கா.லோகேந்திரன், ம.சுகுமார், எஸ்.லோகேஸ்வரன், செ.நடராசா, ந.நேதாஜி, பா.முரளிதரன், த.சபாரட்ணம், மு.அ.ஸ்ரீராஜசிங்கம், ந.கிருஸ்ணசிங்கம் த.நாகேந்திரா, ஆ.சண்முகநாதன், ஆ.குணரத்தினம், சு.பிரபாங்கன், எஸ்.சி.செல்வராசா, க.மகேஸ்வரன், எஸ்.ரி.கணநாதன், த.பஞ்சலிங்கம், சூ.அகிலன், த.குணரத்தினம், பொ.நடராசா, ஐ.சங்கர், யோ.முகுந்தன், மு.விசுவநாதன், சரா.புவனேஸ்வரன், இ.சடகோபன், த.ஹரிஷான்ந், வி.பாலரூபன், இ.ப.மோகன்ஜித், சி.ஆறுமுகதாசன், யோ.ரிசாந்தன், ஜெ.ஜசிந்தன், ந.சுரேன், பி.செந்தில்குமரன், திருமதி ஸ்ரீரஞ்சினி ஆனந்தகுமாரசாமி, கு.பிரதீபன், கே.நிஷாந்தன்

## கடந்த வருடங்களின் சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவின் பொருளாளர்கள்

ப.முருகேசு, S.காராளசிங்கம், த.சீவரத்தினம், த.யோகராசா, சோ.பாலசுந்தரம், சு.கோபாலபிள்ளை, பொ.சுந்தரலிங்கம், சோ.சிற்றம்பலம், சோ.சிவசுந்தரம், க.தியாகராசா, தா.சோமசேகரம், சி.ரவீந்திரன். ப.மகாலிங்கம், V.மகேஸ்வரன், N.தியாசராசா, ஆ.தேவராசா, ம.கதிர்காமநாதன், பொ.சண்முகலிங்கம், I.S.இராசா, இ.மகேசன், அ.குமாரசாமி, த.குணரெத்தினம், க.மயில்வாகனம், செ.பத்மநாதன், S.S.தியாகராசா, பொ.இராமநாதன், த.சோதிராசா, இ.ஸ்ரீதரன், சி.சுந்தரலிங்கம், சி.சோமபாலன், கு.ஸ்ரீதரன், சி.தேவராசா, ந.விஜயகுமரன், செ.பாலசுந்தரம், சி.விஜயேந்திரன், வை.கனகரத்தினம், செ.சோதிராசா, செ.சேனாதிராசா, கு.மதிசூடி, தி.செல்வரத்தினம், சோ.ஸ்ரீகுமார், N.விஜயகுமார், செ.அருளம்பலம், த.சற்குமார், கு.கருணாசலதேவா, சோ.அருள்தாஸ், த.சர்வேந்திரா, அ.ரவிச்சந்திரன், அ.சபேசன், சு.குருபரன், பி.நவரட்ணராசா, சி.யோகநாதன், ம.கதிர்காமநாதன், எஸ்.கே.சண்முகலிங்கம், எஸ்.சதானந்தபோதம், வி.கே.சண்முகலிங்கம், த.சதானந்தன், கா.லோகேஸ்வரன், ஆ.திருலோகஈஸ்வரா, ச.செந்தூரன், ப.புஸ்பராசா, இ.சடகோபன், ப.மோகன்ஜித், த.ஹரிஷான்ந், மு.தனபாலசிங்கம், வி.பாலரூபன், கு.பிரதீபன், ந.சுரேன், த.கஜராவ், மு.குணம், து.துஷ்யந்தன், த.பிரணவராவ், வை.கிருபாகரன், க.நாகேந்திரதாஸ்.

# நன்றி கூறுகின்றோம்

எமது நூற்றாண்டு மலரில் பிரசுரிப்பதற்கு தகவல்களை வழங்கி ஊக்கப்படுத்திய நண்பர்களுக்கும், கட்டுரை, கவிதை ஆக்கங்களை வழங்கியவர்களுக்கும், குறிப்பாக விளையாட்டு வீர, வீராங்கனைகளின் சாதனைகளைத் தொகுப்பதில் பாரிய பங்கினை வகித்த திரு.ச.உருத்திரேஸ்வரன் அவர்களுக்கும், எழுத்துத்திருத்தம் செய்ய ஒத்துழைப்பு நல்கிய திரு.செ.ஜெயபாலன், Dr. (திருமதி) இரஜந்தி கோபி அவர்களுக்கும் எமது நன்றிகள்.


இம் மலரை அழகுற வடிவமைத்து அச்சேற்றிய மெகா பதிப்பகத்திற்கும் அதன் உரிமையாளர் லோ. கோபிக்கிருஸ்ணா குழுவினருக்கும் சிறப்பான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி

அரியாலை
06.04.2019

**ஜெ.யசிந்தன்**
மலர்க்குழு

# அரியாலை பிரதான இடங்களைக் குறிக்கும் படம்



அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்டம்

ஸ்தாபிதம்
1919

நூற்றாண்டு விழா - 2019

ARIYALAI NATIONAL DAY

1919 - 2019

CENTENARY CELEBRATION

மெகா பதிப்பகம், யாழ்ப்பாணம்.
தொ.பே : 021 221 7939